பொருளாதாரச் சிந்தனை
வரலாறு சோணச்சலம் (ஜோ

த.பா.நி. (க.வெ.) வரிசை எண் — 367

# பொருளாதாரச் சிந்தனை வரலாறு

ஆசிரியர்

பேராசிரியர் கே. எஸ். சோணாச்சலம்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—October, 1972

T.N.T.B.S (C.P.) No. 367

© Tamil Nadu Text Book Society

# ECONOMIC THOUGHT

K. S. SONACHALAM

*Price Rs. 6-80*

'Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.'

*Printed by*
Selvam Printing Works,
Madras-5.

# அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்,
(தமிழகக் கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பன்னிரண்டாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப் படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்கள் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்றுவருகிறது. இவ் வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்து வரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டுவருகிறது.

இவற்றுள் ஒன்றான 'பொருளாதாரச் சிந்தனை வரலாறு' என்ற இந்நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 367ஆவது வெளியீடாகும். இதுவரை 402 நூல்கள் வெளிவந்துள்ளன. இந்நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

# முகவுரை

இந் நூல் தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்கள் அண்மையில் பட்டப் படிப்புக்கு விரிவாக வகுத்த பாடத்திட்டத்தை அனுசரித்து எழுதப்பட்டுள்ளது. கல்லூரி மாணவர்களுக்கென்ற தலையாய நோக்கத்தில் எழுதிய இந் நூல் அவர்களுக்குப் பயன் படுமென்று நம்புகிறேன். அதே சமயம் பொருளாதார இயலில் ஆர்வமுள்ள, கல்வியில் சிறந்த முதியோரும் ஏனையோரும் படித்துப் பொருளாதாரக் கருத்துகளைப் புரிந்துகொள்ளும் வண்ணம் இந் நூல் அமையவேண்டுமென்பது ஒரு துணை நோக்கமாகும்.

பொருளாதாரக் கருத்துகள் இயற்கை அறிவியல் கருத்துகளைவிடப் புரிந்து கொள்வதற்குக் கடினமானவை. பின்னவைக்குச் சோதனைச்சாலையில் தெளிவுபடுத்தும் வசதிகள் உண்டு. இயற்கை அறத்திடையே முளைத்து, தத்துவத்தில் வளர்ந்து, உள நூலில் திளைத்து, பொதுநல நெறியிலும் விஞ்ஞானக் கற்பனையிலும் செழித்தோங்குவன பொருளாதாரக் கருத்துகள்; எனவே இவற்றைப் புரிந்துகொள்வது சிறிது அருமையே ஆம்.

இம்மாதிரி நூல் எழுதுவதில் இரண்டுவிதமான முறைகளைக் கையாளலாம். கோட்பாடுகளை வரிசைப்படுத்தி—உதாரணமாக வார்க்கோட்பாடு, வரிக்கோட்பாடு—ஒவ்வொன்றின் தோற்றம், வளர்ச்சி, மாறுபாடு, இன்றைய நிலைமை என்று விமர்சனக் கண்ணோட்டத்துடன் வரலாற்றை எழுதுவது ஒரு முறை. இது எம்.ஏ. வகுப்பு மாணவர்களுக்கும், மேல் படிப்பில் அக்கரையுள்ளவர்களுக்கும் பொருந்தும். மற்றொரு முறை ஒவ்வொரு சிந்தனைக் குழுவின் கருத்துகளை ஆராயும்பொழுது, அதன் சிந்தனைச் சிற்பிகளை மையமாக வைத்து அக் கருத்துகளை விளக்குவது ஆகும். இம் முறை புதிதாகக் கற்கும் மாணவர்களுக்கும் சாதாரண வாசகர்களுக்கும் கடினமான கருத்துகளையும் எளிதில் மனத்தில் பதியவைக்கப் பெரிதும் உதவும். இம் முறையில் ஓர் ஆபத்து உண்டு. கற்பவர் ஒவ்வொரு

சிந்தனையாளரையும் தனித்தனியே மனத்தில் இருத்திக்கொண்டு, வரலாற்றின் தொடர்ச்சியை நன்கு உணர்ந்துகொள்ள முடியாமல் போவதற்கு ஏதுவுண்டு.

பொருளாதாரச் சிந்தனை வரலாற்றில் கருத்துகள் தாக்கியும், எதிர் தாக்கியும் மோதுண்டு பின்னிப் பிணைந்து ஒரு புதிய ஒருமைப்பாட்டின் ஆற்றலைப் பெற்று விரைந்து சுழன்று ஓடும் ஓட்டத்தைக் காணலாம். இத்துணை ஓட்டமும் தருக்க நெறியினின்றும் கரை பிறழாது செல்வது குறிப்பிடத் தக்கது. இதனைச் செவ்வனே புரிந்துகொள்ளும் பொருட்டு முன்னுரையில் முதல் நூல், வழி நூல், மறுப்பு நூல், எதிர்ப்பு நூல் என்று காலவட்டத்தில் மாறி வரும் கருத்துகள், குழுக்கள் பற்றிய தொடர்பு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. மேலும் ஒவ்வோர் அதிகாரத்தின் தொடக்கத்திலும் முடிவிலும், அதில் காணும் கருத்துகளுக்கும் மற்ற அதிகாரங்களில் காணும் கருத்துகளுக்கும் உள்ள தொடர்பு, வேறுபாடு, இணக்கம், முரண்பாடு முதலியன சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

இந் நூலில் சில குழுக்கள் இடம் பெறுமலும் வேறு சில சிந்தனையாளரின் கருத்துகள் சிறிய அளவில் குறிப்பிடப்பட்டும் இருக்கின்றன. இந் நூல் ஒரு தொடக்க நூல்தான். இதில் பொருளாதாரச் சிந்தனை முழுவதும் இடம் பெறவில்லை. இதைக் கற்பவருக்கு நுண்ணிய பொருளாதாரக் கருத்துகளில் நாட்டமும் ஆர்வமும் மேலும் மேலும் பெருகத் தூண்டினால் இந் நூல் எழுதிய நோக்கம் நிறைவேறியதாகக் கருதலாம்.

கே. எஸ். சோணாச்சலம்

# பொருளடக்கம்

பக்கம்


பாகம் I

## பண்டைக்கால, இடைக்காலச் சிந்தனைகள்

1. முன்னுரை ... 1
2. யூதர் சிந்தனை ... 7
3. கிரேக்கர் சிந்தனை ... 9
4. உரோமர் சிந்தனை ... 21
5. இந்தியர் சிந்தனை ... 22
6. இடைக்காலச் சிந்தனை ... 26

பாகம் II

## தொடக்கப் பருவம்

7. வணிக வாதம் ... 30
8. இயற்கை வாதம் ... 46

பாகம் III

## தொன்மை நூல் பொருளாதாரம்

9. ஆடம் ஸ்மித் ... 61
10. தாமஸ் ராபர்ட் மால்தஸ் ... 89
11. டேவிட் ரிக்கார்டோ ... 103
12. ஜெரிமி பென்தம் ... 127
13. ஜே. பி. ஸே ... 130
14. ஜே. எஸ். மில் ... 133

பாகம் IV

## 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி

15. இறுதிநிலைப் புரட்சி ... 142
    (i) ஆஸ்திரியக் குழு ... 142
    (ii) வில்லியம் ஸ்டேன்லி ஜெவன்ஸ் ... 153
    (iii) லியன் வால்ரஸ் ... 158
16. வரலாற்றுமுறைக் கருத்தோர் ... 160
17. நிறுவனப் பொருளாதாரம் ... 166

பக்கம்

பாகம் V

## தொன்மை நூல் மறுமலர்ச்சி

18. ஆல்பிரட் மார்ஷல் ... 177
19. தேவைக் கோட்பாடும் சமநோக்குக் கோடு ஆய்வும் ... 196
20. உற்பத்திச் சார்பும், சம உற்பத்தி வளைகோடு ஆய்வும் ... 209

பாகம் VI

## சோஷியலிசம்

21. சோஷியலிச முன்னோடிகள் ... 217
22. கார்ல் மார்க்ஸ் ... 224
23. ஃபேபியனிசம் ... 249

பாகம் VII

## புதுப் பொருளாதாரம்

24. ஜான் மேனார்டு கெயின்ஸ் ... 253
25. பணக் கோட்பாடு ... 287
26. வட்டிக் கோட்பாடுகள் ... 296
27. இலாபக் கோட்பாடுகள் ... 305
28. நலப் பொருளாதாரம் ... 310
    (1) பிகோவின் பழைய நலப் பொருளாதாரம் ... 311
    (2) புதிய நலப் பொருளாதாரம் ... 315

பாகம் VIII

## இக்கால இந்தியப் பொருளாதாரச் சிந்தனை

29. அடிகோலியவர் நால்வர் ... 318
    தாதாபாய் நவரோஜி ... 319
    மகாதேவ கோவிந்த ரானடே ... 324
    ரமேஷ்சந்திர தத்தர் ... 326
    கோபாலகிருஷ்ண கோகலே ... 328
30. காந்தியப் பொருளாதாரம்—சர்வோதயம் ... 331
31. முடிவுரை ... 344
    மேற்கோள் நூல் பட்டியல் ... 346
    கலைச்சொற்கள் ... 349

பாகம் I

# பண்டைக்கால, இடைக்காலச் சிந்தனைகள்

## 1. முன்னுரை

மனிதன் சிந்திக்கும் ஆற்றலைப் பெற்ற நாளிலிருந்து உலகில் இன்புற்று வாழ்வதற்கு வேண்டிய பொருள்கள், தேவைகள், அவற்றை நிறைசெய் வழிகள், அவற்றிற்குச் சாதகமான சமூக அமைப்பு, மற்ற வசதிகள் முதலியனபற்றி அவன் சிந்திக்கத தொடங்கிவிட்டான். பண்டைக்காலம் தொட்டுப் பல்வேறு நாடுகளில், பல அறிஞர்கள் பல்வேறு நூல்களில், பல்வேறு கட்டங்களில் பொருளாதாரக் கருத்துகளைப் பரவலாகத் தூவிப் போந்தனர். இத்தகைய பொருளாதாரச் சிந்தனைகள் 2500 ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றிவிட்டன. ஆனால், பொருளாதார நோக்கங்கள், செயல்கள், விளைவுகள் முதலானவைபற்றி நுட்பமாக ஆய்ந்தும், காரண காரியத் தொடர்பு காட்டியும், அறிவியல் முறையில் சிந்திக்கத் தொடங்கிய பின்னரே பொருளாதாரக் கோட்பாடுகள் தோன்றின. இத்தகைய பொருளாதாரக் கோட்பாடுகளின் வரலாறு இருநூறு ஆண்டுகளுக்குட்பட்டதே.

பண்டைக் காலத்திலும் இடைக்காலத்திலும் பொருளாதாரம் அறிவியலாக வளரவில்லை. பழைய விவிலியம், மோசசின் சட்டங்கள், கிரேக்க ஞானி பிளேட்டோவின் 'குடியரசு', அரிஸ்டாடிலின் நூல்கள், கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம், இன்னும் உரோமாபுரி அறிஞர்களின் நூல்கள் எல்லாவற்றிலும் பொருளாதாரக் கருத்துகள் பொதுவாக விவாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இவ்வறிஞர்கள் பொருளாதார இயல் என ஒன்றை வகுத்தாரில்லை.

இடைக்காலம் ஐரோப்பாக் கண்டம் முழுவதும் கத்தோலிக்க சமயம் ஓங்கியிருந்த காலம். இவ்வுலக வாழ்க்கை துயரக்கடலாகவே இருப்பினும், இறந்தபின் அமர வாழ்வு கிடைக்கும் என நம்பி, தீவிரமான சமய உணர்ச்சியால் கடவுளிடம் நெகிழ்ந்த உள்ளத்தினராக மக்கள் மனநிறைவு பெற்ற காலம். 'செல்வம் படைத்தவர் தேவலோகம் சேர்வது, ஒட்டகம் ஊசியின் காதுவழியாக நுழைவதைவிடக் கடினம்' என்ற எண்ணம் மக்கள் உள்ளத்தில் நன்றாக ஊறியிருந்தது. அம்மட்டுமா ? இம்மைப்பேற்றை விரும்புவது இழிவு என்றும் பணம் திரட்டுவது வெட்கப்படக் கூடிய செயல்மட்டுமன்றிப் பாவச் செயலென்றும் இடைக்காலத்தினர் கருதினர். ஒவ்வொருவர் நிறையையும் எடையையும், தொழிலையும், வருமானத்தையும், சமூக நிலையையும், அவரவர்களுடைய பிறப்பே நிர்ணயிக்கும் என்று மக்கள் நினைத்த காலம் அது. நிலக்கிழார் மகனூர் நிலக்கிழாரே, நில அடிமை (serf) மகன் நில அடிமையே. நிலத்தின் பாரம், வேலைக்குத் தரும் கூலி, பொருள்களின் விலை, இவையெல்லாம் நேர்மையானவை, நியாயமானவை (fair and just) என்று சமயக் குருக்கள் ஒருபுறமும், சம்பிரதாயம், பழக்க வழக்கங்கள் மற்றொருபுறமும் நிர்ணயித்த காலம் அது. இவற்றை இக்காலம் போல் விற்போர் வாங்குவோரிடையே மூளும் போட்டியும், சந்தையில் நடக்கும் பேரமும் நிர்ணயிக்கவில்லை. ஆதலால் இக்காலப் பொருளாதார நூல் ஆராயும் விலை, கூலி, வட்டி, வாரம் போன்ற சிக்கல் இடைக் காலத்தில் தோன்றவுமில்லை ; இவற்றை எவ்வாறு தீர்ப்பது என்று அறிய ஆராய்ச்சி எழவுமில்லை. இக்காரணங்களால் இடைக் காலத்தில் பொருளாதாரம் அறிவியல் முறையில் வளருவதற்கு வேண்டிய சூழ்நிலையே ஏற்படவில்லை எனலாம். இந் நூலின் முதற்பாகம் பண்டைக்கால, இடைககாலச் சிந்தனைகளை விவரிக்கின்றது.

சமூகச் சீர்திருத்த இயக்கமும் (Reformation) மறுமலர்ச்சியும் (Renaissance) ஐரோப்பாக் கண்டத்தில் பரவிய பின்னரே, உலக வாழ்க்கையில் பல இன்பங்கள் அடையலாம் என்ற ஆர்வம் பொங்கியது. அவற்றை அடையவேண்டும் என்ற ஊக்கமும் மக்கள் உள்ளத்தில் பிறந்தது. இதற்குப் பின்னரே பொருளாதார நூல் உருவாகத் தொடங்கியது. திடீரெனப் பொருளாதார நூல் அறிவியலுக்கு வேண்டிய எல்லா விதிகளுடனும் குறிகளுடனும் கோலத்துடனும் தோன்றிவிடவில்லை. பொருளாதார நூலின் வளர்ச்சியில் பல நிலைகளையும், பல அணுகுமுறைகளையும் (approach), அதன் பல வடிவங்களையும் காணலாம். முதலாம் வடிவத்தை வணிக வாதம் எனக் கூறலாம். கி.பி. 1450-லிருந்து 1750 வரை இது ஐரோப்பா முழுவதும் பரவி, நாடுகள் வல்லரசு

களாக என்னென்ன வழிகளை அரசாங்கத்தினர் கடைப்பிடிக்க வேண்டும் என்று வழி காட்டியது. இவ் வணிக வாதம் ஓங்கி யிருந்த 300 ஆண்டு காலத்தையும் பொருளாதாரச் சிந்தனை வரலாற்றின் தொடக்க நிலையாகக் கொள்ளலாம்.

18ஆம் நூற்றாண்டின் நடுவில் ஃபிரஞ்சு நாட்டில் பொருளா தாரம் இரண்டாம் நிலையை எட்டியது. அக்காலத்தில் இயற்கை வாதிகள் (Physiocrats) என்ற ஒரு குழுவினர் அந்நாட்டில் தோன்றினர். இயற்கைவாதக் கருத்துகள் அறிஞரையும், அர சினரையும், நிலக்கிழாரையும், பிறரையும் கவர்ந்தன. பொருளா தார நூலை விஞ்ஞான முறையில் முதலில் விளக்கிய பெருமை இயற்கைவாதிகளுக்கே உண்டு. இவர்களைப் பொருளாதார நூலின் தந்தையர் என்றுகூட ஒரு சாரார் பாராட்டுகின்றனர். இயற்கை வாதத்தைப் பொருளாதார இயலின் அருணோதய காலம் என்று கூறுவது பொருந்தும். தொடக்கப் பருவத்தைச் சார்ந்த வணிக வாதமும், இயற்கை வாதமும் இந்நூலில் இரண் டாம் பாகத்தில் இடம் பெறுகின்றன.

பொருளாதார இயலின் ஞாயிறாகத் தோன்றியவர்—அதன் தந்தையென்றும் போற்றப் பெறுபவர்—ஆடம் ஸ்மித் என்னும் ஸ்காட்லாந்து நாட்டுப் பேரறிஞர். 'நாடுகளின் செல்வம்' என்று அவர் எழுதிய நூல் என்றும் மங்காத உலகப் புகழ்பெற்ற நூல். அவருக்குப் பின் தோன்றிய ஆங்கில நாட்டுப் பொருளா தார மேதைகள் இருவர். அவர்கள் மால்தஸும் (Malthus), ரிக்கார்டோவும் (Ricardo) ஆவர். இவர்கள் மூவரும் வகுத்த கொள்கைகள் பொருளாதார இயலுக்கு அடித்தளம் போன்றவை. இவர்கள் விளக்கிய கருத்துகள், வகுத்த இயற்கை விதிகள், கையாண்ட பகுத்தறி முறை, தருக்க வழிகள் எல்லாம் பொது வாக ஒரே வகை, ஒரே இனம். ஆதலால் இம் மூவரும் இயற்றிய நூல்களை ஒன்றாகக் கூட்டித் தொன்மைப் பொருளாதாரம் (Classical Economics) என்று கூறுவதும் உண்டு. இவர்கள் மூவரையும் தொன்மை நூல் மும்மணிகள் என்று கூறுவது தகும். இவர்கள் உருவாக்கிய பொருளாதாரத்தைச் சுதந்திர வாதம் (Economic liberalism, individualism) என்று அழைப்பது மரபு. இதை முதலாளித்துவப் பொருளாதாரம் என்று கூறுவதும் உண்டு. சுதந்திர நூல் மும்மணிகளில் ரிக்கார்டோவும் மால் தஸும் ஆங்கில நாட்டுத் தத்துவ ஞானி ஜெரிமி பென்தம் என்ப வருடைய பயன்பாட்டுக் கொள்கையைப் (utilitarian doctrine) பெரும்பாலும் பின்பற்றித் தங்கள் பொருளாதார இயலில் மேற் கொண்டவர். இத்தகைய செல்வாக்குள்ள பென்தாமின் தத்து

வம் தொன்மைப் பொருளாதார மும்மணிகளின் விமரிசனத்துக்குப் பின் இடம் பெறுகிறது. தொன்மைப் பொருளாதாரத்தைப் ஃபிரெஞ்சு நாட்டில் பிரபலமடையச் செய்தவர் ஃபிரஞ்சு நாட்டு அறிஞர் ஜே. பி. ஸே. ஆங்கில நாட்டில் தொன்மைப் பொருளாதாரப் பரம்பரையின் கடைசி முக்கிய எழுத்தாளர் ஜே. எஸ். மில். இவருடைய நூலில் தொன்மைப் பொருளாதாரம் புகழ் ஏணியின் உச்சியை அடைந்ததாகக் கருதுவதுண்டு. மூன்றாவது பாகத்தில் இந்த ஆறு பொருளாதார வல்லுநர்களும் இடம் பெறுவர்.

சுதந்திர வாதத்துக்குப் பின் அதை ஒட்டியும் எதிர்த்தும், மறுத்தும் எழுதிய நூல்கள் பலப்பல. தொன்மை நூலின் ஒரு சிறப்பு அனைத்து நாட்டு ஒற்றுமை (Universalism) ஆகும். இந்த மனப்பான்மையை எதிர்த்தவர்கள் 'தேசியவாதப் பொருளாதாரம்' என்னும் புதிய பள்ளியை (school) நிறுவியவர்கள் ஆவர். ஆடம் ஸ்மித் வருங்காலத்தைப் பற்றி இன்ப நோக்கும் (optimism) நம்பிக்கையுமே கொண்டு எழுதினாலும், மால்தஸும், ரிக்கார்டோவும் வருங்காலத்தில் மக்கள் வாழ்க்கையில் துன்பம் மிகுதியாகிக் கொண்டே போகும் என்ற துன்ப நோக்குடன் (pessimism) வருங்காலத்தை வருணித்தனர். இதை மறுத்தனர் ஒரு குழுவினர்; வருங்காலத்தில் மக்கள் வாழ்க்கை மேம்பட்டுக்கொண்டே போகும் என்று வற்புறுத்தி 'இன்ப நோக்குப் பொருளாதார இயலை' வகுத்தனர். இப்பள்ளியைச் சார்ந்த அறிஞர்களை இன்ப நோக்குப் பொருளாதார அறிஞர் (optimists) எனலாம். தேசியவாதப் பொருளாதாரமும் இன்ப நோக்குப் பொருளாதாரமும் இந்நூலில் விவரிக்கப்படவில்லை.

தொன்மைப் பொருளாதாரிகள் மனிதனின் சுயநலம், மக்கட்தொகை வளர்ச்சி வீதம், முதல் திரட்சி மனப்பான்மை போன்றவை ஓரிடத்திலும் ஒருக்காலும் மாற்றமுடியாத நிரந்தரமான இயற்கை விதிகள் என்று கூறியதை இன்னுமொரு குழுவினர் எதிர்த்தனர். இந்த இயற்கை விதிகளை அடிப்படையாக்கிக் கொண்டு பகுத்தறி முறையில் பல ஆய்வு முடிவுகளைத் தொன்மை நூல் அறிஞர் கண்டனர். இவ் விதிகளையும், இம்முறைகளையும் எதிர்த்துப் புள்ளி விவரங்கள், வரலாற்று அனுபவங்கள் முதலியவற்றையே அஸ்திவாரமாகக் கொண்டு பொருளாதார இயலை எழுப்பவேண்டும் என்று இந்தக் குழுவினர் வற்புறுத்துகின்றனர். இந்த அறிஞர்களை 'வரலாற்றுமுறைக் கருத்தோர்' என்று கூறுவது மரபு.

1870ஆம் ஆண்டில் ஆஸ்திரியப் பொருளாதார வல்லுநர்கள் மூவரும், ஆங்கிலப் பொருளாதார அறிஞர் ஒருவரும், ஃபிரஞ்சு

நாட்டுப் பொருளாதார அறிஞர் ஒருவரும், பொருளாதார ஆராய்ச்சியை ஒரு புது வழியில் திருப்பினர். இந்த ஐவரைத் தவிர வேறு சில அறிஞர்களுக்கும் இப் புதுவழியை உண்டாக்கியதில் பங்கு உண்டு. உளநூல் ஒரு தூண்டுகோலாக இப் பொருளாதாரத்துக்கு அமைந்திருப்பதால் இதை உளவியல் (Psychological) பொருளாதாரம் என்று கூறலாம். தொடக்கத்தில் இது தொன்மை நூலை எதிர்த்து அதன் செல்வாக்கை ஒடுக்குவதுபோல் தோன்றினமையால், இதை 'இறுதிநிலை வாதப் புரட்சி' (Marginal Revolution) என்றும் கூறுவதுண்டு. ஆயினும், கடைசியில் இறுதிநிலைப் பொருளாதாரம் தொன்மை நூலுக்கு உறுதுணையாகவே அமைந்தது.

தொன்மை நூலின் பகுத்தறி முறையையும், இயற்கை விதிகளையும் தாக்கிப் புதிய கருத்துகளை முதலாவதாக அமெரிக்காவில் வழங்கியவர் வெப்லன் எனும் அறிஞர். இவர் வகுத்த புதிய வழிக்கு 'நிறுவனப் பொருளாதாரம்' (Institutional Economics) என்ற பெயர் வழங்கலாயிற்று. இது பின்னர் ஒரு பள்ளியாக வளராவிட்டாலும் அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் பல சிறந்த எழுத்தாளர்கள் நிறுவனப் பொருளாதாரம் கண்ட முறையைப் பின்பற்றினர்கள்.

19ஆம் நூற்றுண்டின் இறுதியில் மிக்கப் புகழ்பெற்ற பொருளாதார வல்லுநர் ஆல்ஃபிரட் மார்ஷல் ஆவர். தொன்மை நூல் கருத்துகளையும் இறுதிநிலை வாதக் கருத்துகளையும் இணைத்துத் தொன்மை நூல் மறுமலர்ச்சியை உண்டாக்கிய மேதை மார்ஷல். இந்தக் காலத்தில் பொருளாதார இயலில் ஒரு புதிய அணுகுமுறை பிரபலமாயிற்று. மார்ஷல் பின்பற்றியது எண்ணளவுப் பயன்பாட்டு முறை (Cardinal approach) ஆகும். இதில் குறைகள் பலவற்றைக் கண்ட சில அறிஞர்கள் இதற்கு மாறுகக் கிரமப் பயன்பாட்டு அணுகுமுறையைப் (Ordinal approach) புகுத்தி அவர்களுடைய பொருளாதார ஆராய்ச்சிகளை நடத்தினர்கள். இந்நூலின் ஐந்தாம் பாகத்தில் மார்ஷல்தான் முக்கிய இடம் பெறுவர். ஆனல், புதிய அணுகுமுறையில் துய்ப்புக் கோட்பாடும் உற்பத்திக் கோட்பாடும் எவ்வாறு விளக்கப்பெறுகின்றன என்பதும் இப் பாகத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

பொருளாதாரச் சிந்தனை வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றுண்டின் நடுவிலிருந்து தொன்மைப் பொருளாதாரத்துக்கு மறுப்புக் கடுமையாகக் கிளம்பிற்று. மிக்க புகழ்பெற்ற மறுப்பு நூல் சோஷலிசம். தொன்மைப் பொருளாதாரிகளின் அணுகு

முறைகளையும் முடிவுகளையும் திட்டவட்டமாகச் சோஷலிசவாதிகள் மறுக்கின்றனர். இவர்களது வளர்ச்சியில் இளங்காற்றுப் பருவம், புயல்காற்றுப் பருவம் என இரண்டு பருவங்களைக் காணலாம். ஸிஸ்மண்டி, ஃபூரியர் முதலானோர் முதற் பருவத்தைச் சேர்ந்தவர். அறிவியல் சோஷலிசத்தின் தந்தையெனக் கருதப்படும் கார்ல் மார்க்ஸ் புயலைக் கிளப்பியவர். இதையொட்டி பிரிட்டனில் அறவழியைப் பின்பற்றி ஒரு பிரசார முறை சோஷலிசம் தோன்றியது. அதன் பெயர் ஃபேபியனிசம். சோஷலிசவாதம் முழுவதும் ஆறுவது பாகத்தை நிரப்புகின்றது.

1936ஆம் ஆண்டில் 'வேலைவாய்ப்பு, வட்டி பணம் முதலியவை பற்றிய பொதுக் கோட்பாடு' என்னுமொரு புரட்சி நூல் வெளியானது. அதிலிருந்து பொருளாதார வரலாற்றில் ஒரு புது யுகம் தொடங்கியுள்ளது. இதன் ஆசிரியரான ஜே. எம் கெயின்ஸ் (J. M. Keynes) என்பவர் இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த பொருளாதார மேதை. இவர் வகுத்த புது வழியைப் புதுப் பொருளாதாரம் என்றும், கெயின்சியப் பொருளாதாரம் என்றும் கூறுவது வழக்கம். கெயின்ஸ் மேற்கொண்ட புதுப் பருவின (Macro) அணுகுமுறையினால் பணம், வட்டி, இலாபம் முதலியன பற்றிய கோட்பாடுகள் (theories) மாறுதல் அடைந்தன. இக் கோட்பாடுகளின் மறுமலர்ச்சிக் கால வடிவங்களையும் பின்னால் ஏற்பட்ட மாறுதல்களையும் விளக்கும் அதிகாரம் கெயின்சியப் புரட்சிக்குப்பின் தொகுக்கப்பட்டிருக்கிறது.

மேலும் முதலாவது உலகப் போருக்குப் பின் பொருளாதார இயலில் பல மாற்றங்களைக் காண்கிறோம். நாட்டுப் பகிர்வுத் தொகை (National dividend) அதிகரிக்கும் வீதத்தில் சமூக நலனும் அதிகரிப்பதில்லை என்பது யாவரும் அறிந்த உண்மை. சமூக நலனை உயர்த்த என்னென்ன கைக்கோள்கள் மேற்கொள்ள வேண்டும் என்ற கேள்விக்கு விடையாக பிகோவின் நலப் பொருளாதாரம் அமைகிறது. பிகோவின் அணுகுமுறையில் மன நிறைவு பெறாத அறிஞர்கள் பலர் வகுத்தது புது நலப் பொருளாதாரம். கெயின்ஸின் பொருளாதாரத்துடன் இவற்றையும் தாங்கி நிற்கிறது ஏழாவது பாகம்.

இந்தியப் பொருளாதாரப் பிரச்சினைகளைப் பற்றி முதல் முதலாக ஆராய்ந்தவர் தாதாபாய் நவரோஜி. அவருக்குப்பின் வந்த மூன்று அறிஞர்களும் புதிய கோட்பாடுகள் வகுக்காவிட்டாலும் இந்தியப் பொருளாதார இயல் வளர்ச்சிக்கு அடிகோலியவர்கள் ஆவர். இவர்களுடைய கருத்துகளை ஆராய்கிறது எட்டாவது பாகத்தின் முதல் அதிகாரம். அடுத்தபடியாகக் கடைசி அதிகா

ரத்தில் காந்தீயப் பொருளாதாரம் விளக்கப்படுகிறது. இந்தியப் பண்பாட்டின் தனிச் சிறப்பு அகிம்சையும் அறநெறியும் ஆகும். இவற்றைக் கருவிகளாகப் பயன்படுத்தி காந்தி வகுத்த கோட்பாடு சர்வோதயம். மேலை நாடுகளில் மார்க்ஸீய முறையில் வகுத்த முதலாளித்துவத்தின் முடிவு பற்றிய சித்தாந்தம் மிகவும் பிரபலமானது. இதற்கு மிக வலுவுள்ள மாற்று வழியாக அமைகிறது காந்தியின் சர்வோதயம். இத்துடன் இந் நூல் நிறைவு பெறும்.

## 2. யூதர் சிந்தனை

### முன்னுரை

பண்டைக்காலமென்பது மனித சமுதாய வரலாற்றில் சுமார் கி. மு. 2500ஆம் ஆண்டிலிருந்து கி. பி. 500ஆம் ஆண்டுவரையுள்ள 3000 ஆண்டுகளைக் குறிக்கும்; குறிப்பாக உரோமப் பேரரசு வீழ்ச்சியுற்ற (கி.பி. 476) காலத்துடன் முடிவுற்றதகாகக் கருதப்படுகிறது. இந்தப் பன்னெடுங் காலத்தில் நாகரிகத்தின் சிகரத்தை அடைந்த நாடுகள் பல. அவற்றுள் சிறப்பு மிக்கவை யூதர் நாடுகள், கிரேக்கம், உரோமாபுரி, இந்தியா ஆகும். தத்துவம், அறவியல், அரசியல் இம் மூன்றிலும் பல மேதைகள் எழுதிய தொன்மை நூல்களை அறிவுக் களஞ்சியங்களாக, இன்றைக்கும் அறிஞர் உலகம் பொன்னேபோல் போற்றி வருகின்றது. எனினும், பொருளாதாரம் ஒரு தனி அறிவியலாக மலராதிருந்தது. முன்கூறிய மூன்றுவகை நூல்களிலும் பொருளாதாரக் கருத்துகள் துணுக்குகளாகப் பரவிக் கிடக்கின்றன. அவற்றைப் பொறுக்கித் தொகுப்பின் நாம் அக்காலத்துச் சிந்தனைகளை அறிந்துகொள்ள முடியும்.

### யூதர்கள் சிந்தனை (Hebrew thought)

விவிலியத்தின் பழைய ஏற்பாடுகளிலும் (Old Testament) தீர்க்கதரிசி மோசசின் சட்டங்களிலும் (Laws of Moses) காணப்படும் யூதர்களின் பொருளாதாரக் கருத்துகளை ஆராய்வோம்.

**சமயமும் அரசும்:** யூதர்கள் கலாச்சாரத்தில் சமயமும் அரசும் இரண்டறக் கலந்து நிற்கின்றன. மக்கள் வாழ்க்கையில் சமயக் கோட்பாடுகள் மிக்க செல்வாக்குப் பெற்றிருந்தன. தினசரி வாழ்க்கையில் உணவு தயாரித்தல், முடி வெட்டிக்கொள்ளல்,

திராட்சைக் கொடி பயிர் செய்தல், பல் தேய்த்தல் போன்றவற்றைக்கூட சமய விதிகள் கட்டுப்படுத்தின.

**சொத்துரிமை :** தனியாருக்குச் சொத்துரிமை அளிக்கப்பட்டிருந்தது. நிலம், ஆடுமாடுகள் என்ற பலவகைச் சொத்துகளில் அடிமைகளும் ஒருவகையாகக் கருதப்பட்டது.

**வணிகம் :** வேளாண்மை நீங்கலாக, வாழ்க்கைக்கு இன்றியமையாத பிற தொழில்கள் அனைத்தும் இழிவாகக் கருதப்பட்டன. சமூக நலனைக் கோரி, வணிகம் பல கட்டுப்பாடுகளுக்குள் அடங்கிச் செயல்பட்டது. பண்டங்களின் அளவு, எடை, தரம் ஆகியவற்றைக் குறைத்து விற்பதை அரசு தடை செய்தது. சில்லரை வியாபாரிகளின் இலாபத்திற்கு $16\frac{2}{3}$ சதம் உச்சவரம்பாக இருந்தது. வெள்ளி, தங்கக் கட்டிகள் பண்டமாற்றுக் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டன. அச்சடித்த நாணயங்கள் தோன்றவில்லை. ஊகவணிகம் (speculation), சர்வாதீனம் (monopoly), பஞ்சகாலத்தில் பண்டங்களைப் பதுக்கி வைத்தல், வாழ்க்கைக்கு அவசியப் பண்டங்களை ஏற்றுமதி செய்தல் அனைத்தையும் தடுக்கக் கடுமையான சட்டங்கள் இயற்றப்பட்டிருந்தன.

**வட்டிக் கோட்பாடு :** யூதர்களின் வட்டிக் கோட்பாடு பற்றி ஷைலக்கின் கதையினுல் மிகவும் தப்பான எண்ணம் பரவியுள்ளது. ஆதியில் ஏழைகளிடமிருந்தும், பின்னர் சகோதர யூதர்களிடமிருந்தும் வட்டி வசூலிப்பதை மோசசின் சட்டங்கள் தடை செய்தன. ஒருக்காலும் யூதர் அல்லாதவரிடமிருந்து வட்டி வாங்குவது தடுக்கப்பட்டதில்லை. வட்டியினுல் ஏற்படும் இன்னல்களைக் குறைக்கப் பல விதிகள் நுண்ணிய முறையில் வகுக்கப்பட்டிருந்தன. ஒருவன் தனது மேல்போர்வை, உடுப்பு இரண்டையும் அடகு வைத்துக் கடன் வாங்கியிருப்பின், அவற்றை மாலைப் பொழுதில் கடனாளியிடம் திரும்பக் கொடுத்துவிடவேண்டும்; ஏர், கலப்பை, உளி, திருகை, சம்மட்டி முதலிய தொழிலுக்கும் வீட்டுக்கும் அவசியமாக வேண்டிய கருவிகளை அடகு எடுத்துக் கொள்ளக்கூடாது; விதவைகளிடமிருந்து வட்டி வாங்கக்கூடாது; ஏழு ஆண்டுகளுக்கொருமுறை கடன்காரர்கள் கடனாளிகளுக்கு முழு விடுதலை அளிக்கவேண்டும். அதாவது எஞ்சியிருக்கும் கடனையும் வட்டியையும் ரத்து செய்துவிடவேண்டும். உழவர்கள் ஏழு ஆண்டுகளுக்குப் பின் ஓர் ஆண்டு நிலத்துக்கு ஓய்வு அளித்தனர். அதனுல் நிலம் இழந்த வளத்தை மீண்டும் பெறுமன்றோ? மேலும் 50 ஆண்டுகளுக்கு ஒருமுறை யூதர்கள் ஜுபிலி (Jubilee) என்ெரு விழா எடுத்தனர்.

அது சமயம் கடன்கள் எல்லாம் ரத்து செய்யப்படும். அடமானம் வைத்த, விற்கப்பட்ட நிலங்கள் எல்லாம் ஆதி உரிமையாளருக்குத் திருப்பிக் கொடுக்கப்படும். அரசர்கள் இறந்த சமயத்திலும், வட்டியும் முதலுமாகக் கடனுளி தனது கடனின் இரட்டிப்புத் தொகை கட்டியிருந்தபொழுதும், கடன் முழுவதும் தீர்ந்துவிட்டதாகக் கருதப்பட்டது. பின்னது இந்தியாவில் நிலவிய 'தம்துபட்' (Damdupat) கொள்கையைப் போலவேயிருப்பது ஒப்புநோக்கற்பாலது.

**அரசர் செல்வமும் மக்கள் வறுமையும் :** அரசர்கள் பலவகை வரிகள் விதித்தனர். தலைவரி (capital tax), சாலைவரி (road tax), பத்திலொரு கடமை (tithes) போன்ற வரிகளும் மற்ற வழக்கமான வரிகளுடன் வசூலிக்கப்பட்டன. அயல்நாட்டு வணிகம் முழுவதும் அரசரின் சர்வாதீனத்திலிருந்தமையாலும் அரசர் மிகுதியான இலாபம் திரட்டினர். அரசினர் கட்டடங்கள், கோவில்கள் கட்டவும், பழுது பார்க்கவும் குடிமக்கள் கட்டாய வேலை (forced labour / corvee) செய்யக் கடமைப்பட்டவர்களாயிருந்தனர். எனவே, அரசர்கள் ஆடம்பரமாக வாழ்ந்தனர்.

ஆனால், பெரும்பான்மையான மக்கள் வறுமையிலாழ்ந்திருந்தனர். சமூக அரண் (social security) திட்டங்கள் என்று இல்லையானாலும், விதவைகள், அனாதைக் குழந்தைகள், திக்கற்றவர்கள், கூன், குருடு, நொண்டி ஆகியோருககு அரசு உதவியளித்தது. தனியார் துறையிலும் மக்கள் தங்கள் திராட்சைத் தோட்டங்களில் சில மூலை முடுக்குகளில் உள்ள பழங்களைப் பறிக்காது எளியவருக்கு ஒதுக்கிவிட்டனர்.

## 3. கிரேக்கர் சிந்தனை

பண்டைக்கால கிரேக்கம் தற்கால ஐரோப்பிய நாகரிகத்தின் தாயகம். கி.மு. ஐந்தாவது, நான்காவது நூற்றாண்டுகளில் கிரேக்க நாட்டில் குடியாட்சி நகரங்கள் சிறப்புமிக்க நாகரிகத்தின் நாற்றங்கால்களாகத் திகழ்ந்தன. அவற்றில் முதன்மையானது ஏதன்ஸ் நகரம். தத்துவ ஞானி சாக்ரடீஸ் ஒரு குரு பரம்பரையைத் தோற்றுவித்ததும் பேச்சுச் சுதந்திரத்தை நிலைநாட்ட உயிர் நீத்ததும் இந் நகரில்தான். தத்துவம், அறவியல், அரசியல், நுண்கலைகள் மகோந்நத நிலையை அடைந்திருந்தன. பொருளாதாரச் சிந்தனை, அறவியல் அரசியல் நூல்களின் ஊடே பாவுபோல் பின்னி வளர்ந்தது. தனித்த ஓர் அறிவியலாக மலர அக்காலச் சூழ்நிலை இடம் தரவில்லை.

அக்காலத்தில் கிரேக்க நகரக் குடியரசுகளில் சமூகமும் அரசாங்கமும் வேறுபாடின்றி ஒன்றாக இணைந்து விளங்கிற்று. தத்துவம், அறவியல், அரசியல் மூன்றும் பேரறிஞர்கள் உள்ளத்தைக் கவர்ந்தன. அவற்றில் அழியாப் புகழ்பெற்ற நூல்கள் இயற்றப்பட்டன. அவற்றின் வளர்ச்சியே பொருளாதார நூலின் வளர்ச்சியை அமுக்கிவிட்டது. அவற்றின் 'பணிப் பெண்' போன்ற நிலைதான் பொருளாதாரத்திற்குக் கிட்டியது.

இலட்சியக குடியாட்சியை அமைத்துவிட்டதாகப் பெருமைப் பட்ட அந்நாளில் மக்கள் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப் படவில்லை. மக்களில் பெரும் பகுதியினர் அடிமைகளாக, வாக் குரிமை பெற்ற சுதந்திர மக்களின் பணியாட்களாகக் கடினமான உடல் உழைப்பு வேலைகளையும் கைத்தொழில்களையும் செய்து வந்தனர். ஏதன்ஸ் நகரில் $4\frac{1}{2}$ லட்சம் மக்களில் $2\frac{1}{2}$ லட்சம் பேர் அடிமைகள் ஆவர். அடிமைகள் செய்துவந்த உடல் உழைப்புப் பணிகளெல்லாம் இழிவாகக் கருதப்பட்டன. அடிமைகள் தொண்டு புரிவது அவர்களுடைய தப்ப முடியாத கடமை என் றிருந்தமையால், கிரேக்க சமூகத்தில் உழைப்புப் பிரச்சினைகள் **(labour problems)** எழவில்லை. வேளாண்மை தவிர மற்றெல்லாக் கைத்தொழில்களும், வணிகம் உட்பட இழிதொழில்களாகக் கருதப்பட்டன. மிகுதியான பொருளீட்டலையும் தேவைகளையும் பெருக்குவதைக் கண்டித்தது கிரேக்க ஒழுக்கநெறி. அறம், நல்லரசு, இன்பம் இம் மூன்றையும் அடைவதே கிரேக்க நாகரிகத் தின் குறிக்கோள்களாயிருந்தன. சமய கோட்பாடுகளும் அரசாங் கச் சட்டங்களும் குறிப்பிட்ட அளவு இன்பத்தையே அனுமதித் தன என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. இத்தகைய சூழ் நிலையில் பொருளாதார ஆராய்ச்சியில் எவ்வாறு ஆர்வமும் ஊக்க மும் பிறக்கும்?

பொருளாதார அறிவியல் பிற சமூக நூல்களைப்போலச் சிறப் பான வளர்ச்சி பெறவில்லை. எனினும், அரிய பொருளாதாரக் கருத்துகளைக் கிரேக்க எழுத்தாளர்களின் நூல்களில் காண் கிறோம். முதலாவதாக சமூகம் ஏன் உண்டாயிற்று என்ற கேள் விக்குக் கிரேக்க அறிஞர் பிளேட்டோ கூறும் பொருளாதாரக் காரணத்தைக் காண்போம். என்ன பாடுபட்டாலும் தனி மனிதன் தன்னுடைய தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்ய முடியாது. மற்றவர்கள் உதவியும் ஒத்துழைப்பும் இன்றியமை யாதவை. இதை அறிந்த மக்கள், ஒன்றுகூடி வாழத் தலைப் பட்டனர். சமூகம் என்பது இயங்கத் தொடங்கியது. மேலும் பிளேட்டோ வேலைப் பிரிவினையும் அதனால் வரும் நன்மை

களையும் விளக்குவது, ஆடம் ஸ்மித்தின் புகழ்பெற்ற அதிகாரத்தை நினைவூட்டும். ஆயினும், இவ்விருவர் கருத்துகளிலும் ஓர் அடிப்படை வேற்றுமையைக் காண்கிறோம். பிளேட்டோ 'தொழில் திறன் இயற்கையின் வரப்பிரசாதம்; ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு தொழில் செய்வதில் திறமையும் ஆர்வமும் இயற்கையாக உண்டாகின்றன. இதன் விளைவே உழைப்புப் பிரிப்பு (division of labour)' என்று கூறுகிறார். இதற்குத் தலைகீழானது ஆடம் ஸ்மித்தின் பாடம், 'உழைப்புப் பிரிவினையால் உற்பத்தித் திறன் மிகும். உபரியான உற்பத்தியை லாப நோக்குடன் பிறருக்கு விற்று ஒவ்வொருவனும் தன்னலத்தைப் பேணி வளர்க்க முடியும். இத் தன்னல முயற்சி பொது நலத்தையும் பேணுவது ஒரு சந்தர்ப்ப விளைவு' என்பதாகும். இந்த வாதத்தில் உழைப்புப் பிரிப்பு காரணம், லாபம் கிடைப்பது விளைவு என்றாகும்.

கிரேக்க அறிஞர்களுக்கும் இருபதாம் நூற்றாண்டுப் பொருளாதார நிபுணர்களுக்கும் உள்ள சுவையான ஒற்றுமையொன்று இங்குக் குறிப்பிடத் தகும். சமூக நூல்கள் அனைத்தும் ஒன்றையொன்று சார்ந்தும் இணைந்தும் உள்ளன. அறவியல், அரசியல், பொருளாதாரம், சட்டம் முதலியவற்றைத் தனித்தனியாகப் பிரித்துக் கற்பதில் பல குறைபாடுகள் உண்டு. இவ்வாறு கூறிப் போந்தனர் கிரேக்க அறிஞர். ஆனால், 19ஆவது நூற்றாண்டில் பொருளாதார எழுத்தாளர்கள் பலர் பொருளாதாரத்தைப் பிற நூல்கள் சார்பில்லாத ஒரு தனிப்பட்ட அறிவியலாக உருவாக்க முனைந்தனர். அறவியல், உளவியல், அரசியல் கொள்கைகளும் நோக்கங்களும் பொருளாதாரச் சிந்தனையில் ஒரு துளிகூடக் கலக்கலாகாது, ஓர் இம்மிகூட பாதிக்கலாகாது என்பது அவர்கள் கட்சி. தற்காலப் பொருளாதார வல்லுநர்கள் இந்த விஷயத்தில் கிரேக்க அறிஞர்கள் கருத்தை நோக்கி மீண்டும் விரைகின்றனர். அவர்கள் கூறுவதாவது: எந்தப் பொருளாதாரப் பிரச்சினையையும் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் மாத்திரம் நோக்குவதைவிட ஒழுக்கம், அரசியல், சமூகநலன் போன்ற முனைகளில் இருந்தும் நோக்கித் தீர்வு காண்பதே சாலச் சிறந்ததாகும்.

### பிளேட்டோ (கி.மு. 427–347)

பிளேட்டோ தத்துவமேதை சாகரடீஸின் தலைசிறந்த சீடர். ஏதன்ஸ் நகரில் குடியாட்சி நலியத் தொடங்கியபின் வாழ்ந்தவர். செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தவர். குடியாட்சியின் சீர்கேடான

நிலை பிளேட்டோவுக்கு அருவருப்பு மூட்டியது. இக் குடியாட்சி கும்பல் ஆட்சியாக மாறித் தம்முடைய பக்திக்குரிய குரு, சாக்ரடீஸுக்கு மரண தண்டனை விதித்தபின் குடியாட்சியை அவர் அறவே வெறுத்தார். அரசாங்கம் சிறப்புடன் நடைபெற அறிவு, குணநலன்களில் சிறந்ததோர் ஆட்சி இன்றியமையாதது எனக் கருதினார். அவருடைய நூல்களில் முதன்மையானது உலகப் புகழ்பெற்ற 'குடியரசு' என்னும் நூல். இதில் 'தத்துவ ஞானிகளின் ஆட்சி' (Philosophers' rule) அமைக்கும் வழிமுறையையும் அதனால் விளையக்கூடிய நன்மைகளையும் விளக்கியுள்ளார். பிளேட்டோ ஒரு தத்துவஞானி மட்டுமல்ல, ஒரு கவிஞரும் ஆவர். அவர் 'குடியரசு' நூலைக் கற்றவருடன் பாமரரும் படிக்கவேண்டுமென்று விரும்பினார். எனவே, இந்நூல் முழுவதையும் உரையாடலாகவே வரைந்தார். அவர் எழுத்தில் கவி நயமும், இனிய நடையும் மிளிர்கின்றன. குடியரசில் கூறப்படாத விஷயமில்லை. தத்துவம், சமயம், உளநூல், அரசியல், அறவியல், சோசியலிசம், கம்யூனிசம், மகளிர் உரிமை, குடும்பக் கட்டுப்பாடு, வர்க்க உயர்வுக்கலை (eugenics) எனப் பல்வேறு இயல்களில் சீரிய கருத்துகள் மண்டிக் கிடக்கும் நூல் 'குடியரசு'. அமெரிக்க அறிஞர் எமர்சன் 'பிளேட்டோவே தத்துவம், தத்துவமே பிளேட்டோ' எனப் போற்றுகிறார். மேலும் திருக்குர்ஆன் பற்றிக் காலிப் ஓமர் கூறியது 'நூல் நிலையங்கள் அனைத்தையும் தீக்கிரையாக்குக; ஏனெனில், அவற்றில் உள்ள அறிவு எல்லாம் இந் நூலில் அடங்கியுள்ளது' என்ற அபிப்பிராயம் பிளேட்டோவின் குடியரசுக்கும் பொருந்தும் என்கிறார் எமர்சன்.

இத்தகைய அறிவுக் கருவூலத்தில் பொருளாதாரம் சம்பந்தப்பட்ட கருத்துகளை மட்டும் ஆராய்ந்து பார்ப்போம். 'தத்துவ ஞானிகளின் ஆட்சி' அமைக்க அவர் காட்டும் வழிமுறைகளுக்கு முன்னுரையாக அவர் தரும் உவமைகள் ரசிக்கத்தக்கவை. ஒரு தொழிலிலும் தொழில் நுட்பப் பயிற்சியின்றி ஒருவன் திறமைசாலியாக முடியாது என்பதை வற்புறுத்துகிறார். செருப்புத் தைக்கிறது முதல் நோயைக் குணப்படுத்தும் மருத்துவத்தொழில் வரை ஒவ்வொரு தொழிலுக்கும் எப்படி பயிற்சி தேவையோ அப்படியே ஆட்சியாளருக்கும் பயிற்சி தேவைப்படுகிறது என்று வாதிக்கிறார். திரவியம் திரட்டுவதில் இதயத்தைப் பறிகொடுக்கும் வணிகர், ஆட்சி பீடத்தில் அமர்ந்தால், அவர்களது ஆட்சி நாட்டை நாசப்படுத்தும்; சேனாதிபதி ஆட்சியைக் கைப்பற்றினால் சர்வாதிகாரத்துவம் தலைவிரித்தாடும். வணிகர், ஊதியம் தரும் வணிகத் துறைக்குச் சரி, படைத்தலைவர், போர்க்களத்திற்குச் சரி; ஆனால், இரு வகுப்பினரும் ஆட்சித்துறைக்குச் சரியே

அல்லர். ஆட்சி என்பது ஒரு கடினமான கலை. அது ஒரு விஞ்ஞானமுமாகும். எனவே ஆழ்ந்த அறிவு, தத்துவ ஞானம், உயர்ந்த கல்வி, கடும் பயிற்சி ஆகியவற்றைப் பெற்றவர்களே ஆட்சியாளராகத் தகுதி வாய்ந்தவர்கள்.

மேற்கண்ட முடிவை எவ்வாறு செயல்படுத்துவது என்பதை விவரமாக விளக்குகிறார் பிளேட்டோ. பத்து வயதான சிறுவர் சிறுமியரைப் பெற்றோரிடம் இருந்து பிரித்து அனைவருக்கும் ஒரே மாதிரியான கல்வி புகட்டவேண்டியது முதலாவதாகும். கல்வி போதனை முறையில் முதல் பத்து ஆண்டுகளுக்கு உடற்பயிற்சி பெரிய அளவில் இடம் பெறவேண்டும். பிற்கால வாழ்க்கையில் அவர்களுக்கு மருந்துகளின் தேவையே ஏற்படாத அளவுக்கு அவர்களுடைய உடல் நலம் பெருகவேண்டும். அடுத்தபடியாக அவர்களிடம் நற்பண்புகள் வளர்க்க இசைப் பயிற்சி. மூன்றாவதாகக் கடவுள் நம்பிக்கையை வளர்க்கக்கூடிய போதனைகள். இத்தகைய பயிற்சிகளுக்குப் பின், மாணவர்களின் இருபதாவது பிராயத்தில் ஒரு கடினமான தேர்வு நடத்தப்படும். அதில் தேறாதவர்களுக்கு உழவு, கைத்தொழில், வணிகம், சுரங்கம், அரசினா அலுவலகங்கள் முதலிய இடங்களில் வேலை கொடுக்கப்படும். தேறியவர்களுக்கு மேலும் பத்து ஆண்டுகளுக்கு உயர்தரக் கல்வியும் பயிற்சியும் அளிக்கப்படும். மீண்டும் ஒரு கடினமான தேர்வு. இதில் தேறாதவர்கள் படையிலும், அரசினர் அலுவலகங்களில் இடை நிலையிலும் வேலையில் அமர்த்தப்படுவர். தேறியவர்களுக்கு மேலும் ஐந்து ஆண்டுகளுக்குத் தத்துவம் போன்ற மிக உயர்ந்த கல்வி. இது முடிந்தபின் அவர்களுடைய 35வது பிராயத்தில் உலகியல் அறிவு நேரில் பெறவும், பொருளாதாரத் துறையில் நடைமுறை அனுபவம் பெறவும், மாணவர்களைப் பல்வேறு தொழில்களில் புகுத்துவார்கள். சாதாரண மக்கள் சந்தையிலும் பிற துறைகளிலும் இடும் போட்டி, ஏமாற்று வித்தைகள், கடும் உழைப்பு, இடைவிடா முயற்சி போன்ற நடவடிக்கைகளில் நன்கு அறிவுபெறப் பதினைந்து ஆண்டுகள் அவகாசம் அளிக்கப்படும். இத்தனை விதமான பயிற்சிகள் முடியும்பொழுது இப் பயிற்சியாளர்கள் ஐம்பதாவது வயதைக் கடந்திருப்பர். எனவே, இளமைப் பருவ மூர்க்கத்தனம், கர்வம், பொறாமை போன்ற தீய குணங்களெல்லாம் அழிந்துபடும். புடம் போட்ட பொன் மாதிரி அவர்களின் குணங்கள் மேன்மையுறும். இந்த நிலையில் அவர்கள் ஆட்சியாளரின் பொறுப்பைத் தாங்கத் தகுதி பெற்றவர்களாகத் திகழ்வார்கள் என்பது பிளேட்டோவின் கருத்து.

கடுந்தவம் போன்ற இந்தப் பயிற்சிகளில் வெற்றி பெற்றவருக்கும், தங்களுக்கென மனைவி மக்கள், சொத்து சுகம் என்றிருப்

பின், ஆட்சித் திறமும், நடுநிலையும் கெடக்கூடும் என்பது பிளேட்டோவின் எண்ணம். ஏனெனில், ஆட்சியாளர்களின் மனைவிமார் பெண்கள்தானே! ஆடை அணிகலன் மேல் ஆசை கொள்வர் அன்றோ? அவர்களுடைய நச்சரிப்பைத் தாங்கமுடியா மல், நீண்டகாலப் பயிற்சியால் பெற்ற மனவுறுதி தளர்ந்து, நீதி நெறியில் இருந்து வழுவுமளவுக்குப் பண ஆசையும், லஞ்ச மோகினியும் கணவன்மார்களை ஆட்டிவைக்கும். இத்தகைய கேடு வராமல் தடுக்கும் பொருட்டு பிளேட்டோ ஆட்சியாளர்க ளுக்கும் படைவீரர்களுக்கும் தனிக் குடும்பங்கள், மனைவி மக்கள் சொத்து என்ற உரிமைகளை வழங்கக்கூடாது என்று தடை விதித்திருக்கிறார். இந்த இரு வகுப்பினருக்கும் பொதுக் குடும்பங் கள், பொது மனைவிகள் என்ற முழு கம்யூனிச வாழ்க்கையை வழங்குகிறார். உடல்வளம், அறிவு, எழில், ஆற்றல் ஆகிய பண்பு கள் நிறைந்த ஆடவரும் மகளிரும் கூடிவாழ்ந்து வர்க்கவிருத்தி செய்ய வாய்ப்புகள் வழங்கப்படும். இதனால் மனித வர்க்கத்தின் தரம் உயர்வுறும் என்பது பிளேட்டோவின் கருத்து.

பிளேட்டோவின் கற்பனைச் சமுதாயத்தின் அடித்தளத்தில் உழவர், வணிகர், கைத்தொழில் வினைஞர் ஆகிய உடல் உழைப் பில் ஈடுபட்ட பெரும்பான்மை மக்களும், நடுத்தளத்தில் படையி னர், காவலர், நடுநிலை, கீழ்நிலை அரசாங்க அலுவலர் ஆகியோ ரும், உச்சியில் குறைந்த எண்ணிக்கையில் ஆட்சியாளர் தங்க ளுடைய கடமைகளைச் செவ்வனே செய்து வாழ்வர். அடித்தளத் தில் உள்ள பெரும்பான்மையான மக்களுககுத் தனிக் குடும்பம், சொத்து, சுகம் எல்லாம் உண்டு. மேல்தளத்தில் உள்ள ஆட்சி யாளராகிய சிறுதொகையினருக்கு மாத்திரமே கம்யூனிசம்.

மேற்கூறியவாறு நிறுவப்பட்ட 'ஞானிகள் ஆட்சி' தன்ன லம் கருதாமல், சமூக நலனைப் பெருக்குவதே குறிக்கோளாக இயங்கும். வணிகம், கைத்தொழில்களை ஒழுங்குபடுத்தக் கட்டுப் பாடுகள் எல்லாம் இருக்கும். அளவுக்குமிஞ்சி சொத்துகள் திரட்டுவதற்கு அரசு தடைகள் விதிக்கும். சராசரி குடும்பத்தின் சொத்திற்கு நான்கு மடங்கிற்கு மேல் ஒரு குடும்பமும் சொத்துத் திரட்டக்கூடாது என்ற வரம்பு கட்டப்படும்.

பிளேட்டோவின் கற்பனைக் குடியரசு எங்கேயாவது நடை முறையில் நிறுவப்பட்டு இயங்கியது உண்டா? ஓர் அளவிற்கு கிரேக்க நாட்டில் ஸ்பார்டாவிலும் சுமார் ஆயிரம் ஆண்டுகள் ஐரோப்பாவிலும் சில முக்கிய அம்சங்களுடன் இயங்கியதெனக் கூறலாம். இடைக்கால ஐரோப்பாவில் (1) கல்வியிற் சிறந்த,

மனைவி மக்கள் இல்லாத, சமயக்குருக்கள் ஆட்சியாளராகவும் (2) நிலப்பிரபுக்களும் அவர்கள் படைவீரர்களும் காவலர்களாக வும் (3) ஏனையோர் அனைவரும் சமுதாயத்திற்கு அவசியமான தொழில்களில் ஈடுபட்டவர்களாகவும் அமைந்த மூன்றடுக்குச் சமூ கத்தைக் காண்கிறோம். உலக வரலாற்றில் வேறு நாடுகளில் வேறு காலங்களில் காண்பதற்கில்லை. பிளேட்டோவின் கனவு ஒருகாலத்திலும் முழுமையாக நனவாக முடியாது என்பதை அவ ருடைய பிரதம சீடர் அரிஸ்டாடிலே சுட்டிக்காட்டியுள்ளார்.

பிளேட்டோவின் அடிப்படை எடுகோள் மக்கள் அனைவரும் உடன் பிறப்புகள் என்பதாகும். இது வெறும் ஏட்டுச்சுரைக் காய்; உண்மையில் உலக வாழ்க்கையில் நாம் காண்பது வேறு மனப்பான்மை. பிளேட்டோவின் கம்யூனிசம் பொருளாதாரத் துறையில் படுதோல்வி உறும் என்பது அரிஸ்டாடிலின் கருத்து. அனைவருக்கும் சொத்துப் பொதுவானது என்பது ஒரு வருக்கும் பொறுப்பில்லை என்று முடியும். உழைப்பவர் வாடுவர், சோம்பித் திரிபவர் பயன்பெறுவர். ஒருபுறம் ஆளும் வகுப்பினர்— சொத்துரிமை முற்றும் துறந்தவர். ஆனால், அரசின் முழு அதி காரமும் படைத்தவர். மற்றொருபுறம் மூன்றாம் வகுப்பினா— செல்வம் ஈட்டிச் சேர்த்தவர். பணம் பாதாளம் மட்டும் போகும் என்ற செல்வத்தின் சிறப்பை உணர்ந்தவர்; பொருளாதார சக்தி வாய்ந்தவர். அரசியல் அதிகாரமும் பொருளாதார சக்தியும் மோதினால் பின்னதே வெற்றிதரும் என்பது யாவரும் அறிந்ததே. எனவே, நல்லாட்சி நடத்தத் தனிப்பயிற்சி பெற்ற முதல் வகுப் பினர் மூன்றாம் வகுப்பினரின் கைப்பாவைகளானால் வியப்பில்லை. அப்படியாகாவிடில் வேறு ஒன்று சம்பவிக்கலாம்: ஆட்சியில் உள்ள ஒருசிலருக்கு வரம்பற்ற அதிகாரத்தை வழங்கினால், ஆக்டன் பிரபுவின் பொன்மொழிப்படி 'அதிகாரம் ஒழுக்கத்தை அரித்துவிடும், முழு அதிகாரம் ஒழுக்கத்தை முழுமையாக அரித்துவிடும்' அன்றோ?

இந்தமாதிரி அரிஸ்டாடில் பிளேட்டோவின் கற்பனைக குடி யரசில் குற்றங்குறைகள் கண்டாரெனினும், பேரறிவாளரின், பண்பாளரின், நல்லாரின் ஆட்சி தேவை என்னும் அடிப்படைக கருத்தை எவரும் மறுக்கமுடியாது.

**அரிஸ்டாடில் (கி.மு. 384–322)**

அரிஸ்டாடில் பிளேட்டோவின் பிரதம மாணவர். மாவீரன் அலெக்சாண்டரின் குரு. இவருடைய தந்தை ஒரு மருத்துவர். இடைக்கால ஐரோப்பாவில் வேறு அடைமொழியின்றி 'தத்துவ

ஞானி' என்றால் அரிஸ்டாடிலையே குறிக்கும் அளவுக்குப் புகழ் வாய்ந்தவர். தனக்கென ஒரு நூலகமும், ஒரு ஆராய்ச்சிக்கூடமும் வரலாற்றிலேயே முதலாவதாக வைத்த பெருமைக்குரியவர். தத்துவம், அறவியல், அரசியல் முதலிய சமுக இயல்களிலும், இயற்கை அறிவியல்களிலும் இவர் எழுதிய புகழ்பெற்ற தொன்மை நூல்கள் பல. அவற்றில் நமக்கு முக்கியமானவை அவருடைய 'அறவியல்,' 'அரசியல்' எனும் இரண்டு நூல்கள். பொருளாதாரம் ஓர் அறிவியலாகத் திகழ அரிஸ்டாடில் அளவிற்கு அடித்தளம் கட்டியவர் பண்டை உலகில் எவருமிலர். அவருடைய பொருளாதாரக் கருத்துகளைப் புரிந்துகொள்ள நாம் முறையே அரசு, சொத்துரிமை, மதிப்புக் கொள்கை, பணம் என்பவற்றை ஆராய்வோம்.

**அரசு:** 'மனிதன் இயற்கையில் ஓர் அரசியல் பிராணி' என்பது அரிஸ்டாடிலின் புகழ்பெற்ற கூற்று. அதாவது, மக்கள் கூடி வாழ்ந்து இன்பம் பெறும் குணம் படைத்தவர். இதன் அடிப்படையில் உருவானவைதான் குடும்பம், ஊர், நாடு, அரசு முதலியவை. அரசு அமைப்பதன் நோக்கம் மக்களுக்கு நல் வாழ்வு (good life) அளிப்பதே. அரசுகளில் முடியாட்சி, பிரபுக்களாட்சி, குடியாட்சி என்பன நல்லாட்சியின் மூவகையாகும். இவை மூன்றும் கேடுற்றுத் தீய வழி செல்லின், அவை கொடுங்கோலாட்சி, சிலராட்சி, கும்பல் ஆட்சி ஆக முறையே மாறும். இவ்வாறு அரசுகளில் நல்லவை, தீயவை என்று ஆய்ந்தபின், அரிஸ்டாடில் எந்த அரசிலும் பெரும்பான்மையான மக்கள் ஆட்சியில் நேர்முகப் பங்கு கொண்டால்தான் அது சிறந்த அரசு ஆகும் என்று, பிளேட்டோவின் சிறுபான்மைத் 'தத்துவ ஞானிகளின் ஆட்சி'க்கு முரண்பாடான முடிவுக்கு வருகிறார். அவர் காலத்திய குடியாட்சி நகரங்களில், பணக்காரர் ஒருபுறமும், ஏழைகள் மறுபுறமுமாகச் சமூகம் பிளவுபட்டு இரு கூறுகளாக நின்றதை அரிஸ்டாடில் ஒரு தீமையாகக் கருதினார். இவ்விரு வகுப்பினருக்கும் நடுவே பெரும்பான்மையான மத்தியதர வகுப்பினரின் வளர்ச்சி பெருகினால் மிகுந்த நன்மை பயக்கும் என்று கூறினார். நடுத்தர வகுப்பினரின் பெருமையையும் பண்புகளையும் அரிஸ்டாடில் எவ்வளவு மதித்திருந்தார் என்பதற்கு இது ஒரு சான்றாகும்.

இவர் வகுத்த குடியாட்சித் திட்டம் தற்காலப் பகுத்தறிவு உலகிற்குப் பொருந்தாது என்பதை ஈண்டு கவனிக்கவேண்டும். ஏனெனில், (1) இவருடைய குடியாட்சியில் சமய குருக்கள், போர் வீரர், ஆட்சியாளர் ஆகிய மூவகையினர்க்கு மட்டுமே வாக்

குரிமை அளிக்கப்படும். (2) இவர்களைத் தவிர நாட்டின் செல் வத்தைப் பேணி வளர்க்கும் வணிகர், கைவினைஞர் போன்றவர் களுக்கு வாக்குரிமை கிடையாது. அவர்கள் செய்யும் தொழில் இழிதொழில் என்பது அவருடைய எண்ணம். இழிதொழில் புரிபவர்களால், அரசியலில் ஈடுபடத் தேவையான நற்பண்பை (virtue) அடையமுடியாது என்றும் எண்ணினுர். (3) குடியாட்சி யின் அடித்தளத்தில் பெரும்பான்மையான மக்கள் அடிமைகளாக வாழ்ந்தனர். அடிமைகளுக்கு விடுதலை அளிக்கவேண்டுமென்று அரிஸ்டாடில் உணர்ந்ததாகத் தெரியவில்லை. அவர் காலத்தில் வாழ்ந்த அடிமைகளில் இரண்டு வகையினர் உண்டு. (1) பிறப் பினுல் அடிமைகளாக வாழ்ந்தவர். (2) போரினுலும், சட்டத்திட் டங்களினுலும் கட்டாயப்படுத்தப்பட்டு அடிமைகளானவர்கள். முதல் வகுப்பினர் இயற்கை அடிமைகளென்றும் இரண்டாவது வகுப்பினரைச் செயற்கை அடிமைகளென்றும் அரிஸ்டாடில் கூறுகிருர். அடிமைகளைப்பற்றி இரக்க மனப்பான்மையுடன் அரிஸ்டாடில் சிந்திக்காது போனமைக்கு இயற்கை அடிமைகளை எஜமானர்கள் தங்கள் உற்ருர் உறவினர் மாதிரி அன்புடன் நடத்தி வந்ததுவே காரணமாயிருக்கக்கூடும். ஒரு கிரேக்கனை இன்னெரு கிரேக்கன் போர்க்களத்தில் அடிமையாக்குவதை அரிஸ்டாடில் தவறு எனக் கூறுகிருர்.

சொத்துரிமை: தனியார் சொத்துரிமையை அரிஸ்டாடில் ஆதரித்தார். பிளேட்டோவின் பொதுச்சொத்து, பொதுவுடமை என்னும் கருத்துகளைத் தாக்கினுர். தனக்கெனச் சொத்து இருப்பின் அதற்குத் தனியாகக் கவனம் செலுத்த அது தூண்டு கோலாக அமையும் என்பது அவர் கருத்து. சொத்துகளை இரண்டு வகைப்படுத்திக் கூறுகிருர். (1) வீடு, நிலம், குதிரை, அணிகலன், அடிமை, கலப்பை போன்ற சடப்பொருள்களை (உயிருள்ளவையும் உயிரில்லாதவையும்) இயற்கைச் சொத்து என்றும் (2) பணம், பங்குப் பத்திரம், கடன் பத்திரம் போன்ற சொத்துரிமைச் சாதனங்களைச் செயற்கைச் சொத்து என்றும் குறிப்பிடுகிருர். இரண்டாவது வகைச் சொத்துகளை அவர் சொத்தாகவே ஒப்புக்கொள்ளவில்லை. முதல் வகைச் சொத்து களுக்குத் தனி உரிமை வழங்கினுலும் அரிஸ்டாடில் சொத்து கள் எல்லாமே பொது நன்மைக்குப் பயன்படவேண்டுமெனப் பகர்ந்தார். 'தனி உடமை, பொது நன்மை' என்னும் கொள்கை யில் சொத்துகளை உபயோகிக்கும் வகையில் சட்டமன்றங்கள் சட்டங்கள் இயற்றிச் செயல்படுத்தவேண்டும் என விரும்பினுர். இக்கொள்கையுடன் காந்திஜியின் 'தர்மகர்த்தாக் கோட்பாட்டை' அதாவது பணக்காரர் தங்கள் சொத்தைத் தர்மகர்த்தா முறையில்

கண்காணித்து வருவாயை ஏழை மக்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்பதை ஒப்புநோக்கத்தகும். ‘தங்களுக்குத் தனி உரிமை உள்ள சொத்துகளில் மக்கள் மிகுந்த அக்கறை உள்ள வர்களாக இருக்கிறார்கள்; ஓரளவே உரிமையுள்ள சொத்தில் அவ்வளவு பொறுப்புள்ளவர்களாக ,இருப்பதில்லை’ என்பது அரிஸ்டாடில் கண்டறிந்த உண்மை.

**மதிப்புக் கொள்கை:** பொருளாதாரக் கருத்துகளைத் திட்ட வட்டமாகக் குறிப்பிட்ட முதல் எழுத்தாளர் அரிஸ்டாடிலே பயன்பாட்டு மதிப்புக்கும், பண்டமாற்று மதிப்புக்குமுள்ள வேற்று மையைத் தெளிவாக எடுத்துக் காட்டினார். ஒரு செருப்பைக் காலில் அணியும்போது அதன் பயன்பாட்டு மதிப்பை நுகரு கிறோம். அதைக் கொடுத்து ஒரு வேட்டி அல்லது ஒரு படி அரிசி பெறுவதில் அதன் பண்டமாற்று மதிப்பைத் துய்க்கிறோம். இந்த வேற்றுமையின் அடிப்படையில்தான் அரிஸ்டாடில் இயற் கைச் சொத்து, செயற்கைச் சொத்து என்று பாகுபாடு செய்கிறார். இயற்கைச் சொத்துப் பயன்பாட்டை நேரடியாகச் சுரக்கும் பொருள், செருப்பு, வீடு, உணவு முதலியன. ஆனால், பொரு ளின் பிரதிநிதியாக நின்று அதைக் கையடித்தால்தான், நேரடிப் பயன்பாடு சுரக்கும் பொருள் பெறமுடியும் என்ற பண்புள்ளவை போலிச் செயற்கைச் சொத்துகள். எடுத்துக்காட்டாகக் கடன் பத்திரம், பணம், முதலியவற்றைச் சொல்லலாம். வெறும் கடன் பத்திரம் அல்லது பணம் பசியை ஆற்றுமா அல்லது குளிரைப் போக்குமா?

**பணம்:** அரிஸ்டாடில் தற்காலப் பொருளாதாரம் கூறும் பணத்தின் நான்கு உபயோகங்களில் மூன்றை விளக்குவது குறிப்பிடத்தக்கது. பண்டமாற்றுக் கருவியாக, மதிப்பளவை யாக, சேம இருப்புக் குவையாக மூன்று வகைப் பணிகளைப் பணம் செய்கிறது. பணத்தை வட்டிக்குக் கடனாகக் கொடுப்பது தவறு. பணத்தை வருவாய் நல்கும் சொத்தாகப் பயன்படுத்து வது முறையல்ல. ஏனெனில் பணம் குட்டிபோடும் தன்மை யற்றது. வெறும் ‘மலடு’ (sterile) என்றுரைக்கிறார். அவர் வட்டி வாங்குவதைக் கண்டித்து அதை வாங்குவதைத் தடுக்க வேண்டும் என்று வாதிப்பது அக்காலத்தில் கடன்கள் வாங்கு வோரின் பரிதாப நிலையேதான். தற்காலத்தில் பெரும்பாலும் கடன் முதலீட்டுக்கும் ஆக்க முயற்சிக்கும் வாங்கப்படுகிறது. அரிஸ்டாடில் காலத்தில் துன்பத்திலும் வறுமையிலும் உழலும் ஏழை எளியவர்களின் துய்ப்புச் செலவுக்காகக் கடன் பெரும் பாலும் வாங்கப்பட்டது. அரிஸ்டாடிலின் வட்டி எதிர்ப்புக்

கொள்கை வல்லுயிர் பெற்று இன்றைக்கும் சட்ட மன்றங்களி லும் மக்கள் உள்ளத்திலும் இடம் பெற்றிருப்பது உணரற்பாலது.

**தொழில்கள்:** தொழில்களை மேன்மையானவை, தாழ்மை யானவை என்று இரு வகையாகப் பிரிக்கிறார். உழவு, கால்நடை வளர்ப்பு ஆகிய தொழில்களின் வாயிலாகச் சொத்து உண்டாக்கு வது விரும்பத்தக்க கண்ணியமான வழி. தன் திறமையைப் பிற ருக்கு விற்றும், சில்லரை வணிகம் செய்தும், கடுவட்டிக்குக் கடன் கொடுத்தும் சம்பாதிப்பது கேவலமான வழி.

கடைசியாகச் செல்வம், வறுமை பற்றிய அரிஸ்டாடிலின் கருத்துகளைப் பார்ப்போம். அளவுக்கு மீறிய செல்வமும் தாங் கொணா வறுமையும் நாட்டைக் கெடுத்துவிடும். செல்வம் மித மிஞ்சிப் பெருகினால், திறமை (efficiency) சுருங்கித் தேயும். வறுமையின் கொடுமையே புரட்சிக்கும் பஞ்சமா பாதகங்களுக்கும் பிறப்பிடம். கிரேக்க அறிஞர்கள் அனைவரும் அரிஸ்டாடில் போலவே பெரும் செல்வம் திரட்டுவதே தொழிலாகக் கொள்வ தைப் பழித்தனர். உடனடியாகத் துய்க்கத் தேவையான பொருள்களை ஈட்டுவதைப் பாராட்டினர். செல்வம் என்றால் நலன் என்று எப்பொழுதும் அமையும் என்பதில் அரிஸ்டாடி லுக்கு நம்பிக்கை இல்லை; செல்வம் நன்மையைப் போல் தீமையும் ஆக்கவல்லது. பொதுவாக அரிஸ்டாடிலின் பொருளாதாரக் கருத்துகள் வலுமிக்க அறவியல் அடிப்படையில் எழுந்தவை. அவர் கற்பித்த ஒழுக்கநெறி இடைக்காலத்தில் பொருளாதார விவகாரங்களில் சீரிய செல்வாக்குப் பெற்றிருந்தது. இன்றும் அது குறையவில்லை. இதுவே அறிவுக்களஞ்சியமான அரிஸ் டாடிலின் பெருமைக்குச் சான்று.

**செனஃபன் (கி.மு. 440–355)**

பிளேட்டோ, அரிஸ்டாடில் இருவருடனும் ஒப்பிடக்கூடிய பெரிய எழுத்தாளர் அல்ல செனஃபன். எல்லா விஷயங்களையும் செயல்முறை நோக்கில் ஆய்வது அவருடைய தனிச்சிறப்பு ஆகும். 'ஏதன்சின் வருவாயைப் பெருக்க வழி முறைகள்' என்னும் அவ ருடைய நூல் அரிய கருத்துகள் அடங்கியது. அயல் நாட்டி னரை வரவேற்று உபசரிப்பதனால் விளையக்கூடிய நன்மைகளை யும் வழி முறைகளையும் விளக்குவதில் இணையற்றவர். அயல் நாட்டு வணிகரை வரவேற்றால் வணிகம் பெருகும். சுங்கவரி வருவாய் பெருகும். அவர்களுக்கு நாட்டு மக்களுக்குச் செலவு செய்வதுபோல் அரசு செலவு செய்யவேண்டியதில்லை. அயல் நாட்டு மாலுமிகளுக்கும் வணிகர்களுக்கும் தங்க வசதியான இல் லங்களும், ஓய்வு நேரத்திற்குக் கவர்ச்சியான உல்லாசப் பொழுது

போக்கும் ஏற்பாடு செய்யவேண்டும். கிரேக்கக் கப்பல்களை அவர்களுக்கு வாடகைக்குக் கொடுக்கலாம். கிரேக்க அடிமைகளைக் கூலி வேலை செய்ய அவர்களிடம் அனுப்பலாம். மேலும் ஏதன்ஸின் இதமான தட்ப வெட்ப நிலை, நிலவளம், மீன்வளம், கல் சுரங்கங்கள், வசதி மிகுந்த துறைமுகம் ஆகியவற்றைப் பாராட்டி அவற்றைப் பயன்படுத்தி எவ்வாறு கூடுதலான வருவாய் அடையக்கூடும் என்பதைக் குறிப்பிடுகிறார். கடைசியாக வெள்ளிக் கனிகளிலிருந்து எவ்வளவு வெள்ளி வெட்டி எடுத்தாலும் இலாபமே யொழிய நஷ்டமில்லை என்று வலுவாக, ஆனால் தவறாக வாதிக்கிறார்.

வேளாண்மைத் தொழிலை அவர் புகழ்வதைப் பார்த்தால் செனஃபன் 18ஆம் நூற்றாண்டில் தோன்றிய இயற்கைவாதிகளின் வழிகாட்டி என்று கூறத்தகும். 'வேளாண்மை வளம் பெறின், கலைகள் அனைத்தும் வளரும், வேளாண்மை நலிவுறின், கலைகள் அனைத்தும் நசிந்து கெடும்' என்று கூறுபவர் செனஃபன்.

முடிவுரை: கிரேக்க எழுத்தாளர்களின் கருத்துகளைப் பொதுப் படையாக நோக்கினால் நாம் குறிப்பிடக் கூடியவை: (1) உலக வரலாற்றில் பிளேட்டோதான் முதல் சீர்திருத்தவாதி. பிளேட்டோவின் கம்யூனிசம் ஒரு சிறுபான்மையினருக்கு வகுத்த சமூக அமைப்பு; பெரும்பான்மையினர் அவருடைய கற்பனைக் குடியரசிலும் சொத்துரிமையுடன் உழைத்தும், செல்வம் ஈட்டியும் வாழ்பவர். குடியாட்சி கேடுற்ற காலத்தில் பிளேட்டோவின் தத்துவ ஞானிகள் ஆட்சி எனும் கற்பனை ஆட்சி எப்பொழுதும் நல்லவர் (வல்லவர்) கையில் இருக்கவேண்டுமென்ற உலக மக்களின் பேரவாவின் ஒரு கனவு வடிவமே ஆகும். (2) சொத்துரிமையைப் பற்றி அபிப்பிராயம் இரு குரலில் முரண்பாடுடன் ஒலிக்கிறது. பிளேட்டோவின் பொதுவுடமைக் கொள்கை ஒருபுறம், அரிஸ்டாடிலின் தனி உரிமைக்கொள்கை மற்றொருபுறம். அதே சமயம் கிரேக்கக் குடியாட்சி நகரில் அரசுகளின் அதிகாரம் சர்வ வல்லமை பெற்றும், மக்களின் உரிமைக்கு உட்பட்டும் இருந்தது கவனிக்கத் தக்கதாகும். (3) அரிஸ்டாடிலின் மதிப்புக் கொள்கை, பணத்தின் பணிகள் முதலியவற்றை விளக்கிய நுட்பமும் தெளிவும் பொருளாதாரத்தை ஓர் அறிவியலாக்கும் பெருமையுடைத்து. (4) வேளாண்மையின் உயர்வும் பிற தொழில்களின் இழிவும், அடிமைகளின் உழைப்பும் பற்றிய கொள்கைகள் அக்காலச் சூழ்நிலை எவ்வளவு தூரம் கிரேக்க மேதைகளின் அறிவுச் சுடரைக் கூட மங்க வைத்து விட்டதென்பதைக் காட்டுகிறது.

—

## 4. உரோமர் சிந்தனை

சட்டம், அமைதி இரண்டினையும் உலகுக்கு அளித்த பெருமை உரோமாபுரி நாகரீகத்தைச் சாரும். எனினும் பொருளாதாரத் துறையில் உரோமாபுரி புதிய கருத்துகளை உருவாக்கியதாகக் கூறமுடியாது. உரோம அறிஞர்கள் எழுதிய நூல்கள் கிரேக்க நூல்களின் தழுவல்கள் அல்லது சார்பு நூல்கள்தாம். உரோம அறிஞர்களின் பொருளாதாரக் கருத்துகள் அவர்கள் எழுதிய உழவு நூல்கள், சட்ட நூல்கள், தத்துவ–அறவியல் நூல்களில் பரவலாகக் காணலாம். இவற்றை முறைப்படுத்தி சுருக்கமாக விளக்குவோம்.

**உழவு நூல் எழுத்தாளர்கள் :** உழவு நூல் ஆசிரியர்களில் பிளினி (Pliny), காடோ (Cato), வர்ரோ (Varoo), கொலுமல்லா (Columella) நால்வரும் முக்கியமானவர்கள். அவர்களுடைய கருத்துகள் 18ஆம் நூற்றுண்டுப் ஃபிரஞ்சு நாட்டு இயற்கை வாதிகளின் கருத்துகளுக்கு நிகரானவை. உழவுந் தொழிலைச் சிரமேற் கொண்டு போற்றினர் ; அதன் உயர்வையும், நன்மை களையும் எழுதியிருக்கும் பாணியைப் பார்த்தால் அவர்களை இயற்கை வாதிகளின் முன்னேடிகள் என்று கூறலாம்.

**சட்ட நூல் எழுத்தாளர்கள் :** தனியார் சொத்துரிமை, ஒப்பந் தம் செய்துகொள்ளும் உரிமை (freedom of contract) இரண்டை யும் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் உரோமாபுரிச் சட்டங்கள் வரையறுக்கின்றன. கி.மு. 450-ல் இயற்றப்பட்ட ‘ பன்னிரண்டு சட்ட அட்டவணைகள் ’ (laws of the twelve tables) வட்டி விகிதத் திற்கு உச்ச வரம்பு நிர்ணயித்தது குறிப்பிடத் தக்கது. காலப் போக்கில் வட்டி விகிதத்தைக் குறைத்துக்கொண்டே போயிற்று சட்டத் திருத்தங்கள். கடைசியாகச் செலுக்கியன் இயற்றிய சட்டப்படி வட்டி வாங்குவது தடை செய்யப்பட்டது. எனினும் நடைமுறையில் வட்டிக்குக் கடன் கொடுக்கப்பட்டுதான் வந்தது. உரோமாபுரியில் 4 முதல் 8 சதவிகிதத்துக்கு வாங்கிய கடன் நாட்டுப்புறத்து மக்களுக்கு 48 சதவிகிதத்துக்குக் கடனுகக் கொடுத்துப் பலர் கொள்ளை இலாபம் ஈட்டினர். வட்டிச் சட்டம் நன்கு செயல்படாததே இதற்குக் காரணம்

**தத்துவ–அறவியல் எழுத்தாளர்கள் :** தத்துவ எழுத்தாளர் களில் சிசரோ (Cicero, கி.மு. 106––43), செனகா (Seneca, கி.மு 4–கி.பி. 65), மூத்த பிளினி (Elder Pliny, கி.பி. 23–79) மூவரும் முக்கியமானவர்கள். அறவியல் கற்றுணர்ந்த மேதைகள். அக் காலத்து ஒழுக்க நெறி வகுத்தவர். இவர்கள் எளிய வாழ்க்கை

யைப் பாராட்டுகின்றனர்; ஆடம்பர வாழ்க்கையைக் கண்டிக்கின்றனர். உரோமப் பேரரசு வீழ்ச்சியுற்றதற்குக் காரணமே ஆடம்பர வாழ்வு அன்றோ?

தொழில்களை இவர்களும் உயர்ந்தவை, தாழ்ந்தவை என இரண்டு தரங்களாகப் பிரித்துள்ளார்கள். உழவுத் தொழிலை மூவரும் சிறப்பித்துக் கூறுகின்றனர். வரி வசூல் தொழில், கடும் வட்டிக்குக் கடன் கொடுக்கும் லேவாதேவி, சில்லரை வணிகம், கசாப்புக்கடை நடத்துதல், மீனவர் தொழில், சமையல் தொழில், கூத்தாடித் தொழில் முதலியவை இழிவானவையாகக் கருதப் பட்டவை. 'கடும் வட்டி வாங்குதல் எப்படி?' என்ற வினாவிற்குக் கேட்டோ 'கொலைத் தொழில் எப்படி?' என்ற வினாவை மறுமொழியாகப் பகர்ந்தாராம். செனகா அனைத்து நாட்டு வணிகத்தின் நன்மைகளை விளக்கி, அதை வளர்க்க வழிகள் கூறினார். பல்வேறு நாடுகளிலும் பல்வேறு இயற்கை வளங்கள் மிகுந்திருப்பதனால் அனைத்து நாட்டு வணிகம் அவசியம் என்று காரணம் கூறினார் செனகா.

பிளினி உரோமப் பேரரசு அழிவுற்றதற்கு ஒரு காரணம் பொன்னாசை என்று கூறுகிறார். 'பொன் அணிகளை முதலில் அணிந்தவன் சமுதாயத்தின் முதல் பகைவன்' என்பது அவர் கூற்று. மற்றொரு காரணம் பெரும் பண்ணைகளின் (large forms) தீவிர வளர்ச்சி என்றும் கூறுகிறார். 'பெரும் பண்ணையின் புகழைப் பாடு, சிறிய பண்ணையைப் பயிரிடு' என்பது அக்காலத்தில் எழுந்த முதுரை.

## 5. இந்தியர் சிந்தனை

**வேத இதிகாச காலம்:** பாரத நாட்டு வரலாற்றில் பண்டைக் காலம் என்பது வேதகாலம் (கி.மு. 2500) தொட்டு ஹர்ஷப் பேரரசர் ஆட்சிகாலம் முடியும்வரை (கி.பி. 647) உள்ள காலம் ஆகும். மேலைநாடுகளில் போலவே, பழைய பாரதத்திலும் ஞானிகளும், அறிஞர்களும் சமயம், அறம், வீட்டுப்பேறு போன்ற ஆத்மீகத் துறைகளிலே தங்கள் கவனத்தைச் செலுத்தினார்கள். ஆயினும் அவர்கள் பொருளாதாரத் துறையிலுள்ள பிரச்சினைகளை அறவே புறக்கணிக்கவில்லை. நேர்முகமாகக் கூறாவிடினும் ரிக்கு, சாம, யசுர், அதர்வண வேதங்களிலும், மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசங்களிலும், உபநிடதங்களிலும் அக்காலத்து மக்களின் பொருளாதார நடவடிக்கைகளையும்,

அமைப்பையும் காட்டும் பல குறிப்புகளைக் காணலாம். பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் நால்வகைச் சாதிகளைப்பற்றி வேதங்கள் கூறுகின்றன. இந்த வர்ணாசிரம தர்மத்தில் பண்டைக்கால உழைப்பு, வேலைப் பிரிப்பு (simple division of labour) எளிய தோற்றத்தில் காட்சி அளிக்கிறது. வேலைப் பிரிப்பில் தோன்றிய சாதிப் பிரிவினை பாரதத்தில் ஒரு மாற்ற முடியாத, இறுகிப்போன சமூக அமைப்பாகிவிட்டது. செய் தொழிலினால் சாதி உண்டானது போய், பின்னால் ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு தொழில் என்றானது ஒரு விசித்திர நிகழ்ச்சி. சாதி வேற்றுமை எந்த அளவுக்குத் தீயது என்பதைத் தற்கால மக்களும், அரசும் உணர்ந்து செயல்படுவது யாவரும் அறிந்ததே.

வேத, இதிகாச காலங்களுக்குப் பின் பொருளாதாரத் துறை பற்றிப் பேசும் வட இந்திய நூல்களில் சுக்கிரநீதி, மனுநீதி, சாணக்கியரின் அர்த்த சாத்திரம் என்னும் மூன்றையும் முக்கியமானவை எனக் குறிப்பிடலாம். முதல் இரண்டு நூல்களிலும் அறமும், பொருளாதாரமும் கலந்து கிடக்கின்றன.

**அர்த்த சாத்திரம் :** கி. மு. நாலாவது நூற்றாண்டில் சாணக்கியர் எழுதிய அர்த்த சாத்திரம் ஒரு முதன்மையான பொருளாதார நூலாக விளங்குகிறது. சாணக்கியருக்கு கௌடிலியர், விஷ்ணுகுப்தர் என்ற பெயர்களும் உண்டு. அவர் காலம் வரை பல நூல்களில் காணப்பட்ட கருத்துகளுடன், சாணக்கியர் தம் சொந்தக் கருத்துகளையும் அர்த்த சாத்திரத்தில் புகுத்தியுள்ளார். 450 பக்கங்களும், 15 அதிகாரங்களும் கொண்ட இந் நூலை, சுக்கிரருக்கும், பிரகஸ்பதிக்கும் அஞ்சலி செலுத்திச் சாணக்கியர் தொடங்குகிறார். அர்த்த சாத்திரம் அரசியல், சட்ட நூல், பொருளாதாரம் ஆகிய மூன்றும் கலந்த நூலாகும். இந் நூலில் காணும் முக்கிய கருத்துகளை இனி சுருக்கமாக விளக்குவோம்.

**மக்களும் அடிமைகளும் :** மக்கட்தொகை வளர்ச்சி பண்டைக கால பாரதத்தில் ஒரு கடும் பிரச்சினையாக எழவில்லை. மணமக்கள் நன்மக்களைப் பெறுவது தலையாய கடன் என்ற எண்ணம் எங்கனும் பரவியிருந்தது. மனுநீதிப்படி அமைந்த நால்வகைச் சாதிகளுடன் அடிமைச் சாதி யென்றொன்றும் இருந்தது. அவர்கள் குடும்பத்தின் உறுப்பினர்போல் அருமையுடன் நடத்தப்பட்டனர். அடிமைகளுக்குச் சொத்து, வருமான உரிமைகள் அளிக்கப்படவில்லை என்பதைத் தவிர, அடிமைகளுக்கு ஒரு கொடுமையும் இழைக்கப்படவில்லை. மெகஸ்தனிஸ், பாரதத்தில் அடிமைகள்

என்றொரு சாதி இல்லை என்று அவருடைய புகழ்பெற்ற 'இன்டிகா' என்னும் நூலில் எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது.

**உழவுத் தொழில்:** உழவுத் தொழிலுக்கு முதன்மையான இடம் அளிக்கப்பட்டிருந்தது. வைசியரும், சூத்திரரும் உழவுத் தொழில் செய்பவர்கள். ஆயினும், பிராமணரும், க்ஷத்திரியரும் உழவுத் தொழிலை மேற்கொள்வதற்குத் தடையொன்றும் விதிக்கப்படவில்லை. பிராமணரும் உழவுத் தொழிலில் ஈடுபடலாம்; ஆனால், ஏரைப் பிடித்து உழுவதுமட்டும் கூடாது என்று மனுநீதி சொல்லியது. உழவுத் தொழில் மிகவும் முன்னேறியிருந்தது. மாற்றுப் பயிர்முறை, பரந்த, செறிந்த வேளாண்மை முறைகள், சிற்றளவு, பேரளவு விவசாயம், ஏரி, வாய்க்கால் நீர்ப்பாசன வசதிகள், பொறுக்கு வித்துகள், துண்டு நிலப் பிரசினை (fragmented holdings) ஆகியவற்றின் நன்மை தீமைகளை, மக்கள் நன்குணர்ந்திருந்தனர். காடுகளை வெட்டிக் கழனியாக்குதல், தரிசுகளைச் சாகுபடி செய்தல் அவர்களுக்குக் கைவந்த தொழில். தலத்திலில்லா நிலக்கிழாரின் நிலங்கள் குடியானவர்களுக்குப் பயிரிட வழங்கப்பட்டன. விளைப்பொருட்களின் விலைகள், விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் தீர்மானிக்கப்பட்டிருந்தன. இதனால் அவர்கள் வணிகர்களின் பிடியிலிருந்து தப்புவதற்கு வழி கிடைத்தது. பண்டைக்கால அறிஞர்கள் உழவுத் தொழிலைப் பிற தொழில்களைவிட உயர்ந்த உற்பத்தி தரும் தொழில் என்று பிற்கால ஃபிரஞ்சு ஃபிசியோக்ரட்டுகள் மாதிரி மதிக்கவில்லை.

**சொத்துரிமை:** தனியாருக்குத் தாவர சங்கமச் சொத்துக்களில் சொத்துரிமை வழங்கப்பட்டிருந்தது. நிலத்தை விற்க, வாங்க, பிறருக்கு மாற்றிக் கொடுக்கத் தனியாருக்கு உரிமை இருந்தது. மக்கள் நிலச் சொத்தைப் பராதீனப்படுத்துவது, நாசமாக்குவது என்ற தீமைகள் செய்யாமல் தடுக்கச் சட்டங்கள் செயல்பட்டன.

**முதலும் வட்டியும்:** முதல் ஓர் உற்பத்திக்காரணி என்று பண்டைக்கால மக்கள் உணர்ந்திருந்தனர். எனவே கடனுக்கு வட்டி வாங்குவதை நியாயமாகவே கருதினர். ஆனாலும், முதலுக்கு 50 சதத்துக்கு மேல் வட்டி வசூலிப்பது தடுக்கப்பட்டது. ஒருவனுடைய செல்வம் குபேர சம்பத்தாக இருப்பினும், அவன் உழைத்துச் சம்பாதிக்கவேண்டும் என்ற எண்ணம் வேரூன்றியிருந்தது.

**கைத்தொழில் :** கைத்தொழில் – வணிகத் துறைகளில் தனியாருக்கு அரசு நல்ல வசதிகள் செய்து கொடுத்தது. தனியார் தொழில் அரசின் ஏகபோக உரிமைத் தொழில்களுக்குக் கேடு விளைவிக்காமல் நடப்பதற்குச் சட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தன. கைத்தொழில் வினைஞர்களுக்கு ஆதரவும், பாதுகாப்பும் அரசு அளித்தது. தொழிலாளரின் கூலி விகிதத்தையும், வேலை நிபந்தனைகளையும் அரசு ஒழுங்குபடுத்தியது.

**வணிகம்:** வணிகத்தின் சிறப்பை எல்லா நூல்களும் எடுத்துக் கூறுகின்றன. வணிகம் செழித்திடப் போக்குவரத்துச் சாலைகள் அமைத்தல், பயணிகள் ஓய்வு எடுக்கச் சத்திரங்கள், பண்டங்களைச் சேமித்து வைக்கக் கிடங்குகள் முதலிய வசதிகள் அரசு செய்து கொடுத்தது. நாடு முழுவதும் கட்டுப்பாடில்லாத வணிகம் நடந்து வந்தது. துய்ப்போரின் நன்மைக்காக விலைவாசிகள் கட்டுப்படுத்தப்பட்டு வந்தன.

**பொது நிதியியல் :** ‘வரி’ என்பது பிரதிபலன் ஒன்றும் எதிர்பாராது, அரசுக்கு அளிக்கும் கப்பம் என்பது தற்கால மேலை நாட்டுக் கருத்து. ஆனால் அக்காலத்துப் பாரத மக்கள் அரசு நல்கும் பாதுகாப்புப் பணிக்கும், உள்நாட்டு அமைதிக்கும் வரிகள் செலுத்தப்படுகின்றன என்று கருதினர். பெரிய கைத்தொழில், மீன் பிடித்தல், விவசாயம், காடுகள் இவற்றிலிருந்து அரசு வருவாய் உண்டாக்கவேண்டும் என்று சாணக்கியர் கூறியுள்ளார். அரசின் வரவு செலவு திட்டத்தில் பற்றுக்குறையைத் தீர்க்கக் கட்டாயக் கடன் மக்களிடம் இருந்து வாங்கவேண்டும் என்பது சாணக்கியரின் கொள்கை. உள்நாட்டில் உற்பத்தியாகும் பண்டங்கள், தலைநகரில் செய்யப்படும் பொருள்கள், இறக்குமதிப் பண்டங்கள் ஆகியவற்றின்மீது வரிகள் விதிக்கப்படவேண்டும் என்று கூறியுள்ளார். ஆடம்பரப் பொருட்கள்மீது அதிக வரி வசூலிக்கப்படவேண்டும். ‘தனி மனிதனின் சக்திக்கேற்ப வரி,’ ‘ஆண்டுக்கொருமுறை வரி,’ என்ற விதிகள் செயல்பட்டன. அரசின் வருவாய் பல துறைகளிலிருந்து வந்தது; (1) சொந்த நிலம், காடு, தனியுரிமை நிறுவனங்கள், தொழிற்சாலைகள் நல்கும் வருவாய் (2) நிலவரி (விளைச்சலில் பாதி) உப்பு வரி, ஆயத்தீர்வை, சுங்கம் துறைமுக வரி, போதை வஸ்துக்கள் மீது வரி முதலிய வரிகள் தரும் வருவாய். வரிகளைவிட அரசு தொழில் துறையில் ஈடுபட்டு வருவாய் தேடுவது உத்தமமெனக் கருதப்பட்டது. ஏனெனில் அது வேலை வாய்ப்பு அளிக்க வல்லது.

அரசின் முக்கியமான செலவினங்கள் தெளிவாகக் குறிக்கப் பட்டுள்ளன :—பொது நிர்வாகச் செலவு, இராணுவச் செலவு, அமைச்சர் சம்பளம், தங்கம், வெள்ளி, நவரத்தினங்கள் வாங்கும் செலவு முதலியன.

சமூக அரண் (social security) என்றொரு திட்டம் தீட்டா விடினும், அக்காலத்து அரசு முதியோர், எளியோர், அனாதைகள் ஆகியோர்களைக் காப்பது தனது கடமை எனக் கருதிச் செய லாற்றியது. வறியோர் இல்லங்களும் நடத்தியது.

பாடலிபுத்திரம் ஒரு மாநகர அமைப்புக்குச் சிறந்ததோர் எடுத் துக்காட்டாக விளங்கிற்று. அக்காலத்தில் மாநகரங்களை எவ் வாறு மாற்றுவது என்பது ஒரு கலையாகத் திகழ்ந்தது.

## 6. இடைக்காலச் சிந்தனை
### (Medieval Economic Thought)

உலக வரலாற்றில் இடைக்காலம் என்பது உரோமப் பேரர சின் வீழ்ச்சிக்காலத்திலிருந்து (கி. பி. 476) பதினைந்தாம் நூற் றாண்டு இறுதி வரை, அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்ட காலம் வரையுள்ள காலத்தைக் குறிக்கும். இதன் முற்பகுதியில் கி. பி. 500 முதல் கி. பி. 1200 வரை, ஐரோப்பாக் கண்டம் கிரேக்க, உரோமாபுரி, ஜர்மானிய கலாச்சாரங்களுடன் கிருத்துவக் கலாச் சாரம் மோதிக் கலக்கும் களனாக அமைந்தது. கிருத்துவ சமயம் 'மக்கள் அனைவரும் சகோதரர்கள்,' இனம், குலம், சாதி என்ற வேற்றுமை கிடையாது என்று போதித்தது. கிரேக்கத்திலும், உரோமாபுரியிலும் குடிமக்கள் என்றும் அடிமைகளென்றும் வேற்றுமை யிருந்ததை நாம் அறிவோம். கிருத்துவம் உடல் உழைப்பை அவசியமென்றும், இகழ்ச்சிக்குரியதல்லவென்றும் கருதியது. இன்னும் இவை மாதிரியுள்ள வேறுபாடுகள் மோதிய தனால் ஒரு புதுச் சமுதாயம் உண்டாயிற்று. அதன் சிறப்புப் பண்புகள் (1) கிருத்துவ சமயத்தின் ஆதிக்கம் (2) படைமானி யத் திட்டம் (feudal system) (3) குடியாட்சி நகரங்கள் (medieval city states). இந்தச் சூழ்நிலையில் உருவான பொருளாதாரக் கருத்துகளை அறிந்துகொள்ள அர்ச். தாமஸ் அக்வினசின் நூல் களைவிட வேறு சிறந்த வழி கிடையாது.

**அர்ச். தாமஸ் அக்வினஸ் (St. Thomas Aqvinas) (1225—1274)**

கிருத்துவ சமயக் கோட்பாடுகளும், அறவியலும், அரிஸ்டாடிலின் தத்துவங்களும் கலந்த ஒரு கதம்பத்தையே 'வித்தக வாதம் அல்லது ஸ்கொலாஸ்டிசம் (Scholasticism) என்று கூறுவர். இந்த ஸ்கொலாஸ்டிசத் தத்துவத்தின் தலைசிறந்த எழுத்தாளர் அர்ச். தாமஸ் அக்வினஸ். இவருடைய கருத்துகளில் சட்டங்கள், நியாயவிலை, வட்டி சம்பந்தமானவற்றை ஈண்டு கவனிப்போம்.

**சட்டங்கள் :** சட்டங்கள் நான்கு வகைப்படும் :—(1) நிலையான, இறைவனால் வகுக்கப்பட்டவை. (2) இயற்கையான சட்டங்கள் நல்லவை தீயவைக்குள்ள வேற்றுமைகளைப் புலப்படுத்துபவை. (3) மக்கள் இயற்றிய சட்டங்கள் : அரசராலும் சமயக் குரவராலும் வகுக்கப்பட்டவை. (4) தெய்வீகமான சட்டங்கள், முதலாவது வகையைச் சேர்ந்தவை ; வேதங்களால் விளக்கப்படுபவை. இந்த நால்வகைச் சட்டங்களுக்கும் அடங்கி மக்கள் நடக்கவேண்டும். அதாவது சமயம், அரசு இரண்டின் ஆதிக்கத்துக்குட்பட்டு மக்கள் வாழவேண்டும் என்பது அக்வினசின் கொள்கை.

**நியாயவிலை :** இடைக்காலத்தில் அறவியல் உயர்ந்த செல்வாக்குடன் போற்றப்பட்டது. நியாயவிலை என்பதற்குத் திட்டவட்டமாக ஒருவரும் இலக்கணம் வகுக்கவில்லை. ஆனாலும் நியாயவிலை, நியாயக் கூலி போன்ற கருத்துகளை அறிஞர் கூறிவந்தனர். அதிக விலை கூறுதல், ஏமாற்றுதல், கெட்டுப்போன பொருளை விற்பது முதலியவற்றை மிகவும் கண்டித்துள்ளார். பேராசையுடன் பெரும் பணம் திரட்டுவது பாவச்செயலாகும். தனது குடும்பத்தைப் பராமரிக்கமட்டுமே இலாபம் தேடும் வணிகம் பாவச்செயலாகாது என்ற கொள்கையினர் அர்ச். தாமஸ்.

**வட்டிக் கொள்கை:** கடன் கொடுத்து வட்டி வாங்குவது கொடும் பாவம் என்பது அக்வினசின் கருத்து. பணம் ஒரு பண்டமாற்றுக் கருவி. அதைச் செலவு அழித்து, அதன் பயனைத் துய்க்கிறோம். இத்தகைய பணத்தைக் கடனாகக் கொடுத்து அதன் வாயிலாக மேலும் பணம் ஈட்டுவது இயற்கைக்கு விரோதமான செயல் என்கிறார் அக்வினஸ். மேலும் அரிஸ்டாடில் பணம் வெறுமையானது, மலட்டுத் தன்மையுள்ளது என்று கூறியதையும் வட்டி வாங்கக்கூடாது என்பதற்குக் காரணமாகக் காட்டுகிறார். கடைசியாக விவிலியத்திலிருந்து கடும் வட்டி வாங்குவது பாவம் என்று மேற்கோளும் காட்டுகிறார்.

கடனாளி தானாகவே வட்டி கொடுக்க இசைந்தால் வட்டி வாங்குவது பாவமாகுமா என்ற கேள்வியை எழுப்புகிறார். ஒரு கடனாளியும் விருப்பத்துடன் வட்டி கொடுக்கவேமாட்டான். அவனுடைய துன்பங்கள், வறுமை, முதலியன கட்டாயப் படுத்துவதால்தான் வட்டி கொடுக்க ஒப்புக் கொள்கிறான். இவ்வாறு அக்வினஸ் கூறுவதற்குக் கராணம் இடைக்காலத்தில் தொழில், வணிகம் ஆகியவற்றில் முதலீடு செய்வதற்காக வாங்கும் கடன் அரிது; துன்பத்தைத் துடைக்கவே கடன் முக்காலும் வாங்கப்பட்டது என்பதேயாகும்.

**வணிகம்:** சமூகம் உண்டானதற்குக் கிரேக்க அறிஞர்கள் கூறியபடி பொருளாதாரமே காரணம் என்பதை அக்வினஸ் ஒப்புக் கொள்கிறார். தொழில்களில் வேறுபாடு காண்கிறார். தனி மனிதனுக்கு மாத்திரமே ஊதியந் தரும் தொழில், சமூக நலனையும் பெருக்கக்கூடிய தொழில் உயர்தொழில், வணிகத் தொழிலைப் பொய், புனை சுருட்டு இன்றி நடத்துவது அருமை. ஆகவே தான் வணிகன் கடவுளின் அருளுக்குப் பாத்திரமாகான் என்று கூறினர் அக்வினஸ் காலத்து ஸ்கொலாஸ்டிக்சுகள். அக்வினஸ் மேலேகூறியபடி மிதமான இலாபம் மாத்திரம் அடையும் வணிகனைச் சமூகத்தின் நற்பணியாளன் என்றே கருதினார்.

## நிகொலஸ் ஒரெஸ்மே
## (Nicholas Oresme 1320—82)

ஒரெஸ்மே பெரும்பாலும் அக்வினசின் கருத்துகளை ஒட்டியே எழுதியவர். ஆனாலும் சில முற்போக்கான கருத்துகளை அவருடைய நூல்களில் காணலாம். அவருடைய காலத்தில் அரசர்கள் நாணயங்களின் அளவு, எடை, தரம் ஆகியவற்றைக் குறைத்து வந்தனர். 'கடும் வட்டி கடனாளியை மட்டுமே பாதிக்கும்; நாணயத்தின் தரத்தைக் கெடுப்பது சமுதாயம் முழுவதையும் பாதிக்கும்' என்பது ஒரெஸ்மேயின் கருத்து. தங்கம், வெள்ளி இரண்டும் உபயோகப்படும் இரட்டை உலோக நாணயத் திட்டத்தை ஆதரித்துள்ளார். சில்லரைகளுக்கு வெள்ளியை நாணயங்களாக வெளியிடலாம். வசதியாகவிருக்கும் என்று இம்முறையைச் சிபாரிசு செய்கிறார். தற்கால நிபுணர்கள் கூறுகிறபடி இரட்டை உலோக நாணயத் திட்டம் அமலிலிருந்ததால், அவற்றின் (1) நாணயச்சாலை (2) அங்காடி விகிதாச்சாரங்கள் வேறுபடாமல் காத்துவரவேண்டிய அவசியத்தைத் தெளிவாக விளக்கியுள்ளார். இல்லாவிட்டால் அதிக மதிப்புள்ள நாணயம் குறைந்த மதிப்புள்ள நாணயத்தைச் செலாவணியிலிருந்து விரட்

டும் என்னும் கிரெஷம் விதியை அந்தக் காலத்திலேயே ஒகரஸ்மே புரிந்துகொண்டு எச்சரிக்கை செய்திருக்கிறார்.

### அர்ச். அன்டோனியோ

15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அன்டோனியோவின் கருத்துகளில் தற்காலச் சிந்தனையின் வாடையைக் காண்கிறோம். நியாய விலைக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டிருப்பதைக் காணலாம். வாங்கின விலையைவிட 50 சதம் அதிகமாக விற்றாலும், அது நியாய விலைதான் என்பது அன்டோனியோவின் கருத்து. வட்டிக் கோட்பாட்டிலும் மிகுந்த முன்னேற்றம் காண்கிறோம். கடனாளி வாங்கிய கடனைக்கொண்டு ஒரு தொழிலைத் துவக்கி இலாபம் சம்பாதித்தால், அவனிடமிருந்து வட்டி வாங்குவதற்கு நியாயம் கூறுகிறார் அன்டோனியோ. கடனாளி உழைக்கும் பங்காளி, கடன் கொடுத்தவன் உழையாப் பங்காளி (Sleeping Partner) என்றும் விளக்கம் தருகிறார். கடன் கொடுப்பவன் கடன் கொடுக்காவிட்டால் அந்தப் பணத்தை வேறு வழியில் பயன்படுத்தி இலாபம் பெறலாமென்றும், கடனாளி கடனைத் திரும்பக் கொடுக்காதுபோனால் நேரக்கூடிய ஆபத்துக்கும், நஷ்ட ஈடாக வட்டி வாங்குவது நியாயமே என்ற கருத்தை அன்டோனியோ விளக்குகிறார். இவர் காலத்தில் பொருளாதார வட்டி (economic interest) ஒன்றுக்குத்தான் தடை விதிக்கவேண்டுமென்ற கருத்து நிலவியது.

பாகம் II

# தொடக்கப் பருவம்

## 7. வணிக வாதம்
(Mercantilism)

'செய்க பொருளைச் செறுநர் செருக்குஅறுக்கும்
எஃகுஅதனின் கூரியது இல்'
'திரை கடலோடியும் திரவியந் தேடு'

வணிக வாதம் என்பதைச் சுருக்கமாக விளக்குவது எளிதன்று. ஏனெனில், அது ஒரே ஓர் அறிஞரின் கருத்து அல்ல; அது ஒரே ஒரு நாட்டின் தனிக்கோட்பாடும் அல்ல. தவிரவும், பிற பொருளாதார வாதங்களைப்போல், ஒன்றிரண்டு தலைமுறைக்குள் ஒளிவீசி மங்கியதுமல்ல. பல ஐரோப்பிய நாட்டுத் தொழில் அதிபர்கள், வணிகப் பெருமக்கள், உயர்தர அதிகார வர்க்கத்தினர் ஆகியோர் தங்கள் அனுபவ வாயிலாக, நாடு வளம்பெற வகுத்த வழிகளே வணிக வாதம். ஆங்கில நாடு, ஹாலந்து, பிரான்சு, ஜர்மனி, இத்தாலி முதலிய நாடுகளில் சுமார் கி.பி. 1450 முதல் கி.பி. 1750 வரை அதன் செல்வாக்கு ஓங்கியிருந்தது.

இந்த மூன்று நூற்றுண்டுகளில் ஐரோப்பிய நாடுகள், கண்ட மாறுதல்கள் புரட்சிகரமானவை. அப்பொழுதுதான், இடைக் காலம் முடிந்து ஒரு புதிய யுகம் உருவாகிக்கொண்டு இருந்தது. போப்பாண்டவரின் அதிகாரம் நலிந்து, சமயத் திருத்த இயக்கம் எங்கும் பரவியதும், மறுமலர்ச்சி தொடங்கியதும், அமெரிக்கக் கண்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டதும் ஸ்பெயினும் போர்ச்சுகலும் அந்தப் புது உலகில் பேரரசுகள் நிறுவி ஏராளமான பொன்னும் வெள்ளியும் தாய்நாடுகளுக்குக் கொணர்ந்து குவித்தும், பரிசுத்த

உரோமப் பேரரசு வீழச்சியடைந்து ஐரோப்பா முழுவதுந் நேசிய வல்லரசுகள் நிறுவப்பட்டதும் இந்தக் காலத்தில்தான். ' மன்னன் ' (Prince) என்ற பெயரில் இத்தாலிய மேதை மெக்கியா வல்லி எழுதிய அரசியல் நூல் வெளிவந்த காலமும் இதுவே. இந்நூல் நாடுகளை வல்லரசுகளாக்க வழி காட்டியதொரு அரசியல் வேதமாகத் திகழ்ந்தது. ஃபிரஞ்சு ஆசிரியர் ஜீன் போடின் (Jean Bodin) என்பவர் வல்லரசு நாடுகளின் சக்தியைப் பற்றி ஒரு சித் தாந்தம் வரைந்ததும் இதே காலத்தில்தான்.

இவ்விரு நூல்களும் மேற்கு ஐரோப்பிய நாடுகளிடையே மண்ணாசையையும், பொன்னாசையையும், தீவிரமாகத் தூண்டி விட்டன. இம் மூன்று நூற்றாண்டுகளிலும் ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு வழியை முதன்மையாகக் கொண்டு தனது வலிமை யைப் பெருக்க முனைந்துகொண்டிருந்தது. அந்த நாடுகளுக்குள் நிலப்பரப்பு, தொழில் வளர்ச்சி, சாம்ராஜ்ய அந்தஸ்து, வணிகம், மக்கள் தொகுதி, பண்பாடு, அரசியல் வாதம், அரசினர் ஆட்சித் திறமை, கலாச்சாரம், சமூக அமைப்புப் போன்ற பல்வேறு துறை களிலும் வேற்றுமைகள் இருந்தன. அவற்றாலும் பிற காரணங் களாலும் அந்த நாடுகள் கையாண்ட வணிக வாத முறைகளிலும் பல பேதங்கள் தோன்றின. இடம், காலம், சூழ்நிலை என்ற முப் பெரும் காரணங்கள் எப்பொழுதும் பொருளாதாரச் சிந்தனையைப் பாதிக்கும் என்னும் கூற்றுக்கேற்றவாறு அந்த நாடுகளில் வணிக வாதம் நடைமுறைக்கு வந்தன. ஒவ்வொரு நாட்டிலும் ஒரு வகை. பெரும்பாலும் ஒன்றுக்கொன்று ஒட்டியதாக ஒன்றை யொன்று நிறைவு செய்வதாக, அவை இருந்தன. சில விஷயங் களில் சில கொள்கைகள் மாறுபட்டும் ஒன்றுக்கொன்றும் பொருந் தாமலுமிருந்தன. இந்த வேற்றுமைகளைப் பின்னால் விளக்க லாம். இம்மாதிரியான நிலையில் தூய்மையான வணிக வாதி யென்று எவ்விடமும் சுட்டிக்காட்டும் அளவிற்கொருவர் இருந்த தில்லை. தூய்மையான வணிக வாதம் என்று குறிப்பிடத்தக்க அளவில் ஒன்றைக் காட்டவும் முடியாத நிலை ஏற்பட்டது. இம் மாதிரி வேற்றுமைகளுடன் பல்வேறு நாடுகளில், பல்வேறு சம யங்களில், வணிக வாதமென்ற பொதுப் பெயரில் செயலாற்றப் பட்ட பொருளாதார முறைகளில் வணிக வாதத்தின் அடிப் படைக் குணங்களென்று கூறக்கூடிய சில பொதுக் குணங்க ளைக் கண்டுகொள்வது கடினமல்ல.

பொதுக் குணங்களுக்கும் பொதுவானதைத் தேடுவோம். ஜர்மன் அறிஞர் ஷ்மாலர் (Schmoller) மொழியில் ' வல்லரசு உண்டாக்க வழி கற்பிக்கும் அரசியல் சித்தாந்தத்தைப் பொரு

ளியல் துறையில் நிறைவேற்றுவதே வணிக வாதம்' நல்லவழி, தீயவழி என்று பாராமல் எந்த வழியிலாவது நாடுகள் வளர்ந்து கொண்டேயிருக்க வேண்டும். அவை ஒவ்வொன்றுக்குமுள்ள ஒரே குறிக்கோள் வல்லரசு ஆவதுதான்,' என்று மெக்கியவல்லி கூறிப் போந்தார். சுமார் 300 ஆண்டுகள் வரை செல்வாக்குப் பெற்றிருந்த வணிகவாதம் ஆற்றிய செயல்களென்ன, அவற்றின் விளைவுகள் என்ன என்பதை இந்த இடத்திலேயே சொல்லிவிடுவோம். இடைக்காலத்திற்கும் தற்காலத்திற்கும் நடுவே வணிக வாதம் ஒருபாலம் அமைத்ததெனக் கூறலாம். இடைக்கால முடிவில் இரண்டு முரண்பட்ட நிலைகளை ஐரோப்பாக் கண்டத்தில் காண்கிறோம். ஒன்று ஐரோப்பா முழுவதும் போப்பாண்டவரின் ஆன்மீக ஆதிக்கம், 'யாவரும் கேளிர்' என்ற ஒற்றுமை உணர்ச்சிக்கு இடம் அளித்தது. எல்லா நாடுகளிலும் பொது மொழியாக விளங்கிய இலத்தீன் இவ்வுணர்ச்சியை வலுவாக்கியது. இந்த உணர்ச்சி 'ஒரே உலகம்' என்ற மனப்பான்மையை நிலவச்செய்தது. ஆயினும் தேசிய அரசுகள் (National States) உருவாக இவ்வுணர்ச்சி ஒரு தடையாக இருந்தது. இத்தடையை நீக்கி தேசிய அரசுகள் ஸ்திரமாக வளர, வணிகவாதம் 'ஒரே உலகம்' (Universalism) என்னும் கருத்தைத் தாக்கி நலிய வைத்தது. இரண்டாவதாக இடைக்காலம் முடியும் தருவாயில் ஐரோப்பாவில் ஒவ்வொரு நாட்டிலும் பற்பல குறுநில மன்னர்கள் சுயேச்சையாகத் தங்கள் மாவட்டங்களை ஆளத் தொடங்கினர். ஒவ்வொருவரும் தனி நாணயம், தனிச் சட்டங்கள், தனிச் சுங்கச் சாவடிகள் என்று ஏற்படுத்தி, ஒவ்வொரு நாட்டையும் பற்பலத் துண்டுகளாகப் பிரித்துவிட்டனர். நாட்டின் அரசர் சக்தியிழந்து பெயருக்கு மாத்திரமே மன்னராக வாழ்ந்தனர். இவ்வாறு சிதைந்துபோன நாடுகளை வலுப்படுத்தவும், சிதறுண்ட துண்டுகளை ஒன்றுக்கவும் வணிகவாதக் கொள்கைகள் மிகவும் உதவின. தேசிய அரசுகள் வேர் விட்டுத் தழைத்து நன்கு வளர்ந்த நிலையைக் காண்கிறோம். 18ஆம் நூற்றுண்டில், ஐரோப்பாவில் பெரும்பாலும் இந்த மாறிய அரசியல் நிலையை உருவாக்கிய பெருமை வணிகவாதக் கொள்கைகளைச் சார்ந்த தெனத் திடமாகக் கூறலாம்.

வணிக வாதத்திற்கு முன் தோன்றியது பொன் வாதம் (bullionism). பொன் வாதிகள் பணத்தையே செல்வமாகக் கருதினர். எக்காரணத்திற்கும், மீண்டும் அதிக அளவில் பொன் வருவதாக இருப்பினும், ஒரு நாடும் கடுகளவு பொன்னைக்கூட வெளிநாட்டிற்கு அனுப்பக்கூடாது என்பது பொன்வாதிகளின் ஆணித்தரமான அபிப்பிராயம். பொன்னை அதன் உபயோகத்

திற்கின்றிப் பொன்னுக்காகவே விரும்பினார்களா என்பது சர்ச்சைக்குரியது. பொருளாதாரத் துறையில் இக் குறிக்கோளை எவ்வாறு அடையமுடியும் என்பதுதான் வணிக வாதம் எழுப்பும் கேள்வி. இந்தக் கேள்விக்கு விடையாக அமைந்தவைதான் வணிக வாதத்தின் அடிப்படைக் கொள்கைகள். அவை பல்வேறு வகை வணிக வாதிகளுக்கும் பொதுவானவை.

இந்த அடிப்படை கருத்துகள் எவை? பொன்னும் வெள்ளியும் திரட்டிக் குவித்த ஸ்பெயினும், போர்ச்சுக்கலும் செல்வத்தில் திளைத்துப் பேரரசுகள் நிறுவிச் செருக்குற்றிருந்தன. இதனால் பொன்னும் வெள்ளியுமே போருக்கும் வெற்றிக்கும் அவசியமானவை என்னும் எண்ணம் ஐரோப்பா முழுவதும் பரவியது. வணிகவாதம் இக் கருத்தை ஒரு முக்கிய அடிப்படையாகக் கொண்டது. வல்லரசுகளாக விரும்பும் நாடுகள் பொன்னைத் தேடவேண்டும். உள் நாட்டிலேயே சுரங்கங்கள் இருந்தால் மிகவும் நல்லது. இல்லையானால் பொற்கனிகள் இருக்கும் நாடுகளைக் கைப்பற்றிக் குடியேற்ற நாடுகளாக்கி, அங்கிருந்து பொன்னையும் வெள்ளியையும் தம் நாடுகளுக்கு இறக்குமதி செய்ய முனைய வேண்டும். 'இது முடியவில்லையானால் ஏராளமாக ஏற்றுமதி செய். இறக்குமதியை, எவ்வளவு தூரம் குறைக்க முடியுமோ, அவ்வளவு தூரம் குறை. இறக்குமதிக்கு ஈடாகச் செல்லவேண்டிய ஏற்றுமதி போக, மிச்ச ஏற்றுமதிக்கு ஈடாகப் பொன்னும் வெள்ளியுமாகப் பெற்றுத் தாயகத்தின் பொற்குவியலைப் பெருக்கு. இதுவே வணிக வாதிகளின் சித்தாந்தம். இதைப் பழித்தனர் பின்னால் வந்த பொருளாதார அறிஞர்களில் சிலர். 'பொன் எவ்வளவு இருந்தாலும் உணவுத் தானியங்களில்லாத நாட்டில் பசிப்பிணி எப்படி ஒழியும்? என்று இவர்கள் வாதித்தனர். 'வணிக வாதிகள் வெறும் பொன்னாசைப் பித்தர்கள்'. தொட்டதெல்லாம் பொன்னாக வேண்டும் என்று வரம் பெற்ற மைதாஸ் போன்ற பேதைகள் என்றெல்லாம் கூறினர். உலகியலில் மிக்க அனுபவமும் வாழ்க்கையில் வெற்றியும் கண்டவர்களான வணிக வாதிகள் பொன்னைப் போற்றியதற்கும் அதற்குச் சிறப்பிடம் நல்கியதற்கும் தகுந்த காரணங்கள் இருந்தன. 'பணம் பாதாளம் மட்டும்,' என்பது தனி மனிதனுக்கு மட்டுமல்ல, பேரரசுகளுக்கும் பொருந்தும் பொன் மொழி என்று உணர்ந்த மேதைகளே வணிக வாதிகள். வள்ளுவர் வாக்குப்படி 'பொன் எண்ணிய தேயத்துச் சென்று இருள் அறுக்கும்,' என்ற உண்மையை அறிந்தவர்கள் இத் தொழில் வணிகர்கள். வல்லரசு நாடுகள் ஒன்றோடொன்று போர் தொடுக்க ஆயத்தமாயிருந்த அந்நாளில், நாடுகளின் செல்வ வகையில் பொன் ஒன்றே போர் வீரர்களைச் சேர்த்துப் படை

திரட்டவும், போர்க் கருவிகள் சேகரிக்கவும் சக்தி உடையதாயிருந்தது. அக் காலத்தில் தாய் நாட்டினரைத் தவிர பிற நாட்டினரைப் பொருள் கொடுத்துப் படையில் சேர்ப்பதுண்டு. இதை உணர்ந்து பொன்னையும், வெள்ளியையும் வணிக வாதம் செல்வத்துட் செல்வமாகப் போற்றியது. மேலும், இந்தச் செல்வத்துட் செல்வத்தைப் பெருக்க அவர்கள் கூறிய வழியிலும் வேறு ஒன்று உண்டு என்று காட்டுவதற்கில்லை.

வணிக வாதப் பேரறிஞர்களில் தலையாயவர் சர் தாமஸ் மன் (**Sir Thomas Mun, 1571–1641**) என்பவர். அவர் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் இயக்குநர்களில் ஒருவர். அவர் தம் மகன் அறிவு வளர்ச்சிக்காக 1630-ல் ஒரு நூல் எழுதினர். அது இன்று வணிக வாதத்துக்கு வேதம் போல் விளங்குகிறது. அதனை அவர் மகனர் 1664-ல் தான் முதல் தடவையாக வெளியிட்டார்; மிக விரைவில் ஆறு பதிப்புகள் வந்தன. ‘அயல் நாட்டு வணிகத்தினுல் ஆங்கில நாட்டின் பொக்கிஷ வளர்ச்சி; அல்லது அயல் நாட்டு வணிகத்தில் ஏற்றுமதி மிச்சமே நமது பொக்கிஷததின் அளவுகோல்,’ என்பதே அந்நூலின் நீண்ட விளக்கமான பெயர். இந் நூலில் ஸர் தாமஸ் மன் பன்னிரண்டு அருமையான உபாயங்களைத் தெளிவாக்கியுள்ளார். இவற்றில் வணிக வாதத்தின் சாரத்தை வடித்துத் தருகிறுர். இப்பன்னிரு வுபாயங்கள் வருமாறு :—

(1) ஓர் அங்குல நிலத்தைக் கூடத் தரிசாகப் போடாதே.

(2) நாட்டிற்கு வேண்டிய உணவுத் தானியங்களையும் கச்சாப் பொருட்களையும் நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யுமளவுக்குப் பயிரிடு. நாட்டின் தேவை முழுவதும் நிறைவு பெருவிட்டாலும் அவற்றின் இறக்குமதி குறையும்.

(3) அயல்நாட்டு உணவுப் பண்டங்கள், உடை, அணிகள் முதலியவற்றை விலக்கு.

(4) அயல் நாட்டினருக்கு இன்றியமையாத பொருட்களை மிகுதியாக உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்; அவர்களின் தேவைக்கேற்ப விலையை உயர்த்து.

(5) ஏற்றுமதிச் சரக்குகளைச் சொந்த நாட்டுக் கப்பல்களில் அனுப்பு. பிற நாட்டுக் கப்பல்களை உபயோகிக்காதே. பிறருக்குக் கொடுக்கும் கப்பல் கூலியை மிச்சம் பண்ணு. அது ஏற்றுமதி மிச்சத்தை அதிகப்படுத்தும் வழிகளில் ஒன்று. நாட்டு வணிகர்களின் ஊதியத்தையும் உயர்த்தும்.

(6) நாட்டில் உற்பத்தியாகும் பொருட்களைச் சிக்கனமாக உபயோகி. எளிய வாழ்க்கையை மேற்கொள். ஆடம்பர வாழ்க்கையை விரும்பினுல் அதற்கு உள்நாட்டுப் பண்டங்களையே பயன்படுத்து.

(7) நாட்டைச் சுற்றியுள்ள கடலில் மீன் பிடிக்கும் தொழிலைப் பெருக்கு. உணவுப் பொருட்களின் இறக்குமதியைக் குறைக்க அது ஒரு சிறந்த வழி.

(8) சில நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் பொருட்கள் தாய்நாட்டிற்குத் தேவையில்லையாஞலும், அவற்றை வேறு சில நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் அதிக இலாபம் கிடைக்கக் கூடும். ஆகையால் அப்பொருட்களை இறக்குமதி செய். இது வணிகர்களின் இலாபத்தை அதிகப்படுத்தும். நாட்டின் கப்பல்களுக்கு வேலை அளிக்கும். அரசினர் சுங்கத் தீர்வை வருவாயை (Customs Revenue) விரிவடையச் செய்யும். இவ்வாறு உள்நாட்டு வாணிபத்தைச் சர்வ தேச வாணிபமாக்கு.

(9) வெகு தொலைவிலுள்ள நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொள். கொச்சியில் மிளகு வாங்கி, பாரிஸ் நகரில் விற்ருல், அண்டை நாடுகளுடன் அயல்நாட்டு வாணிபத்தில் ஈடுபடுவதை விட மிக்க லாபம் கைகூடும்.

(10) 'பணம் வணிகத்தை வளர்க்கும்; வணிகம் பணத்தைப் பெருக்கும்' என்பது அவர் அறிவுரை. சிறிய மீனைத் தூண்டில் போட்டுப் பெரிய மீனைப் பிடிப்பதனைப் போல் சிறிதளவு தங்கத்தைக் கொடுத்துப் பெரிய அளவு பொன் சம்பாதித்தல் ஒரு சிறந்த சாதனை. இந்த வகை வாணிபத்துக்குத் தங்க ஏற்றுமதி அவசியமாஞலும் தயங்காதே. காங்கோ நாட்டிலிருந்து தந்தம் வரவழைக்கத் தங்கம் கொடுத்தல் அவசியம். ஆனல், பிரெஞ்சு நாட்டில் அதிகமான தங்கத்திற்கு விற்க வாய்ப்பு இருக்குமாஞல் சிறிதளவு தங்கத்தை ஏற்றுமதி செய்து தந்தம் வரவழைப்பது சாலச் சிறந்ததாகும்.

(11) கைத்தொழிற் பொருட்களுக்கு ஏற்றுமதி வரி விதிக்காதே. கைத்தொழில்கள் வளர்ச்சியினுல் வேலை வாய்ப்பு விரியும்.

(12) பொதுவாகக் கிடைக்கக்கூடிய எல்லா வாய்ப்புகளையும் அதிக அளவு ஊதியம் கிடைக்குமளவிலேயே பயன்படுத்து.

இவற்றில் பத்தாவது உபாயம் மாத்திரம் தீவிர வணிக வாதத்துக்கு முரண்பட்டது. ஆயினும், அது பொருளாதார

நிபுணர்களில் தாமஸ் மன் என்பவர் பரந்த நோக்குடையவர் என்பதைக் காட்டுகிறது.

மேற்கூறிய பன்னிரண்டு உபாயங்களையும் பொதுப்பட நோக்கினால் பின்வரும் உட்கிடைகள் வெளிப்படை ஆகும். நாட்டு மக்கள் யாவரும் பேருழைப்பு உழைக்க வேண்டும். சிக்கனமாக வாழ வேண்டும். ஒரு பண்டத்தையும் வீணாக்க லாகாது. ஊதியம் வரும் எந்த வழியையும் இகழ்ந்து ஒதுக்கக் கூடாது. எவ்வளவு தூரம் நாட்டில் உற்பத்தியான பொருட்களை ஏற்றுமதி செய்ய முடியுமோ அவ்வளவையும் ஏற்றுமதி செய்யவேண்டும். இவைதான் வணிக வாதத்தின் உட்கருத்து என்பது தெளிவாகும்.

இந்தக் கோட்பாட்டைப் பலர் தவறெனக் கருதுவதை இந்த இடத்தில் குறிப்பிடவேண்டும். அவர்கள் கேலியாகச் சொல்வது என்னவெனில், 'நீ உற்பத்தி செய்கிற பொருட்களையெல்லாம் பிற நாட்டான் துய்த்து அனுபவிக்கட்டும். நீ வணிக மிச்சம் (favourable balance of trade) என்றும், பொன், வெள்ளி இறக்கு மதி பெருகும் என்று நம்பி, வயிற்றை இறுக்கிக் கட்டிக்கொண்டு காற்றைப் புசித்து மகிழ்ந்திரு.' இந்தக் கேலியில் ஓர் ஆழ்ந்த உண்மை புதைந்து கிடக்கிறது என்பதை எவரும் மறுக்கமுடி யாது. பொன், பொன் என்று திரட்டுவதில் மிதமிஞ்சி ஈடுபட்டு நாட்டில் விளையும் பொருட்களையும் ஏற்றுமதி செய்துவிட்டால், நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் பாதிக்கப்படும். எல்லாப் பொருளாதார வழிகளும் கடைசியாக நாட்டு மக்களின் நல் வாழ்வைக் குறிக்கோளாகக் கொண்டவை என்றால் வணிக வாதம் இக்குறிக்கோளை அடைய உதவியாயில்லை என்று பொருள்படும். விருப்பங்களை வென்று, ஆடம்பரங்களை அறவே ஒழித்து, எளிய வாழ்க்கையை வணிக வாதிகள் போற்றிய மாதிரி பின்னால் வந்தவர்களில் யாராவது உண்டா என்றால் காந்தியடிகளைத் தவிர வேறு ஒருவரையும் குறிப்பிட முடியாது. இந்திய சுதேசி இயக்கத்துக்கும் வணிக வாதத்துக்கும் எவ்வளவோ ஒற்றுமை காணலாம்.

வணிக வாதம் வெவ்வேறு நாடுகளில் சிற்சில மாறுதல்களுடன் கையாளப்பட்டது என்று முன்னால் குறிப்பிட்டோம். தாமஸ் மன் எழுதிய நூல் ஆங்கில நாட்டில் வழங்கிய வணிக வாதத்தின் சாரம். ஜர்மனி, பிரஞ்சு நாடுகளில் புகழ்பெற்ற வணிக வாதிகளின் கொள்கைகளைச் சிறிது ஆராய்ந்தால் மேற் கூறிய சில மாறுபாடுகள் நன்கு புலனாகும்.

**ஜர்மானிய, பிரஞ்சு, இத்தாலிய வணிக வாதிகள்**

ஜர்மானிய வணிக வாதி பிலிப் வான் ஹார்னிக் (Philip Von Hornick, 1638–1712) எளிய வாழ்க்கையின் அவசியத்தைச் சிறப்பாக வற்புறுத்தி உள்ளார். அக்காலத்து ஜர்மானியர் பாரிஸ் மாநகரத்து ஆடம்பரப் பொருள்களிலும் புதுப்புது மோஸ்தர்களிலும் அளவிலா மோகம் கொண்டு, ஏராளமான பணத்தை வீணாக்கினார்கள். அதைக் கண்டு ஹார்னிக் சினந்து கூறும் மொழிகள் அவருடைய வணிக வாதத்தில் எங்கும் பரவிக் கிடக்கின்றன. 'அனைத்துக்கும்மேல், ஆஸ்திரியா' என்னும் அவருடைய நூல் (1684) பிற நாடுகள் எதிர்பாராமல் வாழவும், தன்னிறைவு பெறவும் ஒன்பது வழிகளைக் காட்டுகிறது.

(1) நாடு முழுவதும் தங்கம், வெள்ளி கிடைக்குமா என்று ஆராய்ச்சி நடத்து. (2) இயற்கை நிலையில் உண்ண முடியாத பொருட்களைப் பதனிடத் தொழில்கள் நிறுவு. (3) மக்கட் தொகையைப் பெருக்கு, ஊதியம் உள்ள வேலை வாய்ப்பு இருக்கும் வரை. (4) தங்கம், வெள்ளி ஏற்றுமதியைத் தடை செய். (5) சுதேசிப் பொருட்களை மட்டுமே பயன்படுத்து. (6) இறக்குமதிகளுக்குப் பதிலாக ஒருகாலும் தங்கம், வெள்ளியைக் கொடுக்காதே. (7) இறக்குமதிகள் கச்சாப் பொருளாகவே கூடியவரை இருக்கட்டும். (8) பதனிட்ட பொருள்களை ஏற்றுமதி செய்து தங்கம், வெள்ளி இறக்குமதி செய். (9) தரக் குறைவாக உள்நாட்டில் கிடைக்கும் பண்டங்களைப் பயன்படுத்து. உயர்ந்த தரம் என்பதற்காக எப்பொருளையும் இறக்குமதி செய்யாதே.

சோம்பலின் தீமையைப் பற்றிப் பிரஞ்சு நாட்டு வணிக வாதி மான்ஷிரடீன் (Montchretien, 1576–1621) கருத்து ஹார்னிக்கின் மொழிகளைவிடக் கடுமையானது. 'சோம்பலும் வேலையின்மையும் ஆண்களின் வீரத்தையும் பெண்களின் கற்பையும் கெடுக்கும். தீய குணங்களுக்குத் தாய். பாவச் செயல்களுக்குப் பிதா.' செல்வம் தேடும் நாட்டு மக்கள் தேனீக்கள் மாதிரி ஓயாமல், சலியாமல் உழைத்தல் வேண்டும் என்பது மான்ஷிரடீனின் கருத்து.

இத்தாலிய வணிகவாதி அன்டோனியோ செரா (Antonio Serra 1580–1650), சர் தாமஸ் மன் போல மிக்கப் புகழ்பெற்ற எழுத்தாளர். எவ்வாறு பொன், வெள்ளியைத் திரட்டுவது என்ற கேள்விக்கு விடையாக அமைந்திருக்கிறது அவருடைய நூல். 'பொன், வெள்ளிச் சுரங்கங்கள் இல்லாத அரசுகளில் பொன் வெள்ளி திரளுவதற்கு உரிய காரணங்கள் பற்றிய கட்டுரை' அந்நூலின் நீண்ட விளக்கமான பெயர். சலிப்பில்லா உழைப்புத் திறன் மிக்க உழைப்பு–இதனால் தொழில் உற்பத்தியைப் பெருக்கி,

உற்பத்தியான பண்டங்களை ஏற்றுமதி செய்வதுதான் சிறந்த வழி என்று அவர் வலியுறுத்துகிறார். தாமஸ் மன் போலவே பொன்னைக்கூட வெளிநாட்டுக்கு அனுப்புவதை செரா ஆதரிக்கிறார். ஒரே ஒரு நிபந்தனை, அந்தப் பொன் பன்மடங்கு பெருகி நாட்டுக்குத் திரும்பும் வாய்ப்பு இருத்தல்வேண்டும்.

**செயல்முறை :** இனி வணிக வாதிகளின் செயல்முறைகளைப் பார்ப்போம். சிற்றெறும்பு, தேனீ போல் மக்கள் உழைப்பது எளிதல்லவே? கெஞ்சிக் கேட்டுக்கொண்டால் நடக்கக்கூடிய செயலா? 'மயிலே மயிலே! இறகு போடு' என்றால் இறகு போடுமா? கட்டாயம் இன்றி எந்த நாளிலும், எந்த நாடுகளிலும், காடு கழனியானதும், பருத்தி புடவையானதும் கிடையாது. கட்டாயப் படுத்தத் தகுதிவாய்ந்த நிறுவனம் அரசாங்கத்தைத் தவிர வேறு எது? இவ்வாறு வாதித்து வணிக வாதிகள் பொருளாதாரத் துறைகள் யாவற்றிலும் அரசாங்கம் இடைவிடாமல் தலையிட்டுக் கட்டுப்பாடுகள் செய்யவேண்டும் என்று கோரினர். பொருள் உற்பத்தித் துறையை எடுத்துக்கொண்டால், என்னென்ன பயிர் சாகுபடி செய்வது, எந்தெந்தத் தொழில்களை ஊக்குவிப்பது என்பதெல்லாம் அரசினர் தீர்மானிக்கவேண்டியவை. பண்டங்களின் எண், அளவு, தரம், எடை, குணம், தொழிலாளர்களின் பயிற்சி, எண், வேலைசெய்யும் நேரம் எல்லாம் அரசாங்கத்தின் கண்காணிப்பில் இருக்கவேண்டும். என்ன தொழில் தொடங்குவது, எந்தத் தொழிற்சாலையை மூடுவது, எவ்விடத்தில் ஆலைகள் கட்டுவது போன்ற பிரச்சினைகள் எல்லாம் அரசாங்கத்தின் பொறுப்பாய் இருக்கவேண்டும். பயன் துய்ப்புத் துறையில் மக்கள் என்னென்ன பண்டங்களை வாங்கி நுகரலாமென்பதை அரசாங்கம் கட்டுப்படுத்தவேண்டும். பண்டங்கள் வினியோகத்திலும் தடைகள், கட்டுப்பாடுகள் ஏற்படுத்த அரசாங்கத்திற்குரிமை வேண்டும். அவற்றில் பல ஊதியம் தரும் பண்டங்களாக இருக்கலாம். அவற்றைக் கவனத்துடன் சேகரித்து வெளிநாடுகளுக்கு அனுப்பிப் பொன், வெள்ளி, மாற்றுகக் கொள்வது அரசினரின் கடமை. அயல்நாட்டு வணிகத் துறையில் அனுவசியமான இறக்குமதிகளைத் தடுத்தல், வரி விதித்துக் குறைத்தல், ஏற்றுமதியைப் பெருக்க மானியம் வழங்கல், கப்பல் ரயில்வண்டிக் கட்டணங்களைக் குறைத்தல் போன்ற வழிகளைக் கையாளவும் அரசினருக்கு அதிகாரம் வேண்டும். பங்கீட்டுத் துறையில் நாட்டின் வணிக மிச்சத்தை (favourable balance of trade) அதிகப்படுத்தும் நோக்குடன் நிலப்பாட்டம், தொழிலாளர் கூலி, வட்டி விகிதம், ஊதியம் முதலியவற்றைக் குறைக்கவோ, கூட்டவோ, உச்ச வரம்பு நிர்ணயிக்கவோ, அரசினர்க்கு அதிகாரம் வேண்டும்.

மேற்கூறியவற்றை உள்நாட்டுச் செயல் முறைகள், வெளி நாட்டுச் செயல் முறைகள் எனப் பிரிக்கலாம். குறைந்த கூலிச் சட்டம், நெடுங்காலப் பயிற்சித் திட்டம், புதுத் தொழிற்சாலைகள் நிறுவ நிபந்தனைகள், விதிகள் ஆகியவை உள்நாட்டுத் தொழிலை யும் வணிகத்தையும் பாதிப்பவை. இதேமாதிரி வெளிநாட்டுச் செயல் முறைகளில் முக்கியமானவை ஐந்து.

(1) கப்பல் போக்குவரத்துச் சட்டங்கள் (Navigation Acts). இவற்றால் தாய்நாட்டின் வணிகமும், வணிகக் கப்பல் தொழிலும், கப்பல் படையும் பெருக ஒரு பெரும் வாய்ப்பு உண்டாகும். தாய் நாட்டின் ஏற்றுமதி மட்டுமன்றி, அதன் குடியேற்ற நாடுகளின் ஏற்றுமதிச் சரக்குகளையும் தாய்நாட்டுக் கப்பலில் ஏற்றிச் செல்ல வேண்டும், என்ற சட்டமும் கூரிய அறிவுடன் இயற்றப்பட்டது.

(2) குடியேற்ற நாடுகள் விஸ்தரிப்பு (Expansion of Colonies) குடியேற்ற நாடுகளிலிருந்து கச்சாப் பொருள்களைப் பொன், வெள்ளி செலவின்றி வரவழைத்துக்கொள்ளலாம். ஏனெனில், தாய்நாட்டுக்கும் குடியேற்ற நாட்டுக்கும் ஒரே நாணய முறை நிலவும். பதனிட்ட பொருட்களையும் குடியேற்ற நாடுகளில் இதர நாடுகளின் போட்டியின்றி விற்கலாம். எனவே கொள்முதலி லும் விற்று முதலிலும், இரண்டு வழிகளிலும், மிக்க ஊதியம் கிட்டும். இக்கொள்கையைக் குடியேற்ற நாடுகள் ஒத்துக் கொள்ளவில்லை. தாய்நாட்டுக்குக கிடைக்கும் ஊதியம், குடியேற்ற நாடுகளுக்கு ஏற்படும் நட்டம். பின்னவையின் முன்னேற்றம் தடைப்பட்டது. இந்தக் கருத்தை ஆதாரமாகக் கெண்டு அமெ ரிக்கப் புரட்சியை ஓர் அறிஞர் 'இந்தப் போர் எந்த அளவுக்குச் சுதந்திரத்திற்காகவோ, அதே அளவுக்கு வணிக வாதத்தின் மேலும் தொடுத்த போர் ஆகும்' என்று கூறியுள்ளார்.

(3) இறக்குமதி வரிகள் : வணிக வாதிகளுக்குப் பண்டங்கள் என்றால் பயம் (fear of goods). சிறப்பாக அயல்நாட்டுப் பண் டங்களும் ஆடம்பரப் பொருள்களும் உள்நாட்டுப் பொன்னையும் வெள்ளியையும் உறிஞ்சிக்கொண்டு போய்விடும். நாடு சீரழிந்து விடும் என்ற பயம், இதற்கு மாற்றுதான் இறக்குமதி வரிகளும், ஏன் தடைகளும்.

(4) மான்யங்கள் (Bounties): உற்பத்திக்கு ஏற்றவாறு தொழிலதிபர்களுக்குப் பணவுதவி செய்தல் உற்பத்தியைப் பெருக்க ஒரு சிறந்த உபாயம். நாட்டின் பண்டங்களை அயல் நாட்டுச் சந்தைகளில் அடக்க விலையுயர்வு காரணமாக விற்பது கடினமானால், இத்தகைய பணவுதவி குறைந்த விலையில் விற்க உதவும். இந்தமாதிரிப் பணவுதவியை அயல்நாட்டில் வாங்கு

வோருக்கும் கொடுக்கும் லஞ்சம் என்று கடிந்து கூறுகிறார் ஆடம் ஸ்மித்.

(5) வரி வாபஸ் (draw back) : இறக்குமதி வரி எல்லாப் பொருள்களையும் பாதிக்கும். ஆனால், இறக்குமதியான பொருள்களைப் பதனிட்டோ அல்லாமலோ ஏற்றுமதி செய்வதானால், வசூல் செய்த இறக்குமதி வரிப்பணம் முழுவதையும் இறக்குமதியாளருக்குத் திரும்ப வழங்குவதே இந்த வரி வாபஸ் முறை. இந்த முறையால், கச்சாப் பொருள் இறக்குமதி பெருகும்; தொழில் வளரும்; உற்பத்தி சிறக்கும்; ஏற்றுமதியும் பெருகும். பதனிட்ட பண்டங்கள் ஓர் அயல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்து மற்றோர் அயல்நாட்டுக்கு அனுப்பப்பட்டாலும், தாய் நாட்டுக்கு ஊதியமும் தாய்நாட்டுக் கப்பல்களுக்குச் சரக்கும் கிடைக்கும். இதை 'வினியோக வணிகம்' (entrepot trade) என்று கூறுவர். இத்தகைய வாணிகத்தில் இறக்குமதியாகும் பொருள்களுக்கும் 'வரி வாபஸ்' உண்டு. இவ்வாறு வணிக வாதிகள் அவர்களுடைய கொள்கைகளை நிறைவேற்ற அரசாங்கம்தான் எவ்விதத்திலும் தகுதி நிறைந்த மாபெரும் கருவியெனக் கருதினர்.

இந்த அளவுக்கு அரசாங்கத்தின் அதிகாரம் பொருளாதாரத் துறையில் செலுத்தப்பட்டால், அதனால் விளையும் வணிக வாத ஆட்சி (Mercantalist State) அரசாங்க சோஷியலிசம் (state socialism) என்ற முறையைப் போலாகிவிடும். பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்றும் குடியாட்சிக்கும் (Democratic planning state) வணிக வாத ஆட்சிக்கும் கூட மிகுந்த ஒற்றுமைகளைக் காணலாம்.

வணிக வாதத்தைச் செயலாற்றும் முறைகளில் நாடுகளுக்குள் வேற்றுமை இருந்தது என்று தொடக்கத்தில் குறிப்பிட்டது நினைவிருக்கும். இனி வேற்றுமைகளைச் சிறிது கவனிக்கலாம். வணிக வாத யுகம் என்று நாம் காட்டிய 300 ஆண்டுகளில் (1450–1750) மேற்கூறிய வழிகளையும் முறைகளையும் எல்லா நாடுகளும் முழுவதும் பின்பற்றின என்று கூறுவதற்கில்லை.

தொழில் துறையில் வணிக வாதத்தை முழுவதும் நடைமுறையில் பின்பற்றிய பெருமை பிரஞ்சு மந்திரி கால்பர்டுக்கே (Colbert, 1619–1683) உரியது.

பொருள் உற்பத்தித் துறைகள் அனைத்திலும், அளவு, தரம், எடை முதலியவற்றை ஒழுங்குபடுத்தக் கால்பர்ட் மிகவும் நுட்ப

மான முறையில் பல்வேறு கட்டுப்பாடுகளும் விதிகளும் வகுத்தார். இம்மாதிரி 1666 முதல் 1730 வரை வகுத்த விதிகளை வெளியிட 2200 பக்கங்களைக் கொண்ட நான்கு புத்தகங்கள் வேண்டியிருந்தன. மீண்டும் 2200 பக்கங்களில் அந்த விதிகளைப் பற்றி மேலும் விவரங்கள் நிறைந்திருந்தன. சாயம் காய்ச்சும் தொழிலை 317 விதிகள் கட்டுப்படுத்தின. இம்மாதிரிக் கட்டுப்பாடுகள் எத்தனை எத்தனையோ! எனவே 'கால்பர்டிசம்' என்றாலே 'கட்டுப்பாடுத் தத்துவம்' (Restrictionism) வியப்பில்லையே! கால்பர்டிசம் என்றால் பிரஞ்சு நாட்டு வணிக வாதம் என்ற பொருள் உண்டானது. கார்ல்பர்டின் செயல்முறை முழுவதற்கும் ஒரே ஒரு குறிக்கோள்; அது பிரஞ்சு நாட்டை வலிமை மிக்க தன்னிறைவுள்ள நாடாக்குவதே. தொழில் நுட்ப அறிவு படைத்த தொழிலாளர்களை அயல் நாடுகளிலிருந்து பிரஞ்சு நாட்டிற்கு வந்து குடியேற வகை செய்தார். பிரான்சின் குடியேற்ற நாடுகளை விஸ்தரித்தார். கப்பல் தொழிலை வளர்த்து வணிகக் கப்பல்கள் பல கட்டுவித்தார். பிரஞ்சு கப்பல் படையையும் பலப்படுத்தினர். தொழிலதிபர்களுக்குப் பண மானியம் (bounties) கொடுத்து உற்பத்தியைப் பெருக்க ஊக்குவித்தார்.

பொன், வெள்ளி, ஏற்றுமதிக்குத் தடையும், மீறினவர்களுக்குத் தண்டனையும் விதிக்க மிகவும் கோரமானதொரு வேறொரு வகை வணிக வாதம் ஸ்பெயின் நாட்டில் தாண்டவமாடிற்று. ஹாலந்தில் கப்பல் தொழில் வளர்ச்சியும், வெளிநாட்டு வணிகமும் மட்டுமே முதலிடம் பெற்றன. ஆங்கில நாடு ஒன்றுதான் தொழில், வெளிநாட்டு வாணிபம், பொன் வெள்ளி ஈட்டல், உழவு போன்ற எல்லாத் துறைகளிலும் வணிக வாதத்தைப் பரவலாகப் பின்பற்றியது. எல்லா நாடுகளிலும் வணிக வாத யுகத்தில் இறக்குமதி வரி, ஏற்றுமதிக்குச் சலுகை, கைத்தொழிலுக்குத் தேவைப்படும் கச்சாப் பொருளுக்கு இறக்குமதி வரி ரத்து, ஏற்றுமதிச் சரக்குகளை உற்பத்திச் செய்யும் தொழிலதிபர்களுக்கு அரசினரின் உதவிகள், வெளிநாட்டு வணிகம் செய்ய சில குறிப்பிட்ட கம்பெனிகளுக்கு, உதாரணமாகக் கிழக்கிந்தியக் கம்பெனி, வெர்ஜீனியக் கம்பெனி, மஸ்கவைட் கம்பெனிகளுக்குத் தனி உரிமைச் சாசனங்கள் வழங்குதல் முதலான ஆதரவுகளை அரசாங்கத்தார் அளித்து வந்தனர். பொருளாதாரச் செயற்பாடுகளில் அரசாங்கம் தலையிடவும், கட்டுப்படுத்தவும் தொடங்கியது. கட்டுப்பாடு, ஒழுங்கு, சட்டத்திட்டங்களின் மூலம் அரசாங்கம் எங்கும் வியாபித்திருந்தது.

வணிக வாதிகளுக்குச் செல்வம் திரட்டுவதே குறிக்கோள். செல்வத்திலும் பொன்னும் வெள்ளியுமே சிறந்த செல்வமாகக்

கருதப்பட்டன. இந்தக் குறிக்கோளைக் கொண்டு உழவு, கைத் தொழில், வாணிகம் முதலிய தொழில்களின் மதிப்பை எடை போட்டனர். வணிகமே செல்வத்தின் பிறப்பிடமென்று கூறினர். வணிகம்தான் மிக்க அளவில் பொன், வெள்ளி திரட்ட உதவுவதற்குச் சிறந்தது என்று கருதினர்.

அடுத்தபடியாகக் கைத்தொழிலும், கடைசியாக உழவுத் தொழிலும் என்று வணிக வாதிகள் தொழில்களைத் தரம் பிரித்துக் காட்டினர். கைத்தொழில் வளம் பெருவிட்டால் அயல் நாட்டு வணிகம் வளராது. ஏற்றுமதி மிச்சமும் கணிசமாக உண்டாகாது. அதனால் கைத்தொழிலுக்கு ஓரளவு மதிப்பும், தனிச் சிறப்பும் உண்டு. உழவுத் தொழிலினால் விலை குறைந்த விவசாயப் பொருட்கள் மட்டுமே கிடைக்கின்றன என்று அதை மூன்றாவதாகக் கருதினர். அக் காலத்தில் சில நாடுகளே தொழிலில் முன்னேற்றமடைந்திருந்தன. மற்ற நாடுகளெல்லாம் உழவுத் தொழிலில் ஈடுபட்டு இருந்தன. அதனால் விவசாயப் பொருட்களுக்கு அயல் நாடுகளில் மிகுந்த தேவையும் இல்லை. அவற்றின் உற்பத்தியில் மிகுந்த ஊதியமுமில்லை. அவை பொன்னையும் வெள்ளியையும் நாட்டிற்குக் கொண்டு வந்து சேர்க்க ஓரளவிலும் உதவவில்லை. எனவே, உழவன் உபயோகமற்றவனாக வணிக வாதிகளின் கண்களில் தென்பட்டான். ஆனால் வணிகனோ நாட்டிற்குச் செயற்கரிய செய்யும் அரும் பெரும் தொண்டனாகப் புகழும் மரியாதையும் பெற்றான்.

இடைக்காலம் முடியும் வரை கிருத்துவ சமயம் வணிகனுக்கு ஒரு மதிப்பும் கொடுக்கவில்லை. எல்லா மக்களும் பரலோகத்தில் வாழும் பிதாவைத் தொழுவதற்கு வானை நோக்கித் தூக்கிய கையினராகவும், பரமபதத்தை நாடிய மனத்தினராகவும் வாழ்ந்தனர். இம்மையில் பணத்தைத் தேடுபவன் பாவியென்றும் இகழப்பட்டான். அந்த வசை நிறைந்த வாழ்விலிருந்து விடுதலை பெற்று, வணிகர் இசைபட வாழும் வகையில் வணிக வாதம் மக்கள் மனப்பான்மையை மாற்றியது. சமயச் சீர்திருத்தப் புரட்சியும், பணம் திரட்டுவது கூட மதிப்புக்குரிய காரியமென்று கருத்தைப் பரப்பியது. பணம் திரட்டுவது நாட்டுக்குச் செய்யும் பெருந் தொண்டுகளில் ஒன்றாகும் என்று உபதேசித்தது. வணிக வாதம் செல்வாக்கடைந்த பின்னரே வணிகன் மனிதனாகவும் மதிப்புக்குரிய குடிமகனாகவும் (citizen) நாட்டுக்குச் சிறந்த முறையில் சேவை செய்யும் தொண்டனாகவும் திகழ்ந்தான். இகழ்ச்சிக்கு ஆளானவன் புகழ்ச்சிக்குரியவனானான்.

**குறைபாடுகள் :** வணிகவாதத்தின் குறைபாடுகளில் முக்கியமானவற்றைச் சிறிது ஆராய்வோம். ஏற்றுமதி வணிக மிச்சம் (favourable balance of trade) என்ற கொள்கை ஒரு நாட்டுக்கு அல்லது சில நாடுகளுக்கு நல்லதாகவும், சாத்தியமாகவும் இருக்கலாம். ஆனால், உலகத்தில் உள்ள நாடுகள் யாவும் ஏற்றுமதி, ஏற்றுமதி என்று முழுக் கவனத்தையும் அதில் செலுத்தினால் சர்வதேச வணிகம் நடைபெற முடியாது. அயல்நாட்டு வாணிபம் நடப்பதற்கு ஒவ்வொரு நாடும் ஏற்றுமதிக்கு ஈடாகப் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவேண்டும். பிரஞ்சு நாடு பட்டு, திராட்சை ரசம் (Wine) ஆங்கில நாட்டுக்கு ஏற்றுமதி செய்துவிட்டு, ஆங்கில நாட்டிலிருந்து எதுவும் இறக்குமதி செய்யமுடியாதென்று கூறினால், எத்தனை ஆண்டுகளுக்கு ஆங்கில நாடு தங்கமும், வெள்ளியும் கொடுத்துப் பட்டும் ஒயினும் வாங்க முடியும் ? வெகு விரைவில் இவ்விரண்டு நாடுகளின் பரஸ்பர வாணிபம் குன்றி நின்றுவிடும். எனவே, இறக்குமதியின்றி ஏற்றுமதி ஓரளவு காலத்திற்குதான் நடக்கும். என்றென்றும் நடப்பது அசாத்தியம் என்பது பொருளாதார அறிஞர் கண்ட உண்மை. இதைப் பற்றி மெய்யறிவு இல்லாதவர் வணிகவாதிகள். வெளிநாட்டு வணிகத்தில் ஈடுபடுவதனால் ஒரு நாடு லாபம் அடைந்தால், மற்றைய நாடுகள் நட்டமடையும் என்பது அவர்கள் எண்ணம். இரண்டு நாடுகளும் பயனடையக் கூடுமென்ற தற்காலப் பொருளாதாரத் தத்துவம் வணிக வாதிகளுக்குப் புலனாகவில்லை. இந்தியா தேயிலையையும், ஆங்கில நாடு இயந்திரங்களையும் ஒன்றுக்கொன்று பரிமாறி, ஏற்றுமதி செய்யுமானால் இரண்டு நாடுகளுக்கும் நல்ல பலன் உண்டு என்பது போன்ற உண்மையை அவர்கள் காணவில்லை.

### புதிய வணிக வாதம் – பின்தங்கிய நாடுகள்

பின்தங்கிய நாடுகளுக்கு வணிக வாதத்தின் கொள்கைகள் பலவகைகளில் பொருந்துவனவாயிருப்பதைத் தற்காலப் பொருளாதார இயலினர் கோடிட்டுக் காட்டுகின்றனர். தலைக்கு வருமானம் மிகவும் குறைவாயிருக்கும் பின்தங்கிய ஏழை நாடுகளில் வளர்ச்சிக்கு இன்றியமையாத முதலீடு செய்வதற்கு வேண்டிய அளவுக்குச் சேமிப்புக் கிடைப்பதில்லை. இந்நிலையில் ஏற்றுமதி வணிக மிச்சம் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது.

வணிக வாதிகள் வலியுறுத்தியபடி, உள்நாட்டில் வாழ்க்கைத்தரத்தைக் கட்டுப்படுத்தி, ஏற்றுமதியைப் பெருக்கவேண்டிய கட்டாயம் பின்தங்கிய நாடுகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆடம்பரப் பொருள்களை நுகர்வதும், அயல்நாட்டுச் சரக்குகளை இறக்கு

மதி செய்வதும் தடுக்கப்பட்டால் சேமிப்பு வளரவும் முதலீடு பெருகவும் வழி உண்டாகும். உற்பத்தியை எல்லாத் துறைகளிலும் பெருக்கவேண்டும்; மக்கள் கடுமையாக உழைக்கவேண்டும் என்பன போன்ற தாமஸ் மன்னினது அறிவுரைகள் பின்தங்கிய நாட்டுக்கென்றே மொழிந்ததுபோல அமைகின்றன. ஏற்றுமதியை ஊக்குவிக்கப் பல உபாயங்கள் செயல்படுவதும், இறக்குமதியைத் தடுக்கவும், குறைக்கவும் பல ஏற்பாடுகளும், அன்னியச் செலாவணிக் கட்டுப்பாடுகளும் வகுக்கப்படுவதும் பின்தங்கிய நாடுகளின் முக்கிய கைக்கோள்களாகத் (policies) திகழ்கின்றன. இவை வணிக வாதத்தின் மறுமலர்ச்சியின் அறிகுறிகள் எனக் கூறலாம். முன்னேறிய நாடுகளிலும் கட்டுப்பாடில்லாத அனைத்து நாட்டு வணிகம் மறைந்து பல கட்டுப்பாடுகள் ஏற்பட்டுவிட்டன. கென்னடி மாநாடுகளுக்குக் (Rounds) காரணமானவை அவை. இந்தச் சூழ்நிலையில் 'நாம் எல்லோருமே வணிக வாதிகள்' என்ற சொல் தற்காலத்தில் எங்கணும் பரவியிருப்பது வியப்பல்லவே.

**தற்காலக் கருத்து:** ஆடம் ஸ்மித் (Adam Smith) இவர்களைப் பொன்னாசைப் பித்தர்கள் என்றும், வணிக வாதம் பணத்தைப் பற்றிய தவறான கொள்கைகளின் தொகுப்பு என்றும், வெறும் காப்பு வரிக் கொள்கை அர்த்தமற்ற பிதற்றல் என்றும் ஏளனமாகக் கூறினார். ஸ்மித்தின் முடிவு நியாயமற்றது என்பதே அறிஞர் ஆல்பிரட் மார்ஷலின் (Alfred Marshall) கருத்து. உண்மையில் செல்வத்தை நாடியவர்கள் வணிக வாதிகளே. அவர்கள் காலத்தில் செல்வம் என்றால் பொன்னும் வெள்ளியுமே நினைவுக்கு வந்தன. அவர்களும் அவற்றைச் செல்வத்தின் சின்னமாகப் போற்றினார்களே தவிரச் செல்வமாகவே நினைக்கவில்லை. பொருளாதார நூலின் தந்தையெனப் புகழ் படைத்த ஆடம் ஸ்மித் கிளப்பிய பழிமேகம் வணிக வாதத்தை அண்மைக் காலம் வரை மூடி, அதன் உண்மை ஒளியை மறைத்து வந்தது. ஜே. எம். கெயின்ஸ் (J. M. Keynes) தான் அந்தப் புகை மண்டலத்தைப் போக்கி வணிக வாதத்தின் மெய்ப்பொருள் கண்டவர். அவருடைய நவீனப் பொருளாதாரத்துக்கும் வணிக வாதத்தின் அடிப்படை தத்துவங்களுக்கும் பல விதங்களில் ஒற்றுமை இருப்பதை எளிதில் காணலாம். வணிக வாதிகள் விற்பனையாகாத பண்டங்களைக் கண்டால் மனம் நடுங்குவர். 'விற்காத பண்டங்கள் என்றாலே அச்சம்' (fear of goods), அவர்களது சிறப்பியல்பு எனக் கூறுவது உண்டு. லார்டு கெயின்ஸ் அதையே வலுவுள்ள தேவைக் குறைவு (insufficiency of effective demand) என்று குறிப்பிட்டார். பொன், வெள்ளி

ஒரு நாட்டில் அதிகமானுல் அந்நாட்டின் பணப் புழக்கம் பெருகும். அதனுல் அதிக ஊதியம் தொழில் செய்பவருக்குக் கிடைக்கும். அதுவே உழைப்புக்கும் முயற்சிக்கும் ஊக்கமளிக்கும். பணப் புழக்கம் பெருகினுல் வருமானம் பெருகும். விற்பனே அதிக மாகும். பண்டங்கள் விற்காமல் தேங்கிக் கிடக்காது. பணம் மிகுதியாகப் புழக்கத்திலிருந்தால் வட்டி விகிதம் குறையும். அதனுல் தொழிலுக்கும் வணிகத்திற்கும் மூலதனம் வேண்டுமள வுக்கு எளிதாகக் கிடைக்கும் என்றும் அவர்கள் அறிந்திருந்த னர். முதலாவது எலிசபெத் அரசியின் ஆட்சிக் காலத்தில் ஆங்கில நாட்டில் வட்டி 10 சதவிகிதமாக இருக்கும்போது, ஹாலந்தில் 5 சதவிகிதமாயிருந்தது. அதிக வட்டிதான் ஆங்கில நாட்டின் கப்பல் தொழில் வளர்சிக்குப் பகையாயிருக்கிறதென வணிக வாதிகள் கூறினர். திட்டவட்டமாக வட்டியைக் குறைக்கவேண்டுமென வாதாடினர். இவ்வாறு பணம் மலி வாகக் கிடைக்கும் நிலேயைக் கெயின்ஸ் 'மலிவான பணம்' (cheap money) என்று விளக்கினுர். நவீனப் பொருளாதாரம் ஆராய்ந்து அறிந்த கருத்துகளும் சக்திகளும் பற்பல. அவற் றுள் முக்கியமானவை 'சேமிப்பு,' 'முதலீடு,' 'நாட்டின் வரு மானப் பெருக்கம்,' வேலே வாய்ப்பின் வளர்ச்சி. இவற்றின் சிறப்பையும் பயனேயும் வணிக வாதிகள் உணர்ந்து இருந்தார் கள். இவை எவ்வாறு ஒன்றையொன்று பாதிக்கின்றன என் பதையும் அவர்கள் நன்கு புரிந்துகொண்டிருந்தார்கள். இருந் தும் இந்தப் பொருளாதார உண்மைகள் கெயின்ஸ் விளக்கும் வரையிலும் சுமார் 180 ஆண்டுகளாக மங்கி மறைந்தே கிடந்தன. வணிக வாதிகளும் கெயின்ஸும் செலவு செய்வதைத் தேச பக்தி யுள்ளதோர் செயலாகக் கருதினர். உற்பத்தி வெள்ளத்தில் பொருளாதார உலகம் தத்தளித்து மூழ்கிவிடாமல் காப்பாற்று வதற்குச் செலவு என்னும் கருவியை உபயோகிக்குமாறு அத்தனே ஆண்டுகளுக்கு முன்னரே வணிக வாதம் கூறியது புதுமைக்கும் புதுமையாகவே விளங்குகிறது. அறிஞர் ஒருவர் கூறுகிருர்: 'தலேயிடாக் கொள்கையின் உடும்புப் பிடியில் அகப்பட்ட ஒரே ஒரு நூற்ருண்டைத் தவிர, மற்ற எல்லாக் காலங்களிலும் வணிக வாதம் ஓரளவுக்காவது செல்வாக்குடன் இல்லாத காலமே கிடையாது.' 'நாம் எல்லோருமே வணிக வாதிகள்தாம்' என் னும் கூற்றிலும் உண்மை நிறைந்துள்ளது. கடைசியாக வணிக வாதிகள் பொருளாதாரத் துறையில் எல்லாவற்றையும் முழு நோக்காகப் பார்த்த நிபுணர்கள். துண்டு துண்டாக வெட்டி யும் அணு அணுவாக ஆராயும் பொருளாதார நோக்கினே 'அணுநிலேப் பொருளாதார நோக்கு' என்றும் முழு நோக்காகக் காண்பதனே 'அண்டநிலேப் பொருளாதார நோக்கு' என்றும்

கூறுவோமானால், வணிக வாதிகள் அண்டநிலைப் பொருளாதார நோக்குடையவர்கள் எனலாம். ஆனால், அவர்களுக்குப் பின் 1776 முதல் 1935 வரை, அணு நிலைப் பொருளாதார நோக்கே பொருளாதார ஆராய்ச்சியை அடிமைப்படுத்தியது எனலாம்.

## 8. இயற்கை வாதம்
### (Physiocracy)

'உழுவார் உலகத்தார்க்கு ஆணி'

வணிக வாதத்திற்குப் பின் புகழ் எய்திய இயற்கை வாதம், அதற்கு எல்லா வகைகளிலும் நேர் எதிர் என்றால் மிகையாகாது. இயற்கை வாதம் தோன்றியது ஒரே ஒரு நாட்டில்; இதைத் தோற்றுவித்தவர்கள் அனைவரும் பிரெஞ்சு நாட்டினர். ஒரே குரு பரம்பரை, ஒரே வகையான கோட்பாடுகள். டாக்டர் குவஸ்னே தான் குரு. அவரும் அவருடைய குருபக்தி மிகுந்த சீடர்கள் ஐவரும் இயற்கை வாதத்தின் தலைசிறந்த எழுத்தாளர்கள் ஆவர். இயற்கை வாதத்தின் புகழ் ஓங்கியிருந்த காலம் சுமார் 15 ஆண்டுகள் தாம். ஆயினும் இந்தக் குறுகிய காலத்துக்குள் இயற்கை வாதிகள் சாதித்த சாதனைகள் பல. பல்வேறு ஐரோப்பிய நாட்டு வேந்தர்களும், குறிப்பாக ஸ்வீடன் நாட்டு மன்னர் மூன்றும் கஸ்டவ் (Gustav), ஆஸ்திரியப் பேரரசர்கள் மூன்றும் லப்போல்டும் (Leopold), இரண்டாம் ஜோசப்பும் (Joseph), போலந்து அரசர் ஸ்டேனிஸ்லஸ்ஸும் (Stanisas), ஸ்பெயின் நாட்டு அரசர் மூன்றும் சார்லசும் (Charles), ருஷியப் பேரரசி காதரைனும் (Catherine) இயற்கை வாதத்தை விரும்பினர்; இயற்கை வாதிகளைத் தேடி வந்தனர், அவர்களுடைய கோட்பாடுகளைப் பாராட்டினர். இதற்கு முக்கிய காரணம் இயற்கை வாதிகள் வரம்பில்லாத சக்தியுடைய முடியாட்சியை (absolute monarchy) ஆதரித்தது என்றும் கூறலாம். வணிக வாதம் எல்லாத் துறைகளிலும் அரசாங்கக் கட்டுப்பாடுகளைத் திணித்ததை நாம் அறிவோம். இயற்கை வாதம், நாடு செழிக்க, வளர்ச்சி பெற, செல்வம் கொழிக்க, அரசாங்கம் தலையிடாக் கொள்கையை (laisser-faire policy) ஏற்றுக்கொண்டு செயலாற்றவேண்டுமென்று வற்புறுத்தியது. இதனால் ஒரு நூற்றாண்டுக்குமேல் இத்தலையிடாக் கொள்கை மிக்க செல்வாக்குப் படைத்திருந்தது.

வணிக வாதக் கொள்கைகளை நடைமுறையில் ஆர்வமுடன் கொண்டுவந்து நிறைவேற்றிய பிரெஞ்சு நாட்டு மந்திரி கால்பர்ட்

(Colbert) 1683-ல் காலமானர். இவருடைய 'கால்பர்டிசத்தி' னுல் தொழில், வாணிபம் முதலியவற்றை ஒழுங்குபடுத்தவேண்டி இயற்றப்பட்ட சட்டங்கள் நாற்பத்தெட்டு. இவர் காலத்துக்குப் பின் மேலும் பல புதிய சட்டங்கள் இயற்றப்பட்டன. 1739-ல் மொத்தம் 230 சட்டங்கள் சட்டப் புத்தகங்களில் இடம் பெற்றன. பொருளாதாரச் செயல்கள் எல்லாவற்றையும், இந்தச் சட்டதிட் டங்கள் இரும்புக் கவசம் போல் இறுக்கிவிட்டன. அரசாங்கத் தலையீடு எங்கணும் வியாபித்தது. அதனுல் 18ஆம் நூற்றுண் டின் நடுப்பகுதியில் மக்களுக்குக் கால்பர்டிசத்தின் மேல் பெரு வெறுப்பு மூண்டது. கடும் எதிர்ப்பும் வளர்ந்து கொண்டிருந்தது.

மேலும் 1750-ல், வணிக வாதத்தின் ஆட்சி நலியத் தொடங் கிய காலத்தில், குடியானவர்களும் விவசாயப் பெருமக்களும் பல் வேறு பளுவான வரிகளால் துன்புறுத்தப்பட்டனர். இந்த வரி கள் ஏராளமான நிலச்சொத்துகளுக்கு அதிபர்களான சமயக் குருமார்களுக்கும், பிரபுக்களுக்கும் கிடையாது; இவர்களுக்கு இவ் வரிகளினின்றும் விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. தெயிலெ (taille) என்னும் நில வீட்டு வரி மாத்திரம் உழவர்களின் வரு மானத்தில் பாதிக்கு மேல் இருந்தது. அடுத்தபடியாக உப்பு வரி; ஏழு வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு நபரும் ஏழு ராத்தல் உப்பு வாங்க வேண்டு மென்ற கட்டாயம் இருந்தது; வாங்கும் போது வரியும் கொடுக்க வேண்டியிருந்தது. மேலும் சாலை வரி, பாலங்கள் வரி, மா அறைக்கும் மில் வரி என்றும், சாலைகள் போடும் பொழுதும் பழுது பார்க்கும் பொழுதும் சில நாட்கள் வேலை கட்டாயமாகச் செய்யவேண்டும் என்று பல இன்னல்கள் நிரம்பிய வாழ்க்கையாக இருந்தது விவசாயிகளின் வாழ்க்கை. அவர்கள் வாங்கித் துய்க்கும் பண்டங்களின் மேல் விதிக்கப் பட்ட எண்ணற்ற வரிகளும் சுங்கத்தீர்வைகளும், அவற்றின் விலைகளைப் பன்மடங்கு உயர்த்தியது. இவற்ருல் மக்களுக்குக் கட்டுப்பாடுகளின் மேலும், வரிகளின் மேலும் மிகுந்த கசப்பு ஏற்பட்டிருந்தது.

இந்தச் சூழ்நிலையில் தோன்றியவர்களே இயற்கை வாதிகள். குருபீடத்திலுள்ளவர் டாக்டர் குவஸ்னே (Quesnay). அவருடைய பிரதம சீடர்கள் மூத்த மிரபோ (Elder Mirabeau), கூர்னே (Cournot), துபான்ட் (Dupont), மெர்சியர் (Merciere), துர்கோ (Turgot) என்பவர்களே இயற்கை வாதிகளில் தலைசிறந்தவர்கள். புதிய வழியில் சிந்திக்கவும், தங்கள் சிந்தனையை நயம்பட எடுத் துரைக்கவும் அவர்கள் எல்லோரும் ஆற்றல் பெற்றவர்கள். ஆனுல் வணிகவாதிகள்போல், உலக அறிவும், தொழில் நடத்தும் அனுபவமும் பெற்றவர்கள் அல்லர்; இருந்தாலும் இவர்கள் தத்

துவ ஞானிகள்; இலட்சியவதிகள், இவர்கள் எல்லோருமே பல நூல்கள் கற்றறிந்த அறிஞர்கள். எல்லோரும் டாக்டர் குவெஸ்னே யைக் குருவாக மதித்து ஒழுகினர். அவர் வகுத்த பாதையிலே சென்று ஒரு பொதுத் தத்துவத்தை உருவாக்கினர்கள். அதனல் இயற்கை வாதிகளிடம் ஒரு பொது இலக்கியமும் ஒரு பொதுக் கொள்கையும் விளங்கக் காணலாம். எனவே குருவின் கொள்கை களை ஆய்ந்தால் போதும் ; மற்றவர்களின் நூல்களைத் துருவித் துருவிப் பார்க்கவேண்டியதில்லை ; அவற்றில் சிறந்தவைகளையும் குருவின் போதனைகளுடன் ஒன்ருகச் சேர்த்தே தெரிந்து கொள் வோம்.

குவஸ்னேயே நூலறிவில் சிறந்தவர். துர்கோவோ இயற்கை வாதத்தின் கலைஞர், நூலில் கற்றதைச் செயலில் ஆற்றிய தீரர். வணிக வாதத்தைச் செயல்படுத்த மந்திரி கால்பர்ட் வாய்த்தது போல், இயற்கை வாதத்துக்கு மந்திரி துர்கோ வாய்த்தார். டாக்டர் பிரான்சுவா குவஸ்னே (Francois Quesney) 1694-ல் பிறந் தவர். 62ஆம் வயதில் திடீரெனப் பொருளாதார நூல் ஒன்று எழு தத் தொடங்கினர். அவருடைய 80ஆம் ஆண்டில் அவர் மறையு முன் புகழ்பெற்ற பல இயற்கை வாதிகளின் அன்புக்கும் வணக் கத்துக்கும் உரிய தலைவர் ஆனர். அவர் முதலில் 17 ஆண்டுகள் பாரிஸ் மாநகரத்தின் அண்மையில் தமது குடும்பப் பண்ணை யிலேயே வாழ்ந்தார். 25 வயதுக்குள் தாமாகவே முக்கால்பங்கு அளவு கற்று ரணசிகிச்சையில் பட்டம் பெற்ற நிபுணர் ஆனர். சிறந்த மருத்துவராய் புகழ்பெற்றதைக்கண்டு, பிரஞ்சு நாட்டு 15ஆம் லூயி மன்னர் இவருக்கு 1755-ல் சமஸ்தான வைத்தியர் பதவியை அளித்தார். ஆனல், இவர் பண்ணையார் மகன் என்ற முறையில் உழவுத் தொழிலிலும் மிகுந்த அக்கறை காட்டினர். அந்தக் காலத்தில் வெளியான கலைக்களஞ்சியத்துக்குச் சில கட் டுரைகளும், மற்றப் பத்திரிகைகளுக்கு வேறு சில கட்டுரைகளும் ‘ உழவர்கள் ’ ‘ தானியங்கள் ’ என்ற தலைப்புகளின் கீழ் 1754–1757 ஆண்டுகளில் எழுதி வந்தார். அவற்றிற்கு அடுத்த படியாக வெளிவந்த நூல் ‘ பொருளாதாரப் பட்டியல் ’ (Economic Table) என்பது. பிரஞ்சுப் புரட்சித் தலைவராகப் பின்னல் உலகப் புகழ்பெற்றவரான மிராபோ இந்நூலை நாகரீக வளர்ச்சிக்கு இன்றியமையாத மூன்று கண்டுபிடிப்புகளில் ஒன்று என வியந்து பாராட்டியுள்ளார். (மற்ற இரண்டு கண்டுபிடிப்புகள் மிராபோவின் கணக்குப்படி எழுத்துக் கலையும், பணம் என் னும் பண்டமாற்றுக் கருவியும் ஆகும்). அதன்பின் 1760-ல் வெளிவந்த நூல் ‘ பொருளாதாரப் பொதுக் கொள்கைகள் ’ என்பதாம்.

பிற இயற்கை வாதிகள் எழுதிய நூல்களில் துர்கோ எழுதிய நூல் குறிப்பிடத் தக்கதாகும். இதன் பெயர் 'பொருள் உண்டாகுதல், வினியோகித்தல் பற்றிய சிந்தனைகள்' (Reflections on production and Distribution) என்பதாகும். துர்கோ பிரஞ்சு நாட்டில் லிமோஜஸ் மாவட்டத்தின் தண்டல் நாயகமாக இருந்த போது இயற்கை வாதக்கொள்கைகளைச் செயலில் நடத்தி மகத்தான வெற்றி கண்டார். இந்த வெற்றியின் பயனாகவே மன்னர் அவரை நிதிமந்திரியாக்கினார். அப்பொழுது கிடைத்த வாய்ப்பை நன்கு பயன்படுத்தி இதில் அனுபவம் பெற்றார். அரசாங்க அலுவல்களுக் கிடையே எழுதப்பட்ட நூலே 'சிந்தனைகள்' எனும் நூல். இது 100 சிறு அதிகாரங்கள் கொண்டது; இது இயற்கை வாதத்தின் முக்கிய அம்சங்களைச் சுருக்கமாக விளக்கும் நூல். குவஸ்னேயும் துர்கோவும் எழுதிய இவ்விரண்டு நூல்களின் அடிப்படை கொள்கைகளில் முதன்மையானவை இயற்கை விதிகள், தலையிடாக் கொள்கை, உழவின் உயர்வு, நிகரவருமானம், பொருளாதாரப் பட்டியல், ஒற்றை வரித்திட்டம், கட்டுப்பாடில்லாத சர்வதேச வணிகம் என்பனவாம். இவற்றைப் பற்றிய விளக்கத்தில் இயற்கைவாதம் என்ன என்பது புரிந்து விடும்.

**இயற்கை விதிகள்**

முதலில் இயற்கை விதிகள் என்னவென்பதைக் காண்போம். இயற்கைவாதிகள் எதிலும் குறுகிய நோக்கு உடையவரல்லர். பிரபஞ்ச முழுவதையும் ஒரேநோக்கில் பார்ப்பதில் (Weltan-chauung) பெருமையும் மகிழ்ச்சியும் பயனும் கண்டவர்கள். பிரபஞ்சம் முழுவதும் இயற்கை அரசியின் ஆட்சிக்குக் கீழ்படிந்து இருக்கிறது. இந்த இயற்கையின் ஆட்சியே, பஞ்ச பூதங்களையும், ஞாயிறு, திங்கள், மற்றும் கோள்களையும் ஆட்டிவைக்கிறது. அப்படி ஆட்டிவைப்பதற்கும் சில இயற்கை விதிகள் இருக்கின்றன. அண்ட சராசரங்கள் யாவும் சாட்டையில்லாப் பம்பரம் போல் ஆடுகின்றன. சாட்டையோ கண்ணுக்குப் புலனாகவில்லை. ஆழ்ந்து, நிதானமாகச் சிந்தித்துப் பார்த்தால், எல்லாவற்றையும் ஆட்டிவைக்கும் இயற்கை விதிகள் என்ன என்பது புலனாகும். இந்த இயற்கை விதிகள் மனித சமூகத்தையும் கட்டுப்படுத்துகின்றன. மக்கள் வாழ்க்கை இயற்கை விதிகளுக்கு ஒத்து நடப்பின், அவர்கள் வாழ்வு உயரும் என்று இயற்கைவாதிகள் கூறினர். மக்கள் இயற்றும் சட்டங்களோ இயற்கை விதிகள் போல் ஒன்றுக்கொன்று இனிய தொடர்பு உள்ளவை அல்ல. அதனால் அவற்றில் முரண்பாடுகள் பல காணலாம். அவற்றை விளக்குவதே நீதி மன்றங்களின் வேலை. அவை இயற்கை விதிகளுக்கு

எதிரானவையாகவும் இருக்கக்கூடும். அப்படியானுல் அவை மக்கள் முன்னேற்றத்தைக் கூடத் தடைசெய்யும். இயற்கை விதிகளை யொட்டிய மக்கள் இயற்றும் சட்டங்களே மக்களுக்கு நலனளிக்கும். இப்படி இயற்கை விதிகளைச் சிறப்பித்துக் கூறி, அவைகளை ஒட்டியே நாட்டில் இயற்றப்படும் சட்டங்கள் அமைய வேண்டும் என்று வற்புறுத்தியதால் இந்தப் பிரஞ்சு நாட்டுப் பொருளாதார அறிஞர்களுக்கு இயற்கை வாதிகள் என்று பெயர் வந்தது.

இயற்கை விதிகள் கல்லில் செதுக்கப்பட்டிருக்கவில்லை; செப்புப் பட்டயத்தில் பொறிக்கப் பட்டிருக்கவுமில்லை; சட்டப் புத்தகங்களில் அச்சாகவுமில்லையே? அவற்றை எப்படி அறிவது? இவ்வாறு மயங்குபவர்களுக்கு இயற்கை வாதிகள் அளிக்கும் விடை இதுதான் :—‘இயற்கை விதிகளை மனிதன் உணர முடியும். மனச்சாட்சி அவ் விதிகள் என்ன என்று கூறும். பகுத்தறிவு அவைகளின் பொருளை ஆய்ந்து விளக்கும்.’ இதனுல் அல்லவா, ‘இது இயற்கைக்கு விரோதம்,’ என்ற பேச்சுச் சாதாரணமாக வழங்குகிறது. இந்தப் பேச்சைக் கேட்பவரும் ‘எது இயற்கை? அது எங்கேயிருக்கிறது?’ என்று வாதாடுவதில்லை. எனவே ஒவ்வொருவர் மனக்கண் முன்னும் இயற்கை விதிகள் பளிச்செனத் துலங்கும். நமது அனுபவத்திலும், கூரிய அறிவினுலும் இயற்கை விதிகள் என்னவென்பதைக் கண்டு கொள்ளலாம். பறவைக்கு வானவெளியில் மிதக்கும் சிறு பூச்சிகளோ, மண்ணில் கிடக்கும் புழுக்களோ எல்லாம் அதன் உணவுப் பொருள்தாம். ஆனுலும் அவ்வளவும் ஒரு பறவையின் உணவாக முடியுமா? முடியாது. அந்தப் பறவை எத்தனை பூச்சிகளைக் கொத்தியதோ அத்தனை மட்டுமே அதன் சொத்து. அவற்றை உண்ணவேதான் அந்தப் பறவைக்கு உரிமை உண்டு. இந்த உவமானத்தைக் கொண்டு ஒரு நிலத்தைத் திருத்தியவனுக்கு அந்த நிலத்தின்மேல் உரிமையுண்டு என்று விளக்கி, இயற்கை வாதிகள் சொத்துரிமையை வற்புறுத்தினுர்கள். சொத்துரிமையை இயற்கை விதிகள் புனிதப்படுத்துகின்றன (Right of property is rendered sacred and inviolable by natural law). அதை யாரும் சிதைக்கவோ, தொடவோ கூடாது என்ற கோட்பாட்டை உருவாக்கினுர்கள்.

இயற்கை வாதிகள் வாழ்ந்த காலம் பிரஞ்சுப் புரட்சிக்குச் சிறிது முந்திய காலம். அக் காலத்தில் பிரபுக்கள் சொத்துரிமைகளை உறுதிசெய்யத் தத்துவமுறையில் ஒரு வழி தேடிக்கொண்டிருந்தனர். இயற்கை வாதம் அந்த வழியைக் காட்டிற்று. சொத்

துரிமை இயற்கை விதிகளின் குழந்தை; பரிசுத்தமானது; தெய்வீகமானது என்றெல்லாம் இயற்கை வாதிகள் கூறினர். இக்கூற்றைக் கேட்ட பிரஞ்சு நாட்டுப் பெருநிலக்கிழார்கள் இயற்கை வாதிகளைத் தங்களைக் காப்பாற்ற வந்த தெய்வமெனப் பாராட்டினார்கள். இயற்கை வாதிகள் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்களே. அவர்களுடைய தத்துவம் தருக்க முறையில், இயற்கை விதிகளைப் போற்றும்போது நிலச் சொத்துரிமையை உறுதிப்படுத்திற்று. அந்த முடிவு வேண்டுமென்று கூறிய ஒருதலைப் பேச்சு அல்ல.

**தன்னலம்:** பறவை, பூச்சி உவமானத்திலிருந்து, உழைப்புக்குப் பரிசே சொத்து உரிமை என்பதை இயற்கை வாதிகள் நிலைநாட்டினார்கள். இனித் தனி மனிதன் சொத்துரிமை பெற, எவ்வகை உழைப்பில், எவ்விடத்தில், எவ்வளவு நேரம் உழைக்க வேண்டும் என்ற கேள்விகளை எழுப்பி அவற்றுக்கும் இயற்கை விதிகளே காரணம் என்று அவர்கள் காட்டுகின்றார்கள். எல்லா உயிர்களுக்கும் தன்னலம் இயற்கையானது. மக்களுக்கும் அப்படியே. இதனால் ஒவ்வொரு மனிதனும் மிக்க ஊதியம் தரும் உழைப்பில் தனது ஆற்றலுக்கும் வசதிகளுக்கும் தக்கவாறு ஈடுபடுவான் என்றும், ஒவ்வொரு மனிதனும் இவ்வாறு உழைத்து உயர்ந்த ஊதியம் பெற்றால், தேசீயப் பொருள் உற்பத்தியும் வருமானமும் உயரும் என்றும் இயற்கை வாதிகள் கூறினர். எனவே தனி மனிதனின் தன்னலத்தைக் கடிவாளம் போட்டுத் தடுக்காமல், ஒடுக்காமல் விட்டுவிட்டால் நாட்டின் செல்வமும் நலனும் பெருகும் என்பது இயற்கை வாதிகளின் கொள்கை.

**அரசாங்கத்தின் கடமைகள்**

மேற்கூறிய கொள்கையை ஒப்புக்கொண்டால், அரசாங்கம் எந்தப் பொருளாதார முயற்சியிலும் தனி மனிதனைச் சட்ட திட்டங்களால் கட்டுப்படுத்தக் கூடாது என்றாகும். இந்நிலையையே பொருளாதாரத்தில் தலையிடாக் கொள்கை என்பர். இத்தகைய இயற்கை வாதிகளின் முடிவு வணிக வாதிகளின் முடிவுக்கு நேர் மாறானது என்பது தெளிவு. இயற்கை வாதிகளின் கொள்கைப்படி அரசாங்கத்தின் கடமைகள் மிகச் சிலவே; படைபலத்துடன் பிற நாடுகளின் ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டுக்குப் பாதுகாப்பு அளித்தல், உள்நாட்டில் அமைதியை நிலைநாட்டல், ஆகிய இரண்டுமே அரசினரின் கடமைகளாகும். இவற்றுடன் சட்ட சபைகளில் இயற்றும் சட்டங்களெல்லாம் இயற்கை விதிகளை ஒத்திருக்க வேண்டுமென்றும் கூறினர். அரசாங்கம் மக்களுக்குக் கல்வியை ஓரளவுக்கு அளிக்க வேண்டுமென்றும்

PUBLIC

அதுவும் இயற்கை விதிகளை எளிதில் உணருமளவுக்கு இருக்க வேண்டும் என்றும், அதற்குமேல் கூடாது என்றும் வற்புறுத்தினர். இவற்றால் அரசினர் கடமைகளுக்கு ஒரு நிலையான வரம்பு ஏற்பட்டது. பொருளாதாரத் துறைகளில் அரசாங்கம் தலையிடாது இருக்கவேண்டும் என்னும் இக் கொள்கையை முதல் முதலாக இயற்கை வாதிகள் உருவாக்கியதே ஆம். அதற்குப் பின்னர் ஆடம் ஸ்மித்தின் நூலில் இந்தக் கொள்கை மேலும் வற்புறுத்தப்பட்டு, சுமார் மூன்று தலைமுறைகளுக்கு ஆங்கில நாட்டில் அரசியல் வேதமாக மதிக்கப்பெற்று, நடைமுறையில் மேற்கொள்ளப்பட்டது.

**உழவின் உயர்வு**

இயற்கை வாதிகள் உழவுத் தொழிலைப் போற்றிய முறை திருக்குறளில் 'உழவு' அதிகாரத்தை நினைப்பூட்டுகிறது. 'மக்களின் - நாட்டின் - செல்வத்துக்கெல்லாம் உழவுத் தொழிலே ஆதாரம்' என்று டாக்டர் குவஸ்னே கூறுகிறார். உழவு ஒன்றே பயன் தரும் உழைப்பு (productive labour), பிற உழைப்பெல்லாம் பயன் தரா உழைப்பு (unproductive labour). ஒரு கலன் நெல் விதைத்தால் 20 கலம் நெல் விளையும். மனிதனுடன் உழவுத் தொழிலில் இயற்கை கூடி உழைக்கிறது. இயற்கையின் கருணையால் ஒன்றுக்குப் பல மடங்கு விளைச்சல் கிடைக்கிறது. உழவுத் தொழிலில் மொத்த வருமானத்திலிருந்து உழவுச் செலவைக் கழித்துப் பார்த்தால், நிகரப்பொருள் வருமானம் கணிசமானதாய் இருக்கும். இதை இயற்கை வாதிகள் நிகர உற்பத்தி (net product) என்று கூறினர்.

வணிகத் தொழிலிலோ இந்த நிகர உற்பத்தி கிடையாது என்றும் கூறினர். வணிகரது கிடங்குகளில் தேக்கி வைத்திருக்கும் பொருள்களும், கடைகளில் விற்க வைத்திருக்கும் பண்டங்களும் முதலில் இருந்த அளவே இருக்குமே தவிர அதிகமாக வளரா. நூறு குடம் நல்லெண்ணெயை வணிகர் சரக்காக 100 அல்லது 120 நாட்கள் வைத்திருந்தாலும், 101 குடமாக அதிகப்படுவதில்லை என்பதையும் எடுத்துக்காட்டினர். ஆதலால் வணிகத் தொழிலில் நிகரப்பொருள் உற்பத்தி ஆவதில்லை. கைத்தொழிலிலும் நிகரப் பொருள் உற்பத்தி ஆவதில்லை என்றனர். உதாரணமாக, ஒரு நெசவாளி 10 ரூபாய்க்கு நூல் வாங்குகிறான்; 20 நாட்கள் பாடுபட்டு 60 முழம் துணி நெய்கிறான் என்று வைத்துக்கொண்டால் அத் துணியின் மதிப்பு, தொடக்கத்தில் வாங்கிய நூலின் மதிப்புக்கும், அவனது 20 நாட்களின் உழைப்பின் மதிப்புக்கும் மேல் அதிகமாக இருக்காது என்று இயற்கை வாதிகள் கூறினர். ஒரு

நாள் உழைப்புக்கு, நெசவாளி ரூ. 3 கூலியாகப் பெறுவானென்ருல், அவன் நெய்து முடித்த 60 முழம் துணியும் $(20 \times 3) + 10 =$ ரூ. 70-க்கு மேல் விற்காது என்பதை அவர்கள் விளக்கினுர்கள். ரூ. 70-க்கு மேல் அந்த 60 முழத் துணி ரூ. 80-க்கு விற்றதென்று வைத்துக்கொண்டால், நமது நெசவாளி ரூ. 10 இலாபமாக அடைவான். இந்த இலாபத்தைக் கண்டறிந்த மற்ற நெசவாளிகள் கூலிக்கு வேலை செய்யாமல், சொந்தத்தில் நெசவு செய்ய முற்படுவர். எனவே துணி வழங்கல் (supply) தேவைக்கு மேல் பெருகும். நெசவாளிகளுக்குள் இதனுல் ஏற்படும் போட்டியால் ரூ. 80-லிருந்து ரூ. 70-க்கு விலை இறங்கிவிடும். இவ்வாறு வாதித்துக் கைத்தொழிலிலும் நிகர உற்பத்தியோ, வருமானமோ கிடைப்பதில்லை என்று இயற்கை வாதிகள் முடிவு கட்டினர்.

**பயன்தரா உழைப்பு**

இதுபோலவே, மருத்துவர், வக்கீல், ஆசிரியர், அரசாங்க ஊழியர், குமாஸ்தாக்கள், நடிகர், இசைவாணர் போன்றவர்களும் யாதொரு உற்பத்தியும் செய்வதில்லை என்றனர் இயற்கை வாதிகள். உற்பத்தி யென்ருல் சடப்பொருள் உற்பத்தி என்று இயற்கை வாத அகராதியில் பொருளாகும். இம் மாதிரித் தத்துவ ஆராய்ச்சிக்குப் பின் நிகர உற்பத்தி – அதுவும் சடப் பொருள் உற்பத்தி – தரும் தொழில்கள் தாம் பயனுள்ள உழைப்பு என்றும், மற்றவை பயன்தரா உழைப்பு என்றும் இயற்கை வாதிகள் பாகுபாடு செய்தனர். சுமார் 75 ஆண்டுகள் வரை இயற்கை வாதிகளுக்குப் பின்வந்த பொருளாதார அறிஞர்கள் எல்லோரும் இந்தப் பாகுபாட்டை ஒப்புக்கொண்டே வந்தனர். இப் பாகுபாடு தவருனது என்பதைத் தற்காலத்தில் யாவரும் உணர்வர்.

பயன் (Utility) என்பது பலவகையானது. அரிசி, பழம், காய்கறி போன்ற சடப்பொருள்கள் ஒருவகைப் பயனை யளிக்கின்றன. வெறும் தேக்கங் கட்டையை மணையாக உபயோகிப்பதைவிடத் தச்சர் அதனுல் செய்த நாற்காலியை உபயோகிப்பதால் அதிகமான பயனை நாம் அடைவது வேறுவகைப் பயனுகும். பொருளாதாரத்தில் இந்த வகைப் பயனைப் பற்றிப் பேசும்போது தச்சர் வடிவப் பயன்பாடு (form utility) அளிக்கிருர் என்று கூறுவது வழக்கம். கொச்சியில் விளையும் மிளகைக் கும்பகோணத்திற்கு வரவழைத்து விற்கும் வணிகர், மிளகுக்கு அளிக்கும் பயனை இடப் பயன்பாடு (place utility) என்று கூறுவது வழக்கம். மிளகுக் கொடி பயிரிட்டு மிளகு விளைவித்தவன் அளிக்கும் பயனுக்கும் இந்த வகை இடப் பயனுக்கும் ஊன்றி நோக்கின் வேற்றுமை அதிகமில்லை எனலாம். இருவரும்

அந்தந்த இடங்களில் இல்லாத ஒரு பொருளைக் கிட்டவைக்கும் தொண்டில் ஈடுபட்டவர்களே. தீபாவளிக் காலத்தில் 'வெடி, பட்டாசு தேவை ஏற்படும்' என்று முன்கூட்டி அறிந்த வணிகர், ஆனி, ஆடி மாதங்களிலேயே அவற்றை வரவழைக்கத் தொடங்கி, வேண்டும் காலத்தில் விற்பனைக்குத் தயாராக்கும் போது, அவர்கள் அவற்றுக்குக் காலப் பயன்பாடு (time utility) அளிக்கிறார்கள் என்று அவர்கள் உழைப்பை விளக்குவது பொருத்தமேயாம்.

மேலும் பசித்தவனுககுச சோறு பயனளிப்பது போலவே, இசை கேட்க விரும்புகிறவனுககு இசைவாணர் தமது பாட்டினால் பயன் அளிக்கிறார். இது உண்மை என்பதாலேயே மக்கள் பணம் கொடுத்துச் சீட்டு வாங்கிக்கொண்டு இசைக் கச்சேரியைக் கேட்கச் செல்கின்றனர். கூத்தாடியும், வக்கீலும், நாட்டியக் காரரும் சடப்பொருள் உற்பத்தியில் ஈடுபடாவிட்டாலும் இரசிகர்களுக்கு வெவ்வேறு வகை இன்பத்தை அளித்துப் பயனுள்ளவர்களாகிறார்கள். இத்தனை வகைகளிலும் எந்த வகைப் பயனை அளிப்பவரும் பயனுள்ள உழைப்பாளி என்பதே தற்காலப் பொருளாதாரம் கூறும் உண்மை.

இயற்கை வாதம் உழவுத் தொழிலை உயர்த்தி வணிகத் தொழிலைத் தாழ்த்தியது. வணிக வாதத்துக்கு நேர் எதிரிடையாக, செல்வப் பெருக்குக்கு முக்கிய பாத்திரமாக-கதாநாயகனாக-இருந்த வணிகரை ஒன்றுக்கும் உதவாக்கரையென்று இயற்கை வாதிகள் புறக்கணித்தார்கள். நிகரப் பொருள் உற்பத்தி உண்டாகாத கைத்தொழில் துறையில் ஈடுபட்டவர்களும் பயன்தரா உழைப்பில் ஈடுபட்டவர்கள் என்பது இயற்கை வாதிகளின் முடிவு.

**சமூகத்தில் மூன்று வகுப்பினர்**

பயன்தரும் உழைப்பு, பயன்தரா உழைப்பு என்னும் பாகுபாட்டின் அடிப்படையில், இயற்கை வாதி+ள் மக்களை மூன்று வகுப்புகளாகப் பிரித்தனர்.

**(1) நிலச்சுவான்கள் :** இவர்கள் ஆதியில் காட்டைத் திருத்திக் கழனியாக்கத் தங்கள் உழைப்பாலும் பணத்தாலும் முதலீடு செய்தவர்கள். விளைச்சலில் ஒரு பகுதியைப் பெற இவர்கள் உரிமையுடையவர்கள்

**(2) பயன்தரும் உழைப்பாளிகள் :** பயிர் செய்வதற்கு உழைக்கும் உழவர்கள் ; வித்து, உரம், இரசாயன எரு, பூச்சி மருந்து,

உழவுக் காளைகள் முதலியவற்றுக்குப் பணச் செலவும் உடல் உழைப்பும் நல்குபவர்கள். இவர்கள் விளைச்சலில் மற்றொரு பகுதிக்கு உரியவர்.

(3) **பயன் தரா உழைப்பாளிகள் :** தச்சர், கொல்லர், நெசவாளர், குயவர், உழவுக் கருவிகள் செய்தும் புதுப்பித்தும் கொடுப்பவர், அணிகலன்கள் செய்பவர், குயவர், மற்றும் குடித்தனத்துக்கு வேண்டிய பண்டங்கள் செய்பவர் முதலியோர் அனைவரும் நிகர உற்பத்திப் பொருள் (net product) உண்டாக்காதவர் (Sterile class) என்று இயற்கை வாதிகள் குறிப்பிட்டனர். இந்த முப்பெரும் பிரிவுகளை இயற்கை வாதிகள் உணர்த்தியபடி நாம் முதலில் புரிந்துகொண்டால் இயற்கை வாதிகள் அளித்த பொருளாதாரப் பட்டியல் என்னும் சிறப்பு மிக்க கோட்பாட்டைப் புரிந்துகொள்வது எளிது.

**பொருளாதாரப் பட்டியல்**

ஹார்வி என்னும் மருத்துவ மேதை மனித உடலின் குருதியோட்டம் பற்றி முதன் முதலாக எழுதிய நூல் டாக்டர் குவஸ்னேயை மிகவும் கவர்ந்தது. அதைப் படித்ததின் பயனாக, ஒரு புதிய பொருளாதாரக் கருத்து அவர் மனதில் உதயமாயிற்று. அதையே 'பொருளாதாரப் பட்டியல்' என்னும் நூலில் 1758-ல் வெளியிட்டார். 'உயிர்ப் பிராணிகளின் உடலில் இரத்த ஓட்டம் எப்படியோ, அப்படியே ஒரு நாட்டின் சமுதாயத்தில் பொருள்கள் ஒரு வகுப்பினரிடமிருந்து பிற வகுப்பினருக்குச் செல்லும் ஓட்டமும்' என்பதை இந் நூல் விளக்குகின்றது. இவ்வாறு பொருள்கள் ஓடும் திசைக்கு எதிராக அவற்றை வாங்கப் பயன்படுத்தும் பணமும் ஓடுகிறது என்றும் குவஸ்னே விளக்குகிறார். இவ்வாறு மூன்று வகுப்பினரிடையே சென்றுகொண்டிருக்கும் பொருள்களின் ஓட்டமும், பணத்தின் ஓட்டமும் நின்றுவிட்டால், சமுதாயம் என்னும் உடலுக்குப் பக்கவாத நிலை வந்துவிடும். இரத்தம், உடலில் ஓர் உறுப்பில் மிக்க அளவில் கட்டிவிட்டால் ஆபத்து நேரிடுவதுபோல், பொருள்கள் ஒரு வகுப்பினரிடம் தேங்கிக் கிடப்பினும் ஆபத்து என்கிறார் குவஸ்னே. ஓர் உறுப்பில் இரத்தம் நன்கு ஓடாவிட்டால் எப்படி உடம்பு முழுவதுக்கும் கேடோ, அப்படியே ஏதாவது ஒரு வகுப்பினருக்குப் பொருள்கள் ஓடிச் சேராவிட்டாலும், அந்த வகுப்பினருக்கு மட்டுமின்றிச் சமுதாயம் முழுவதற்குமே கேடு என்பது குவஸ்னேயின் கருத்து. இதை விளக்க ஒரு சிறிய சித்திரம் உதவும்; உழவர், நிலக்கிழார், கைத்தொழிலாளர் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது சமுதாயம் என்பது குவஸ்னேயின் அடிப்படைக் கருத்து

அல்லவா? 'உ' உழவரையும் 'நி' நிலக்கிழாரையும் 'கை' கைத்தொழிலாளரையும் குறிக்கின்றன. பொருள் ஓடும் திசையை அம்பு குறிக்கிறது. (அதற்கு எதிர்த் திசையில் பணம் ஓடுகிறது என்பதை மனத்தில் கொள்ளவும்).

எல்லாப் பொருள் உற்பத்தியும் உழவர்கள்தாம் செய்கிறார்கள் என்பதைக் கருத்தில் கொள்க. மொத்தப் பொருள் உற்பத்தி ரூ. 5 கோடி பெறும் எனவும் அதில் ரூ. 2 கோடியை உழவர்கள் தங்களுடைய சாகுபடிச் செலவையும் பிறதேவைகளை நிறைவு செய்யவும் தாங்களே வைத்துக்கொள்கிறார்கள். இன்னும் ரூ. 2 கோடிப் பெறும் பொருள்களை உழவர்கள் நிலச்சுவான்களுக்குப் பாட்டமாகக் கொடுக்கிறார்கள் என்பதைப் படத்தில் அம்புக் குறி காட்டுகிறது. மேலும் உழவர்கள் தங்கள் உழவுத் தொழிலுக்கு வேண்டும் கருவிகள் செய்யவும், வாழ்க்கைக்கு வேண்டிய பண்டங்கள் செய்யவும், வீடுகள் கட்டிக் கொள்ளவும், துணிகள் வாங்கவும் எனப் பல்வேறு வகைத் தொழிலாளர்களுக்குக் கூலியாகவும் விலையாகவும் ரூ. 1 கோடி பெறுமான பொருள்களைச் செலவிடுகின்றனர். இவ்வகைப் பிரிவினையால், மொத்தத்தில் உண்டாக்கப்பட்ட ரூ. 5 கோடி பெறுமான பொருள்களில், ரூ. 2 கோடி உழவரிடமும், இன்னொரு ரூ. 2 கோடியளவு நிலச்சுவான்களிடமும், மிஞ்சிய ரூ. 1 கோடியளவு கைத்தொழிலாளரிடமும் இந்தக் கட்டத்தில் போய்ச் சேர்கின்றன என்றாகிறது.

நிலக்கிழார்கள் தங்கள் பங்கில் ரூ. 1 கோடியை உழவர்களிடம் கொடுத்து உணவுப் பொருள்கள் பெற்றுக்கொள்கிறார்கள். மற்றொரு கோடியைக் கைத்தொழிலாளர்களுக்குக் கொடுத்துப் பதமான பல நுகர்ச்சிப் பொருள்களை வாங்கிக்கொள்கிறார்கள். எனவே, நிலக்கிழார்களிடம் சென்ற பங்கு ரூ. 2 கோடியும், அவர்களிடமிருந்து மற்ற இரண்டு வகுப்பினரிடமும் சென்றுவிடுகிறது. கைத்தொழிலாளரிடம் சென்ற ரூ. 2 கோடியில், ஒரு கோடி உணவுப் பொருள்கள் வாங்குவதற்கும், மற்றொரு கோடி மூலப் பொருள்கள், பருத்தி, சணல், மரம் வாங்குவதற்குமாக உழவர்களிடம் திரும்பவும் செல்கின்றன. கடைசியில் இப்படியாக, ரூ. 5 கோடி விளைச்சலின் மதிப்பும் உழவரிடம் திரும்பவும் சேர்ந்துவிடுமென்றும், இது இரத்தம் எல்லா உறுப்புகளிலும் ஓடிவிட்டுக் கடைசியாக இதயத்தில் போய்ச் சேருவது போலாகும் என்றும், குவஸ்னே விளக்கியுள்ளார். இவ்வாறு தொடக்கத்தில் கிடைத்த ரூ. 5 கோடி விளைச்சலின் மதிப்புத் திரும்பவும் உழவரிடையே ஓடிச் சென்றபின், அவர்கள் அடுத்த ஆண்டுச் சாகு

படித் தொழில் செய்ய ஆயத்தமாகிறார்கள். இதுபோல், ஆண்டு தோறும் உற்பத்தியான பொருள் மேற்கூறிய மூன்று வகுப்பினரிடையே சுற்றி வருகிறது என்று குவஸ்னே தமது பொருளாதாரப் பட்டியலில் விளக்கியிருக்கிறார்.

நிலக்கிழார் ஒரு கோடிக்கு உணவுப் பொருள் வாங்குவர் என்று சொன்னோம். அவர்கள் அரைக் கோடிக்கே வாங்கினால், உழவரிடம் திரும்ப அரைக் கோடி மட்டுமே போய்ச் சேரும். அடுத்த ஆண்டுச் சாகுபடி தொடங்கும் சமயம் அவர்களுக்கு வேண்டிய தொகையில் அரைக் கோடி துண்டு விழும். நிலக்கிழார் கைத்தொழில் சரக்குகளை ஒரு கோடிக்குப் பதில் அரைக் கோடிக்கு வாங்கினாலும், கைத்தொழிலாளர் உழவரிடம் மூலப் பொருள் வாங்கக் கொடுக்கும் தொகை அரைக் கோடி வரை குறையும். ஆகவே, அடுத்த ஆண்டில் சாகுபடி தொடங்கும் போது, வழக்கமான செலவுக்கு அரைக் கோடி துண்டு விழும் சமயம், நிலக்கிழார் கையில் அரைக்கோடி சேமிப்பாக நின்று விடும். உழவர்கள் வழக்கம்போல் ரூ. 2 கோடி செலவழிக்காமல் ரூ. $1\frac{1}{2}$ கோடி மட்டுமே செலவழித்துப் பயிர் செய்தால், மொத்த வருமானம் $4\frac{1}{2}$ கோடிக்கும் குறைவாகும். அடுத்த ஆண்டில் மூவகை வகுப்பினருக்குள் ஏற்படும் பங்கீடும் பொருள் ஓட்டமும் இந்த அளவுக்குக் குறையும். சுருங்கக் கூறின், பொருள்கள் ஓரிடத்திலோ, ஒரு வகுப்பினரிடமோ தேங்காமலிருந்தால், உற்பத்தி ஒவ்வோர் ஆண்டிலும் குறையாமல் உண்டாகும். பொருளாதார உடல் பலவீனமடையாது.

இந்த மாதிரியான பொருள் ஓட்டத்தைப் பற்றிய ஆராய்ச்சியை (circulation of wealth) முதல் முதலாகச் செய்த பெருமை இயற்கை வாதிகளைச் சாரும். இந்தச் சாதனையே தற்காலத்தில் 'தேசீய வருமானக் கணக்கு ஆராய்ச்சி' (National income analysis) என மிக நுட்பமான முறைகளைக் கையாண்டு, மிக்க முன்னேற்றம் அடைந்திருக்கிறது.

**ஒற்றை வரித் திட்டம்**

அடுத்தபடியாக இயற்கை வாதிகளின் ஒற்றை வரித் திட்டம் என்னவென்று ஆராய்வோம். உழவு மாத்திரம் பயன் தரும் தொழில். அது மட்டுமே நிகர உற்பத்தி நல்கும் தொழில். பிற தொழில்களில் இலாபம் இல்லை. கைத்தொழிலாளரும், வணிகரும் அவரவர் உழைப்புக்கு வெகுமதியாக, பிழைப்புக்கு வேண்டிய கூலி மட்டுமே பெறுவார்கள் என்றும் இயற்கைவாதிகள் கூறியது நினைவிலிருக்கும். இந் நிலையில் பின்னவர் மேல் வரி விதித்தால், அவர்களுடைய பிழைப்புக் கூலிக்குக்கூட ஆபத்து

நேரிடும். அதனால் அவர்கள் வேலைசெய்ய முன்வரமாட்டார்கள். வரிக்குத் தகுந்தபடி கூலியை அதிகமாக்கினால்தான் அவர்களுக்கு உழைக்க விருப்பம் வரும். கூலியை அதிகமாக்கிக் கொடுக்கவேண்டியவர்கள் நிலக்கிழார் அல்லது உழவர்கள். எனவே எந்த வரி விதிப்பினும் அது கடைசியில் நிலத்தின் சொந்தக்காரரே கொடுக்கவேண்டி வருகிறது. அதனால் வேறு வகுப்பினருக்கு வரி விதித்து, அவர்கள் இவ்வாறு அதைத் தள்ளி (shift) விடுவதால், கடைசியில் நிலத்தின் மேலேயே நேரே ஒரு வரி போடுவது நல்லது என்று இயற்கைவாதிகள் கூறினர். இது வணிக வாதத்தின் கொள்கைகளுக்கு முற்றிலும் மாறாக இருப்பதைக் கவனித்தல் வேண்டும். பிரஞ்சு நாட்டில் எண்ணற்ற வரிகள் சொல்லொணாத் துயரில் மக்களை ஆழ்த்தியது என்பதை நாம் முன்னரே தெரிந்திருக்கிறோம். இதற்குக் காரணம் கால்பர்ட் வணிக வாதக் கொள்கைகளைச் செயல்படுத்தியது என்பதும் நமக்குத் தெரியும். இந்நிலையில் பிரஞ்சு மக்களுக்கு 'ஒரே வரி, அதுவும் நிலக்கிழார் மேல் வரி' என்ற கொள்கையை இயற்கை வாதிகள் வற்புறுத்தியது மேற்கூறிய எண்ணற்ற வரிகளின் சுமையிலிருந்து விடுதலை பெறுவதற்கோர் வழியை உண்டாககியது. எனவே மக்களுக்கு இயற்கை வாதிகளின் வரிக் கொள்கையில் மிக்க ஆர்வம் பிறந்தது.

உழவுத் தொழில் மாத்திரமே நிகர உற்பத்தி செய்யும் அடிப்படைத் தொழில் என்ற கருத்தே ஒற்றை வரித் திட்டத்துக்கு ஆதாரம். இக் கருத்து தவறானால், ஒற்றை வரித் திட்டமும் தவறாக முடியும். எல்லாத் துறைகளிலும்-தொழில்களிலும்-நிகர உற்பத்தியைத் தற்காலப் பொருளாதாரம் காண்கிறது. எனவே ஒற்றை வரித் திட்டம் ஒரே வகுப்பினர் மேல் வரிச் சுமையை ஏற்றும் நியாயமற்ற திட்டமாகிவிடுகிறது. தற்காலத்தில் பற்பல வரிகள் பற்பல நோக்கங்களுடனும் பற்பல வழிகளிலும் விதிக்கப்பட்டு வருகின்றன. ஆனாலும் 19ஆம் நூற்றாண்டின் இறுதிவரை நிலத்துக்கு மட்டும் ஒற்றை வரித் திட்டம் என்ற கொள்கை மறையவில்லை. அமெரிக்கப் பொருளாதார அறிஞர் ஹென்ரி ஜார்ஜ் (Henry George) என்பவர் இத் திட்டத்தைப் பேரார்வத்துடன் பிரசாரம் செய்து வந்தார். அதனால் அவர் ஒற்றை வரி ஜார்ஜ் என்று அழைக்கப்பட்டார்.

**கட்டுப்பாடில்லாத அனைத்து நாட்டு வணிகம்**

இயற்கை வாதிகள் அயல்நாட்டு வணிகத்துக்கு யாதொரு கட்டுப்பாடுகளும் கூடாது என்ற கோட்பாட்டில் நம்பிக்கையுள்ளவர்கள். இதற்கு மூன்று காரணங்கள் உண்டு: (1) அவர்

கள் தலையிடாக் கொள்கையைச சிரமேற் கொண்டவர்கள். அனைத்து நாட்டு வணிகத் துறையிலும் அதே ஆளவேண்டும் என விரும்பியதில் வியப்பில்லை. (2) எல்லா விதத்திலும் உலகம் ஒன்றே என்ற நோக்கமுள்ள அவர்கள், நாடுகளின் எல்லைப் பிரிவினைகளைப் பொருட்படுத்தாததும் வியப்பன்று. (3) வணிகத்தைப் பயனிலா உழைப்பு என்று இகழ்ந்த இயற்கை வாதிகளுக்கு வணிகத்திற்குக் கட்டுப்பாட்டைப் பற்றிப் பேசுவது அதைச் சிறப்பிப்பது போலவும் முரண்பாடாகத் தோன்றியது. தற்காலத்தில் அனைத்து நாட்டு வணிகத்தை ஆதரிப்பதற்கு முதற் காரணம் அதனால் உண்டாகும் நன்மைகள். நிலவளம், தாதுப்பொருட்கள், காடுகள், தொழில் நுட்பத்திறன், போன்ற இயற்கை அனுகூலங்களால் பல்வேறு நாடுகள் பல்வேறு பொருட்களை மிகக் குறைந்த செலவில் உற்பத்தி செய்யக்கூடும். ஒவ்வொரு நாடும் தனக்குரிய இயற்கை நலன்களுக்கும் செயற்கை வசதிகளுக்கும் தக்கவாறு பொருள் உற்பத்தியில் ஈடுபட்டுப் பிற நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டால், எல்லா நாடுகளுக்கும் நன்மை உண்டாகும் 'என்னும் தற்காலப் பொருளாதாரக் காரணத்தை அறிந்தே, இயற்கை வாதிகள் சுதந்திர அனைத்து நாட்டு வணிகத்தை ஆதரித்தனர் என்று கூறுவதற்கில்லை. உலகம் முழுவதும் ஒன்றே என்ற உயர்ந்த தத்துவத்தை மேற்கொண்டவர்களுக்கு அந்தத் தத்துவமே, அனைத்து நாட்டு வணிகத்துக்கு முதன்மையான காரணமாகத் தோன்றியது.

### பின்தங்கிய நாடுகளும் இயற்கை வாதமும்

பின்தங்கிய நாடுகளுக்கு இயற்கை வாதத் தத்துவங்கள் எத்துணையளவு பொருந்தும் என்பதைச் சிறிது பார்ப்போம். உழவுக்கு முதலிடம் கொடுக்கவேண்டும் என்பதைப் பின்தங்கிய நாடுகள் உணரத் தலைப்பட்டுவிட்டன. எவ்வளவு தூரம் தொழில் வளர்ச்சி அவசியமானாலும், உழவுத் தொழில் சீருடனும் திறமையுடனும் செயல்படாவிட்டால், உணவுக்கும் கச்சாப் பொருளுக்கும் பிற நாடுகளை நம்பி வாழவேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். அதனால் விளையும் ஆபத்துகளன்றி, அன்னியச் செலாவணி நஷ்டத்தையும் வீணுவதையும் எந்த வளரும் நாடும் பொறுத்துக் கொண்டு முன்னேற முடியாது. இந்தியாவில் பசுமைப் புரட்சி வெற்றி கண்ட பின்னரே உணவுப் பற்றுக்குறை தீர்ந்து நாடு முன்னேற்றப் பாதையில் தைரியமாகச் செல்ல முடிகிறது. இயற்கை வாதியின் மற்றத் தத்துவங்கள், குறிப்பாக அவர்கள் கைத்தொழிலையும் வணிகத்தையும் இகழும் மனப்பான்மை, பின் தங்கிய, வளர்ச்சியை விரும்பும், நாடுகளுக்குப் பொருத்தமானவை யல்ல.

**முடிவுரை**

பொருளாதார அறிவியல் வளர்ச்சியில் இயற்கை வாதிகள் சிறப்பிடம் பெறுகின்றனர். சிலர் இவர்களே பொருளாதார நூலின் தந்தையர் என்றும் கூறுவர். இவர்களுக்கு முன் வணிகம் தொழில், உழவு முதலியவற்றைப்பற்றிக் கட்டுரைகள் எழுதப் பட்டிருந்தன. நடைமுறையில் உலக அனுபவமுள்ளவர்கள் சில விதிகளை வகுத்தும் விளக்கியும் உள்ளனர். ஆனால், பொருளா தாரச் செயல்களை ஆராய்ந்து அறிந்து அவற்றை ஒரு விஞ்ஞான சட்ட வரம்புக்குள் அமைத்த பெருமை இயற்கைவாதிகளைச் சேரும் என்பது எவரும் மறுக்கமுடியாது. அவர்கள் விளக்கிய இயற்கை விதிகளிலிருந்து பிறந்த தன்னலப் பண்பு, அதை வளர்ப்பத னுல் விளையும் நற்பயன், அது வளர்வதற்கு இன்றியமையாத சுதந்திரச் சூழ்நிலை, அரசாங்கம் கடைபிடிக்க வேண்டிய தலை யிடாக் கொள்கை, அவர்கள் தொகுத்த பொருளாதாரப் பட்டியல் என்னும் பொருளோட்டத்தின் தன்மை, அது பற்றிய ஆராய்ச்சி, இவையெல்லாம் பொருளாதார அறிவியல் பட்டறையில் இன்று வரை உபயோகத்திலிருந்துவரும் ஆராய்ச்சிக் கருவிகள். அதே சமயம், அவர்கள் உழவுத் தொழிலுக்கு ஈந்த தனிச் சிறப்பு, பயன் தரும்—பயன் தரா உழைப்பு எனும் பாகுபாடு, நிகர வருமானம், ஒற்றை வரி என்னும் கருத்துகள்—இவையெல்லாம் பிற்காலத் தில் தவருனவையென நிராகரிக்கப்பட்டன. இக் குறைபாடுகளை விட்டொழித்தால், பொருளாதார நூலின் தோற்றுவாய்க்கும் வளர்ச்சிக்கும் இயற்கை வாதிகள் செய்திருக்கும் சேவைகள் மிக்க சிறப்புடையவை என்பதில் ஐயமில்லை. ஆடம் ஸ்மித் இயற்கை வாதிகளை 'விவசாயப் பள்ளி' (Agricultural School) என்று கூறிச் சென்றது இவர்களுடைய முழுச் சிறப்பையும் காட்டாத பட்டம் ஆகும். இயற்கை வாதிகள் அவர்கள் சொந்த நாடாகிய பிரான்சில் ஒரு குறுகிய கால அளவுக்கே செல்வாக்குடன் இருந் தனர். ஆனால், அவர்களுடைய பல முக்கிய கோட்பாடுகள் ஆடம் ஸ்மித்தின் நூல் வாயிலாக நீண்டகாலச் சிறப்பைப் பெற் றிருக்கின்றன. இயற்கை வாதிகள் ஆடம் ஸ்மித் என்னும் கதிரவனுக்கு முன் தோன்றும் விடிவெள்ளி போன்றவர் என்பது அவர்களுக்கு அழியாப் புகழை அளிக்கிறது.

## பாகம் III

# தொன்மை நூல் பொருளாதாரம்
(Classical Economics)

## 9. ஆடம் ஸ்மித்
(Adam Smith 1723-90)

### காலம் மாறியது

இடம், பொருள், காலம் எத்துணை அளவுக்குப் பொருளாதாரச் சிந்தனையைப் பாதிக்கிறது என்பதை ஆடம் ஸ்மித் வாழ்ந்து எழுதிய பதினெட்டாம் நூற்றாண்டில் ஏற்பட்ட பொருளாதார அமைப்பின் மாறுதல்களையும், சிந்தனையில் ஏற்பட்ட மாறுதல்களையும் ஒப்பு நோக்குதல் பயன் தரும் முயற்சி ஒன்றாகும். படைமானியத் திட்டம் மறைந்துவிட்டது. சர்ப் என்னும் பண்ணை அடிமை முறை 15ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்திலேயே பிரிட்டனில் மறைந்து ஒழிந்தது. பின்னர் பெரும் பண்ணைகள் சிறு பண்ணைகளை விழுங்கத் தொடங்கின. சிறு குடியானவர்களும் விவசாய உழைப்பாளர்களும் – கிராமப்புறங்களிலிருந்து வெளியேறி நகரங்களில் அடைக்கலம் புகுந்தனர். வணிகன் தொழிலதிபர் ஆனான். தங்கள் குடிசைகளில் பண்ட உற்பத்தி செய்துவந்த தொழிலாளர்கள் ஆலைகளுக்குச் சென்று மணி ஓசைகளின் அடிமையாகக் கூலிவேலையில் ஈடுபடவேண்டிய நிர்ப்பந்தம் உண்டாயிற்று. இவ்வாறு நவீன காலத் தொழிலாளர் சமுதாயம் உருவாயிற்று. தங்களுக்குச் சொந்தமான உற்பத்திக் கருவிகளின்றி, தங்கள் கையே தங்களுக்கு உதவி யென்ற நிலையிலுள்ள தொழிலாளர்கள் எண்ணிக்கை பெருகியது. அவர்கள் கூலியும், போட்டிச் சக்திகளாலும் சுயேச்சையான ஒப்பந்தங்களாலும் நிர்ணயிக்கப்படலாயின. சட்ட மேதை ஜான் ஆஸ்டின் கூறியபடி அந்தஸ்து எனும் சமூக அஸ்திவாரம்

அழிந்து ஒப்பந்தம் என்னும் புது அடிப்படையில் சமூகம் செயல் படத் தொடங்கியது.

இலாப நோக்குடன் வியாபார முறையில விவசாயம் செயல் படத் தொடங்கியது. வணிகம் உலகம் முழுவதும் வியாபிக்கும் வண்ணம் விரிந்தது. சுயேச்சையான வணிகம், தொழில், உழைப்பு என்ற புது நாகரீகம் தலையெடுத்தது. அரசாங்கக் கட்டுப்பாடுகள் நலிந்து மறையத் தொடங்கின. வணிக வாதம் இட்ட விலங்குகள் தெறித்து விழுந்தன. தன்னலம் ஓர் ஆக்கும் சக்தி, பொதுநலத்தைப் பேணிப் பெருக்கக்கூடிய சக்தியென்ற தத்துவம் மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தது. வணிக முதலாளித் துவம் (Commercial Capitalism) ஆட்சி புரிந்த பீடத்தில் தொழில் முதலாளித்துவம் (Industrial Capitalism) அமர்ந்து கோலோச்சி யது. செல்வம் ஈட்ட வணிகமே சாலச் சிறந்த வழியென்ற எண் ணம் கெட்டு, உற்பத்திப் பெருக்கே உண்மையான சிறந்த உபா யம் என்ற கருத்து மக்களைத் தன்பால் ஈர்த்தது. வணிகரும் அவர்களுக்குக் கடன்பட்டுத் தங்கள் குடிசைகளில் தொழில் செய்து தொண்டு புரிந்த குடிசைத் தொழிலாளர் என்ற காலம் மாறி, முதலாளிகள் ஒருபுறம் தொழிலாளர்கள் மறுபுறம் என்ற புதிய வகுப்புப் பிணக்குள்ள சமுதாயம் தோன்றியது.

இவ்வாறு உழவு, வணிகம், தொழில் ஆகிய துறைகளிலும், இலாபம், அந்தஸ்து, ஒப்பந்தம், கட்டுப்பாடு, சுதந்திரம், போட்டி முதலிய கருத்துகளிலும் மாபெரும் மாறுதல்கள் ஒருங்கே நிகழ்ந்த 18ஆம் நூற்றாண்டில் பிறந்து வாழ்ந்தார் பொருளாதார ஞானி ஆடம் ஸ்மித். இத்தனை மாறுதல்கள் ஏற்பட்டிராவிட் டாலும், ஆடம் ஸ்மித்தின் புதிய சுதந்திரவாதக் கொள்கைகள், மக்களாலும் அரசாங்கத்தாலும் விரும்பி ஏற்றுக்கொள்ளப்பட் டிருக்குமா என்பது ஐயப்பாட்டுக்குரியதே.

**ஸ்மித்தின் வாழ்க்கை வரலாறு**

ஸ்காட்லாந்து நாட்டில் கிர்க்கால்டி (Kirckaldy) என்னும் சிற்றூரில் ஆடம் ஸ்மித் 1723-ல் பிறந்தார். பிறக்கும் முன்னே தம் பிதாவைப் பறிகொடுத்தார். நான்கு வயதுக் குழந்தைப் பருவத்தில், இவரை நரிக்குறவன் கூட்டமொன்று திருடிக் கொண்டு போய்விட்டது. அரும்பாடுபட்டுத் தாய் மாமன் அவரை மீட்டுவந்தார். அக் காலத்தில் புகழ்பெற்றிருந்த கிளாஸ் கோப் பல்கலைக்கழகத்தில் 14 வயதில் சேர்ந்தார். பேராசிரியர் பிரான்சிஸ் ஹட்சிசன் (Francis Hutcheson) என்பவரின் மாணாக்க ரானார். அவர் விதைத்த 'தொழில் சுதந்திரம்' (free enterprise) என்னும் வித்துப் பின்னால் அரும்பி, மலர்ந்து, தலையிடாக்

கொள்கையாக ஆடம் ஸ்மித்தின் நூலில் கனிந்தது. உலகப் புகழ்பெற்ற தத்துவ ஞானி டேவிட் ஹியூமின் (David Hume) நூல்கள் ஸ்மித்தின் உள்ளத்தைக் கவர்ந்தன. மூன்று ஆண்டுகளுக்குப் பின் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் தம் திறமைக்காக ஸ்நெல் எக்ஸிபிஷன் என்னும் பரிசு சம்பளம் பெற்றார். ஆறு ஆண்டுகள் தொடர்ந்து தம் ஊர்ப்பக்கமே செல்லாது தம் விருப்பப்படி கிரேக்க, இலத்தீன் இலக்கியங்களையும், இத்தாலிய பிரஞ்சு நூல்களையும் கற்பதில் காலத்தை மகிழ்ச்சியுடன் கழித்தார். ஆனால், யாதொரு பட்டமும் பெறாமல் திரும்பினார்.

இரண்டு ஆண்டுகள் வேலையின்றி இருந்தார். பின்னர், பன்னிரண்டு ஆண்டுகள் எடின்பரோப் பல்கலைக் கழகத்தில் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றினார். அதன்பின் தாம் கற்ற தாய்ப் பல்கலைக் கழகத்தில் தருக்க நூல் ஆசிரியராக 1751-ல் அமர்ந்தார். விரைவில் தத்துவப் பேராசிரியர் ஆனார். அவருடைய சொற்பொழிவுகளைக் கேட்க அந்த நாட்டுப் பிரபுக்கள் வந்து கூடினார்கள். மேதைக்குரிய சில வேடிக்கைக் குணங்களும் ஸ்மித்திடம் உண்டு. மாலை நேரங்களில் உலாவப் போகிற பொழுது தமக்குத்தாமே பேசிக்கொள்வார். ஒருநாள் ரொட்டித் துண்டுகளையும், வெண்ணெயையும் கலந்து தேயிலைப் பானம் எனப் பருகி, ஏன் சுவையற்றிருக்கிறதென்று வியந்தாராம். நடந்து செல்லும்போது, கைக்கழியைப் போர்வீரன் துப்பாக்கியைத் தோளில் சாய்த்துச் செல்வதுபோல் வைத்துக்கொண்டு நடப்பது இவர் வழக்கம்.

இவர் எழுதிய மாபெரும் நூல் 'நாடுகளின் செல்வம் என்பது. அதன் முழுப்பெயர் 'நாடுகளினது செல்வத்தின் இயல்பையும் காரணத்தையும் பற்றிய விசாரணை' (An Enquiry into the Nature and Causes of the Wealth of Nations). இதனை 1764-ல் தொடங்கி 1773-ல் முடித்து 1776-ல் வெளியிட்டார். வெளிவந்தவுடனேயே எல்லையற்ற ஆதரவும் வெற்றியும் கண்ட நூல் இது. 1790-ல் ஆசிரியர் மறையுமுன் இங்கிலாந்தில் ஐந்து பதிப்புகள் வெளிவந்தன. பல அயல்நாட்டு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியானது. ஐரோப்பா முழுவதிலும் அமெரிக்காவிலும் ஆடம் ஸ்மித்தின் சுதந்திரவாதக் கொடி பட்டொளி வீசிற்று. அவருடைய பொருளாதாரக் கொள்கைகள் அறிஞர்கள் மனத்தைக் கொள்ளைகொண்டன. இத்தகைய சிறப்பினைப் படைத்த நூல் எழுதுவதற்குப் பல வாய்ப்புகளை ஸ்மித்துக்கு அதிர்ஷ்ட தேவதை அருளினாள். அவற்றுள் முதல் வாய்ப்பு'

அவர் பிரான்சிஸ் ஹட்சிசனின் மாணவராயிருக்க நேர்ந்தது. சுதந்திரமாகக் கட்டுப்பாடு ஒன்றுகூட இல்லாமல் யாவரும் தொழில் துறையில் உழைத்தால் நாட்டுக்கு நல்லது என்ற கருத்தை ஸ்மித்தின் இளம் உள்ளத்தில் ஊன்றியவர் ஹட்சிசன். 'பெரும்பான்மை மக்களுக்குப் பெரும்பான்மை நன்மையை நாடுவதே அரசினரின் குறிக்கோளாக இருக்கவேண்டும்' என்ற சொற்றொடரைத் தொகுத்தவரும் ஹட்சிசனே. இரண்டாவதாக டேவிட் ஹியூமுடன் பழகவும் அவர் கொள்கைகளை நன்கு அறிந்துகொள்ளவும் கிடைத்த வாய்ப்பு. ஹியூமின் நூல்களில் ஸ்மித் மிகவும் ஈடுபட்டார். எடின்பரோப் பல்கலைக் கழகத்தில் ஆசிரியராகப் பணியாற்றிக்கொண்டிருக்கும்பொழுது பக்லோ பிரபு என்னும் இளைஞரை அழைத்துக்கொண்டு ஐரோப்பா முழுவதையும் அவருக்குச் சுற்றிக் காட்டிவரும் வேலை கிடைத்தது மூன்றாவது வாய்ப்பு. நல்ல சம்பளத்தோடு பிரயாணம் முடிந்த பின் வாழ்நாள் முழுவதும் உபகாரச் சம்பளம் வேறு கிடைத்தது. இதற்கெல்லாம் மேலாகப் பிரான்சின் தலைநகராகிய பாரிஸில் இயற்கை வாதப் புலவர் பெருமக்களை, டாக்டர் குவஸ்னே, துபானட், துர்கோ ஆகியோரைக் கண்டு பேசி அளவளாவக் கிடைத்த அரிய வாய்ப்பு நான்காவது. தாய் நாடு திரும்பிய பின்னும் நல்ல வேலை கிடைத்தது ஐந்தாவது நல்வாய்ப்பு. கடைசியாகச் சுங்கத் துறையில் உயர்ந்த சம்பளத்தில் வேலையும் கிடைத்தது. திருமணமாகாது தனியாளாக இருந்தாலும், அன்பு மிக்க தாயின் அரவணைப்பும், ஒன்று விட்ட தங்கையின் அன்பும் பெற்று வீட்டுக் கவலையில்லாமல் வாழ்ந்தமை ஆறாவது வாய்ப்பு. இந்த மேதை கடைசிவரையும் வாழ்க்கை நலன்கள் யாவும் பெற்று, நண்பர்களுக்கு அடிக்கடி விருந்துகள் அளித்துக்கொண்டு மகிழ்ச்சியுடன் வாழ்ந்தார். பிற்காலப் பொருளாதார அறிஞர்களில் டேவிட் ரிக்கார்டோ (David Ricardo), ஜான் மேனார்டு கெயின்ஸ் (John Maynord Keynes) இருவரைத் தவிர வேறு எந்த நாட்டிலும் எவரும் இவ்வளவு செல்வத்துடன் வளமாக வாழ்ந்தது கிடையாது.

**நாடுகளின் செல்வம்**

பொருளாதாரத்தின் முதல் நூலென மதிக்கத்தகும் 'நாடுகளின் செல்வம்' ஐம்பெரும் பகுதிகளுடையது. இதில் உள்ள அதிகாரங்கள் 32. இவை 841 பக்கங்களில் நீண்டு விரிந்து கிடக்கின்றன. முதல் பகுதியில் உழைப்புதான் செல்வத்துக்கு அடிப்படை என்பதும், உழைப்பினால் ஆக்கப்பட்ட செல்வம் எப்படி, என்னென்ன அளவில் கூலியும், வட்டியும், இலாபமும், நிலப்பாட்டமும் ஆக உழைப்பாளர், முதலாளிகள், நிலச்சுவான்கள் ஆகி

யோருக்கு முறையே பங்கிடப்படுகிறது என்பதும் முதல் 11 அதிகாரங்களில் விளக்கப்படுகின்றன. மொத்தத்தில் இந்த 130 பக்கங்களைப் பொருளாதாரத் தத்துவக் கருவூலம் எனக் கூறலாம். இரண்டாவது பகுதி 190 பக்கங்களில் ஐந்தே அதிகாரங்களைக் கொண்டது. முதலின் (capital) இயல்பு, வளர்ச்சி, பயன்படும் வழி ஆகியவை இங்கே ஆராயப்படுகின்றன. இப் பகுதி பின் தங்கிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சி சாத்திரம் எனக் கருதும் இயல்புடையது. இந் நாளிலும் இது மிக்கப் பயனுடையதாக இருக்கிறது. மூன்றாவது பகுதி 26 பக்கங்கள் அளவில் குறுகிக் கிடக்கிறது. உரோமாபுரிப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின் எழுந்த ஐரோப்பிய நாடுகளின் செல்வ வளர்ச்சியின் வரலாற்றைத் தருகிறது. அவற்றின் வேறுபட்ட வேகத்தைப் பற்றி இப் பகுதியில் நான்கு அதிகாரங்கள் இருக்கின்றன. வெவ்வேறு நாடுகளின் செல்வத்தில் காணும் வேற்றுமைகளுக்கு உழவு, கைத்தொழில், நகரங்களின் வளர்ச்சி போன்றவை எவ்வளவு தூரம் காரணம் ஆகும் என்பதையும் இப் பகுதி விளக்குகிறது. நான்காவது பகுதி, நூலின் கால் பங்குக்கு மேற்பட்டது; 248 பக்கங்கள் கொண்டது. கடைசி ஒன்பதாவது அதிகாரத்தில் 30 பக்கங்களில் இயற்கை வாதத்தை ஆராய்கிறார் ஆசிரியர். இயற்கை வாதிகளைப் பொருளாதார நிபுணர்கள் என்று கூறாமல், விவசாய நிபுணர்கள் என்று இவர் கூறுவதும் குறிப்பிடத்தக்கது. மிகுதியுள்ள 222 பக்கங்களில் உள்ள எட்டு அதிகாரங்கள், அறிஞர் ஆல்பிரட் மார்ஷலே கூறுவதுபோல், வணிக வாதத்தைக் கடுமையாகத் தாக்கிக்கொண்டு செல்கின்றன. ஐந்தாவது பகுதியும் நான்காவதைப் போல் நீளமானாலும் அதில் மூன்றே அதிகாரங்கள்தான் உள்ளன. 'அரசாங்கத்தின் வருமானம்' என்னும் தலைப்பில் அரசினர் கடமைகள், அரசியல் கொள்கை, வரி விதிக்கும் முறை முதலியவற்றைப் பற்றி மறுத்தற்கரிய கருத்துகளும், கோட்பாடுகளும் இந்தப் பகுதியில் செறிந்துள்ளன.

இந்நூலைப் பற்றிய சில அபிப்பிராயங்களை இந்தக் கட்டத்தில் குறிப்பிடுவது நல்லது. 'நாடுகளின் செல்வம் பொருளாதார நூலின் ஆதி நூல் மட்டுமல்ல, அந்தமும் அதுவே' என்பர் மெஹான் பிரபு (Lord Mahon). இந்த நூலின் பிரஞ்சு மொழிபெயர்ப்பு ஆசிரியரும், பொருளாதார அறிஞருமான ஜே. பி. ஸே (J. B. Say) கூறுவது: 'ஆடம் ஸ்மித்தைப் படிக்கும் முறையில் படித்தால், அவருக்கு முன்னால் பொருளாதார நூல் என்றொன்று இருந்ததில்லை என்பது உனக்குத் தெளிவாகும்.' மற்றொருவர் 'ஆடம் ஸ்மித்துக்கு முன் பொருளாதாரக் கருத்து

கள் செங்கல்கள் போலிருந்தன; அவர் அவற்றைப் பளிங்குக் கற்களாக (turned bricks into marble) மாற்றிய மந்திரவாதி எனக் கூறுகிறார். அதே சமயம் ஜான் ரஸ்கின் (John Ruskin) என்னும் ஆங்கில இலக்கிய மேதை கூறும் இகழ்ச்சி மொழிகளையும் தெரிந்துகொள்ளவேண்டும். 'நீ உன்னைப் படைத்த கடவுளை வெறுக்கலாம்; அவருடைய கட்டளைகளை மீறலாம்; அண்டை வீட்டாரின் செல்வத்துக்கு ஆசைப்படலாம்' என்று நாத்திகத்தை வேண்டுமென்றே போதித்த 'உயர்குடிப் பிறப்பில்லாத ஸ்காட்லந்து உன்மத்தன்' என்று ஆடம் ஸ்மித்தைப் பற்றிச் சீற்றமுடன் வரைந்திருக்கிறார்.

## உழைப்பே செல்வத்தின் தாய்

வணிகமே ஒரு நாட்டினது செல்வத்தின் பிறப்பிடம் என்பது வணிக வாதிகளின் கொள்கை. விவசாயமே செல்வத்தின் பிறப்பிடம் என்பது இயற்கை வாதிகளின் கூற்று. மனித உழைப்பே நாடுகளின் செல்வத்துக்குத் தாயெனக் கருதவேண்டும் என்பது ஆடம் ஸ்மித்தின் கோட்பாடு. உழைப்புக்கு எவ்வளவு முதன்மை தருகிறார் என்பதை அறிய அவருடைய மாபெரும் நூலின் முதல் அதிகாரத்தைப் படித்தால் போதும். அதன் தொடக்கத்திலேயே அவர் வலியுறுத்துவன மூன்று அடிப்படைக் கருத்துகளாம். (1) உழைப்பிலிருந்து செல்வம் உண்டாகிறது. (2) கைத்திறன், தொழில் நுட்பம், திறம் என்பவை உழைப்பின் செல்வம் படைக்கும் சக்தியைப் பன்மடங்கு பெருக்கும். (3) மக்களில் உழைப்பவர் எண்ணிக்கையைப் பொறுத்தது செல்வத்தின் அளவு. உழைப்பின் உயர்வை உச்சிமேற்கொண்டு போற்றுகிறார். இது ஒருதலைப் புகழ்ச்சிபோலக்கூடத் தோன்றும். எனினும் பின்னால் வரும் அதிகாரங்களில், நிலமும் செல்வத்தை உண்டாக்கும் என்றும், மூலதனம் செல்வத்தைப் பெருக்கும் கருவி என்றும் தெளிவாகவும் அழுத்தமாகவும் கூறியுள்ளார். இதன் பின்னர்தான் பொருட்களின் அடக்கச் செலவு என்னும் பொருளாதாரப் பிரச்சினையைக் கிளப்புகிறார். எனவே உழைப்பின் முதன்மையை எவரும் மறந்துவிடக்கூடாது என்னும் நோக்கத்துடன்தான் உழைப்புக்கு முதல் அதிகாரத்திலேயே தொடக்க விழா எடுத்திருக்கிறார்.

## உழைப்புப் பகுப்பு

எந்தத் தொழிலையும் பல பகுதிகளாகப் பிரித்து, எவரும் எளிதில் கற்றுத் திறமை அடையக்கூடிய வகையில் சிறு சிறு வேலைகளாக்கினால் உற்பத்தி ஆயிரம் மடங்கு பெருகும் என்பது அவர் கண்ட உண்மை. இந்தக் கட்டத்தில்தான் இலக்கிய நயம்

சிறந்த ஓர் எடுத்துக்காட்டை விளக்குகிறார் ஆடம் ஸ்மித். குண்டூசித் தொழிலைப் பற்றிய அந்த வாக்கியங்கள் மிக்கப் புகழ் பெற்றவை. 'ஒருவன் கம்பி இழுக்கிறான். ஒருவன் அதை நேர் கம்பி ஆக்குகிறான். ஒருவன் வெட்டுகிறான். ஒருவன் ஒரு நுனியைக் கூரியதாக்குகிறான். ஒருவன் தலையைப் பற்றவைக் கிறான். தலை செய்ய ஓர் ஆள். மெருகு கொடுக்க ஓர் ஆள். தாளில் குத்தி விற்பனைக்குத் தயார் செய்வது இன்னொருவன் வேலை. இப்படித் தொழிலைப் பிரித்துப் பிரித்து, ஒவ்வொரு வேலையையும் ஒவ்வொருவன் செய்யும்படி எளிதாக்காவிட்டால், ஒரு மனிதன் ஒரு நாள் எல்லாம் உழைத்தாலும் பத்துக் குண்டூசி கள் - வெண்மையும், அழகும், கூர்மையும் இல்லாதனவாக - கூடச் செய்ய இயலாது. ஆனால் மேற்கூறிய உழைப்புப் பகுப்பு முறையை மேற்கொண்ட ஆலையில் 10 அல்லது 15 பேர் பன்னி ரண்டு ராத்தல் குண்டூசிகள் செய்கின்றனர்.' இதைப் பிற்காலப் பொருளாதார அறிஞர்கள் பொன்னேபோல் போற்றி மேற்கோ ளாகக் காட்டி வருகிறார்கள்.

### பண்டமாற்றில் விருப்பம்

தன்னிடமுள்ள ஒன்றைக் கொடுத்துப் பிறரிடமுள்ள மற் றொன்றைப் பெறுவதில் மக்களுக்கு ஒரு தனி ஆர்வம் இயற்கை யாகவே உண்டு என்பது ஆடம் ஸ்மித்தின் உறுதியான நம் பிக்கை. பள்ளிச் சிறுவர் சிறுமியர் தங்களுக்குள் பென்சிலைக் கொடுத்து ரப்பர் பெறுவதும், சிலேட் குச்சிக்கு மயில் இறகு கொள்வதும் இந்த இயற்கைப் பண்பை விளக்கும். வயதான பின்னும் மக்கள் நெல்லைக் கொடுத்து விவசாயக் கருவிகள் வாங்குவதும், துணிகளைக் கொடுத்து எவர்சில்வர் பாத்திரங்கள் வாங்குவதும் பண்டமாற்றில் அவர்கள் துய்க்கும் இன்பமே என்று வாதிக்கிறார் ஸ்மித். இந்த இன்பம் பெறுவதற்கே ஒவ் வொரு மனிதனும் ஒவ்வொரு பொருள் உற்பத்தியில் ஈடுபடு கிறான் என்பது அவர் முடிவு. ஆனால், இதைப் பிற்காலப் பொருளாதாரம் ஒப்புக்கொள்ளவில்லை. பண்டங்களை மாற்றும் பேராவலில் ஒவ்வொரு மனிதனும் தானாகவே ஒரு தொழில் மேற் கொண்டு திறமை அடைவதால் உற்பத்தியைப் பெருக்குகிறான் என்பது சரியல்ல. ஆனால், ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு தொழிலில் இயற்கையாகத் திறமை உண்டு. எனவே ஊக்கம் பிறக்கிறது; ஈடுபாடு எழுகிறது. திறமைசாலியாகிறான். தன் தேவைக்கு வேண்டியதற்கு மேலும் உற்பத்தி செய்கிறான். பின் னர் தன்னுடைய மற்றத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பிறரிடம் பண்டமாற்றுச் செய்துகொள்கிறான் என்பதே தற் காலப் பொருளாதார உண்மை.

செல்வமுண்டாக்கும் பல்வேறு தொழில்களில், வெவ்வேறு மக்கள் வெவ்வேறு தொழில்களை மேற்கொள்வது அவர்கள் விருப்பத்தையும் திறனையும், சூழ்நிலையையும் பொறுத்தது. ஆனால், ஒவ்வொரு தொழிலையும் சிறு சிறு பகுதிகளாகப் பிரித்தால், உற்பத்தி பன்மடங்கு பெருகும். அப்படியானால் இவ்வாறு எந்த அளவுக்கு வேலைப் பகுப்புச் செய்யக்கூடுமென்ற கேள்வியை ஸ்மித் எழுப்புகிறார். இரண்டுவிதத் தடைகள் உண்டு என விடை பகர்கிறார். குண்டுசித் தொழிற்சாலையில் நுட்பமான வேலைப் பகுப்பு நடப்பதால், ராத்தல் கணக்கில், ஏன் டன் கணக்கில், குண்டுசிகள் உற்பத்தியாக்க முடியும். நாட்டில் குண்டுசிக்கு அவ்வளவு தேவையில்லையானால் அத்தகைய வேலைப் பிரிவினையால் பயனில்லை. தேவை என்பதை 'வாங்குவோர் உண்டா, அதாவது அதற்கு அங்காடியில் கிராக்கி இருக்கிறதா' என்ற நோக்கில் விளக்குகிறார். மேலும் நுண்கலைத்திறன் நிறைந்த பெரிய ஆலையை நிர்மாணிக்க மூலதனம் பெரிய அளவுக்கு வேண்டும். அந்த அளவுக்கு மூலதனம் இல்லாவிட்டாலும், வேலைப் பகுப்பை வெகுதூரம் நுட்பமாக்கிக்கொண்டே போகமுடியாது. எனவே நாட்டில் பெரிய, விரிவான சந்தை (Market) இல்லையென்றாலும், மிகுந்த மூலதனம் இல்லையென்றாலும் வேலைப் பகுப்புத் தடைப்படும் என்பது ஸ்மித்தின் முடிவு. இவ்விரண்டு தடைகளையும் இரண்டு விதிகளாகக் காண்பது பிற்காலத்துப் பொருளாதார மரபு: (1) நுட்பமான வேலைப் பகுப்பின் எல்லையைச் சந்தையில் உள்ள கிராக்கி வரையறுக்கிறது. (2) நுட்பமான வேலைப் பகுப்பின் எல்லையைக் கிடைக்கக்கூடிய மூலதனம் வரையறுக்கிறது.

### இயற்கை ஆசைகளின் ஆட்சி (Naturalism)

மனித உள்ளத்தில் வேரூன்றிக் கிடக்கும் இயற்கை ஆசைகள் தன்னலமும் பொருள் திரட்டும் ஆர்வமுமாக வெளிப்படுகின்றன என்பது ஸ்மித் கண்ட உண்மை. தற்கால உளநூல் நிபுணர்கள் தற்பாதுகாப்பு மனப்பான்மையை வலியுறுத்துகிறார்கள். ஆடம் ஸ்மித்தின் கொள்கை இதன் விளக்கமாக முன்னரே அமைந்து கிடப்பது வியப்பே ஆகும். மேற் கூறிய இரண்டு இயற்கை ஆசைகளும் பொருளாதாரத் துறையில் மக்களை ஆட்டி வைக்கின்றன. தன்னலத்தைப் பேணி ஒவ்வொரு மனிதனும் தனக்கு விருப்பமான தொழிலை மேற்கொண்டு தனது முழுத்திறமையுடனும் உழைக்கிறான்; பொருள் உற்பத்தியில் கண்ணும் கருத்துமாயிருக்கிறான். இவ்வாறு மக்கள் அனைவரும் முனையும்போது அவர்களுடைய தன்னலம் மட்டும் நிறைவு பெறுகிறது என்று கூறமுடியாது. நாட்டின் பொருள் வளமும் பெருகுகிறது.

ஆகவே தன்னலத் தூண்டலால் எழும் தனி மனிதனின் உழைப்பு முழுவதும் பொது நலத்தையும் பேணுகிறது. தன்னை யறியாமலேயே அவன் பொதுநல ஊழியனாகத் திகழ்கிறான். இவ்வாறு உலகியல் இயங்குகிறது. தனி மனிதனைக் கண்ணுக்குப் புலப்படாத கரம் (invisible hand) ஒன்று அழைத்துச் செல்கிறது. இது நாட்டுக்கு நன்மை நல்கும் இனிய வழிகாட்டி; இதைக் கருணை மூர்த்தியான கடவுளின் திருவிளையாடல்களில் ஒன்றென மதிக்கிறார் ஸ்மித். பொருள் திரட்டுவதில் உள்ள ஆர்வமும் ஒரு தெய்வீக அருள். எறும்பு, தேனீ, நாய்க்குட்டி, அணில் முதலிய உயிரினங்களிடமும் பொருள் திரட்டும் மனப்பான்மையைக் காண்கிறோம். மனிதன், தான் திரட்டும் பொருளைப் பிற உயிர்களைப்போல் பொந்திலும், கூட்டிலும், மூலை முடுக்குகளிலும் ஒளித்து வைப்பதில்லை. திரட்டிய பொருளை மேலும் பண்டங்கள் ஆக்கும் மூலதனமாகப் பயன்படுத்துகிறான். மூலதனம் பெருகப் பெருக, 'வரப்புயர' என்ற வாழ்த்தின் கருத்துப் போல், நாட்டின் செல்வம் வளர்கிறது. இந்தச் செயலை ஆடம் ஸ்மித் (மூலதனம்) திரட்டும் கொள்கை (theory of accumulation) எனக் குறிப்பிடுகிறார்.

## இன்ப நோக்கு (Optimism)

தன்னலமும், (மூலதனம்) திரட்டும் ஆர்வமும் சேர்ந்து மக்களைப் பொருள் உற்பத்தியில் தீவிரமாக முனையவைக்கின்றன. உற்பத்தி பெருகும் வழிகளாகிய உழைப்புப் பகுப்பு, பொருளாக்கக் கருவிகள் கண்டுபிடித்து உபயோகித்தல், பண்டமாற்றில் ஈடுபடுதல், பணத்தைப் பண்டமாற்றுச் சாதனமாகப் பயன்படுத்தல், மூலதனத்தைப் பெருக்குதல் எல்லாம் இவ்விரண்டு இயற்கை ஆசைகளின் பொன்னான விளைவேயாம். இவை மோட்டாரை இயக்கும் பெட்ரோல் போலப் பொருள் உற்பத்தி வேலையை இயக்குகின்றன. இதனால் மக்களின் வருங்காலம் உயரும்; மேன்மையடைந்துகொண்டே போகும் என்று ஸ்மித் உறுதியாக நம்புகிறார். வருங்காலத்தில் பொருள் உற்பத்தியைப்பற்றிக் கவலையே வேண்டாம்; அது பெருகிக்கொண்டுதான் போகும் என்று கூறுகிறார். எனவே ஆடம் ஸ்மித்தின் இந்தச் சித்தாந்தம் அவரை வருங்கால வளர்ச்சியிலும், உயர்விலும், மேன்மையிலும், நம்பிக்கையும், இனிய நோக்கும் உள்ளவர் ஆவர் என்பதனைக் காட்டுகிறது. இத்தகைய உறுதியான நம்பிக்கை இருந்தும் உழைப்பாளர், நிலச்சுவான், முதலாளி, முயற்சியாளர் என்னும் சமூகத்தின் நால்வகையினர்க்கு நாட்டின் செல்வம் நியாயமான முறையில் வழங்கப்படுமா என்பதில் ஐயமே கொள்கிறார். பகிர்ந்தளித்தல் அல்லது வினியோகம் (distribution of income) என்

னும் துறையில் நால்வகைப்பட்ட மக்களிடையே பூசல்கள் உண்டாகக்கூடும் என்ற அச்சம் அவர் நூலில் சிறிதளவு தொனிக்கிறது. எனினும் வருங்காலத்தில் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துகொண்டே போகும் என்ற நம்பிக்கை ஸ்மித் மனத்தில் ஊறிக் கிடப்பதில் ஐயமில்லை. அவரை அதனாலேயே இன்ப நோக்குள்ளவர் என்று கூறுகிறோம்.

தலையிடாக் கொள்கை (laisser-faire policy)

தன்னலமும், திரட்டும் ஆர்வமும் மக்களின் பண்புகளில் இயற்கையானவை, தெய்வீகமானவை என்னும் கொள்கையை ஆதாரமாகக்கொண்டு அரசினர் கடமைகளை ஆராய்கிறார் ஆசிரியர். அரசினர் திட்டம் ஒன்றும் இன்றி, இயற்கை ஆசைகள் உந்துவதால், தம் தன்னல முயற்சியில் ஈடுபட்டு, நாட்டின் செல்வத்தைப் பெருக்குவது உறுதி. அரசாங்கம் மக்களின் ஒவ்வொருவருடைய திறமையையும் அறிந்து அதற்கு ஏற்றவாறு உற்பத்தி வேலையில் பங்கு அளிப்பது மிகக் கடினம்; அதில் அரசாங்கம் வெற்றியும் பெறாது. எனவே அரசாங்கத்தின் கடமை மக்கள் தாங்களாகவே பாடுபடுவதற்குத் தகுந்த சூழ்நிலையமைப்பது மட்டுந்தான். அதற்குமேல் ஒன்றும் செய்யவும் கூடாது. வேறு என்ன செய்தாலும் நாட்டின் பொருள் உற்பத்திக்கு இடையூரேயன்றி உதவியாகாது என்ற கொள்கையை ஸ்மித் வற்புறுத்துகிறார். எனவே, அயல்நாட்டினர் படை எடுப்பதிலிருந்து பாதுகாப்பு அளித்தல், உள்நாட்டில் அமைதி நிலை நிறுத்தல், உழைப்புக்குத் தக்க ஊதியத்தை வற்புறுத்தும் சட்ட திட்டங்கள் வகுத்தல், அவற்றை நிறைவேற்ற நீதிமன்றங்கள் அமைத்தல், ஆகியவற்றை மாத்திரம் அரசாங்கம் செய்து முடிப்பதுமட்டுமே அரசின் கடமைகள். இவ்வாறு அரசின் கடமைகளுக்கு ஒரு வரம்பு அமைத்துவிடுகிறார். இவற்றைத் தவிரப் பொருளாதாரத் துறையில் தனியார் அக்கறைகொள்ள முடியாதவற்றையும் அரசாங்கம் மேற்கொள்ளலாம் என்றும் கூறுகிறார். அத்தகைய காரியங்கள் எவை, (1) உடனடியாக, தனி மனிதன் வாழ்நாளுக்குள்ளாகப் பலன் தராத மாபெரும் நீர்ப்பாசனத் திட்டங்கள், போக்கு வரத்துச் சாலைகள் அமைத்தல், தந்தி தபால் நிலையங்கள் நிறுவதல் போன்றவை. (2) பெரிய அளவு பயனைத் தருவனவாக இருந்தாலும், காசாக மாற்ற முடியாத பள்ளிகள், பல்கலைக்கழகங்கள், மருத்துவமனைகள் போன்றவை. (3) தொழில்கள் வளரவேண்டுமளவுக்குப் பணம் வெளியிடுதல், அது சம்பந்தமான சட்டங்கள் இயற்றுதல், வங்கிகள் நிறுவிக் கண்காணித்தல் போன்ற கடமைகளை அரசாங்கம் சரிவரச் செய்துவிட்டால் போதும். இவற்றிற்கு மேல் பொருளாதாரத் துறை விவகாரங்

களில் தலையிட்டால் நாடு நன்கு வளம் பெருது என்பது அவர் கருத்து. மக்கள் தங்கள் விருப்பம் போல் நடக்கட்டும் என்று அரசு விட்டுவிடவேண்டும் என்ற தலையிடாக் கொள்கையை வலியுறுத்துகிருர்.

அரசாங்கம் எத்தனையோ விதத்தில் தவறு செய்யக்கூடும் என்றும் காட்டுகிருர். (1) அரசாங்கத்துக்கு வீண் செலவிலும் அரும் பொருட்களைப் பாழ்படுத்துவதிலும் மிகுந்த ஆசை உண்டு. எனவே, அரசாங்கம் தலையிடும் துறைகளைக் குறைப்பதுவே கடமையாகிறது. (2) தனக்கு நல்லது தனி மனிதனுக்குத் தெரியும். ஒரு வட்டாரத்துக்கோ, ஒரு சிற்றூருக்கோ வேண்டியது எது? கிடைக்கக்கூடிய மூலப்பொருள் எது? மனித பலம் எவ்வளவு? இவற்றைத் தொலைவிலிருக்கும் மத்திய அரசாங்கம் புரிந்து கொள்ள முடியாது. எனவே, அக் காரியங்களில் அது பொறுப்பெடுத்துத் தலையிடுவது தவறு. (3) அரசாங்கம் பொதுவாக ஆடம்பர செலவு செய்யும் இயல்புடையது. எனவே அரசாங்கம் பொருளாதாரத் துறையில் தலையிடாது இருப்பது அவசியம் என்னும் கொள்கையைச் சிறிதும் ஐயப்பாட்டுக்கிடமின்றி வற்புறுத்தி விளக்கியிருக்கிருர்.

### தானுகவே இயங்கும் தன்மை (Automatism)

#### சாட்டையில்லாப் பம்பரம்

ஆடம் ஸ்மித்தின் கோட்பாட்டின்படி அரசாங்கம் பொருள் துறையில் தலையிடாமல் இருந்தால் என்ன நடக்கும் என்பது அடுத்த கேள்வி. மக்கள் தங்களுடைய விருப்பம், திறமை இவற்றிற்கு ஏற்பத் தொழில்களை மேற்கொள்வர். பேனு உற்பத்தியில் 2000 பேர் ஈடுபட்டு 20 லட்சம் பேனுக்கள் வழங்குதலுக்கு (Supply) வருகின்றன என்று கொள்வோம். மக்களின் தேவை 18 லட்சம் தான் என்ருல், பேனு மார்க்கட்டில் மந்தம் ஏற்படும். பேனு விலை குறையும். 2000 பேர்களில் திறமையில் தாழ்ந்தவர் நட்டப்படுவர். நட்டம் நீடிக்கவும் செய்யும். நாளடைவில் பேனு தொழிலை விட்டு நீங்குவர். சிறிது காலத்தில் வழங்குதல் 18 லட்சம், தேவை 18 லட்சம் எனவாகும். வழங்குதல் செய்வோர் ஒருவருக்கொருவர் கடுமையாகப் போட்டியிடுவர். போட்டியினுல் வாங்குவோருக்குப் பேனு குறைந்த விலையில் கிடைக்கும். மக்கள் யாவரும் இந்தப் பயனைத் துய்ப்பர். அளவுக்கு மேற்பட்ட பேர்கள் ஓர் உற்பத்தித் துறையில் நுழைந்தால், இவ்விதப் போட்டி, திறமை குன்றியவர்களைக் களையெடுப்பதுபோல், வெளிப்படுத்தி விடுகிறது. சமூகத்தில் திறமை வாய்ந்தவர்களே எந்தத் தொழிலிலும் தொழில் புரிவர். நிற்க, பிளாஸ்டிக் சீப்பு உற்பத்தியை

எடுத்துக் கொள்வோம். உற்பத்தி 10 லட்சம், தேவை 15 லட்சம் என்றால், சீப்பின் விலை ஏறும். கடைக்காரர் வாங்குவோரின் ஆர்வத்தைப் பார்த்த மட்டிலேயே விலையை ஏற்றிவிட மாட்டார்களா ? அப்படியானால் சீப்பு வாங்குவோர் எல்லாம் ஒன்றுக்குப் பத்துக் கொடுத்துத்தான் வாங்க வேண்டுமா ? உற்பத்தியாளர் கொள்ளை இலாபம் அடித்துக் கொண்டே இருப்பார்களா? என்பன போன்ற பல கேள்விகள் எழுகின்றன. முதலில் விற்பவர்கட்கு அதிக ஊதியம் கிட்டும் என்பதை மறுக்கமுடியாது. பிற தொழில்களை விடச் சீப்பு உற்பத்தியாளர்கள் இலாபம் தட்டுகிறார்கள் என்பது சந்தையில் கண்கூடாகக் கண்ட இரகசியமாகிவிடும். மற்றத் தொழில்களைத் தொடங்கவேண்டும் என்று கருதும் முயற்சியாளரில் பலர் சீப்புத் தொழிலை மேற்கொள்வர். அதிகச் சீப்பு உற்பத்தி உண்டாகும்; தவிரவும் தொடக்கத்தில் ஒரு சீப்பில் 50 சதம் இலாபம் கண்டவர்கள், மேலும் இலாபம் தேடித் தங்கள் ஆலைகளை 24 மணி நேரமும் ஓட்டுவர். இதனாலும் உற்பத்தி மிகும். எனவே, சிறிது காலத்துக்குள் உற்பத்தி தேவையை எட்டிப் பிடித்துவிடும் ; மிஞ்சி விடவும் கூடும். அந் நிலையில் சீப்பின் விலை இறங்கும். இத்தகைய போட்டியினால் அடக்க விலைக்குமேல் நியாமான இலாபம் கிட்டும். சந்தையில் விற்பவர், வாங்குவோர் இரு தரப்பினரிடையே முழுப்போட்டிச் சக்திகளால் மிதமிஞ்சிய இலாபம், பற்றாக்குறை போன்ற கொடுமைகள் மறையும். இந்தச் சந்தைச் சக்திகளை(market forces) யதேச்சையாக விட்டால்தான் இந்த நல்ல முடிவைக் காணலாம். அரசாங்கம் தலையிட்டால் அதற்கு இவற்றைப்பற்றித் தெளிவான, பூரணமான அறிவு இல்லாக் குறையால், தப்பும் தவறுமாக முடியும்.

மேற் கூறியவாறு உழைப்பாளர் கூலியும் மேலும் கீழுமாக சப்ளை – தேவை ஏற்றத்தாழ்வுக் கேற்றபடி சிறிது காலம் ஊசலாடிவிட்டுக் கடைசியில் நியாயமான விகிதத்தில் போய் நிற்கும் என்று ஸ்மித் கூறுகிறார். தச்சர்களுக்குச் சென்னை மாநகரில் கிராக்கி அதிகம். தேவைக்கு மிகவும் குறைந்த நபர்களே வசிக்கின்றனர். கட்டடவேலை வேகமாக வளர்ந்து விட்டது என்றால், தச்சர்கள் செங்கற்பட்டு, காஞ்சிபுரம் என்றெல்லாம் அண்மையிலிருந்தும் தொலைவிலிருந்தும் வந்து கூடி விடுவார்கள். கூலி நிதானமாகிவிடும். எஞ்சினீயர்கள், மருத்துவர்கள் தேவைக்குக் குறைவாக இருந்து, பிறர் பொறாமையைக் கிளறக் கூடிய ஊதியங்கள் பெற்று வந்தால், அவர்கள் ஊதியங்கள், தச்சர்கள் கூலிபோல், விரைவில் குறையாது. ஆனால், காலாகாலத்தில் சப்ளை தேவை சமன் எய்தும் ; ஊதியமும் குறையத்தான் செய்யும் என்பது ஸ்மித்தின் கருத்து.

இனி மூலதனம் எவ்வாறு பயன்படுகிறது என்று அவர் வழியே கவனிப்போம். மூலதனத்தின் உபயோகத்துக்கு ஈடாகக் கிடைப்பதுதான் வட்டி. சிமென்ட் தொழிலில் மூலதனத் துக்கு 28 சதவீதமும், பிற தொழில்களில் 11 சதவீதமும் வட்டி கிடைக்கிறதென்று வைத்துக்கொள்வோம். புது மூலதனம் சிமென்ட் ஆலைத் தொழிலை நோக்கிப் பள்ளத்தைப் பார்த்துப் போகும் வெள்ளம்போல் பாயும். சிமென்ட் உற்பத்தி பெருகும். இலாபம் குறையும். வட்டியும் அதோடு சேர்ந்து குறைந்துவிடும் வரை இவ்வாறு மூலதனம் பாயும். சணல் ஆலைத் தொழிலில் மூலதனம் 5 சதவீதமே வட்டி தருவதானால், மேற்கொண்டு அத் தொழிலுக்கு மூலதனம் செல்லாது. இருக்கிற மூலதனத்தில் ஒரு பகுதி கரைந்துபோக 5 அல்லது 10 ஆண்டுகள் ஆகலாம். அந்தக் கால அளவுக்குப் பின் சணல் தொழிலில் மிகப் பழைய மில்கள் மூடப்பட்டுவிடும். புது மில்கள் நிறுவப்படா. சணல் சரக்குகள் குறைவாகும்; இலாபம் உயரும். ஆலைகள் கொடுக்கும் வட்டியும் 5 சதவீதத்திலிருந்து உயரும்.

நிலத்திற்கு வழங்கப்படும் பாட்டமும் இந்த மாதிரித் தன்மை வாய்ந்ததே. நெல்லைவிடக் கரும்பு இலாபகரமானால், கரும்பு சாகுபடியாகும் நிலங்களுக்குப் பாட்டம் உயரும். ஆனால், கூடிய சீக்கிரம், மறு ஆண்டிலேயே, நிலச்சுவான்கள் அதிகமான நிலத்தை நெற்பயிரிலிருந்து கரும்புப் பயிருக்கு மாற்றிவிடு வார்கள். கரும்புப் பயிர் பெருகினால் விலை இறங்கிவிடும்; பாட்டமும் குறைந்துவிடும். நெற்பயிரின் பாட்டம் அளவுக்கு இறங்கும் வரை மேற்கூறியபடி கரும்புப் பயிரின் நிலம் விரி வடையும்.

மேற்கூறியவாறு தேவை, சப்ளை என்று மார்க்கட்டில் தோன்றிப் போராடும் சக்திகள் பொருளாதாரத் துறையில் ஏற்படும் சப்ளை - தேவைகளின் ஏற்றத்தாழ்வைத் தாமாகவே சமன் செய்யக்கூடிய ஆற்றல் பெற்றவை. எந்தப் பொருள் பயன் துய்ப்போர் விரும்புமளவுக்கு உற்பத்தியாகவில்லையோ, அதிலும் பயன் துய்ப்போர் எந்தப் பொருளை இன்றியமையாதது, என்ன விலை கொடுத்தும் கொள்வோம் என்ற மனப்பான்மையி லிருக்கிறார்களோ, அந்தப் பொருளின் விலை, பற்றாக்குறைக்கு ஏற்றவாறு, நஞ்சுபோல் ஏறும். அந்த உயர்ந்த விலையே உற் பத்தியைப் பெருக்க ஏதுவாகி, நஞ்சினை எடுக்கும் மாற்றாகவும் அமைகிறது. இந்த மாதிரியான தேவை, சப்ளை சக்திகளின் போராட்டத்தினால் பொருளாதார உலகம் சாட்டையில்லாப் பம்பரம்போல் தானாகவே இயங்கிக் குறைகளை நிறைவு செய்யும் தன்மை வாய்ந்தது என்று ஸ்மித் விளக்குகிறார்.

**மூலதனம் திரட்டும் ஆர்வம் நலிந்துபோகுமா ?**

வருங்காலத்தைப்பற்றி இன்னுமொரு கேள்வியை ஆடம் ஸ்மித் ஆராய்கிறார். மூலதனம் திரட்டும் ஆர்வம் இயற்கையானது, தெய்வீகமானது என்றெல்லாம் கூறப்பட்டதே. இந்த ஆர்வம் தடைபடாது செயலாற்ற முனைந்தால், எதிர்காலத்தில் அதன் முடிவு என்ன என்பதே அந்தக் கேள்வி. மூலதனம் பொருளாக்கும் சாதனம் ஆகும்பொழுது, முதல் (Capital) உருவாகிறது. உதாரணமாக, இயந்திரம், ஆலை, தேயிலைத் தோட்டம். இவை உருவாக உருவாக, இயந்திரங்களை ஓட்டவும், தேயிலைத் தோட்டங்களிலும் ஆலைகளிலும் உழைக்கவும் உழைப்பாளர் தேவை மிகுதியாகும். ஒவ்வோர் ஆலையும் உழைப்பாளர்களைக் கூவியழைக்கும் கருவியாகும் என்றுகூடச் சொல்லலாம். உழைப்பாளர் எண்ணிக்கை குறைவாயிருந்தால் அவர்கள் அதிகக் கூலி கேட்பார்கள் ; பெறவும் செய்வார்கள். எந்தத் தொழிலிலும் உற்பத்தியால் திரளும் ஊதியத்தை இலாபமாக முதலாளியும் முயற்சியாளரும் (entrepreneur), கூலியாக உழைப்பாளரும் (labourers) பங்கிட்டுக்கொள்கிறார்கள். ஒருவர் பங்கு கூடினால் மற்றவர் பங்கு குறையும். மேற்கூறிய நிலைமை ஏற்பட்டால், உழைப்பாளர் பங்கு கூடும். முயற்சியாளர், முதலாளிகள் இருவர் பங்கும் குறையும். மூலதனம் உண்டாக்கும் ஆர்வம் இயற்கையானதே ஆயினும், அது நல்கும் வட்டி விகிதம் ஓமக் குண்டத் தீயை வளர்க்கும் நெய் போன்றது. ஊற்றும் நெய் குறைந்தால், நின்றுவிட்டால் தீ அணைந்துவிடும். அதுபோலவே வட்டி குறைந்துவிட்டால் மூலதனம் திரட்டும் ஆர்வம் குன்றி விடும். அப்படியானால் வருங்காலத்தில் ஒரு சமயத்தில் மூலதனம் திரட்டும் ஆர்வம் செத்துவிடும் என்றாகிறது. அப்படியாகிவிடாமல் தடுப்பது இன்னொரு இயற்கைப் பண்பு என்று காட்டுகிறார் ஆடம் ஸ்மித். அதுவே இன வளர்ச்சி உணர்ச்சி (instinct of procreation). இதனால் ஜனத்தொகை வேகமாக வளர்கிறது. சாதாரணமாக உழைப்பாளர்களுக்குக் கிடைக்கும் கூலி அரை வயிறு வளர்க்கும் கூலியே ஆம். கணவனும் மனைவியும் பிழைக்கவும், இரண்டு குழந்தைகளைப் பெற்று வளர்க்கவும்தான் போதுமானது. அதனால் இதனைப் பிழைப்புக் கூலி (subsistence wage) எனக் கூறுவதுண்டு. இரண்டு குழந்தைகளுக்கு மேற்பட்டால், உணவு பராமரிப்புக் குறையும் ; ஆதலால் சில குழந்தைகள் நோய்வாய்ப்பட்டு மடியும். ஆனால், பிழைப்புக்கான கூலியைவிட அதிகமான வருமானம் உழைப்பாளர்களுக்குக் கிட்டுமானால், அவர்கள் இரண்டுக்கு மேற்பட்ட குழந்தைகளைப் பெற்றுக் காப்பாற்றவும் செய்வர். அதனால் ஜனத்தொகை அதிகமாகும். அதிகத் தொழிலாளர் வேலையைத் தேடித்

திரிவர். ஆதியில் நாம் கண்ட உழைப்பாளர் குறைவு தீர்ந்து விடும். உயர்ந்திருந்த கூலியும் பிழைப்புக் கூலி மட்டத்திற்குத் திரும்பிவிடும். கூலி குறைந்தால் முதலாளிகளின் பங்காகிய இலாபம் உயரும். தனம் திரட்டுவதில் மங்கிக்கிடந்த ஆர்வம் ஒளிவிடத் தொடங்கும். இவ்வாறு மூலதனம் பெருகுவதால் அதன் வட்டி குறைவதும், மக்கள் தொகை தேவைக்குக் கீழ்ப் பட்டால் கூலி ஏறுவதும் மக்கள் தொகை அதிகப்பட்டால் கூலி குறைவதும் மாறி மாறி நடக்கும். மூலதனம் திரட்டுவதில் ஆர்வம் சில சமயங்களில் மழுங்கினாலும், ஒருக்காலும் அழியாது. மூலதனம் திரட்டுவது தடைபடாது நடந்தால், உற்பத்திப் பெருக்கு, வெள்ளப் பெருக்குப்போல் அதிகரிக்கும். அதனால் மக்கள் வாழ்க்கை நிலை உயரும் என்ற நன்னம்பிக்கையையும் இனிய நோக்கையும் கைவிடாமல் ஸ்மித் விளக்கியுள்ளார்.

**மக்கள் வாழ்க்கைத்தரம் உயருமா?**

மக்கள் தொகை மிகவும் வளர்ந்து, அவர்களுக்குள் ஏற்படும் கடும் போட்டியினால் கூலி ‘பிழைப்புக் கூலி’ மட்டத்துக்கு இறங்கிவிடுமானால், உயர்வு ஏது, முன்னேற்றம் ஏது? என்று கேட்கலாம். இதற்கும் ஆடம் ஸ்மித் விடை பகர்கிறார். தொழிலாளர் கூலிக்கு ஓர் இயற்கைப் பண்பு உண்டு. ஒருமுறை கூலி ஏறிவிட்டால், பின்னால் இறங்குமுக காலத்தில் இறங்குவது உண்மையானாலும், பழைய மட்டத்துக்கு இறங்காது. அதிக மாக உயர்ந்த கூலியில் ஒரு பகுதி முன்னிருந்த கூலியுடன் ஒட்டிக்கொள்ளும் (tendency of wage increments to stick). எனவே, புதிய பிழைப்புக் கூலி சற்றேனும் பழைய கூலியைவிட அதிகமாய்தானிருக்கும். கூலி ரூ. 1-50-லிருந்து உயர்ந்த மட்டம் ரூ. 3-00 ஆகியிருந்தால், புதிய பிழைப்புக் கூலி ரூ. 1-75 அல்லது ரூ. 2-00 ஆக நிற்கும்.[1] ரூ. 1-50 ஆக ஒருக்காலும் குறை யாது. இந்தக் காரணத்தால் கூலியும் காலப்போக்கில் உயரும். மூலதனம் திரட்டுவதும் குறையாது. இதன் இடையே விஞ்ஞானி கள் புதிய இயந்திரங்கள், கருவிகள், முறைகள், வழிகள் முதலி யன கண்டுபிடித்துக்கொண்டே இருப்பார்கள். அவற்றால் பொருளாக்கச் செலவு கணிசமாகக் குறையும். அதனால் பணக் கூலி மெள்ள மெள்ள ஏறினாலும், பொருள் வளத்தினாலும் மலிவி னாலும் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை சிறிது கூடின வேகத்

1 கூலி ஒட்டும் என்பதைத் தவிர, தொழிலாளர் சங்கம் வேறு இருக்குமே? அது கூலியைக் குறையவிடாமல் காப்பாற்றவே தோன்றிய நவீன சாதன மன்றோ? இந்தக் காரணத்தை ஸ்மித் குறிப்பிடவில்லை. இவ்விரு காரணங்க ளால் ஆதியில் கொடுக்கப்பட்ட பிழைப்புக் கூலி மட்டத்துக்கு ஒருபொழுதும் இறங்கிவிடாது.

திலேயே உயரும். இந்த வாதத்தை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். எனவே, ஆடம் ஸ்மித் தன் நுண் மாண் நுழை புலத்தால் உலகம் முன்னேறுமே தவிர பின்வாங்காது என்பதைத் தெளிவாகத் தருக்க முறையில் நிலைநாட்டிவிட்டார் என்பதை மறுக்கமுடியாது. அவருடைய வருங்காலத்தைப் பற்றிய நன்னம்பிக்கை இந்தக் காரண காரியங்களால் சுடர்விட்டு நந்தா விளக்காகக் காட்சியளிக்கிறது. எனவே, ஸ்மித் ஒரு நன்னம்பிக்கை வாதி (optimist) அல்லது வருங்காலத்தைப் பற்றி இனிய நோக்குடையவர் எனலாம்.

ஆடம் ஸ்மித் விளக்கும் எல்லாக் கொள்கைகளும் ஒரே ஒரு முடிவுக்கே வந்து சேர்கின்றன. தன்னலம், மூலதனம் திரட்டும் ஆர்வம், பண்ட மாற்றத்தில் ஈடுபாடு, சந்தைச் சக்திகளாகிய தேவை, வழங்குதல் என்றவற்றின் போட்டியின் விளைவுகள், அவற்றால் பயன் துய்ப்பவரின் தேவைகளைக் குறைந்த செலவில் திறன்மிக்க முயற்சியாளர் ஆக்கித்தருவதால் பூர்த்தியாதல், முதலாளி, தொழிலாளரின் போட்டியும், காலாகாலத்தில் இரு தரத்தினருக்கும் பெரும் பயனளிக்கவல்லதென்னும் வாதம்— இவையெல்லாம் அரசினர் பொருளாதாரத் துறையில் தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடிக்கவேண்டுமென்ற முடிவையே வலியுறுத்தும் ஒப்பற்ற சித்தாந்தமாக மலர்கின்றன. 'நாடுகளின் செல்வம்' என்னும் தனிப்பெரும் நூலைக் கற்றவர், அரச தந்திரிகள், அதிகார வர்க்கத் தலைவர்கள், தொழிலதிபர், வணிகப் பெருமக்கள் யாவரும் இந்தத் தலையிடாக் கொள்கையை உச்சிமேற்கொண்டு போற்றினர்.

### அமைச்சர்களுக்கு ஆசிரியர்

'நாடுகளின் செல்வம்' பதிப்பாகிச் சில ஆண்டுகளுக்குப் பின், ஆடம் ஸ்மித்துக்கு 62 வயது இருக்கும். அப்போது உலகப் புகழ்பெற்ற பிரிட்டிஷ் பிரதம மந்திரி பிட் (Pitt, the Younger) டினிடமிருந்து வந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு அமைச்சரவை கூடியிருக்கும் அறைக்குள் அவர் காலெடுத்து வைத்தார். அவரைக் கண்டதும் பிரதமர் உள்பட எல்லா அமைச்சர்களும் எழுந்து நின்றனர். ஸ்மித் அவர்களெல்லோரையும் பரிவுடன் உட்காரச்சொன்னார். அதற்கு பிட் 'தாங்கள் உட்காருவது வரை நாங்கள் எல்லோரும் நிற்கத்தான் செய்வோம். ஏனெனில் நாங்கள் அனைவரும் தங்கள் மாணாக்கர்களே' என்று கூறினார். இந்த அளவுக்குக் குன்றின்மேலிட்ட விளக்குபோல் ஒளி வீசிய பொருளாதார அறிஞர் ஆடம் ஸ்மித். அவரைப்போல் புகழ்பெற்ற பொருளாதார அறிஞர் அவருக்கு முன்னும் இருந்ததில்லை, பின்னும் இருந்ததில்லை

இனி, அவர் பொருளாதார நூல் வளர்ச்சிக்கு அவர் விதைத்த விதைகள் யாவை என்பதை உணரவேண்டும். சில விதைகள் களைந்தெறியவேண்டிய பொக்கு விதைகள். சில ஆலம் விதை போலப் பிற்காலப் பொருளாதார அறிஞர்களின் நுண்ணறிவுக்குத் தகுந்தபடி பல விழுதுகளை விட்டுப் பெரிய கனிதரும் மரங்களாக வளர்ந்தன.

**பயன்தரும் உழைப்பும், பயன்தரா உழைப்பும்**

முதல் பொக்குவிதை பயன்தரும் உழைப்பு, பயன்தரா உழைப்பு என்ற பாகுபாடே ஆம். இது இயற்கைவாதிகளின் கூட்டுறவால் ஏற்பட்ட ஒட்டுவாரொட்டி நோய். உழவனின் உழைப்பு விளைச்சலாக வெளியாகிறது. குயவனின் உழைப்பு மண்பாண்டமாக உருவெடுக்கிறது. ஆனால் வீட்டில் குற்றேவல் செய்யும் பணியாளின் உழைப்பு அவ்வாறு ஓருருவும் கொள்வதில்லை. ஆதலின், அவன் பயன்தரா உழைப்பாளி. ‘ஒருவன் ஆயிரம் கைத்தொழிலாளர்களை வேலை வாங்கினால் பெரிய பணக்காரனாவான், அவனே ஆயிரம் பணியாட்களை வைத்துக்கொண்டால் வறியனாவான்’ என்பது ஸ்மித்தின் கூற்று. பயன்தரும் உழைப்புக்கு இரு பண்புகள் வகுத்தார். (1) சடப் பொருளின் உற்பத்திகாணும் தன்மை. (உ-ம்) தச்சன், குயவன், சமையல் காரன் முதலியோரின் உழைப்பு. (2) உழைப்பு நிலையான மதிப்புத் தரக்கூடிய பொருளாகும் தன்மை. பயன்தரா உழைப்புச் சடப் பொருளை உண்டாக்காது. உதாரணமாகப் பணியாள் காலை அமுக்குதல். மேலும் அந்தப் பணியினால் விளையும் பயன் பின்னால் விற்கக்கூடிய பொருளாகவும் ஆகாது. அந்த உழைப்புப் பணிபுரியும்போதே அழிந்துபோவது. இன்னும் ஓர் எடுத்துக் காட்டு. மருத்துவர் கை பார்த்து மருந்து கொடுக்கிறார். கை பார்த்தல் என்ற அதனைப் பின்னால் தொட்டுப் பார்க்கவும் (material sense of touch) முடியாது. பிறகு விற்கவும் முடியாது. ஆகையால் மருத்துவம் பயன்தரா உழைப்பு. இப்படி வாதாடிச் சமூகத்தில் யார் யார் பயன்தரா உழைப்பாளர் என்று வறையறுத்து ஒரு பட்டியலே தொகுக்கிறார். அந்தச் சுவை மிகுந்த பகுதி வருமாறு: ‘மிகவும் மதிப்புக்குரியவர் உழைப்பும், இழிதொழில் புரியும் பணியாளர்கள் உழைப்பைப் போலப் பயனற்றவை. ஏனெனில் அவர்கள் உழைப்பு உருவெடுக்காது; அதை விற்று முதல் செய்யவும் முடியாது. முடி சூடிய மன்னர், நீதிபதிகள், படைவீரர், நாவாய் வீரர் யாவரும் பயன்தரா உழைப்பாளர்களே. இந்தக் குழாத்தில் பாதிரிமாரும், கூத்தாடிகளும், வக்கீல்களும், நாடகக் கலைஞரும், இலக்கிய மேதைகளும், டப்பாப் பாடகர்களும், சில உயர்ந்த நிலையினரும், சில தாழ்ந்த

கோமாளித் தொழிலாளர்களும் ஒன்றாய் நிற்பது ஒரு வியப்பே ஆம்.' இந்தப் பாகுபாட்டைப் பிற்காலப் பொருளாதாரம் ஒப்புக் கொள்ளவில்லை என்பதை முந்திய அதிகாரம் ஒன்றிலேயே குறிப்பிட்டு விளக்கியிருக்கிறோம்.

### பண்டங்களின் மதிப்பு–இரண்டுபட்ட கொள்கை

சர்க்கரையின் மதிப்பு என்னவென்று ஒரு பள்ளிச் சிறுமியைக் கேட்டால் அது ஒரு புளியம்பழத்தை விட, ஒரு மாங்காயை விட மேலானது. சாக்லெட்டை விடக் குறைந்தது என்பாள். ஒரு குடும்பத் தலைவியைக் கேட்பின், ஒரு கிலோ ரூ. 1-80 என்பாள். இதில் சிறுமி கருத்தில் கொண்டது வேறு, தலைவி கொண்ட கருத்து வேறு. சிறுமி எவ்வளவு சுவையானது, எவ்வளவு இன்பம் அளிக்க வல்லது என்ற கருத்தின் ஆதாரத்தில் மதிப்பை எடை போடுகிறாள். இதை ஆடம் ஸ்மித் பயன் வகை மதிப்பு (value-in-use) என்று கூறுகிறார். மற்றதைப் பரிவர்த்தனை மதிப்பு (value in exchange) என்று கூறுகிறார். ரூ. 1-80 என்றால், அந்த மதிப்புள்ள அரிசி, புளி, நெய்க்குச் சமமான மதிப்பு ஒரு கிலோ சர்க்கரைக்கு என்பது பொருள். தனக்கு வேண்டாமென்றால், அதைக் கொடுத்துப் பிற பொருள்களாக மாற்றிக் கொள்ளலாம்.

### மதிப்பு முரண்பாடு (Paradox of value)

இவ்விதம் மதிப்பினைப் பயன் வகை மதிப்பு, பரிவர்த்தனை மதிப்பு என்று இருவகைப் படுத்தியது ஓர் இக்கட்டான நிலையில் ஸ்மித்தை நிறுத்தியது. குடிதண்ணீர் இல்லாவிட்டால் மனிதன் வாழ முடியாது. ஒரு குவளைத் தண்ணீர், தாகத்தால் சோர்ந்திருக்கும் மனிதனுக்கு, உயிரே போன்ற அளவிடமுடியாத பயனை அளிக்க வல்லது. ஆனால், ஒரு குவளைத் தண்ணீருக்கு விலை என்ன? விலையே இல்லை. அதைக்கொண்டு என்ன பொருள்களை மாற்றிக்கொள்ளலாம்? ஒன்றுமில்லை. ஆனால் ஒரு வைரக்கல்லை எடுத்துக்கொள்வோம். அது காதில், மூக்கில், விரலில் இல்லாவிட்டால் உயிருக்குக் கேடு ஒன்றும் வந்துவிடாது. அதை அணிந்திருப்பவனுக்குப் பெரிய பயன் எதுவுமில்லை. எனினும். அதைக் கொடுத்தால் 100 லிட்டர் அரிசி அல்லது 70 கிலோ சர்க்கரை அல்லது இரண்டு மேஜை வாங்கமுடியும். 'இதென்ன! பயன்மிக்கக் குடிதண்ணீருக்கு இந்த மதிப்பு இல்லை; உண்மையாகப் பயனில்லாத வைரக்கல்லுக்கு இவ்வளவு பரிவர்த்தனை மதிப்பு எங்கேயிருந்து வந்தது?' என்று திகைத்தார் ஸ்மித். இந்தத் திகைப்பைத்தான் ஸ்மித்தின் 'மதிப்பு முரண்பாடு' என்று பின்னால் வந்தவர் கூறுகின்றனர்.

ஒரு பொருளின் மதிப்பு அதன் வழங்கலைப் பொறுத்தது. தேவைக்கு மீறிய அளவு கிடைக்கும் எப் பொருளுக் உயிரைக்கும் காப்பாற்றவும், வளர்க்கவும் அது எவ்வளவு பயனுடைத்தாயினும்-பரிவர்த்தனை மதிப்பு சூன்யமாகிவிடும் என்பதைப் பொருளாதாரத் தொடக்க நிலை மாணவனும் இன்று அறிவான். வைரக் கற்கள் கடற்கரையில் அகப்படும் கிளிஞ்சல்போல ஏராளமாகக் கிடைத்தால், அதன் பண்டமாற்று மதிப்பும் கிளிஞ்சலுக்குச் சமமாகிவிடும். தேவைக் குறைவான, கிடைப்பதற்கரிதான, அரும்பொருள்களுக்குப் பரிவர்த்தனை மதிப்பு அதிகம் என்பது பிற்கால அறிஞர்கள் கண்டுபிடித்த உண்மை. பயன் மட்டும் அளித்தால் காணாது. கிடைப்பதற்கு அருமையாகவும் (Scarcity) இருந்தால்தான் பரிவர்த்தனை மதிப்பு ஏற்படும். பெரிய மேதையாயினும், ஆடம் ஸ்மித் ' இறுதி நிலைப் பயன் ' (marginal utility) என்னும் கருத்தை அறிந்தாரில்லை. எந்தப் பிரச்சினையையும் துருவித் துழாவி ஆழ்ந்த கருத்தை வெளிக்கொண்டுவரும் இப் பெரியாருக்குத் தண்ணீரின் மொத்தப் பயன் அதிகமானாலும், மூன்று குவளைத் தண்ணீர் குடித்தவனுக்கு நான்காவது குவளை ஒரு பயனும் அளிக்காது என்ற உண்மை புலப்படாது போயிற்று. ஒரு பண்டத்தின் மதிப்பு இறுதி நிலைப் பயனைத்தான் பொறுத்திருக்கும் என்று கண்டுபிடித்தாரில்லை.

### மதிப்பு நிர்ணயம் – மூன்று கொள்கைகள்

(i) உழைப்பே மதிப்பின் அளவுகோல் (Labour is the measuring rod of value)

பண்டமாற்று மதிப்பை எவ்வாறு அளப்பது என்ற கேள்விக்கு அவர் முதலில் அளிக்கும் விடை ஒன்று. ஏர், மீன் பிடிக்கும் வலை, இயந்திரம் போன்ற பொருளாககச் சாதனங்களே கண்டுபிடிக்கப்படாத பண்டைக் காலத்தில், மக்கள் காட்டில் வேட்டையாடி வயிறு வளர்த்தனர். ஒருவனுக்கு ஒரு மானைப் பிடிக்க 8 மணி நேரம் ஆகிறது. ஆனால் அதே நேரத்தில் 16 முயல்களைப் பிடித்துவிடுவான் என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது அவன் ஒரு மானுக்கு 16 முயல்கள் வாங்கவும் கொடுக்கவும் சம்மதிப்பான். ஏனென்றால் ஒரு பொருளின் மதிப்பு அதற்குச் செலவு செய்யும் உழைப்பு நேரத்தைப் பொறுத்திருக்கிறது. (இந்தக் கட்டத்தில் உழைப்புதான் செல்வத்தின் தாய் என்பதை நினைவுறுத்திக் கொள்ளவேண்டும்). ஒரு மேசை செய்ய 10 மணி நேரம், நாற்காலி செய்ய 5 மணி நேரம் ஆகும் என்றால் அவற்றின் பண்டமாற்று விகிதத்தை–மதிப்பை–நிர்ணயித்து விடலாம். ஒவ்வொரு மனிதனும் ஒரு பொருளை வாங்கும்

போது, இதை வாங்காமல் தானே செய்வதானால், எத்தனை மணி நேரம் உழைக்கவேண்டும் என்று கணக்கிட்டு, அதன்படி மதிப்பீடு செய்கிறான். எவ்வளவு தூரம் தன் உழைப்புக் குறையும் என்பதுதான் கணக்கு. ஒரு பேதை 50 மணி நேரம் உழைத்து 50 கத்தரிக்காய் விளைவித்திருப்பான். அதற்காக ஒரு காய்கறிப் பயிர் நிபுணர் தனக்கும் 50 மணி நேரம் உழைக்கவேண்டும் எனக் கணக்குப் போட்டு விலையை நிர்ணயிக்கமாட்டார். அவருக்கு 15 மணி நேர உழைப்பே போதுமென்றால், அந்த 15 மணி நேர உழைப்பு மிச்சமாகும். அதன் மதிப்பும் அவ்வளவே என்று முடிவு செய்வார். இந்த மாதிரி வாதித்து ஒரு பண்டத்தின் மதிப்பு, அதை வாங்குபவனுக்கு எவ்வளவு உழைப்பை மிச்சப் படுத்துமோ, அதைப் பொறுத்தது என்கிறார் ஆடம் ஸ்மித்.

எந்த மனிதனும் தனக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் செய்யும் திறமையோ, பழக்கமோ வாய்ந்தவனாக இருக்க முடியாது. எனவே தனது திறமையை அளவுகோலாக்கி எல்லாப் பண்டங்களின் மதிப்புகளையும் அளக்க முடியாது. 'ஒரு மணி நேர வேலை' என்பதை ஒரு மீட்டர், ஒரு முழம் என்பதுபோல அளவு கருவியாகக் கொள்ளுதல் வேண்டும். ஆனால் இதில் ஓர் இடர்ப்பாடு. ஒரு மணி நேர வேலை என்றால் அதில் திறம் படைத்தவனுக்கும், திறமற்றவனுக்கும் ஒரே மாதிரி தானா? இவ் விருவகையினரின் உழைப்பையும் எவ்வாறு பொது வாக அளவிடுவது? மீட்டர் என்றால் யாவர்க்கும் ஒரே அளவைக் காட்டும். அப்படியல்லவே ஒரு மணி நேரம் வேலை என்பது. ஒரே மனிதனை எடுத்துக்கொண்டாலும், அவன் சுறுசுறுப்பாகச் செய்யும் ஒரு மணி நேர உழைப்புக்கும், சோம்பிச் செய்யும் ஒரு மணி நேர உழைப்புக்கும் மிகுதியான வேற்றுமை இருக்குமே. ஒரு மணி நேர வேலையென்னும் அளவுகோல் பொதுவானதாக இருக்காது என்னும் குறைபாட்டை ஸ்மித் உணர்ந்தார். ஆனால் அதை நீக்க வழி கண்டாரில்லை.

### (ii) உற்பத்தியின் அடக்கச் செலவே மதிப்பின் அளவுகோல் (Value is measured by cost of production)

மக்கள் காட்டில் வாழ்ந்த காலம் மறைந்துவிட்டது. தற் காலத்தில் பொருளாக்குதலுக்கு, உழைப்பு முக்கியமாயினும் இயந்திரங்களும், கருவிகளும் விதம் விதமாகப் பயன்படுகின் றன; உற்பத்தி வேகத்தை மிகுதிப்படுத்துகின்றன. மனிதன் காட்டுமிராண்டியாக இருந்த காலத்தில் அவனுக்கு வேண்டிய அளவுக்குமேல் நிலம் இருந்தது. ஆனால் தற்காலத்தில் நிலம் ஒரு சிறுபான்மையினரிடம் அவர்களது தனிச் சொத்தாகச்

சிக்கிக் கிடக்கிறது. வேறொருவன் நிலத்தை உபயோகிப்பதற்கு நிலத்துக்குரியவன் பாட்டம் கேட்கிறான். அவன் தனது நிலத்தில் விளைவிக்கும் பயிர்கள் நல்ல விலையில் விற்பது தெரிந்தால், தனக்குச் சேரவேண்டிய பாட்டத்தை உயர்த்துவான். அதைப் போலவே முதலாளி தன் முதலுக்கு அதிக வட்டி கேட்பான். நிலம், மூலதனம், உழைப்பு மூன்றுக்குமே விலை கொடுத்து வாங்கவேண்டிய நிலை தற்காலத்தில் ஏற்பட்டிருக்கிறது. அவற்றுக்கெல்லாம் ஆகும் செலவே அடக்கச் செலவு. பண்டங்களின் மதிப்பு அடக்கச் செலவுக்கு—அஃதாவது உழைப்பின் கூலி, நிலத்தின் பாட்டம், முதலின் வட்டி எல்லாம் சேர்ந்த தொகைக்குச் சமமாயிருக்கும் என்பது மதிப்பைப் பற்றிய கேள்விக்கு ஆடம் ஸ்மித் தரும் இரண்டாவது விடை.

### வட்டியா, இலாபமா ?

அடக்கச் செலவுக்குமேல் கொள்ளை இலாபம் கொள்ளும் வகையில் உற்பத்தியாளர் விற்கமுடியுமா ? முடியுமானால் விலையை அல்லது மதிப்பை அடக்க விலை நிர்ணயிப்பது எப்படி என்று கேட்கலாம். உற்பத்தியாளர் மிகுதியான இலாபம் அடிப்பது போட்டி நிறைந்த மார்க்கெட்டில் முடியாதென்பது நாம் கண்டறிந்த உண்மை. குறுகிய காலத்தில் முடிந்தாலும் நீண்ட காலத்தில் இலாபம் நியாயமான வரம்புக்குட்பட்டுத்தான் இருக்கும். ஆடம் ஸ்மித் கூறும் அடக்கச் செலவு இனங்களில் இலாபம் என்று ஒரு தனி இனம் இல்லை. இதற்குக் காரணம் அவர் காலத்தில் மூலதனம் படைத்தவர்களே (capitalists) முயற்சியாளர்களாகத் (entrepreneurs) தொழிலை நிர்வகித்தனர். இங்கிலாந்தில் முதலாளியும் தொழிலதிபரும் ஒருவராகவே திகழ்ந்தனர். எனவே முயற்சியாளர் அல்லது தொழிலதிபர் என்னும் சாதி தோன்றவில்லை. அவர்களுக்குரிய இலாபமும் தனியாகக் குறிப்பிடப்படவுமில்லை. அமெரிக்கப் பொருளாதார நூல்களில்தான் முயற்சியாளரையும் அவர்கள் சம்பாதிக்கும் இலாபத்தையும் பற்றிய விளக்கம் முதன்முதலாக அரங்கேறியது. அமெரிக்கா விரைவாகப் பொருளாதார முன்னேற்றத்தை அடைந்து வந்த 19ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட பொருளாதார நூல்களில் உலகப் புகழ்பெற்ற வாண்டர்பில்ட் (Vanderbilt), பீயர்பாயின்ட் மார்கன் (Pierpoint Morgan), ஆண்டுரு கார்னகி (Andrew Carnegie) போன்ற தொழில் மன்னர்களை மறக்கவோ, புறக்கணிக்கவோ எப்படி முடியும் ? அமெரிக்கப் பொருளாதார ஆசிரியர் வாக்கர் (Walker) தான் இலாபத்தைத் தனியாகவும் வட்டியைத் தனியாகவும் பிரித்துக் காட்டினவர்.

**மயில் ராவணன் கதை**

கடைசியாக மதிப்பு அடக்கச் செலவால் நிர்ணயிக்கப்படுகிறது என்னும் கொள்கையைச் சிறிது ஊன்றிப் பார்ப்போம். உதாரணமாக ஒரு நாற்காலியின் மதிப்பு = உழைப்பின் மதிப்பு + மரத்தின் மதிப்பு + தச்சுக் கருவிகளின் உபயோகத்தின் மதிப்பு என்று ஒரு சூத்திரமாக்கலாம். நாற்காலியின் மதிப்பைக் கண்டு பிடிக்கும் முயற்சியில், நமக்கு உழைப்பு, மரம், தச்சுக் கருவிகள் ஆகியவற்றின் மூன்று வேறு மதிப்புகளைத் தெரிய வேண்டிய தாகிறது. ஒரு கையை வெட்டினால் பல கைகள் முளைக்குமென இதிகாசக் கதை சொல்கிறது. அதுபோல் அடக்கச் செலவு என்ற சிக்கலுக்கு விடை காணப் போனால், இவ்வாறு மூன்று சிக்கல்கள் கிளைத்தெழுந்து நம்மை எதிர்க்கப் பார்க்கிறோம். இதை முற்றும் உணர்ந்த ஆல்பிரட் மார்ஷல் கூறுகிறார். மதிப்பு என்னும் கருத்தையும் அதை நிர்ணயிக்கும் சக்திகளையும் எளிதாக விளக்கிவிட முடியாது. ஆடம் ஸ்மித் எளிய விளக்கம் தருவதற்கு முயன்றார். அதில் குறைபாடுகள் இருப்பதும் இயற்கை தான்; எதிர்பார்க்க வேண்டியதும்தான்.

**(iii) வழங்கல், தேவை சக்திகள் (Forces of supply and demand) மார்க்கட் விலை, நேர்மை விலை**

பண்டங்களின் விலை அடக்கச் செலவை யொட்டியிருக்கும் என்றும் ஆடம் ஸ்மித் கூறினாரல்லவா? அப்படியானால் சில சமயங்களில் ஒரு விலையும், மற்றச் சமயங்களில் அதே பொருளுக்கு வேறு விலையும் இருப்பதேன்? திடீரென ஒரு நாட் காலையில் ஆடுமாடுகள் தொத்து நோயால் பிடிக்கப்பட்டிருக்கின்றன என்ற செய்தி பரவுகிறது. அவற்றின் புலாலை உண்ணக கூடாது என்று நகராட்சியினர் அறிவிக்கின்றனர். ஆட்டு இறைச்சி வாங்க வந்தவர்கள் எல்லோரும் மீன் கடைகள் மேல் படையெடுக்கின்றனர். சரக்குக் குறைவாகவும், தேவை மிகுதியாகவும் ஏற்பட்ட இச் சமயத்தில் மீன் விலை வானை நோக்கிக் கிளம்புகிறது. இது இயற்கையே. இம்மாதிரி ஒவ்வொரு சமயம் பண்டங்களின் விலை மிகவும் உயர்கின்றது. ஸ்மித் ஒரு குறுகிய காலத்தில் நிலவும் விலையைச் சந்தை விலை (market price) என்று குறிப்பிட்டார். கால் நடை நோய் நீடிக்கும் என்று தோன்றினால். செம்படவர்கள் அதிகமாக மீன் பிடித்துக்கொண்டு வருவார்கள், வழங்கல் அதிகமானால் விலை இறங்கும். எனவே, நீண்டகால விலையை நேர்மை விலை (normal price) என்று குறிப்பிடுகிறார். ஒரு விரத நாளில் மீன் வழங்கல் அதிகமாகி விட்டால், அன்று அதன் விலை அடக்க விலையை விடக் கூடக் குறைந்துவிடும். நான்கு நாட்கள் பொறுத்து விற்கக் கூடிய சரக்கல்ல மீன்

அந்திப்பொழுதுக்குள் அவ்வூர் பிடித்த மீனை விற்றுக் காசாகக வேண்டும். இல்லாவிட்டால் மிஞ்சியதை உரக்குழியில் போட வேண்டியதுதான். இந்த நிலையில் மீன் விலை தலைகீழாய் விழு வது இயற்கையே. ஆகவே சந்தை விலை நேர்மை விலையை நடுநிலையாகக் கொண்டு அதனை நோக்கி எப்பொழுதும் மேலும் கீழும் ஏறிக்கொண்டும் இறங்கிக்கொண்டும் இருக்கும்.

மேற் கூறிய எடுத்துக் காட்டுகளிலிருந்து வழங்கல், தேவை சக்திகள் எவ்வாறு அங்காடியில் இயங்கிக் கடைசியில் பண்டங் களின் மதிப்பை நிர்ணயிக்கின்றன என்பது தெளிவாகும். இதே சக்திகளின் போட்டியினால் நிலப் பாட்டம், வட்டி, கூலி நிர்ணயிக்கப்படுகின்றன என்பதை முன்னாலேயே விளக்கி யாயிற்று. வழங்கல், தேவை சக்திகளால் மதிப்பு நிர்ணயிக்க படுகிறது என்பது, ஆடம் ஸ்மித், ஜான் லாக்கினிடமிருந்து தெரிந்துகொண்ட கொள்கை.

**அனைத்து நாட்டு வணிகம்**

அரசாங்கம் பொருளாதாரத் துறையில் தலையிடவே கூடாது என்று வகுத்த ஸ்மித், அனைத்து நாட்டு வணிகத்திலும் இந்தக் கொள்கைதான் நன்மை பயக்கும் என்று குறிப்பிடுகிறார். அரசு பொன், வெள்ளி மேல் வெறிகொண்டு வணிகத்தைக் கட்டுப் படுத்துவது பேதைமை என்கிறார். வணிகம் வளர்ந்தால், தானாகவே பொன்னும் வெள்ளியும் வந்து சேரும் என்பது அவர் கருத்து. 'வணிகத்தைக் கவனி; அது தங்கத்தைக் கவனித்துக் கொள்ளும்' என்பது அவர் அறிவுரை. உலக நாடுகளின் வளமோ நிலவளம், தாதுப்பொருள் வளம், மக்கள் வளம், முயற்சி மூலதன வளம் எனப் பல்வேறு வகையாம். அவற்றுக்குத் தக்க வாறு ஒவ்வொரு தொழிலை மிக்க வசதிகளுள்ள நாடு வளர்த்து, உற்பத்தியாகும் பண்டங்களைப் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால், குறைந்த விலையில் அவை கிடைக்கும். அனைத்து நாட்டு வணிகம் தடைபட்டால் பிரிட்டிஷ் மக்கள் காலையில் தேயிலை பானம் அருந்த முடியுமா? கனரக மின் இயந்திரங்கள் செய்யத் தெரியாத நாடுகள், நீர் மின் சக்தி நிலையங்களை நிறுவ முடியுமா? வெடிமருந்து (Nitrates) தாதுப் பொருள் மாத்திரம் உற்பத்தி செய்யும் சில்லி (Chile) நாடு உணவுக்கும் உடைக்கும் மற்றும் பல நுகர்ச்சிப் பண்டங்களுக்கும் என்ன செய்யமுடியும்? வணிகக் கட்டுப்பாடு, தொழில் பாதுகாப்பு வரி போன்றவை, ஒரு நாட்டின் இயற்கை வசதிகள் மிக்க தொழில்களை வளர விடாமல், வசதிக்குறைவுள்ளவற்றைப் பெருக்கக் காரணமாக அமையலாம். அப்பொழுது அதிகச் செலவில் சில பொருட்கள் உற்பத்தியாகும்.

பிரிட்டன் தனக்கு மிக்க வசதி வாய்ந்த இரும்பு எஃகுத் தொழிலை வளர்க்காமல், திராட்சைத் தோட்டம் போடத் தொடங்கினால் பிரிட்டனுக்கும் இலாபமில்லை, பிற நாடுகளுக்கும், சிறப்பாக பிரான்சுக்கும் நல்லதல்ல. இந்த மாதிரிப் பாதுகாப்பு முறையினால் பிற வசதிகளை அனுசரித்து வசதிக் குறைவானதொரு தொழில் வளர்ப்பது குறிப்பிட்ட நாட்டுக்கும் நல்லதல்ல; உலக மக்கள் அனைவருக்கும் அனைத்து நாடுகளுக்கும் கூடியபட்ச நலனை அளிக்காது என்பது ஸ்மித்தின் கொள்கை.

கட்டுப்பாடில்லாத வணிகத்தைப் பற்றி இவ்வளவு தீவிரமாக வாதிப்பவர் கட்டுப்பாடும் நான்கு சந்தர்ப்பங்களில் அவசியமாக லாம் என்று கூறுகிறார் :

(1) 'நாட்டின் பாதுகாப்பு நாட்டின் செல்வத்தைவிட மேலானது' என்பது அவர் கூற்று. தளவாடங்கள், கப்பல், போர் விமானம், கவசமணிந்த கார்கள் முதலியவற்றை எல்லா நாடுகளும் தங்கள் எல்லைக்குள் உற்பத்தி செய்யவேண்டும். பிற நாடுகளை நம்பினால் நாட்டின் சுதந்திரம் எதிர்பாராத விதமாய்ப் பறிபோய்விடும் என்பது அவர் கருத்து. எனவே, கேந்திரமான தொழில்களை நிறுவவும், பெருக்கவும் காப்பு வரி போடுவதில் தவறில்லை என்றுரைக்கிறார்.

(2) உள் நாட்டில் உற்பத்தியாகும் பண்டங்களின் மேல் அரசாங்கம் வருமானத்தைப் பெருக்கும் நோக்கத்துடன் கலால் வரி (excise duty) அல்லது உற்பத்தி வரி விதித்தால், அதே அள வுக்கு அயல் நாட்டிலிருந்து இறக்குமதியாகும் போட்டிச் சரக்கு கள் மேலும் ஒரு சுங்க வரி (customs duty) விதிக்கவேண்டியது அரசினரின் கடமை. இல்லாவிட்டால் சுதேசித் தொழில் வரிப் பளுவால் முக்குண்டு அழியும். அயல் நாட்டுச் சரக்குகள் வரி யின்றிக் குறைந்த விலையில் விற்கப்படும். (உள்நாட்டிலும் வெளி நாடுகளிலும் சரக்குகள் ஒரே அடக்க விலையில் உற்பத்தி யாகின்றன என்னும் எடுகோளில் இந்த வாதம் அமைந்திருக் கிறது).

(3) ஏதாவது ஓர் அயல் நாடு நம் நாட்டின் சரக்குகளுக்குச் சுங்க வரி – இறக்குமதி வரி விதித்தால், அந்த நாட்டுப் பண்டங் களுக்கு 'ஏட்டிக்குப் போட்டியாக' இறக்குமதி வரி நம் நாட்டி லும் விதிக்கலாம்; அவசியம் விதிக்கவேண்டுமென்பது அவர் கொள்கை.

(4) திடீரென இறக்குமதி வரிகளை நீக்கி அயல் நாட்டுத் தொழில்களின் போட்டிக்கு எந்தச் சுதேசித் தொழிலையும் இரை யாக விட்டுவிடக் கூடாது. எனவே, இறக்குமதி வரிகளை

நீக்கும்போது படிப்படியாகத்தான் தளர்த்தவேண்டும். உடனடியாகத் தகர்த்தெறிய முற்படலாகாது.

வரி விதிப்பு முறை

அரசாங்கத்தின் பொறுப்புகள் எவ்வளவு குறைந்திருப்பினும், அவற்றை நிறைவேற்ற அதற்குப் பணம் வேண்டும். கடன், நாணய வெளியீடு, வரி ஆகிய மூன்று வழிகளில் தலை சிறந்தது வரியே. அதை விதிக்கும்பொழுது எளியவரை வருத்தலாகாது. எந்த வரியும் தனி மனிதனின் வருமானத்திலிருந்து ஒரு பகுதியை அரசாங்கத்துக்கு வசூலித்துக் கொடுத்துவிடுகிறது. இம்மாதிரி நட்டம் நாட்டு மக்களுக்கு மிகவும் குறைந்த அளவில் ஏற்படவேண்டும். அரசாங்கம் நாட்டுக்கு நன்மை பயக்கும் செயல்களில் வருமானத்தைச் செலவிடவேண்டும் என்பதும் அவர் கோட்பாடு. இதற்காக நான்கு விதிகள் (canons) வகுத்தார்.

(1) சக்திப் புனித விதி (canon of ability): வரி செலுத்துவோன் சக்திக்கு ஏற்றவாறு வரிப்பளு இருக்கவேண்டும். அந்தச் சக்தி அவன் வருமானத்தால் அளவிடப்படும். (குடும்ப பாரம், உழைக்காமல் உண்டாகும் பிதிரார்ஜித சொத்து வருமானம், உழைத்துச் சம்பாதிக்கும் வருமானம், ஒழுங்காக மாதா மாதம் கிடைக்கும் வருமானம், சமயா சமயங்களில் கிடைக்கும் வருமானம் என்பனவற்றைத் தெளிந்து வரிப் பளுவைத் தீர்மானிக்க வேண்டும். (இம்மாதிரி விளக்கமும் நுணுக்கமும் பின்னால் உண்டானவை). வருமானம் உயர உயர, வரி விகிதமும் உயரவேண்டும் என்பதும் சக்தி விதியின் உட்கருத்து.

(2) உறுதிப்பாட்டுப் புனித விதி (canon of certainty): வரி செலுத்துவோன் எவ்வளவு கட்டவேண்டும் என்பது உறுதி செய்யப்பட்டிருக்கவேண்டும். வரையறை இல்லாது அரசினர் நினைத்தபடியெல்லாம் வரி விதித்தால் மக்களிடையே பணம் சம்பாதிப்பதில் ஊக்கம் வற்றிவிடும்.

(3) வசதிப் புனித விதி (canon of convenience): ஒவ்வொரு வரியும் வரி செலுத்துவோனுக்கு வசதியான நேரத்தில் வசூலிக்கப்படவேண்டும். அறுவடைக்குப் பின் நிலவரி, வாங்குவோருக்கு விற்பனை வரி என்றிருக்கவேண்டும். 'ஆவீன மழை பொழிய' என்ற செய்யுளில் வரும் தண்டல்காரன் மாதிரி ஓர் இக்கட்டான சமயம் பார்த்து வந்து வரியைக் கட்ட வற்புறுத்தக் கூடாது.

(4) சிக்கனப் புனித விதி (canon of economy): மக்களிடமிருந்து வரி அதிக அளவில் வசூலாகியும் அரசாங்கப் பொக்கிஷத்துக்கு கால்வாசி அல்லது அரைக்கால்வாசிதான் போய்ச்

சேர்ந்தால் இந்த விதி புறக்கணிக்கப்பட்டதெனக் கொள்ளவேண்டும். வசூலாகும் தொகையில் மிகக் குறைந்த சதவீதம் வசூலுக்காகச் செலவு செய்து மிஞ்சிய பணம் முழுவதும் அரசாங்கத்துக்குச் சேர்ப்பிக்கப்படவேண்டும். வரி வசூலிப்பவர்கள் கைக்கூலி பெறும் பேர்வழிகளாக இருத்தலாகாது.

இந்த நான்கு விதிகளும் அரசினர் வருமானம் பற்றிய நூல்களிலெல்லாம் சிறப்பிடம் பெறுகின்றன. பிற்கால நிபுணர்கள் இவற்றை விவரித்துப் புது விதிகளாக வகுக்கிறார்களே தவிர, புதுமை ஒன்றும் காண்பிக்கவில்லை.

### சுதந்திரவாதத்தின் குரு (Apostle of Liberalism)

ஸ்மித் போதித்த சுதந்திர வாதத்தின் (liberalism) பண்புகள் சிலவற்றை இங்குக் குறிப்பிடவேண்டும்.

(1) தனி மனிதனுக்கு எந்தத் தொழிலையும்–தோட்டி வேலை முதல் தொண்டான் வேலை வரை–மேற்கொள்ள முழு உரிமை (freedom of occupation).

(2) தனி மனிதன் தன் நிலத்தை, முதலை, உழைப்பை, முயற்சியைத் தன் விருப்பம்போல் எந்தத் துறையிலும் பயன்படுத்த உரிமை (freedom of investment). நிலத்தில் கரும்பும் பயிரிடலாம், காளானும் வளரவிடலாம். இயந்திரத்தை ஓட்டவும் செய்யலாம், நிறுத்தவும் செய்யலாம், உடைத்தும் போடலாம்.

(3) தனி மனிதனுக்குத் தன் விருப்பம்போல் ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குச் செல்லவும், ஒரு தொழிலிலிருந்து மற்றொன்றுக்குத் தாவவும் ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்குப் போகவும் உள்ள உரிமை (freedom of mobility).

(4) தனி மனிதன் தன் விருப்பம்போல் பண்டங்களைத் துய்க்கும் உரிமை (freedom of consumption).

(5) தனி மனிதன் தன் சொந்த விருப்பப்படித் தன் பொருட்களை விற்கவும் பிற பொருட்களை வாங்கவும் மாற்றவும் உரிமை (freedom of exchange),

(6) தனி மனிதன் தன் இஷ்டப்படி ஒப்பந்தம் செய்துகொள்ளும் உரிமை (freedom of contract). எந்தக் கூலிக்கும் வேலை செய்ய ஒப்புக்கொள்ளுதல், எந்த விலைக்கும் விற்க ஒப்பந்தம் செய்தல் முதலியன. இத்தனை உரிமைகளையும் மக்கள் அடைந்தால், தன்னலத்தினால் தூண்டி இயங்கினாலும், அவர்கள் தங்கள் வருவாயைப் பெருக்குவதுடன் நாட்டின் மொத்த வருமானத்தையும் (national income) பெருக்குவர் என்பது சுதந்திர வாதத்தின்

அடிப்படைக் கருத்து. ஸ்மித் இந்தச் சுதந்திர வாதத்தின் சங்க நாதத்தை எழுப்பிய பரம்பரையின் குரு, பிதாவாகும். அவ ருக்குப் பின் வந்த 'வழி நூல்' ஆசிரியர்கள் சுதந்திர வாதத்தை மேலும் பிரச்சாரம் செய்தனர். இன்றுவரைப் பல்வேறு நாடுகளில் ஒலிக்கும் சுதந்திர வாத முழக்கம் ஸ்மித்தின் பொன்றுப் புகழுக் குச் சான்று பகரும்.

## பொருளாதாரத்தின் தந்தை

ஜே. ஏ. ஷூம் பீட்டரின் அபிப்பிராயப்படி 'நாடுகளின் செல் வத்தில் காணும் கருத்தோ, கொள்கையோ அல்லது வழிசெய் முறையோ ஒன்றும் 1776-ல் புதுமையானதல்ல.' ஏனெனில் மதிப்புக் கொள்கையும் அதனைச் சார்ந்த பிரச்சினைகளுக்கும் பெட்டி ஸ்டீவர்ட், கான்டிலன் ஆகியோருக்கு ஸ்மித் கடமைப் பட்டிருந்தார். காப்புவரிக் கொள்கையைத் தாக்குவதில் ஸ்மித் நார்த்தைவிடத் தீரர் அல்ல. பண விவகாரங்களை ஹியூம், லாக், ஸ்டீவர்ட் ஸ்மித் கூறுவதை முன்கூட்டியே சொல்லி விட்டனர். அரசாங்க வரவு செலவு பற்றி ஸ்மித்தின் கருத்து களைப் பெட்டியும், ஸ்டீவர்டும் கூறியிருந்தனர். ஹட்சிசனிட மிருந்து கற்றதுதான் தொழில் சுதந்திர வாதம் (free enterprise) இம்மாதிரி இன்னும் பல சான்றுகள் தரலாம். ஆனாலும் ஸ்மித் துக்குத் தனக்கெனச் சொந்த கருத்துகள் சிறப்பாக இல்லா விட்டாலும், 'நாடுகளின் செல்வம்' எனும் நூல் 'டார்வினது மனித வர்க்கத்தின் தோற்றம்' என்பதைத் தவிர விஞ்ஞான நூல்கள் எல்லாவற்றையும் விட, பொருளாதார நூல்கள் அனைத் தையும் விட மிகவும் வெற்றி வாகை சூடிய நூல் என்று அதே ஷூம் பீட்டரே வலியுறுத்துகிறார்.

இதற்குப் பல காரணங்கள் உண்டு. முதலாவது ஸ்மித் நவின்றோர்க்கு இனிமை பயக்கும் இலக்கிய நடையில் கைதேர்ந்த வர். இரண்டாவது வணிக வாதத்தின் மேல் வெறுப்புத்தட்டி, சுதந்திர வாதத்தின்மேல் ஒரு தாகம் உண்டாகியிருந்த காலம். மக்களின் ஏக்கத்தைத் தருக்க ரீதியில் உணர்த்தியவர் ஸ்மித். மூன்றாவது ஸ்மித்துக்கு முன் பொருளாதாரத்தைப் பற்றிய கட்டுரைகள்தான் எழுதப்பட்டிருந்தன. ஸ்மித்தான் முதன் முதலாகப் பொருளாதாரச் சக்திகளை ஆய்ந்து காரண காரியத் தொடர்புகளைக் காட்டி, பயன் துய்த்தல், பண்டங்கள் உற்பத்தி, அதற்கு வேண்டும் சாதனங்கள், பண்டமாற்று, பங்கீடு, அரசின் கடமைகள் என்ற ஓர் அமைப்பை உருவாக்கிய மேதை. செங் கல்கள் பளிங்குக் கல் ஆனதும், வெறும் பொருளாதாரச் சார் புள்ள கட்டுரைகள் ஒரு விஞ்ஞான நூலாக மலர்ந்ததும் ஆடம் ஸ்மித்தின் 'நாடுகளின் செல்வம்' எனும் நூலில்தாம்.

நான்காவது ஸ்மித் எந்தப் பிரச்சினைக்கும் ஒரு திட்டவட்டமான முடிவு கூறாமல், இரண்டு மூன்று விடைகளைக் காட்டிக் கொண்டு செல்லும் ஆற்றல். இதை வலியுறுத்தும் வண்ணம் சில எடுத்துக்காட்டுகள் : பண்டங்களின் மதிப்பு எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறதென்பதற்கு மூன்று விடைகள்—உழைப்புக் கொள்கை (Labour theory of value), அடக்கச் செலவுக் கொள்கை (cost of production theory); வழங்கல் தேவை சக்திகளின் போராட்டம் (Supply and Demand). கூலி எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறதென்றால் கூலி நிதி கோட்பாடு (wage fund doctrine), தேவை வழங்கல் கொள்கை என்று இரண்டு தெளிவாகவும், மற்றும் சில எளிமையாகவும் விளக்கியுள்ளார். நிலப் பாட்டம் பற்றி மூன்று கொள்கைகள் – உற்பத்தியில் நிலத்தின் சேவைக்குச் சன்மானம், நிலச் சுவான்களின் ஏகபோக உரிமைக்குக் கிடைக்கும் பரிசு, தானியங்களின் விலையேற்றத்தால் கிடைக்கும் உபரி வருமானம் (surplus). ஊதியம் பற்றி இரண்டு கொள்கைகள்—அது ஓர் உபரி வருமானம் ; அது முதலுக்குக் கிடைக்கும் வட்டி. இம்மாதிரிப் பல விடைகளைக் கூறிச் சென்றமையால், பின்னால் வந்த அறிஞர்கள் அவரவர்கள் சபலத்துக்கேற்றபடி கொள்கைகளை (principles) மேலும் விளக்கி வலியுறுத்தலாயினர். ரிக்கார்டோ, மில் போன்ற 'வழி நூல்' புலவர்கள் தற்கால மொழியில் 'வலதுசாரி' மார்க்ஸ் போன்றவர் 'இடதுசாரி' எழுத்தாளர்களாகவும் நேர்மாறாக எழுதுவதற்கு 'நாடுகளின் செல்வத்தில்' வேண்டுமளவுக்கு விதவிதமான வித்துகள் விதைக்கப்பட்டிருந்தன. காப்பு வரிக் கொள்கையை ஆதரிப்பாரும், எதிர்ப்பவரும், வருங்காலத்தைப்பற்றி இன்ப நோக்குள்ளவரும், துன்ப நோக்குள்ளவரும் (optimists and pessismists) இரு தரத்தாரும் ஸ்மித்தினிடமிருந்தே மேற்கோள்கள் காட்டியுள்ளனர். ஸ்மித்துக்குப் பின் வந்த பொருளாதாரச் சிந்தனையாளர் அனைவரும் உடன்பட்டாலும் சரி, மறுத்தாலும் சரி, ஸ்மித்தின் கொள்கைகளால் கோட்பாடுகளால் ஈர்க்கப்பட்டவரும், தூண்டப்பட்டவரும் ஆவர்.

ஆடம் ஸ்மித்தின் அறிவுக் களஞ்சியமாகிய நூலிலுள்ள கருத்துகள் அனைத்தையும் இங்கே கூறுவது இயலாது. மேலே விளக்கப்பட்டிருக்கும் கோட்பாடுகள் மிகவும் முக்கியமானவை. அவை பின்னால் தோன்றிய நிபுணர்களுக்குப் 'பொருளாதார நூல் என்றால் ஆடம் ஸ்மித், ஆடம் ஸ்மித் என்றால் பொருளாதார நூல்' என்று ஆயிற்று. இதில் ஒரு பேருண்மை ஒளி வீசுகிறது.

## 10. தாமஸ் ராபர்ட் மால்தஸ்
(Thomas Robert Malthus)
(1766–1834)

' பூப்பிளக்கப் புறம்பாகும் புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர் ;
காப்பதற்கும் வகையறியீர், கைவிடவும் மாட்டீர்,
கவர்பிளந்த மரத்துளையில் கானுழைத் துக்கொண்டே,
ஆப்பதனை அசைத்துவிட்ட குரங்கதனைப் போல
அகப்பட்டீர் ! கிடந்துழல அகப்பட்டீரே ! '

—பட்டினத்து அடிகள்

' பிரம்மசாரிகளுக்கும் கன்னிப் பெண்களுக்கும் எனது உளங் கனிந்த வணக்கம்! இறகில்லாத இரு கால் பிறவிகளால் உலகம் நிறைந்து வழிகிறது. உணவு தானியங்களைவிட அதிகமாக மக்கள் என்பது பயங்கரத்தின் ஓர் உச்சி நிலை ; வறுமை, பிணி, போர், பிளேக், பஞ்சம், தொத்து நோய்கள் அனைத்துக்கும் தனிப் பெரும் பூதாகாரமான காரணம்.'

—தாமஸ் லவ் பீக்காக்

தாமஸ் ராபர்ட் மால்தஸ் தொன்மை நூல் மும்மணிகளில் ஒருவர். ஒரே நூலின் வாயிலாக, ஒரே ஒரு கருத்தை விளக்கிய தின் பலனாக, உலகப் புகழ்பெற்ற மேதை என்று இவரைப்பற்றி சொல்வதுண்டு. இவர் எழுதிய ' மக்கள் தொகைக் கொள்கை பற்றிய கட்டுரை ' (Essay on the Principle of Population), வேதப் புத்தகமாகிய விவிலியத்துக்கு அடுத்தபடியாக, அதிக மான மக்கள் படித்த நூல் என்று கூறுவர் சிலர். அப்படிப் படிக்காவிட்டாலும், அதிகமான மக்கள் அதன் கருத்தை யறிந் திருந்த நூல் என்பதற்கு ஐயமில்லை. இன்றைக்கு மால்தஸ் என் ருலே மக்கட்தொகைப் பிரச்சினை என்று எங்கும் எல்லாரும் பொருள் கொள்வர். இந்த நூலின் முதல் பதிப்பு 1798-ல் வெளி வந்தது. அடுத்த 30 ஆண்டுகளில் ஆறு பதிப்புகள் வெளி யாயின. மால்தசின் மக்கட்தொகைக் கொள்கையைப் பற்றிய விவாதம் காட்டுத் தீ போல் உலக முழுவதும் பரவியது. கிருத் துவ சமயக் குருக்கள் அவர் நூலைத் தடை செய்தனர். மால்தஸ் என்ருலே பச்சைக் குழந்தைகளை விழுங்கக் கூடியதொரு சடா முனி என்று சிலர் கருதினர். இத்தகைய கொந்தளிப்பை உண் டாக்கிய நூலின் ஆசிரியராயினும், மால்தசின் புகழ் இந்த மக்கட் தொகைக் கொள்கையினுல் மட்டும் ஏற்பட்டதல்ல. அவருடைய பொருளியல் ஞானத்தைக் காட்டவும், அழியாப் புகழ் அளிக்க வும், பொருட்களின் தேக்க மிகுதியால் (market gluts),

பொருளாதார நிலை காலப் போக்கில் சீர்குலையும் என்ற அவருடைய புதுமையான கருத்து ஒன்றே போதும். இந்தக் கருத்து 1820-ல் அவர் எழுதிய பொருளியல் நூலில் விளக்கப் பட்டிருக்கிறது. ஆனாலும் சுமார் ஒரு நூற்றாண்டு வரை அறிஞரால் புறக்கணிக்கப்பட்டு மறைந்திருந்து ஒரு புதை பொருளாகக்கிடந்தது. இந்தப் புதையலைக் காட்டிய பெருமை 20ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த பொருளியல் அறிஞர் ஜே. எம். கெயின்ஸைச் சாரும். எனவே, அவருடைய மக்கட்தொகைக் கொள்கை, பொருட்களின் தேக்கக் கொள்கை (Theory of Market Gluts) என்ற இரு கருத்துகளும் மால்தசுக்கு என்றும் மங்காத புகழை அளிக்கின்றன.

**வாழ்கை வரலாறு**

இங்கிலாந்தில் சர்ரே (Surrey) மாவட்டத்திலுள்ள ரூர்க்கி (Roorkee) என்னும் பண்ணை வீட்டில் 1766-ல் மால்தஸ், அவரது தந்தைக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார். தந்தை டேனியல் மால்தஸ் மிக்க அறிவாளி. பிரஞ்சுப் புரட்சியின் தத்துவ ஞானி யான ஜே. ஜே. ரூசோவின் (J. J. Rousseau) நண்பர். பெரும் நிலக்கிழாராயினும் சிறிது இடதுசாரி நோக்குள்ளவர். இவ ருடைய பாட்டனார் அன் (Anne) அரசியின் அரண்மனை மருத்து வர் பதவி வகித்தவர். தாமஸ் மால்தஸ் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் வாசித்துப் பட்டம் பெற்றார். பின் தன் சொந்த ஊரின் அருகிலுள்ள ஒரு சிற்றூரில் பாதிரியாகப் பணியாற்றி னார். 1805-ல் கிழக்கிந்தியக் கம்பெனியார் ஹெயிலிபரி (Hailey-bury) என்னும் ஊரில் இந்திய அதிகார வர்க்கத்தினருக்கு நடத்திய பயிற்சிக் கல்லூரியில் பொருளியல் பேராசிரியராகவும், வரலாற்றுப் பேராசிரியராகவும் நியமிக்கப்பட்டார். பின் வாழ் நாள் முழுவதும் அந்தப் பதவியில் புகழுடன் பணியாற்றி வந்தார். மூன்றாவது தொன்மை நூல் மணியாகிய ரிக்கார்டோ இவருடைய நெருங்கிய அருமை நண்பர். இவர் எழுதிய மற்ற நூல்களில் முக்கியமானது ‘நிலப்பாட்டத்தின் இயல்பும் வளர்ச் சியும் (Nature and Progress of Rent).

**மக்கட் தொகைக் கொள்கை (Principle of Population)**

முதலாவதாக அவருடைய மக்கட் தொகைக் கொள்கையை எடுத்துக் கொள்வோம். இந்த நூலின் முதற்பதிப்பு 1798-ல் வந்ததை மறந்து விடக்கூடாது. பிரஞ்சுப் புரட்சிக்குப் (1789) பின் நடந்த ஆங்கிலப் பிரஞ்சுப் போர் இங்கிலாந்தில் பெரிய துன்பங்களை விளைவித்தது. பல ஆண்டுகள் சேர்ந்தாற்போல் பயிர்கள் தீய்ந்து போய்ப் பஞ்சம் பரவியது ஒன்று. போர்

மூண்டதனால், அயல் நாடுகளிலிருந்து உணவுப் பொருள்கள் இறக்குமதி தடைபட்டது வேறு. கோதுமை விலை மக்கள் வாங்க முடியாதபடி உயர்ந்தது. ஏழை மக்கள் பசிப் பிணியாலும் நோயாலும் வருந்தினர். இந்தச் சமயத்தில் காட்வின் (Godwin) என்னும் அரசியல் அறிஞர் 'அரசியல் நியாயம்' (Political Justice, 1796), 'விசாரணையாளர்' (Enquirer,1797) என்னும் நூல்களைப் பிரசுரித்தார், இவை வருங்காலத்தில் சமூகம் எவ்வாறு இயங்கும் என்று சோதிடம் கூறுவது போல் எழுதிய கற்பனைச் சித்திரங்கள். இந் நூல்களில் 'மனிதன் நற்குணக் குன்றாகத் திகழ்வான். தீய குணங்கள் அறவே ஒழிந்து போகும். எனவே சட்டங்களுக்கும் நீதிமன்றங்களுக்கும் தேவையிராது. பொருள் ஆக்கும் திறனும் வேகமும் உயர்ந்திடும். அதனால் நாள் ஒன்றுக்கு அரை மணி நேரம் உழைத்துவிட்டு மற்ற நேரமெல்லாம் மக்கள் மகிழ்ச்சியாக வாழமுடியும். சுருங்கக் கூறின் உலகம் பூலோக கைலாசமாக மாறிவிடும்' என்று கற்பனைக் கனவு கண்டார் காட்வின். இவர் நூலும் கற்பனையும் நாள்தோறும் உணவு அருந்தும்போது தந்தை டேனியலுக்கும் தனயன் தாமசுக்கும் விவாதப் பொருளாக அமைந்தது. ஒவ்வொரு நாளும் சாப்பாடு முடிந்ததும் தன் அறைக்கு வந்தவுடன், விவாதத்தில் வெற்றி தரக்கூடிய பல கருத்துகள் மகன் மனத்தில் தோன்றும். அவற்றைப் பற்றி மேலும் சிந்தித்து மனதில் படும் கருத்துகளை யெல்லாம் குறித்துக்கொண்டே வந்தார் தாமஸ் மால்தஸ். இந்தக் குறிப்புகளையே கடைசியில் 1798-ல் மக்கள் தொகைக் கொள்கை என்ற நூல் வடிவத்தில் வெளியிட்டார். இளமைப் பருவத்தில் மால்தஸ் வாதப் பிரியர். விறுவிறுப்புடன் பேசவும் எழுதவும் ஆற்றல் பெற்றவர். எனவே, இதன் முதற் பதிப்பு இளமை மிடுக்குடன் எழுதப்பட்ட நூல் எனலாம். காட்வின் கண்ட கனவைப் பொய்யாக்கும் தீவிர வாதத்தை இங்கே காணலாம். முதற் பதிப்பில் மால்தஸ் தன் பெயரைக் காட்டிக்கொள்ளவில்லை. பின்னால் ஐரோப்பிய நாடுகளில் பலதடவை சுற்றுப்பிரயாணம் செய்தார். அப்பொழுது அந் நாடுகளில் மக்கள் தொகைப் புள்ளி விவரக் கணக்குகளைக் கண்ணும் கருத்துமாகத் திரட்டினார். 1803-ல் வெளியான இரண்டாம் பதிப்பில் தீவிர வாதம் மறைந்து நிதானம் மிளிர்வதைப் பார்க்கலாம். ஒவ்வொரு புதுப் பதிப்பிலும் புது மெருகு ஏற்றிக்கொண்டே போனார் மால்தஸ். சுமார் 600 பக்கங்கள் கொண்ட இந் நூலைக் கட்டுரை (essay) என்று கூறினார். அந்த ஆங்கிலச் சொல்லுக்கு முயற்சி என்ற பொருளும் உண்டு. அந்த அர்த்தத்திற்கிணங்கினாற்போல் மால்தஸின் நூல் கடைசி வரை ஒரு முயற்சியாகவே வளர்ந்துகொண்டிருந்தது.

முதல் பாகத்தில் முதல் இரண்டு அதிகாரங்களில் இருபது பக்கங்களுக்குள் தமது கொள்கையை மூன்று சூத்திரங்களாக வடித்துத் தருகிறார். அடுத்த 12 அதிகாரங்களில், முற்காலத்தில், உலகத்தில் பல் வேறு நாடுகளில் மக்கள் தொகை வளர்ந்து வந்த விதத்தையும், அதற்கேற்பட்ட தடைகளையும் விவரிக்கிறார். இரண்டாம் பாகத்தில் 13 அதிகாரங்களில் ஐரோப்பிய நாடுகளில் மக்கள் தொகை வளர்ச்சி, அதற்கேற்பட்ட தடைகளையும் ஆராய்கிறார். மூன்றாம் பாகத்தில் 14 அதிகாரங்களில் மக்கள் தொகை வளர்ச்சியால் ஏற்படும் தீமைகளைப் பல் வேறு நாடுகள் மேற்கொண்ட உபாயங்களைத் தொகுத்துக் காட்டுகிறார். இவ்வதிகாரங்கள் அயல் நாடுகளுக்குக் குடியேறுதல், வறியவர் சட்டம் (Poor law), தானியச் சட்டங்கள் (Corn laws), இறக்குமதி நன்கொடை, ஏற்றுமதி முதலியன பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஆகும். கடைசிப் பாகத்தில் 14 அதிகாரங்களில் வருங்காலத்தில் மக்கள் தொகை வளர்ச்சியினால் எழும் கேடுகளையும் அவற்றை விலக்கக்கூடிய வழிகளையும் ஆராய்கிறார்.

### மூன்று சூத்திரங்கள்

மால்தஸ் தரும் மூன்று சூத்திரங்களையும் நூலின் சாரம் என்று கூறினால் மிகையாகாது. அவையாவன :

(1) உணவுப் பொருட்களின் உற்பத்தி அளவே மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துகிறது.

(2) உணவுப் பொருட்கள் மிகுதியாகக் கிடைக்குமானால், மக்கள் தொகை வளரும். சக்தி வாய்ந்த தடைகள் தடுக்காவிட்டால் மக்கள் தொகை பெருகுவது உறுதி.

(3) மக்கள் தொகை வளர்ச்சியை உற்பத்தி வளர்ச்சிக்கேற்பச் சமப்படுத்தும் இத்தகைய தடைகள் மூவகைப்படும்; அவை ஒழுக்கக் கட்டுப்பாடு, தீச்செயல்கள், துன்பம் என்பன.

முதல் சூத்திரத்திற்கு விளக்கம் தேவையில்லை. உணவு இல்லையானால் பல கோடி ஜீவராசிகளில் ஒன்றும் உயிர் வாழ முடியாது என்னும் உண்மைதான் இச் சூத்திரத்தின் அடிப்படை.

### ஆமை வேகமும் குதிரை வேகமும்

இரண்டாவது சூத்திரம் பல கருத்துகளைக் கொண்டது. பலாப்பழத்தை வைத்தால் ஈக்களை வாவென்று கூவி அழைக்க வேண்டுமா? அதேபோல், உணவுப் பொருட்கள் மிகுதியாக உற்பத்தியானால், மக்கள் தொகையும் மிகுதியாகும் என்கிறார் ஆசிரியர். உணவுப் பொருளுக்கு மக்களைக் கூவியழைக்கும் சக்தியிருக்கிறது என்பர். எவ்வளவுக்கெவ்வளவு உணவுப்

பொருள் உற்பத்தியாகுமோ, அவ்வளவுக்கவ்வளவு மக்கள் தொகையின் வளர்ச்சியும் பெருகும் என்பது ஓர் அடிப்படைக் கருத்து.[1] அடுத்தபடியாக உணவுப்பொருள் உற்பத்தி, இயற்கை விளைவிக்கும் தடங்கல்களை நீக்கினாலன்றி, மிகுதியாகக் கைகூடாது. மக்கள் உழைப்பதற்கு ஏற்ப நிலம் பயன் அளிப்பதில்லை. மேலும் உழைப்பது மனதுக்கு இன்பமான செயலும் அல்ல என்பது மால்தசின் கருத்து. மக்களுக்குப் பொதுவாக உழைப்பு மனக் கசப்பைத்தான் தரும். எனவே, உணவு உற்பத்தி வளர்ச்சி ஆமை வேகத்தில்தான் செல்லும். ஆனால், மக்கள் தொகை வளர்ச்சிக்குக் காரணமாயிருப்பதோ பாலுணர்ச்சி காமப்போக்கு மனத்துக்கு இனிமையானது. எனவே மக்கள் தொகை வளர்ச்சி குதிரை வேகத்தில் செல்லும். இவ்வாறு கூறியதோடு மால்தஸ் திருப்தியடையவில்லை. கணிதத்தில், அதிலும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில், சீனியர் ராங்லர் (உயர்ந்த எண் எடுத்தால் கிடைக்கும்) பட்டம் பெற்றவர் தாமஸ் மால்தஸ். எனவே உணவு ஜனத்தொகை வளர்ச்சி வேகங்கள் 25 ஆண்டுகள் கால வரம்பில் எத்தகைய அளவு வளரும் என்று கணித முறையில் காட்டுகிறார். உணவு உற்பத்தி கூட்டல் வாய்ப்பாடு (arithmetic progression) போலவும், மக்கள் தொகை பெருக்கல் வாய்பாடு (geometrical progression) போலவும் வளரும் என்று குறிப்பிடுகிறார். இதற்கு உதாரணமாகக் கீழ்க்கண்ட பட்டியலைத் தருகிறார்.

| கால அளவு | ஆண்டுகளுக்குப் பின் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 0 | 25 | 50 | 75 | 100 | 125 | 150 |
| உணவு உற்பத்தி | 2 | 4 | 6 | 8 | 10 | 12 | 14 டன் |
| ஜனத்தொகை வளர்ச்சி | 2 | 4 | 8 | 16 | 32 | 64 | 128 எண் |

ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உணவு உற்பத்தி இரண்டு டன்களாகவும் மக்கள் எண்ணிக்கை 2 ஆட்களாகவும் (ஆணும் பெண்ணுமாக) இருந்தால், 25 ஆண்டுகளுக்குப் பின் உணவு 4 டன், மக்கட்தொகை 4 பேர் என வளரும். ஆனால் 75 ஆண்டுகளில் உணவு 8 டன் ஆகியிருக்கும், மக்கட் தொகை 16 ஆகி விடும். 150 ஆண்டுகளில் இவை என்னவாகின்றன என்பதை

[1] முன்னாள் இந்தியாவில் பஞ்சாப் வாய்க்கால் நீர்ப்பாசனப் பிராந்தியத்தில் மக்கள் தொகை மிக்க விரைவாக வளர்ந்ததால், அங்குக் குடியேறினவர்களின் வாழ்க்கைத்தரம் உயரமுடியாதபடி தடுத்தது. இது மால்தசின் தத்துவத்துக்கு ஒரு நல்ல சான்று.

மேலே காட்டியிருக்கும் பட்டியலைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். மால்தஸ் கணக்குப்படி 200 ஆண்டுகளில் மக்கள் எண்ணிக்கைக்கும் உணவு உற்பத்திக்கும் உள்ள விகிதாச்சாரம் 512 : 18 ஆகவும், 300 ஆண்டுகளில் 8192 : 26 ஆகவும் மாறும். மால்தஸ் உலக நாடுகளின் பிறப்பு, இறப்புப் புள்ளி விவரங்களைக் கற்றறிந்த நிபுணர். இன்றைய மக்கள் தொகை சென்ற 10 ஆண்டுகளில் வளர்ந்த விகிதத்தில் வளர்ந்தால், இன்னும் 753 ஆண்டுகளில் இம் மாபெரும் ஞாலத்தில் தலைக்குக் கிடைக்கக் கூடிய நிலப் பகுதி ஒரு சதுர கஜமாகத்தான் இருக்கும் என்று இக்கால மக்கட் புள்ளி இயல் நிபுணர் (demographic statistician) ஒருவர் கூறுவதோடு மால்தஸ் கூற்றை ஒப்பு நோக்கவேண்டும்.

**மூவகைத் தடைகள்**

இம்மாதிரி வேறுபட்ட வேகத்தில் உணவும் மக்கள் தொகையும் வளரக்கூடுமானால், கி.பி. முதல் ஆண்டில் இரண்டுபேர் இருந்திருந்தாலும், இன்றைக்கு மக்கள் நிற்கக்கூட இடமின்றி உலக நிலப்பரப்பு முழுவதும் ஜன நெருக்கடி ஏற்பட்டிருக்க வேண்டும். அப்படி ஏன் ஆகவில்லையென்றால், அதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றைச் சக்தி மிக்க தடைகள் (powerful checks) என்கிறார் மால்தஸ். முதல் பதிப்பில் இத் தடைகளை இரு வகையென்று கூறியுள்ளார். அவை தீச் செயல்களும் (vices), துன்பமும் (misery) ஆகும். பின்னால் வந்த பதிப்புகளில், மூன்றாவது தடையென ஒழுக்கக் கட்டுப்பாட்டைச் (moral restraint) சேர்த்திருக்கிறார். தீச் செயல்கள், மனிதன் செய்வது; கருவழித்தல், விபசாரம், சிசுக்களைக் கொன்றுவிடுதல், கொலை, போர் முதலியன. துன்பம் இயற்கைப் பராசக்தியின் திருவிளையாடல்களால் விளைவது—வான் பொய்த்தல், பஞ்சம், பிணி, வைசூரி, பிளேக், காலரா போன்ற கொள்ளை நோய்கள், பூமி அதிர்ச்சி, வெள்ளம், கடல் பொங்குதல் முதலியன. ஒழுக்கக் கட்டுப்பாடு என்பது திருமணமின்றித் தனி வாழ்க்கை நடத்தல், மணத்தை ஒத்திப்போடல், மணமான பின்பும் திருநீலகண்டராக இருத்தல் முதலியன.

இத் தடைகளை வேறு ஒரு விதத்தில் மால்தஸ் இரு வகையாகப் பிரிக்கிறார்: (1) பிறப்பு விகிதத்தைக் குறைப்பவை, (2) இறப்பு விகிதத்தைக் கூட்டுபவை. இவ்விரண்டு தடைகளும் மக்கள் தொகை வளர்ச்சியைக் குறைக்கும் என்பது எளிதில் புலப்படும். திருமணத்தை ஒத்திப் போட்டால் பிறப்பு விகிதம் குறையும். பிணி போர் முதலியன இறப்பு விகிதத்தைக் கூட்டும். இத்தனை தடைகளிலும் நவீன விஞ்ஞானத் தடைகளும், குடும்பக் கட்டுப்

பாட்டு உபாயங்களும் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. இவை மால்தஸ் காலத்துக்குச் சுமார் 50 ஆண்டுகளுக்குப் பின் வந்தவை.

மால்தஸ் சமய உணர்ச்சியுடன் நல்லொழுக்க நெறியில் வாழ்ந்த பாதிரியார். எனினும், 'அவர் ஜனப் பெருக்கத்தை அறவே வெறுப்பவர். பல குழந்தைகள் பெற்ற தாய்மார்களைக் கொடுமையாக நடத்துபவர், சிசுக்களை விழுங்கும் பேய்' என்றெல்லாம் பல கதைகள் அவரைப்பற்றி உண்டு. ஆனால் அவற்றில் சிறிதேனும் உண்மை கிடையாது. அவர் மக்கட் பெருக்கத்தைத் தடுக்கக் கூறும் உபாயங்கள் இரண்டே: கலியாணத்தை ஒத்திப் போடுதல், மணமாகும் வரை கற்பு நிலையில் ஒழுகுதல். இவரைப் பேயென்றும், மனித இனத்தை வெறுக்கும் கொடும் பித்தன் என்றும் கூறுவது மடமை.

பிறப்பு விகிதத்தைக் குறைக்க மக்கள் எல்லாரும் பாடுபடாவிட்டால், நாடுகளில் ஜனப் பெருக்கம் மிதமிஞ்சி வறுமை, பிணி, சாக்காடு என்ற கொடுமைகள் தாண்டவமாடும். கட்டுப்பாடில்லாத இன விருத்தி உணர்ச்சியின் விளைவாகப் புற்றீசல் மாதிரிக் கிளம்பும் குழந்தைகள் குபேர நாட்டைக் கூட வறுமையில் ஆழ்த்தி, மக்களுக்குப் பயங்கரமான அழிவையே விளைவிப்பார்கள் என்று எச்சரிக்கிறார் மால்தஸ்.

ஸ்மித்தின் நூலுக்கு ஒரு விசித்திரமான துணை நூல் மால்தசின் மக்கள் தொகைக் கொள்கை. அதன் பெயரைக்கூட ஸ்மித்தின் நூலின் பெயரைப் போல மாற்றிவிடலாம் என்பது சிலர் எண்ணம். ஸ்மித்தின் நூல் 'நாடுகளின் செல்வமும், அதன் பண்பும், அதை வளர்க்கும் உபாயங்களும்,' மால்தசின் நூலை 'நாடுகளின் வறுமை, அதன் பண்பும், அதைத் தடுக்கும் உபாயங்களும்' என்று அழைப்பது சாலச் சிறந்தது என்பர்.

மால்தசின் மக்கட் தொகைக் கொள்கை எந்த அளவுக்குச் சரி என்பதை ஆராய்வோம். அவர் காலத்துக்குப் பின் ஐரோப்பிய நாடுகளில் அவர் சொன்ன சோதிடம் பலிக்கவில்லை. அதற்கு நான்கு காரணங்கள் கூறலாம்.

(1) மால்தஸ் கனவிலும் நினைக்காத அளவில் விஞ்ஞானம் விவசாயத்துக்கு உதவி வருகிறது. ஆய்ந்தெடுத்த வித்துகள், இரசாயன எரு, புதிய தழை உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்து, நோய் மருந்து, டிராக்டர்கள் என்றெத்தனையோ துணைகளைப் பெற்று விவசாயம் அமோக வெற்றி கண்டு வருகிறது.

(2) நீராவிக் கப்பல், ரயில் போக்குவரத்தின் வளர்ச்சியால் உலகமே சுருங்கிவிட்டது. ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலுள்ள ஐக்கிய அமெரிக்க நாடுகள், கனடா, ஆஸ்திரேலியா போன்ற தூர நாடுகள் ஐரோப்பாவின் தானியக் களஞ்சியங்களாகச் செயல்படுகின்றன. இதனுல் உணவுப் பஞ்சம் பறந்தோடுகிறது.

(3) வறுமைப் பிணி நீங்கி மக்கள் வாழ்க்கைத்தரம் உயர உயர இனவிருத்தி வேகம் குறைந்து வருகிறது என்பது ஐரோப்பிய நாடுகளின் அனுபவம். இதனுலேயே ஹிட்லர், முசோலினி போன்ற சர்வாதிகாரிகள் அதிகக் குழந்தைகள் பெற்ற தாய்மார்களுக்குப் பரிசு என ஓர் இயக்கமே தொடங்கினர். மால்தஸ் என்றென்றும் இரு பாலார்க்கும் உள்ள காம உணர்ச்சி மாருமல், குன்ருமல் இருக்கும் என்ற அடிப்படையில் தமது கொள்கையை விவரித்திருக்கிருர். இந்த அடிப்படை ஆடத்தொடங்கியது ஓரளவுக்கு உண்மையே. இருந்தாலும், கோபுரம் முழுவதும் இடிந்து சரிந்து விடவில்லை. தற்காலம் மக்கட் தொகை பொருளாதார நிபுணர்கள் வாழ்க்கைத் தரத்துக்கும் குழந்தைப் பேற்றுக்கும் நெருங்கிய தொடர்புண்டு எனச் சொல்கிருர்கள். வறுமையில் வாடும் மக்களுக்கு உலகில் ஒரே இன்பம்தான் கிடைக்கக் கூடும். அதை அடையும்போது தண்டனைமாதிரிக் குழந்தைகள் கருவுறுகின்றன. ஆனுல், செல்வம் மிக்கவர்க்கு உலகில் கடவுள் படைத்த பல்கோடி இன்பங்களையும் நுகர வாய்ப்புண்டு. இல்வாழ்க்கை இன்பம் அவற்றில் ஒன்றுதான். ஆதலின் அவர்கள் குழந்தைகள் பெறுவது குறைகிறது. எனவே, செல்வத்தில் திளைக்கும் குடும்பங்கள் சிறிதாயிருக்கின்றன என்று அறிஞர்கள் விவரிக்கின்ருர்கள். இது உண்மைதாளு என்று ஆராய இது வல்ல இடம்.

(4) மால்தஸ் எதிர்பாராத, விரும்பாத, செயற்கை முறைக் கருவிகளை உபயோகிப்பதால் மக்கள் தொகை வளர்ச்சி குறைந்து வருவது ஒரு வலுவான தடையாகத் திகழ்கிறது. மேற்கு ஐரோப்பாவில் உலகப் போர்கள் இரண்டுக்கும் நடுவில் சில நாடுகளின் மக்கட் தொகை மாருமலும், பிரான்சு போன்ற நாடுகளில் குறைந்துகொண்டும் சென்றதே ஒரு சான்று ஆகும். எனவே, மால்தசின் கொள்கை மேற்கு ஐரோப்பிய நாடுகள், வட அமெரிக்கா போன்ற முன்னேற்றமடைந்த நாடுகளில் செல்லாது. ஆனுல் ஆசிய நாடுகள், பின்தங்கிய ஆப்பிரிக்கத் தென்னமெரிக்க நாடுகள் அனைத்திலும் மால்தஸ் கூறிய சோதிடம் நன்ருகப் பலித்துக் கொண்டிருக்கிறது.

**பண்டங்களுக்கும் மக்களுக்கும் ஒரே வழங்கல் விதி**

இனி மால்தசின் கொள்கைக்கும் ஆடம் ஸ்மித் எழுதிய முதல் நூல் தத்துவங்களுக்கும் என்ன விதங்களில் ஒற்றுமை? ஏன் மால்தஸ் மும்மணிகளில் ஒருவர் ஆவர் என்பதனை ஆராய்வோம். ஸ்மித் பண்டங்களின் வழங்கலைச் சந்தைச் சக்திகள் நிர்ணயிக்கும் என வகுத்த விதி நினைவிருக்கும். சீப்பின் விலை கூடினால், அதிகச் சீப்புகள் உற்பத்தியாகும் என்பது நாம் படித்த உதாரணம். இதே விதி கடுகு முதல் கப்பல் வரை வழங்கலை (supply) ஆட்டிவைக்கும் என்று ஸ்மித் கூறினார். மக்களின் தொகையும் அவர்களுடைய உழைப்புக்குக் கிடைக்கும் விலையாகிய கூலியைப் பொறுத்துக் கூடும் அல்லது குறையும் என்று ஓரிடத்தில் ஸ்மித் கூறியுள்ளார். அதையே 600 பக்கங்களில் விளக்கியிருக்கிறார் தாமஸ் மால்தஸ். அதிகக் கூலி கொடுத்தால், அதிகத் தொழிலாளர் வழங்கல் சந்தையில் கிடைக்கும். குறைவாகக் கொடுத்தால் போதுமான உணவின்றி நோய்வாய்ப்பட்டுப் பலர் மடிவர்; தொழில் தேடிவரும் மக்களின் எண்ணிக்கை குறையும் என்பதே மால்தசின் சித்தாந்தம். பருத்தியும், சணலும், நிலக்கரியும், கத்தரிக்காயும் போல, மனிதனும் சந்தைச் சக்திகளால் ஆட்டிவைக்கப்படும் பாவைதான் என்று தெளிவாகக் காட்டியுள்ளார். மரக்கட்டைக்கும், மாட்டுக்கும், மனிதனுக்கும் ஒரே பொருளாதார விதிதான் என்பதைத் தெளிவாக்கிய பெருமை மால்தசுக்குத்தான் உண்டு. இது அவரைத் தொன்மை நூல் மும்மணிகளில் ஒருவராககுவதற்கு ஒரு காரணம்.

**தலையிடாக் கொள்கை**

இரண்டாவது காரணம் மால்தஸ், ஆடம் ஸ்மித்தின் தலையிடாக் கொள்கைக்கு அளித்திருக்கும் ஆதரவு. அதிக வருமானம் கிடைத்தவுடன் பாட்டாளி மக்கள் இன விருத்தியில் ஈடுபடுவது அவர்கள் குணமாகிவிட்டது. அதனால்தான் குசேலர்களாகி வறுமையில் தத்தளிக்கின்றனர். வறியவரின் வறுமைக்கு அவர்களேதான் காரணம். வறியவர் சட்டம் (poor law) இயற்றி ஏழை மக்களுக்கு உணவு, உடை, உறைவிடம் கொடுத்தால் கவலையின்றிப் பிள்ளை குட்டிகளைப் பெற்றுக்கொண்டே யிருப்பர் என்பது மால்தசின் திண்ணமான எண்ணம். எனவே, வெகு காலமாக அமுலிலிருந்துவரும் வறியவர் சட்டங்களை நீக்கவேண்டுமென்று தீவிரமாக விரும்பினார். 'சுதந்திர வாதத்தின் மூச்சு' எனப்படும் தலையிடாக் கொள்கையை ஏழை மக்கள் விஷயத்திலும் அனுசரிக்க விரும்பினார். அதைப்பற்றிப் பிரசாரம் செய்யவே தொடங்கிவிட்டார். இதனால் சிறிதும் ஐயப்பாட்டிற்கிடமின்றிச் சுதந்திரவாதியாகவும் தொன்மை நூல் மேதைகளில்

ஒருவராகவும் மால்தஸ் மதிக்கப்படுகிறார். ஏழைகளுக்கு இரங்காது வறியவர் சட்டத்தை நீக்கவேண்டுமென்று நூலின் மூலம் பிரச்சாரம் செய்யும் 'ஈவிரக்கமற்ற அரக்கன்' என்ற பெயரையும் பெற்றார்.

### இயற்கையின் கருமித்தனம்

இயற்கை அளவற்ற கருணையுடையது. தாராளமாகக் கொடுக்கும் என்ற இயற்கை வாதிகளின் கருத்துக்கு மாறாக இயற்கை மனிதனை நெற்றியிலிருந்து இரத்தமே வேர்வையாகக் கொட்ட உழைக்கக் கட்டாயப்படுத்தும் கருமி என்று பின்னால் வரும் ரிக்கார்டோ தெளிவாக்கினார். அதே கருத்தைத் தன் மக்கள் தொகைக் கொள்கைக்கு ஆதாரமாகக் கொண்டார் மால்தஸ். அதன் நுட்பத்தை நன்கு அறிந்தவர் என்ற நிலையில் தொன்மை நூல் கொள்கைகளின் (classical doctrines) ரிக்கார்டோவுக்கு உறு துணையாக நிற்கிறார். 'குறைந்துகொண்டே போகும் இறுதிநிலை விளைவு விதி' (Law of Diminishing Marginal Returns) நிலத்தின் விளைச்சலைக் கட்டுப்படுத்துகிறது என்று மால்தஸ்தான் முதலில் சொன்னவர். சந்தைச் சக்திகளின் போராட்டக் கொள்கையும், தலையிடாக் கொள்கையும் போன்ற சுதந்திர வாதத்தின் அடிக்கல் போன்ற கருத்துகளை ஒப்புக்கொண்டு மேலும் அதை உறுதி செய்யும் வகையில் இந்தப் புது விதி அமைகிறது. ஆகையால் மால்தஸ ஒரு தொன்மை நூல் புலவர்தான் என்பதில் ஐயமில்லை.

### பொருள் தேக்கம்

மால்தசின் 'பொருளியலின் கொள்கைகள்' (Principles of Political economy, 18) என்னும் நூலில் அவருடைய நுட்பமான ஆராய்ச்சித் திறன் வெளியாகிறது. 'கண்ணுக்குப் புலப்படாத கரத்தின்' (invisibile hand) உதவியால் நாட்டின் பொருளாதாரத் துறை கீல் போட்ட சக்கரம் போல் சுழன்று முன் செல்லும் என்பது ஆடம் ஸ்மித்தின் கோட்பாடு அல்லவா? அப்படி இனிய நடையில் செல்லாது, நாடுகளின் பொருளாதாரம் மாறிமாறி வரும் மந்திரத்தினால் சீர்குலைய நேரிடும் என்று அம் முடிவை மால்தஸ் மறுத்துக் கூறுவதுடன் தமது கருத்தை நிரூபிக்கவும் செய்கிறார். எனவே மால்தசுக்குத் தொன்மை நூல் அறிவுறுத்திய சுதந்திர வாதத்தில் முதலாவதாகக் குற்றம் கண்டுபிடித்த சிறப்பு உரித்தாகும். எனவே, அவரை மறுப்பு நூலுக்கு வித்திட்டவர் என்று கூடக் கூறலாம். அவர் நிரூபித்ததை விளக்குமுன் ஜே. பி. ஸேயின் (J. B. Say) சந்தைச் சட்டம் (Law of the markets) என்ற பெயர் பெற்ற விதி ஒன்றைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஜே. பி. ஸேப் 'நாடுகளின் செல்வத்தை' மொழி பெயர்த்த பிரஞ்சுப் பொருளாதார அறிஞர், அவர் வகுத்த விதி சாதாரணச் சந்தைச் சக்திகளின் போக்கைத் தலை கீழாக்கிக் காட்டுகிறது. ஆடம் ஸ்மித் 'தேவை முதலில் தோன்றும், அதை நிறைவு செய்ய பண்டங்கள் உற்பத்தியாகும்' எனப் போதித்தார். சீப்புகளின் தேவை அதிகமானால் சீப்புகளின் விலை உயரும்; இலாபம் மிகும்; உற்பத்தியாளர் உற்பத்தியைப் பெருக்க ஆர்வம் பிறக்கும். வழங்கல் அதிகமாகும் என்பது ஸ்மித்தின் தருக்கவாதம். இதை ஜே. பி. ஸே தலைகீழ்ப் பாடமாக ஓதினார். 'அதிகமான உற்பத்தி அல்லது வழங்கல் அதிகமான தேவையை உண்டாக்கும்' என்பது ஸேயின் சந்தைச் சட்டம். முருகனிடம் 100 குடைகள் இருந்தால் அவற்றை 1000 ரூபாய்க்கு விற்பான். அதனால அவனுக்கு ரூ. 1000-கருப் பிற பண்டங்களை வாங்கச் சக்தி பிறக்கும். அச் சக்தியினால் சந்தையில் தேவை ஏற்படும். கந்தன் 100 குவின்டல் நெல் உற்பத்தி செய்தால் அதை ரூ. 5000-க்கு விற்பானேயானால் அவனிடம் ரூ. 5000-க்குப் பிற பண்டங்களை வாங்கும் சக்தி பிறக்கும். பிற பொருள்களுக்குத் தேவை கூடும். நாட்டு மக்கள் அனைவரும் தங்கள் உற்பத்தியை எந்த அளவுக்கு அதிகப்படுத்துகிறார்களோ, அந்த அளவுக்கு அவர்கள் வாங்கும் சக்தியும் கூடும். தேவையும் பெருகும் என்று ஜே. பி. ஸே. கூறினார். ஸேயின் சட்டம் உண்மையானால் தேவைக்கு மீறிய பொருள் உற்பத்தி, அதாவது விற்பனையின்றிக் கிடக்கும் பொருள்களின் தேக்கம், ஏற்படவே செய்யாது. வழங்கல், தேவை சமனின்றி ஒன்றிரண்டு பொருள்களின் தேக்கம் உண்டாகலாம். சிமென்ட் உற்பத்தி அதிகமாகித் தேவைக் குறைவால் தேக்க நிலை அடையலாம். அதே சமயம் சர்க்கரையின் வழங்கல் பற்றாக் குறை நிலையிலிருக்கலாம். சிறிது காலம் சென்றால், அதிக சிமென்ட் செய்யும் முயற்சி இலாபம் தராது, நட்டத்தை உண்டாக்கும். எனவே மூலதனம், உழைப்பு, முயற்சி எல்லாம், அதிக இலாபம் தரும் சர்க்கரை உற்பத்திக்குச் செல்லும். ஆகவே இங்கும் அங்குமாக ஒன்றிரண்டு பொருள்கள் அதிக உற்பத்தி அல்லது குறைந்த உற்பத்தி என்ற அவல நிலையில், அதுவும் குறுகிய காலத்துக்கு, இருக்க நேரிடும். மிக விரைவில் தேங்கும் பொருளின் உற்பத்தி குறையும். பற்றாக்குறையாக இருக்கும் பொருளின் உற்பத்தி அதிகமாகும். இரண்டு பொருள்களின் விஷயத்திலும் வழங்கல் தேவை சமன் ஏற்படும். எல்லாப் பொருட்களின் உற்பத்தியும் ஒரே சமயத்தில் தேவைக்கு மிகுந்து நீண்ட காலத்துக்குத் தேக்கம் ஏற்படுவது ஒருக்காலும் நடக்காது என்பதே ஸேயின் சந்தைச் சட்டத்தின் உட்கருத்து.

ஸேயின் சட்டம் தவருனது என்பது மால்தசின் வாதம். இயந்திரப் புரட்சிக்குப் பின் ஏற்பட்ட தொழிலமைப்பில், மூலதனம் வேகமாகத் திரட்டப்பட்டு அதிகமான இயந்திரங்கள் நிறுவப் படும். தேசீய வருமானத்தில் முதலாளிகளின் பங்கு வட்டியும் இலாபமும் இதனுல் அதிகமாகும். ஒவ்வொரு புது இயந்திரமும் பல தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் வேலை வாய்ப்பைத் தொலைத்து விடும்; குறைந்து கொண்டே போகும் வேலைகளுக்குக் கூடிக்கொண்டே போகும் தொழிலாளர் மனுப்போடுவர்; போட்டி கடுமையாகும். கூலியோ பிழைப்புக் கூலியாகக் குறையும். உயிரைக் காப்பாற்ற இன்றியமையாத உணவு, உடை, உறை விடம் தவிர வேறு எந்தப் பண்டங்களும் வாங்கமுடியாத அளவுக்குப் பிழைப்புக் கூலி குறைந்து விடும். சமுதாயத்தில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் தொழிலாளராக இருப்பர். அவர்களுடைய வாங்கும் சக்தி இவ்வாறு குறுகித் தேய்ந்து கொண்டே போகும். தேசீய வருமானத்தில் மூலதனமிட்ட முதலாளிகளின் பங்கு பெருகிக்கொண்டே போகும். அதே சம யத்தில் இராட்சச இயந்திரங்கள் நிறுவப்படுவதால், பொருட் களின் உற்பத்தி, காட்டு வெள்ளம்போல் பெருகி வரும். நூற் றுக்குப் பதின்மராக இருக்கும் முதலாளிகளுக்கு வாங்கும் சக்தி அளவின்றி இருந்தாலும், அவர்களுக்கு நுகரும் சக்தி குறை வாகவே யிருக்க முடியும். ‘இரு நாளைக்கு ஏலென்ருல் ஏலாய்’ என்ற மூதுரைப்படி அவர்கள் துய்க்கக்கூடிய பொருட்கள் உற் பத்தி வெள்ளத்தில் மிகச் சிறு பகுதியாகத்தானிருக்க முடியும். குண்டோதரப் பசியுள்ள பாட்டாளி மக்களிடமோ வறுமை, வேலையின்மை, வாங்கும் சக்தியின் வறட்சி வளரும். இந் நிலையில் கண்டிப்பாகப் பொருட் தேக்கம் உண்டாகி நாட் டின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும் என்று வாதித்தார் மால்தஸ்.

இவ் வாதம் முதலாவதாக ஆடம் ஸ்மித்தின் வருங்காலத்தில் உள்ள நன்னம்பிக்கையையும் இனிய நோக்கையும் பொய்யாக் கியது. வருங்காலத்தில் பொருட் தேக்கம் பொருளாதார முன் னேற்றத்தைத் தடை செய்யும் என்பது மால்தசின் ஆராய்ச்சியின் முடிவு. இது உண்மையே. தேசீய வருமானம் பரவலாகவும் நேர்மையாகவும் பகிர்ந்தளிக்கப் படாவிட்டால், மார்க்கட் சுருங் கும். வேலைப் பகுப்புப் பொருள் உற்பத்தியைப் பன்மடங்கு ஆக் கக்கூடியது. அதுவே பொருளாதார முன்னேற்றத்துக்கு முக் கிய வழி. வேலைப் பகுப்புச் சந்தைகளின் எல்லைக்கேற்ப வரை [illegible] பெறும் என்பது ஆடம் ஸ்மித்தின் முதற் கோட்பாடு [illegible] மால்தஸ் கருத்தோ மார்ககட் விரிவடையாது, சுருங்

கிக்கொண்டேதான் போகும் என்பது. இது சரியானல் பொருட் தேக்கம் என்னும் ஆபத்து நேர்வது உறுதி.

இந்த ஆபத்திலிருந்து மக்களைக் காப்பாற்ற மால்தஸ் கூறும் வழிதான் விசித்திரமானது; பிற்போக்கானதும் கூட. வாங்கும் சக்தி குறைந்தால் நாட்டின் ஒரு பகுதி மக்களை உழைப்பு, உற்பத்தி என்று பாடுபடச் சொல்லாமல் அதிகமாகச் செலவழிக்கும்படி செய்யவேண்டும். இதற்கு இடைக்காலத்தில் பிரபுக்கள் மாளிகையில் நூற்றுக்கணக்கானப் பயன்தராப் பணியாளர்கள் (unproductive servants) இருந்தார்கள் அல்லவா? அதேபோல் உற்பத்தியில் ஈடுபடாது உண்டு களித்திருக்கும் சோம்பேறிகள் படை ஒன்று திரட்டினுல் தேவை கூடிவரும், (உற்பத்தியும் குறையும்) என்பது மால்தசின் யோசனை. இடைக்கால நாகரீகம் அவ்வாறு இருந்திருக்கலாம். ஆனல் அதை, இயந்திரப் புரட்சியெல்லாம் நடந்தேறியபின் 19ஆம் நூற்ருண்டில் மேற்கொள்ள வேண்டும் என்பது மிகவும் பிற்போக்கான கருத்து. ஆதலின் இதைக் கற்றவரும் கல்லாதவரும் ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டனர். மேலும் இந்த யோசனை அரசினர் பொருளாதாரத் துறையில் தலையிடுவது அவசியம் என்று வற்புறுத்துவதாகவும் அமைந்தது. இந்த யோசனையை ஏற்கும் மனப்பான்மை யாருக்கும் அந் நாளில் இருந்ததில்லை. எனவே தெளிந்த அறிவுடனும், நுண்ணிய ஆராய்ச்சித் திறனுடனும் மால்தஸ் கண்டு விளக்கிய மெய்யான கருத்தினை யாவரும் புறக்கணித்தனர். அண்மையில் ஜே. எம். கெயின்ஸ் தமது நூலில் (1936) மக்களின் வாங்கும் சக்தியின் வளர்ச்சியையும் அதன் இன்றியமையாமையையும் பற்றிச் சிறப்பித்து எழுதும்போது, மால்தசின் பொருட் தேக்கக் கொள்கைக்குத் தாம் மிக்க கடமைப் பட்டிருப்பதாகக் கூறியுள்ளார்.

### நிலப்பாட்டம்

கடைசியாக மால்தஸ் எழுதிய ‘நிலப்பாட்டத்தின் இயல்பும் வளர்ச்சியும்’ (Nature and Progress of Rent, 1815) என்னும் நூலில் காணும் கருத்துகளைப் பார்ப்போம். இவை பின்னுல் ரிக்கார்டோ விளக்கிய நிலப்பாட்டக் கொள்கைக்கு முகவுரையாக அமைந்திருப்பது குறிப்பிடத்தககது. விவசாயிகள் நிலச்சுவான்களுக்கு ஏன் பாட்டம் தருகிருர்கள் என்பதற்கு மால்தஸ் மூன்று காரணங்கள் கூறுகிருர்: (1) நிலவளம் பலதரப்பட்டதாய் இருத்தல் (Differential fertility); (2) அதனுல் கீழ்த்தர நிலத்தையும் பயிர் செய்வதால், உயர்தர நிலக்காரருக்கு இலாபம் கிடைத்தல். சந்தையில் எல்லாப் பண்டங்களும் ஒரே விலையில் விற்கும் என்பது சந்தைச் சட்டம் குறைந்த செலவில் சாகுபடி செய்த

உயர்தர நிலக் குத்தகைக்காரருக்கு இதனால் மிக்க ஊதியம் கிடைக்கும். அதை நிலச்சுவான்கள் பறித்துக்கொள்வார்கள். பறித்துக்கொள்ள, நிலமற்ற, எண்ணற்ற உழவர்களின் போட்டியே காரணம் என்பதைத் தெளிவாகக் காட்டியுள்ளார்; (3) நிலத்தின் விளைச்சல் மலிவாக விற்காதா? நிலத்தில் விளையும் உணவுப் பொருட்கள் அதிகப்பட்டால் பிற பண்டங்களைப் போல் மலிவாக விற்காது என்பது அவர் கூற்று. பிற பண்டங்களுக்கு ஒரு வறையறுத்த தேவைதான் உண்டு. உணவுப் பொருட்களுக்குத் தேவையோ வளர்ந்துகொண்டே போகும். ஏனெனில் உணவுப் பொருள் அதிகரிக்கும்போது, அதை உண்ண அதிக மக்களைக் கூவியழைக்கும் தன்மை அதற்கு இருக்கிறதென்று அவர் விவரித்தது நினைவிலிருக்கும். அதிக 'உணவு உற்பத்தி மிக்குவர மிக்குவர, அதை உண்ணும் அதிக வயிறுகளும் மிக்கு வரும்' என்றுகும். எனவே உணவுப் பொருள் சாகுபடியாகும் நிலத்துக்குக் கிராக்கி அதிகமாகிக்கொண்டே போகும். அதனால் நிலச்சுவான்கள் நல்ல இலாபம் பெறுவர். எனவே வருங்காலத்தில் நிலப்பாட்டம் கூடிக்கொண்டே போகும் என்பது அவர் கருத்து. இதற்கும் ரிக்கார்டோவின் நிலப்பாட்டக் கொள்கைக்கும் மிக்க ஒற்றுமை யிருப்பது பின்னால் விளங்கும்.

### முடிவுரை

மால்தசின் புகழ்பெற்ற மக்கட் தொகை வளர்ச்சிக் கொள்கை அவருடைய மற்றப் பொருளியல் கருத்துகளை அமுக்கி மறைத்து விட்டது. மக்கள் தொகைக் கொள்கை, பண்டங்களின் வழங்கல் விலைக்குத் தகுந்தவாறு மாறும் என்னும் தொன்மை நூல் தத்துவத்தின் விரிவுரை என்பதைப் பார்த்தோம். அத்துடன் அரசினர் தலையிடாக் கொள்கையை வறியவர்பாலும் அனுசரிக்க வேண்டும் என்பதும் தொன்மை நூல் தத்துவத்தின் விரிவுரையாகத் திகழ்கிறது. இக் கருத்துகள் சுதந்திர வாதத்தின் அடிப்படைகள். எனவே மால்தஸ் தொன்மை நூல் மும்மணிகளில் ஒருவராகக் கருதப்படுவது சரியே.

ஆனால், அவருடைய பொருட் தேக்கக் கொள்கையே தொன்மை நூல் கோட்பாடுகளுக்கு மறுப்பாக அமைகிறது. இந்தக் கொள்கைக்கு அக் காலத்தவர் செவிமடுத்திருந்தால் பொருளியல் நூல் வளர்ச்சியிலேயே ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கும். ஆனால், ரிக்கார்டோவின் கருத்துகளே அறிஞர்க்கும், அரசினர்க்கும் எல்லார்க்கும் இனிப்பாயிருந்தன. எனவே அடுத்த 70 ஆண்டுகள் வரைப் பொருளியல் வளர்ச்சி வழி தப்பிப் பலனளியாப் பாலைவனத்துக்குள் சென்று மயங்கிற்று என்பது பலர் கருத்து. மால்தஸ் முதல் நூலின் கொள்கைகளை

ஒட்டியும் சில இடங்களில் வெட்டியும் எழுதும் நடு நிலைமையும் நுண்ணறிவும் பெற்ற பேரறிஞர். வருங்காலத்தில் மக்கள் தொகை கட்டுப்பாடில்லாமல் குதிரை வேகத்தில் வளரும். உணவு உற்பத்தி ஆமை வேகத்தில் நகரும். தொழிலாளர் கூலி பிழைப்புக் கூலி மட்டத்துக்குமேல் ஏறாது என்றெல்லாம் மால்தஸ் கூறியமையால், வருங்காலத்தைப் பற்றி அவர் துன்ப நோக்குக் கொண்டவர் (pessimist) என்று பிற்கால அறிஞர் கூறுகின்றனர்.

ஸேயின் சந்தைச் சட்டம் தேவைக்கு மிஞ்சிய பண்ட உற்பத்தியாவது, தேவைக்கு மிஞ்சிய மூலதனம் திரட்டுவதாவது பொதுப்படையாக ஒருக்காலும் நிகழாது. தொடர்ந்து மூலதனம் திரளுவது நாட்டுக்கு முன்னேற்றத்தை அளிக்கவல்லது; எந்த அளவு மூலதனம் திரண்டாலும் அதை உற்பத்தித் துறையில் முதலீடு செய்வது சாத்தியமே. இவ்வாறு ஒரேயடியாக முதலாளித்துவப் பொருளாதாரம் தானாகவே (automatically) இயங்கும். பொருள் உற்பத்தி பெருகி வாழ்க்கைத்தரம் உயர்ந்து கொண்டே போகும் என்ற வாதத்துக்குத் தமது பொருள் தேக்கக் கொள்கை வாயிலாக ஒரு மரண அடி கொடுத்தவர் மால்தஸ். ஆயத்த நிலைத் தேவை (effective demand) பெருகாமல் அடிக்கடி தோன்றும் பொருளாதார மந்தங்களைப் போக்கமுடியாது என்ற கருத்தை முதலாவதாக விளக்கியவர் மால்தஸ்தான். பொருள் உற்பத்தி செய்யாமல் துய்க்க வல்லவர் (unproductive consumers) சேர்ந்த ஒரு படையை உண்டாக்க வேண்டுமென்று அவர் கூறிய ஆலோசனையின் பிற்போக்கான தன்மை (reactionary nature) அவருடைய சிறப்புக்குரிய கருத்தின் ஒளியை இருட்டடிப்புச் செய்துவிட்டது. பொருள் தேக்கக் கொள்கையும் மால்தசை ஒரு துன்ப நோக்குடையவர் என்று கூற அரணாக அமைகிறது.

## 11. டேவிட் ரிக்கார்டோ
### (David Ricardo, 1772–1823)

'எப்படி எப்படிச் சொன்னாலும் நான் இரங்கேன் எனவே
அப்படி அப்படி நீ இருக்கின்ற அதிசயத்தை
இப்படி இப்படி என்றாகிலும் எனக்கே தெரியச்
செப்படி, செப்படி அம்மா ! மதுரைச்சிவா நந்தியே.'

—பட்டடைச் சொக்கநாதப் புலவர்

தொன்மைப் பொருளாதாரம் (Classical political economy) சுதந்திர வாதத்தை அடிப்படை கோட்பாடாகக் கொண்டிருப்பதை முந்திய அதிகாரத்தில் தெரிந்துகொண்டோம். அதன்

மற்றுமோர் அடிப்படைக் கருத்து 'பொருளாதார மனிதன்' (homo economicus) என்பதாம். இது ஒரு கற்பனை மனிதன்; அவன் பொருளாதார நோக்கம் தவிர, வேறு ஒரு நோக்கத்தாலும் பாதிக்கப்படாதவன். தாய் தந்தை, மனைவி மக்கள், பாசம், சமயப் பற்று, அரசியல் ஆசைகள் ஆகியவை ஒன்றினாலும் சற்றேனும் சலனப்படாதவன். மூன்றாவது முக்கியத் தொன்மை நூல் கருத்துக் கட்டுப்பாடில்லாத போட்டி. உலகியலில் போட்டி எங்கணும் நிறைந்திருக்கிறது என்பது இதன் உட்கருத்து. பயன் துய்ப்பவரிடையே, பண்டங்கள் விற்பவரிடையே, நிலச் சுவான்களிடையே, சம்சாரிகளிடையே (tenants), முதலாளிகளிடையே, தொழிலாளர்களிடையே, வணிகர்களிடையே, தொழிலதிபர்களிடையே எல்லா வகுப்பினரிடையேயும் விஷயம் நன்கு அறிந்த, வலுவான போட்டி நிகழ்ந்துகொண்டிருக்கிறது என்பதும் தொன்மை நூலாரின் எடுகோள். இத்தனைப் பண்புகளையும் ஒன்று சேர்த்து நோக்கின், ரிக்கார்டோவே தொன்மைப் பொருளாதாரத்தின் நிகரற்ற பிரதிநிதி யாவார். ஆயினும் வரலாற்று மரபில், ரிக்கார்டோவுக்கு ஆடம் ஸ்மித்துக்கு இரண்டாவது இடமே அளிக்கப்பட்டிருக்கிறது.

டேவிட் ரிக்கார்டோ எழுதிய 'பொருளாதாரக் கொள்கைகளும் வரிமுறைக் கொள்கைகளும்' (Principles of Political Economy and Taxation) என்பது பொருளாதார இலக்கியங்களில் மிகுந்த சிறப்பிடம் பெற்றதோர் அரிய நூல். 'நாடுகளின் செல்வம்' பிரசுரமாகி 41 ஆண்டுகள் கழிந்தபின் 1817-ல் பிரசுரமாகியது. அறிஞரும், தொழிலதிபரும், அரசினரும் அதில் கண்ட கொள்கைகளைப் போற்றினர்; நடைமுறையில் செயலாக்க முனைந்தனர். அந் நூல் வெளியானபின், முப்பது ஆண்டுகளுக்கு ரிக்கார்டோ பொருளாதார வானில் ஈடும் இணையுமின்றி ஒளி வீசிய விண்மீனாகத் திகழ்ந்தார்.

**வாழ்க்கை வரலாறு**

ரிக்கார்டோவின் தந்தை ஹாலந்து நாட்டு யூதர். அவர் லண்டன் பங்கு மார்கட் (stock exchange) தரகர்களில் ஒருவர். ரிக்கார்டோ லண்டனில் 1772-ல் பிறந்தார். பன்னிரண்டு வயதுச் சிறுவனாயிருக்கும்போது, அவர் வர்த்தகக் கல்விக்காக ஹாலந்துக்கு அனுப்பப்பட்டார். பதினான்கு வயதில் லண்டன் திரும்பித் தம் தந்தையின் தொழிலை மேற்கொண்டார். மிக்கத் திறமையுடன் வேலை செய்துகொண்டிருக்கும்பொழுது ஒரு கிருத்துவப் பெண்ணைக் காதலித்தார். தந்தையின் விருப்பத்துக்கு மாறாகக் கிருத்துவ சமயத்தில் சேர்ந்து, காதலித்த

பெண்ணை மணந்துகொண்டு, தனியே தொழிலை வெற்றியுடன் நடத்தினார். முப்பத்தாறு வயதில் சுமார் இருபது இலட்சம் பவுன் (சுமார் நான்கு கோடி ரூபாய்) மதிப்புள்ள சொத்துக்கு அதிபரானார். ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலம் வாங்கி, ஒரு பெரிய நிலக்கிழாராகி பாராளுமன்ற உறுப்பினருமானார். இரு பத்தேழு வயதிலேயே நல்ல செல்வம் திரண்டுகொண்டு வந்தது. அப்பொழுது தமக்குப் பள்ளிப் படிப்பு இல்லாத குறையை நீக்கத் தாமாகவே அரிய நூல்களை வாசிக்கத் தொடங்கினார். அச் சமயம் அவர் படித்த நூல்களில் ஆடம் ஸ்மித்தின் 'நாடுகளின் செல்வம்' ஒன்று. அதைப் படித்தபின் அவருக்கும் பொருளா தார நூலில் மிக்க ஆர்வம் பிறந்தது. மேலும் பல நூல்களைக் கற்றுணர்ந்தார் : அவற்றுடன் தமக்குத் தோன்றும் பொருளா தாரக் கருத்துகளைக் கட்டுரைகளாகவும், நினைவுக் குறிப்புகளாக வும் எழுதிக்கொண்டு வந்தார். அவற்றைப் படித்துப் பார்த்த நண்பர்கள்—சிறப்பாகப் புகழ்பெற்ற ஜே. எஸ். மில்லின் தந்தை யான ஜேம்ஸ் மில்—கட்டாயத்துக்கிணங்கி, நூல் வடிவமாகப் பதிப்பித்ததே 'பொருளாதாரக் கொள்கைகளும் வரிமுறைக் கொள்கைகளும்' என்ற நூலாகும்.

### ரிக்கார்டோ—ஆடம் ஸ்மித் : ஒப்புநோக்கு

கல்லூரிப் படிப்பின்றி, பங்கு மார்க்கட் அநுபவமும், வியக் கத்தக்க வெற்றியும் அடைந்த ரிக்கார்டோ உலகியலிலும் ஊறித் திளைத்த அலுவலதிபராக (business man) விளங்கினார். அவ ருக்கும் ஆடம் ஸ்மித்துக்கும் பல வேற்றுமைகள் உண்டு. பின்ன வரின் நூல் படிக்க இனிமையானதும் சொல்லிலும் நடையிலும் எழில் மிக்கது. உபமானங்களும், உலக வரலாற்றிலிருந்து பொறுக்கி எடுத்த பொருத்தமான உப கதைகளுமாக, அவர் நூல் விரிந்து, காவிரி வெள்ளம்போல் பரந்து செல்லும். ரிக்கார் டோவின் புத்தகம் கற்பதற்கு மிகக் கடினம். அது தசையும் குருதியுமில்லாத எலும்புக் கூட்டை நினைவுறுத்தக்கூடியது. தருக்க முறையில் முடிவு வரை, கருத்துகள் பின்னிக்கொண்டு இழுத்துச் செல்லும். என்றாலும் உலகை மறந்து அதனை நம்பி உயரப் பறந்தால், 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது' என்ற கதையாக முடியும். ஓரளவுக்குத் தருக்க முறை உண்மை அறிவு நல்கும். ஆடம் ஸ்மித் உலக வழக்கை யொட்டித் தம் தருக்க வாதத்துக்குக் கடிவாளம் பூட்டிக்கொள்பவர். ரிக்கார்டோ பங்கு மார்க்கட்டில் நிகழும் கட்டுப்பாடில்லாத கடும் போட்டியே உலகியல் வாழ்க்கையின் மூச்சு என்று நினைத்தவர். பொருளா தார நூலின் நோக்கம் உலக நடவடிக்கைகள் அனைத்தையும் ஆராய்வது என்பது ஸ்மித்தின் கருத்து. தேசிய வருமானத்தை

எவ்வாறு பங்கிடுவது என்பதை மாத்திரமே ஆராயவேண்டும் என்பது ரிக்கார்டோவின் நோக்கம். மால்தசுக்கு அவர் எழுதிய கடிதம் இதை மிகவும் தெளிவாகக் காட்டும். 'பொருளாதார நூல் செல்வத்தின் இயல்பையும், அதன் வளர்ச்சிக்குரிய காரணங்களையும் ஆராயும் நூல் என்று நீங்கள் ஆடம் ஸ்மித்தைப் பின்பற்றிக் கருதுகிறீர்கள். தேசிய வருமானத்தை உண்டாக்கியவர்களுக்கு என்ன முறையில் அதைப் பங்கிடுவது என்ற விதிகளைக் கண்டுபிடிக்கும் நூல் அது என்று கூற நான் விரும்புகிறேன். உற்பத்தியின் அளவும் வேகமும் பற்றி ஒருவித விதிகளையும் நாம் வகுக்க முடியாது. அவ் விதிகள் இயற்கை விதிகள் (natural laws) ; மாற்ற முடியாதவை. ஆனால் நிலச்சுவான், உழைப்பாளர், முதலாளி ஆகியவர்கட்கு என்ன விகிதாச்சாரத்தில் தேசிய வருமானத்தைப் பகிர்ந்தளிக்கவேண்டும் என்பதைப் பற்றிய விதிகளை ஓரளவுக்கு நாம் கண்டுபிடிக்கலாம். முந்திய ஆராய்ச்சி வீண் ; ஏமாற்றத்தில் முடியும். பிந்தியதே பொருளாதார நூலின் குறிக்கோள் என்னும் கருத்து நாளுக்கு நாள் என் மனத்தில் வளர்ந்துகொண்டே வருகிறது!' என்று எழுதியிருக்கிறார் ரிக்கார்டோ. (இந்தக் கருத்தினாலும் பின்னால் வந்த அறிஞர்கள் ரிக்கார்டோவைப் பின்பற்றியதாலும் பொருளாதார நூலின் வளர்ச்சி தடம் புரண்டு மூன்று தலைமுறைகள் வரை வறண்ட பாலைவனத்தில் ஏகியது என்பது கெயின்சின் (Keynes) கருத்து). மேற்கூறிய வேற்றுமைகள் ஆடம் ஸ்மித்துக்கும் ரிக்கார்டோவுக்கும் இடையே இருப்பினும், தனி மனிதனைப் பொருளாதாரத் துறையில் உந்தி ஆட்டிவைக்கும் சக்தி தன்னல உணர்ச்சிதான் என்ற அடிப்படைக் கொள்கை இருவருக்கும் பொதுவானது. ஆனால் ஆடம் ஸ்மித் வருங்காலத்தைப்பற்றி இன்ப நோக்கு (optimist) உடையவர். ரிக்கார்டோ பங்கீட்டுப் பிரச்சினையை ஆய்ந்து அலசியவர். அதில் நான்கு வகுப்பு உற்பத்தியாளரிடையே சண்டையும், பூசல்களும் உண்டாகும் என்ற முடிவுக்கு வருவதால், வருங்காலத்தைப்பற்றித் துன்ப நோக்கு (pessimist) உடையவர் ஆவர்.

### ரிக்கார்டோவின் நூல்

சுமார் 300 பக்க அளவில் 32 பெரியதும் சிறியதுமான அதிகாரங்களைக் கொண்டது ரிக்கார்டோ எழுதிய 'பொருளாதாரக் கொள்கைகளும் வரிமுறைக் கொள்கைகளும்.' முதல் ஆறு அதிகாரங்களில் பொருளாதாரத்தில் தாம் கூறவேண்டிய கொள்கைகளை யெல்லாம் புகுத்திவிட்டு, பதினேரு அதிகாரங்களில் 81 பக்கங்களில் வரி முறைகளை விளக்குகிறார். இவ்விரண்டு விஷயங்களுக்கு நடுவில் 17 பக்கங்களில் அயல்நாட்டு வணிகம் பற்றி ஒரு

அதிகாரம் உள்ளது. வரிகளை முடித்தபின் திரும்பவும் இலாபம், வட்டி, மதிப்பு, செல்வம் திரட்டல் போன்ற பொருளாதாரக் கருத்துகளின் ஆராய்ச்சி, காலனிகளின் உற்பத்தியைப் பெருக்க மானியங்கள், பின்னும் அரசாங்க வருமானம், செலவு, இயந்திரத்தினால் ஏற்படும் விளைவுகள் என இவ்வாறு பற்பல விஷயங்கள் கதம்பமாக மாறி மாறி அவர் நூலில் விரவிக் கிடக்கின்றன. இந்தக் கதம்ப நிலையே ரிக்கார்டோவின் நூல் அவசரத்தில் தொகுக்கப்பட்ட ஒரு கட்டுரைக் கோவை என்பதைக் காட்டும். முதல் 27 பக்கங்களில் பண்டத்தின் மதிப்பைப் பற்றி அவர் கூற வேண்டிய கருத்துகளையெல்லாம் கூறி வருகின்றார். நடைமுறை உலகத்தை ஒருபுறம் ஒதுக்கிவிட்டுக் கற்பனை உலகத்தில் சஞ்சரிப்பது ரிக்கார்டோவின் வழக்கம். எனவே அவருடைய நூல் கற்பதற்குக் கடினமாகிறது. ஆயினும் ஒரு தலைமுறை வரை அறிஞர் உலகில் எதிர்ப்பு யாதொன்றுமின்றித் தனியரசு புரிந்த நூல் அது என்றால் மிகையாகாது.

இந்த அரிய நூலில் விவரிக்கப்படும் கருத்துகளில் முக்கியமானவை பண்டங்களின் மதிப்பு, நிலப்பாட்டம், கூலி, வட்டி, இலாபம் ஆகும். ரிக்கார்டோ எழுதிய சிறு நூல்களில் நாம் கவனிக்கவேண்டியவை 'தாள் நாணயமும் தங்கமும்', ஒன்று, 'அனைத்து நாட்டு வணிக விதிகள்' மற்றொன்று.

**பண்டங்களின் மதிப்பு**

முதல் அதிகாரத்தில் அலசி ஆய்ந்த கருத்துப் பண்டங்களின் மதிப்பு என்பதாகும். அது பொருளாதார நூலுக்கே நடு நாயமாக விளங்கும் கேள்வி. தொடக்கத்திலேயே, ரிக்கார்டோ பொருள்களை இரு வகையாகப் பிரித்துக் கொள்கிறார். முதல் வகையைச் சேர்ந்தவை அரிய ஓவியங்கள், வெண்கல பளிங்குச் சிலைகள், சிற்பங்கள், பழங்காலத்துப் பொற்காசுகள் போன்றவை. அவற்றின் எண்ணிக்கையை எப்பாடுபட்டாலும் அதிகப்படுத்த முடியாது. இவை மீண்டும் உற்பத்தி செய்ய முடியாத (Non re-produceable) பண்டங்கள். அவற்றின் மதிப்பு அவற்றின் அருமைக்கும் தேவைக்கும் ஏற்றவாறு ஏறும். இனி அவற்றின் உற்பத்தி என்ற பேச்சு ஒருக்காலும் எழாது. எனவே ரிக்கார்டோ இவ்வகைப் பண்டங்களைத் தமது ஆராய்ச்சியிலிருந்து நீக்கி விடுகிறார். இரண்டாவது வகைப் பொருட்களின் உற்பத்தியோ வேண்டுமளவுக்குப் பெருக்கலாம். உணவுதானியங்கள், துணி, பாத்திரங்கள் முதலியவற்றின் உற்பத்தியை விரைவாகப் பெருக்க முடியும். இரப்பர், தேயிலை, கப்பல் முதலியனவற்றை அதிகமாக உண்டாக்கக் காலம் நீடித்தாலும் அவற்றின் உற்

பத்தியைப் பெருக்கக்கூடும். உற்பத்தி பெருகக்கூடிய பண்டங்களின் மதிப்பு எவ்விதம் நிர்ணயிக்கப்படும் என்பதைப் பற்றிதான் ரிக்கார்டோ ஆராய்கின்றார்.

இவ் வாராய்ச்சியில் ஆடம் ஸ்மித்தைப் பின்பற்றுகிறார் ரிக்கார்டோ. பண்டைக்காலத்தில் எல்லாப் பண்டங்களின் மதிப்பும் அவை உண்டாக்குவதற்கு வேண்டும் உழைப்பைப் பொறுத்திருக்கும் என்று ஆடம் ஸ்மித் கூறியது நினைவிலிருக்கும். உழைப்பே பண்டங்களின் மதிப்புக்கு அளவு கோல் என்ற கூற்று இயந்திரப் புரட்சிக்கு முந்திய காலத்துக்கு மட்டுமே பொருந்தும் என்றார் பொருளாதார நூலின் தந்தை. இந்த மதிப்புப் பிரச்சினை ஆராய்ச்சியில் ரிக்கார்டோ தந்தைக்கு மிஞ்சிய தனயனாகக் காட்சியளிக்கிறார். பண்டைக் காலத்தில் மட்டும் அல்லாமல் தற்காலத்திலும் உழைப்பே பண்டங்களின் மதிப்பை அளக்கும் அளவு கோல் என்பது ரிக்கார்டோவின் வாதம்.

இப் பிடிவாதம் அவருடைய தீவிரமான தருக்க ஆராய்ச்சியின் விளைவு. ஒரே ஒரு வழியில்தான் மதிப்பை அளக்கவேண்டும். ஒவ்வொரு காலத்துக்கு ஒவ்வொரு வழியை மேற்கொள்ளலாகாது என்பது அவர் கருத்து. ‘உழைப்புத் தாய், பண்டம் குழந்தை’ என்று முடிவு கட்டுகிறார். உழைப்பே மதிப்பின் அளவுகோல் என்னும் இக் கொள்கை உலகியலுக்குப் பொருந்தாது என்பது சிறிது ஆழ்ந்து நோக்கினால் தெளிவாகும். சிறப்பாக மூன்று விதங்களில் பொருந்தாது எனலாம்.

### உழைப்புக் கோடி விதம்

முதலாவதாகத் தற்கால உழைப்பில் ஆயிர விதங்கள் இருக்கின்றன. ஆதலின் அவற்றை எல்லாம் பொதுவாக அளக்க முடியுமா? வக்கீல், மீன் வலைஞன், நீதிபதி, படாதிபதி, மண் வெட்டுபவன், மருத்துவன் முதலியோருடைய உழைப்பின் தன்மையும் தரமும் எத்தனையோ வேறுபாடுகள் உடையன வன்றோ? எவ்வாறு ஒருவகை உழைப்பை மற்றொரு வகை உழைப்புடன் ஒப்பிடுவது? இணைப்பது? செம்படவனின் 8 மணி நேர உழைப்பும் பொறி இயல் வல்லுநரின் 8 மணி நேர உழைப்பும் சமமாயிருக்குமா? உழைப்புப் பலவகை, பலதரப்பட்டதாயிருப்பதால், ஒரு பொதுவான அளவுகோல், எம்மாதிரி உழைப்பாக இருக்கவேண்டும் என்பதில் உழைப்பாளர்களிடையே கூட ஒருபடித்தான எண்ணம் இருக்க முடியாது. இந்தப் பிரச்சினையை ரிக்கார்டோ தீர்க்கும் விதம் விநோதமானது.

உதாரணமாக, ஒரு தொழிலாளரின் 8 மணி நேர உழைப்பை எடுத்துக்கொள்வோம். இந்த உழைப்பால் 8 முழ வேட்டி ஒன்று

நெய்கிருர் என்ருல், வேட்டியின் மதிப்பு 8 மணி நேர உழைப்புக் குச் சமம். இப்பொழுது ஒரு மணி நேர உழைப்பை ஓர் அளவு கோலாக எடுத்தால் வேட்டியின் விலை மதிப்பு, ரிக்கார்டோவின் கொள்கைப்படி எட்டு உழைப்பு அளவைகள் எனக் கணக்கிட லாம். ஆனுல், ஒரு மணி நேர உழைப்பை ஓர் எண் என்று யாரால் நிச்சயமாகச் சொல்லமுடியும்? இதற்கு ரிக்கார்டோ அளிக்கும் விடை டின் வருமாறு: அந்த வேட்டி, சந்தையில் என்ன மதிப்புப் பெறுகிறது என்று பார்த்து அம் மதிப்பிலிருந்து ஒரு மணி நேர நெசவாளி உழைப்பின் மதிப்பைக் கணக்கிடலாம் என்பது. அந்த வேட்டி குறைந்த மதிப்புப் பெற்ருல், ஒரு மணி நேர உழைப்பின் மதிப்பு குறையும். அதிக மதிப்புப் பெற்ருல், அதிக மதிப்புப் பெறும். உழைப்பை வைத்துப் பண்டத்தின் மதிப்பைப் போடலாம் என்பது ரிக்கார்டோவின் கொள்கை. ஆனுல், இப்பொழுது அவர் பண்டத்தின் சந்தை மதிப்பிலிருந்து உழைப்பின் மதிப்பைக் கண்டுபிடிக்கச் சொல்கிருர். இது தலை கீழ்ப் பாடமாக அல்லவா தோன்றுகிறது? உப்புத் தன் சுவையை இழந்துவிட்டால், அதற்கு உப்புத்தன்மை யளிப்பது எப்படி? அதேபோல் உழைப்பு ரிக்கார்டோ வழங்கிய 'மதிப்பு அளக்கும் தன்மை'யை இழந்துவிட்டால், அந்த அளவுகோல் எதற்கு உதவும்? ஏட்டுச் சுரைக்காய்தானே.

**முதல் என்பதற்கு ஊதியம் கிடையாதா?**

முதல் ஒரு பொருளாக்குச் சாதனம் அன்ருே? பண்ட மதிப் பின் அளவுகோல் உழைப்பு என்ற ஒருதலைப்பட்ட முடிவு. இரண்டாவது விதத்தில் நோக்கினுலும் நவீன உலகியலுக்குப் பொருந்தாது என்பது விளங்கும். எப்படி என்று பார்ப்போம். தற்காலத்தில் எந்தப் பண்டத்தை உண்டாக்கவும் சில சாத னங்கள் பயன்படுகின்றன. உழவன் தன் கை நகத்தால் நிலத் தைக் கிளறுவதில்லை. ஏர், கலப்பை, இயந்திர ஏர் என்பன அவன் பயன்படுத்தும் பொருளாக்குச் சாதனங்கள். இவற்றைப் பொருளாதார நூலில் 'முதல்' என்று கூறுவர். ஏர் இல்லா மலும் பயிர் செய்யலாம். ஏரை உபயோகித்தால் உற்பத்தி பெருகும். ஏர் செய்யும் உதவிக்குச் சன்மானம் கிடையாதா? இந்த முதலுக்கு வட்டி என்ன? விளையும் தானியத்தின் மதிப்பில் ஒரு பாகமாக வேண்டும் அன்ருே? உழவன் உடல் உழைப்பு மாத்திரம் தானியத்தின் மதிப்பை அளக்குமானுல், முதல் என் பது ஊதியமின்றிப் போகுமா? ரிக்கார்டோ இதற்கு அளிக்கும் விடை இது: முதல் என்பது உழைப்பின் பயன்தான். தச்சர் நான்கு நாட்கள் செய்த வேலையின் சட வடிவமே ஏர். உழைப்பை உறையச் செய்து (நெய்யைப் போல) ஒரு செப்பில் அடைத்த

மாதிரி இருப்பது ஏர். ஒவ்வொரு நாள் உழும்பொழுதும் முன்னால் அடைக்கப்பட்ட உழைப்பு ஒழுகி, உழவனது உடல் உழைப்புடன் கலந்து, உற்பத்தியைப் பன்மடங்கு பெருக்குகிறது. இம் மாதிரி நாள்தோறும் ஏரில் அடைபட்ட உழைப்பு வெளியே பாய்ந்து கொண்டே போனால், ஒரு நாள் உறைந்திருந்த உழைப்பு முழுவதும் உருகிக் காலியாகி விடும். இந்நிலை, என்றைக்கு உழவன் 'எனது ஏர் தேய்ந்து கெட்டுப்போய்விட்டது, புது ஏர் வாங்க வேண்டியதுதான், பழைய ஏரைத் தூரப் போடவேண்டியது தான்' என்று தீர்மானிக்கிறானோ, அன்று ஏற்படும். இரண்டு, நான்கு அல்லது பத்து ஆண்டுகளில் ஏதாவது ஒருநாள் முதல் கரைந்துவிடும். இது மாதிரியே உழவன் நிலத்துக்கு இடும் உரம், விதைக்கும் வித்து, எல்லாம் உழைப்பின் குழந்தைகளே. இயந்திரம், கலப்பை போன்றவை சில ஆண்டுகள் உபயோகத்திலிருந்து ஒழிந்து விடும். உரம், விதை, பஞ்சு, சணல், நிலக்கரி போன்ற மூலப் பொருள்களை ஒரே ஒரு தடவைதான் உபயோகிக்கமுடியும். ஒரே ஒரு உபயோகத்துக்குப் பின் அழியும் இயல்புடைய பொருளாக்குச் சாதனங்களைப் 'புரளும் முதல்' (circulating capital) என ரிக்கார்டோ கூறுகிறார். பஞ்சு நூலாகிப் புடவையானாலும், புடவை விற்ற முதலிலிருந்து ஆலைக்காரர் திரும்பவும் பஞ்சு வாங்குவர். பஞ்சாலையின் முதல் இவ்விதம் சுழன்றுகொண்டே வரும். சிறிய அல்லது நெடிய காலம் உபயோகத்தில் இருந்து பின்னால் அழியும் முதலுக்கு 'நிலை முதல்' (fixed capital) எனப் பெயர். இவ்விரண்டு வகை முதலும் ஒரே மாதிரியாக உழைப்பின் பலன்தான். உழைப்பின் குழந்தைகள் என்று சொல்லினும் பொருந்தும். தாயைப் போலக் குழந்தை. தாயாகிய உழைப்பை அளக்கும் முறையில் இரட்டைக் குழந்தைகளாகிய இரண்டுவித முதலையும் அளந்து கொள்ளலாம் என்பது ரிக்கார்டோவின் தத்துவம். 'உழைப்பை அளக்க ஒரு கணக்கு. பின்னால் பல வகைப்பட்ட முதலை அளக்க வேறொரு கணக்கு என்று வேண்டாம். பல வகைப்பட்ட முதலும் உழைப்பின் பல்வேறு அவதாரங்களே. உழைப்பு என்னும் அளவுகோல் எல்லாவற்றையும் அளந்துவிடும் என்று ரிக்கார்டோ கூறுகிறார்' முதல் என்பது உறைந்த, இறுகிய உழைப்பு. அது ஒரு தனிப்பட்ட பொருளாக்குச் சாதனம் அல்ல என்பது அவர் சித்தாந்தம். அதற்கென ஒரு ஊதியமும் தனியாக வேண்டியதில்லை. ஒதுக்கப்படவும் வேண்டாம் என்ற முடிவுக்கு மேற்கூறிய (விதண்டா) வாதத்தினுதவியால் வந்து சேருகிறார் ஆசிரியர்.

### நிலவளத்துக்கு உற்பத்தியில் பங்கு கிடையாதா?

பொருளாக்குவதற்கு இன்றியமையாதது நிலம். பயிர் சாகுபடியில் அது நேரடியாக உதவுகிறது. கைத்தொழிலில் நேரிலும் மறைமுகமாகவும் உதவுகிறது. எந்தத் தொழிலாயினும் நிலத்தில் ஆலை அல்லது கட்டடம் கட்டினால்தானே வேலை தொடங்கலாம்? ஒரு தொழிலும் திரிசங்கு சுவர்க்கத்தில் அல்லது நவீன வானவெளிக் கப்பலில் இயங்குவதில்லை. நிலம் நேரில் பயன்படுகிறதைக் காணலாம். நிலத்திலிருந்து கிடைக்கும் பருத்தி, சணல், எண்ணெய் வித்துகள், இரப்பர், தாதுப் பொருள்கள் ஆகிய மூலப் பொருள்களின் வழியே மறைமுகமாக நிலம் பொருளாக்குவதற்கு உதவி புரிகிறது. இந்த உதவியில் ஐயப்பாடு இல்லையென்றால் அதற்கு ஊதியம் கொடாதிருக்கலாமா? அப்படி ஊதியம் கொடுப்பதானால் ஆக்கப்பட்ட பொருளின் மதிப்பில் அதையும் சேர்க்கவேண்டாமா? நிலத்துக்குக் கொடுப்பது பாட்டம் (rent). அதைக் கொடுக்காமல் நிலச்சுவான்கள் அனுமதிக்கமாட்டார்கள். எனவே பாட்டம் பண்டத்தின் மதிப்பில் ஒரு பகுதியாயிருக்கவேண்டும் என்பது நியாயம். இந்த வாதத்தை ரிக்கார்டோ ஒப்புக்கொண்டால், உழைப்பே பண்டங்களின் மதிப்புக்கு மூலாதாரமான ஒரே காரணம் என்ற அவர் கூற்றும் பொய்த்துவிடுமல்லவா? அது பொய்யாகக்கூடாது என்ற நோக்கத்துடன் ரிக்கார்டோ தமது புகழ்பெற்ற நிலப் பாட்டக் கொள்கையை வகுத்து விளக்குகிறார்.

### நிலப்பாட்டக் கொள்கை (Theory of Rent)

உழைப்பு மட்டுமே மதிப்பின் அளவுகோல் என்ற கொள்கைக்குப் பொருந்தாத மூன்றாவது விஷயம் நிலத்தின் பாட்டம் என்பதுதான். எந்தப் பண்டம் உண்டாக்கவும் நிலம் அவசியம் என்பதைப் புரிந்துகொண்டோம். பாட்டமும் பண்டத்தின் மதிப்பில் ஒரு பகுதியாக வேண்டாவா? இயற்கை வாதிகள் உழவிற்கு மட்டுமே வந்தனை செய்தனர். ஆடம் ஸ்மித் உழவு பிற தொழில்களைவிட அதிக உற்பத்தியும் ஊதியமும் தரும் என்றார் இவர்களெல்லோருமே இயற்கையானது கருணை மிகுந்தது என்று நம்பியவர்கள். ரிக்கார்டோ இயற்கை ஒரு பெரிய லோபி, மிக்க கருமித்தனம் கொண்டது என்று வாதாடுபவர். முதலாவதாக இயற்கை மக்கள் தேவைக்கு வேண்டுமளவு நிலம் கொடுக்கவில்லை. நிலப்பரப்பு உலகத்தில் மிகுதியாகத் தோன்றினாலும், அதில் கணிசமான பகுதி சகாராப் பாலைவனம் மாதிரி வளமில்லாத நிலமாகக் கிடக்கின்றது. வளம் பலதரப்பட்டது. வளம் மிக்க நிலம் மிகக் குறைவு. குறைந்த வளமுள்ள நிலங்களையும் பயிர் செய்துதான் நெல், கோதுமை போன்ற விளைபொருள்கள்

சந்தைகககு வருகின்றன. நல்ல நிலத்தில் விளைச்சல் அதிகம். எனவே, அங்கே தானிய மூட்டை ஒன்றுக்கு அடக்கச் செலவு குறைவு. வளம் குன்றிய நிலத்தின் அடக்கச் செலவு அதிகம். இந்த அதிக அடக்கச் செலவின் அளவுக்குச் சந்தை விலை யிருக்க வேண்டும். இல்லாவிட்டால் வளம் குன்றிய நிலத்தைப் பயிர் செய்தால் நஷ்டம் ஏற்படும். இம்மாதிரியான விலை, வளம் மிக்க நிலத்தைச் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு நல்ல இலாபத் தைக் கொடுக்கும். அதிக இலாபம் வருவதைக் கண்ணுற்ற மற்ற விவசாயிகள் அம்மாதிரி வளமிக்க நிலத்தைப் பயிரிடப் போட்டியிடுவர். நிலச்சுவான்கள் இந்தப் போட்டியைப் பயன் படுத்திக் கொண்டு நிறைய நிலப்பாட்டம் வாங்குவர். வளம் மிகவும் குறைந்த நிலத்தின் அடக்கச் செலவும் சந்தையின் விலை யும் சமமாயிருக்கும். எனவே இந்த நிலத்துக்குப் பாட்டம் கிடைக்காது. பாட்டம் கொடுப்பதானல் விவசாயிகள் நஷ்ட மடைவர்.

அதிருஷ்ட வசமாக வளம் மிக்க நிலத்தைச் சொத்தாக அடைந்த அதன் உரிமையாளர் பாட்டம் வாங்குவது ஒரு கப்பம் வாங்குவது போலும் என்கிருர் ரிக்கார்டோ. இந்தப் பாட்டம் பொருள்களின் அடக்கச் செலவில் சேருவதில்லை என்கிருர். அதற்கு அவர் தரும் உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். அவர் அதில் வாதிக்கும்பொழுது கற்பனை உலகில் எத்தனை அடுக்குக் கோபுரம் கட்டுகிருர் என்பதைப் புரிந்து கொள்ளலாம். இவர் வாதத்தில் ‘வைத்துக்கொள்வோம்’ (Let us suppose) என்னும் சொற்ருெடர் எத்தனை தடவை வருகிறது அல்லது வரக்கூடும் என்பதைக் கூர்ந்து கவனிக்கவும்.

### கொள்கை விளக்கம்

ஒரு தீவு இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அதில் மூவகை நிலங்கள் இருக்கின்றன என்று வைத்துக் கொள் வோம். அவற்றில் ஒன்று 1000 ஏக்கர் முதல்தரமான நிலம் என்றும் இரண்டாவது 1000 ஏக்கர் இரண்டாந்தரம் என்றும் மூன்ருவது 1000 ஏக்கர் மூன்ருந்தர நிலம் என்றும் வைத்துக் கொள்வோம். ஏக்கருக்கு ரூ. 100 செலவிட்டால் முதல்தர நிலத்தில் 40 கலமும், இரண்டாவதில் 25 கலமும், மூன்ருவதில் 10 கலமும் நெல் விளைகிறது என்று வைத்துக் கொள்வோம். ஓர் ஆண்டில் அந்தத் தீவுக்கு 100 பேர்கள் கப்பலில் வந்து இறங்குகின்றனர் என்றும், அவர்கள் எல்லோரும் உழவர்கள் என்றும், நல்ல நிலமாகிய முதல்தர நிலத்தைப் பயிர் செய்கிருர்கள் என்றும், வேண்டுமளவுக்கு அவர்களுக்கு நெல் கிடைக்கிறதென்றும்

வைத்துக் கொள்வோம். அடுத்த ஆண்டில் இன்னும் 300 பேர் வந்து சேருகின்றனர் என்றும், முதல்தர நிலத்தில் மொத்தம் 200 பேர்கள் ஆளுக்கு ஐந்து ஏகராவாகப் பங்கிட்டுக்கொள்கின்றனர் என்றும், மீதியுள்ள 200 பேரும் இரண்டாந்தர நிலத்தைப் பயிர் செய்கிறார்களென்றும் வைத்துக்கொள்வோம். முதல்தர நிலத்தைப் பயிரிடுவர்களுக்கு ஒரு கலம் நெல்லுக்கு அடக்கச் செலவு $100 \div 40 =$ ரூ. 2-50 என்றும் இரண்டாந்தர நிலத்தில் $100 \div 25 =$ ரூ. 4-00 என்றும் ஆகும். நெல் பயிரிடுபவர் எல்லோரும் ஒரே சந்தையில் விற்பதாகக் கொள்வோம். அச் சந்தையில் முழுக்க முழுக்க அவர்கள் போட்டியிடுகிறார்கள் எனக் கொள்வோம். அந்தச் சந்தையில் மொத்தம் உற்பத்தியான $(100 \times 40) + (100 \times 25) = 6500$ கலம் நெல்லுக்கும் தேவையிருக்கிறதென்று கொள்வோம். அப்படியானால் ரூ. 4-00-க்கு ஒரு பைசாக் குறைந்தாலும் இரண்டாந்தர நிலத்தைப் பயிர் செய்தவர்கள் அவர்கள் நெல்லை விற்கமாட்டார்கள். ஏனெனில் கலம் ஒன்றுக்கு ஒரு பைசா நஷ்டமாகும். ஆனால், அவர்கள் கொண்டு வந்த நெல்லுக்கும் தேவை இருந்தால், அவர்களுக்கு நஷ்டம் வராத விலையாகிய ரூ. 4-00-ல் தான் நெல் விற்கும். வாங்குவோர் முதல்தர நில விவசாயிகளிடம் மாத்திரம் 'உங்கள் அடக்கச் செலவு ரூ. 2-50 தானே' அதனால் ரூ. 2-50-க்கு விற்கவேண்டும், என்று வற்புறுத்த முடியாது. எல்லா நெல்லும் ஒரே மாதிரியாக இருந்தால் ஒரே விலைதானே இருக்க முடியும். எனவே முதல்தர நிலத்தைப் பயிரிட்டவர்களுக்கு ரூ. 1-50 இலாபம் கிடைக்கும். இதை இரண்டாந்தர நில விவசாயிகள் அறிந்துகொள்வார்கள். அவர்களுக்கு இப்பொழுது இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று தங்களுக்குள்ள நிலத்தையே பயிரிட்டுக் கலம் ஒன்றுக்கு ரூ. 4-00 செலவழித்து, அப்படிச் செலவழித்த பணத்தை நெல் விற்றுப் பெறுவது. மற்றொன்று, முதல்தர நிலசுவான்களிடம் நிலம் பாட்டத்துக்கு வாங்கிக் கலம் ஒன்றுக்கு ரூ. 2-50 வீதம் செலவு செய்து விற்கும் விலை ரூ. 4-00-ல் ரூ. 1-50 வரை பாட்டமாகச் செலுத்துவது. (பாட்டம் இந்த வகை விவசாயிகளின் போட்டியினால் ரூ. 1-50 வரை உயர்ந்து விடும்). இரண்டு வழிகளின் பயனும் ஒன்றுதான். ஆனால் இரண்டாவது வழியைப் பின்பற்றினால் அதிருஷ்டக்காரரான முதல்தர நிலச்சுவான்கள் நிலத்தில் பாடுபடாமல் சும்மா இருந்துகொண்டே ஏகரா ஒன்றுக்கு ரூ. $1\text{-}50 \times 40$ (கலம்) $=$ ரூ. 60 பாட்டமாகப் பெற்று, உண்டு களித்திருப்பர்.

மறு வருஷம் இன்னும் 200 விவசாயிகள் தீவில் வந்திறங்குகிறார்கள் என்று கொள்வோம். முதல் இரண்டு தர நிலங்களை

யும் முன் வந்தவர்கள் சொந்தமாக்கிக் கொண்டதால், அவர்கள் மூன்றாந்தர நிலத்தைப் பயிரிடுவர். ஏகரா ஒன்றுக்குப் பத்துக் கலம்தான் விளையுமாதலால், ஒரு கலம் நெல்லின் அடக்கச் செலவு ரூ. 10-00 ஆகும். சந்தையில் இவர்கள் எல்லோரும் உற்பத்தி செய்யும் 1000 × 10 = 10,000 கலம் நெல்லுக்கும் தேவையிருந்தால், இவர்களால் ரூ. 10-00-க்கு குறைவாக விற்பது இயலாது. இவர்களிடம் கலம் ஒன்றுக்கு வியாபாரிகள் ரூ. 10-00 கொடுத்து வாங்கினால் சந்தை விலை எல்லோருக்கும் ரூ. 10-00 ஆகிவிடும். இரண்டாந்தர விவசாயிகளுக்குக் கலம் ஒன்றுக்கு ரூ. 10—ரூ. 4 = ரூ. 6-00 இலாபம் கிடைக்கும். முதல்தர நில விவசாயிகளுக்கு ரூ. 7-50 இலாபம் கிடைக்கும். கடைசியாக வந்த விவசாயிகள் இப்பொழுது என்ன செய்யக்கூடும்? (1) மூன்றாந்தர நிலத்தைப் பயிரிடலாம். (2) முதல்தர நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து ரூ. 7-50 வரை பாட்டம் கட்டலாம். (3) இரண்டாந்தர நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து ரூ. 6-00 வரை பாட்டமாகக் கட்டலாம். இந்த உதாரணத்திலிருந்து எப்படி நெல் விலை நிர்ணயிக்கப்படுகிறதென்பதை ரிக்கார்டோ ஆராய்கிறார். சாகுபடியிலிருக்கும் மிகவும் கீழ்த்தரமான நிலத்தில் விளையும் நெல்லின் அடக்கச் செலவுதான் விலையை நிர்ணயிக்கிறது என்கிறார். விலை ரூ. 10 ஆக இருக்கும்போது, மூன்றாந்தர நில விவசாயிகளுக்கு இவ்விலை உழைப்புக்கு அல்லது செலவுக்கு மட்டும் போதிய கூலி தரும். அவாகளுடைய நிலம் பாட்டம் என்னும் இலாபத்தை அளிக்காது. எனவே, அந்த விலையில் பாட்டம் என்பது ஒரு பகுதியாகச் சேரவில்லை. ஆனால் விலை உயர உயர, மேல்தர நில விவசாயிகளுக்குப் பாட்டம் கிடைக்கும். பாட்டம் கிடைப்பது விலையுயர்வினால்தானேயொழிய, இயற்கையின் கருணையினால் அல்ல; நிலத்தின் வளத்தினாலும் அல்ல; இயற்கை கருமியாக இருப்பதனால்தான். அந்தத் தீவில் உள்ள 3000 ஏகரா நிலம் முழுவதையும் முதல்தரமாக இயற்கையன்னை அருளவில்லை. முதல்தர நிலம் 1000 ஏகராவிலும், ஏகரா ஒன்றுக்கு ஏன் 40 கலம் நெல்தான் விளையவேண்டும்? ஏன் ஏகராவுக்கு 400 கலம் விளையக்கூடாது? எனவே, இயற்கையின் லோபித்தனம் வெட்ட வெளிச்சம் ஆகிறது. நிலத்தின் வளத்தில் வேற்றுமை செறிந்து கிடக்கிறது. இச் சூழ்நிலையில் முன் கூட்டியே முதல் தர நிலத்தைக் கைப்பற்றிய பேர் வழிகள் அதிருஷ்டசாலிகள். நாட்டில் மக்கள் தொகை வளர வளர, உணவு தானியங்களுக்குத் தேவை பெருகும். அது பெருகப் பெருக, அவர்கள் பிறரிடமிருந்து, ஏறிக்கொண்டே போகும் பாட்டத்தைப் பெறக்கூடிய நல்வாய்ப்புப் பெறுகின்றனர். இதுவே ரிக்கார்டோவின் புகழ்பெற்ற நிலப்பாட்டக் கொள்கை

(Theory of Rent) பல தரப்பட்ட நிலங்கள் சாகுபடி செய்யப படுவதால் உண்டாகும் விளைவே பாட்டம். நிலவள வேற்றுமை களிலிருந்து கிடைக்கும் இலாபமே (diffential gain) பாட்டம் என்று கூறலாம்.

இதன் முக்கிய அம்சங்களை இனி தொகுத்துப் பார்ப்போம்.

(1) சாதாரணமாக விவசாயிகள் முதல்தர நிலத்தை முத லிலும், கடைசித்தர நிலத்தைக் கடைசியிலும் சாகுபடி செய்வர். இந்த முறையை அமெரிக்க நாட்டில் குடியேறினவர்கள் கையாள வில்லை என்று மறுக்கிறார் அமெரிக்கப் பொருளாதார அறிஞர் கேரி (Carey) என்பவர். சிவப்பு இந்தியர்களுக்குப் பயந்து புதி தாகக் குடியேறிய ஐரோப்பியர் கடலோரத்திலும், மலைச் சரிவு களிலும் முதலில் பயிர் செய்தார்கள். ஏனெனில் சிவப்பு இந்தியர் தாக்க வந்தால், கடலோரமானால் கப்பல்களில் தாவிக்கொள்ள வும், மலைச் சரிவானால் குன்றின்மேல் நின்று அடிவாரத்திலிருந்து ஏறிவரும் பகைவர்களை எளிதில் முறியடிக்கவும் வசதியிருக்கும். ஆதலால் வளம் கொழிக்கும், வண்டல் தேங்கியிருக்கும் பள்ளத் தாக்குகளில் முதலில் அவர்கள் பயிர் செய்யவில்லை. இவ்வகை யில் உழவர்கள் வளமிக்க நிலத்தை விட்டுவிட்டு வளம் குறைந்த நிலத்தை முதலில் பயிரிடுவது விதிவிலக்கே ஆம். ரிக்கார்டோ வின் கூற்று நடைமுறையில் பொதுவாக உண்மைதான்.

(2) 'ஆள் செலவுக்கும் பணச் செலவுக்கும் ஏற்ப நிலத்தின் வருமானம் கூடுவதில்லை. ஆனால், குறைந்துகொண்டே போகிறது' என்ற ஓர் இயற்கை விதியை ரிக்கார்டோ வற் புறுத்துகிறார். மால்தஸ் இதை ஆதாரமாகக் கொண்டுதான் அவருடைய மக்கள் தொகை வளர்ச்சிக் கொள்கையை வகுத்திருக் கிறார். எனவே வர வர வருமானம் குன்றும். உற்பத்தி விகிதாச் சாரத்தில் குறையும் என்பது ரிக்கார்டோவின் புதுக் கருத்து அல்ல. ஆனால், அதனை மிகவும் அழுத்தமாக வற்புறுத்தியதே அவர் பெருமை. அவர் கொள்கை 'செலவுக்குத் தக்கபடி நிலம் விளைச்சலைத் தராது' என்பது. அப்படித் தருமானால் ஒரு நூறு சதுர அடி மைதானத்தில் வேண்டுமளவும் செலவு செய்து, ஒரு நாட்டுக்கு வேண்டிய கோடிக்கணக்கான டன் உணவு தானியங் களை உற்பத்தி செய்துவிட முடியுமல்லவா? ஆனால் அப்படி முடிவதில்லையே. செலவு அதிகம் ஆக ஆக விளைவின் விகிதம் குறைந்துகொண்டேதான் போகிறது. இந்தக் குறைந்து செல் விளைவு விதி (Law of Diminishing Returns) இயற்கையின் கரு மித் தனத்துக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு, என்பது ரிக்கார்டோ வின் கருத்து.

(3) நெல்லின் விலை கடைசித்தர நிலத்தில் விளையும் நெல்லின் அடக்கச் செலவைப் பொருத்திருக்கும்.

(4) கடைசித்தர நிலத்தில் விளையும் நெல்லின் அடக்கச் செலவில் நிலப்பாட்டம் பங்கு பெறுவதில்லை. அந் நிலத்துக்குப் பாட்டம் கிடையாது. அதை பாட்டமில்லா நிலம் (no rent land) என்று கூறுவர்.

(5) நெல்லின் விலையில் பாட்டம் பங்கு பெருது (Rent does not form part of the cost of production and price). உழைப்பு தான் பண்டங்களின் மதிப்புக்குத் தனிப் பெருங் காரணம் என்பதை நிலைநிறுத்த அந்தப் பாட்டத்தைப் பற்றிய முடிவையே ரிக்கார்டோ தேடியலைந்தார்.

(6) நிலவளத்தின் வேற்றுமைப் பாங்குதான் பாட்டம் எழுவதற்குக் காரணம் என்பது ரிக்கார்டோ தரும் உதாரணத்திலிருந்து விளங்கும்.

(7) எல்லா நிலங்களும் ஒரே தரமாயிருந்தால் பாட்டம் கிடைக்காது என்பதில்லை. 3,000 ஏகராவும் ஒரே தரமானுல் மொத்தம் $3,000 \times 40 = 1,20,000$ கலம் உற்பத்தியாகும். கலம் ஒன்றுக்கு அடக்க விலை ரூ. 2-50 ஆனுல் மொத்த ஜனத்தொகை 5,000 ஆக வளர்ந்துவிட்டதென்றும், அவர்களுக்கு வேண்டுவது 5,00,000 கலம் என்று வைத்துக்கொள்வோம். தேவை மிகுதி, வழங்கல் குறைவு. விலை–அதிலும் அவசிய உணவுப் பொருளின் விலை–விஷம்போல் ஏறும். கலம் ஒன்றுக்கு ரூ. 6 என விற்பதாக வைத்துக்கொள்வோம். நிலத்தைப் பயிரிடுவோர் எல்லோரும் கலம் ஒன்றுக்கு ரூ. 3-50 இலாபம் பெறுவர். இதைக் கிடைப்பதற்கு அரிய அருமையால் வந்த பாட்டம் (Scarcity rent) என்று குறிப்பிடுவது வழக்கம்.

இந்த இருவிதப் பாட்டங்களையும் தற்காலப் பாட்டக் கொள்கையுடன் ஒப்பு நோக்குதல் தகும். தற்காலப் பொருளாதார நிபுணர் நிலப்பாட்டம் வேறு விதமாகக் கணிக்கப்பட வேண்டுமெனக் கருதுகிருர்கள். ஒரு நிலத்தில் சோளம் விதைத்தால் ஏகராவுக்கு ரூ. 500 நிகர வருமானம் கிடைக்கும். நிலக்கடலை விதைத்தால் ரூ. 1200 கிடைக்கும். அப்படியானுல், ஒரு நிலச்சுவானும் சோளத்திலிருந்து நிலக்கடலைக்கு மாற்ருதிருக்க மாட்டான். இதனுல் வரும் உபரி வருமானம் ரூ. 700. இதைப் புதிய வாய்ப்பினுல் வந்த பாட்டம், வாய்ப்புப் பாட்டம் (opportunity rent) என்று கூறுவர்.

## நிலப்பாட்டம் ரிக்கார்டோவின் சூத்திரம்

ரிக்கார்டோவின் நிலப்பாட்டம் பற்றிய சூத்திரத்தை அவர் வாசகத்திலேயே பார்ப்போம். 'நிலப்பாட்டம் என்பது நிலவளத்தைப் பயன்படுத்தி விளைவிக்கும் பொருளில் நிலச்சுவானுக்குத் தரப்படும் பகுதி. நிலவளத்துக்கு இரு சிறப்பியல்புகள் உண்டு. இயற்கையின் நன்கொடை (natural gift) என்பது ஒன்று; அழிக்க முடியாதது (indestructible) என்பது மற்றொன்று. இந்தச் சூத்திரத்தில் காணும் இரு இயல்புகளையும் உண்மையல்ல என்று பின்னால் வந்த பொருளாதார அறிஞர்களில் சிலர் கூறுகின்றனர். இயற்கையின் நன்கொடை எவ்வளவு உயர்ந்ததாயிருப்பினும் மனிதனது உழைப்பு இல்லாமல் நிலம் விளைச்சலைத் தராது. வெப்ப மண்டலக் காடுகளில் கூட இயற்கை வளத்தினால் மட்டும் உற்பத்தி செய்ய முடியாது. காட்டைத் திருத்தினாலன்றி அது விவசாயத்துக்கு உதவாது. எனவே மனித உழைப்பே கலவாமல் பயன் தரும் தனிப் பெரும் இயற்கை வளம் என்பது கிடையாது என்பது ரிக்கார்டோவின் எடுகோலுக்கு ஒரு மறுப்பு. கட்டாந் தரிசான ஒரு நிலத்தை ஒருவனுக்குச் சொந்தமாக்கி விட்டால் அதில் பாடுபட்டு அதை வளமான வயலாக்கி விடக்கூடும். 'மணல் நிலமாயினும் சொத்துரிமை எனும் மந்திரக்கோல் அதைப் பொன் விளையும் பூமியாக்கி விடும்' (magic of property turns sand into gold) என்பது அமெரிக்க அறிஞர் ஹென்றி ஜார்ஜின் கூற்று. நிலவளம் அழியக்கூடியது. வளமிக்க நிலமும் எரு விடாமல் இரண்டு மூன்று ஆண்டுகள் பயிர் செய்தால் வளம் குன்றிப் பாலை நிலமாகிவிடும் என்பது யாவருக்கும் தெரிந்ததே. எனவே அழிக்கமுடியாதது என்று ரிக்கார்டோ கூறுவதும் தவறு என்பது இரண்டாவது மறுப்பு. இவ்விரு குறைபாடுகளையும் பெரிய தவறுகள் என்று கருதவேண்டியதில்லை. இவற்றை ரிக்கார்டோ உணராது போன பேதையல்ல. இவ்விரு குறைபாடுகளையும் பொருட்படுத்தாமல் ரிக்கார்டோவின் நிலப்பாட்டச் சூத்திரத்தை மாணவரும் ஆசிரியரும் நெட்டுருச் செய்து கொள்வதை இவ்விடத்தில் குறிப்பிடாமலிருக்க முடியாது.

## நிலப்பாட்டக் கொள்கை விளைவுகள்

இதுவரை ரிக்கார்டோவின் நிலப்பாட்டக் கொள்கையைப் பொருளாதார நோக்குடன் ஆராய்ந்தோம். அது குறைபாடு இல்லாத கொள்கையல்ல. எத்தனையோ 'வைத்துக் கொள்வோம்' என்ற அஸ்திவாரத்தில் கட்டிய அடுக்கு மாளிகை. ஆயினும் அது மிகப் புகழ் பெற்ற கொள்கை. ரிக்கார்டோ என்றாலே அவர் நிலப்பாட்டக் கொள்கைதான் நினைவுக்கு வருகிறது. இதற்குச் சில காரணங்கள் உண்டு.

(1) இயற்கையன்னையின் தாராள மனப்பான்மை பற்றிப் புகழ்பாடி இயற்கை விதிகளைத் தெய்விகமானவை யென்று எண்ணிய எண்ணம் இந்தக் கொள்கையினால் அடியோடு சரிந்தது. இயற்கை வெறும் லோபி என்று இக் கொள்கை காட்டியது.

(2) நிலச்சுவான்கள் அநியாயமாகப் பாட்டம் பெறுகின்றனர். அவர்கள், ஆடம் ஸ்மித் கூறுகிறபடி 'விதைக்காமலே அறுவடை செய்கிறார்கள்' என்னும் இக் கொள்கை பொது மக்களுக்கு அவர்கள் மேல் இருந்த சீற்றத்தை உண்டாக்கிற்று.

(3) தானியச் சட்டங்கள் (இறக்குமதியைக் கட்டுப்படுத்த 1815-ல் இங்கிலாந்தில் இயற்றப்பட்டவை) வெளிநாட்டு இறக்குமதி பெருகும்; உணவு தானியங்கள் மலிவாகும். நிலச்சுவான்களின் ஆதிக்கமும், கொள்ளை இலாபமும் மறையும் என்ற எண்ணத்துக்கும் கிளர்ச்சிக்கும் வித்திட்டது.

(4) கட்டுப்பாடில்லாத அனைத்து நாட்டு வணிகத்தை ஆடம் ஸ்மித்தைக் காட்டிலும் ரிக்கார்டோ வலுவாக ஆதரிக்கத் துணையாயிற்று.

(5) நிலச் சொத்துரிமை என்னும் அடிப்படை உரிமையையே உலுக்கி விட்டது. பின்னால் வந்த ஜேம்ஸ் மில் என்னும் பொருளாதார அறிஞர் பாட்டம் முழுவதையும் வரியாக வசூலிக்க விரும்பினார். அதை நஷ்ட ஈடு ஒன்றும் கொடுக்காமல் கூட அரசினர் பிடுங்கிக்கொள்ளலாம் என்ற அபிப்பிராயத்தை ஜேம்ஸ் மில் வெளியிடப் போதிய தைரியம் அளித்தது.

(6) நிலத்தைத் தேசிய மயமாக்கும் கொள்கையை ஆதரிக்கத் தூண்டியது. ரிக்கார்டோவின் பாட்டக் கொள்கையைப் பின்பற்றிய பிற்காலப் பொருளாதார அறிஞர்களுள் ஹென்றி ஜார்ஜ் கேசன் (Gasson), வால்ரஸ் (Walras) குறிப்பிடத்தக்கவர்கள்.

(7) வருங்காலத்தைப் பற்றிய ஆடம் ஸ்மித்தின் இனிய நோக்கு (optimism) குன்றியது. மால்தசின் கொள்கையுடன் நிலம் லோபித்தனம் என்ற கொள்கையும் சேர்ந்தது. வருங்காலத்தைப்பற்றி ஒரு துன்ப நோக்கு (pessimism) தோன்றிற்று. வருங்காலம் இருண்டுவிட்ட மாதிரியான காட்சியளிக்கத் தொடங்கியது.

### கூலியும் இலாபமும் (Wages and Profits)

வருங்காலத்தை மேலும் இருளாக்கும் வேறு சித்தாந்தமும் ரிக்கார்டோவின் பட்டறையில் இருந்தன. வேறு சில அதிகாரங்

களில் அதன் கரிய நிழல் படிந்திருப்பதைச் சிறப்பாக, கூலி, இலாபம், மூலதன வளர்ச்சி, ஜனத்தொகை ஆகிய நான்கு கருத்துகளை விளக்கும் கட்டங்களில் காணலாம். பிடிவாத மாகப் பண்டங்களின் மதிப்பு உழைப்பினுல் மாத்திரமே உண்டா கும் என்று தொடக்கத்திலேயே கூறிய ஆசிரியர் பின்னுல் முத லாளிகள் வழங்கும் முதலுக்கும் ஊதியம் உண்டு என்கிருர். அவர்களுக்கு வட்டியும் இலாபமும் கொடுக்கவேண்டியது நியா யம்தான் என்ற முடிவுக்கும் வருகிருர். அத்துடன் நிலச்சுவான் கள் தங்கள் நிலத்தின் வளத்துக்கு ஏற்பக் குத்தகைக்காரரிட மிருந்து பாட்டம் பெற்றுக் கொள்வர். மூலப் பொருள்கள், பதனிடாத பண்டங்கள் ஆகியவற்றை ஆலை அதிபர் வாங்கும் போது மிகவும் கீழ்த்தரமான நிலத்தில் விளையும் பொருள்களின் அடக்கச் செலவுக்கு ஈடு செய்யும் விலை கொடுத்துக்கொள்வர். இவ் விலை அந்த நிலத்தைவிட உயர்தர நிலங்களின் விளை பொருள்களுக்கு இலாபமும், அவற்றின் நிலச்சுவான்களுக்குப் பாட்டமும் பெற வழி செய்யும் என்று ஆசிரியர் விளக்கியதை நினைவுறுத்திக்கொள்ளவேண்டும். ஆலைகளில் கச்சாப் பொருள் கள் வந்து சேரு முன்னரே, நிலச்சுவான்கள் பாட்டம் பெற்று விடுவார்கள். எனவே, ஆலைகளில் நடக்கும் உற்பத்திக்குக் காரணமாயிருப்பவர்கள் தொழிலாளர்களும் முதலாளிகளும் தான். உற்பத்தித் தொழில்களால் கிடைக்கும் ஊதியம் இவ்விரு தரப்பினருக்குமே சேரவேண்டும். இந்த முடிவுக்கு வந்தபின் ரிக்கார்டோ கூறுவது முக்கியமானது. தொழிலால் திரண்டு வரும் ஊதியம் ஒரு குறிப்பிட்ட அளவுதான் இருக்கும். அதில் கூலிப் பகுதி மிகுந்தால், இலாப–வட்டிப் பகுதி குறையும். சட்டியிலிருப்பதுதானே அகப்பைக்கு வரும்? தொழிலாளர் பங்கு நான்கு அகப்பை கூடிஞல், முதலாளி பங்கில் நான்கு அகப்பை குறையும். அடுத்தபடியாக ரிக்கார்டோ கூறுவது சுவையுள்ளது. மக்கள் தொகை அதிகரித்துக்கொண்டே போகி றது அல்லவா? அதிகமான மக்களுக்கு உணவும், உடையும் உற்பத்தி செய்ய இன்றியமையாத மூலப்பொருள்களுக்கும் கச் சாப் பொருள்களுக்கும் கீழ்த்தரமான நிலங்களையும், தரிசு நிலங்களையும் பயிரிடவேண்டிய அவசியம் உண்டாகும். இத ஞல் உணவு, உடை ஆகியவற்றின் விலை ஏறும். வாழ்க்கைச் செலவு உயர்ந்தால் அதற்குத் தக்கவாறு தொழிலாளர் பங்கை அதிகமாக்கவேண்டும். அப்படித் தொழிலாளர் பங்கு–கூலி– அதிகமாகும்போது, முதலாளியின் பங்கு–வட்டியும் இலாபமும் குறையும். பங்கு குறைந்தால் யாருக்கும் கோபம்தானே வரும். இதஞல் தொழிலாளர், முதலாளி நல்லுறவு கெட்டுவிடும். நாயும் பூனையும்போல் அடிக்கடி சண்டையிட்டுக்கொள்வர்

என்று தன் வாதத்தை முடிக்கிறார் ரிக்கார்டோ. எல்லோரும் இன்புற்றிருப்பர் என்ற ஸ்மித்தின் முடிவு வேறு. 'துன்பமும் பூசலுமே முடிவு' என்ற ரிக்கார்டோவின் முடிவு வேறு,

முதலாளிகளின் பங்கு குறைந்தால், அவர்களுக்குள்ள மூல தனம் திரட்டும் ஆர்வம் மழுங்கிவிடும். இலாபம் போகப் போகக் குறைந்துகொண்டே போகும். மூலதனம் திரட்டல் குன்றுவ தால், சமூக வளர்ச்சி தடைபடும். சமூகம் மேற்கொண்டு வளர்ச்சி யும் மாறுதலும் இல்லாத நிலை (Growthless, changeless stationary state) எய்தும்.

**பிழைப்புக் கூலி கொள்கை (Subsistence theory of wages)**

தொழிலாளர்களின் வருங்காலம் எப்படி அமையும் என்ற கேள்வி மிஞ்சி யிருக்கிறது. அவர்கள் எண்ணிக்கை எப்பொழு துமே அதிகம். அதனால் அவர்கள் வேலைக்குத் தங்களுக்குள் கடும் போட்டியிடுவர்; முதலாளிகளுக்கு இப் போட்டி மிகவும் அனுகூலம். அதை முழுவதும் பயன் படுத்திக்கொள்ளக் கூலியைக குறைததுக்கொண்டே செல்வா. கடைசியில் தொழி லாளர் கூலி, அவர்கள் பிழைத்திருக்க, கொடுத்த வேலையைச் செய்து முடிக்க, இரண்டு குழந்தைகளை வளர்க்கத் (பல குழந்தை கள் பிறந்து மடியக்கூடும்) தான் போதியதாக இருக்கும். இதைப் பிழைப்புக் கூலி (Subsistence wage) என்றார் ரிக்கார்டோ. ஒருக்காலும் கூலி இந்த மட்டத்துக்குக் கீழே போகாதென்ற ஆறுதல் அவர் சொல் நடையில் தொனிக்கிறது. ஏனென்றால் தொழிலாளரது வருமானம் பிழைப்புக் கூலிக்கும் குறைந்தால், இரண்டு குழந்தைகளில் ஒன்றாவது சரியான உணவு, பாதுகாப் பின்றிச் சிறு வயதிலேயே இறந்திடும். அப்படியானால் தொழி லாளர் குடும்பங்கள் குறுகும். வேலை தேடும் மக்களின் எண் ணிக்கை குறைந்திடும். இந் நிலை தொழிலாளருக்கு நன்மை பயக்கும் அனுகூலமாகும். முதலாளிகள் தொழிலாளரைத் தேடி வரும் நிலை ஏற்படும். அதிகக் கூலி கொடுத்துத் தங்கள் ஆலைக்கு இழுக்க முயல்வர். இந்த இழுபறியில் முதலாளிக ளிடையே போட்டி உண்டாகும். கூலி பிழைப்புக்கு வேண்டிய அளவுக்கு மேல் உயரும். இது மக்களின் நல்வாழ்வுக்கு அடி கோலுமே என்று வாசகர்கள் மகிழ்ச்சியில் மூழ்கிவிடாதபடி ரிக்கார்டோ கற்கண்டில் கசப்பைக் கலக்கிறார். பாட்டாளி மக்க ளுக்குப் பிழைப்புக் கூலிக்குமேல் வருமானம் அதிகமானால் அவர் கள் தங்கள் வாழ்க்கைத்தரம் மேன்மை பெற முயலமாட்டார்கள். அதிகமான பிள்ளை குட்டிகள் ஈன்றெடுப்பர். இரண்டு குழந்தை கள் பிறந்து வளர்ந்தால், தாய் தந்தையர் இறந்தபின், தொழி லாளர் எண்ணிக்கை அதிகப்படாமல் ஒரே நிலையில் நிற்கும்.

இரண்டுக்கு மேல் பிறந்து நான்கு, ஐந்து குழந்தைகள் சிறு பிராயம் தாண்டி உழைக்கும் பருவம் அடைந்தால், அவர் வேலை தேடும் படையில் சேருவர். திரும்பவும் வேலை தேடும் மக்கள் அதிகமாகவும், கிடைக்கக்கூடிய வேலைகள் குறைவாகவும் உள்ள நிலை வரும். 'அதிக வேலை தேடுபவர்கள், குறைந்த வேலை வாய்ப்புகள்' என்ற நிலை. தொழிலாளர் கூலியும் பிழைப்புக் கூலி மட்டத்துக்குத் திரும்பிவிடும். இதுவே ரிக்கார்டோவின் பிழைப்புக் கூலித் தத்துவம் (theory of subsistence wage). பின்னால் வந்த சோசலிச ஜர்மானிய அறிஞர் லாசெல் (Lassalle) என்பவர் இத் தத்துவத்தைக் கூலியைப் பற்றிய இரும்புச்சட்டம் (Iron Law of Wages) என்று பட்டம் சூட்டினார்.

செருப்பின் விலையேறினால் அதன் வழங்கல் பெருகும். விலை வீழ்ச்சியடைந்தால், உற்பத்தி குறையும் என்பது சரியான வழங்கல் தேவை விதிதான். அதே விதியைக் கடவுள் வடிவத்தில் படைக்கப்பட்ட மக்கள் விஷயத்திலும் மேற்கொள்வது மக்களை உயிரற்ற பொருட்களாகக் கருதும் இரக்கமற்ற காரியம் என்று கூறி இந்தப் பிழைப்புக் கூலித் தத்துவத்திற்கு 'வெட்கமற்ற சட்டம்' (Brazen law) என்றும் பெயரிட்டார். நிற்க, ரிக்கார்டோ கூலி வருங்காலத்தில் பண அளவில் பெருகலாம் என்று கூறுகிறார். ஏனெனில் வளமற்ற கீழ்த்தர நிலங்களைப் பயிரிடப் பயிரிட உணவுப் பொருட்கள் விலை ஏறிக்கொண்டே செல்லும். 'உண்பது நாழி, உடுப்பது நான்கு முழம்' என்ற குறைந்தபட்ச நுகர்ச்சிப் பொருட்கள் இல்லையானால், தொழிலாளர் தொகை நலிந்து விடும். அதைத் தவிர்க்க விலைவாசி ஏற்றத்துக்குத் தகுந்தபடி போதிய பணம் கூலியாகக் கொடுக்க வேண்டும். பண அளவில் கூலி உயர்ந்தாலும் பொருள்கள் நுகர்ச்சியளவில் அது வெறும் பிழைப்புக் கூலியாகத்தான் இருக்கும் என்பது ரிக்கார்டோவின் சித்தாந்தம். இது மக்களிடம் வருங்காலத்தைப் பற்றி ஆடம் ஸ்மித் விளக்கிய இனிய நோக்கைச் சிதற அடித்தது.

பொருளாதார நெருக்கடி

பொருளாதார நெருக்கடிகள் பற்றி ரிக்கார்டோ கூறவில்லை. ஏனெனில் அவர் ஜே. பி. ஸேயின் சந்தைச் சட்டத்தைப் பரிபூரணமாக ஆதரித்தவர். அது செயலாற்றும் வகையை நம்பினவர். மால்தஸ் உரைத்தபடி பொருட் தேக்கம் உண்டாகாது என்று ரிக்கார்டோ நினைத்தார். அதிகமாகப்போனால், பொருளாதார நிலை சில சமயங்களில் மாறலாம். அதற்குப் பூகம்பம் போர் வரிவிதிப்பு, புதுமோஸ்த (fashion) களினால் தேவையின் திசை மாறுதல் போன்ற புறக்காரணங்களைக் (exogenous reasons) கூறுகிறாரே யொழிய பொருளாதார சக்திகளிலிருந்தே கிளம்பக்

கூடிய அகக்காரணங்களை (endogenous reasons) உடன் பிறந்தே கொல்லும் நோயாக இருக்கக்கூடும் என்பதை கூறினாரில்லை.

**இயந்திரங்களும் வேலைவாய்ப்பும்**

ரிக்கார்டோவின் நூலின் முதல் பதிப்பில், இயந்திரங்கள் வேலைப் பகுப்பை மேலும் விரிவடையச் செய்யும். பொருள் உற்பத்தியைப் பெருக்கும். அடக்கச் செலவைக் குறைக்கும். விவசாயத்தைப் பாதிக்கும் குறைந்த செல்விளைவுவிதி (law of diminishing returns) யினால் ஏற்படக்கூடிய நஷ்டங்களுக்கு ஈடு கொடுக்கும் என்று பலவாருக இயந்திரங்களைப் பயன்படுத்துவதைச் சிறப்பாகக் கூறி, அதனால் தொழிலாளர்களின் வேலைவாய்ப்புப் பெரும்பாலும் பாதிக்கப்படாது என்று கூறியுள்ளார். பின்னர் ஜான் பார்டன் (John Barton) வெளியிட்ட 'சமூகத்தின் உழைப்பாளர் வகுப்பின் நிலைமை, என்று சிறிய நூலை ரிக்கார்டோ கண்ணுற்றார். எனவே ரிக்கார்டோ அவரது நூலின் மூன்ருவது பதிப்பில் இயந்திரங்களைப் பற்றி முன்னுக்குப்பின் முற்றும் மாருன கருத்தை விளக்கியுள்ளார். முதலாளிமார்களின் முக்கியக் குறிக்கோள் மொத்த வருமானத்தைப் பெருக்கவேண்டு மென்பதல்ல. நிகர வருமானத்தைப் பெருக்குவதுதான். நிகரவருமானமே இலாபத்தை நிர்ணயிக்கும். இயந்திரங்களை உபயோகிக்கும்காலை, செலவுகளைக் குறைப்பதுடன், மொத்த உற்பத்தியையும் குறைத்தாலும், நிகர வருமானம் அதிகமாகக் கூடிய வாய்ப்புகள் உண்டு. இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு முதலாளிகள் மொத்த உற்பத்தியைப் பெருக்காவிட்டால், தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை இழப்பார்கள் என்று தருக்க ரீதியாகக் கூறியுள்ளார். லெகச்மன் (Lakachman) கூறுகிறது போல் 'ரிக்கார்டோ ஓர் ஆபத்தான மனிதன்' தருக்க ரீதியில் என்ன உண்மை புலனாகிறதோ அதை அழுத்தமாகக் கூற அவர் ஒரு நாளும் தயங்கினதில்லை. அதனால் அவருக்குத் தனிப்பட்ட முறையில் பெரும் நஷ்டம் ஏற்படுவதாக இருந்தாலும், உண்மையை உரைத்தே தீருவார். 1819-ல் பாரளுமன்றத்தில் தேசீயக் கடனை ஒழிப்பதற்கு மூலதனத்தின் மேல்வரி (captial levy) ஒன்றைப் போடும்படி அரசினருக்கு ஆலோசனை கூறினார். அந்த வரி மாத்திரம் போட்டிருந்தால் ரிக்கார்டோவுக்கு மாபெரும் வரிப் பளுவும் நஷ்டமும் ஏற்பட்டிருக்கும். அதற்காக அவர் பயப்படுபவரில்லை.

**அனைத்து நாட்டு வணிகம்**

இனி ரிக்கார்டோவின் சிறு நூல்களில் விளக்கியுள்ள மூன்று கருத்துகளைப் பார்ப்போம். முதலாவது அனைத்து

நாட்டு வணிகம். எல்லா நாடுகளிலும் எல்லாப் பொருள்களும் உண்டாக்க இயற்கை அருள் புரியவில்லை. ஒவ்வொரு நாட்டில் ஒவ்வொரு பொருள் உண்டாக்கத் தனி வளங்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. இந்தியாவில் சணல், சில்லி நாட்டில் வெடி மருந்து, அரபு நாடுகளில் மண் எண்ணெய், ரூர் மாநிலத்தில் இரும்பு, எஃகு, பிரஞ்சு நாட்டில் திராட்சையும் ஒயினும், வெப்ப மண்டல நாடுகளில் காபி, தேயிலை, இரப்பர் உற்பத்தி செய்யப் பொருத்தமான இயற்கை வளங்கள் உள்ளன. இவற்றிற்குத் தக்கவாறு, பல்வேறு நாடுகளும் பல்வேறு பொருள்களின் உற்பத்தியில் ஈடுபட்டால், அந்த நாடுகளுக்கு நல்ல ஊதியம் கிட்டும். உலகம் முழுவதும் சீருடன் வாழ இதைவிடச் சிறந்த வழி கிடையாது. இம் முறை வெற்றி பெற அனைத்து நாட்டு வணிகம் கட்டுப்பாடின்றி நடக்கவேண்டியது இன்றியமையாதது. இவ்வாறு கூறி ரிக்கார்டோ அரசினர் அயல்நாட்டு வணிகத் துறையில் தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டுமென அறிவுறுத்துகிறார். இந்த உண்மை பிற்காலப் பொருளாதார நூலில் 'குறைந்த விகிதச் செலவில் உற்பத்தி விதி' (Law of comparative costs) என்ற விதியாக விரிக்கப்பட்டிருக்கிறது. அனைத்து நாட்டு வணிகக் கொள்கைக்கு ஆடம் ஸ்மித் போட்ட கடைக்காலை அசைக்க முடியாதபடி அமைத்த பெருமை ரிக்கார்டோவைச் சாரும்.

### தாள் நாணய வெளியீடு

இரண்டாவதாகத் தாள் நாணயத்தைப் (paper currency) பற்றிய கருத்தினைக் குறிப்பிடவேண்டும். 1797-ல் அவர் வெளியிட்டதொரு சிறு நூலின் பெயர் 'பொன், வெள்ளியின் விலை உயர்வு' (Rise in the price of Bullion). பிரஞ்சுப் புரட்சிக்குப்பின் ஆங்கில பிரஞ்சுப் போர் மூண்டது. வேகமாக வளர்ந்த போர்ச் செலவைச் சரிக்கட்ட ஆங்கில நாட்டில் அதிகமான அளவில் தாள் நாணயம் அச்சிடப்பட்டது. 1797-ல் தாள் நாணயத்துக்கு இங்கிலாந்து வங்கியில் (Bank of England) தங்க நாணயம் வேண்டும்பொழுது கொடுப்பது ஒத்திவைக்கப்பட்டது. அதன் பின் தங்கத்தின் விலை தாள் நாணயக் கணக்கில் ஏறியது. இதற்குக் காரணம் தங்கத்தின் மதிப்பு ஏறியிருப்பதென்று ஒரு சாரார் கூறினர். ஆனால், ரிக்கார்டோ வங்கிகள் பாதுகாப்பு நிதியைக் (gold reserve) கவனிக்காமல் மிகுதியான அளவில் தாள் நாணம் வெளியிட்டதுதான் காரணம்; அப்படி வெளியிடுவது மிகவும் ஆபத்தானது. பொன் வெள்ளிப் பாதுகாப்பு நிதியைச் சரியான விகிதாச்சாரத்தில் வைத்துக்கொண்டால், தாள் நாணயத்தினால் பல நன்மைகள் கிடைக்கும் என்று விளக்கினார்.

ஸ்மித் தாள் நாணயத்தினுல் தங்க நாணயத்தின் புழக்கத்தைச் சிக்கனப் படுத்தலாம் என்று ஒரே ஒரு நன்மையைத்தான் குறிப்பிட்டிருந்தார். ரிக்கார்டோ தாள் நாணயத்தினுல் வங்கிக் கடன்கள் விரிவடைய (credit expansion) வழி உண்டு. அதனுலும் மிக்க நன்மை நாட்டின் தொழிலுக்கும் வணிகத்துக்கும் உண்டு என்று கூறினுர். இதே விகிதாச்சாரக் கூற்றைப் பின்பற்றியே 1844ஆம் ஆண்டு வங்கிச் சாசனச் சட்டம் (Bank Charter Act of 1844) இங்கிலாந்தில் இயற்றப்பட்டது.

**தானியச் சட்டங்கள்**

மூன்ருவதாக ரிக்கார்டோ தானியச் சட்டங்களைப் பற்றிக் கூறிய கருத்துகளைக் கவனிப்போம். இங்கிலாந்து 18ஆம் நூற்ருண்டு இறுதி வரை ஒரு விவசாய நாடாகத்தான் இருந்தது. தானியங்கள் ஏற்றுமதி செய்து கொண்டிருந்த நாடு. 1812, 1813–லும் கூட தானிய ஏற்றுமதி நடந்திருக்கிறது. தானிய உற்பத்தி செய்யும் விவசாயப் பெருமக்களின் நலனைக் கோரி, தானியங்கள் இறக்குமதி தடை செய்யப்பட்டிருந்தது. நிற்க, இங்கிலாந்தின் மக்கள் தொகை 1801-லிருந்து 1834-க்குள் 34 சதவிகிதம் பெருகியது. உணவுத் தானியங்களின் விலை ஏறியது. அத்துடன் ஆலைத்தொழில்களில் உழைக்கும் தொழிலாளர்களின் கூலியையும் ஏற்ற வேண்டியதாயிற்று. இந்தச் சூழ்நிலையில் ரிக்கார்டோ தானியச் சட்டங்களை ரத்துச் செய்வதுதான் சிறந்தது என்று கூறினுர். இதனுல் ஆலை முதலாளிகளுக்கு இலாபம் உண்டு. ஏனெனில் தானியங்களின் விலை குறையுமாதலால், கூலிச் செலவும் குறையும். ஆனுல், நிலக்கிழார்களின் பாட்ட வருமானம் குறைந்துவிடும். ஏனெனில் அயல் நாட்டு தானியங்கள் தடையின்றி இறக்குமதியானுல் தானியங்களின் விலை குறையும். பாட்டமும் குறையும். இங்கு ரிக்கார்டோ ஒரு பெரிய நிலக்கிழார் என்பதை மறந்து விடக்கூடாது. எனினும் தமக்கு என்ன நஷ்டம் ஏற்பட்டாலும் தருக்கரீதி உண்மைப்படி அவர் ஆலோசனை இருக்கிற தென்பதை நினைவிற் கொள்ளுதல் வேண்டும்.

**வரிகள்**

ரிக்கார்டோ தமது நூலில் பல இடங்களில் வரிகளைப் பற்றியும் அவற்றின் பளு, வீழ்ச்சி பற்றியும் விளக்கவுரைகள் தந்திருக்கிருர். ஆனுல். அவருடைய கருத்துகள் மிக்க எளிமையானவை. வரிகள் மக்களின் மேல் சுமத்தப்படும் ஒரு சுமை என்பதைத் திட்டவட்டமாகக் கூறுகிருர். வரி விதிக்கும் பொழுது அதன் பளு அனைவரையும் சமமாகப் பாதிக்கும் முறையில் விதிக்கவேண்டும். கூலியின் மேல் அல்லது தொழிலாளர்

நுய்க்கும் இன்றியமையாத பண்டங்களின் மேல் விதிக்கும் வரியை அவர்கள் தாங்கமுடியாது (ஏனெனில் அவர்கள் பிழைப்புக் கூலி மட்டுமே பெறுகிருர்கள்). எனவே அவை பிறர்மேல் தள்ளப்படும். பெரும்பாலும் இலாபத்தின்மேல் தள்ளப்படும். ஆனுல் இப்படியாக நேர்வரி, மறைமுக வரிகளால் இலாபம் மிகவும் பாதிக்கப்பட்டால், மூலதனம் திரட்டும் ஆர்வம் பாதிக்கப்படும். அப்படியாருல், ஒரு நாட்டின் தொழில் வளர்ச்சி பாதிக்கப்படும். கடைசியாகத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு குறையும். வாழ்க்கைத் தரமும் குறையும். இந்தமாதிரி நிலை ஏற்படாத முறையில் வரிகள் விதிக்கப்படவேண்டும் என்பது ரிக்கார்டோவின் சில கருத்துகள்.

**ரிக்கார்டோவின் கொள்கைகளின் விளைவுகள்**

இனி ரிக்கார்டோவின் கொள்கைகளின் முடிவுகளைச் சுருக்கிக் கூறுவோம். வருங்காலத்தில், மக்கள் தொகை வளர வளர, உணவுப் பொருள் தேவையும் வளரும். கீழ்த்தர நிலங்கள் சாகுபடிக்கு வரும். எனவே (1) நிலச்சுவான்கள் பெறக்கூடிய பாட்டம் உயர்ந்து கொண்டே போகும். (2) தொழிலாளர் கூலி பண அளவில் (Money terms) கூடிக்கொண்டு போகும்; ஆனுல் பொருள் அளவில் (real terms) எப்பொழுதும் ஒரேமாதிரி-உண்பது நாழி, உடுப்பது நான்கு முழம் என்றே-இருக்கும். (3) பண அளவில் கூலிகள் அதிகமாகும் பொழுது அடுத்த பங்காளியான முதலாளியின் பங்காகிய இலாபமும், வட்டியும் கீழ்நோக்கிச் செல்லும். நிலச்சுவான்கள் 'தாங்கள் விதைக்காத நிலத்தில் அறுத்து'ச் சுகவாழ்வு பெறுவார்கள். அவர்களை ஒழித்து விடுவது யாருக்கும் கேடில்லை என்ற எண்ணம் காட்டுத் தீபோல் பரவ ஆரம்பித்தது. இவ்விடத்தில் ரிக்கார்டோ ஒரு பெரிய நிலக்கிழார் என்பதை மறந்துவிடக் கூடாது. தமது நிலம், பண்ணை எல்லாம் பறிபோகக்கூடிய தத்துவத்தை உபதேசிக்க அவரிடம் வியக்கத்தகு மனேதிடமும், பொருளாதாரக் கலையில் வாய்மையும் ஊறிக்கிடப்பதைக் காண்கிருேம். இலாபம் வட்டி இவற்றின் வருங்காலப் போக்கு மகிழ்ச்சியை உண்டாக்கும் தன்மையின்றி, துன்ப நோக்கு வளர்க்கக் கூடியதாயிருக்கிறது. இலாபமும் வட்டியும் குறைந்து கொண்டே போகுமானுல் மூலதனம் திரட்டும் ஆர்வம் நலிந்து பொருளாதார முன்னேற்றம் தடை படுமன்றே? இதனுல்தான் ரிக்கார்டோவை மால்தசுடன் சேர்த்து வருங்காலத்தில் நம்பிக்கையற்றவர், 'துன்பநோக்குடையவர்' என்று பிற்காலப் பொருளாதார (Pessimists) விமரிசகர்கள் கூறுகின்றனர்.

ரிக்கார்டோவின் செல்வாக்கு

போட்டியென்பது பொருளாதாரத்தில் எல்லாத் துறைகளிலும் இன்றியமையாததென வற்புறுத்தினார். இது ஆடம் ஸ்மித்தின் கொள்கையைப் பலப்படுத்தியது. தலையிடாக் கொள்கையையும் வற்புறுத்தியது. பிரிட்டனில் பொருளாதாரத் துறையில் அரசினரின் தலையீடு குறைந்ததும், கட்டுப்பாடுகள் தளர்ந்ததும், ரிக்கார்டோவின் நூலின் பயனே ஆம். 1840ஆம் ஆண்டுக்குப்பின் தானியச் சட்டங்கள் (Corn Laws), கப்பல் போக்குவரத்துச் சட்டங்கள் (Navigation Acts) நீக்கப்பட்டதெல்லாம் ரிக்கார்டோவின் கொள்கைக்கு இருந்த செல்வாக்கைக் காட்டும்.

கடைசியாக, அவருடைய 'உழைப்பே பண்டத்தின் மதிப்புக்குத் தனிப்பெருங் காரணம்', 'மதிப்பு உழைப்பின் குழந்தை' என்று தருக்க ரீதியில் வகுத்த கொள்கை, அவர் கனவிலும் எதிர்பாராத விளைவுக்கு வித்திட்டது. இந்தக் கொள்கையை அஸ்திவாரமாகக் கட்டிய மாளிகைதான் கார்ல் மார்க்ஸின் (Karl Marx) அறிவியல் முறை (Scientific) சோஷியலிசம். அறிஞர் ரிக்கார்டோ சிந்தித்து வகுத்த வழி ஒன்று. ஆனால் எதிர்பாராதபடி அவர் நூலிலிருந்து முளைத்த வழி வேறு. அதுவே சோஷியலிசப் பாதை. இந்தக் கண்ணோட்டத்தில் ரிக்கார்டோவைச் சோஷியலிசத்தின் தந்தையாகிய கார்ல் மார்க்சுக்குப் பிதா, குரு என்றெல்லாம் அழைத்தால் அது தவறாகாது.

முடிவுரை

ரிக்கார்டோவுக்கு விஞ்ஞானத்தில் இருந்த பற்று அவர் வாய்மைக்காக, வெறுப்பு விருப்பின்றி, தருக்க ரீதியாக விளைந்த கொள்கைகளைப் பட்டவர்த்தனமாக விளக்கியதிலிருந்து நன்கு விளங்கும். தன்னலம் என்ற உணர்ச்சி அவர் உள்ளத்தில் எழுந்ததாகவே தெரியவில்லை. 'வங்கி முதலாளியாக இருந்த பொழுது, (ரிக்கார்டோ) அவர் வங்கிகளின் அபரிமிதமான இலாபத்தை வலுவாகத் தாக்கியுள்ளார்; வங்கி முதலாளி நிலையினின்று விலகியபின், பங்குதாரர்களின் உரிமைகளைக் காக்க முன் வந்தார். அவர் பெரிய நிலக்கிழார் ஆனபின், நிலச் சுவான்களை நாசப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக அவர் குற்றம் சாட்டப்பட்டார். பாராளுமன்றத்தின் உறுப்பினராக இருக்கும்பொழுது அவர் ஆதரித்த சீர்திருத்தங்கள் பல. அவை மட்டும் செயலாற்றப்பட்டிருந்தால் அவருடைய பதவிப் பறி போயிருக்கும்.' (மோசஸ் ரிக்கார்டோ).

புலவர் பெருமக்களில் தங்கள் வாழ் நாளிலேயே திருவுடனும் இசையுடனும் வாழ்ந்தவர் மிகச் சிலரே. அவர்களில் ஒருவர்

பொருளாதார மேதை டேவிட் ரிக்கார்டோ. பாராளுமன்ற உறுப்பினராகச் சிறப்புடன் வாழ்ந்த காலத்தில், இரு கட்சியினரும் அவரைப் பேசும்படி வேண்டிக்கொள்வர். நம்முடைய குரலைக் கேட்டுத் திடுக்கிடும் சுபாவம் உள்ளவர் அவர். பேசும் போது அவர் குரல் கரகரப்பாகவும், கீச்சுக் கீச்செனவும் மாறி மாறி ஒலிக்கும் என்றாலும், பாராளுமன்ற உறுப்பினர் அனைவரும் கூர்ந்து, மிக்க மரியாதையுடன் அவர் பேச்சைக் கேட்டுப் பயனடைவர். அறிஞர் மால்தசுடன் கருத்து வேற்றுமை கொண்டு அடிக்கடி பேனாப் போர் ரிக்கார்டோ புரிந்திருக்கிறார் என்றாலும், அவர் கடைசிக் கடிதத்தில் எழுதியது அவர் எத்தகைய உத்தம நட்புள்ளம் படைத்தவர் என்பதற்குத் தகுந்த சான்று. 'அன்புள்ள மால்தஸ், இத்துடன் நான் முடித்து விடுகிறேன். பலத்த விவாதங்களுக்குப் பின்னும் நாமிருவரும் நம்முடைய கொள்கைகளைக் கைவிடாமல் பாராட்டி வருகிறோம். இந்த விவாதங்கள் நமது நட்பைப் பாதித்ததில்லை. என்னுடைய கருத்துகளை நீங்கள் ஒப்புக் கொண்டிருந்தாலும் நான் இப்பொழுது உங்களை நேசிப்பதைவிட அதிகமாக நேசித்திருக்க மாட்டேன்' மால்தசுக்குப் பின்னால் பிறந்து, முன்னால் இறந்தவர் ரிக்கார்டோ. இக்கடிதம் அவருடைய நட்பின் இறுதி விளக்கம்.

## 12. ஜெரிமி பென்தம் (1748–1832)

பென்தம் ஆங்கில நாட்டின் சிறந்த தத்துவ ஞானிகளில் ஒருவர் ஆவார். சமூக சட்டச் சீர்திருத்த இயக்கத்தை உருவாக்கி நாட்டின் நலனுக்கு அரிய தொண்டு புரிந்தவரும் ஆவர். அவரைத் தத்துவச் சார்புள்ள முற்போக்குவாதிக் குழுவின் (Philosophical radicals) குரு எனக் கூறுதல் பொருந்தும். மேலும் பென்தம் பயன்பாட்டுக் கொள்கையின் (Utilitarianism) தந்தையும் ஆவர். பொருளாதார இயலில் அவர் சில நூல்களே எழுதியிருந்ததால் அவருக்கு அவற்றினால் கிடைக்க கூடிய இடம் சிறிதே ; ஆனால் சிறந்த பொருளாதார மேதைகளான ரிக்கார்டோ, ஜே. எஸ். மில் இருவரிடமும் பென்தத்தின் செல்வாக்கு மிகப் பெரிது. எனவே, அவர்கள் நூல்கள் பென்தத்தின் கொள்கைகளை ஆதாரமாகக் கொண்டு எழுதப் பெற்றமையால், பென்தத்திற்குப் பொருளாதாரக் கோட்பாட்டு வரலாற்றில் ஒரு முக்கிய இடம் உண்டு.

16 வயதில் பட்டப்படிப்பை முடித்துவிட்டுச் சட்டம் பயின்று 21 வயதில் ஒரு வக்கீல் ஆனார். வக்கீல் தொழிலில் விருப்பம்

இன்றி, சமூகச் சட்டத் திருத்த முயற்சியில் தீவிரமாகத் தன் முழு வாழ்நாளையும் அர்ப்பணித்தவர் பென்தம்.

அவருடைய பயன்பாட்டுக் கொள்கைத் தொன்மை நூலாசிரியர்களையும், வழி நூலாசிரியர்களையும் மிகவும் கவர்ந்தது. இறுதி நிலை வாதிகள் கூட பென்தத்திற்கு ஒரு வகையில் கடமைப் பட்டவர் ஆவர்.

பென்தம் தமது பயன்பாட்டுக் கொள்கையை வகுத்த விதத்தைச் சிறிது ஆராய்வோம். எந்த மனிதனும் இயற்கையாக விரும்புவது இன்பம். வெறுப்பது துன்பம். எந்தச் செயலில் ஈடுபடும்பொழுதும் தனது இன்பத்தைக் கூடியமட்டும் பெருக்கவும், துன்பத்தைக் கூடியஅளவு குறைக்கவும் மனிதன் முயலுகிறான். மனிதன் ஒரு சுயநலம் கொண்ட, இன்பமயமான வாழ்க்கையை விரும்புகிறவன். சமூகம் என்பது மக்களின் கூட்டுத் தொகுதியே. ஒவ்வொரு மனிதனும் தனது சொந்த ஆசைகளாலும், விருப்பங்களாலும் ஆட்டுவிக்கப் படுகிறான். இந்நிலையில் அரசின் கடமைகள், தனி மனிதனின் இன்பம் தேடும் முயற்சிக்குப் பங்கம் வராமல் பாதுகாப்பதே. அரசு தனது இஷ்டப்படி இதுதான் சமூகத்திற்கு நற்பயன் நல்கும் என்று எண்ணிச் செயலாற்றுவது தவறு. அம்மாதிரிச்செயல்கள் தனி மனிதனின் இன்பம் தேடும் முயற்சியைப் பாதிக்கும். எது நன்மை பயக்கும், எது தீமை பயக்கும் என்னும் விஷயத்தில், தனி மனிதனின் தீர்ப்பைக் காட்டிலும் அரசின் தீர்ப்பு உயர்ந்ததாகாது. ஆகவே, அரசு செய்ய வேண்டியது என்னவென்றால் அதிகமான மக்களுக்கு அதிகமான நலன் கிடைக்க (Greatest good of the Greatest Number) உதவி புரிதலேயாகும். அதைத் தலையிடாக் கொள்கையினால்தான் சிறப்பாகச் செய்ய முடியும்.

பென்தம் எந்த விஷயத்தையும் பிரித்து வகைப்படுத்துவதில் ஒரு 'எமன்' (a demon classifies). இன்பம் எளிய வகையில் கிடைப்பதற்குள்ள ஏதுக்களைப் பதினான்கு வகைப்படுத்தியுள்ளார் பென்தம். அவையாவன : சொத்து, நட்பு, சான்றோன் எனப் பெயர், திறமை, அதிகாரம், நற்பண்பு, காருண்யம், ஞாபக சக்தி, கற்பனா பக்தி, எதிர்பார்ப்பு, உயர்ந்தோர் உறவு, கேடு நினைத்தல், ஏமாற்றம், வருந்துதல், இன்பத்தையும் துன்பத்தையும் உணர்வதில் 32 சந்தர்ப்பங்களை வகைப்படுத்திக் கூறியுள்ளார். உதாரணமாக, உடல் நலம், வயது, பால், செல்வ நிலை, கல்வி முதலியன.

இன்பத்தையும், துன்பத்தையும் அளந்து ஒப்பிடலாம் என்பது பென்தமின் முடிவு. எம்மாதிரிக் கருவியைப் பயன்

படுத்தலாம் என்ற ஆராய்ச்சியில் இறங்கிப் பணம்தான் ஏற்ற கருவி என்று கூறுகிருர். பணமும் குறைந்து செல் இறுதி நிலைப் பயன் விதிக்குக் கட்டுப்பட்டதுதான் என்பதையும் பென்தம் அறிவார். எனவே, பணம் சரியான கருவிதாஞ என்ற ஐயப்பாடு அவருக்கு எழுந்தது. ஆனல், அதைப்பற்றி மேலும் ஒன்றும் ஆராயாது விட்டுவிடுகிருர். இந்தப் பயன்பாட்டுக் கொள் கையை ஆதாரமாகக் கொண்டு, ரிக்கார்டோவும், ஜே. எஸ். மில்லும் தங்கள் நுல்களில் பல கருத்துகளை விளக்கியிருக்கின் றனர். பல விதிகளையும் வகுத்திருக்கின்றனர். எனவே பென்தத் தின் கொள்கை மறைமுகமாகத் தொன்மை நூலிலும், வழி நூலி லும் ஆட்சி செலுத்துகின்றது என்று கூறுவது மிகையாகாது.

## தத்துவச் சார்புள்ள முற்போக்கு வாதிகள் (Philosophical Radicals)

பென்தம் காலத்தில் ஆங்கில நாட்டில் மலிந்து கிடந்த சமூக ஊழல்களையும், சட்டக் கொடுமைகளையும் நீக்குவதில், பென்தம் தன் சக்தியையும் வாழ்க்கையையும் செலவழித்தார். சுதந்திரம் நால்வகைப் பட்டதன்றே ? பென்தம் பேச்சுரிமை, எழுத்துரிமை, மனச்சாட்சி அல்லது சமய உரிமை, கூட்டம் கூடும் உரிமை ஆகிய நால்வகைச் சுதந்திரங்களையும் சமூகத்தில் செயல்படுத்தப் பல சட்டங்களை மாற்றவும், திருத்தவும் வேண்டும் என்ற கொள் கையைத் தீவிரமாகக் கொண்டவர். இக் கொள்கையை ஜேம்ஸ் மில்லுக்குத் தந்தார் ; ஜேம்ஸ் மில்லோ இதற்குப் பதிலாகப் பென் தத்துக்கு ஒரு பள்ளியை (School) உருவாக்கித் தந்தார். அதுவே தத்துவச் சார்புள்ள முற்போக்குப் பள்ளி (Philosophical radicals). அக் காலத்தில் உள்ள சிறந்த எழுத்தாளர், சிந்தனையாளர், செயல் ஆற்றல் மிகுந்த அரசியல் வாதிகள், இப் பள்ளியின் உறுப் பினர் ஆயினா. 1824–ல் இப் பள்ளிக்கென்று ‘வெஸ்ட் மின்ஸ் டர் ரிவியூ என்ற பத்திரிகையும் வெளியாயிற்று. அதிலிருந்து இப் பள்ளிச்கு ஜே. எஸ். மில்–பத்திரிகையின் ஆசிரியர்-தலைவரும் ஆஞர். இப் பள்ளியின் தீவிர முயற்சியினுலும், பிற சங்கங் களின் உதவியாலும் 1832–ல் இருந்து 1848-க்குள், பல துறை களில் சட்டச் சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. உதாரணமாக 1832ஆம் ஆண்டு சார்டர் சட்டம், இரப்போர் சட்டம், தானியச் சட்ட விலக்கு முதலியன. ஆங்கில நாட்டின் சமூக, பொருளா தார அமைப்புகளை இச் சட்டச் சீர்திருத்தங்கள் வெகு விரைவில் மாற்றியது. ஆடம் ஸ்மித் முதலிய தொன்மை நூலார் விரும்பிய மாதிரி, பொருளாதாரம், சமூகம் இவற்றில் அரசு தலையிடாத ஒரு சமுதாயம் உதயமாயிற்று. இந்த வியப்பிற்குரிய சாதனையில் ஜெர்மி பென்தம் பெரும் பங்கு கொண்டவர் என்பது ஒன்றே அவருக்கு நமது வரலாற்றில் இடம் பெறத் தகுதியை அளிக்கும்.

## 13. ஜே. பி. ஸே.

(J. B. Say, 1767–1832)

**முன்னுரை**

ஆடம் ஸ்மித், தாமஸ் ராபர்ட் மால்தஸ், டேவிட் ரிக்கார்டோ ஆகிய மும்மணிகளும் பொருளாதார நூலின் இயல்பு, முறை, கருத்துகள், அமைப்பு, வரம்பு முதலியவற்றை வரையறை செய்து ஒரு தனி மரபினை நிலைநாட்டிப் போயினர். மனிதனின் இயற்கைப் பண்புகளாகிய தன்னலம், பொருளீட்டல், சந்தையில் விற்பவர்–வாங்குபவர் போட்டி, இவற்றால் நாடுகளின் செல்வ வளர்ச்சி, 'கண்ணுக்குப் புலப்படாத கர'த்தின் பணிபோன்ற கருத்துகளைக் கொண்டு சுதந்திரவாதம் என்னும் பொருளியல் சித்தாந்தத்தை உருவாக்கினர். அரசினர் தலையிடாக் கொள் கையை மட்டும் செயல்படுத்தினால் நாட்டின் செல்வம் தங்குதடை யின்றிப் பொங்கும் என்று வற்புறுத்தினர். மால்தசின் மக்கட் தொகைக் கொள்கை, ரிக்கார்டோவின் நிலப்பாட்டக் கொள்கை, கூலி மிகின் இலாபம் குறையும், இலாபம் மிகின் கூலி குறையும் என்னும் கருத்து, அதனால் வரும் தொழிலாளர் முதலாளிப் பகை யுணர்ச்சி, நிலச்சுவான்களின் மேல் ஏனையோருக்குண்டாகும் சீற்றம்–இவையெல்லாம் வருங்காலத்தில் நம்பிக்கை கெட்டு ஒரு துன்ப நோக்கைக் கிளறிவிட்டன என்பது முக்கிய அம்சம். இத்தனை நுட்பமான கொள்கைகளும், விதிகளும் முதல் நூல் புலவர்கள் உறுதியாக வகுத்தமையால், அவர்களுக்குப்பின் சுமார் இரண்டு தலைமுறைக் காலம் புதுக் கருத்துகள் ஒன்றும் தோன்றவில்லை. சுதந்திர வாதத்தின் செல்வாக்கு அவ்வளவு தூரம் ஓங்கியிருந்தது.

அதே சமயத்தில், இங்கிலாந்தில் தீய துன்பச் சூழலில் பெரும் பான்மையான மக்கள் தவித்து வாழ்ந்ததற்கு ஒரு பகுத்தறிவு ரீதியான விளக்கமும், நியாயமும் காட்டியதாகப் பொருளியலுக்கு ஒரு கெட்ட பெயர் கிடைத்தது. 'இருட்டடிப்பு அறிவியல்' (Dismal Science), 'பணப்பேயின் வேதம்' (Gospel of Mammon) என்ற பெயர்கள் பொருளியலுக்குச் சூட்டப்பட்டன. தெய்வீக மான, இயற்கை விதிகள் பல்வேறு வகுப்பினர்க்குள்ளும் இணை வும் இசைவும் (Harmony) நிலவச் செய்யும் பொருளாதார அமைப்பு என்னும் கருத்தில் நம்பிக்கை கெட்டது. மிகுந்த பணக்காரர்களுக்கு மட்டுமே இணைவும் இசைவும் நல்கும் அமைப்பு என்ற ஐயம் கிளம்பியது இக் காலத்தில்தான் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

எனினும் 1800 - லிருந்து சுமார் ஐம்பது ஆண்டுகள் தொன்மைப் பொருளாதாரத்தை விரித்தும் விளக்கியும், வகுத்தும் தொகுத்தும் எழுதப்பட்ட நூல்கள் பல. இவற்றை எழுதிய வழி நூல் புலவர்களில் முக்கியமானவர்களில் ஜே. பி. ஸே. (J. B. Say), ஜே. எஸ். மில் இருவரும் இந் நூலில் இடம் பெறுகின்றனர்.

### ஜே. பி. ஸே

ஜீன் பேப்டிஸ் ஸே (1767-1832) பிரான்சில் தொன்மைப் பொருளியல் குழு (classical school) நிறுவியவர். ஆடம் ஸ்மித்தின் ' நாடுகளின் செல்வத்தை ' மொழிபெயர்த்தவர். ஸ்மித்தின் உண்மைச் சீடர் எனினும், ஸ்மித் எழுதிய நூலில் 'முறை வைப்பு' என்னும் அழகு இல்லை என்பதையும் ' மற்றொன்று விரித்தல் ' எனும் குற்றம் இருப்பதையும் காட்டியுள்ளார். தம்முடைய பிரஞ்சு மொழிபெயர்ப்பில் அதிகார வரிசையை மாற்றி, ஒரு புது அமைப்புத் தருகிருர். பொருளியல் நூலை (1) செல்வம் ஆக்குதல். (2) பகிர்தல் (3) துய்த்தல் என மூன்று பாகங்களாக முதல் முதல் பிரித்தவர் ஜே. பி. ஸே தான். முதல் பாகத்தில் நிலம், உழைப்பு, முதல் ஆகிய மூன்று பொருளாக்குச் சாதனங்கள் அவ்வாறு செல்வத்தை உண்டாக்குகின்றன என்பதை விளக்கியிருக்கிருர். பகிர்தல் பாகத்தில் செல்வத்தை மூன்று பொருளாக்குக் கருவிகளுக்கும் பாட்டம் (rent), கூலி (wages), இலாபம் (profit) அல்லது வட்டி (interest) என்று பங்கிடுவதைப் பற்றிய விளக்கம் தருகிருர். பண்டமாற்று (exchange of goods) என்னும் பகுதி இந்த அமைப்பில் கிடையாது. ஸே உருவாக்கிய அமைப்பு, பொருளியல் நூல்களிலும், பாடப் புத்தகங்களிலும் நூறு ஆண்டுகளுக்கு மேல் நிலைபெற்று வந்தது. ஸே ஒருங்கே பத்திரிகை ஆசிரியர், அரசியல்வாதி, அலுவலதிபர், பொருளியல் அறிஞர் என்று பல துறைகளில் அனுபவமும் வெற்றியும் கண்டவர். காலேஜ்-டி-பிரான்சு (College-de-France) என்னும் கல்லூரியில் பொருளியல் பேராசிரியராகப் பணியாற்றினர். அழகிய நடையில் எழுதிய அவருடைய பொருளியல் நூல் அக் காலத்தில் அதிகமாக விற்ற நூல்களில் ஒன்று. ஐந்து பதிப்புகள் அவர் வாழ்நாளிலேயே வெளிவந்துவிட்டன.

### சந்தைச் சட்டம்

ஸேயின் புகழ்பெற்ற சந்தைச் சட்டம் மால்தஸின் பொருட்தேக்கக் கொள்கைக்கு முன்னுரையாக விவரிக்கப்பட்ட து நினைவிலிருக்கும் (பக்கம் 98), தேவைக்கு மீறிய பொருள் பெருக்கம் ஒருக்காலும் உண்டாகாது என்பது அச் சட்டத்தின் கருத்து. இது வருங்காலத்தில் நம்பிக்கைகொண்டு இனிய நோக்குடன் வர

வேற்கலாம் என்று ஆடம் ஸ்மித் விளக்கியுள்ள கொள்கையை நிலை நிறுத்தும் துணைக் கருத்தாக அமைகிறது. பொருட் பெருக்கம் அசாத்தியம் என்பது இனிய கருத்து. ஆனால், உண்மைக்குப் பொருந்தாது என்பதற்கு 1930-32-ல் உலகம் முழுவதையும் வாட்டிய பொருளாதார மந்தம் ஒரு பெரிய சான்று. எனினும் இதன் இனிமையான, ஆனால் உண்மைக்குப் புறம்பான கருத்து அவருடைய நூல் வெளி வந்த காலத்திலிருந்து 50 ஆண்டுகள் வரையில் பொருளியல் நூலில் எல்லோராலும் ஒப்புக் கொள்ளப் பட்டு வந்தது.

**புதுக் கருத்துகள்**

ஸேயின் மற்றக கருத்துகளில் முக்கியமானவற்றைப் பார்ப்போம். மருத்துவர், நீதிபதி, இசைவாணர் போன்றவர்களின் சேவைகளும் பயன் தரும் உழைப்பாகும் என்று நிலைநாட்டி ஆடம் ஸ்மித்தை மறுத்து வாதிக்கும் கருத்து ஒன்று. பண்டங்களின் மதிப்பை அடக்கச் செலவு நிர்ணயிக்கும் என்றார் ஸ்மித். அருமையும் (Scarcity), பயன் தரும் தன்மையுமே (utility) பண்டங்களின் மதிப்பை நிர்ணயிக்கும் என்பது ஸேயின் கொள்கை. பல ஆண்டுகளுக்குப்பின் 1870-ல் தோன்றிய இறுதிநிலை வாதிகள் (Marginalists) இந்த உண்மையை விளக்கு முன்னரே அறிந்து கூறிய பெருமை ஸேயுக்கு உண்டு. தொன்மை நூல் மும்மணிகளும் வட்டிக்கும் இலாபத்திற்கும் வேற்றுமை காணவில்லை. முதலாளிக்கு வட்டி, முயற்சியாளருக்கு இலாபம் என்பது இக் காலத்துக் கொள்கை. இந்த வேற்றுமையையும் ஸே அறிந்து விளக்கியுள்ளார். முயற்சியாளர் முதல் இல்லாதவர்களாக இருக்கலாம். ஆனால், ஒரு தொழிலைத் தொடங்கும் ஆற்றலும் நிர்வகிக்கும் திறனும் நுண்ணறிவும் படைத்தவர்கள். பிறர் முதலைக் கடனாகப் பெற்றுத் தொழில் முயற்சியில் ஈடுபடுபவர்களே, இந்த முயற்சியாளரின் பண்புகளையும், அவர்கள் நாட்டுக்குப் புரியும் சேவைகளின் சிறப்புக்களையும் ஸே தான் முதலில் விளக்கிய பொருளியல் அறிஞர்.

## 14. ஜே. எஸ். மில்
(J. S. Mill, 1806-73)

'முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி
அழியா மரபினது வழிநூலாகும்'.—நன்னூல்

19ஆம் நூற்றாண்டின் மிகப் பிரசித்தி பெற்ற அறிஞர்களில் ஒருவர் ஜான் ஸ்டுவர்ட் மில், சரித்திர ஆசிரியர், அரசியல் ஞானி, 'சுதந்திரம்' என்ற புகழ் பெற்ற நூலின் ஆசிரியர். பொருளியல் அறிஞர், ரிக்கார்டோவின் நண்பர், தத்துவ ஞானி பென்தமின் நண்பரும் சீடரும் ஆவர். இவர் தந்தையின் திட்டப்படி மூன்று வயதில் கிரேக்க மொழியும், நான்கில் லத்தீனும், ஏழில் பிளேட்டோவின் (Plato) இலக்கியங்களையும், பன்னிரண்டு வயதில் தருக்க நூலையும், அதற்கு முன்னரே கணிதத்தையும், பதின்மூன்றில் பொருளியலில் கற்கவேண்டிய எல்லா நூல்களையும் கற்று விட்டார் ஜே. எஸ். மில். ஆனால் முப்பது ஆண்டுகளுக்குப் பின்னால் 1848-ல் தான் அவருடைய 'பொருளாதார நூலின் கொள்கைகள்' என்னும் நூல் வெளியாயிற்று. அந்த ஆண்டிலிருந்து சுமார் 80 ஆண்டுகளுக்குச் சரிநிகர் சமானமில்லாத நூலாகத் திகழ்ந்தது. 1919-ல் கூட ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் இது பாடப் புத்தகமாக உபயோகிக்கப்பட்டது. இந்த நூலில்தான் 'தொன்மை நூல்' யுகம் உச்ச நிலையையடைந்தது என்று கூறுவதுண்டு. அப்படியானால் ஜே. எஸ். மில்லுக்குத் தனியாக ஓர் அதிகாரம் ஏன் ஒதுக்கவில்லை என்ற கேள்வி பிறக்கும். ஒதுக்காமைக்குக் காரணம் அவருடைய நூலில் அதற்கு வேண்டிய புதுக் கருத்துகள் கிடையாது என்பதே. அதற்குமுன் தோன்றிய கருத்துகளையெல்லாம் ஒன்று சேர்த்து அழகிய நடையில் எழுதிய நூல் அது.

தொழில் புரட்சி ஆடம் ஸ்மித் காலத்திலேயே தொடங்கியது. மில் காலத்தில் அது முதிர்ச்சியடைந்து விட்டது. தலையிடாக் கொள்கையை வேதமொழிபோல், ஆங்கில நாடு போற்றிப் பழக்கத்தில் கொண்டு வந்தது. இந்த 75 ஆண்டுகளில் (1776-லிருந்து 1848 வரை) முதலாளித்துவம் நல்ல வளர்ச்சியை அடைந்தது. பொருளீட்டு ஆர்வம் தலைவிரித்தாடியது. பெண்கள் என்றும் குழந்தைகள் என்றும் பாராமல் 12 மணி முதல் 14 மணி நேரம் வரை ஆலைகளில் முதலாளிகள் வேலை வாங்கிய பரிதாபமான காலம் அது. ஆங்கில நாவலாசிரியர் சார்லஸ் டிக்கன்ஸ் (Charles Dickens) என்பவருடைய 'கடின காலங்கள்' (Hard Times)

என்ற நவீனத்தில் வர்ணித்திருப்பதெல்லாம் கற்பனையல்ல, உண்மையே. முதலாளி தொழிலாளர் நடுவில் பகை யுணர்ச்சி முறுகி வளர்ந்து கொண்டே போயிற்று. செல்வம் சிலரிடம் குவிந்தது. பெரும்பான்மையான மக்களிடையே கூலி, வருமானம், விலைவாசி முதலிய விஷயங்களில் நியாயமற்ற முறை கையாளப்பட்டு வருகிறது என்ற கருத்து ஓங்கியது. தத்துவ ஞானிகள் கார்லைல் (Carlyle), ரஸ்கின் (Ruskin) ஆகியோர், இந்நிலையைப் பார்த்துத்தான் பொருளியல் நூலை பணப் பேயின் தேவாரம், இருள் கவ்விய நூல் என்று இகழ்ந்தனர். ஜே. எஸ். மில்லின் பிறப்பு, வளர்ப்பு, அறிவு, தத்துவ ஞானம் எல்லாவற்றுக்கும் மேலாக மக்கள் நல் வாழ்விலுள்ள பரிவு, அவரை ஒரு பொருளியல் நூல் எழுதத் தூண்டின. எனவே தம் காலம் வரை எழுந்த புதுக் கருத்துகளையெல்லாம் ஒன்று கூட்டி ஆடம் ஸ்மித்தின் 'நாடுகளின் செல்வம்' மாதிரி ஒரு நூல் எழுதத் திட்டமிட்டார். ஆனால், அவர் எழுதி முடித்தது ரிக்கார்டோவை வாசகர்களுக்கு விளக்க உதவும் தெளிவுரைதான் என்பது அறிஞர் எண்ணம். இந் நூலின் இன்னொரு சிறப்பு, முதல் பாதியில் ஸ்மித், மால்தஸ், ரிக்கார்டோ ஆகியோரின் கருத்துகளை விரித்தும் வகுத்தும் விளங்கவைக்கிறார். இரண்டாம் பகுதியில் தன்னைச் சுற்றிக் காணும் அநீதி, பேராசை, பாட்டாளி மக்களின் தீனக் குரல் எல்லாம் அவர் இதயத்தைத் தொட்டதின் விளைவாகச் சமூகச் சீர்திருத்தம் செய்வது அரசினர் கடமை, தலையிடா கொள்கையை இனியும் பின்பற்றுவது கேடு என்பதை விளக்குவதில் ஈடுபடுகிறார். அவருக்கு சோஷியலிச வாதத்தில் திடீர் காதல் பிறந்துவிட்ட மாதிரிப் படிப்பவர்களுக்குத் தோன்றுகிறது. அதே சமயம் அவருக்குத் தனி மனிதன் சுதந்திரத்தில் உள்ள பற்று, அரசாங்கத் தலையீட்டின் வளர்ச்சியை வெறுக்கிறது. எனவே அவர் ஒரு மூச்சில் பொருளாதார சமத்துவம் வேண்டும் என்கிறார்; அதை உருவாக்கப் பளுவான வருமான வரி முதலியன விதிக்கவேண்டும் என்கிறார். அடுத்த மூச்சில் சொத்துவரி, வருமானவரி எல்லாம் தனி மனிதன் சுதந்திரத்தை அறுக்கும் வாள் எனச் சாற்றுவார். இந்த வகையில் ஜே. எஸ். மில் அவர் நூலை இரு மனத்துடன், தலையிடாக் கொள்கையை ஆதரித்தும் நிராகரித்தும் எழுதியிருப்பது அந் நூலின் தனிக் குணம்.

தொன்மைப் பொருளியலின் அடிப்படை கோட்பாடுகளாகிய கட்டுப்பாடில்லாத போட்டி, குறைந்து செல் இறுதி நிலை விளைவு விதி, மக்கட் தொகை கொள்கை, ஸேயின் சந்தைச் சட்டம் ஆகியவற்றில் ஜே. எஸ். மில்லுக்கு அளவிட முடியாத நம்பிக்கை,

பற்றி இருந்தது. இந்தக் கோட்பாடுகளுக்கெல்லாம் அவருடைய நூலில் வலுவான அரண் அமைத்து எழுதியுள்ளார். ஆயினும் அவர் நூலில் அவருடைய சொந்தமான புதிய கருத்துகள் சில வற்றைக் காண்கிறோம். இனி அவற்றை ஆராய்வோம்.

**பொருளியலில் இருவகை விதிகள்**

பழைய கருத்துகளைப் புதிய பாண்டங்களில் வடித்திருக்கிறார் என்று கூறினோம். ஆயினும் பொருளாக்க விதிகளுக்கும், செல்வப் பங்கீடு விதிகளுக்கும் அவர் கற்பிக்கும் வேற்றுமை அவருடைய புதிய கருத்துகளில் முதலிடம் பெறும். பொருள்களை உற்பத்தி செய்ய நிலத்திலோ, சுரங்கத்திலோ, கடலிலோ, மலையிலோ பாடுபடவேண்டும். அந்த உழைப்பின் விளைவு இயற்கை விதிகளுக்குக் கட்டுப்பட்டது. ரிக்கார்டோ கூறிய 'குறைந்துசெல் இறுதி நிலை விளைவு விதி' ஓர் இயற்கை விதி. ஓர் ஏக்கர் நிலத்தில் பத்துப்பேர் பாடுபட்டால் பத்து மூட்டை நெல் விளையும் என்றால் 500 பேர் உழைத்தால் 500 மூட்டை நெல் விளையாது என்பது இயற்கை விதிகளில் ஒன்று. இந்த மாதிரியுள்ள இயற்கை விதிகளை எவரும் மாற்றவோ, திருத்தவோ முடியாது. இத்துடன் மனிதனின் இயற்கைப் பண்புகளை ஆராய்ந்தால் சில இயற்கை விதிகளைக் காணலாம். இன வளர்ச்சி உணர்ச்சி, பொருளீட்டுவதில் பேராசை, தன்னலம் இவைகளும் எளிதில் மாற்ற முடியாத குணங்கள். இவற்றிலிருந்து முளைத்த கொள்கைகள் தாம் தொன்மை நூல், எப்படி நோக்கினாலும், பொருளாக்கத் துறை இயற்கை விதிகளால் கட்டுண்டு கிடக்கிறது. ஆனால், தோற்றுவித்த செல்வத்தைப் பங்கிடும் துறையில் மனிதன் இயற்றுவதுதான் சட்டம். அது எத்தனையோ விதங்களில் மாறலாம்; அவற்றை மாற்றவும் முடியும் என்கிறார் மில்: 'ஆக்கிய செல்வம் முழுவதையும் தனியே அல்லது ஒன்று சேர்ந்து மக்கள் என்ன செய்வது என்பதை அவர்கள் விருப்பம் போல் தீர்மானிக்க முடியும். எவருக்கும் ஈயலாம்; என்ன நிபந்தனைகளும் விதிக்கலாம். ஒருவன் தனியாகத் தானாகவே உண்டாக்கிய பொருளையும் அரசாங்க அனுமதியின்றிச் சட்ட திட்டங்களின்றி, கள்வரிடமிருந்து பாதுகாப்பின்றி, அவனே துய்ப்பதுகூட முடியாது. எனவே, நாட்டின் செல்வப் பங்கீடு சமூகப் பழக்க வழக்கங்களையும், அரசாங்கச் சட்டங்களையும் பொறுத்தது. இந்தச் சட்டங்கள் ஆட்சி பீடத்திலிருப்பவர் அபிப்பிராயங்களையும் உணர்ச்சிகளையும் பொறுத்தவை. இவை காலம் மாறும்போது மாறும். மக்கள் விரும்பினால் எத்தனையோ வகைகளில் மாற்ற முடியும்' என்று மில் கூறுகிறார். இந்த முடிவில் தொன்மை நூல் முடிவுக்கு முரண்பாடு இருப்பதைக் கவனிக்க

வேண்டும். ஸ்மித், சிறப்பாக ரிக்கார்டோ, கூறிய தத்துவம் வேறு. அவர்களிருவரும் நிலப்பாட்டம், கூலி, வட்டி, இலாபம் ஆகிய பொருளாக்குச் சாதனங்களின் பங்குகளும் மாற்ற, அசைக்கமுடியாத இயற்கை விதிகளால் கட்டுண்டு கிடக்கின்றன என்றனர். இதை உணராதவரில்லை மில். எனினும் தம்மைச் சுற்றி அவர் எங்ஙனும் கண்டது ஏழைத் தொழிலாளியின் துயரங்கள். இவற்ருல் உள்ளம் உருகித் தீவிர சமூகச் சீர்திருத்த வாதியாக மலர்ந்தவர் மில். தொன்மை நூலின் கொள்கைப் படி பங்கீட்டுத் துறையில் மாற்ற முடியாத, இரும்பு போன்ற இயற்கை விதிகள் ஆட்சி செலுத்துகின்றன என்பதை ஒப்புக் கொண்டால், மில்லின் சீர்திருத்த வாதத்துக்கு வழியே கிடைக்காது. அதனுலேயே ‘பொருளாக்க விதிகளின் தன்மை வேறு, பங்கீட்டு விதிகளின் தன்மை வேறு’ என்று மிக்கத் துணிச்சலுடன் மொழிந்தார். பொருளியல், அதன் விஞ்ஞான விதிகளுக்கு ஏற்ப இயங்குகிறது என்று எல்லோரையும் போலத் தொடங்குகிருர். ஆனுல், உற்பத்தி மட்டும் அத்தகையது என்றும், பங்கீடுமட்டும் அத்தகையது அன்று என்றும் கூறுவது பொருளியலின் ஒருமைப்பாட்டைக் குலேக்கிறது.

### மில் சோஷியலிசவாதியா ?

மில்லின் சீர்திருத்தவாதம் அவரைச் சோஷியலிச வாதத்தின் மயக்கில் சிக்கவைத்தது. ஆனுல் இந்தக் காதல் பாரதியார் சிறு வயதில் கலேமகளாகிய சிறுமியிடம் கொண்ட தெய்வீக உணர்ச்சி (Platonic love) போன்றது. அவர் விரும்பிய சீர்திருத்தங்கள், நிலங்களேச் சிறிய ரயத்துவாரிப் புலங்களாக்குதல், தொழிலாளர், முதலாளிகள் இருவரையும் அன்பினுல் இணேந்த பங்காளிகளாக் குதல் முதலியனவற்றில் அவருள்ளம் போற்றும் தனி மனிதன் சுதந்திரத்தின் ஒளியைக் காணலாம். கடுமையான வருமான வரி விதிக்க அவர் தருக்க ரீதியாக நினேப்பார். அதை விதிப்பதற்குத் தனி மனிதனின் சுதந்திர உரிமைகள் பல தடைகளே அவர் உள்ளத்தில் நினேவூட்டும். சீர்திருத்தத்தை அவர் இதயம் நாடிற்று. ஆனுல், தனி மனிதன் சுதந்திரத்தை அவர் அறிவு நாடிற்று. அவருடைய நூலேக் கவனத்துடன் கற்றவர்க்கு அறிவு இதயத்தை வென்றுவிட்டது என்பதே புலனுகும். எனவே அவரைச் சோஷியலிசவாதி என்று கூறுவது சரியல்ல

### மக்கட் தொகைக் கொள்கை

மால்தசின் மககட் தொகை கொள்கையில் மில்லுககு மிகுந்த பற்று. இயற்கையின் கருமித்தனத்தைப் பொருளியலின் அடிப்

படை கொள்கையெனக் கருதுகிறார். எனவே குசேலர் மாதிரிப் பல குழந்தைகளைப் பெறுபவர்களை வெஞ்சினத்துடன் தாக்கு கிறார். பிள்ளை பெறும் நோய், கள்ளுண்பதைப் போன்றது என்கிறார்.

**கூலி நிதிக் கொள்கை (Wage-fund theory)**

தொழிலாளருக்குக் கிடைக்கும் கூலியைப் பற்றித் தொன்மை நூலாருடன் இவர் ஒத்துப்போகவில்லை. 'நாட்டின் வருமானத் தில் ஆண்டுதோறும் ஒரு பகுதி கூலி வழங்குவதற்கெனவே ஒதுக்கப்பட்டுள்ளது. அதை கூட்டவோ, குறைக்கவோ முடியாது. எனவே தொழிலாளர் எண்ணிக்கை அதிகமானால் கூலி குறையும். குறைந்தால் கூலி உயரும்' என்ற கூலி நிதிக் கொள்கையே அவருடைய கொள்கை. ரூ. 10,000 கூலி நிதியாக ஒதுக்கப்பட்டிருந்து, 100 தொழிலாளர் உழைப்பதாகக் கொண் டால், ஒரு தொழிலாளர் கூலி ரூ. 10,000÷100= ரூ. 100 ஆகும், இருநூறு தொழிலாளர் இருப்பின் கூலி தொழிலாளர் ஒருவருக்கு ரூ. 50 ஆகக் குறையும் என்பதே அவர் வாதம். கூலி நிதியை மாற்றிக் கூட்டியமைக்க முடியாது என்றும் கூறுகிறார். அப்படி யானால் தொழிலாளருக்கு அதிகக் கூலி கிடைக்க வேண்டுமானால், அவர்கள் தங்கள் எண்ணிக்கையைக் குறைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்றாகும். இந்தக் கொள்கையைப் பின்னால் மில் தவறானது என்று ஒப்புக்கொண்டு கைவிட்டு விட்டார்.

இதிலுள்ள தவறுகள் என்ன? இரண்டை மாத்திரம் இங்கே விளக்குவோம். (1) தொழிலாளர் 100-லிருந்து 200 ஆக அதிக மானால் புதிய 100 பேர் உழைப்பினால் நாட்டு வருமானம் அதிக மாகும். நாட்டு வருமானம் உயர்ந்தால், கூலி நிதியும் உயர்வது நியாயம்தானே? அவ்வாறு கூலி நிதி உயர்ந்தால், ஒரு நபருக்குக் கிடைக்கும் சராசரிக் கூலி உயரும். மேற்கூறிய உதார ணத்தில் 200 பேர் உழைக்கும்போது நாட்டு வருமானம் அதிக மாகி அத்துடன் கூலி நிதியும் ரூ. 12,000-க்கு உயர்கிறது என்று வைத்துக்கொள்வோம். அப்படியானால் கூலி நபர் ஒன்றுககு ரூ. 12000÷200= ரூ. 60 ஆகுமன்றோ? (2) 100 தொழிலாளர்களே உழைக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். ஆனால் அவர் களுடைய உழைப்புத் திறன், ஊக்கம் முதலியன மிக்க உயர்வு அடைந்திருக்கின்றன எனக் கொண்டால், அதனாலும் நாட்டு வரு மானம் உயரும். கூலி நிதியும் உயர வேண்டும். உதாரணமாக அது ரூ. 11000-க்கு உயர்ந்ததெனின், ஆள் ஒன்றுக்கு கூலி ரூ. 110 கிடைக்குமல்லவா? இந்த இரு காரணங்களும் வற் புறுத்துவது ஒன்று உண்டு. அஃதாவது தொழிலாளர்களின்

வருங்காலம் அவர்கள் கையில்தானிருக்கிறது. அவர்களது உழைப்பின் தரம், உற்பத்திப் பெருக்கு முதலியனவற்றைப் பொறுத்திருக்கும் அவர்கள் கூலியும் வருமானமும் என்பதே ஆம்.

### தொழிலாளர் சங்கம்

கூலி நிதிக் கொள்கையில் மில் மிக்க பற்றுதல் காட்டிய காலத்தில் 'தொழிலாளர் சங்கங்கள் எந்தத் தீவிர முறைகளைக் கையாண்டாலும், கூலி நிதியின் அளவு இம்மிகூட அதிக மாகாது. எனவே தொழிலாளர் கூலியும் இம்மிகூட உயராது' என்று அவர் நினைத்தார் கூலி நிதிக் கொள்கையைக் கைவிட்ட பின் தொழிலாளர் சங்கங்கள் இரண்டு சமயங்களில் கூலிப் போராட்டத்தில் வெற்றியடையக்கூடும் என்று கூறியுள்ளார். (1) முதலாளிகள் வேண்டுமென்றே தொழிலாளர் வேலைக்குப் போட்டியிடுவதைப் பயன்படுத்திக்கொண்டு நியாயக் கூலிக்குக் (Fair Wage) குறைவாகக் கூலிகொடுத்து வரும் சமயம் ஒன்று. (2) தொழிலாளர் தங்கள் பொருளாக்கும் திறனை உயர்த்திக் கொள்ளும் சமயம் மற்றொன்று.

### முதலைப் பற்றி நான்கு சூத்திரங்கள்

பொருளாக்குவதற்கு இயற்கை வளம் மக்கள் உழைப்பு இவ் விரண்டுமே இன்றியமையாதவை. காட்டில் வாழும் நாகரீகமடை யாத மக்களின் சமுதாயத்தைத் தவிர, மற்ற நாகரீகமடைந்த சமூகங்களிலெல்லாம் முதலே (Capital) முக்கியத்துவம் பெறு கிறது. முதலைப் புரளும் முதல், நிலையான முதல் என்றும் பிரித் திருப்பதை மில் ஒப்புக் கொள்கிறார். ஆனால், இருவகை முதலும் கடைசியில் உபயோகப்படுத்தப்பட்டு அழிந்துவிடக் கூடியவை என்று இவர் வற்புறுத்துகிறார். ஆகவே, அவற்றைப் புதுப் பித்துக்கொள்வதிலும், அதிகமாகச் சேகரித்துக் கொள்வதிலும், கண்ணுங் கருத்துமாயில்லாத நாடுகள் முன்னேற்றமடைய முடியாது என்று எச்சரிக்கை செய்கிறார். முதல் பற்றிய மில்லின் நான்கு சூத்திரங்கள் பொருளியல் இலக்கியத்தில் சிறப்பிடம் பெற்றுள்ளன :

(1) தொழில் வளர்ச்சி முதல் வளர்ச்சியைப் பொறுத்தது.

(2) முதல் என்பது சேமிப்பினால் விளைவது.

(3) முதல் என்பது பொருளாக்குச் சாதனம் என்றாலும், அதுவும் பயன் துய்ப்பதற்குரிய பொருள்தான். பயன் துய்ப்பில் மட்டும் வேற்றுமை உண்டு. சோறு, சோப்பு, மெழுகுவர்த்தி போன்ற நுகர்ச்சிப் பண்டங்களின் பயனே மக்களால் நேரடியாகத் துய்க்கப்படுகின்றது. ஏர், கலப்பை, கைத்தறி, மின் நிலையம்

போன்ற முதலோ வேறு நுகர்ச்சிப் பண்டங்களை உற்பத்தி செய்யப் பயன்படுகின்றன. அப்படிப் பயன் பட்டுக்கொண்டேயிருப்பின், குறுகிய அல்லது ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குள் பயனற்றுப் போய்விடும். நிரந்தரமாக ஒரு முதலும் பயன் நல்காது.

(4) தொழில் ஆலைகளை இயக்க உதவும் முதல், தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினைத் தரும். அவர்களைக் காப்பாற்றும். இந்த நான்கு சூத்திரங்களிலிருந்து சேமிப்பும் கடைசியில் பயன் துய்த்தற்குரியது என்னும் முடிவு கிடைக்கிறது. ஆனால், வெளித் தோற்றத்தில் முரண்பாடுடையதாக இருக்கிறது. ஏனெனில் பயன் துய்க்காத வருமானம் சேமிப்பு, என்று நாம் செலவுக்கும் சேமிப்புக்கும் பாகுபாடு செய்கிறோம். ஆனால், மில்லின் சூத்திரங்களின்படி சேமிப்பு என்பது காலம் தாழ்த்தி துய்க்கப் பெறுவதே (Deferred Consumption) ஆதலின் பின்னுக்கென ஒதுக்கிவைத்த நுகர்ச்சி என்றே முடியும்.

### வளர்ச்சியில்லாத சமுதாயம்

'மிகுதியான சேமிப்பு, மிகுதியான முதல், மிகுதியான செல்வ வளர்ச்சி' என்னும் கொள்கை ஆடம் ஸ்மித் வலியுறுத்திய உண்மை, இவ் வளர்ச்சிக்கு முடிவே கிடையாதா என்று மில் கேட்கிறார். இயற்கை வளங்களை முழுதும் பயன்படுத்தும் நிலை எய்தியபின், மக்களின் உழைப்புத் திறனும், தொழில் முயற்சியும், நிர்வாகமும் முழுச்சிறப்பு எய்தியபின், வளர்ச்சி நின்றுவிடும். எல்லாப் பொருளாக்குக் கருவிகளும் பரிபூரணமாக வேலை புரியும். இந் நிலையில் வேறு புது வளர்ச்சிக்கு இடமிருக்காது. அனைவருக்கும் வேலை வாய்ப்பு, அனைவருக்கும் ஊதியம், அனைவருக்கும் நல்வாழ்வு என்றபின் வளர்வதற்கு என்ன இருக்கிறது? ஆதலின் வளர்ச்சி ஸ்தம்பித்த சமுதாயம் (Stagnation, or Static Society) என்னும் கடைசிக் கட்டத்தை நோக்கி சமுதாயம் முன்னேறிப் போகும். பருப்பொருள் துறையில்தான் வளர்ச்சி நின்றுவிடுமே தவிர, மக்கள் ஒழுக்கம், பண்பாடு, நுண்கலைத் திறன், தத்துவ விசாரணை முதலிய துறைகளில் வளர்ச்சிக்கு முடிவே கிடையாது என்ற சிந்தனையில் மில் மகிழ்ச்சியடைகிறார். பருப்பொருள் உற்பத்தியில் முன்னேற்றம் மாத்திரம் மனித வர்க்கத்தின் ஒரே இலட்சியமாக, குறிக்கோளாக இருக்க முடியாது. இருக்கக் கூடாது என்பது மில்லின் தத்துவம்.

### வியாபாரச் சகடம் (Business Cycle)

ஸேயும் ரிக்கார்டோவும் வியாபாரச் சகடம் பற்றி ஒரு கவலையும் படவில்லை. அவர்கள் கருத்துப்படி பொருள் தேக்கம்

கிடையாதன்றோ ? குறுகிய காலங்களில் பொருளாதார நடவடிக்கைகள் (Activities) மும்முரமாகவும் மந்தமாகவும் மாறிவரக்கூடும். கடைசியில் அனைவருக்கும் வேலை வாய்ப்பு, பொருள் வழங்கல், தேவை, சமநிலை என்பன நீண்டகாலத்தில் கைகூடும் என்று ஸேயின் சந்தைச் சட்டத்தையும் புறக்கணிக்காமல், தமது புதிய கருத்தை மில் கூறுகிறார். வியாபாரச் சகடத்தில் மூன்று பருவங்களை மிக்க நவீன முறையில் மில் விளக்கியுள்ளார். (1) வளர்ச்சி வேகமாகி வருங்காலம் (Expansion Phase). இதில் யூக வாணிப முறையில் (Speculation) தொழிலதிபர்கள் ஈடுபடுவர். விலைவாசி ஏறுமுகத்தில் இருக்கும். (2) வணிக முறிவு (Upper Turning Point). இந்தப் பருவத்தில் விலைவாசி உச்ச நிலையைத் தாண்டி இறங்குமுகம் காணும். (3) வணிக மந்தம், (Contraction Phase) உற்பத்தி, வணிகம், தேவை எல்லாம் குறைந்து வரும் காலம். எப்பொழுது கீழ்நோக்கிப் போய்க்கொண்டிருக்கும் விலைவாசி 'ஏறு முகம்' (Lower Turning Point) காணும் என்பதைப்பற்றி நவீன அறிஞர்களைப்போல் ஒரு நான்காம் பருவம் மாத்திரம் மில் வகுக்கவில்லை. ஆனால், தொழிலதிபர்களிடையே மாறி மாறிக் காணும் இன்ப நோக்கு, துன்ப நோக்கு (Optimism and Pessimism) மனப்பான்மையும், அதனால் அவர்கள் இழைக்கும் தவறுகளும் எவ்வாறு சகடத்தின் போக்கை வலுப்படுத்துகின்றன என்பதை, பிகோ (Pigow), கெயின்ஸ் (Keynes) ஆகியோர் பாணியில் விளக்கியுள்ளார். சகடத்தின் தீமையைப் போக்க பணம் பற்றிய முறைகளை மாற்றி, புது நடவடிக்கைகள் எடுப்பதை மில் ஆதரிக்கவில்லை. ஏனெனில் வேலையின்மையைவிடப் பண வீக்கத்தைப் பெரும் தீமையாகக் கருதினவர் மில். இவருக்கு நேர் எதிரிடை நோக்குடையவர் கெயின்ஸ்.

**அனைத்து நாட்டு வணிகம்**

ரிக்கார்டோவின் அனைத்து நாட்டு வணிகக் கொள்கையை மேலும் விரிவாக ஆய்கிறார் மில். அனைத்து நாட்டு வணிகத்தில் இலாபம், வணிகத்தில் பங்கு கொள்ளும் நாடுகளுக்குள் எவ்வாறு பிரிவினை செய்யப்படுகிறது என்று வினவி விடை பகர்கிறார். ஒவ்வொரு நாட்டின் தேவை நெகிழ்ச்சியினைப் பொறுத்திருக்கும் அந்த நாடு அடையும் இலாபம் என்ற தற்கால அறிஞர் முடிவுக்கு மில் அன்றே வந்து விடுகிறார். மில்லின் கூற்றை மார்ஷல் படம் வரைந்து காட்டினார். அதனை ஆதாரமாகக்கொண்டு 20ஆம் நூற்றாண்டில் அனைத்து நாட்டு வணிகக் கொள்கை நுட்பமாக ஆராயப்பட்டு வளர்ந்திருக்கிறது.

**பிற கருத்துகள்**

பேரறிஞர் மில் நிலப்பாட்டம், உழைப்பின் பாகுபாடு, இலாபம், வருங்காலம் பற்றிய இனிய நோக்கு ஆகிய தொன்மை நூலார் கொள்கைகளைத் தமக்கே உரித்தான அழகிய நடையிலும், புது மெருகுடனும் விளக்கியுள்ளார். இவற்றில் பொருளியல் நூலில் இன்றைக்கும் தெளிவாகப் புரியாத புதிர் ஒன்றுண்டு. அதுவே பொருளியல் நூலுக்கு இதயம் போன்ற மதிப்புப் பிரச்சினை (Problem of Value). அதைப்பற்றி மில் கூறும் மகிழ்ச்சி ததும்பும் வாசகம் அவருடைய மன நிறைவைக் காட்டுகிறதே தவிரக் கூரிய அறிவைக் காட்டவில்லை: 'பண்ட மதிப்பை நிர்ணயிக்கும் விதிகள் பூரணமாக உருவாக்கப் பட்டுவிட்டன. தற்கால அறிஞர் அல்லது வருங்கால நிபுணர் இந்தப் பிரச்சினையைப் பற்றிப் புதிதாகக் கூறவேண்டிய கருத்து ஒன்றும் இல்லை. இது மகிழ்ச்சிக்குரிய செய்தி.' இந்த வாசகம் எழுதி 25 ஆண்டுகளுக்குள் மதிப்புப் பிரச்சினையில் ஆங்கில, ஆஸ்திரிய நாடுகளில் புரட்சிகரமான மாறுதல்கள் உண்டாயின. அவற்றைப் பற்றிய சிறிய அறிகுறி கூட அறிஞர் மனத்தில் படவில்லை. ஆங்கிலத்தில் ஒரு முதுரை: (அறிவின் களஞ்சியமெனப் போற்றப்படும்) 'ஹோமரும் கண்ணயர்ந்து விடுவார்'. இது மில் விஷயத்தில் பலித்து விட்டதைக் காண்கிறோம்.

**முடிவுரை**

அறிஞர் மில் இருதலைப்பட்ட அபிப்பிராயம் கொண்டவராயிருந்தார். பென்தம், ரிக்கார்டோ, தந்தை மில் ஆகியோருடைய கருத்துகள் இளமையில் கற்ற குறையினுல் அவையே பசுமரத்தாணிபோல் இவர் மனத்தே பதிந்திருந்தன. அவற்றை விரிப்பதும் விளக்குவதுமே அவர் நூலில் செம்பாதி. அடுத்த பாதியில் சீர்திருத்தவாதியாகக் காட்சியளிக்கிறுர். மில்லின் நூல் தொன்மை நூலின் அச்சாணியான சுதந்திரவாதத்தின் உச்சந்தைக் (Climax) குறிக்கிறது என்று சொல்வாருமுண்டு. அதே சமயம் அவர் நூல் தொன்மை நூலின் வீழ்ச்சியைத் துவக்கிவைக்கிறது என்று கருதுவாரும் உண்டு. ஏனெனில், பாதிப் புத்தகத்துக்குப்பின் சமூகச் சீர்திருத்தம் பற்றி வாதிக்கும் போது, தொன்மை நூலின் தாரக மந்திரமான தலையிடாக் கொள்கையை மில் கைவிட்டு விடுகிறுர். எனவே மில்லின் நூலைப் பற்றிய இவ்விரண்டு விதமான அபிப்பிராயங்களுக்கும் ஆதாரங்கள் இருக்கின்றன.

## பாகம் IV

# 19ஆம் நூற்றுண்டின் பிற்பகுதி

## 15. இறுதிநிலைப் புரட்சி

### (i) ஆஸ்திரியக் குழு (Austrian School)

கார்ல் மெங்கர் (Karl Menger, 1840-1921) பிரடரிக் வான் வீசர் (Frederich Von Weiser, 1851-1926), பாம்பாவர்க் (1851-1914) ஆகிய மூவரும் ஒருவர்பின் ஒருவராக வியன்னுப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர்களாகப் பணியாற்றியவர்கள். வான் வீசர், மெங்கரின் மகளை மணந்த மருமகனும் ஆவர். இவர்கள் மூவரும் தொன்மை நூலில் சில குறைபாடுகளைக் கண்டனர். 'பண்டங்களின் மதிப்பு அடக்கச செலவைப் பொறுத்தது' என்பது அல்லவா தொன்மை நூல் கொள்கை ? இதை மறுத்துப் பண்டங்களின் மதிப்பு அவற்றின் இறுதி நிலைப் பயன்பாட்டைப் (Marginal Utility) பொறுத்துள்ளது என்று இவர்கள் கூறினுர்கள். மேலும் 'முதற் கருவிகளின் (Factors of Production) மதிப்பு அவற்றின் உதவியால் ஆக்கப்படும் நுகர்ச்சிப் பண்டங்களின் (Consumption goods) மதிப்பினுல் நிர்ணயிக்கப்படுகிறது' என்ற மற்ருெரு கொள்கையையும் இவர்கள் விளக்கினுர்கள். இம் மூவரும் ஒரே பரம்பரை ; ஒரே நோக்குடையவர் ; ஒரே உள நூல் தத்துவத்தை அடிப்படையாகக்கொண்டு வாதித்தவர்கள். ஒரே கோணத்திலிருந்து, அஃதாவது நுகர்வோரின் மனப் பான்மை, விருப்பு, வெறுப்பு உணர்ச்சிகளிலிருந்து, மதிப்புப் பிரச்சினையை ஆராய்கின்றனர். எனவே இவர்களை 'உளநூல் வாதப் பொருளாதாரப் பள்ளி' (Psychological School) என்றும் அவர்கள் வகுத்த கொள்கைகளுக்கு ஏகியோக் கொள்கை (Agio Theory) என்றும் பெயர்கள் உண்டாயிற்று.

இவர்கள் மூவரில் ஒருவரும் தமக்குத் தனியாகப் பெரும் புகழும் வேண்டுமென ஆசைப்படவில்லை. எப்படி டாக்டர் குவஸ்னே இயற்கைவாதிகளின் குருவாக மதிக்கப்பட்டாரோ, அப்படியே மெங்கரும் ஆஸ்திரியப் பள்ளியின் குருவாகப் போற்றப்பட்டார். ஆதலால் ஆஸ்திரியப் பள்ளியின் கருத்துகளெல்லாம் ஒரே மாதிரியானவை. ஒவ்வோரிடத்தில் ஒவ்வோர் ஆசிரியர் சிறப்பாகக் கூறிய கருத்துகளும் உண்டு. அவற்றை வேண்டிய இடங்களில் குறிப்பிட்டுக் கொள்ளலாம். ஏனையவற்றை மொத்தமாக ஆஸ்திரியப்பள்ளி வகுத்த ' இறுதி நிலை வாதம் ' என விளக்குவதே சிறந்த முறை.

ஆஸ்திரிய நாட்டில் மெங்கரின் நூல் ' பொருளாதார கொள்கைகளும் ' (Principles of Economics) ஜெவென்ஸின் நூலும் ஒரே ஆண்டில், 1871-ல், வெளியாயின என்பது வியப்புக்குரியது. இறுதிநிலை வாதிகள் அனைவருமே உளநூல் வழியில் பொருளாதார ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்கள். மேலும் அவர்கள் தனி மனிதனின் தேவை நிலையைத் தொடக்கமாகக் கொண்டும், தனி நிறுவனத்தின் தேவைநிலை ஆகியவற்றை மையமாகக் கொண்டும் சிக்கல்களை ஆராய்ந்தவர்கள் ஆவர். தொன்மை நூலார் அளிப்பு (Supply) முனையிலிருந்து ஆராய்ந்த முறைக்கு இது மாருனது. இறுதிநிலை வாதிகள் நுகர்வோனின் பயன்பாட்டு விளைவிலிருந்தும் (utility) தொன்மை நூலார் அடக்கச் செலவிலிருந்தும் (Cost) பொருளாதார நூலைத் தொடங்கியது, மற்றெரு வேறுபாடு ஆம். இறுதிநிலை வாதம் நுகர்வோனையும், தொன்மை நூலார் உற்பத்தியாளனையும் ' கதாநாயகனுக ' ஆராய்ச்சியைத் துவக்கியிருப்பது மூன்றுவது வேற்றுமை ஆகும். இறுதிநிலை வாதத்தின் சிறப்புமிக்க கருத்துகளை ஏழு தலைப்புகளில் அமைத்து அறிந்து கொள்ளலாம். (1) பயன்பாடு பண்டங்களின் மதிப்புக்கு அடிப்படைக் காரணம். (2) குறைந்து செல் பயன்பாட்டு விதி (Law of Diminishing Marginal Utility) (3) இறுதிநிலைப் பயன்பாடுதான் மதிப்பின் அளவுகோல் (Marginal Utility is the measuring rod of Value) (4) சமநிலை இறுதி நிலைப் பயன்பாடு விதி (Law of Equi-marginal Utility) (5) பொருளாக்குக் கருவிகளின் மதிப்பு நிர்ணயம். சாட்டு மதிப்புக் கொள்கை (Principle of Imputation), (6) பாம்பாவர்க்கின் இறுதிநிலை இணைகள் (Marginal pairs) (7) பாம்பாவர்க்கின் வட்டிக் கோட்பாடு, இவற்றை முறையே இனி ஆராய்வோம்.

**(1) பயன்பாடு பரிவர்த்தனை மதிப்பின் அடிப்படைக் காரணம்**
**(Utility is the basic determinant of exchange Value)**

ரிக்கார்டோவின் கூற்று 'உழைப்புதான் பரிவர்த்தனை மதிப்புக்கு மூலகாரணம்' என்பது அன்றோ? அதைப் பயன் படுத்திக் கார்ல் மார்க்ஸ் 'உபரி மதிப்பு' என்னும் கருத்தை உருவாக்கி, அதன் அடிப்படையில் முதலாளித்துவத்துக்கு முற்றும் முரணான சோஷியலிசப் பொருளாதாரம் என்னும் 'விபரீதத்தை' எழுப்பினார் அல்லவா? இந்த விபரீத முடிவினால் தொன்மை நூல் அடியோடு ஆடத்தொடங்கியது. தொன்மை நூல் வகுத்த மதிப்புக் கொள்கையை (Theory of Value) அறவே புறக்கணித்துவிட்டுப் புதியதொரு கோட்பாடு வகுக்க வேண்டியது அவசியமாயிற்று. வகுக்காவிட்டால் தொன்மை நூலும் அதன் துணையால் வளர்ந்த முதலாளித்துவமும் கேலிக்குரியன வாகி அழியக்கூடிய ஆபத்து அணுகிற்று. ஆஸ்திரியப் பள்ளி அறிஞர் பண்டங்களின் மதிப்பின் அடிப்படைக் காரணம் அவற்றின் பயன்பாடு என்று வாதித்தார்கள். பயன்பாடு என்பது ஒவ்வொரு நுகர்வோனின் உள்ளத்தில் தோன்றும் ஒரு பண்டத்தின் பண்பு. அது வெவ்வேறு மனிதருக்கு வெவ்வேறு வகையானதாகவும், அளவுடையதாகவும் இருக்கும். ஒரு பண்டம் எல்லாருக்கும் ஒரே அளவில் பயன் அளிப்பதில்லை தேயிலையை எடுத்துக்கொள்வோம். வட இந்தியருக்கு அது மிகவும் பிடித்தமானது; எனவே பயன்பாடு அதிகமுள்ளது. தமிழ் நாட்டினருக்கு அத்தகைய பயன்பாடுடையது அல்ல. சிலருக்கு அது வெறுப்புக்குள்ளான பண்டமாகவும் இருக்கக்கூடும். அவர்களுக்கு அதன் பயன்பாடு சூன்யமே. வேறு வேறு மக்களுக்கு அவரவர்கள் விருப்பத்திற்குத் தக்கவாறு பயன்பாடு வேறுபடும். எனவே அதன் மதிப்பும் வேறுபடும். இறுதிநிலை வாதிகளின் வாதப்படி மதிப்பு என்பது மனிதன் உள்ளத்திலிருந்து உதயமாவது அகப் பண்பினாலாவது (Subjective in its Nature). தொன்மை வாதிகளின் வாதப்படி மதிப்பு ஒரு பண்டத்தில் அடங்கியிருக்கும். அது யாவருக்கும் பொதுவான அளவு கோலால் அளக்கக் கூடியது. உழைப்பு நேரம், அடக்கச் செலவு என்பன எல்லோருக்கும் பொது வான அளவுகோல். எனவே மதிப்புப் புறப் பண்பினாலாவது (Objective in its nature). பண்டங்கள் செய்து முடிக்கப்பட்டபின், அவற்றின் அடக்கச் செலவு, அவற்றைச் செய்ய எடுத்துக் கொண்ட உழைப்பு நேரம் ஒருக்காலத்திலும் மாறுவதில்லை. ஆனால், பயன்பாடு காலத்துக்குக் காலம் மாறும். மழைக்காலத்தில் தேயிலையின் பயன்பாடு அதிகமாகலாம். கடும் கோடையில் குறையலாம் அதைப் பொறுத்தே அதன் மதிப்பும் மாறும். தலை வலி யுற்றபொழுது 'அனாசின்' அல்லது 'சாரிடன்' ஒருவ

னுக்கு மிக்க பயன்பாடு உள்ளது. நோய் தெளிந்தபின் அதே மனிதனுக்கு ஒரு பயன்பாடும் தராது. இந்த மாதிரி வாதிக்கும் பொழுது, இறுதிநிலை வாதிகள் பண்டங்களின் அடக்கச் செலவை அறவே புறக்கணித்துப் பேசினர் என்பதை நாம் நினைவிலிருத்திக் கொள்ளவேண்டும்.

(2) குறைந்து செல் இறுதி நிலைப் பயன்பாட்டு விதி
(Law of Diminishing Marginal Utility)

ஒரு ரொட்டி அல்லது இட்லி முழுவதையும் ஒரே வாயில் யாரும் விழுங்கிவிடுவதில்லை. ஒரு ரொட்டியைத் துண்டு துண்டாக்கப் பிட்டு உண்கிறோம். பசியுடன் உண்பவனுக்கு முதல் துண்டு மிகுதியான பயன்பாடு அளிக்கும். இரண்டாவது துண்டு அதே பயன்பாடு அளிக்கலாம். ஆனால் மூன்றாவது, நான்காவது துண்டுகளின் பயன்பாடு குறைந்துகொண்டே போகும். பத்தாவது துண்டு (அல்லது இட்லி) ஒரு பயன்பாடும் தராமல், வெறுப்பையும் குமட்டலையும் உண்டாக்கலாம். பயன்பாட்டைப்பற்றி விளக்கும்போது அதை இன்ப துன்ப அளவை (Pleasure-pain calculus) என்னும் துலாக்கோலால் அளக்கலாம் என்றனர் 19ஆம் நூற்றாண்டுப் பொருளாதார அறிஞரில் பலர். முதலாவது ரொட்டித் துண்டு பசியுள்ளவனுக்கு அமுதமாகும். அது நல்கும் இன்பவுணர்ச்சி அளவிடற்கரியது. இருபதாவது ரொட்டித் துண்டைக் கட்டாயமாக உண்ணச் செய்தால் அது அவனுக்குத் துன்பவுணர்ச்சியைத்தான் கொடுக்கும். முதல் துண்டுக்கு ரூ 5-00 ஆனாலும் கொடுத்து வாங்குவான் பசியால் துன்புறுபவன். 20-வது துண்டுக்கு ஒரு பைசாக்கூடக் கொடுக்க விரும்பான். ரொட்டி போன்ற உணவுப் பொருட்களுக்கும் பிற பொருட்களுக்கும் பயன்பாடு குறைந்து செல்லும் போக்கில் யாதொரு வேற்றுமையும் கிடையாது. துணிமணியானாலும் சரி, நாற்காலி மேசையானாலும் சரி, பென்சில் பேனாக்கள் ஆனாலும் சரி, வண்டி வாகனங்களானாலும் சரி, எந்தப் பொருளாயினும் குறைவாயிருந்தால் ஒவ்வோர் அலகின் (Unit) பயன்பாடும் அதிகமாயிருக்கும். அதே பொருள் மிகுதியான எண்ணிக்கையில் இருப்பின், ஒவ்வொன்றின் பயன்பாடும் குறைந்துவிடும். ஒருவனிடம் இரண்டு நாற்காலி இருந்தால் கிடைக்கும் பயன்பாட்டைவிட 20 நாற்காலிகள் இருந்தால் பயன்பாடு பத்துமடங்கு அதிகமாகிவிடாது. நான்கு, ஐந்து நாற்காலிவரைப் பயன்பாடு பெருகலாம். ஓர் எண்ணிக்கையடைந்தபின் பயன்பாடு குறைந்து செல்லும். ஓர் எண்ணிக்கை—உதாரணமாகப் பத்து—வந்தவுடன் அதன் பயன்பாடு சுன்னம் ஆகிவிடும். பத்துக்கு மேற்பட்டால், நாற்காலிகள் பயன் தராமலிருப்பதுமன்றி இடத்தை அடைத்துக்

கொண்டு இடர்பாடாய் முடியும். துயர்பாடு (Negative Utility) உண்டாகும். இது ஓர் உளநூல் விதி. இதையே குறைந்து செல் பயன்பாட்டு விதி என்று கூறினர் இறுதிநிலை வாதிகள்.

## (3) இறுதிநிலைப் பயன்பாடு (Marginal Utility)

வைரத்துக்குப் பயன்பாடு குறைவு. உலகத்தில் வைரமே இல்லாவிட்டால் மக்கள் வாழ்க்கை நிலைகெட்டு அழிந்து விடாது. குடி தண்ணீரின் பயன்பாடு மிகுதியானது. இத்தகைய வேறு பாடு இருந்தும் வைரத்துக்குப் பரிவர்த்தனை மதிப்பு நீரின் மதிப்பைவிட ஆயிரம் மடங்கு மிகுதியாயிருக்கிறது என்பதை உணர்ந்தார் ஆடம் ஸ்மித். ஆனால் விளக்கம் கண்டாரில்லை. இந்தப் 'பண்ட மதிப்பு முரண்பாட்டை' (Paradox of value) விளக்கித் தெளிவு கண்டவர்கள் இறுதிநிலை வாதிகள் ஆவர். ஒரு பண்டத்தின் மதிப்பு அதன் மொத்தப் பயனைப் (total utility) பொறுத்ததல்ல; அந்தப் பண்டம் முழுவதுமே கிடைக்காவிட்டால் ஏற்படும் நட்டத்தையும் துன்பத்தையும் பொறுத்ததல்ல. இன்னொரு துண்டு ரொட்டி, இன்னொரு குவளை நீர், இன்னொரு பேனா, நாற்காலி என்ன பயன்பாடு நல்குமோ, அதைப் பொறுத்ததுதான் ரொட்டி, தண்ணீர் ஆகியவற்றின் மதிப்பு என்பது இவர்கள் கண்டறிந்து விளக்கிய உண்மை. பத்துக் குவளை தண்ணீர் குடித்தபின் பதினோராவது குவளை நீர் மிகமிகக் குறைந்த பயன்பாடே நல்கும். அதற்கேற்ப அதன் மதிப்பும் மிகக் குறைந்ததாகவே ஆகிவிடும். பத்து வைரக்கற்கள் ஒருவனிடம் இருப்பினும், பதினோராவது கல்லின்மேலும் விருப்பம் அதிகமாகவேயிருக்கும். அதன் பயன்பாடும் அதிகமாகவே தோன்றும். எனவே பதினோராவது வைரக்கல்லின் மதிப்பும் மிகுதியாகவேயிருக்கும். இவ்வாறு விளக்கி, எந்தப் பண்டத்தின் மதிப்பும் அதன் மொத்தப் பயன்பாட்டைப் பொறுத்ததல்ல; இறுதி நிலைப் பயன்பாட்டைப் பொறுத்ததெனத் தெளிவாக்கியுள்ளனர் இறுதி நிலை வாதிகள்.

## (4) சம இறுதிநிலைப் பயன்பாட்டு விதி (Law of Equi-marginal Utility)

உலக வாழ்க்கையில் மனிதனது குறிக்கோள் குறைந்த செலவில் கூடுமான அளவில் இன்பம் அடைவது ஆகும். காற்று, வெயில் போல எல்லாப் பண்டங்களும் விலையின்றி இலவசமாகக் கொள்ளும் பொருட்கள் அல்ல. மற்றப் பொருட்களின் அளிப்பு நிலை தேவை நிலையைவிடக் குறைவு. காசு கொடுக்காமல் அவற்றைப் பெறமுடியாது. ஒவ்வொரு மனிதன் கையிலும் உள்ள பணம் அவன் தேவைகளெல்லாவற்றையும் நிறைவு செய்யப்

போதுமானதே அல்ல. பெரும் தனவந்தர்களுக்குக்கூட அவர்கள் விரும்பும் அளவுக்குப் பணம் கிடையாது. இந் நிலையில் ஒருவனிடம் ரூ. 6 இருப்பதாகக் கொள்வோம். ரொட்டி, சர்க்கரை, வெண்ணெய் ஆகிய மூன்று பண்டங்களும் ஒரு கிலோகிராம் ஒரு ரூபாயாக விற்கிறது என்று கொள்வோம். அவற்றின் பயன்பாடு கீழ்க்கண்ட அட்டவணைப்படி ஆகும் என்றும் நினைத்துக் கொள்வோம்.

| வரிசை | பயன்பாடு – எண்கள் | | |
|---|---|---|---|
| | ரொட்டி | சர்க்கரை | வெண்ணெய் |
| முதலாவது கிலோ | 5 | **1** | 3 |
| 2ஆவது கிலோ | 2 | 0 | **1** |
| 3ஆவது கிலோ | **1** | —1 | 0 |
| 4ஆவது கிலோ | 0 | —3 | —1 |
| 5ஆவது கிலோ | —4 | —5 | —3 |

கையிலிருக்கும் ஆறு ரூபாய்களைக் கொண்டு இந்த மூன்று பண்டங்களையும் என்னென்ன அளவில் வாங்கினுல் அவனுடைய பயன்பாடு உச்ச நிலை அடையும் என்பது கேள்வி. இதற்கு விடை : ரொட்டி 3 கிலோ, வெண்ணெய் 2 கிலோ, சர்க்கரை ஒரு கிலோ என்ற அளவுகளில் வாங்கினுல் தான் மொத்தப் பயன்பாட்டு எண் (Units of Utility)–இன்ப அலகுகள் (Units)–13 எண்களாக உச்ச நிலை அடையும். வேறு எந்த மாதிரி அளவுகளில் இம் மூன்று பண்டங்களையும் வாங்குவதில் தன் கையிலுள்ள ரூ 6 யும் செலவிட்டாலும் 13 எண் பயன்பாடு கிடைக்காது. உச்ச எண் பயன்பாடு (Maximum Utility) கிடைப்பதற்கு, அவன் மேற் கொள்ளவேண்டிய வழி ஒன்றேதான். அவன் வாங்க விரும்பும் எல்லாப் பொருள்களின் இறுதிநிலைப் பயன் பாட்டையும் சமமாகும்படி கைப் பணத்தைச் செலவிடவேண்டும். மேலே காட்டிய அட்டவணையில் மூன்ருவது கிலோ ரொட்டி, இரண்டாவது கிலோ வெண்ணெய், முதலாவது கிலோ சர்க்கரை எல்லாம் ஒரே மாதிரி ஒரே ஓர் அலகு (Unit) பயன்பாடு அளிக்கிறது. இந்தக் கணக்குப்படிதான் மக்கள் பயன் துய்ப்பர். கடைசி ஆருவது ரூபாயைச் செலவழிக்கும்போது சர்க்கரை

வாங்கவா, வெண்ணெய் வாங்கவா அல்லது ரொட்டி வாங்கவா என்று யோசிப்பான். அட்டவணையில் காட்டியிருப்பதுபோல் துல்லியமாக இல்லாவிட்டாலும் எந்தப் பண்டத்தை வாங்கினுல் அதிகப்படி இன்பம் மனநிறைவு அல்லது பயன்பாடு கிட்டும் என்பது அதிக நேரம் தயங்காமலும், அதிக நெற்றிச் சுழிப்பு இல்லாமலும் செலவழிப்பவனுக்கு எளிதில் புலப்பட்டுவிடும். இச் செயல் சம இறுதிநிலைப் பயன்பாட்டை நாடும் ஒரு செயல் என்று கூறுகின்றனர் இறுதிநிலை வாதிகள். இதிலிருந்து வகுக்கப் பட்டதே 'சம இறுதிநிலைப் பயன்பாட்டு விதி.'

### (5) பொருளாக்குக் கருவிகளின் மதிப்பு நிர்ணயம் (Determination of the value of the factors of production)

நிலம், உழைப்பு, முதல் ஆகிய பொருளாக்குக் கருவிகளின் மதிப்பு எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது என்பது அடுத்து எழும் சிக்கலான கேள்வி. துணியின் மதிப்புக் குறைவாக இருப்பின், அதை உற்பத்தி செய்யத் தேவையுள்ள பருத்தி, இயந்திரம், நிலக் கரி, உழைப்பு முதலியனவற்றின் மதிப்புக் கூடுதலாக இருக்க முடியாது, குறைவாகவேயிருக்கும். சர்க்கரையின் விலை உயர்ந் தால், அதை உற்பத்தி செய்ய வேண்டிய கரும்பின் விலையேறும்; கரும்பு சாகுபடி செய்யப்படும் நிலத்தின் வாரம் ஏறும். இது பகுத்தறிவினுல் அறிந்து கொள்ளக்கூடிய உண்மையே. இத ஞல் ஆக்கக் கருவிகளின் (Producer's goods) மதிப்பு நுகர்ச்சிப் பண்டங்களின் (Consumption goods) மதிப்பின் பிரதிபலிப்பே என்பது இறுதிநிலை வாதிகளின் கொள்கை. 'ஊசி செய்யும் இயந்திரத்தின் மதிப்பு பனியனின் மதிப்பிலிருந்தும், கலப்பையின் மதிப்பு நெல்லின் விலையிலிருந்தும் உண்டாகும்' என்பது அவர் களின் புகழ் பெற்ற உதாரணம். நுகர்ச்சிப் பண்டத்தின் மதிப்பு ஆக்கக் கருவிகளின் மீது சாடுகிறது. எனவே இந்தக் கருத் தைச் சாட்டு மதிப்புக் கொள்கை (Principle of Imputation) என்று கூறுவர்.

நூறு உருப்படி கொண்ட ஒரு துணி மூட்டையின் விலை ரூ. 1500 எனக் கொள்வோம். இந்த ரூ. 1500-ம் பற்பல ஆக்கு சாதனங்களின் உதவியால் உண்டாக்கப்படுகின்றது. இதை அந்த ஆக்குக் கருவிகளுக்கு என்ன விகிதாச்சாரத்தில் பகிர்ந் தளிக்கப்படும் என்னும் கேள்விக்கு ரிக்கார்டோ மிக்க முக்கியத் துவம் அளித்தார் என்பது நினைவிலிருக்கும். நான்கு வகுப்பின ருக்குள் பங்கீடு என்ருல் பூசல்களும் சண்டைகளும் ஏற்படும் என்று அவர் விளக்கியிருக்கிருரல்லவா? இதே கேள்வியை இறுதிநிலை வாதிகளில் இருவர் கேட்டுச் சாட்டு மதிப்புக் கொள்

கையை வகுத்தார்கள். ஆனால், என்ன விகிதாச்சாரத்தில் பகிர்ந்து கொள்ளப்படும் என்னும் சிக்கலைத் தீர்க்க அவர்கள் காட்டும் இருவழிகளும் சரியல்ல. இதை விளக்குமுன் அவர்கள் பொருள்களைப் பாகுபாடு செய்த விதத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

**முதல், இரண்டாம், மூன்றும் வரிசைப் பொருட்கள்**
**(First, Second and Third order of goods)**

நுகர்ச்சிப் பொருட்களை, உதாரணமாக இட்லி, வெல்லம், தாள், வேட்டி போன்றவைகளை முதல் வரிசைப் பொருள் (First order of goods) என்று மெங்கர் குறிப்பிடுகிறார். இட்லி செய்ய அவசியமான அரிசிமா இரண்டாம் வரிசைப் பொருள்; அரிசி மூன்றும் வரிசைப் பொருள். நெல் நான்காம் வரிசைப் பொருள். நெல் விளைவிக்க வேண்டிய நிலம் உழைப்பு ஆகியவை ஐந்தாம் வரிசைப்பொருள். நுகர்வோன் உடனடியாக நுகரக்கூடிய பொருளை முதல் வரிசைப் பொருள் என்றும், அதற்குப் பின்னால் அதை உண்டாக்க அவசியமான பொருட்களை நுகர்வோனைவிட எட்டி எட்டிப் போவனவற்றை இரண்டு, மூன்று, நான்கு என நுகர்வோனுக்கும் குறிப்பிட்ட பொருளுக்கும் உள்ள 'தூரத்தை'ப் பொறுத்து வரிசைப்படுத்தினர் இறுதிநிலை வாதிகள்.

**பங்கீட்டுக் கொள்கை**

விற்று முதலாகக் கிடைக்கும் ரூ. 1500-ல் துணி செய்ய உதவும் ஆக்க சாதனங்களுக்கு என்ன விகிதாச்சாரத்தில் பங்கு கிடைக்கும் எனும் கேள்வியை இனிப் பார்ப்போம். கார்ல் மெங்கர் விடை வருமாறு: 'ஒரு சாதனத்தை (கருவியை) உபயோகிக்காவிட்டால் துணியின் விலை எவ்வளவு குறையுமென்று கண்டுபிடி. அக் குறைவின் அளவே அக் கருவியின் (சாதனதத்தின்) பங்கு விலை-மதிப்பு-ஆகும். துணி செய்யச் சாயம் தேவைப்படுகிறது. அதை உபயோகிக்காமல் வெறும் வெள்ளைத் துணியாகச் சரக்கை விற்றால் ரூ. 1450 தான் கிடைக்குமெனக் கொள்வோம். அப்படியானால் சாயத்தின் விலை ரூ. 50 ஆகும்.' இந்தக் கொள்கை உழைப்பு, நிலக்கரி அல்லது மின் சக்தியின் மதிப்பை நிர்ணயிக்க உதவுமா? பொருந்துமா? பொருந்தினால்தான் மெங்கரின் கோட்பாடு ஒப்புக்கொள்ளத் தகுதி வாய்ந்தது எனலாம். உழைப்பில்லாமல் துணியில்லை, எனவே இலாபமும் இல்லை. ஆதலால் மெங்கர் கோட்பாடுபடி உழைப்புக்கு முழு விற்றுமுதல் தொகையையும் அளிக்கவேண்டும் என்றாகும். மின் சக்தியில்லையானால் (மில் மின்சக்தியில் இயங்குவதாக எடுகோள்) உற்பத்தியும் இல்லை. அப்படியானால் உற்பத்தியினால் கிடைக்கும் விற்று

முதல் தொகை முழுவதும் மின்சக்தியின் மதிப்பு என்று ஆகிறது. இது விபரீதமானதோர் முடிவு. ஆகையால்தான் இக் கோட்பாடு சரியில்லை எனக் கூறினோம்.

வான் வீசர் அளிக்கும் விடை மேற்கூறிய மெங்கரின் விடையினும் சிறிது வேறுபாடுள்ளது. 'ஒரு பொருளாக்குக் கருவியை உபயோகிப்பதனால் சரக்கின் விலை எவ்வளவு அதிகரிக்கிறதென்று கண்டுபிடித்தால் பங்கீட்டுப் பிரச்சினை தீர்ந்துவிடும்' என்கிறார் வீசர். சாயத்தை உபயோகித்தால் ரூ. 50 இலாபம். அதனால் சாயத்தின் மதிப்பு ரூ. 50 என்றாகும். மின்சக்தியை உபயோகித்தால் உற்பத்தி; இல்லையானால் உற்பத்தியில்லை. ஆகவே மின்சக்தியின் மதிப்பு முழு உற்பத்தியின் மதிப்புக்குச் சமமென மெங்கர் கூறிய முடிவுக்குத்தான் நாம் திரும்பவும் வந்து சேர்கிறோம். எனவே இவ் விடையும் தவறானதே. பங்கீட்டுக் கோட்பாட்டை விளக்கும் முயற்சியில் இறுதிநிலை வாதம் வெற்றி பெறவில்லை என்றே கூறவேண்டும். இதற்குக் காரணம் பங்கீட்டுப் பிரச்சினை மிகவும் முக்கியமானதாக முன்னணியில் அவர்கள் காலத்தில் நிற்கவில்லை. ஏனெனில் அக் காலத்தில் (1870–90) பொருளாக்குச் சாதனங்களில் முதன்மையான மக்களின் உழைப்புக்குக் கூலி ஏறிக்கொண்டே போயிற்று. உழைப்பாளரும் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொண்டிருந்தனர். ஆதலால் பங்கீட்டுப் பிரச்சினை மிகவும் கடுமையானதெனப் பொருளாதார அறிஞர் உள்ளத்தில் படவில்லை; அவர்களும் அதில் தங்கள் சிந்தனையைச் சீரிய முறையில் நுட்பமாகச் செலுத்தவுமில்லை.

(6) பாம்-பாவர்க்கின் இறுதிநிலை இணை (Bohm-Bawerk's Marginal Pair)

சந்தையில் பண்டங்களின் விலை எவ்வாறு நிர்ணயிக்கப்படும் என்னும் ஆராய்ச்சியில் பாம்-பாவர்க்கின் கருத்துச் சிறப்பு வாய்ந்தது. இறுதிநிலை இணை (marginal pair) தீர்மானிக்கும் விலை தான் முடிவில் சந்தை விலையாக நிலைக்கும் என்று அவர் கூறியுள்ளார். இதைப் புரிந்துகொள்ளச் சில துணைக் கருத்துகளை விளக்கவேண்டியதாகிறது. வாங்குபவர், விற்பவர் இருவருக்கும் பண்டத்தின் விலைபற்றி அவர்களுடைய சொந்த அபிப்பிராயங்கள் இருக்கின்றன; அப்படியிருப்பது இயற்கையே என்பது முதலாவது துணைக் கருத்து. பத்து விற்பனையாளர் ஒரே மாதிரிக் குதிரைகளில் ஒவ்வொன்றை சந்தைக்குக் கொண்டுவந்திருப்பதாகவும் அந்தச் சந்தையில் ஒவ்வொரு குதிரையாக வாங்குவோர் எட்டுப் பேர் வந்திருப்பதாகவும் கொள்வோம். ஒரு விற்பனையாளனின் சொந்த அபிப்பிராயம் ரூ. 300-க்குக் குறைந்

தால் தன் குதிரையை விற்கக்கூடாது என்பதாகும். இதை விற்பவனின் சொந்த விலை (Seller's own price) என்று கூறுவர். இரண்டாவது விற்பனையாளனின் விற்பனை விலை ரூ. 280. மூன்றுமவனினது ரூ. 250 என ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு விலை விரும்பத் தக்கதாயிருக்கும். எந்த விற்பனையாளனும் தன் சொந்த விலைக்குக் குறைவாக விற்கமாட்டான். அவன் விரும்பும் விலை கிடைக்காவிட்டால் அவன் தன்னுடைய குதிரையைத் தன் வீட்டுக்கு ஓட்டிக்கொண்டுபோக ஆயத்தமாயிருப்பான். அடுத்த வாரச் சந்தையில் சரியான விலைக்கு (விற்பவனின் சொந்த விலைக்கு) விற்றுக்கொள்ளலாமென்பது அவன் நம்பிக்கை ஆகும். இதேபோல் வாங்குபவர்களின் சொந்த அபிப்பிராய விலைகள் ஆளுக்கொன்றுக இருக்கும். இந்த விற்பவர்களது சொந்த விலைகளையும் (Seller's own prices) வாங்குபவர்களது சொந்த விலைகளையும் கீழ்க்கண்ட அட்டவணை காட்டுகிறது.

| விற்பவன் | அவனது விலை | வாங்குபவன் | அவனது விலை |
|---|---|---|---|
| | ரூ. | | ரூ. |
| வி. 1. | 100 | வா. 1. | 310 |
| வி. 2. | 110 | வா. 2. | 270 |
| வி. 3. | 150 | வா. 3. | 230 |
| வி. 4. | 170 | வா. 4. | 220 |
| வி. 5. | 200 | வா. 5. | 205 |
| வி. 6. | 210 | வா. 6. | 180 |
| வி. 7. | 240 | வா. 7. | 160 |
| வி. 8. | 260 | வா. 8. | 140 |
| வி. 9. | 280 | | |
| வி. 10. | 300 | | |

மேலே காட்டியிருப்பதுபோல் சந்தை நிலவரமிருந்தால் இச் சந்தையில் 5 குதிரைகள்தான் விற்பனையாகும். போட்டியுள்ள சந்தையில் ஒரே மாதிரிச் சரக்கு ஒரே விலையில்தான் விற்கும். ஆதலால் ஒரு வியாபாரிக்கு ரூ. 205 கிடைத்தால் அந்த விலைக்குக் குறைவாக விற்க விரும்பியவர்களும் தங்கள் சொந்த அபிப்பிராய விலையை மறைத்துக்கொண்டு சந்தை விலைக்கு விற்று இலாபம் அடைவர். ஐந்தாவது குதிரை வாங்குபவனின் சொந்த விலைதான் மேல் வரம்பு (ரூ. 205) ; 5ஆவது குதிரை விற்பவனது 'சொந்த விலை' தான் கீழ் வரம்பு. அவர்கள் இருவரும் வாதாடி நிச்சயிக்கும் விலைதான் சந்தை விலை. இவ்வாறு இருவர் வாதாடுகிறுர்களே அவர்களைத்தான் 'இறுதிநிலை இணை' (marginal pair) என்று பாம்-பாவர்க் குறிப்பிடுகிறுர்.

## (7) பாம்-பாவர்க்கின் வட்டிக் கொள்கை (Bohm-Bawerk's theory of interest)

பாம்-பாவர்க் வகுத்த வட்டிக் கொள்கையும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. எந்த மனிதனும் இன்று இந்த விநாடியில் நுகரக்கூடிய பயன்பாட்டையே மிகுதியாக விரும்புகிறான். அடுத்த ஆண்டில் அதே அளவு பயன்பாடு உறுதியாகக் கிடைக்குமானாலும், அதைக் குறைவாகவே மதிக்கிறான். இது ஓர் இயற்கை விதி. இக் கால உளநூல் விளக்கும் ஒரு மனித இயல்பு. 'இன்றைக்கு ரூ. 100 வேண்டுமா அல்லது ஓர் ஆண்டுக்குப் பின் ரூ. 100 வேண்டுமா' என்று ஒரு தந்தை கேட்டால் எந்தச் சிறுவனும் முன்னதையே விரும்புவான் என்று சொல்லவும் வேண்டுமோ? இந்த விருப்பத்திற்குப் பாம்-பாவர்க் கூறும் காரணங்களைக் கவனிப்போம். (1) பொதுவாக மனிதனுக்கு ஓர் ஆண்டுக்குப் பின் என்பது வெகு தொலைவிலிருப்பதாகத் தோன்றுகிறது. (2) அடுத்த ஆண்டுக்குள் தனது தேவைகள் கணிசமான அளவில் நிறைவாகிவிடும் என்ற நம்பிக்கை மக்கள் உள்ளத்தில் எப்பொழுதும் ஊறிக்கிடக்கிறது. அவ்வாறு செழிப்பாக இருக்கப்போகும் ஆண்டில் அதே ரூ. 100 இன்றைய வறட்சி நிலையில் தரக்கூடிய பயன்பாட்டை அப்பொழுது அளிக்காது என்றே மக்கள் கருதுகின்றனர். அளித்தாலும் அளிக்காவிட்டாலும் அதிகமான பயன்பாடு கிடைக்கலாம் என்று மனம் ஒப்புக்கொள்ளாது. இவ் உளநூல் காரணங்களினாலேயே, ஒரு முதலாளியிடம் கடன் வாங்கப்போகிறவன் இன்று ரூ. 100 கிடைத்தால், அடுத்த ஆண்டு ரூ. 115 ஆனாலும் கொடுத்துவிடலாம் என நினைக்கிறான். அடுத்த ஆண்டில் அவன் தான் கடனைப் பெற்ற பணத்தைக்கொண்டு தொடங்கிய தொழிலில் ஊதியம் மிகுதியாகக் கிடைக்கும் என்றும் அதில் ஒரு பகுதியைக் கொண்டே ரூ. 15-ஐயும் கொடுத்துவிடலாம் என்றும் அவனுக்குப் படும். கடன் கொடுப்பவனும் 'இன்று கையிலிருக்கும் ரூ. 100-ஐ ஏதாவது தொழிலில் முடக்கி ஆதாயம் பார்க்கலாமே? கடனைப் பிறருக்குக் கொடுத்தால் அப்படிச் செய்யக்கூடிய தொழில் முடங்கிவிடுமே' என்று கடன் கொடுப்பதற்குத் தயங்குவான். கடன் வாங்க வருபவன்கூட 10 அல்லது 15 ரூபாயைக் கொடுக்க இசைந்தால் அவன் தயக்கம் தீரும். இவ்வாறு கொடுக்கக்கூடிய மேல் தொகைதான் வட்டி என்று பாம்-பாவர்க் விளக்குகிறார். இந்த வட்டிக் கோட்பாடு 'ஏகியோ' (Agio) அல்லது 'உளநூல் வழி' (Psychological) வட்டிக் கோட்பாடு என்று கூறப்படுகிறது.

### (i) சுற்றுவழி உற்பத்தி முறைகள் (Round about process of production)

பண்டைக் காலத்தில் மனிதர்கள் தங்கள் கையாலேயே மீன் பிடித்திருக்கிருர்கள். மீன் வலையொன்றுமட்டும் செய்து விட்டால் இரண்டு மூன்று மீன்கள் பிடிக்கக்கூடிய நேரத்தில் 200 அல்லது 300 மீன்கள் பிடிக்க முடியும். மீன் வலை செய்வதற்கு நேரமும் உழைப்பும் வேண்டும். பல நாட்கள் ஓய்வின்றி வலை பின்னுவதில் ஈடுபடவேண்டும். நேரடியாக மீன்களைக் கையால் பிடிப்பதை நிறுத்திக்கொண்டு மீன்வலை செய்ய முனைய வேண்டும். அப்படிக் காலத்தைப் பயன்படுத்துபவனின் கடைசி நோக்கம் மீன் பிடித்தலே. ஆனுல், அந்த நோக்கம் நிறைவேற, அவ்வேலையை நேராகச் செய்யாமல், சுற்று வழியில் செய்கிருன் என்று கூறுகிருர் பாம்-பாவர்க். இப்படிச் சுற்றுவழியில் செய்பவன் தனது காலத்தையும் பொருளையும் வீணுக்குவதில்லை. இரண்டையும் மிக்க பயன் அளிக்கக் கூடிய பொருளாக்குக் கருவிகள் (Instruments of production) அல்லது முதல் (Capital) படைப்பதில் உபயோகிக்கிருன். இதனுல் உற்பத்தி தொடங்கக் காலதாமதம் ஆகும். ஆனுல், உற்பத்தி தொடங்கிவிடின், உற்பத்தி அளவும் வேகமும் பன் மடங்கு பெருகும். வெறுங்கையுடன் அவசரமாக உற்பத்தியில் ஈடுபடுவதைக் காட்டிலும், பொருளாக்குக் கருவிகளை முதலில் படைத்து அவற்றின் உதவியைக் கொண்டு உற்பத்தியில் ஈடுபடுவது, அதாவது ஒன்றைத் திறமையுடன் செய்ய மற்றென்றைச் சுற்றுவழியில் செய்யத் தொடங்குவது, மிக்க ஊதியம் தரவல்லது என்னும் உண்மையை விளக்கிக் காட்டிய பெருமை பாம்-பாவர்க்கு உரித்தாகும்.

### (ii) வில்லியம் ஸ்டேன்லி ஜெவன்ஸ் (William Stanley Jevons 1835-82)

1770-லிருந்து 1870 வரை, ஒரு நூற்றுண்டு காலமாகப் பொருளாதாரச் சிந்தனை வரலாற்றில் ஆங்கில நாட்டு அறிஞர்கள் மாபெரும் பங்குகொண்டு வந்தனர். அவர்களுடைய நூல்கள், அல்லது அவற்றிலிருந்து எழுந்த வாதப் பிரதிவாதங்களை விலக்கி விட்டால், பொருளாதார அறிவியலாக மிஞ்சுவது மிகக் குறைவே ஆம்! இறுதிநிலை வாதத்தில் பெரும்பங்கு கொண்டவர்கள் ஆஸ்திரிய நாட்டினர்கள் என்றுலும், அதிலும் நான்காவது சிறந்த அறிஞராகப் பங்கு கொண்டவர் ஸ்டேன்லி ஜெவன்ஸ் என்னும் ஆங்கில நாட்டினரே என்றும் குறிப்பிட்டிருந்தோம். ஜெவன்ஸ் இறுதிநிலைவாதி மாத்திரம் அல்லர். அவர் பொருளாதாரச் சிந்தனையில் ஒரு புதிய திருப்பம் கொடுத்தவர். எனவே இவரைப்பற்றிச் சற்று விரிவாகத் தெரிந்துகொள்ளவேண்டும்.

இவர் 1835-ல் லிவர்ப்பூல் நகரில் பிறந்தார். இவருடைய தந்தை ஓர் இரும்புவியாபாரி. ஜெவன்ஸ் பள்ளிச்சிறுவனுயிருக்கும் பொழுது அவருடைய தந்தையின் தொழில் பெரிய நஷ்டத்துக் குள்ளாயிற்று. பள்ளியில் திறமை மிக்க மாணவர் என்ற பெயர் பெற்றிருந்த போதிலும், ஜெவன்ஸ் படிப்பை நிறுத்திவிட்டு, ஆஸ் திரேலியாவுக்குச் சென்று அங்குள்ள நாணயச்சாலையில் (mint) ஒரு வேலையில் அமர நேர்ந்தது. ஐந்து ஆண்டுகளுக்குள் வேண்டு மளவு பணத்தை மிச்சப்படுத்திக் கொண்டு ஜெவன்ஸ் தமது தாய் நாடு திரும்பித் தடைபட்ட படிப்பை மீண்டும் தொடங்கினுர். கல்லூரி மாணவனுயிருக்கும் பொழுதே, புரட்சிகரமான இறுதி நிலைப் பயன்பாடு பற்றிய சில அருமையான கருந்துகள் இவர் உள்ளத்தில் உருவாயின. அக் காலத்தில் தொன்மை நூல் கருத்துகளின் சாரத்தைச் சரளமான நடையில் ஜே. எஸ். மில் எழுதிய 'பொருளாதாரக் கொள்கைகள்' என்ற நூல் மக்கள் மனத்தில் தனியாட்சி புரிந்து வந்தது. ஆதலால், ஜெவன்ஸின் கருத்துகளை எவரும் மதிக்கவில்லை. இதனுல் மனத்தளர்ச்சி அடையாமல் அவர் மேலும் மேலும் எழுதிய நூல்கள் பல. அவற்றில் முக்கியமானவை: 'பொருளாதாரக் கோட்பாடு' (Theory of Political Economy, 1871). இதன் ஐந்தாவது பதிப்பு 1924-லிலும், அமெரிக்கப் பதிப்பு ஒன்று 1957-லிலும், வெளி யீடானதென்பது, இந் நூலின் அருமையையும் புகழையும் எடுத் துக் காட்டுகின்றன. 'தங்க மதிப்பின் வீழ்ச்சி' (Serious fall in the value of Gold, 1863) 'நிலக்கரிப் பிரச்சினை' (The Coal Question, 1865), 'பணமும் பண்டமாற்று இயங்கும் விதமும்' (Money and Mechanism of Exchange, 1875). 'பொருளாதாரக் கொள்கைகள்' (Principles of Political Economy, published after his death, 1905) 'மாறி மாறி வரும் வாணிகச் சுழல்' (On the study of Periodic Commercial Fluctuations with five diagrams, 1863) ஆகியவை பிற நூல்களாகும்.

முதலில் தொன்மைப் பொருளாதாரக் கொள்கைகள், கோட் பாடுகள் ஆகியவற்றுக்கு மாறுபட்ட ஜெவன்ஸின் கருத்துகளைப் பார்ப்போம். கடைசியில் இறுதிநிலை வாதக் கருத்துகளைக் கவ னிப்போம். பொருள் உற்பத்தியல்ல, பொருள்கள் தேவைக்குக் குறைவாக அருபொருளாக (Scarce) இருப்பதுதான் பொருளா தார ஆய்வுக்கு மையமான பிரச்சினை என்பது ஜெவன்ஸின் கருத்து. தலையிடாக் கொள்கையைக் கைவிடவேண்டியது அவசியமாகிவிட்டது; எனவே என்னென்ன பொருளாதாரக் கொள்கைகளின் அடிப்படையில் அரசாங்கத்தின் பொருளாதாரக் கைக்கோள்கள் (policies) தீட்டப்படவேண்டும் என்பதை ஆராய்

வது பொருளாதார இயலின் தலையாய கடமை என்றும் கூறுகிறார். பொருளாதாரம் வரலாற்று வழியே ஆய்வது பயன் தர வல்லது எனினும், கோட்பாடுகள் வகுப்பது (theorisation) தான் அதன் முதற்கடமை என்பது ஜெவன்ஸின் அபிப்பிராயம் பொருளாதார இயல் மனிதனின் உழைப்புக்கும் முயற்சிக்கு முள்ள காரணங்களையும் அவற்றின் பயனையும் (benefit) கணக்கிடும் நூல் 'பொருளாதாரம் ஓர் அறிவியல் எனின், அது கணித வழி அறிவியல் (mathematical science) ஆகத்தான் இருக்க முடியும்' என்பது ஜெவன்ஸின் கூற்று. ஆதலால் அவர் தமது நூல்களில் கணித முறைகளைப் பெரிதும் கையாண்டார். அக் கணித முறைகள் தற்காலக கணித முறைகளைக் காட்டிலும் எவ்வளவோ எளிதாக இருந்தாலும், மக்களுக்கு அவை புதுமையாகவும், கசப்பாகவும் தோன்றவே, ஜெவன்ஸின் அரிய கருத்துகள் பல அவை பெறவேண்டிய மதிப்பும் புகழும் பெறாமல் புறக்கணிக்கப்பட்டன. அதே சமயம் தொன்மை நூலின் வழி நூலாகிய மில்லின் பொருளாதாரம் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தமை ஜெவன்ஸுக்கு மில்லின் நூலிலுள்ள வெறுப்பைப் பன்மடங்கு பெருக்கிற்று. 1871-ல் வெளியான ஜெவன்ஸின் பொருளாதாரக் கோட்பாடு மில்லின் தொன்மை நூல் கொள்கைகள் அனைத்துக்கும் ஒரு மறுப்பு நூலாக விளங்கிற்று. தொன்மை நூலில் பொருளாக்குதல், பகிர்தல் இரண்டுக்கும் மிக்க முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்ததை நாமறிவோம். ஜெவன்ஸ் நூலில் துய்த்தல் (consumption) முதலிடம் பெறுகிறது. எந்தப் பொருளாதார முயற்சிக்கும் மக்களின் விருப்பங்கள் (wants) தான் தூண்டுகோல். விருப்பங்கள் என்பது சில பொருட்களைத் துய்க்க வேண்டுமென விருப்பங்கள் ஆகும். துய்த்தலில் விருப்பமே, பொருள் ஆக்கல், பகிர்தல், மாற்றுதல் எல்லாவற்றுக்கும் மூல காரணம் என்று பொருளாதார நூலின் அமைப்பையே (structure) ஜெவன்ஸ் மாற்றியுள்ளார்.

ஜெவன்ஸின் மூலதனக் கோட்பாடு (Theory of Capital) மிகவும் சிறப்பு வாய்ந்தது. தொழிலாளர்கள் ஒரு துறையில் உழைப்பில் ஈடுபட்டிருக்கும்பொழுது அவர்கள் தேவைக்கு வழங்கப்படும் உணவு, உடை முதலிய பண்டங்களை—இவற்றை 'கூலிப் பண்டங்கள்' (wage goods) என்று கூறுகிறார் ஆசிரியர். மூலதனம் எனப்படும் ஒன்று–முதலுக்கு (capital) இலக்கணம் வகுக்கிறார். முதலாளித்துவ யுகத்தில், பொருள் உற்பத்தி தொடங்கி அந்தப் பொருள் உற்பத்தி முடிவுபெற ஒரு கால அளவு வரை காத்திருக்க வேண்டியதிருக்கிறது. இந்தக் கால அளவைக் கடக்கப் பாலம்போல் அமைவதே முதல். அது

இல்லாமல் தொழிலாளர்களை மூன்று அல்லது பத்து மாதங்கள் வரை கூலி கொடுக்காமல் வேலை வாங்க முடியாதல்லவோ ?

வியாபாரச் சகடங்களைப் பற்றிய ஜெவன்ஸின் ‘ சூரியனின் புள்ளிகள் ’ கொள்கை (Sun spot theory) மிகவும் புகழ்பெற்றது. பொருளாதார மந்தமும் விறுவிறுப்பும் மாறி மாறி வருவதற்குக் காரணம் சூரியனில் காணும் கரும் புள்ளிகள் (spots). அவை அதிகமாகத் தோன்றும்பொழுது உலகத்தின் வெப்ப நிலை அதிக மாகவும், அவை குறைவாகத் தோன்றும்பொழுது வெட்பநிலை குறைவாகவும் இருப்பதால், தட்ப வெப்பநிலை மாற்றங்களினால் விவசாய உற்பத்தியும் மாறுகின்றது. அதனால் கைவினை, பொறிசெய் பொருள்கள் (manufacture) உற்பத்தியும் மாறுகின் றது. இதுவே வியாபாரச் சகடங்களுக்குக் காரணம் என்று வாதிக்கிறார் ஜெவன்ஸ். அதே சமயம் வியாபாரச் சகடங்களின் காரணங்களைக் கண்டுபிடிக்கக்கூடிய பண அங்காடியும் வணிகத்திற்கான பணிகள் பற்றிய ஓர் அறிவியல் (A Science of Money Market and Commercial Functions) படைக்கவேண்டி யது மிகவும் அவசியம் என்றும் அவர் வற்புறுத்துகிறார்.

அவர் வாழ்நாளில் அவருக்கு உரிய புகழ் ஜெவன்ஸுக்குக் கிட்டவில்லை. எனவே அவருடைய ‘ நிலக்கரிப் பிரச்சினை ’ என்னும் நூலிலிருந்து ஒரு பாராளுமன்ற விவாதத்தில், புகழ் பெற்ற பிரிட்டிஷ் பிரதமர் கிளேட்ஸ்டன் (Gladstone) சில பகுதி களைப் படித்து மேற்கோள் காட்டியது ஜெவன்ஸுக்கு மிக்க மகிழ்ச்சியை அளித்தது.

தொன்மைப் பொருளாதாரத்தின் மும்மணிகளில் ஒருவராகிய டேவிட் ரிக்கார்டோவைப் பற்றி ஜெவன்ஸ் எழுதியுள்ள காரசார மான கருத்து மிக்க புகழ் பெற்றது. ஏனெனில் அதில் மிகுந்த உண்மை புதைந்து கிடக்கிறது. அது வருமாறு : ‘ திறமை மிக்க, ஆனால் வக்கிர புத்தியுள்ள டேவிட் ரிக்கார்டோ பொருளா தார இயலைத் தப்பிதமான பாதையில் தள்ளினார் ; அப் பாதை யில் அவருக்கு நிகரான திறமையும், வக்கிர புத்தியுமுள்ள அவ ருடைய பக்தர் ஜே. எஸ். மில் மேலும் பொருளாதார இயலைக் குழப்பத்தை நோக்கிச் செலுத்தினார் என்பதை ஒரு சீரான பொருளாதார இயல் தொகுக்கப்படும்பொழுது யாவரும் புரிந்து கொள்வர். அவர்கள் காலத்தில் மால்தசும் ஸீனியரும் பொருளா தாரத்தின் மெய்க்கோட்பாடுகளை நன்கு உணர்ந்தவர்களாயி னும், ரிக்கார்டோ-மில் பள்ளியின் (Ricardo-Mill School) ஒற்று மையும் செல்வாக்கும் அவர்களைப் பொருளாதாரத் துறையி லிருந்தே விரட்டியடித்தது.

கடைசியாக, ஜெவன்ஸின் இறுதிநிலை வாதத்தின் சிறப்புகளைச் சுருக்கமாக விளக்குவோம். ஏனைய இறுதிநிலை வாதிகளைப் போலவே ஜெவன்ஸும், தொடங்கி, அவர்களுடைய முடிவுக்கே வருகிருர். ஒரு பண்டத்தின் அளவு மிகுதியாகும்பொழுது, அதன் பயன்பாடு குறைந்துகொண்டே போகும். மொத்தப் பயன்பாடு கூடினுலும், அடுத்தடுத்து நுகரப்படும் சிறு பகுதிகளின், அலகுகளின் (Units) பயன்பாடு குறைந்து கொண்டே செல்லும். இவ்வாறு கூறும்பொழுது இறுதிநிலைப் பயன்பாடு என்பதற்குப பதிலாகக் கடைசித்தரப் பயன்பாடு (final degree of utility) என்ற சொற்றெடரை உபயோகிக்கிருர். அந்தப் பயன்பாட்டையும் அளவு (quantity), தரம் (quality), கால அளவு (duration) என்ற மூன்று கோணங்களிலிருந்தும் ஆய்கிருர்.

ஜெவன்ஸின் மதிப்புக் கொள்கை எவ்வாறு தொன்மை நூலாரின் கொள்கைக்கு மாறுனது என்பதை அவர் ஒரு தருக்கச் சங்கிலியில் (logical chain) கீழ்வருமாறு வாதித்து விளக்குகிருர் :

‘ மதிப்புப் பயன்பாட்டிலிருந்து உதிக்கிறது.

‘ அளிப்பு நிலை (supply), அடக்கச் செலவால் (cost) நிர்ணயிக்கப்படும்.

‘ கடைசித்தரப் பயன்பாடு அளிப்பு நிலையால் நிர்ணயிக்கப் படுகிறது.

‘ மதிப்புக் கடைசித்தரப் பயன்பாட்டால் நிர்ணயிக்கப் படுகிறது ’.

ஜெவன்ஸ் அற்ப ஆயுளில் ஒரு நீர் விபத்தில் மாண்டுபோனுர். மிகவும் மனத்தளர்ச்சி தரும் சூழ்நிலையிலும், ஜெவன்ஸ் ஓயாமல் உழைத்து உடல் நலனை இழந்தார். இதனுல் அவர் கற்றுத் தேறிய லண்டன் பல்கலைக் கழகத்தில் அவர் ஆர்வத்துடன் நீண்டகாலம் விரும்பிய பேராசிரியர் பதவி கிடைத்தபோதும், அதை அவர் ஒப்புக்கொள்ள அவருடைய நலிந்த உடல்நிலை இடம் கொடுக்கவில்லை. தமது வாழ்க்கையில் தமது கருத்துகளுக்குப் போதுமான ஆதரவு கிடைக்காது போனதுபற்றி அவர் மிக்க ஏமாற்றமடைந்தார். ஆயினும் அவர் காலத்துக்குப் பின் ஆல்பிரட் மார்ஷல் அவருடைய ஆற்றலைப்பற்றிக் கூறிய கருத்து ஜெவன்ஸின் ஆத்மாவுக்குச் சாந்தியளிக்கும் முறையில் அமைந்திருக்கிறது. ‘ ஜெவன்ஸிடமிருந்து கற்றுக்கொண்ட அளவில், வேறு எந்தப் பொருளாதார அறிஞரிடமிருந்தும் நான் கற்றுக் கொள்ளவில்லை’ என்று குறிப்பிட்டிருக்கிருர் தற்காலப் பொருளாதார மேதை மார்ஷல்.

### (iii) லியன் வால்ரஸ் (Leon Walras, 1834-1910)

இறுதிநிலை வாதிகளில் கடைசியாக நாம் குறிப்பிட வேண்டியவர் பிரஞ்சுப் பொருளாதார அறிஞர் லியன் வால்ரஸ். ஜே. எஸ். மில்லையும், ஜே. எம். கெயின்சையும்போல, லியன் வால்ரஸ் ஒரு பொருளாதார நிபுணரின் மகன் ஆவர். அவர்களிருவரையும் போலவே, இவரும் தந்தையைவிடப் புகழ் பெற்ற பொருளாதார நிபுணர் ஆனவர். இவர் கணிதவழிப் பொருளாதாரத்தில் தலை சிறந்த அறிஞருள் ஒருவர் ஆவர். இங்கே இவருடைய இறுதிநிலை வாதத்தைப்பற்றி மட்டும் தெரிந்து கொள்வோம். கார்ல் மெங்கரும் ஜெவன்ஸும் 1871-ல் அவர்களுடைய நூல்களை வெளியிட்டனர்; வால்ரஸ் தாமாகவே சிந்தித்து வகுத்த இறுதிநிலைக் கருத்தை 1874-ல் தமது 'தூய பொருளாதாரத்தின் அடிப்படைகள்' (Elements of pure Economics, 1874) எனும் நூலில் வெளியிட்டார். பண்டங்களின் மதிப்பு மனித உள்ளத்தில் எழும் விருப்பத்தினுல், அகப்பண்பு (Subjective) அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது என்று அவர் விளக்கியுள்ளார். இவருடைய விளக்கவுரையில் ரேரிடி (rarete) என்ற சொல்லை இறுதிநிலைப் பயன்பாடு என்ற பொருளில் உபயோகிக்கிருர். இந்தச் சொல்லின் இலக்கணத்தில் அளிப்பு நிலை குறிப்பிட்ட தேவைக்குக் குறைந்த அளவில் இருக்குமென்பதைக் காட்டித் தமது கருத்தைச் சிறப்பாக விளக்கியுள்ளார். ரேரிடி என்பது பயன்பாட்டையும் அளிப்பு நிலையையும் பொறுத்தது என்பதையும் தெளிவாக்கியுள்ளார் வால்ரஸ்.

### இறுதிநிலைப் புரட்சி-ஆய்வுரை (Critical estimate)

பண்டங்களின் மதிப்புக் கோட்பாட்டில், தொன்மை நூலார் வகுத்த வழிக்கு மாருக, ஆக்குவோரின் அடக்கச் செலவு என்பதற்குப் பதிலாக நுகர்வோரின் பயன்பாடும் தேவையையும் என்று கூறி, அந்த மாறுபட்ட கொள்கையையே அடிப்படையாக்கி, ஒரு புதிய வழியில் ஆராய்ச்சியைத் திருப்பினதால், இறுதிநிலை வாதத்தை இறுதிநிலைப் புரட்சி (Marginal revolution) என்று ஒரு சாரர் கூறவும் தலைப்பட்டனர். ஆனுல், இறுதிநிலை வாதம் தொன்மை நூலைத் தாக்குவது போல் முதலில் தோன்றினுலும், கடைசியில் தொன்மை நூலின் கோட்பாடுகளில் பிறர் கண்டுபிடித்த மாசுமறுக்களை நீக்கவே இறுதிநிலை வாதம் உறுதுணையாகிவிட்டது. ஆதலால் இறுதிநிலை வாதத்தைத் துணைக் கொள்கை (Complementary to classical school) என்று கூறுவது பொருந்தும். பின்னுல் பேரறிஞர் ஆல்பிரட் மார்ஷல் தொன்மை நூல் கோட்பாடுகளையும் இறுதிநிலை வாதக் கோட்பாடுகளையும் இணைத்துத் தொன்மை நூல் மறுமலர்ச்சியைத் தூண்டி விட்

டதை நினைவுறுத்திக் கொண்டால், இறுதிநிலை வாதம் பொருளாதாரச் சிந்தனை வரலாற்றில் எத்தகைய சிறப்பு வாய்ந்தது என்பது நன்கு விளங்கும். 'இறுதிநிலை' (Margin) என்னும் கருத்து இக் காலப் பொருளாதார அறிவியல் ஆராய்ச்சிக்கு இன்றியமையாததொரு நுட்பக்கருவி. இதையும் தந்து-உதவியவர்கள் இறுதிநிலை வாதி ஆவர்.

முடிவுரை

இறுதிநிலை வாதிகளைப் பற்றிச் சிலர் கூறும் மாறுபட்ட மதிப்புரைகளைச் சுருக்கமாக இம் முடிவுரையில் ஆராயலாம் :

(1) 19ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் (இயந்திரப் புரட்சிக்குப் பின், மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வறுமை யென்பது தீர்க்க முடியாத கொடுமையல்ல என்று அரசினரும் தலைவர்களும் தெரிந்துகொண்டபின்) தோன்றியவர்கள் இறுதிநிலை வாதிகள் ஆவர். ஆதலின், நாட்டின் வளம், செல்வம் திரட்டல், உற்பத்திப் பெருக்கு என்னும் பெரும் கேள்விகள் எழாது சற்று அடங்கியிருந்த காலம் அது. உற்பத்தியான பொருள்கள் சிற்சில சமயங்களில் தேவையின்றித் தேங்கிக்கிடந்த காலம் அது. ஆதலால் இறுதிநிலை வாதிகளின் ஆராய்ச்சித் திறன் முழுவதும் உற்பத்தியாகும் பொருள்களை எவ்வாறு நுகர்வது என்ற கேள்விக்கு விடை காணவே திரும்பியது. இக் காரணத்தால், இறுதிநிலை வாதிகளை 'உண்டுகளித்திருப்பவரின் உள்ளப் போக்கை மட்டும் ஆராய்ந்து முடிவு கட்டுகிறவர்கள்' என்றும், இவர்கள் வெறும் 'நுகர்ச்சிப் பொருளாதார அறிஞர்கள்' (Consumption economists) என்றும் சிலர் இவர்களைக் குறை கூறுகிருர்கள்.

(2) 'நாட்டின் வறுமை, மக்கள் தொகை வளர்ச்சி, நிலத்தின் கருமித்தனம், நாட்டின் வருமானத்தைப் பங்கிடும் முறை என்பன போன்ற மாபெரும் பொருளாதாரச் சிக்கல்களைத் தொன்மை நூல் அறிஞர்கள் ஆராய்ந்தது போலத் தொடர்ந்து ஆராயாமல் இவர்கள் பண்டமதிப்புக் கேள்விக்கு முதன்மை அளித்துப் பொருளாதார ஆராய்ச்சியையே அளிப்பு நிலை-தேவை நிலைச் சமன்பாடு (Supply-demand equilibrium) என்னும் வரண்ட பாலை நிலத்துக்குள் செலுத்தி விட்டார்கள்' என்பது மற்ருெரு குற்றச்சாட்டு. இது பெரும்பாலும் உண்மையே.

1870-லிருந்து 1935 வரை எல்லா நாடுகளிலும் பொருளாதார அறிஞர்கள் பண்டங்களின் மதிப்பை நிர்ணயிக்க அளிப்புநிலை-தேவைநிலைச் சமன்பாடு சூத்திரத்தை வகுத்ததுபோல், முதற் கருவிகளின் மதிப்பு, பணத்தின் மதிப்பு எல்லாவற்றுக்குமே இச் சமன்பாடு சூத்திரம் உதவும் என்று நம்பி, சமன்பாடு சிக்கல்

களைத் தீர்க்க முற்பட்டனர்; அச் சிக்கல்களிலேயே மாட்டிக் கொண்டனர்; ஆடம் ஸ்மித் வகுத்த பொருளாதாரத்தின் குறிக்கோளாகிய 'நாடுகளின் செல்வம்' என்ற கருத்தைப் புறக்கணித்து விட்டனர். நாடுகளின் செல்வ வளர்ச்சியின் காரணங்களை அலசி ஆய மறந்து, தனிமனிதனின் தேவைநிலை, விருப்பம், வெறுப்பு, உழைப்பு, ஊதியம் என்றும், தனித் தொழில் நிறுவனத்தின் ஆக்கச் செலவு, உற்பத்தி, விலை, ஊதியம் என்றும் நாட்டின் பொருளாதாரத்தை அணு அணுவாகப் பிய்த்து அணு நிலைப் பொருளாதார ஆராய்ச்சியில் (micro-economic analysis) மூழ்கி விட்டனர். முதலாவது உலகப் போருக்குப்பின், இவ்வித ஆராய்ச்சி போட்டிக் குறைவுள்ள சந்தையில் (Imperfect Competition) பண்டங்களின் மதிப்பு எவ்வாறு நிர்ணயிக்கப்படும் என்று மேலும் நுண்ணிய பாதையில் சென்றது.

1930-ல் உலகம் முழுவதையும் வரலாறு காணாத பொருளாதார மந்தம் வாட்டியது. அதனால் ஏற்பட்ட துன்பமும் துயரமும் விவரிக்கவொண்ணாதது. அத் துயரே நாட்டின் செல்வம் தழைக்கவும் கடுமையான ஏற்றத்தாழ்வில்லாமல் பெருகவும், என்னென்ன இன்றியமையாதன என்ற கேள்வியைக் கிளப்பியது. நாடு முழுவதும், ஏன் உலக முழுவதுமே பரவி இயங்கும் சக்திகளைப்பற்றி ஆராயப் பொருளாதார அறிஞர்களைத் தூண்டியது. பெரும்பாலும் அணுநிலை ஆராய்ச்சி பின்னணிக்குச் செல்ல, அண்ட நிலைப் பொருளாதார (micro-economic) ஆராய்ச்சி வளரத் தொடங்கியது.

## 16. வரலாற்று முறைக் கருத்தோர்
(Historical School)

தொன்மை நூல் கொள்கைக்கு எதிர்ப்பாக வரலாற்று முறைக் கருத்து முதலில் ஜர்மனி நாட்டில் 1843-ல் தோன்றியது. ஏறக்குறைய 40 ஆண்டுகள் அங்கே அது செல்வாக்குடன் விளங்கியது. ஜர்மானிய வரலாற்று முறைக் கருத்தோர்களை இரு குழுக்களாகப் பிரிக்கலாம். ராஸ்கர் (Roscher), ஹில்டிபிரண்ட் (Hildebrand), நீஸ் (Knies) ஆகிய மூவரும் 'முதியோரின் குழு'வின் பேரறிஞர்கள். இக் குழு தொன்மை நூல் கொள்கைகளில் குற்றம் குறைகளை எடுத்துக்காட்டிக் கடுமையாய்த் தாக்கிச் சென்றது. ஆனால், குறைகளை நீக்க வழிகள் ஒன்றையும் காட்டவில்லை. 1870-க்குப் பின் ஷ்மாலர் என்னும் ஜர்மானிய அறிஞரின் தலைமையில் தோன்றிய 'இளையோர் குழு'வோ

தொன்மை நூலைக் குறை கூறுவதோடு நில்லாமல் பொருளாதார ஆராய்ச்சியில் புதியதொரு முறையான தொகுத்தறி முறையை (Inductive method) வற்புறுத்தியது.

ஜர்மன் நாட்டின் சூழ்நிலையே தொன்மை நூலின் செல்வாக்கு அழிவதற்குக் காரணமாய் இருந்ததென்பதைக் குறிப்பிட வேண்டும். பொருளாதாரத் துறையில் அந் நாடு மிகவும் பின் தங்கியிருந்தது ஒன்று. அதனால் தொன்மை நூலார் வகுத்த தலையிடாக் கொள்கையும், தடையிலாப் பன்னாட்டு வணிகமும் ஜர்மனியின் தொழில் வளர்ச்சிக்குப் பொருந்தாத கோட்பாடுகளாயின. முன்னேறிய இங்கிலாந்தின் கைத்தொழில் பண்டங்கள் ஜர்மனியில் குறைந்த விலைக்கு விற்கப்பட்டு, ஜர்மானியத் தொழிலதிபர்களைத் திணற அடித்து, அவர்கள் தொழிலை நசுக்கின. பிரிட்டனுக்கு நன்மை பயந்த தடையிலாப் பன்னாட்டு வணிகக் கொள்கையே தொழில்கள் அரும்பிவரும் ஜர்மனிக்குப் பெருங்கேடு விளைவித்தது. இதனால் தொன்மை நூல் கோட்பாடுகள் ஜர்மானியரின் வெறுப்புக்குள்ளாகியது.

மேலும் ஹெகல் (Hegal), காம்டே (Comte) ஆகிய இரண்டு புகழ்பெற்ற தத்துவ அறிஞர்கள் 'வளர்ச்சியே' எல்லா உயிர்ப் பிராணிகளுக்கும் உயிர் நாடி. இந்த இயற்கை விதிக்கிணங்க மலையும், மரமும், பாறையும், நிலக்கரியும், மற்ற உயிரற்ற பொருள்களும், அரசியல், கலை, பண்பாடு, சமூகம், பொருளாதாரம் முதலிய அமைப்புகளும், பிறவும் எப்பொழுதும் வளர்ந்து கொண்டேயிருக்கின்றன. அதனால் மாறுவதே அண்டமுழுவதிலும் உள்ள யாவற்றுக்கும் உள்ள பொதுவான இயற்கைப் பண்பு என்ற உண்மையை விளக்கினர். ஜர்மானிய இளைஞர்கள் கூட்டம் கூட்டமாகக் கூடி இதனை ஆர்வத்துடன் கற்று மகிழ்ந்து, சமய நூல் கண்ட மெய்யறிவைப்போல் இதனைப் போற்றினர்கள். ஜர்மானிய அறிவியல் நூல்களின் ஆராய்ச்சியில் எல்லாம் இவ் வளர்ச்சித் தத்துவம் ஊடுருவிப் பாய்ந்தது. இந்நிலையில் ரிக்கார்டோ வகுத்த, தொன்மைப் பொருளாதார நூல்களில் மலிந்து கிடக்கும் எடுகோள்கள் (assumptions) எல்லாம் மாற்றமே இல்லாத பொருளாதார அமைப்பில் கடைசியில் முடியும் என்று வற்புறுத்தின. ஒவ்வொரு சமுதாயமும் அதனுள்ளே இயங்கும் சக்திகளாலும், புறநிலை மாறுபாடுகளாலும் மாறிக் கொண்டே இருக்கிறது என்னும் நடைமுறை உண்மைக்கு நேர் எதிராக இந்தத் தொன்மை நூல் கோட்பாடுகள் அமைந்திருந்தன. குறிப்பாக, 'மக்கள் தொகை, தேவைநிலை, விஞ்ஞான அறிவு இம் மூன்றும் மாறவில்லை' என்ற பொருளில் பிற மாரு எடுகோள் (Ceteris paribus assumption) தொன்மை நூல் எங்கணும் பாடும்

பல்லவி. இதனுல் தொன்மை நூல் காணும் உலகம் உண்மையில் உலகில் இல்லாத ஒன்று ; ஆனுல், அத்தகையதை நல்லது என்று தொன்மை நூல் வல்லார் நாடினர் ' என்று ஜர்மானிய அறிஞர் கருதினர். அதை வெறும் ஏட்டுச் சுரைக்காய் என்று ஒதுக்கித் தள்ளினர்.

## (i) முதியோர் குழு (Elder School)

**வில்ஹெல்ம் ராஸ்கர் (Wilhelm Roscher, 1817-94)**

இவரை வரலாற்றுமுறைக் கருத்தோரின் தந்தையெனக் கூறலாம். இவர் 1843-ல் 'வரலாற்று முறைகளின்படி அரசியலைப் பற்றிய சொற்பொழிவுகள் ' (Outline of Lectures on Political Science according to Historical methods) என்னும் நூலை வெளியிட்டார். இந் நூலில் வரலாற்று முறையை விளக்கி, அது பொருளாதார ஆராய்ச்சிக்கு இன்றிமையாதது என்று வற்புறுத்தியுள்ளார். தொன்மை நூலார் வகுத்த சிலகோட்பாடுகள் நடைமுறைக்குப் புறம்பானவை என்று காட்டுகிருர். மனிதன் தன்னல உணர்ச்சியால் மட்டுமே தூண்டப்படுகிருன் என்னும் தொன்மை நூல் எடுகோளை (Classical doctrine assumption) வன்மையாய்க் கண்டிக்கிருர். நாட்டுப் பற்று, தாய்தந்தையரிடம் அன்பு, தியாக உணர்ச்சி முதலியவை மனிதனின் செயல்களைத் தூண்டவும், பாதிக்கவும் செய்கின்றன எனும் உண்மையினை விளக்குகிருர். மனிதனைப் பிற பண்புகள் அற்ற 'பொருள் வய மனிதன் ' (Economic man) எனும் 'அரக்க வடிவத்தில் உருவாக்கி, அத்தகைய மனிதனைப் பொருளாதார இயலின் மையமாகக் கொண்டிருக்கிறது தொன்மை நூல் கொள்கை. இவ்வாறு உலக நடைமுறைக்கு முரண்பாடான கருவில் பிறந்த இக் கற்பனைப் பொருளாதாரம் சிறிதும் பயனற்றது' என்பதே ராஸ்கரின் திடமான எண்ணம்.

நாகரிக வளர்சியினுல் சமுதாய வரலாற்றில் படிப்படியாக மாறுதல்கள் உண்டாகின்றன. ஒவ்வொரு படியிலும் சமூக அமைப்பும் பொருளாதார அமைப்பும் ஒவ்வொரு வகையாம். எல்லாவகைச் சமுதாயங்களும் ஒரே பொது வகையில் (Universal) அமைந்து இயங்குகின்றது எனக் கருதுகிறது தொன்மை நூல். ஆனுல், அதன் கோட்பாடுகள் எல்லாம் தொழில் துறையில் முன்னேறிய 19ஆம் நூற்ருண்டு பிரிட்டனைப் போன்ற நாடுகளுக்கு மட்டுமே ஒரு சிறப்பு வகையில் பொருந்தும். நாகரிக வளர்ச்சியில் மற்ற நிலைகளில் உள்ள நாடுகளுக்கும் எல்லாக் காலங்களுக்கும் அவை பொருந்தா என்பதையும் ராஸ்கர் சுட்டிக்காட்டுகிருர். பல்வேறு வகைப்பட்ட நாடுகளுக்கும் பொருந்தும் பொதுப்

பொருளாதாரக் கோட்பாடுகள் வகுக்க முபல்வது வீண் முயற்சியேயாம். ஒவ்வொரு நாட்டின் சமயம், சமூகம், பொருளாதாரம், பண்பாடு முதலிய துறைகளைப் பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரித்து, வரலாற்று முறையில் அவற்றை ஆய்ந்து அலசித் தொகுத்தறி முறையில் (Inductive method) மட்டுமே வெவ்வேறு நாடுகளுக்குப் பொருத்தமான கோட்பாடுகளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பதே ராஸ்கரின் முடிவு.

### புருனே ஹில்டிபிரண்ட் (Bruno Hildebrand, 1812-78)

இரண்டாவது வரலாற்று முறைக் கருத்து அறிஞராகிய புருனே ஹில்டிபிரணடின் கருத்துகளில் இரண்டு குறிப்பிடத் தக்கவை: (1) அவர் சமூக வரலாற்றினைப் பிரித்துக் காட்டியிருக்கும் மூன்று வகை நாகரிக நிலைகள் பொருளாதார இலக்கியத்தில் சிறப்பிடம் வாய்ந்தவை. (அ) பண்டமாற்றுப் பொருளாதார (barter economy) நிலை. (ஆ) நாணயப் பண பொருளாதார (money economy) நிலை. (இ) பாங்குக் கடன் செலாவணிப் பொருளாதாரம் (credit economy). பண்டமாற்றுக்காக மக்கள் கையாளும் கருவியை அடிப்படையாகக் கொண்டே இம் மூன்று நிலைகளும் வகுக்கப்பட்டவை. (2) தொன்மை நூல் கோட்பாடுகள் எக் காலத்திற்கும் (perpetualism), எந் நாட்டினர்க்கும் (universalism) பொருந்தும் என்ற கருத்தை ராஸ்கரைப் பின் பற்றி ஹில்டிபிரண்டும் அறவே மறுக்கிருர்.

### கார்ல் நீஸ் (Karl Knies, 1828-98)

முதியோர் குழு மூவரில் நீஸ் என்பவர் தொன்மை நூலை மிகவும் வன்மையாகத் தாக்கியவர். பொருளாதார அமைப்பு ஒன்றும் நிலையானதல்ல. அமெரிக்கா, ருஷ்யா போன்ற நாடுகளில் இன்று காணப்படும் பொருளாதார நிலைகளைக்கூட வளர்ச்சியின் இறுதிநிலை என்று கருதுவது தவருகும். ஆதலால், வரலாற்று முறையில் ஒவ்வொரு காலத்திற்கும் ஒவ்வொரு நாட்டிற்கும் பொருந்தியது எது எனத் தனித்தனி ஆராய்ச்சி செய்ய வேண்டியது இன்றியமையாததாகும். இதுவே நீஸின் கருத்து.

## (ii) இளையோர் குழு (Younger school)

இதை நிறுவியவரும் தலைவரும் கஸ்டவ் ஷ்மாலர் (Gustav Schmoller, 1838-1917) என்பவர் ஆவர். இவரும் இவருடைய தோழர்களும் 1870-ல் புதிய வரலாற்று வாதம் ஒன்றை வகுக்கத் தொடங்கினுர்கள். உலக நாடுகளின் வரலாற்றின் ஆராய்ச்சியிலிருந்து தொகுத்தறி முறையைக் கையாண்டு, மிக விரைவில்

பொருளாதாரக் கோட்பாடுகள் வகுக்க முதியோர் குழு ஆசைப்பட்டதாக இக் குழு கருதியது. மேலும் முதியோர் குழு அவர்களுடைய முழுத் திறமையையும் தொன்மை நூலை வன்மையாகக கண்டிப்பதில் செலவழித்துவிட்டுப் புதிய வழிகள் வகுக்காமலே சென்றுவிட்டார்கள் என்பதும் இவர்கள் கருத்து. இவ்விரு குறைகளையும் நீக்கித் தொகுத்தறி முறையின் ஆராய்ச்சி வழிகளை விவரித்துத் தெளிவாக ஷ்மாலர் விளக்கியுள்ளார். இவருடைய தலைமையில் பல சீடர்கள் பற்பல நாடுகளின் வரலாற்றுகளில் பூகோள அமைப்பு; மக்கள் இனம் (ethnic qualities), மக்கள் உளப்பான்மை (psychology) போன்ற பலவற்றைப் பற்றித் தொகுப்பதில் பல ஆண்டுகள் முனைந்து உழைத்தனர். இதன் விளைவாக எழுதப்பட்ட நாடுகளின் பொருளாதார வரலாறுகள் பலப்பல. ஆனாலும் தொகுத்தறிமுறை வாயிலாக இறுதியில் திட்டவட்டமான கோட்பாடுகளை யாரும் வகுத்தாரில்லை. பல மரம் கண்ட தச்சர் மாதிரி, பல்வேறு விவரங்களைப் பொறுக்கித் தொகுத்த காடு போன்ற இவர்கள் நூல்களில் உறுதியான முடிவுகளைத் தேர்ந்தெடுக்கத் தயங்கியே நின்றுவிட்டார்கள். இவர்கள் எழுதிக் குவித்த ஏடுகளினால் ஏற்பட்ட நன்மை ஒன்றுண்டு. இவை பொருளாதார வரலாறு (Economic History) வளர்வதற்குத் தோற்றுவாயாக அமைந்தன. இந்த அளவுக்கு ஷ்மாலர் வரலாற்று முறைக் கருத்துகள் சிறக்கத் தொண்டாற்றினாலும், அவர் பகுத்தறி முறையைப் புறக்கணிக்க வேண்டும் என்று கருதவில்லை. இதற்குச் சான்றாக அவருடைய புகழ் பெற்றதோர் உவமானம் குறிப்பிடத் தக்கது: ‘நடப்பதற்கு வலது காலும் இடது காலும் எப்படித் தேவையோ அப்படியே பொருளியல் ஆராய்ச்சிக்குப் பகுத்தறி முறையும் தொகுத்தறி முறையும் (deduction and induction) தேவை.’ 1839-க்குப் பின்னர் வரலாற்று முறைக் கருத்தோர், தொன்மை நூல் பிறந்து, புகழ்பெற்ற ஆங்கில நாட்டிலும் தோன்றியது. இவர்களில் ரிச்சர்ட் ஜோன்ஸ் (Richard Jones), கிலிஃப் லெஸ்லி (Cliffe Leslee), இங்கிரம் (J. K. Ingram), பேஜாட் (Bagehot), ஆர்னால்ட் டாயின்பி (Arnold Toynbee), ஆஷ்லி (W. I. Ashley) குறிப்பிடத்தக்கவராவர். ஜோன்ஸ் 1831-ல் எழுதிய ‘செல்வப் பங்கீட்டையும் வரிகளையும் பற்றிய கட்டுரை’ என்னும் நூலில் ரிக்கார்டோவின் எடுகோள்களை உலகத்திற்குப் பொருந்தாதன என வன்மையாகக் கண்டித்திருக்கிறார். பொருளாதார வினாக்களுக்கு விடை காண விவரங்களைச் சேகரித்து ஆராய்வதே தகுந்த வழியாகும் என்று அவர் கருதினார். இதையே அவர் சுருக்கமாகக் ‘கவனித்துப் பார்’க்கும் (look and see) முறை என்று குறிப்பிட்டுள்ளார்

தொன்மை நூலின் அடிப்படைக் கொள்கைகளையும் தவறு களையும் வரலாற்றுமுறைக் கருத்தோர் தாக்கிய முறைக்கு பேஜாட்டின் வாசகம் நன்கு விளக்கம் தரும். 'தொன்மை நூல் அறிஞர்கள் உண்மையான மனிதர்களை விட்டு விட்டுத் தாங்கள் கற்பனை செய்த மனிதர்களைப் பற்றிப் பேசுகிருர்கள். தம் ஆராய்ச்சிக்கு எத்தகைய மனிதர்கள் வேண்டுமோ அத்தகைய மனிதர்களையே படைத்திருக்கிருர்கள். இவர்கள் நாம் தினசரி வீதிகளிலும் சந்தைகளிலும் பார்க்கும் மனிதர்கள் அல்லர். தொன்மை நூல் ஆராயும் சமுதாயம் ஒரு விநோதமான குறுகிய அளவில் வரையறுக்கப்பட்ட உலகமாகும். நாகரிசப் போக்கில் பல்வேறு நிலைகளில் உள்ள சமூகங்களுக்கு அவர்கள் கோட்பாடு கள் பொருந்தா. ஆங்கில நாட்டைப்போல் தொழிலும், வணி கமும் முதிர்ச்சியடைந்த நாடுகளுக்கே பொருந்தும்' என்பது அவர் கருத்து.

முடிவுரை

வரலாற்றுமுறை வாதத்தின் சாரம்தான் என்ன? தொன்மை நூலின் அடிப்படைக் கொள்கைகள் ஒரு குறுகிய நோக்குடனும் உலகத்திற்கு ஒவ்வாத முறையிலும் வகுக்கப்பட்டவை என்று இவர்கள் வாதித்தனர். எடுத்துக்காட்டாக, பொருள்வய மனிதன் என்னும் கருத்து, நடைமுறையில் காணமுடியாத அசுரனை உருவாக்கி விட்டது. மக்கள் தொகை, மக்களின் தேவை, விருப்பு வெறுப்புகள், விஞ்ஞான அறிவு ஆகியவை யெல்லாம் ஒருக்காலும் மாருதவை என்ற தொன்மை நூலின் அடிப்படையே ஒவ்வொரு விநாடியும் மாறிக்கொண்டிருக்கும் உலகப் போக்கிற்கு முற்றிலும் முரணானது என்பதனை இவர்கள் காட்டியுள்ளார்கள். பொருளியல் நூல் பிற சமூக நூல்களுடன் இணைந்து பின்னிக்கிடக்கும் நிலையில், அதைப் பிரித்துத் தனி யாக்கி ஆராய்ச்சி செய்வது அதன் அறிவியல் வளர்ச்சிக்கு உகந்த தல்ல என்றும் இவர்கள் வற்புறுத்துகிருர்கள். எக் காலத்தவர்க் கும், எந் நாட்டவர்க்கும் தொன்மை நூலார் வகுத்த கோட்பாடு கள் பொருந்தும் எனக் கருதியது தவறு என்று இவர்கள் நிலை நாட்டியிருக்கிருர்கள். கடைசியாகத் தொன்மை நூல் பகுத்தறி முறை மட்டுமே வேண்டும் என்று ஒற்றைக் காலில் பிடிவாதமாக நின்றதை இவர்கள் எதிர்த்தனர். பகுத்தறி முறையும் தொகுத் தறி முறையும் பொருளியல் ஆராய்ச்சிக்கு வலது காலும் இடது காலும் போன்றவை என்று காட்டிப் பொருளியல் வளர்ச்சிக்கு இவர்கள் பெருந்தொண்டு புரிந்திருக்கிருர்கள்.

# 17. நிறுவனப் பொருளாதாரம்
(Institutional Economics)

நிறுவனப் பொருளாதாரம் அமெரிக்க நிபுணர்கள் உருவாக்கியது. அவர்களில் வெப்லன், காமன்ஸ், மிட்சல் என்னும் மூவர் முக்கியமானவர். இந்த நிறுவனப் பொருளாதாரம் பிரிட்டனிலும் பிற ஐரோப்பிய நாடுகளிலும் பரவியது. ஆயினும் இது ஒரு பள்ளியாக (School) வளரவில்லை. இதற்கு முக்கிய காரணம் முதலாவது எழுத்தாளராகிய வெப்லனின் கருத்துகள், உணர்வுகள் பழக்கங்கள், சட்டதிட்டங்கள் முதலியவற்றைக் கொண்டு கட்டிய 'கருத்துச் சிற்பங்கள்' கோட்பாடு ஒன்றையும் திட்டவட்டமாக எழுப்பவில்லை. அன்றைய முதலாளித்துவ உலகின் பல அம்சங்களைப் பல கோணங்களில் படம் பிடித்துக் காட்டுவதில் அவர் இணையற்றவர். தத்துவம் என்று தேடினால் பொருளாதார மாற்றம் (Economic change) வெப்லனின் நூலில் ஒரு தனி இடம் பெறுகின்றது. அவர் நிறுவனப் பொருளாதாரத்துக்கு வகுத்த இலக்கணத்தைக் காமன்ஸ் சிறிது மாற்றினார். அவருககுப்பின் வந்த மிட்சல் மேலும் மாற்றினார். எனவே ஓர் இலக்கணத்தை வைதீகத் தீவிரத்துடன் பின்பற்றிச் செயலாற்றும் சீடர்கள் வெப்லனுக்குக் கிடைக்கவில்லை. இந்த அதிகாரத்தில் மேற் கூறிய மூவரின் கருத்துகளையும் தெரிந்து கொள்வோம்.

### தோர்ஸ்டீன் பண்டே வெப்லன்
(Thorstein Bunde Veblun, 1857-1929)

அமெரிக்கப் பொருளாதாரச் சிந்தனை வரலாற்றில் புத்தம் புதிய கருத்துகளை முதலாவதாக வழங்கிய சிந்தனையாளர் வெப்லன். சென்ற 200 ஆண்டுகளில் தோன்றிய தலைசிறந்த பொருளாதார அறிஞர்களின் அணியில் இடம் பெறத் தகுதி வாய்ந்தவர். அவர் ஓர் அசாதாரண உளமும், ஆழ்ந்த அறிவும், கூர்ந்து ஆயும் சக்தியும், எதையும் சந்தேகிக்கும் மனமும், எதற்கும் கேள்விக்குறி போடும் இயல்பும், எந்த விஷயத்தையும் புதிய கோணத்தில் நோக்கும் திறமையும், வாளினும் கூரிய எழுத்தாற்றலும் படைத்தவர்.

நார்வே நாட்டிலிருந்து குடியேறிய வெப்லனின் பெற்றோர்கள் விவசாயப் பகுதியான மத்திய மேற்கு (Middle West) பிராந்தியத்தில் வசித்து வந்தனர். வெப்லனின் இளம் பிராயத்தில் (1870 -1900) இப் பிரதேசம் அமெரிக்கப் பொருளாதாரத்தில் நிகழ்ந்த தீவிரமான மாறுதல்களால் நிலைகுலைந்தது. ரயில்பாதை

வீக்கம் (Rail road boom), மாபெரும் கார்ப்பரேஷனின் தோற்றம், வங்கிகளின் அளவு கடந்த நிதிவளம், பண ஆதிக்கம், பண்ணை-பாக்டரி மோதல் முதலானவற்றுல் அங்கு வசித்த விவசாய மக்களுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியையும் துன்பங்களையும் நேரில் கண்டு அறிந்தவர் வெப்லன். இவற்றுல் வெப்லனுக்குச் சம்பிர தாயப் பொருளாதாரத்தில் மன நிறைவு ஏற்படவில்லை. அவ ருடைய அறிவாற்றலும், இளம்பிராய அனுபவங்களும் சேர்ந்து அவருடைய சிந்தனைகளைக் கிளறி அதை ஒரு புதுப் பாதையில் செலுத்தின.

வெப்லன் 1884-ல் தமது முதல் நூலை வெளியிட்டதிலிருந்து நாற்பது ஆண்டுகள் தொடர்ந்து நூல்களும் கட்டுரைகளும் எழுதியவண்ணமிருந்தார். தத்துவம், மனித இயல் (anthropology), தொழில் நுண்ணியல், போர், சமாதானம் முதலிய பல துறைகளில் அவர் ஒரு நிபுணர். அவர் எழுதிய பத்துக்கு மேற் பட்ட நூல்களில் நமக்குத் தெரியவேண்டிய பொருளாதார நூல்களாவன : உண்டு களித்திருப்பவர் கோட்பாடு (Theory of Leisure Class, 1899), அலுவல் தொழிற் றுணிவுக் கோட்பாடு (Theory of Business Enterprise, 1904), பொறியியல் நிபுணர் களும் விலை முறையும் (Engineers and the Price System, 1921), நுட்ப வேலைப்பாட்டு உணர்வு (Instinct of Workmanship, 1914), தலத்திலில்லாதோர் உரிமை முறை (The Absentee Ownership, 1923), தற்கால நாகரிகத்தில் அறிவியலின் இடம் (The Place of Science in Modern Civilization, 1919). வெப்லனின் பொருளா தாரக் கருத்துகளைக் கீழ்க்கண்ட பகுதிகளாகப் பிரித்து விளக்கு வோம் : (i) சம்பிராதாயப் பொருளாதாரத்தின் விமரிசனம், (ii) நிறுவனங்கள், (iii) உண்டு களித்திருப்பவர் கோட்பாடு, (iv) அலுவல் தொழிற்றுணிவுக் கோட்பாடு.

### (i) சம்பிரதாயப் பொருளாதாரத்தின் விமர்சனம்

மேலே குறிப்பிட்டுள்ள நூல்களில் 'தற்கால நாகரிகத்தில் அறிவியலின் இடம்' 1898-லிருந்து 1919-வரை அவர் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு. இந் நூலைப் படித்தால் தொன்மை நூலிலிருந்து இறுதிநிலைப் பயன்பாட்டுக் கொள்கைவரை பற்றிய வெப்லனின் அபிப்பிராயங்களை அறிந்து கொள்ளலாம். அவா காட்டிய குறைகளாவன : (1) தொன்மை நூல் இயற்கை விதி களின் அடிப்படையில் எழுப்பப்பட்டது ; இயற்கை விதிகள் மாறுவதற்கிடமில்லை ; எனவே தொன்மைப் பொருளாதாரத்தில் வளர்ச்சிக்குரிய கருத்துகள் கிடையா. (2) பென்தம் வகுத்த பயன்பாட்டுக் கோட்பாடும் (Utilitarian theory), இன்ப-துன்ப வேட்கைக் கொள்கையும் நடைமுறைக்குப் பொருந்ாதவை,

(3) ஆஸ்திரிய அறிஞர்கள் வகுத்த அக மதிப்புக் கோட்பாடும் சம்பிரதாயப் பொருளாதாரத்தைத் தழுவியதேயன்றி வேறில்லை, அதனால் அதுவும் திருப்தியானதல்ல, (4) வரலாற்றுமுறைக் கருத்தோர் புள்ளி விவரங்களை மலைபோல் குவிக்க முறை கோட்பாட்டின் உதவியின்றி, ஒரு பயனும் நல்கக் கூடியதல்ல. (5) அவர் காலத்தில் இறுதிநிலைப் பயன்பாட்டுக் கோட்பாடு வெப்லனின் கண்டனத்தை மிகவும் அதிகமாகப் பெற்றது. இதில் ஒரு சுவையான விஷயம். ரிக்கார்டோ, ஜெவன்ஸ் இருவருடைய கோட்பாடுகளினிடையேயுள்ள வேற்றுமைகளை வெப்லன் புரிந்துகொள்ளாமலே அவற்றைத் தாக்கித் தாக்கித் தள்ளினார். (6) இயற்கை அறிவியல்களைப் போலப் பொருளாதாரம் வளர்ச்சி பெறக்கூடிய (evolutionary) அறிவியலாகத் திகழவில்லை. தொன்மைப் பொருளாதாரிகள் பொருளாதார உலகம் எப்படி இயங்கவேண்டுமென விரும்பினார்களோ அதற்குகந்த விதிகளை எடுகோள்களாக்கி ஓர் அறிவியல் கட்டுக்கோப்பை எழுப்பினர்.

தொன்மைப் பொருளாதாரிகளுக்கு முதலீடு (investment) ஆகவும், உற்பத்திக் கருவிகளாகவும், மூலதனம் (Capital) பயன்படுவதிலுள்ள வேற்றுமையை அறிந்தாரல்லர். இக் கருத்தை வெப்லன் தர்க்க ரீதியில் வாதிப்பது, மார்க்சிய வாதம்போல் தோற்றமளிக்கிறது. ஆயினும் மேற்கொண்டு இவர் புரியும் வாதம் வேறு திசையில் திரும்பிவிடுகிறது. அதுவே தொழில் முறைக்கும் (Industrial System) பண முறைக்கும் (Pecuniary System) அவர் காட்டும் வேறுபாடுகளும் பகையும் ஆகும். மார்க்சைப் போலவே பொருள்வய மனிதன் என்னும் ஆவியை வெப்லனும் ஒப்புக்கொள்ளவில்லை. மார்க்ஸ் இந்த அபிப்பிராயத்திலிருந்து வரலாற்றின் போக்குப் பொருளாதார காரணங்களால் நிர்ணயிக்கப்படுகின்றன (Economic-Interpretation of History) என்பதை விளக்க விரைகின்றார். ஆனால், வெப்லன் பொருளாதார நோக்கங்கள் மட்டும் மனிதனை இயக்கவில்லை என்று கூறிவிட்டு, வேறு என்னென்ன காரணங்கள் மனிதனின் பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பொறுப்பு என்பதை ஆராய முற்படுகின்றார்.

## (ii) நிறுவனங்கள் (Institutions)

மேற்கூறிய ஆராய்ச்சியின் பயனாக அவர் தரும் கருத்துகளை நோக்குவோம். மக்களைப் பொருளாதாரத் துறையில் இயக்குவது அவர்களுடைய பல்வகை ஆசைகள், பல்வேறு உணர்ச்சிகள், சூழ்நிலையினால் ஏற்படும் திருப்பங்கள் (reflexes), எண்ணங்கள் முதலானவை. பொதுவாக இவை பழக்க வழக்கங்களினால்

உருவாக்கப்பட்டவை ; நடப்புச் சட்டதிட்டங்களினால் கட்டுப் படுத்தப்பட்டவை ; கூட்டங்களின் விசித்திர நடத்தையால் (group behaviour) பாதிக்கப்படுபவை. கூட்டமாகச் செயல் படும்போதுள்ள உணர்ச்சிகளுக்கும் தனி மனிதன் உணர்ச்சி களுக்கும் மிக்க வேற்றுமை யிருக்கின்றனவென்பது தற்கால உள அறிவியல் கண்ட உண்மை. இவ்வாறாக வெப்லன் குறிப் பிடும் 'நிறுவனங்கள்' (institutions) கருத்து மட்டத்திலுள் ளவை. அவை எண்ணங்களின் பாதைகளும், அவற்றால் உரு வாகும் செயல்முறைகளும் சட்டதிட்டங்களும் ஆகும். உதாரண மாகச் சொல்வதானால், கூட்டுக் குடும்பம், சாதி வேற்றுமை, (ஏழை–பணக்காரன் எனும்) வகுப்புப் பிரிவினை, சொத்துரிமைச் சட்டங்கள், வரி விதிப்பு முறை, முதலாளித்துவம் முதலானவை யாகும். சுருங்கச் சொல்லின், வெப்லனின் இலக்கணப்படி நிறுவ னங்கள், கட்டடங்கள், நிலையங்கள் அல்ல ; அவை கருத்தோவி யங்கள். அவற்றை நாம் கருத்துச் சிற்பங்கள் என்று கூறினால் நேர் மொழிபெயர்ப்பு ஆகிய 'நிறுவனங்கள்' என்பதைவிட, அது தெளிவு தரும் சொல் ஆகும்.

### (iii) உண்டு களித்திருப்பவர் கோட்பாடு (Theory of Leisure class)

வெப்லனின் ஆராய்ச்சி முதலாளித்துவத்தில் இதுவரை யாராலும் விளக்கப்படாத சில அம்சங்களைச் சுட்டிக் காட்டிற்று. முதலாளித்துவ நாகரிகத்துக்குப் 'பண ஆட்சி பண்பாடு' (pecuniary culture) என்று வெப்லன் பெயர் சூட்டியது குறிப் பிடத் தக்கது. அவருடைய 'உண்டு களித்திருப்பவர் கோட் பாடு' எனும் நூலில் சமூகத்தில் பிழைப்புக்கு உழைக்க அவ சியமே யில்லாத, மிகுந்த பணம் படைத்த சாதி ஒன்று கிளம்பி யிருக்கிறது என்று காட்டி அதன் பண்புகளைக் கூறுகின்றார். இந்த வகுப்பினர் நாட்டின் ஆக்கத்தைப் பெருக்கும் வகையில் ஒரு பணியும் (Social function) செய்யாதவர்கள். அப்படிச் செய் வதுபோல் போலியாக நடப்பவர்கள். அவர்களுடைய படா டோபத் துய்ப்பு (conspicuous consumption), படாடோபப் பொழுதுபோக்கு (conspicuous leisure), ஒருவர் பழக்க வழக கத்தை மற்றவர் பின்பற்றி அதில் மிஞ்சுவதில் ஆர்வம் (conspi- cuous emulation) ஆகியவற்றைப் பற்றிக் காரசாரமாக விவரித் துள்ளார். இவர்கள் பண்டைக்கால, இடைக்கால, பிரபுக் களின் தற்காலப் பிரதிநிதிகள் ஆவர். அவர்களைப் போலவே வீண்செலவு, ஆடம்பரம், மூடப்பழக்கங்கள் இவர்களுடைய செயற்கை நிரம்பிய வாழ்க்கையின் சிறப்பு அம்சங்கள் ஆகும். உழைப்பின் அவசியத்தையும் மேன்மையையும் விளக்கத் தொடங்கி, உண்டுகளித்திருப்பவரை நிந்தனை செய்யும் பகுதிகள்

வெப்லனின் அமிலம் தோய்ந்த எழுத்தாற்றலைக் காட்டுகின்றன. பண ஆட்சிப் பண்பாட்டின் விமர்சனம் இந் நூலில் வெப்லனின் புதுமைக் கருத்துகளை அள்ளிக் கொட்டுகின்றது.

(iv) **அலுவல் தொழிற்றுணிவுக் கோட்பாடு** (Theory of Business Enterprise)

சம்பிரதாயப் பொருளாதாரத்தின் குறைகளை எடுத்துக் காட்டிக் கொண்டேயிருந்த வெப்லன் அவருடைய 'அலுவல் தொழிற்றுணிவு' என்னும் நூலில் தமது புதிய கருத்துகளை விளக்குகிறார். வெப்லன் 'பொருளாதார மாற்றம்' (Economic change) பற்றி ஒரு புதிய கோட்பாடு வகுத்துள்ளார். மேலே குறிப்பிட்ட நூல்களுடன், நமது மாறி வரும் அமைப்புப் பற்றிய கட்டுரைகள்' (Essays in our Changing Order, 1934) என்ற நூலி லும் அவருடைய கருத்துகள் பரவலாகச் சிதறிக்கிடக்கின்றன. இப் பொருளாதார மாற்றக்கோட்பாடு சமூகத்தில் வளர்ந்துவரும் இரண்டு எதிர்ப்புச் சக்திகளின் போராட்டத்தினுல்-மோதலினுல்-ஏற்படும் என்று வெப்லன் சொல்வது, மார்க்சின் வகுப்புப் போர்த் தத்துவத்தை நினைவுறுத்தும். சொத்து உடையவர், இல்லாதார் என்ற பிளவுக்குப் பதிலாகத் தொழில் முறைக்கும் பண முறைக் கும் ஏற்படும் மோதல் என்று சற்றுமுன் குறிப்பிட்டது நினைவிருக் கும். இந்த எதிர்ப்புச் சக்திகளை வெப்லன் திறனுட்சி, பண ஆட்சி என்று கூறி அதன் இயல்புகளையும், அவைகளிடையே பகை மூள்வதற்குக் காரணங்களையும் குறிப்பாக 'அலுவல் தொழிற் றுணிவுக் கோட்பாடு' என்னும் நூலில், விளக்குகின்றுர்.

திறனுட்சி (Rule of technologists) செலுத்துபவர்கள் தொழில் நுண்ணியல் நிபுணர்கள், விஞ்ஞானிகள், நுட்பத்திற னுள்ள தொழிலாளர்கள் முதலானவர்கள் ஆவர். இவர்கள் தொழிற்சாலையில் உற்பத்தியை நிர்வகிப்பவர்கள். இவர்கள் திறமையை உயர்த்துவது, உற்பத்தியை ஏராளமாகப் பெருக்கு வது, அடக்கச் செலவைக் குறைப்பது, புதிய முறைகளைக் கண்டு பிடித்து மேற்கொள்வது, புதிய இயந்திரங்களைப் புகுத்துவது முதலியவற்றில் ஆர்வமும் அக்கறையும் கொண்டவர்கள். சமூகத் தேவைகளை நிறைவு செய்யும் பணியே தங்கள் கடன் என்ற உணர்ச்சியுடன் உழைப்புக்கும் உற்பத்திக்கும் தங்களை அர்ப்பணித்துக் கொள்பவர்கள்.

பண ஆட்சி புரிபவர்கள் தொழில் நிறுவனங்களைத் தோற்று வித்து அவற்றின் இயக்குநர்களாகப் பதவி வகிப்பவர்கள், தலத்திலில்லாத பங்குதாரர்கள் முதலானவர்கள் ஆவர். இவர் கள் தொழில் துறையில் உச்சியிலிருந்து ஆட்சி புரிபவர்கள்

தொழில் நுண்ணியல் நிபுணர்களையும் ஏனையோரையும் வேலைக்கு அமர்த்தி உத்தரவு கொடுப்பவர்கள். பின்னவர்கள் முன்னவா களிடம் சம்பளம் வாங்கும் தொழிலாளர்கள். பண ஆட்சியாளர் களின் குறிக்கோள்களாவன : உற்பத்தியைக் குறைத்தும் கூட லாபத்தைப் பெருக்குவது ; உற்பத்தி குறையினும், விலை அள வில் உற்பத்தியின் பண மதிப்பை உயர்த்துவது ; உற்பத்திக் கருவிகளை வாங்கியும், முடியுமானுல் வாங்காமலும், முதலீட் டின் மதிப்பை அதிகப்படுத்துவது (inflated values), விரைவில் கெட்டுவிடும் பண்டங்களை உற்பத்திசெய்வது, (இதனுல் தேவை மீண்டும் ஏற்படுமன்றோ !) ; மோஸ்தர்களை (fashions) மாற்று வது, (இதனுல் புது,மோஸ்தர் சரக்குகளுக்குத தேவை ஏற்படும்) ; மற்ற வழிகளிலும் லாபத்தைப் பெருக்குவது. சுருங்கக் கூறின் பண ஆட்சியாளர் லாபத்தில் மட்டுமே கண்ணும் கருத்துமா யிருப்பவர் ; தரம் கெடினும், துய்ப்போர் உடல் நலம் கெடினும், அளிப்புக் குறையினும் அவர்கள் கவலைப்படப்போவதில்லை மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் நோக்கம் கிடையாது ; அவர்கள் பணப் பைகளை நிரப்பும் ஆர்வம் நிறையவுண்டு.

ராக்ஷசக் கார்ப்பரேஷன்கள் தோன்றியதனுலும், வங்கிக் கடன் வசதிகள் ஏராளமாகக் கிடைக்கத் தொடங்கியதாலும் பண ஆட்சியாளரின் கையோங்கியுள்ளது. என்றைக்கும் இவர் களே தொழில் நிறுவனங்களை ஆட்டுவிப்பவாகள. புதிய நிர் வாக, நிதி முறைகளைத் தந்திரமாக நுழைத்துப் பண ஆட்சி யாளர் தங்களது தொழில் நிலையங்களின் மேலுள்ள உடும்புப் பிடியை வலுப்படுத்திக்கொண்டே யிருப்பர்.

இவ்விரு திறத்தினரில் முன்னவர் பின்னவருக்குப் பணிந்து உழைப்பவர்களானுலும், அவர்களின் தொழில் ஆர்வம், உற் பத்தியைப் பெருக்கும் விருப்பம் முதலியன அவர்களுக்கு ஒரு சக்தியை யளிக்கும். எனவே பண ஆட்சியாளருக்கும் திறனுட்சி யாளருக்கும் பகை மூண்டு, போர் எழும். திறனுட்சியாளர் ஒவ் வொரு முறையும் புது இயந்திரங்களைக் க்ண்டுபிடிக்கும் பொழுது, பண ஆட்சியாளரை நட்டத்துக் குள்ளாக்குவர். ஏனெனில் புது இயந்திரங்கள் வந்தபின் பழைய இயந்திரங்களைக் குப்பை மேட்டில் போட வேண்டியதுதான். அவற்றைத் தொடர்ந்து உபயோகிப்பின் அடக்கச் செலவு குறையாது. புதிய நிறுவன முதலாளிகளுடன் போட்டியில் தோல்வியுறுவர். ஆனுல், புதிய இயந்திரங்களை நிறுவப் புதிதாக முதலீடு செய்யவேண்டும். கண்டுபிடிப்பு வேகமாய் நடப்பின், இயந்திரங்கள் பயனற்ற தாகப் போகும். வேகமும் (rate of obsolescence) உயரும். இந்த நிகழ்ச்சி ஒருபுறம் செயல்படும். மறுபுறம் பணவீக்கம், யுத்த

தளவாடங்களின் உற்பத்தி, போர், பணமுதலாளிகளின் மாய வித்தைகள் முதலியனவற்றால் முதற் கருவிகளின் (industrial capital) வளரும் விதத்தைவிடப் பண முதல் (pecuniary capital) வேகமாக வளரும். இவையெல்லாம் கடைசியில் திறனாட்சிக்கும் பண ஆட்சிக்கும் கடும் போரைத் துவக்கிவிடும்.

**வியாபாரச் சகடம்**

இந்தக் கட்டத்தில் வெப்லன் வியாபாரச் சகடத்துக்குத் தரும் விளக்கத்தைத் தெரிந்துகொண்டு மேல் செல்வோம். தொழிற்சாலைகளிலுள்ள இயந்திரங்கள் கட்டடங்கள் முதலியன வற்றின் மதிப்புப் பண வீக்கம் முதலியவற்றால் நஞ்சுபோல் ஏறும். வங்கிக் கடன் மேலும் மேலும் வாங்கப்படும், தொழில் விரிவடையும். ஆனால், காலப்போக்கில் இந்த ஏறுமுகத்திற்கு முடிவு வரும். வங்கிகள் கொடுத்த கடன்களை மீட்க முயலும். பணவாட்டம் உண்டாகும், விலைவாசிகள் விழும்; அவை அடிமட்டத்தை யடைந்தபின், விலைக்குத் தக்கவாறு முதலீடுகளின் மதிப்புக் குறையும். தொழிலதிபர்கள் வேண்டுமென்றே மிகக் குறைத்து மதிப்பை எழுதிக் கொள்வர். முதலீடு மதிப்பு மிகவும் குறைந்த பின் மிகக் குறைந்த விலையும் சிறிது இலாபமளிக்கும். பின்னர் தொழில் திரும்பவும் வளரும்; இலாபம் பெருகத் தொடங்கும். இந்தக் கட்டம்தான் வியாபாரச் சகடத்தின் திரும்பு முனையாகத் திகழும். இதுவே வெப்லனின் வியாபாரச் சகட விளக்கவுரையின் சாரம்.

**வருங்காலம் (Future)**

இனித் திறனாட்சி-பண ஆட்சிப் போரின் முடிவுபற்றி வெப்லன் கூறுவதைப் பார்ப்போம். தொழில் நுண்ணியலறிவு வளரும் வேகத்தைக் கவனித்தால், புதிய கண்டுபிடிப்புகளால் அடக்கச் செலவு குறையும்; பழைய நிறுவன முதலாளிகளுக்கு நட்டம் மிகும். பொருளாதார மந்தம் மீண்டும் மீண்டும் தோன்றும். இதைத் தடுக்க, பண ஆட்சியாளர் உற்பத்தியைக் குறைத்து விலையை யுயர்த்த முயலுவர். தொழிலாளர் வேலையிலிருந்து நீக்கப்படுவர். சமூகத்துக்கு நன்மை பயக்கக்கூடிய புதிய கண்டுபிடிப்புகளையும் இயந்திரங்களையும் மேற்கொள்ளாமல் பழைய முறைகளையும் பழைய இயந்திரங்களையும் பயன்படுத்திப் புதிய முதலீடுகளைத் தவிர்க்க பண ஆட்சியாளர் முற்படுவர். பல நிறுவன முதலாளிகள் ஒன்று கூடித் தனியுரிமை நிலையங்களை, (Monopoly) அமைக்கப் பாடுபடுவர். ஆனாலும், பண ஆட்சி தற்காலிகமானது (Transient), நாளாவட்டத்தில் திறனாட்சியின் சக்தி மேலோங்கும். (அண்மையில் திறனாட்சியின் உச்சக்

கட்டத்தை (Technocracy) நிறுவ ஓர் இயக்கமே அமெரிக்காவில் தோன்றியதும், கேல்பிரைத்தின் (Galbreith) 'புதுத் தொழில் அரசு' (The new Industrial State) எனும் நூலில் கூறப்படும் தத்துவம் இந்த முடிவை ஆதரிக்கும் வகையில் அமைகின்றன.) கடைசியில் திறனுட்சி வெற்றியுறும். நாட்டின் உற்பத்தி வேக மாகப் பெருகும். விலை குறைந்து நாட்டின் நலம் வளரும். இவ் வாறு வெப்லன் முதலில் எழுதிய நூல்களில் ஓர் இன்பநோக் குடன் இவ்விரண்டு சக்திகளின் பலப்பரீட்சையின் முடிவை வரை கின்றுர். ஆனுல், அவர் பின்னுல் எழுதிய நூல்களில் இதற்கு நேர் விரோதமான முடிவுக்கு வருகிறுர். சாதாரண மக்கள் பண சக்தி (Money Power) ஆட்டுவிக்கும் வகையிலெல்லாம் ஆடுவதற்கு ஆயத்தமாயிருக்கின்றனர். எனவே, பண ஆட்சிதான் வெற்றி யடையும். இதனுல், வருங்கால சமூக அமைப்பு, இடைக்காலத்தி லுள்ள படைமானிய முறை (Feudalism) போல, பணம் படைத்த சிலர், ஏழை எளியவர்களான பெரும்பான்மையரை வாட்டிப் பறித்து வாழும் நிலைதான் விடியும். இந்தத் துன்ப நோக்கில் வருங்காலத்தில் நம்பிக்கையிழந்த வெப்லனை இந்த நூல்களில் காண்கிறும்.

இந்த முடிவு தமது கட்சியே வெற்றிபெறும் என்ற மார்க்சிய சோஷலிச வாதிகளின் இன்பநோக்குக்கு முற்றிலும் மாறுனது. மார்க்சும் வெப்லனும் வகுப்புப் போர் ஒன்று உறுதியாக நிகழும் என்று வாதித்தவர்கள். மார்க்சின் சித்தாந்தத்தில் சொத்துள் ளோரும் (haves) இல்லோரும் (have nots) இரண்டு அணிகளாகப் பிரிந்து போரிடுவர். ஆனுல், வெப்லனின் தத்துவத்தில் இரு வகுப்பினரும் சொத்துடையர்தாம். எனினும் திறமைகளிலும், நோக்கங்களிலும், செயல்படும் விதங்களிலும் மாறுபட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## முடிவுரை

வெப்லனின் சிறப்புமிக்க நிறுவனங்கள் கருத்துகளாலும் எண்ணங்களாலும் உருவானவை. கருத்துகள், எண்ணங் கள் மாறும்பொழுது, பொருளாதார அமைப்பும் மாறுகிறது. தொழில் நுண்ணியல் நிபுணர்கள் செய்முறைகளை மாற்றும் பொழுது எண்ணங்களின் பாதைகளும் (Institutions) மாறு கின்றன. நிறுவனங்கள் பலவகைப்பட்டவை : உண்டுகளித் திருக்கும் வகுப்பினர், திறனுட்சி, பண ஆட்சி எல்லாமே வெப்ல னின் அகராதியில் நிறுவனங்களே. இத்தகைய இலக்கணத்தை அவரைப் பின் பற்றியவர்கள் சிறிது சிறிதாக மாற்றினுர்கள். கடைசியில் இன்று 'வரலாற்று முறையில் புள்ளி விவரங்களைச்

சேகரித்து ஆய்வு செய்யும் முறை' நிறுவனப் பொருளாதாரம் என்று கருதப்படும் நிலைக்கு மாறிவிட்டது.

**ஜான் ரோஜர்ஸ் காமன்ஸ் (John Rogers Commons, 1862-1945)**

காமன்ஸ், விஸ்கன்சின் (Wisconsin) பல்கலைக் கழகத்தில் 1904-லிருந்து ஓய்வு எடுக்கும்வரைப் பேராசிரியராகப் பணியாற்றி னார். அச சமயம் ஆளுநராயிருந்த ராபர்ட் லா ஃபாலட் (Robert La Follette) ஒரு சிறந்த சீர்திருத்தவாதி. அவருடைய சீர்திருத் தங்கள், சட்டங்கள் அனைத்துக்கும் காமன்ஸ் ஆலோசனைகள் கூறியும், விசாரணைகள் புரிந்தும் மிக்க உதவி புரிந்தார். கோட் பாடும் நடைமுறை அனுபவமும் இவற்றால் காமன்ஸுக்கு ஒருங்கே அமைந்தது. அவர் எழுதிய நூல்கள் பலவற்றில் முக் கியமானவை : அமெரிக்கத் தொழில் சமூகத்தின் சான்றுகள் தாங்கிய வரலாறு (Documentary History of American Industrial Society, 1910) பத்துப் பாகங்கள் கொண்ட பெரிய நூல்; தொழிற் சங்க இயக்கமும் உழைப்பாளர் பிரச்சினைகளும் (Trade Unionism and Labour Problems, 1905), தொழிலாளரும் அரசு நிர்வாகமும் (Labour and Administration, 1913), தொழிலாளர் சட்டங்களின் தத்துவங்கள் (Principles of Labour Legislation, 1916), அமெரிக்கத் தொழிலாளர் வரலாறு (History of Labour in U.S.A. 1918), நிறுவனப் பொருளாதாரமும் அதன் இடமும் (Institutional Economics–Its Place in Political Economy, 1934), கூட்டுச் செயல்பாட்டின் பொருளாதாரம் (Economics of Collective Action, 1950). இந்த நூல்களிலிருந்து காமன்ஸ் 'தொழிலாளர் பொருளாதாரத்தில்' ஒரு சிறந்த நிபுணர் என்பது நன்கு விளங் கும். அவர் அமெரிக்கத் தொழிலாளர்களுக்கும் இயக்கத்துக்கும் புரிந்துள்ள பணிகள் பிரிட்டனில் இத் துறைகளுக்கு வெப்ஸ் (Webbs) தம்பதிகளின் புகழ் பெற்ற பணிகளை ஒப்பு நோக்கற் குரியவை.

வெப்லனின் இலக்கணப்படி நிறுவனப் பொருளாதாரத்தைப் பேணவில்லை காமன்ஸ். அவர் பழக்க வழக்கங்களின் தோற்றம் மாற்றம் முதலியவைகளை அளக்கக்கூடிய வழிகளை ஆய்வதி லும், அளக்கும் முயற்சிகளிலும் மிகுந்த கவனம் செலுத்தினார். தொன்மைப் பொருளாதாரிகள் சமூகத்தில் கண்ட இனிமையான இசைவுக்கு (hormony) மாறாகக் கசப்பையும், சண்டை சச்சரவு களையும் கண்டார். சொத்துரிமைச் சட்டங்கள் உரிமைப் போர் களுக்கு வித்திடுகின்றன. நீதிமன்றங்களின் தீர்ப்புகள் நடப் புச் சட்டங்களை அனுசரித்திருந்தன. இதைக் கண்ணுற்ற காமன்ஸ் 'முதலாளித்துவத்தின் சட்ட அடிப்படை' என்ற

நூலில் நீதிமன்றங்களின் செல்வாக்கு, அதிகார வளர்ச்சி ஆகிய வற்றை ஆய்ந்தார்.

தனி மனிதனின் போக்கைக் கூட்டுச் செயல் ஒழுங்குபடுத்து கின்றது (Collective action in control of individual action) என்பது காமன்ஸ் வகுத்த நிறுவனப் பொருளாதாரத்தின் கருப் பொருளாக அமைந்தது; இதுவே காமன்ஸ் கண்ட இலக்கணம். கூடிச் செயலாற்றுவதை ஆராயத் தொடங்கிய காமன்ஸ், தொழி லாளர் இயக்கத்தை ஆழ்ந்து ஆராய்ச்சி செய்தது வியப்பல்ல. கூட்டு முயற்சியும், கூடிச் செயலாற்றுவதும் பொருளாதார நிகழ்ச்சிகளை நிர்ணயிக்கின்றன; தொன்மைப் பொருளாதாரி கள் கூறும் காரணங்கள் அல்ல என்று வலியுறுத்துகின்றார் காமன்ஸ். நடைமுறைப் பழக்கத்தின் அடிப்படையில் தொகுத் தறி முறையின் வாயிலாகக் காமன்ஸ் கோட்பாடுகள் வரைந்தார். ஒருவரோடொருவர் சமூகத்தில் தொடர்பு கொள்வது தனி மனித னின் விருப்பங்கள், ஆசா பாசங்களால் அல்ல; அது ஒரு சமூக நிகழ்ச்சி (Social phenomenon) என்பது அவர் கருத்து.

காமன்ஸ் மூவகை விவகாரங்கள் (transactions) சமூகத்தில் நடைபெறுகின்றன என்று கூறுகின்றார். (1) அங்காடியில் கொள்முதல்-விற்றுமுதல் விவகாரம். இதைமட்டும் தொன்மைப் பொருளாதாரிகள் ஆய்ந்து விளக்கினர். இன்னுமிரண்டு விவகா ரங்களை அவர்கள் கூறாமல், ஆயாமல் போனது, ஒரு பெருங் குறை. (2) நிர்வாக விவகாரம் (managerial transaction). அதிகா ரம் படைத்தவர்களும் அவர்களுடைய பணியாளர்களுக்கு மிடையேயுள்ள விவகாரம் தொழிற்சாலைகளில் கண்காணிப் பாளர்-தொழிலாளர், அரசின் அதிகாரிகள்-குடிமக்கள், ஆகிய வர்களின் தொடர்புகள் இதற்கு எடுத்துக்காட்டுகள். (3) பங்கீடு விவகாரம் (Rationing Transaction). தொழிற்சாலைகளில் பங்கு தார்களுக்கு லாபத்தைப் பங்கிடுதல்; தொழிலாளர் சந்தா வசூ லிப்பு முதலியன இந்த வகை விவகாரங்கள். இம் மூன்றுவகை விவகாரங்களிலும் அரசு (State) பின்னணியில் நின்று ஒழுங்கு படுத்துவது புலனாகும்.

காமன்ஸின் தொடர்ந்து செல் ஸ்தாபனம் (going concern), வங்கியர் (banker) முதலாளித்துவம், என்பனபற்றிக் கோட்பாடு கள் வகுத்துள்ளார். அவற்றின் விளக்கம் இந் நூலில் இடம் பெறவில்லை.

### வெஸ்லி கிளேர் மிட்சல் (Wesley Clair Mitchell, 1874-1948)

வெப்லனின் மாணுக்கரான மிட்சல் அவரை வியந்து பாராட் டிய நண்பருமாவர். சம்பிரதாயப் பொருளாதாரத்தின் பகுத்தறி

முறையில் வெப்லன் கண்ட குறைபாடுகளை மிட்சல் ஒப்புக் கொண்டார். ஆனால், வெப்லனின் வழியில் முற்றும் செல்ல வில்லை. அனுபவ ஆய்வு (empirical analysis), புள்ளியியல் முறை ஆகிய இரண்டையும் பயன்படுத்தினால் பொருளாதாரச் சக்தி களை ஒப்புநோக்கவும், மதிப்பீடு செய்யவும், புதியகோட் பாடுகள் வகுக்கவும் முடியும் என்று மிட்சல் கருதினார். பொருளா தாரக் காரணிகளையும் விளைவுகளையும் அளந்து பார்த்து ஆய்வது அவசியம் என்று வலியுறுத்தினார். அவர் கூறிய வழிகளை வாழ்நாள் முழுவதும் பின்பற்றிப் பொருளாதார இயலில் புதிய சாதனைகள் புரிந்து புதிய துறைகளைக் காட்டி யுள்ளார்.

மிட்சலின் 'வியாபாரச் சகடங்களும் அவற்றின் காரணங் களும்' (1913) என்பது ஒரு சிறப்புமிக்க நூல். முதல் உலகப் போர் முடிந்தபின், மிட்சல் புகழ்பெற்ற தேசிய பொருளாதார ஆராய்ச்சிக் கழகத்தை (National Bureau of Economic Research) நிறுவினார். நாட்டு வருமான மதிப்பீடு, வியாபாரச் சகடங்கள், உற்பத்தி வீதங்களில் ஏற்படும் மாற்றங்கள், (Changes in Productivity) விலை ஆய்வு முதலான பல்வேறு பிரச்சினைகளை, அவர் தேர்ந்தெடுத்த அணுமுறைகளைக் கையாண்டு ஆராய் வதில் ஈடுபட்டார். இத்தகைய ஆராய்ச்சிகளில் அவருடைய கழகம் ஒரு வழி காட்டியாகத் திகழ்கின்றது.

1927-ல் மிட்சல் வியாபாரச் சகடங்களைப் பற்றிய ஒரு புதிய நூல் வெளியிட்டார்; ஏறத்தாழ 100 ஆண்டுகளின் புள்ளி விவ ரங்களைச் சேகரித்துப் பல ஆண்டுகளாகப் பல நிபுணர்களினுதவி யுடன் வெளியிட்ட சிறந்த ஆராய்ச்சி நூல். இதில் வெப்லன் சிறப்பித்துக் குறிப்பிட்ட நிறுவனப் பொருளாதாரத்தின் செல் வாக்கின் அறிகுறிகள் தென்படுகின்றன. ஆனால், புள்ளியியல் முறையும், அளந்து பார்க்கும் முயற்சியும் முதலிடம் பெறு கின்றன. இந் நூலில் வியாபாரச் சகடங்களின் இயல்பு ஒரு நூற்றாண்டில் கூட மாறவில்லை யென்ற முடிவைக் காண்கிறோம். இது வெப்லனில் பொருளாதார மாற்றக்கோட்பாட்டுக்கு (Theory of Economic Change) முரண்பாடாக இருப்பது குறிப்பிடத் தக்கது. வெப்லனின் சில கருத்துகள் புள்ளியியல் மூலம் செய்யப்பட்ட சோதனைகளில், அவர் எதிர்பார்த்த அளவு தேற வில்லையென்பது அவர் பெயரில் ஒரு பள்ளி தொடங்காமற் போனதற்கு ஒரு காரணம் ஆகும்.

## பாகம் V

# தொன்மை நூல் மறுமலர்ச்சி

## (New Classicism)

## 18. ஆல்பிரட் மார்ஷல்

(Alfred Marshall, 1842–1924)

'வையகமும் துயர் தீர்கவே!'

பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் ஆடம் ஸ்மித்தின் 'நாடுகளின் செல்வம்' பிரசுரமாகி (1776) ஒரு நூற்றுண்டு கழிந்துவிட்டது. மால்தஸின் மக்கள் தொகைக் கொள்கையும் (1798), ரிக்கார்டோவின் நூலும் (1817) பிரசுரமாகி முக்கால் நூற்றுண்டு சென்றுவிட்டது. ஜே. எஸ். மில்லின் நூல் (1848) சுமார் ஒரு தலைமுறை வரை எதிர்ப்பில்லாத தனியாட்சி புரிந்துவிட்டது. இவ்வாறு காலச் சக்கரம் சுழன்றபோது தொன்மை நூலைப் போற்றியவர் பலர்; தூற்றியவர் பலர். நாட்டுப் பற்றினால் 'நாட்டுப் பொருளாதார நூல்' எழுதிய ஜர்மானிய அறிஞர் பிரடரிக் லிஸ்ட் (1789–1848) தொன்மை நூலின் அனைத்து நாட்டுப் பொருளாதார நோக்கைக் கண்டித்தார். ராஸ்கர், ஷ்மாலர் போன்ற வரலாற்றுமுறை வாதிகள் தொன்மைப் பொருளாதார நூலின் அடிக் கோட்பாடுகளைப் பழித்தனர். சோஷியலிச வாதிகள் தொன்மை நூலில் பெரும் பிழைகள் கண்டனர். அதன் கொள்கைகளை எதிர்த்துப் புதிய பாதை வகுத்தனர். கடைசியாக இறுதிநிலை வாதிகள் அடக்கச் செலவு பண்ட மதிப்பை நிர்ணயிக்கும் எனும் தொன்மை நூல் கோட்பாட்டைக் குறை கூறிப் பயன்பாடுதான் மதிப்புக்கு மூல காரணம் என்ற புதிய கோட்பாட்டை விளக்கினர்கள். தொன்மை நூலார் பொருளாக்கத் துறைக்கு (Production) ஒருவகை விதி

கள், பங்கீட்டுத் தொகைக்கு (Distribution) வேறு வகை விதிகள் என்று வகுத்தமை பொருளாதார நூலை இரண்டு கூறுகளாக்கி யது. அறிவியல் நூல் என்றால் அதன் பல்வேறு பகுதிகளுக்கும் பொருந்தக்கூடிய பொது விதிகள் வேண்டும். அவையின்றிப் பொருளாதாரம் இன்னும் பக்குவம், முதிர்ச்சி யடையாத அறி வியல் எனக் கருதப்பட்டு வந்தது.

தலையிடாக் கொள்கை விளைவிக்கும் கேடுகளை அரசினர் உணர்ந்தனர். கட்டுப்பாடில்லாத போட்டி நடைமுறையில் வன்மை இழந்தது. தனியுரிமைத் தொழில் நிறுவனங்களும் தொழிலாளர் சங்கங்களும் போட்டியின் வன்மையைக் குறைத் தன. வறுமை, வேலையின்மை என்றவற்றை ஒழிக்கும் அவசியம் போன்ற புதுச் சிக்கல்களைத் தீர்க்கத் தொன்மை நூல் கொள்கை கள் உதவவில்லை. பொருளாதாரத் துறையில் மாறுதல்கள் ஏற்பட்டுக்கொண்டே யிருப்பது இயல்பு. ஒவ்வொரு தலைமுறை யும் அந்தந்தக் காலத்தில் தோன்றும் புதிய சிக்கல்களைத் தீர்க்க வேண்டும். இவற்றைத் தீர்க்கவும், ஆராய்ந்து முடிவு கூறவும், அடக்கச் செலவு-இறுதிநிலைப் பயன் வாதப் பிரதி வாதங்களை ஒழிக்கவும், தொன்மை நூலின் குறைபாடுகளை நீக்கி, அதை முழுநிலை அறிவியல் நூலாக்கவும் ஓர் ஆற்றல் மிக்கப் பேரறிஞர் வேண்டியிருந்தது. இக் குறைபாடுகளை நீக்க ஆல்பிரட் மார்ஷல் தோன்றினார் என்றால் அது மிகையாகாது.

**மார்ஷலின் வாழ்க்கைக் குறிப்பு**

ஆடம் ஸ்மித், ரிக்கார்டோ, ஜே. எஸ். மில் பரம்பரையில் வந்தவர் மேதை ஆல்பிரட் மார்ஷல். இவர் இங்கிலாந்து தலைமை வங்கியின் (Bank of England) நீதித் துறை அதிகாரி ஒருவரின் மகன் ஆவர். பள்ளி மாணவராயிருந்தபொழுதே, கணித நூல் அவரைக் கவர்ந்தது. தெருவில் நடந்து சென்று கொண்டிருக்கும்பொழுதே, கடுமையான யூக்லிட் (Euclid) சூத்தி ரங்களுக்கு மனக் கணக்கில் விடை கண்டுபிடிப்பது அவருக்கு ஓர் இனிய பொழுதுபோக்கு. தந்தை விரும்பியதோ, பிள்ளை பாதிரியாக வேண்டுமென்பது. ஆனால், மார்ஷல் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் கணித நூல் பயின்று மிகச் சிறப்புடன் தேறி னார். அங்கேயே கணித நூல் ஆசிரியர் பதவியும் அவருக்குக் கிடைத்தது. அக் காலத்தில் பௌதிக விஞ்ஞானியாக வேண்டும் என்பது அவர் ஆசை.

பாதிரியாகப் பணியாற்றாவிட்டாலும் அவர் சிறந்த ஒழுக்கம் உடையவர். அவருடைய கனிந்த உள்ளம் நாட்டு மக்களை வருத் தும் வறுமைக் கண்டு உருகியது. கடைத்தெருவில், வறுமை

யினால் வாடிவதங்கிய ஒரு முதியவரின் வண்ண ஓவியத்தைக் கண்டார். அதை உடனே வாங்கித் தமது படிப்பறை மேசையின் முன் தொங்கவிட்டுக்கொண்டார். வறுமைத் துயரை நீக்குவதில் ஒரு சமய உணர்ச்சி போன்ற பேரார்வம் அவருக்கு அந்த நாளி லிருந்தே உண்டாகியிருந்தது. வைதிகக் கிருத்துவரல்லராயினும், அவர் மனம் கிருத்துவப் பண்பு நிறைந்தது. வறுமைப் பிணியை அகற்றும் வழிகள் யாவை என்று விவாதிக்கும்பொழுது ஒரு நண்பர் ஜே. எஸ்.மில்லின் நூலைப் படிக்கச் சொன்னார். அதைத் தொடர்ந்து, பல பொருளாதார இலக்கியங்களைக் கற்கத் தொடங் கினார்; ஆடம் ஸ்மித், ரிக்கார்டோ எனப் பல அறிஞர்களின் நூல் களைக் கற்றார். ரிக்கார்டோவின் கொள்கைகளைக் (Principles) கணிதச் சூத்திரங்களாக அமைத்துப் பார்த்தார். சிறிது காலம் பிரிஸ்டல் நகரில் உள்ள கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றி னார். உடல் நலம் பாதிக்கப்படவே ஓராண்டு இத்தாலியில் போய் ஆல்ப்ஸ் மலைச்சாரலில் ஓய்வு எடுத்தார். பின்னால் சிறிது காலம் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் வரலாற்று ஆசிரியராக இருந் தார் (1883-85). அதன்பின் தாம் கற்றுத் தேறிய பல்கலைக் கழகத்தில் பொருளாதாரப் பேராசியராக 23 ஆண்டுகள் பணி யாற்றினார். 1908-ல் ஓய்வு பெற்றபின்னும் அவர் காலமாகும் வரை (1924) பொருளாதாரச் சிறப்பு ஆராய்ச்சித் துறையில் அரிய பணி புரிந்து வந்தார். ஆண்டுதோறும் கோடைக்கால விடு முறை நாட்களை ஆல்ப்ஸ் பிரதேசத்தில் உடல் நலன் கருதிக் கழித்துவந்தார். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலேயே 40 ஆண்டு களுக்கு மேல் தொடர்ந்து வாழ்ந்து வந்தார். பல கல்லூரி மாண வர்களுக்குப் பணவுதவி செய்துள்ளார். அவருடைய பெரிய நூல் நிலையத்தையும் அவருடைய நூல்களிலிருந்து கிடைக்கும் இலாபத்தையும் அவர் காலத்துக்குப்பின் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்துக்கே அன்பளிப்பாகத் தந்துதவிய வள்ளல் இவர்.

**நூல்கள்**

ஆல்பிரட் மார்ஷல் எழுதிய நூல்கள் பல. இவற்றை யெல்லாம் எழுத உறுதுணையாக இருந்து, அவர் உடல் நலனையும் அக்கறையுடனும் அன்புடனும் பேணியவர் அவர் மனைவி. 1877-ல் மணமாகுமுன் மேரி பேலி (Mary Paley) என்ற பெயர் கொண்ட அம்மையார் இவர். 1878-ல் மார்ஷல் எழுதிய 'தொழில் பொருளாதாரம்' (Economics of Industry) என்னும் சிறிய நூலின் கூட்டு ஆசிரியையாகவும் விளங்கினார். 1867-லேயே முதலில் பொருளாதார நூல்களைக் கற்கத் தொடங்கிய காலத்திலேயே, மார்ஷலின் மனத்தில் அவர் பின்னால் விளக்கவிருக்கும் அரிய கருத்துகளெல்லாம் உருவாகிவிட்டன. 1890-ல் அவருடைய

புகழ் பெற்ற 'பொருளாதாரக் கொள்கைகள்' (Principles of Economics) என்ற நூல் வெளி வந்தது. 1919-ல் அவருடைய இரண்டாவது பெரிய நூலாகிய 'தொழிலும் வணிகமும்' (Industry and Trade), கடைசியாக 1922-ல் மூன்ருவது பெரிய நூலாகிய 'பணம், கடன் வணிகம்' (Money, Credit and Commerce) வெளியாயின 1886-ல் தொழில், வணிக மந்த நிலையை ஆராய ஏற்பட்ட ராயல் கமிட்டியின் கேள்விகளுக்கு இவர் தந்த விடைகள் புகழ் பெற்றவை. 1891-94-ல் தொழிலாளர் நிலையை ஆராய ஏற்பட்ட ராயல் கமிஷனிலும், 1893-ல் வறுமை, வயோதிகர் நிலையை ஆராய ஏற்பட்ட ராயல் கமிஷனிலும், ஸ்தல ஸ்தாபன வரிமுறை ராயல் கமிஷனிலும் உறுப்பினராகப் பணியாற்றினுர். மற்றும், 1877-78-ல் தங்க வெள்ளிக் கமிஷன் முன்னும், 1899-ல் இந்தியச் செலாவணிக் கமிட்டி முன்னும் அவர் அளித்த வாக்கு மூலத்தில் நாணயம், செலாவணி முதலியனவற்றைப்பற்றிப் பொன்னே போல் போற்றக்கூடிய பல கருத்துகள் நிறைந்திருக்கின்றன. அந்தக் காலத்திலேயே அவர் எழுதிய கட்டுரைகள் பல புகழ் பெற்றவை.

**இலட்சியவாதி**

அரிய கருத்துகளைத் தெளிவாக, விவரமாக, ஐயந்திரிபற விளக்கவேண்டுமென்ற ஆர்வம் நிறைந்தவர் மார்ஷல். கருத்துகளைப் பிழையொன்றும் இல்லாது வெளியிட வேண்டுமென்பது அவர் இலட்சியம். தமது மனத்தில் உருவான இறுதி நிலை வாதக் கருத்துகள் (Marginal theory) அவர் உள்ளத்தில் 20, 30 ஆண்டுகளுக்கு நூல் வடிவத்தில் வெளிவராமல் கருவாகவே இருந்தது. இறுதிநிலைப் பயன்பற்றி ஆஸ்திரிய அறிஞர்கள், ஜெவன்ஸ், வால்ரஸ் ஆகியோரின் நூல்கள் வெளியிடுவதற்கு முன்னமேயே, அக் கருத்துகளை மார்ஷலும் உருவாக்கியிருந்தார். ஆனுல், அவற்றை வழுவின்றி வெளியிட வேண்டும் என்ற ஆசையில் காலம் தாழ்த்தி விட்டார். ஜெவன்ஸின் இயல்போ பாதி வெந்ததும் வேகாததுமாகக் கருத்துகளை அவசரமாகப் பரிமாறிவிடுவதே ஆம். (50 வயதுக்குள் இறந்துபோன ஜெவன்ஸ் செய்ததும் சரியே). மார்ஷலின் நூல்கள் வெளிவருவதற்குப் பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னரே மார்ஷல் தம் கருத்துகளைக் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் தம் நண்பர்களிடையேயும், மாணவர் கூட்டங்களிலும் பரப்பி வந்தார். பல சமயங்களில் இவ்வாறு 'சலங்கை கட்டாமல்' அரங்கேறியவை, கட்டுரை, கடிதம், விவாதம் வாயிலாக அமெரிக்க நாட்டிலும் பரவியதுண்டு. எனவே, நூலில் வெளி

வந்த கருத்துகள் எவ்வளவு புதுமையாயிருப்பினும், அவை அறிஞர்களிடையே ஒரு பரபரப்பையும் உண்டாக்கியதில்லை.

தலைசிறந்த நூல்

அவருடைய நூல்களில் முதன்மையானவை மூன்று: ‘கொள்கைகள்’ (principles), ‘தொழிலும் வணிகமும்’ பணம், கடன், வணிகம்,’ எல்லாம் 700 பக்கங்களுக்கு மேல் உள்ள பெரிய நூல்கள். இவற்றில் தலை சிறந்தது ‘கொள்கைகள்.’ 1890ஆம் ஆண்டு வந்த முதல் பதிப்புக்குப் பின் 1920-க்குள் எட்டுப் பதிப்புகள் வெளிவந்தன. கடைசிப் பதிப்பு 870 பக்கங்கள் கொண்டது. அதில் உள்ள பகுதிகள் ஆறு. முதல் பகுதி முன்னுரை. இரண்டாவது பகுதியில் 34 பக்கங்களில் சில ‘அடிப்படைக் கருத்துகள்’ விளக்கம் பெறுகின்றன. மூன்றும் பகுதி (54 பக்கங்கள்) ‘விருப்பங்களும் நிறைவும்’ என வருவது தேவை நிலை பற்றியதாகும். இது ஒரு புதிய முறை. மில்லின் நூலில் தேவைக்கு முக்கியத்துவமே கிடையாது என்பதை நோக்கும் போது இந்தப் புதுமை புலனாகும். நான்காவது பகுதியின் (184 பக்கங்களில் தலைப்பு ‘பொருளாக்கச் சாதனங்கள்’. இது நிலம், மனித உழைப்பு, முதல், முயற்சி என நான்கு முதற் கருவிகளைப் பற்றிய உட்பிரிவுகள் கொண்ட பகுதி. ஐந்தாவது பகுதி (180 பக்கங்கள்) நூலின் இதயம், அளிப்பு, தேவைச் சக்திகளின் சமன்பாட்டைப் பற்றியும், மதிப்பு நிர்ணயத்தைப் பற்றியும் நுட்பமாகவும், புதிய முறையில், குறுகிய காலம், நீண்ட காலம் என்று காலக் கூறு பாகுபாடுகளில், அச் சக்திகள் எவ்வாறு இயங்கும் என்று விரிவாகவும் இப் பகுதி ஆராய்கின்றது. அதிகாரங்கள் 15 அமையப்பெற்றது. ஆறுவது பகுதி நாட்டின் வருமானத்தைப் பங்கிடும் முறையைப் பற்றியது. 220 பக்கங்களும் 13 அதிகாரங்களும் கொண்டது. இதை அடுத்து 12 பிற்சேர்க்கைகள் (Appendices) உள்ளன. இவற்றில் அரிய கருத்துகள் செறிந்து கிடக்கின்றன. பெருமதிப்பு வாய்ந்தவை.

மார்ஷலின் நூலின் தனிச் சிறப்பும், அவரைச் சுற்றியிருந்த கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழக அறிஞர் குழாமும், சீடர்கள் கூட்டமும், அவருடைய கொள்கைகளை ஆராய்ந்து வரவேற்றுப் பாராட்டியதும், அவருடைய திறமையின் காரணமாக, அவர் தொன்மைநூல் பொருளாதார மறுமலர்ச்சியின் தலைவரானுர். அவருடைய கல்வியும், தொழில், வணிகம், வங்கி, செலாவணித் துறைகளைப் பற்றிய நுண்ணறிவும் வேறு எந்தப் பொருளாதார ஞானிக்கும் இருந்ததாகக் கூறமுடியாது. அவர் ஒரு தனிப் பொருளாதார வல்லுநர் மட்டுமல்ல; வரலாற்று ஆசிரியர்,

அரசியல் நிபுணர், தத்துவ ஞானி, கிரேக்க, உரோம இலக்கிய அறிஞர், கணித மேதை, இவையத்தனையும் ஒருங்கேயாவர். இத்தகைய பரந்த அறிவும் நுண்ணிய ஆராய்ச்சித் திறனும், அவர் மேற்கொண்ட பொறுப்பை மிக்க வெற்றியுடன் ஏற்றுச் சாதிக்க உதவின. சிதறிச் சிதைந்து கிடந்த பொருளாதாரக் கொள்கைகளையும், கடும் விவாதங்களின் கருத்துகளையும் ஒன்று கூட்டி இணைத்துப் பெரியதோர் அறிவியல் நூலாக நிலை நாட்டும் ஆற்றலையும் பெருமையையும் அவருக்கு அளித்தன.

அவருடைய கருத்துகளில் குறிப்பிடத் தக்கவை : (1) பொருளாதார நூலின் இலக்கணம், (2) மதிப்பு நிர்ணயம், (3) காலக் கூறின் சிறப்புப் பண்பு, (4) பங்கீட்டுக்கொள்கைகள், (5) பொருளாதார ஆராய்ச்சிக் கருவிகள் என்பனவாகும்.

### (1) பொருளாதார நூலின் இலக்கணம்

தொன்மை நூலார்களில், சிறப்பாக ரிக்கார்டோவின் பொருளாதார நூலைப் பற்றிக் கூறிய கருத்துகள் ஒருதலைப் பட்டதாகவும், செல்வம் திரட்டுவதே மனிதனின் ஒரே குறிக்கோள் எனவும், ஓர் அபிப்பிராயத்தை உண்டாக்கியது. மக்கள் தன்னலத்தால் உந்தப்படுகின்றனர். அதனால் யாதொரு கேடுமில்லை ; ஏனெனில் தன்னலம் தானாகவே பொது நலத்தை வளர்க்கும் என்பது ரிக்கார்டோவின் கருத்து. இதனால் பொருளாதார நோக்கத்தினால் மட்டும் இயங்கும் 'பொருளாதார மனிதன்' (economic man) என்ற பூதத்தை உருவாக்கி விட்டதாக ரிக்கார்டோவை இலக்கிய மேதைகள் இகழ்ந்துரைத்தனர். பொருளாதார நோக்கத்தைத் தவிர நாட்டுப்பற்று, சமயப்பற்று, அறவுணர்ச்சி, தியாக மனப்பான்மை ஆகியவை இல்லாத ஒரு சுயநலப்பேய் என்று திரித்துப் பொருள் கண்டனர் ரஸ்கின் முதலானோர். பொருளாதார நூல், எந்த இழிந்த வகையிலும் செல்வம் திரட்டப் போதிக்கும் நூல் என்ற வசையும் உண்டாயிற்று. பொருளாதார நூலைச் 'செல்வ அறிவியல்' (Science of Wealth) என்று பழித்தனர். இம்மாதிரி பரவிய தவறான கருத்துகளை நீக்கினது மார்ஷலின் பொருளாதார நூலைப்பற்றிய இலக்கணம். அவருடைய 'கொள்கைகள்' என்னும் தலை சிறந்த நூலின் முதல் வாக்கியமே இந்த இலக்கணம் தான் : 'பொருளாதாரம் என்பது' மனிதனின் சாதாரணத் தொழில் வாழ்க்கையைப் பற்றிய படிப்பு; அவன் எவ்வாறு வருமானத்தை ஈட்டுகிறான், எவ்வாறு செலவழிக்கிறான் என்று அது ஆய்கிறது. இவ்வாறு ஒருபுறம் அது செல்வத்தைப் பற்றிய படிப்பு ; அதைவிட முக்கியமான மற்றொரு புறமோ, அது மனிதனைப் பற்றிய படிப்பின் ஒரு

பகுதியாகும்'[1] மனிதனுக்கோ பலவித நோக்கங்கள், பல்வேறு உணர்ச்சிகள், அவன் ஆசைகளோ பல தரத்தவை, பற்பல குறிக்கோள்கள் உள்ளவை. 'செல்வத்தை ஈட்டி, ஈட்டிய செல்வத்தை நிறைபயன் தரும் வகையில் சிறப்பாகப் பயன்படுத்துவதே மனிதனின் சாதாரணத் தொழில் வாழ்க்கை.' நல் வாழ்வுக்கான பருப்பொருள் தன்மையுடைய தேவைப் பொருள்களைப் பெறுவதும் பயன்படுத்துவதும்' பற்றியதே பொருளாதாரம்.[2] செல்வம் ஒரு கருவி, நலன்தான் (Welfare) அதனால் விரும்பக் கூடிய பயன். இவ்வாறு செல்வம் ஈட்டலை மக்கள் நாடும் நல் வாழ்வுக்கு (Welfare) ஓர் இன்றியமையாத சேவையாகக் காட்டியுள்ளார் மார்ஷல். நல்வாழ்வுக்கு முதலிடம் நல்கிச் செல்வத்தைப் பணிப் பெண்ணாகத் தாழ்த்தி இலக்கணம் வகுத்தார் மார்ஷல். இதற்குப் பிறகே 'மனிதன் தன்னலப் பேய்,' 'பொருளாதாரம் ஓர் இருளடைக்கும் நூல் (Dismal Science), ஒரு குபேர வழிபாடு' என்ற அவச் சொற்களெல்லாம் மறைந்தன.

(2) மதிப்பு நிர்ணயம்

தொன்மை நூல் மும் மணிகளும், வழிநூல் அறிஞரும் மதிப்பு நிர்ணயத்துக்கு மூலகாரணம் அடக்கச் செலவு என்று ஒரு முகமாகக் கூறிப்போந்தனர். இறுதிநிலை வாதிகள் இக் கொள்கை தவறு எனக் காட்டிப் பண்டங்களின் பயன்பாடு தான் மதிப்பை நிர்ணயிக்கும் அளவுகோல் என்று சாதித்தனர். இவ் விரண்டு முரண்பாடான கொள்கைகளிலுள்ள குறைகளைப் பிரித்தறியும் அன்னமாக மார்ஷல் திகழ்ந்தார். பண்டங்களின் அளிப்புநிலை அவற்றின் அடக்கச் செலவைப் பொறுத்திருக்கிறது என்றும், தேவை நிலை பயன்பாட்டைப் பொறுத்திருக்கிறதென்றும் முதலில் விளக்கினர். அளிப்பும் தேவையும் அங்காடியில் போட்டியிடும் சக்திகள். இந்தப் போட்டியின் விளைவுதான் பண்டமதிப்பு. ஒரு கத்திரிக்கோலின் இரண்டு கைகளும் எதையேனும் வெட்ட எவ்வளவு அவசியமோ, பண்டத்தின் மதிப்பை நிர்ணயிக்க அளிப்பும் தேவையும் அவ்வளவு அவசியம் 'கத்திரிக்கோலில் ஒரு கையைப் பிடித்துக்கொண்டு மற்றொரு கையை அழுத்தினால், இரண்டாவதுதான் தாளை வெட்டியது என்று மேலோட்டமாக வேண்டுமானால் சொல்லலாம். அதேபோல், அளிப்பு நிலையைக் கட்டுப்படுத்திவிட்டால், தேவை நிலைதான் பண்டத்தின் மதிப்பை நிர்ணயிக்கிறது என்று மேலோட்டமாகக் கூறலாம். ஆனால், இரண்டும் பூரணமான உண்மையாகாது.

1 எல். சிதம்பரத்தாணு, தே. வேலப்பன் : பொருளாதாரம்-ஓர் அறிமுகம், மூன்றாம் பதிப்பு 1968. பக்கம் 3.

2 மேற்படி.

இரண்டு கைகளுமின்றி, கத்தரிக்கோலில் ஒரு கையால் ஒரு சாமானையும் வெட்ட முடியாது. அதுபோலவே தேவை அல்லது அளிப்பு மாத்திரம் இருந்தால் பண்டங்களின் மதிப்பை நிர்ணயிக்கமுடியாது என்று இந்தப் புகழ்பெற்ற கத்திரிக்கோல் உபமானம் கொண்டு மார்ஷல் மதிப்புப் பிரச்சினையில் ஏற்பட்ட முடிச்சை அவிழ்த்து விடுகிறார்.

மேலும் அளிப்பு, தேவை, மதிப்பு மூன்றுமே ஒன்றையொன்று பாதிக்கும் என்று கூறுகின்றார். அளிப்பு (supply) அதிகப் பட்டால், எந்தப் பண்டத்தின் மதிப்பும் குறையும். தேவை அதிகப்பட்டால் மதிப்புக் கூடும். மதிப்பு உயர்ந்தால், அளிப்புப் பெருகும். ஆனால், தேவை சுருங்கும். மதிப்புத் தாழ்ந்தால், அளிப்புக் குறையும், தேவை மிகும். எனவே, அளிப்பு நிலை, தேவைநிலை, மதிப்பு மூன்றுமே ஒன்றோடொன்று பிணைக்கப் பட்ட தொடர்பு கொண்டவை என்பதை நன்கு விளக்குகிறார். இவை அங்காடியில் (market) மிகவும் சிக்கலான முறையில் செயலாற்றுகின்றன என்றும், மதிப்புப் பிரச்சினையை எளிய முறையில் விளக்க முடியாது என்றும் அவர் முடிவு கூறினார்.

பயனுகும் இயல்பு ஒரு பண்டத்தில் இல்லையானால் அதற்குத் தேவை பிறக்காது. ஒரு சில புற நடையாக இருந்தாலும் எல்லாப் பண்டங்களின் உற்பத்திக்கும் அடக்கச் செலவு உண்டு என்பது பொதுவிதியாகும். உழைப்பு, நிலம், முதல், முயற்சி என்ற நான்கும் உற்பத்தியினங்கள்-கருவிகள் - என்றார். இவற்றைப் பயன்படுத்தாமல் தற்கால உலகில் எந்தப் பண்டத்தையும் உண்டாக்க முடியாது. அங்காடியில் அப் பண்டத்தின் மதிப்பு அடக்கச் செலவுக்குக் குறைந்திருந்தாலும், குறைந்து விட்டாலும், விற்க வந்த அளிப்புத் திரும்பக் கிட்டங்கிகளுக்குப் போய்விடும் என்றும்; அங்காடியில் அளிப்புக் குறைந்து விட்டால் அவை அரும் பொருள்கள் (Scarce Commodities) ஆகிவிடும் என்றும், அருமையாகக் கிடைக்கும் பொருள்களுக்கு வாங்குவோர் அதிக விலை கொடுக்க முன்வருவர் என்று கூறி, இந்த அளிப்பு நிலை, தேவைநிலைப் போட்டியை ஓர் அட்டவணை (schedule) வடிவத்தில் காட்டுகிறார்.

| அளிப்பு நிலை கிலோ கிராம் | மதிப்பு ரூபாய் | தேவை நிலை கிலோ கிராம் |
|---|---|---|
| 500 | 1–50 | 150 |
| 400 | 1–20 | 225 |
| 300 | 0–90 | 300 |
| 200 | 0–60 | 400 |
| 100 | 0–30 | 700 |

இதனை நமக்கேற்ப மாற்றிக்கொண்டு ஆராயலாம்.

இந்த அட்டவணையில் சர்க்கரையை எடுத்துக்காட்டுப் பண்டமாகக் கொள்வோம். மிகக் குறைந்த விலையில் 0-30 பைசே யில் விற்கத் திறமையுடையவர் மிகக் குறைவாகவே இருப்பர். அதனால் அளிப்புநிலை 100 கி.கி. என்று குறைவாகவேயிருக்கும் எனக் கொள்வது சரி. விலை ஏற ஏறத் திறமையில் தாழ்ந்த தொழிலதிபரும் பண்டங்கள் அளிக்க முன்வருவர். விலை ரூ. 1-50 ஆகும்போது ஏராளமான அளிப்பு ஏற்படும்; அட்டவணையில் 500 கி.கி. என்று இருக்கிறது. தேவையை நோக்கின், ஏழை எளியவர்கள் கூடக் குறைந்த விலையானால் சர்க்கரை வாங்க விரும்புவர். எனவே, 30 பைசேயில் 700 கி. கி.-முக்குத் தேவை யிருக்கும் என்பதையும் ஒப்புக்கொள்ளலாம். ரூ. 1-50-ல், தேவை 150 கி. கிராமுக்கு இறங்கிவிடும் என்று காட்டியிருப்பது சரி தான். உற்பத்தியாளர் எவ்வளவு சர்க்கரை விற்க விரும்புவர் என்பதை அவரவர் அடக்கச் செலவே நிர்ணயிக்கும். வாங்கு வோரின் பயன்பாடு பற்றிய சொந்த எண்ணமே தேவையை நிர்ணயிக்கும். அதிகப் பயன்பாடு உண்டு என்று நினைப்பவர் அதிக விலை கொடுக்கவும், குறைந்த பயன்பாடுதான் என்று நினைப்பவர் குறைந்த விலை கொடுக்கவுமே சித்தமாயிருப்பர். இந்த அட்டவணையில் காட்டியிருக்கும் விலைகளில் 90 பைசேதான் அங்காடி மதிப்பு (Market Price) ஆகும் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். அந்த விலையில் அளிப்பு நிலையும் தேவை நிலையும் சமமாயிருக்கின்றன. ரூ. 1-20 அங்காடி விலையானால் அளிப்பு மிகுதியாகவும் தேவை குறைவாகவும் இருக்கும் அதே போல் 60 பைசே விலையானால், அளிப்புக் குறைவாகவும் தேவை மிகுதியாகவும் இருக்கும். இந் நிலையில் வாங்குவோர் போட்டி யடித்துக்கொண்டு விலையையுயர்த்திவிடுவர். முந்திய நிலையில் விற்பவர் போட்டியடித்துக் கொண்டு விலையைக் குறைத்து விடுவர். தேவைநிலை அளிப்புநிலை சமன்பாடு எய்தும்பொழு துள்ள விலைதான் அங்காடியில் கடைசியில் நிலைபெறும். இவ் வாறு அளிப்புத் தேவை சமநிலைக் கொள்கையை வகுத்து, அடக் கச் செலவு பயன்பாடு இரண்டும் மதிப்பை நிர்ணயிக்கும் இரு காரணங்கள் என்று முடிவு காண்கிறார் மார்ஷல்.

### (3) காலக் கூறின் சிறப்பியல்பு (Significance of Time Element)

மீன் அங்காடி, ஒரு நாள் மாலை மொத்த அளிப்பு 1000 கி.கி. அது சாதாரணமாக நாள்தோறும் விற்கக்கூடிய அளவு என்று கொள்வோம். ஆனால், அன்று காலை நகராட்சியினர் ஆடுகள் நோயுற்றிருக்கின்றன, என்று ஆட்டுக் கறி வியாபாரத்திற்கு மூன்று மாதங்களுக்குத் தடையுத்தரவு விதித்து நிறுத்தி விடு கின்றனர் எனக் கொள்வோம். ஆட்டுக்கறி வாங்கி உண்பவரும்

மீன் கடைகளை நோக்கிச் செல்வர். அதனால் தேவை 2000 கி.கி. ஆகிறது எனக் கொள்வோம். அளிப்புக் குறைவாக இருப்பதால் எல்லாருக்கும் மீன் கிடைக்காது. மீன் அரும்பொருளாகிவிடும். அதன் விலை இரண்டு பங்கு ஏறும் எனக் கொள்வோம். அதன் மதிப்பு வாங்குவோரின் பயன்பாடு பற்றிய எண்ணத்தைப் பொறுத்திருக்கிறது. ஆட்டுக் கறி இல்லாத காலத்தில் மீனின் பயன்பாடு உயர்வது இயற்கையே. எனவே, குறுகிய காலத்தில் பயன்பாடு அல்லது தேவைநிலை விலையை நிர்ணயிக்கிறது.

மீன் விலை யேறிவிட்டதல்லவோ ? மீன் பிடிப்பவர் நல்ல இலாபம் அடைவர். மறுநாள் அவர்கள் அதிக அளவில் மீன் பிடிக்க அது ஊக்கமளிக்கும். இதுவரை மீன் பிடிக்கும் தொழிலில் சோம்பியிருந்தவரும் மீன் பிடித்து விற்க முனைவர். மூன்று அல்லது நான்கு வாரங்களில் மீன் அளிப்புநிலை இவ்விரு காரணங்களாலும் உயரும். ஐந்து ஆல்லது ஆறு வாரங்களில் மீன் அளிப்பு 2000 கி.கி. ஆகிவிட்டால், மீன் விலை தொடக்கத்திலிருந்த விலைக்கு இறங்கிவிடும். அந்த விலையில் மித மிஞ்சிய இலாபம் இருக்கமுடியாது. இருந்தால் அளிப்பு மேலும் அதிகமாகும். விலைவாசி இறங்கும். கடைசியில் விலை அடக்கச் செலவுக்குச் (நேர்மையான இலாபம் உள்பட) சமமாகும். எனவே, நீண்டகாலக் கூறில் விலை அடக்கச் செலவினால் நிர்ணயிக்கப்படும் என்பது தெளிவாகிறது. இந்த எடுத்துக்காட்டினால் ஓர் உண்மை புலனாகிறது. குறுகிய கால (Short term) அங்காடியில் பயன்பாடும், நீண்டகால (Long term) அங்காடியில் அடக்கச் செலவும் மதிப்பை நிர்ணயிக்கிறது என்பதே அந்த உண்மை. இம்மாதிரி அங்காடிகளில், குறுகிய, நீண்டகால அங்காடிகள் என்னும் வேற்றுமையைக் காட்டி, மதிப்பு, அளிப்புநிலை, தேவை நிலை ஆகிய மூன்றின் தொடர்புகளை விளக்கிய முதல் அறிஞர் ஆல்பிரட் மார்ஷலே ஆவர். இப்படி அடக்கச் செலவு கொள்கைக்கும், இறுதிநிலைப் பயன் பாட்டுக் கொள்கைக்கும் உள்ள முரண்பாட்டை நீக்கி, இரண்டையும் ஒன்றின் இரு சாயல்களாக இணைத்து விட்டார். இந்த இணைப்பு ஒரு பெரிய சாதனை. இது பொருளாதார அறிவியலில் ஓர் ஒருமைப்பாட்டை அளித்துள்ளது.

### (4) பங்கீட்டுக் கொள்கை

தொன்மை நூலார் பொருளாக்கத்துறையில் இயற்கை விதிகள் மாற்றமுடியாதவை என்றனர். நிலத்தின் அளவையோ, அதன் கருமித்தனத்தையோ மனிதன் சக்திக்கு அப்பாற்பட்டது. கூலி, வாரம், வட்டி முதலியவற்றைப் பங்கீட்டுத் துறையில் மக்கள் இயற்றும் சட்டங்கள் நிர்ணயிக்கின்றன என்றும்

கூறினர். ஆனல், இந்தக் கூற்றை இறுதிநிலை வாதிகள் ஒப்புக் கொள்ளாமல், துய்ப்புப் பண்டங்கள் எவ்வளவு பயன்பாடுடையன என்று மக்கள் மதிக்கும் மதிப்பே, முதற்கருவிகளின் மதிப்புக்கும் ஆதாரம் என்று அவர்கள் சாட்டுக் கொள்கையை வகுத்தனர். மார்ஷல் இறுதிநிலை வாதம் பண்டமாற்றுத் துறையினைப்போல, பங்கீட்டுத் துறையிலும் மதிப்புப் பிரச்சினையைத் தீர்க்கிறது என்று காட்டுகிருர்.

ஒரு வயலில் பயிர் செய்ய ஓர் உழவனுவது கண்டிப்பாக உழைக்கவேண்டும். அவன் உழைப்பினுல் உண்டாகும் உற்பத்தி 25 குவின்டல் நெல் என்போம். இரண்டு உழவர்கள் உழைத்தால் மொத்தம் 40 குவின்டல் நெல் கிடைக்கிறதென்ருல், இரண்டாவது உழவனின் உழைப்பின் மதிப்பு 15 குவின்டல். மூன்றுபேர் உழைத்தால் உற்பத்தி 50 குவின்டல் ஆகிறதெனக் கொள்வோம். மூன்ருவது உழவனின் உழைப்பின் மதிப்பு 10 குவின்டல் ஆகும். நான்கு பேர் உழைப்பின் மொத்த உற்பத்தி 55 குவின்டல்; நான்காவது உழவனின் உழைப்பின் மதிப்பு 5 குவின்டல். இப்பொழுது நான்கு உழவர்களும் ஒரே திறன், ஊக்கம், ஒழுக்கம், அனுபவம் படைத்தவர் எனக் கொள்வோம். அப்படியானல் எல்லாருக்கும் ஒரே கூலிதான் கிடைக்கும். ஏனெனில் அந்த நால்வரும் இடும் போட்டியின் விளைவினுல், ஒருவருக்கு ஒரு கூலி, இன்னெருவருக்கு வேறு கூலி என்று இருக்க வழியில்லை. நான்காவது உழவருக்கு 5 குவின்டலுக்கு மேல் கொடுத்தால் அவனுடைய உற்பத்திப் பங்குக்கு மேல் போகும். அதனுல் நிலச்சுவானுக்கு நட்டம் ஏற்படும். இவனுக்கு 5 குவின்டல் கூலி கொடுத்தால், ஏனையோருக்கும் 5 குவின்டல் தான் கூலியாகக் கொடுக்கப்படும். நான்காவது உழவர் இறுதிநிலை உழவர். கூலி அவரது உற்பத்தித் திறனுக்குச் சமமாக இருக்கிறது. எனவே, கூலி இறுதிநிலை உற்பத்தியினுல் நிர்ணயிக்கப்படும் என்ற மார்ஷல் விளக்குகிருர். இம்மாதிரி இயந்திரம், நிலம் முதலான எல்லா முதற் கருவிப் பொருள்களின் மதிப்பும் இறுதிநிலை உற்பத்தியினுல் (Marginal product) நிர்ணயிக்கப்படும் என்று மார்ஷல் விளக்கியுள்ளார். இறுதிநிலைப் பயன் எவ்வாறு பண்டங்களின் மதிப்பை நிர்ணயிக்கிறதோ, அதே முறையில் பங்கீட்டுத் துறையிலும் இறுதிநிலை உற்பத்தித் திறனே முதற் கருவி. உற்பத்திக் காரணிகளின் மதிப்பை நிர்ணயிக்கும் என்ற உண்மையை முதலில் விளக்கினவர் மார்ஷல்தான். இதுவும் ஓர் அரிய சாதனையே.

இந்த விளக்கம் இன்னெரு விதத்திலும் சிறப்புடையது. பொருளாக்கத் துறையிலும், பங்கீட்டுத் துறையிலும் வெவ்வேறு

விதிகள் செயலாற்றுகின்றன என்றிருந்த வாதம் இதனால் நசிந்து விடுகிறது. இரு துறைகளிலும் இறுதிநிலைக் கொள்கைதான் ஆட்சி புரிகிறது என்பது புலனாகிறது. ஒன்றில் இறுதிநிலைப் பயனும் (marginal utility), மற்றதில் இறுதிநிலை உற்பத்தித் திறனும் (marginal productivity) மதிப்பை நிர்ணயிக்கிறது என்பதை எடுத்துக்காட்டியவர் மார்ஷல். இந்த ஒற்றுமை பொருளாக்கம், பங்கீடு என்ற இரு துறைகளுக்கு நடுவே இருந்த பிளவை அகற்றியது. ஒரே மாதிரி விதிகள் எல்லாத் துறைகளிலும் செயலாற்றுகின்றன, இயங்குகின்றன என்பது உறுதியாயிற்று. பொருளாதார நூல் முழுநிலை அறிவியல் நூல் ஆயிற்று என்பது இதன் பொருள். இதை மூன்றாவது அரும் பெரும் சாதனை என்று கூறலாம்.

(5) ஆராய்ச்சிக் கருவிகள்

மார்ஷல் தோற்றுவித்த பல புதிய கருத்துகள் (new concepts) பிற்காலப் பொருளாதார ஆராய்ச்சிக்கு இன்றியமையாத நுட்பமான ஆராய்ச்சிக் கருவிகளாகத் திகழ்கின்றன. அவற்றில் முக்கியமானவை; (i) தேவை நெகிழ்ச்சி, (ii) பதிலீடு விதி (iii) முதன்மைச் செலவு, துணைச் செலவு, (iv) நுகர்வோர் உபரி, (v) அகச் சிக்கன நலன்கள், (vi) புறச் சிக்கன நலன்கள், (vii) பிறமாறு எடுகோள், (viii) நிலையில்லாத வாரம், (ix) மாதிரி நிறுவனம், (x) நாட்டு வருமானம்.

இக் கருத்துகளெல்லாம் இக் காலப் பொருளாதாரப் பாடப் புத்தகங்களில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. எனவே, இந் நூலில் இவற்றிற்கு மிகச் சுருக்கமான விளக்கவுரைகள் போதுமானவையாகும்.

(i) தேவை நெகிழ்ச்சி (Elasticity of Demand)

தேவை நெகிழ்ச்சி பல்வேறு பண்டங்களுக்குப் பல்வேறு அளவுகளில் காணப்படுகிறது என்பது மார்ஷலின் சிறந்த கருத்துகளில் ஒன்று. ஒரு பண்டத்தின் விலை மிக்க அளவில் வீழ்ச்சியடைந்தாலும், அதன் தேவைநிலை மிக்க அளவில் மாறாமல் இருந்தால், அதனுடைய தேவை நெகிழ்ச்சி குறைவு என்று கருதப்படும். எடுத்துக்காட்டாக, உப்பின் விலை எவ்வளவு குறைந்தாலும், அதன் தேவை நிலை பெரிய அளவில் பெருகுவதில்லை எனவே, உப்பின் தேவை நெகிழ்ச்சி அற்பம் என்று கொள்ள வேண்டும். தேவை நெகிழ்ச்சியின்மைக்கு உப்பு ஒரு சிறந்த உதாரணம். பட்டு, வெள்ளி, தங்கம், வாசனைத் திரவியங்கள் போன்ற ஆடம்பரப் பொருள்களின் விலை குறைந்தால் தேவை நிலை மிகவும் பெருகும். இவற்றிற்குத் தேவை நெகிழ்ச்சி மிகுதி.

வரி விதிப்புமுறை, உற்பத்திப் பெருக்க கைகோள் முதலிய வற்றில் இக் கருத்துப் பெரும் பயன் அளிக்கிறது.

(ii) பதிலீடு விதி (Law of Substitution)

ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களால் ஒரு தேவையை நிறைவேற்ற முடியுமானால், தனி மனிதன் குறைந்த விலையில் விற்கும் பொருளை வாங்குவது இயற்கை. அரிசியும் சோளமும் பசியை ஆற்ற உதவும் பொருள்கள். சோளத்தின் விலை குறைவாயிருந்தால், மக்கள் அரிசிக்குப் பதில் சோளத்தை அதிகமாக வாங்குவார்கள். உற்பத்தித் துறையில் தொழிலாளர் கூலி அதிகமாயிருந்தால், தொழிலதிபர்கள் விலைமிகுந்த மனித உழைப்பிற்குப் பதிலாக இயந்திரங்களை நிறுவுவர். இதற்கு அமெரிக்கத் தொழிலமைப்பு ஒரு சிறந்த சான்றாகும். நுகர்வோரும், தொழிலதிபரும் குறைந்த விலைப் பொருளைக் கொண்டு தங்கள் தேவைகளை நிறைவேற்றும் செயலைப் பதிலீடு விதியாக மார்ஷல் வகுத்துள்ளார்.

(iii) முதன்மைச் செலவும் துணைச் செலவும்
(Prime and Supplementary cost)

எந்தப் பொருளின் அடக்கச் செலவையும் இரு கூறாகப் பிரிக்கலாம். ஒரு சர்க்கரை ஆலை நிறுவ 50 லட்சம் ரூபாய் முதலீடு ஆவதாகக் கொள்வோம். அந்த முதலீட்டின் 4 சத வீத வட்டித் தொகை ரூ. 2 லட்சம் ஆகும். அந்த ஆலை 2 லட்சம் மணங்கு சர்க்கரை உற்பத்தி செய்வதாகவும் கொள்வோம். வட்டியின் காரணமாக ஒவ்வொரு மணங்குச் சர்க்கரையின் அடக்கச் செலவிலும் ஒரு ரூபாய் சேர்க்க வேண்டிவரும். இதையே துணைச் செலவு என்று கூறுகிறோம். கரும்பின் விலை, தொழிலாளர் கூலி, ஒரு மணங்கு சர்க்கரைக்கு ரூ. 60 ஆகிறது என்று கொள்வோம். இந்தச் செலவு உற்பத்திக்கு நேரடியாகச் செய்யும் செலவு. இதையே முதன்மைச் செலவு (Prime cost) என்று மார்ஷல் கூறுகிறார். உற்பத்தி 4 லட்சம் மணங்குகளாகப் பெருகினால் ஆலை முதலாளியின் முதன்மைச் செலவு இரட்டிக்கும். ஆனால், முதலீட்டின் வட்டிச் செலவு இரட்டிக்காது. உற்பத்தி 4 லட்சம் குவின்டல் ஆனால், துணைச் செலவு குவின்டல் ஒன்றுக்கு அரை ரூபாய் ஆகக் குறையும். துணைச் செலவு (Supplementary cost) வட்டியைத் தவிர வேறு இனங்களும் சேர்ந்த கூட்டுத் தொகையாகும். நிலத் தீர்வை, ஆலைப் பாதுகாப்பாளர் சம்பளம், செயலாளரின் அலுவலக ஊழியர்களின் (Administrative Staff) சம்பளம் போன்ற இனங்கள் உற்பத்தி ஓரளவில் ஏற்றத்தாழ்வடைந்தாலும் அதே விகிதத்தில் மாறுவதில்லை. இவ்வாறு மொத்தத்தில் மாறாத நிறுவனச் செலவுகளைத் (Establishment/

Over-head Charges) துணைச் செலவு என்று மார்ஷல் கூறுகிறார். உற்பத்தி அளவு மாறும்போது அதற்கு ஏற்றவாறு கூடியும் குறைந்தும் நேரடியாக மாறும் செலவை முதன்மைச் செலவு என்று குறிப்பிடுவது பொருத்தமே ஆகும்.

### (iv) நுகர்வோர் உபரி (Consumer's Surplus)

நுகர்வோன் ஒருவன் ஊற்றுப் பேனா வாங்கவேண்டும் என்று விரும்புகிறான். கடைக்குப் போகுமுன் ஒரு நல்ல பேனாவின்விலை ரூ. 10 ஆக இருக்கும். கொடுக்க வேண்டியதுதான் என்று நினைக்கிறான். ஆனால், கடையில் அவன் விரும்பும் பேனா ரூ. 5-க்குக் கிடைக்கிறது என்றால், அவனுக்கு ரூ. 5 மிச்சமாகும். ஒரு பண்டம் நல்கும் பயன்பாடு அதற்குக் கொடுக்கும் விலையின், பணத்தின் பயன்பாட்டை விட அதிகமாகவேயிருக்கும். இல்லாவிட்டால் ஒருவனும் அந்தப் பண்டத்தை வாங்கப்போவதில்லை. பணத்தைக் கொடுக்கும் தியாகத்துக்கும் பண்டத்தினால் வரும் பயன்பாட்டுக்கும் சமநிலை யிருக்கலாமே தவிர, முன்னது பின்னதை விட ஒருக்காலும் அதிகமாய் இருக்காது. 'ஒரு பண்டத்துக்கு ஒரு நுகர்வோன் கொடுக்க ஆயத்தமாயிருக்கும் பணத்துக்கும், அதற்கு அவன் கடையில் கொடுக்கும் விலைக்கும் உள்ள வித்தியாசம் நுகர்வோனின் உபரியின் பொருளாதார அளவு' (Economic measure) என்பது மார்ஷலின் இலக்கணம்.

### (v) அகச் சிக்கன நலன்கள் (Internal Economics)

ஒரு தொழிலை எடுத்துக்கொள்வோமானால், அதில் பல ஆலைகள் அத் தொழில் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கலாம். அவற்றின் முதலீடு, அளவு, இயந்திரங்களின் தரம், தொழிலாளர்களின் தொழில் நுட்பத் திறன், மூலப் பொருள்களின் நயம், விலை, நிர்வாகத் திறமை, விற்பனை வசதிகள் என்பனவற்றில் எவ்வளவோ வேற்றுமை இருக்கலாம். இவை எல்லா வகையிலும் உயர்ந்த ரகமான பொருள்களும் உழைப்பும் கிடைக்கும். ஆலையின் அடக்கச் செலவு மிகவும் கணிசமாகக் குறைந்திருக்கும். இதற்குரிய நலன்களை அகச் சிக்கன நலன்கள் என்று மார்ஷல் கூறுகிறார். 'இவை ஒரு நிறுவனத்தின் அமைப்பு, நிர்வாகம், தொழில் நுட்பத் திறன் ஆகியவற்றைப் பொறுத்தவை.'

### (vi) புறச் சிக்கன நலன்கள் (External Economics)

ஒரு குறிப்பிட்ட தொழிலின் ஆலைகள் பல்வேறு ஊர்களில் நிறுவப்பட்டிருக்கலாம். கடற்கரைப் பட்டினமாயிருந்தால், கப்பல் போக்கு வரத்து வசதியும், இருப்புப் பாதை சந்திப்பு நிலையத்தின் அண்மையில் இருந்தால், ரயில் போக்குவரத்து வசதியும்

பல ஆலைகள் குழுமியிருக்கும் நகரில் இருந்தால், மூலப் பொருள் கொள் முதல் செய்வதிலும், இயந்திரங்கள் வாங்கப், பழுது பார்க்கக் கிடைக்கும் வசதியிலும், உற்பத்தியான பொருள்களை விற்க வசதியிலும், அந் நகரிலுள்ள ஆலைக்குப் பல நலன்கள் கிடைக்கும். இவ்விதமாக ஓர் ஆலையின் வெளிப்புறச் சூழ்நிலையால் உண்டாகக் கூடிய நலன்களைப் புறச் சிக்கன நலன்கள் என்று மார்ஷல் கூறுகிறார். இவை ஒரு தொழிலின் பொதுவான வளர்ச்சியினாலும், ஓர் இடத்தில் பல ஆலைகள் குழுமியிருப்பதாலும் (localisation) கிடைக்கக் கூடியவை.

(vii) பிற மாறா எடுகோள் (Caeteris paribus assumption)

அளிப்பு நிலை, தேவை நிலைச் சக்திகள் அங்காடியில் போட்டியிடுவதனால் பண்டங்களின் மதிப்பு நிர்ணயிக்கப்படும் என்னும் முடிவில் பல புறச் சக்திகள் மாறாமல் இருக்கின்றன என்ற எடுகோள் (assumption) அடிப்படையாக அமைகிறது. தேவைநிலையைப் பாதிக்கும் புறச் சக்திகள் பல உண்டு. மக்கள் தொகை வளர்ந்தாலும், மக்களின் வருமானம் பெருகினாலும், மக்களுக்கு ஒரு பண்டத்தில் உள்ள விருப்பம் மிகுதியானாலும் அப் பண்டத்தின் தேவை நிலை அதிகரிக்கும். இத்தகைய மாறுதல்கள் ஏற்படா என்ற எடுகோள் மார்ஷலின் மதிப்பு நிர்ணய ஆராய்ச்சிக்கு உயிர்நாடி போன்றது. மேலும் ஒரு பண்டத்தின் அடக்க விலை மாறாது என்பதை அடிப்படையாகக்கொண்டு மார்ஷல் தமது ஆராய்ச்சியை நடத்துகிறார். தொழில் நுட்ப அறிவு வளர்ச்சியினால் அடக்கவிலை குறையக்கூடும். இத்தகைய காரணங்களால் தேவை நிலையும் அளிப்பு நிலையும் மாறலாம் என்பதை மார்ஷல் அறிந்தவரே. இச் சலன சக்திகளை (dynamic forces) ஆராய்ச்சி சாலைக்குள் அனுமதித்தால், எளிய கேள்வியும் பெரும் சிக்கலாகிவிடும் என்ற அச்சத்தினாலேயே மார்ஷல், விஞ்ஞானிகள் வெளிப்புறத் தட்ப வெப்பநிலை, காற்று முதலியவை தங்கள் ஆராய்ச்சிக்கு ஊறு விளைவிக்காமல் இருக்க மணி ஜாடியை வைத்து மூடுவதுபோல், 'மற்றவை மாறாதிருக்கும் நிலை' என்னும் அருவப் பொருள் கருத்தைப் பயன்படுத்துகிறார் இதையே 'பிற மாறா எடுகோள்' (caeteris paribus assumption) என்று கூறுகிறோம். தமது ஆராய்ச்சியைப் பழுதின்றி இனிது முடிக்க இந்த எடுகோளைப் பயன் படுத்துகிறார் என்பதை நன்கு உணராமல், அவரை அசலனப் பொருளாதாரத்தில் (Static economics) ஈடுபட்டவர் என்று சிலர் குறை கூறுகின்றனர். இது தவறாகும்.

### (viii) நிலையில்லாத வாரம் (Quasi Rent)

மேற் கூறிய குறைபாடு இல்லை யென்பதைக் காட்டுவது போல் அமைகிறது மார்ஷலின் நிலையில்லாத வாரக் கோட்பாடு. முதல் உலகப் போர்க் காலத்தில் ஆங்கில நாட்டின் வணிகக் கப்பல்கள் நூற்றுக்கணக்காக ஜர்மானிய நீர்மூழ்கிக் கப்பல்களின் குண்டுகளுக்கு இரையாயின. அதனால் கப்பல்கள் தேவைக்கு மிகவும் குறைந்துவிட்டன. தேவைநிலை, அளிப்பு நிலைச் சக்தி களின் இயக்கத்தால் கப்பல் கூலி இயல்பான அளவை விட வெகு விரைவாக உயர்ந்தது. கப்பல் முதலாளிகள் பெரும் இலாபம் பெற்றனர்கள். இயல்புக்கு மிஞ்சிய இப் பெரும் இலாபம் என்றென்றும் நீடிக்கவில்லை. போர் முடிந்த பின் புதிய கப்பல்கள் நூற்றுக்கணக்கில் உற்பத்தியாயின. பழைய கப்பல்களுக்குக் கிடைத்த கூலி இறங்கி இயல்பான அளவை (normal rate) அடைந்தது. நெருக்கடியானதொரு குறுகிய காலத்தில் கிடைக்கும் இயல்புக்கு மிகுதியான, உபரி இலாபத்தை மார்ஷல் நிலையில்லாத வாரம் என்று குறிப்பிடுகிறார். நிலத்தின் வாரத்தைப் போல் அல்லாமல் நிலையற்றது இது. இம்மாதிரி குறுகிய காலங்களில் அளிப்பின் எதிர்பாராக் குறைவினால் உயரும் இலாபம், கூலி, வட்டி யாவற்றுக்கும் காரணம் நிலையில்லாத வாரம். பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டால், இலாபம், கூலி, வட்டி ஆகியவை இயல்பான நிலை (normal rate) எய்தும் என்பது மார்ஷலின் கூற்று.

### (ix) மாதிரி நிறுவனம் (Representative Firm)

மதிப்பு நிர்ணய ஆராய்ச்சியில் மார்ஷல் கையாண்ட புதிய கருவிகளில் ஒன்று மாதிரி நிறுவனம் ஆகும். இயல்பான விலை (normal price) என்ன என்ற கேள்விக்கு விடையளிக்கும் பொழுது, அது 'மாதிரி நிறுவனத்துக்குக் கிடைக்கும் விலை' என்று முதலில் கூறிவிட்டு 'மாதிரி நிறுவனம் என்பது என்ன வென்று விளக்குகிறார்' அது மிக்க பழைமைக்கும் மிக்க புதுமைக்கும் நடுவில் உள்ளது; முதியதும் அல்ல; இளையதும் அல்ல; மிகப் பெரியதும் அல்ல; மிகச் சிறியதும் அல்ல. அகச் சிக்கன நலன்களும் புறச் சிக்கன நலன்களும் அதற்கு அதிகமாகவும் கிடையாது குறைவாகவும் கிடையாது. நுட்பத் தொழில் முறையில் பொதுவாக அந்தத் தொழில் வளர்ச்சியைப் பொறுத்திருக்கும். அதனுடைய முயலுநர் இன்னொரு இயந்திரம் நிறுவவோ புதிய ஆக்க விரிவு செய்யவோ என்று யோசனையில் இருப்பார். இன்னொரு அலகு (unit) உற்பத்தி செய்வதற்காகும் செலவையும், அதனால் வரக்கூடிய இலாபத்தையும் பற்றிச் சிந்திப்பவராக இருப்பார்' இது ஒரு நீண்ட கருத்துரை. அப்படியிருந்தும் இந்த

மாதிரி நிறுவனம் நடைமுறையில் எங்கேயிருக்கிறதென்று கண்டுபிடிப்பது மிகவும் கடினம் என்று பின்ஞல் வந்த பொருளாதார அறிஞர்கள் இக் கருத்தில் குறை காண்கின்றனர்.

## (x) நாட்டு வருமானம் (National Income)

ஒரு நாட்டின் வளத்தை அளப்பதற்கு நாட்டு வருமானம் சிறந்த அளவுகோல். அது நாட்டின் செல்வத்தை விட நுட்பமாக அளக்கும் என்று மார்ஷல் கூறுகிருர். நாட்டின் வருமானத்துக்கு அவர் தரும் இலக்கணம் வருமாறு: 'ஒரு நாட்டின் உழைப்பாளர் சக்தியும் மூலதனமும் இயற்கை வளங்களைப் பயன்படுத்தி ஆண்டுதோறும் உருவப் பொருள்களாகவும் அருவப் பொருள்களாகவும் அஃதாவது பண்டங்களாகவும் சேவைகளாகவும் உண்டாக்குவதின் நிகரத் தொகுதி.' நிகரம் என்னும் அடைமொழி மிக்க அவசியமானது; அது இல்லாவிடில் கோதுமை, ரொட்டி இரண்டையும் கூட்டிச் சேர்த்துவிடுவோம். பருத்தி, துணி இரண்டையும் சேர்த்துக் கூட்டுவோம். ஆனுல் ரொட்டி கோதுமையிலிருந்தும், துணி பருத்தியிலிருந்தும் உண்டாக்கப்படுவதால் இந்தக் கச்சாப் பொருள்களை நீக்கியே நாட்டின் வருமானத்தைக் கணிக்கவேண்டும். இதைக் குறிப்பிடுகிறது நிகரம் என்ற சொல். மேலும் நாட்டின் வருமானம் ஒரு அசையா நிதி அல்லது கிட்டங்கியில் தேங்கிக் கிடக்கும் சரக்கு (Fund) அல்ல. அது ஒரு நீரோட்டம் (Flow) போன்றது. ஒவ்வொரு விஞடியும் அதிலிருந்து பண்டங்கள் எடுக்கப்பட்டுத் துய்க்கப்பட்டு அழிந்துவிடுகின்றன. அதே மாதிரி ஒவ்வொரு விஞடியும் மனித உழைப்பினுலும் ஆலைகள் முதலியன இயங்குவதனுலும் பண்டங்களும் சேவைகளும் அதனுள் சேர்ந்து கொண்டேயிருக்கின்றன. உற்பத்தியாவதும், பயன் துய்ப்பதுமாகப் பண்டங்கள், ஆக்குவோனிடமிருந்து நுகர்வோனை நோக்கி, சதா ஓடிக்கொண்டிருக்கின்றன. இந்த ஓட்டமே நாட்டின் வருமானத்தின் சிறப்பு இயல்பு.

### இதர கருத்துகள்

உளநூல் வழி ஆராய்ச்சியை மார்ஷல் மிகுதியாக மேற்கொண்டார். கணித முறைகளைக் கையாள்வது அவருக்கு மிக எளிதாயிருந்தும் அவை பொருளாதாரத்திற்கு இன்றியமையாதவை அல்ல என்று கருதி அவற்றை அவர் நூல்களில் அடிக் குறிப்புகளாகவும், பிற்சேர்க்கைகளாகவும் (appendices) ஒதுக்கியுள்ளார். இதற்கு இன்னெரு காரணமும் உண்டு. ஆடம் ஸ்மித்தின் நூல்போல யாவரும் எளிதில் உணருமாறு பொருளாதார நூல் எழுதவேண்டுமென்ற குறிக்கோள் ரிக்கார்டோவுக்கு

இருந்ததைப்போல மார்ஷலுக்கும் இருந்தது. ரிக்கார்டோ இம் முயற்சியில் படுதோல்வியுற்றார். மார்ஷல் பாதி வெற்றி கண்டார் எனக் கூறலாம். பொருளாதார வளர்ச்சியை ஆராயும் நூலே பொருளாதார அறிவியல். பொருளாதாரத்துறை மாறிய வண்ணமாகவே இருக்கிறது. மக்கள் தொகை, மக்களின் தேவை, ஆசை, விஞ்ஞானம், தொழில் நுட்ப அறிவு, பொருளாக்கு முறை வழி அனைத்தும் மாறிக்கொண்டும் வளர்ந்து கொண்டும் இருப்பதால் பொருளாதார இயல் வளர்ச்சியை ஆராய்வதில் தன் கவனத்தைச் செலுத்த வேண்டும் என்ற கருத்துக் கொண்டவர் மார்ஷல். குறுகிய காலம், நீண்ட காலம், மிகவும் நீண்ட காலம் என்ற பல கோணங்களிலிருந்து சிக்கல்களை ஆராயவேண்டிய அவசியத்தை உணர்ந்த அவர் பிறருக்கு வழி காட்டியாகவும் திகழ்கிறார்.

தொழில், வணிக அலுவலகங்கள் எப்படிச் செயலாற்றுகின்றன என்று அணு அணுவாகப் பிரச்சினைகளைப் பிரித்து அலசும் அணு நிலைப்பொருளாதார நிபுணர் மார்ஷல் என்று சிலர் கருதுகின்றனர். நாட்டு வருமானம் என்ற பகுதியில் பொருளாதார அண்டம் முழுவதையும் ஒரே நோக்கில் நோக்கி, அவர் ஆராயும் திறமையையும் அதற்கு அவர் காட்டும் அவசியத்தையும் காணலாம். எனவே அவரைக் கடுகைத் துளைத்துக் கொண்டிருப்பது போலப் பொருளாதாரச் செயல்களைப் பிரித்து நிறுவனம், உற்பத்தியாளன், நுகர்வோன் ஆகியோர் சமநிலை (equilibrium) எய்துகின்றனர் என்றே ஆராய்ந்திருக்கிறார் என்று கூறுவது தவறு.

### முடிவுரை

ஆல்பிரட் மார்ஷலுக்கு ஆண்டவன் நீண்ட ஆயுள் நல்கியிருந்தார். 'கொள்கைகள்' எனும் நூல் 1890-ல் பதிப்பான பின் 34 ஆண்டுகள், வாழ்ந்திருந்தார். அவர் வாழ்ந்திருந்த ஒரு தலைமுறைக் காலத்திலும், 1935ஆம் ஆண்டு வரை கூடப் பொருளாதார இயல் உலகில் தனிப் பேரரசு புரிந்த மேதை மார்ஷல். ஆங்கில நாட்டுப் பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் உள்ள பேராசிரியர்களில் நூற்றுக்கு ஐம்பது பேர் அவருடைய மாணவர்கள். அமெரிக்காவிலும் அவர் நூல்களும் அவர் கருத்துகளும் பேரளவில் ஆதிக்கம் செலுத்தின. கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம், பொருளாதார அறிஞர்களுக்கும் மாணவர்களுக்கும், காசி 'மெக்கா' போன்ற புண்ணியஸ்தலமாகப் பொலிவுற்று விளங்கியது. அவருடைய சிறந்த மாணவர்களாகிய ஏ. சி. பிகோ, ஜே. எம். கெயின்ஸ், டென்னிஸ் ராபர்ட்சன், திருமதி ஜோன் ராபின்சன் என்போர் உலகப் புகழ்பெற்ற அறிஞராயினர்

மார்ஷல் பொருளாதாரத்துக்கு மூன்று சிறந்த தொண்டுகள் புரிந்திருக்கிறார். (1) மார்ஷலின் செல்வாக்கு 1935 வரை நீடித்திருந்தது. சிறப்பாக 1921-க்கு மேல் அவர் சீடர்களும் ஏனையோரும் அவருடைய கருத்துகளிலிருந்து பல நூல்கள் உண்டாக்கினர். ஆதி மரத்திலிருந்து ஓடிய விழுதுகளும், கிளம்பிய கிளைகளும் பலப்பல, நிறை குறைப் போட்டிக் கொள்கை (Imperfect Competition), நாட்டு வருமான ஆராய்ச்சி (National Income Analysis), கணித வழிப் பொருளாதாரம் (Mathematical Economics), அசலனப் பொருளாதாரம் (Static Economics), சலனப் பொருளாதாரம் (Dynamic Economics), வளர்ச்சிப் பொருளாதாரம் (Growth Economics) போன்றவை முதன்மையானவை. புள்ளி விவரங்கள் (Statistics) ஆராய்ச்சிக்கு உயிர் நாடியாயின. பொருளாதாரம் ஒரு நாமம் ஒருருவம் என்றிருந்தது. பல நாமப் பல்லுருவமாகப் பரந்தது. எனினும் இக் காலப் பொருளாதார வல்லுநர் யாவரும் மார்ஷலைத் தங்கள் அன்புக்குரிய குருவாகவே மதித்து வருகின்றனர். இவ்வாறு தனிச் சிறப்பு வாய்ந்த மாபெருங் குருபரம்பரையைத் தோற்றுவித்தது முதல் தொண்டு ஆகும். (2) ராயல் பொருளாதாரக் கழகம் லண்டனில் நிறுவி அதன் வெளியீடாகிய பொருளாதார இதழ் (Economic Journal) ஒன்று தொடங்கியது இரண்டாவது தொண்டு ஆகும். (3) கேம்பிரிட்ஜ் பொருளாதாரக் குழுவை நிலைநாட்டிப் பொருளாதார இயலைத் தனிப்பாடமாகப் பல்கலைக் கழகங்களில் ஏற்படுத்தியது மூன்றாவது தொண்டாகும்.

மேற் கூறியவற்றாலும். அவருடைய உயர்ந்த நூல்களின் வாயிலாலும் மார்ஷலை மறுமலர்ச்சி பொருளாதார இயலின் தந்தையென (Father of Neo-Classical School) அன்புடன் அழைக்கின்றனர். 1935-ல் ஜே. எம். கெயின்ஸ் எழுதிய புரட்சிகரமான நூல் வெளி வருமுன் 'மார்ஷல் வாசகத்துக்கு மறுவாசகம் இல்லை' (All in Marshall) என்று கூறுமளவு உலகப் புகழ் பெற்றிருந்தவர் இந்த சாம்பவான் (Nestor of Economics). கலைமகளின் அடக்கத்தை இவர் இயல்பாகப் பெற்றிருந்தார். 'கற்றது கையளவு, கல்லாதது கடலளவு' என்று எண்ணம் அவர் மனத்தில் ஊறியிருந்தது. அவருடைய நூலைத் தம் திறமை மிக்க மாணவர்களுக்கு அன்பளிப்பாகத் தரும்பொழுது அவர் தம் கையெழுத்திட்டு எழுதும் ஆசிகள் அவருடைய வியக்கத் தக்க பணிவுள்ளத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டு : 'நீர் இந்த எனது நூலை மிக விரைவில் பழங்கதையாக்கி விடுவீர் (உமது புதிய கருத்துகளின் வன்மையால்) என்பது எனது நம்பிக்கை. அதற்கு எனது வாழ்த்து' என்பது அவர் பொறிக்கும் வாசகம்.

# 19. தேவைக் கோட்பாடும் சம நோக்குக் கோடு ஆய்வும்

## (Theory of Demand and Indifference Curve Analysis)

### முன்னுரை

சென்ற அதிகாரத்தில் பொருளாதார இயலின் வளர்ச்சிக்கும் ஒருமைப்பாட்டுக்கும் மார்ஷல் புரிந்துள்ள அரிய சாதனைகளில் பலவற்றைக் கண்டோம். அதில் குறிப்பிடாத சிலவற்றில் மார்ஷலின் தேவைக் கோட்பாடு—அதை வரைபடமாக்கினால் கிடைக்கும் ' கீழ்நோக்கிச் செல்லும் தேவைக்கோடு (downward sloping demand curve) உட்பட—முக்கியமானது. இதைப்பற்றிய விளக்கத்தை இந்த அதிகாரத்தில் எடுத்துக் கொள்வதில் ஓர் அனுகூலம் உண்டு. சமநோக்குக் கோடு ஆய்வின் விளக்கத்துக்கு அது ஒரு தோற்றுவாயாக அமைய மிகவும் பொருத்தமானது. தவிரவும், மார்ஷலின் தேவைக் கோட்பாட்டை முந்திய அதிகாரத்தில் விவரிக்காமற் போனமைக்குப் பிறிதொரு காரணமும் உண்டு. அந்த அதிகாரத்தில் விளக்கப்பட்டுள்ள மார்ஷலின் சாதனைகள் அனைத்தும் புடம்போட்ட பொன் போலப் பொருளாதார இயலில் முக்கியமான தத்துவங்களாகவும் ஆய்வுக் கருவிகளாகவும் நிரந்தரமாக இடம் பெற்றவை. ஆனால், தேவைக் கோட்டின் மேலோ 1934ஆம் ஆண்டிலிருந்து ஒரு கடும் விவாதம் எழுந்தது. அதன் விளைவாக அதற்கு ஒரு வழு கற்பிக்கப்பட்டது. அதற்கும் மேன்மையானதென்று ஒரு சாராரால் கருதப்படும் ஒரு புதிய தேவைக் கோட்பாடும் உருவாகியுள்ளது. அதை கிரமப் பயன்பாடு (ordinal utility), அடிப்படையில் வகுக்கப் பயன்பட்ட கருவி சமநோக்குக் கோடுகள் (indifference curves).

### சமநோக்குக் கோடுகள்

சமநோக்குக் கோடு அணுகு முறையைப் பொருளாதார இயலுக்குப் புத்தம் புதிய ஆய்வுக் கருவி என்று சொல்ல முடியாது. இதை முதலில் கண்டு பிடித்தவர் எப். ஒய். எட்ஜ்வர்த் (F. Y. Edgeworth, 1845-1926) என்னும் ஆங்கிலப் பொருளாதார இயலிஞர். ' கணித உளவியல் ' (Mathematical Psychies, 1881) என்னும் அவருடைய நூலில் அறிமுகப்படுத்தப்பட்ட சமநோக்குக் கோடுகள் ஐரோப்பிய நாடுகளில் பல அறிஞர்களால் கையாளப்பட்டுப் புகழடைந்தன. இத்தாலியப் பொருளாதார மேதை வில்ஃபிரட்டோ பாரிடோ (Vilfredo Pareto, 1848-1923) சமநோக்குக் கோடுகளைத் தமது நூல்களில் பல இடங்களில் விரிவாகப் பிரயோகித்துள்ளார். அடுத்து, பாரிடோவைப் பின்

பற்றியவர் ருசியப் பொருளாதார வல்லுநர் இ. ஸ்லட்ஸ்கி (E. Slutsky). ருசியப் பொருளாதார் இதழில் (Giornale degli Economistsi) இவர் எழுதிய 'துய்ப்போரின் சமநிலைக் கோட்பாடு' என்னும் கட்டுரையில் சமநோக்குக் கோடுகளைக் கொண்டு பயனுள்ள ஆராய்ச்சி செய்துள்ளார். எனினும் இக் கருவி அது பிறந்த நாட்டுக்கு 1930-க்குப் பின்னரே திரும்பி வந்தது. தாய் நாட்டில் அதற்கு விறுவிறுப்பான, நிலையான மறு வாழ்வு கொடுத்தவர்கள் ஆங்கில நிபுணர்களாகிய ஜே. ஆர். ஹிக்ஸும் (J. R. Hicks), ஆர். ஜி. டி. அல்லனும் (R. G. D. Allen) ஆகும். இவர்கள் எகானுமிகா (Economica, 1934) என்னும் ஏட்டில் எழுதிய 'மதிப்புக் கோட்பாட்டின் மறு பரிசீலனை' (A Reconsideration of the Theory of Value) என்னும் கட்டுரையில் சமநோக்குக் கோடுகளின் இலக்கணத்தையும் பயனையும் காணலாம். இதன் பின்னர், ஜே. ஆர். ஹிக்ஸின் 'மதிப்பும் முதலும்' (Value and Capital, 1939) என்ற புகழ் பெற்ற நூலில் முதல் 52 பக்கங்களுக்குள் சமநோக்குக் கோடுகளை இறுதிநிலைப் பயன்பாட்டுக்குப் பதில் உபயோகித்து நவீனத் தேவைக் கோட்பாட்டை (Modern Theory of demand) மிகவும் அருமையாக வகுத்து விளக்கியுள்ளார். இதன்பின் சமநோக்குக் கோட்டு அணுகுமுறை பொருளாதார நூலின் பல பிரிவுகளில் விரிவாகப் பிரயோகப்பட்டு வருகின்றது. இத்தனையும் கூறியபின், மாரஷலுக்கும் நியாயம் வழங்குவது நமது கடமையாகிறது. மார்ஷல் சமநோக்கு அணுகுமுறை தெரியாதவரில்லை என்பதற்கு அவருடைய 'தத்துவங்கள்' (Principles) என்னும் நூலில் அகச் சான்றுகள் உள்ளன என்பதைக் குறிப்பிடல் வேண்டும். அவர் எதற்காக இம் முறையை மேற்கொள்ளாமல், இறுதிநிலைப் பயன்பாட்டை அடிப்படையாக எடுத்துக் கொண்டார் என்பதற்கு நம்மால் காரணம் கூற இயலாது.

**மார்ஷலின் தேவைக் கோட்பாடு**

இனி மார்ஷலின் தேவைக் கோட்பாட்டின் இலக்கணம், எடுகோள்கள், முடிவுகள் ஆகியவற்றின் சாரத்தை மட்டும் காட்டிவிட்டு மேல் செல்வோம். 'விலை குறையின், தேவை மிகும், விலை மிகின் தேவை குறையும்' என்ற மார்ஷலின் தேவைக் கோட்பாடு இறுதிநிலைப் பயன்பாட்டின் அடிப்படையில் எழுப்பப்பட்ட ஒரு கட்டுக்கோப்பு எனலாம். அப்படி எழுப்பிய கட்டடத்தில் பல எடுகோள்களைச் செங்கல்களாகக் காண்கிறோம். அவையாவன :

(1) பயன்பாட்டை எண்ணளவில் துல்லியமாக அளக்க முடியும் ; ஒரு ரொட்டியின் பயன்பாட்டை 10 அல்லது 15 அலகுகள் (units) என்று கூறமுடியும் என்பது மார்ஷலின் எடுகோள்.

இப்படிக் கூறுவதை எண்ணளவுப் பயன்பாடு (Cardinal utility) என்று மொழிவது மரபு.

(2) எண்ணளவுப் பயன்பாட்டைப் பணம் என்னும் அளவு கோலால் அளக்க முடியும்.

(3) பணத்தின் இறுதிநிலைப் பயன்பாடு மாருமல் ஒரே நிலையில் (Constant) இருக்கும்.

(4) இரு வேறு பண்டங்களின் பயன்பாடுகளை ஒப்பு நோக்குதல் சாத்தியமே. ஒரு கோப்பைத் தேநீர், ஒரு தினசரி ஏடு ஆகிய இரண்டின் பயன்பாடுகளை ஒன்றை விட மற்றது இரண்டு அல்லது $2\frac{1}{2}$ மடங்கு என்று ஒப்பிட்டுக் கூறமுடியும் என்பது இதன் பொருள்.

(5) ஒரே பண்டத்தை நுகர்வதில் இரண்டு பேர்கள் என்னென்ன அளவுப் பயன்பாடு பெறுவர் (inter-personal comparison) என்ற ஒப்பு நோக்கவும் முடியும்.

இம் மாதிரி எடு கோள்களின் ஆதரவில் மார்ஷல் வகுத்த தேவைக் கோட்பாட்டின் முடிவுகள் வருமாறு :

(1) ஒரு பண்டத்தின் விலை அதனுடைய இறுதிநிலைப் பயன் பாட்டைப் பொறுத்திருக்கும்.

(2) ஒரு பண்டத்தை அலகு, அலகாக ஒருவன் துய்க்கும் பொழுது, குறைந்த செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதி (Law of diminishing marginal utility) செயல்படும். இதிலிருந்து வரும் துணை முடிவு விலை குறையின் தேவை மிகும். இதையே வரை படமாக்கினுல், தேவைக் கோடு கீழ் நோக்கிச் செல்லும் என்பது புலனுகும்.

(3) பண்டங்களின் விலைகள் அவற்றின் இறுதிநிலைப் பயன் பாடுகளின் வீதாசாரத்தில் அமையும்.

(4) குறைந்த செலவில் உயர்ந்த அளவில் பயன்பாடு பெறு வதற்கு, ஒருவன் வாங்கும் பண்டங்களின் இறுதிநிலைப் பயன் பாடுகள் சமமாயிருத்தல் வேண்டும் (equimarginal utility)

### கிரமம் பயன்பாடு (Ordinal Utility)

மேற் கூறியவாறு வகுக்கப்பட்டுள்ள மார்ஷலின் தேவைக் கோட்பாட்டை, ஜே. ஆர். ஹிக்ஸ் பல குற்றங் குறைகளைக் காட்டிக் கடுமையாகத் தாக்கினுர். ஹிக்ஸ் வீசிய குண்டுகளால் மார்ஷலின் எடுகோள்களாகிய செங்கல்கள் பல நொறுங்கின. முதலில் எண்ணளவுப் பயன்பாடு என்னும் கருத்து ஹிக்ஸின் குண்டுக்குப் பலியாயிற்று. பயன்பாடு என்பது ஒரு திருப்தி யளிக்கும் சக்தி. எவ்வளவு திருப்தி அடைகிருன் என்பதை

துய்ப்பவனின் உள்ளத்தினுள்ளே நிகழும் ஒரு நிகழ்ச்சியிலிருந்து தீர்மானிக்க வேண்டியதிருக்கிறது. எக்ஸ்ரே படமோ, உள வியல் தத்துவங்களோ இதைக் கண்கூடாகக் காட்ட இயலாது. எனவே பயன்பாட்டைத் திட்டவட்டமாக எண்ணளவில் அளப்ப தென்பது சாத்தியப்படாது. பயன்பாடுகளை ஒன்றைவிட மற் ரென்று 'சிறிது அதிகம், சிறிது குறைவு' (more or less) என்று வேண்டுமானால் அனுமானிக்க முடியுமே யொழிய, எவ்வளவு அதிகம், எவ்வளவு குறைவு என்று தீர்மானமாகக் கூற முடியாது. தேன், பால், இளநீர் என்பனவற்றின் பயன்பாடுகளை வரிசைக் கிரமப்படுத்தி மிகவும் அதிகமானது, அதிகமானது குறைவானது என்று கூறலாம். துய்ப்போன் தனது திருப்தியை முதலாவது தேன், இரண்டாவது பால், மூன்றாவது இளநீர் என்று அவனது மனோநிலைக்குகந்தவாறு கூறமுடியும். ஆனால், தேன் பாலைவிட 2 அல்லது 3 மடங்கு பயன்பாடுடையது. பால் இளநீரைவிட 5 மடங்கு பயன்பாடுடையது என்று கணக்குப்போட்டு விடை யளிக்க முடியாது என்று ஹிக்ஸ் வாதிக்கிறார். இவர் இவ்வாறு கூறுவதைக் கிரமப் பயன்பாடு (Ordinal Utility) என்று மொழி வது மரவு. ஹிக்ஸ் கையாளும் முறைக்குக் கிரமப் பயன்பாட்டு முறையென்று பெயர்.

அடுத்தபடியாகப் பணத்தின் இறுதிநிலைப் பயன்பாடு மாறா திருக்கும் என்ற எடுகோளை ஹிக்ஸ் ஒப்புக்கொள்ளவில்லை. இது நடைமுறை அனுபவத்துக்கு முற்றும் மாறானது; எனவே அதன் ஆதாரத்தில் தேவைக் கோட்டை வரைவதில் குறைபாடு உளது என்பது ஹிக்ஸின் கருத்து. கடைசியாக இருவருக்குள் பயன் பாட்டை நுகர்ந்து அடையும் அவர்களது திருப்தி, மகிழ்ச்சி களையும், இரண்டு பண்டங்கள் (எ. கா. தினசரி ஏடு, மாங்கனி) நல்கும் பயன் பாடுகளையும் ஒப்பிட்டுக் கணக்குப்போட்டால் தான்தோன்றியான, நிச்சயமில்லாத (arbitrary and uncertain) விடைகள் தாம் கிடைக்கும் என்ற கருத்தைத் தற்காலப் பொருளா தார நிபுணர்கள் அனைவரும் ஒப்புக்கொள்வர். எனவே, இந்த எடுகோள்களும் சரியல்ல என்பது ஹிக்ஸின் கூற்று.

## தூயப் பொறுக்குதல் கோட்பாடு (Pure theory of choice)

இத்தனை குறைகளைச் சுட்டிக் காட்டிய ஹிக்ஸ் தேவைக்கோடு வகுப்பதற்கு (1) பண்டங்களின் இறுதிநிலைப் பயன்பாடு (2) பணத்தின் மாறாத இறுதி நிலைப் பயன்பாடு (3) இரு வேறு நிலைகளை ஒப்பிட்டு நோக்கிக் கணக்கெடுத்தல் என்ற எடுகோள் களில் ஒன்றின் தயவும் வேண்டாம் என்கிறார். இவையனைத் தையும் ஒதுக்கிவிட்டுச் சமநோக்குக் கோடு அணுகு முறையில்

தேவைக் கோட்பாட்டை ஹிக்ஸ் வகுத்துக் காட்டியுள்ளார். பயன்பாட்டை அளந்து காட்டாமல், துய்ப்போன் எவ்விதம், என்னென்ன அளவில் பல்வேறு பண்டங்களைப் பொறுக்கி வாங்கி, நுகர்ந்து உயர்ந்த அளவு திருப்தி யடைவான் என்பதைக் கண்டு பிடிப்பதில் ஹிக்ஸ் முனைகிருர். இந்தக் கண்டு பிடிப்பின் குறிக்கோள் ஒரு தூயப் பொறுக்குதல் கோட்பாட்டை (Pure theory of choice) வகுப்பதாகும். இம் முயற்சிக்குச் சம நோக்குக் கோடுகள் ஹிக்ஸின் ஆய்வுக் கருவிகளாக அமைகின்றன. இவற்றின் இலக்கணத்தை இனி நோக்குவோம்.

### சமநோக்குக் கோடுகள்—இலக்கணம்

ஒருவன் *x*, *y* என்ற இரண்டு பண்டங்களைப் பல்வேறு வீதாசாரத்தில் துய்க்கிருன் என்று வைத்துக்கொள்வோம். அப் பல்வேறு பொட்டலங்களில் சிலவற்றை மிகவும் விரும்புவான் (preference). மற்றும் சிலவற்றின்மேல் மிகக் குறைவான விருப்பம் இருக்கக்கூடும். மீதமுள்ள பொட்டலங்களிலிருந்து ஒரே அளவு திருப்தி அடைவதாக வைத்துக்கொண்டால், அவற்றினுள் ஒன்றைப் பொறுக்கியும் மற்ருென்றை ஒதுக்கியும் தள்ளாமல், அனைத்தையும் ஒரே சமநோக்குடன் (indifference) விரும்புகிருன் என்பது பொருள். எ.கா., 4 இட்லியும் ஒரு வடையும் ஒரு பொட்டலம்; 3 இட்லியும் 2 வடையும் மற்ருெரு பொட்டலம். துய்ப்போன் எந்தப் பொட்டலமானுலும் சரிதான் என்று சொல்லும் மனப்பான்மை. இதையே சம நோக்கு என்று கூறுவர். ஹிக்ஸ் இதற்குள்ள புள்ளி விவர அட்டவணைகள் தொகுக்கலாம் என்கிருர். கீழே காட்டியுள்ள முதல் வரிசைப் பொட்டலங்கள்


| (1) | (2) |
|---|---|
| $10x + 1y$ | $12x + 2y$ |
| $8x + 3y$ | $10x + 4y$ |
| $5x + 4y$ | $8x + 6y$ |
| $3x + 6y$ | $5x + 10y$ |
| $1x + 8y$ | $3x + 13y$ |

யாவையும் ஒரே சம நோக்குடன் துய்ப்போன் விரும்புகிருன்; அதேபோல், இரண்டாம் வரிசைப் பொட்டலங்களையும். ஆனுல், 2-ஆம் வரிசையிலுள்ள பொட்டலங்கள் ஒவ்வொன்றிலும், முதல்

PUBLIC

வரிசைப் பொட்டலங்களை விட அதிகம் $x$-ம் $y$-ம் உள்ளன. எனவே துய்ப்போன் ஒரு முதல் வரிசைப் பொட்டலத்துக்குப் பதில் ஒரு 2ஆம் வரிசைப் பொட்டலத்தையே விரும்புவான். (preference காட்டுவான்) ஆனால், ஒவ்வொரு வரிசையிலுமுள்ள பொட்டலங்களிடையே சம நோக்கு (indifference) விருப்பம் நிலவும்.

இப் புள்ளி விவரங்களைக் கொண்டு ஒரு வரைபடத்தில் வளை கோடுகள் வரையின், அவையே சம நோக்குக் கோடுகள் ஆம். முதல் வரிசைப் புள்ளிகளை வைத்து வரைந்த வளைகோட்டைச் சம நோக்குக் கோடு (1) எனவும் இரண்டாவது வரிசைப் புள்ளிகளை வைத்து வரைந்ததைச் சமநோக்குக் கோடு (2) எனவும் கூறுவோம். பின்னது முன்னதிற்கு வலது புறம் அதன் இணை கோடு மாதிரிச் செல்வதைக் காண்க (வரைபடம் 19·1). இம்மாதிரி





வரை படம் 19·1

அதிக $x$-ம் அதிக $y$-ம் சேர்ந்துள்ள சமநோக்குப் பொட்டலங்களை வைத்து மேலும் ஒரு சமகோடு (3) வரையலாம். $x$-ம் $y$-ம் கூட்டி அல்லது குறைத்துச் சம நோக்குக் கோடுகள் பலவற்றால் வரைபடம் முழுவதையும் நிரப்பிவிடலாம் என்பது புலனாகும். இச் சமநோக்குக் கோடுகள் அனைத்தும் கீழ் நோக்கிச் செல்பவை; ஒன்றையொன்று வெட்டிக்கொண்டு குறுக்கே செல்லாதவை.

புதிய தேவைக் கோட்பாடு

சம நோக்குக் கோடுகளின் சிறப்பு அம்சங்களை இவ்வாறு விளக்கிவிட்டு, ஹிக்ஸ் அவற்றிலிருந்து தேவைக்கோடு வரைவது எவ்வாறு என்று காட்டுவதற்கு வரைபடம் 19·2-ஐ உபயோகிக்கிறார். இதில் *OA* என்பது துய்ப்போனின் வருமானத்தைக் காட்டும். *OA* பணம் முழுவதையும் *x* வாங்குவதில் செலவிடின், (அது அங்காடியில் விற்கும் விலையில்) துய்ப்போன் *OB* எண்கள் *x* வாங்க முடியும் என்பதை *B* என்னும் புள்ளி காட்டுகின்றது. இதில் *AB* என்னும் கோட்டுக்கு விலைக்கோடு (price




வரைபடம் 19·2

line) அல்லது பட்ஜட் கோடு (budget line) என்று பெயர். *AB*-யிலுள்ள ஒவ்வொரு புள்ளியும் ஒரு *x*, *y* சேர்ந்த பொட்டலத்தைக் குறிக்கும். *AB* இரண்டு இடங்களில் சமநோக்குக் கோடு (1)-ஐ வெட்டிச் செல்வதையும், சமநோக்குக் கோடு (2)-ஐ *E* என்னும் இடத்தில் தொட்டுத் தொடுகோடு (tangent) ஆகச் செல்வதையும் காணலாம். சமகோடு (2) அதிகத் திருப்தியளிக்கும் கோடு ஆனதால், துய்ப்போன் தனது வருமானத்தில் *x* வாங்குவதை *E* என்னும் புள்ளி காட்டும் தொகையளவுக்கு வாங்குவான். அதாவது *ON* அளவு பணத்தைச செலவிட்டு *OM* எண்கள் *x* வாங்குவான்

அடுத்தபடியாக $x$-ன் விலை குறைந்து விடுவதாகக் கொள்வோம். அவனுடைய வருமானம் முழுவதும் $x$ வாங்குவதில் செலவிடப்பட்டால், $OC$ எண்கள் $x$ இப்பொழுது வாங்க முடியும் என்றால், $AC$ புதிய விலைக்கோடாக அமையும். $AC$, சமகோடு (3)க்கு $F$-ல் தொடுகோடாகச் செல்கிறது. எனவே $x$-ன் விலை வீழ்ச்சிகுப்பின், துய்ப்போன் வாங்கும் $x$ எண்கள் $OP$, செலவிடும் பணம் $OQ$ என்றாகும். $x$-ன் விலை மாறுவதைக் காட்ட, $A$-ஐ மையமாக வைத்து $AB$, $AC$ என்பனபோல் கடிகாரமுள்ளைப் போல் சுழற்றினால், $x$-ன் விலைக்கு ஏற்றபடி வாங்கும் அளவுகளைக் காட்டும்படி பல கோடுகள் $AD$, $AE$ என்று வரைந்து கொண்டே போகலாம். ஒரு வரிசையில் விலையும் மற்றொரு வரிசையில் வாங்கும் பண்டத்தின் அளவும் காட்டும் அட்டவணை கிடைத்தால் தேவைக்கோடு வரைய முடியும் என்பது நமக்குத் தெரியும். அத்தகைய அட்டவணைக்கு வேண்டிய புள்ளி விவரங்களை ஹிக்ஸ் கீழ்க்கண்டவாறு சேகரிக்கலாம் என்று காட்டுகின்றார்.

| விலை | பண்டத்தின் தேவை அல்லது வாங்கும் அளவு |
|---|---|
| $OA \div AB$ | $OM$ |
| $OA \div AC$ | $OQ$ |

மேற்கண்டவாறு விலைகளின் மாற்றத்துக்கு ஏற்றவாறு பல புள்ளி விவரங்களைத் திரட்டலாம். அவற்றைக்கொண்டு ஒரு தனி வரை படத்தில் ஒரு தேவைக்கோடு வரையலாம். இறுதிநிலைப் பயன்பாடு என்னும் கருத்தை ஓரிடத்திலும் நுழைக்காமல், அதன் உதவி சார்பு ஒன்றுமின்றி வரையப்பட்டிருப்பது இத் தேவைக் கோட்டின் தனிச் சிறப்பு.


### சமநோக்குக் கோடு அணுகு முறையின் சிறப்புகள்

இச் சம நோக்கு அணுகு முறைக்கு மேலும் சில சிறப்புப் பண்புகள் உண்டென்று ஹிக்ஸ் காட்டுகின்றார்.

### பதிலீடும் நிறைபாடும் (Substitution and Complementarity)

இரண்டு பண்டங்களுக்கிடையேயுள்ள பதிலீடு, நிறைவுபாடு தொடர்புகளைச் சமநோக்குக் கோடுகள் விளக்குவது போல்

இறுதிநிலைப் பயன்பாட்டு முறை விளக்க இயலாது. அரிசியும் கோதுமையும் பதிலிகள்; காப்பியும் தேநீரும் மற்றொரு இணைப் பதிலிகள்; ரூபாயும், 50 காசு நாணயமும் பூரணப் பதிலிகள் (perfect substitutes). 1 : 2 என்ற வீதாச்சாரத்தில் ரூபாயையும், 50 காசு நாணயங்களையும் ஒருவன் சமநோக்குடன் தான் விரும்புவான் என்பதில் ஐயமில்லை. இவற்றை வைத்து ஒரு சமகோடு படம் வரைந்தால், அதில் சமநோக்குக் கோடுகள் நேர்க் கோடுகளாக இருப்பதைக் காணலாம் (வரைபடம் 19·3) சமகோடு (1)-ல்





வரைபடம் 19·3

காட்டப்படும் பணத் தொகை, சமகோடு (2)-ல் காட்டப்படும் பணத்தொகையைவிடக் குறைவு என்பதைப் புரிந்து கொள்ளலாம். பூரணப் பதிலிகளின் சமநோக்குக் கோடுகள் நேர் கோடுகளாகத்தாம் இருக்கும் என்பது இவ் வரை படத்தின் பாடமாகும்

மோட்டாரை ஓட்டப் பெட்ரோல் அவசியம். காப்பியைச் சுவைக்கச் சர்க்கரை அவசியம். பெட்ரோலும், சர்க்கரையும் நிறைவு பாடு செய்யும் பண்டங்கள் (complementary goods) என்பது தெரிந்த விஷயம். வலக்கால், இடக்கால் மிதியடிகள் பூரண நிறைபாட்டுப் பொருள்கள் (perfect complementary goods); ஒன்றின் பயனைத் துய்க்க மற்றொன்று இன்றியமையாதது. இவையிரண்டையும் வைத்துச் சமநோக்குக் கோடுகள்

வரைந்தால் அவை 'L' வடிவததில் செல்லும் (வரைபடம் 19·4) என்பது இவ்வரை படம் அறிவிக்கும் பாடமாகும்.

பூரணப் பதிலிகளுக்கும் பூரண நிறைவு பாட்டுப் பொருள் களுககும் இடையே பல்வேறு வகைப் பதிலிகளும் நிறைப்பாட்டுப் பொருள்களும் இருக்கின்றன. அவற்றின் சமநோக்குக் கோடுகள் *O*-ஐப் பார்த்துக் குவிந்து, வலப் புறம் கீழ் நோக்கி செல்லும் வளைகோடுகளாக அமையும் (வரை படம் 1-ஐப் பார்க்கவும்). இக்




வரைபடம் 19·4

கோடுகள் கற்பிக்கும் பாடம் யாதெனில், துய்ப்போன் கைவசம் *y*-ன் அளவு அதிகரிக்க அதிகரிக்க, அவன் அதிகப்படியான *y*-அலகுகளை ஒரு அலகு *x*-க்குப் பரிவர்த்தனை செய்து வாங்க விருப்பமுடையவனுயிருப்பான். *y*-ன் மதிப்புக் குறைந்து செல்வது தான் இதன் பொருள். இத் தன்மையைக் குறைந்து செல் பதிலீட்டு விகிதம் (diminishing rate of substitution) என்று கூறுவர்.

**வருமான விளைவும் (Income effect), பதிலீட்டு விளைவும் (Substitution effect)**

வருமானம் உயர்ந்தால் துய்ப்போன் அவன் வழக்கமாக வாங் கும் பண்டங்களைப் பொதுவாக அதிக அளவில் வாங்குவான் என்பதை உணரமுடியும். மாத வருமானம் ரூ. 250.00-லிருந்து

ரூ. 400-00 ஆக உயரின் ஒருவன் வாங்கும் நெய் 3-லிருந்து 5 கிலோ கிராமாக அதிகமாகும். இதற்கு வருமான விளைவு (income effect) என்று பெயர். அடுத்தாற்போல் ஒரு பண்டத்தின் விலை குறையுமானால் துய்ப்போன் முன்னைவிட அதை அதிக அளவில் வாங்குவான். கோதுமை ஒரு லிட்டர் ரூ. 1-20-லிருந்து 80 பைசா வானால், ஒரு குடும்பத் தலைவன் மலிவான கோதுமையை அதிகப் படியாக 6 லிட்டர் வாங்கிக் கொண்டு, அரிசி வாங்குவதில் 5 அல்லது 6 லிட்டரைக் குறைத்துக் கொள்வான். இத்தகைய செய லுக்குப் பதிலீட்டு விளைவு (substitution effect) என்பது பெயர். மார்ஷல் தமது தேவைக் கோட்பாட்டில் பதிலீட்டு விளைவுக்கு மட்டும் மிக முக்கிய இடம் அளித்தார். ஆனால் ஹிக்ஸின் தேவைக் கோட்பாட்டில் பதிலீட்டு விளைவுக்கும் வருமான விளைவுக்கும் சமமான முக்கியத்துவம் அவர் கொடுத்துள்ளார். அத்துடன், விலையின் விளைவு (Price effect) என்பது வருமான விளைவு, பதி லீட்டு விளைவு ஆகிய இரண்டின் கூட்டு விளைவு என்பதைச் சமநோக்கு கோட்டு அணுகு முறையின் வாயிலாக மிகவும் தெளிவாக விளக்கியுள்ளார்.

இக் கட்டத்தில் மார்ஷல் ஏன் வருமான விளைவை விளக் காது விட்டார் என்ற கேள்வி பிறக்கிறது. பொதுவாகத் துய்ப் போன் விலை இறக்கத்தினால் தூண்டப்பட்டு மலிவான பண் டத்தை வாங்கும் பொழுது கிடைக்கும் லாபம் மிகக் குறைந்த அளவிலேயே இருக்கும். கடுகு விலை அங்காடியில் பாதியாகக் குறைந்து விட்டதெனக் கொள்வோம். துய்ப்போன் அதை வாங்கும் பொழுது அடையும் லாபம் 50 பைசாக்கூட இருக்காது. ஏனெனில் அவன் விலை குறையுமுன் ஒரு மாதத்துக்குக் கடுகுக் காகச் செலவழித்தது ஒரு ரூபாய் கூட இருந்ததில்லை. அவ னுடைய மாத வருமானம் ரூ. 300 என்றால், இந்த 50 பைசா இலாபம் அவன் வருமானத்தில் 1/600, அதாவது குறிப்பிடத்தக்க தொன்றல்ல. ஆனால், துய்ப்போன் தனது வருமானத்தின் பெரும் பகுதிகளைச் செலவிடுவான். இவைகளின் விலை வீழ்ச்சி வருமானம் அதிகமாகும் உணர்வை ஏற்படுத்தும். அரிசி அல் லது பாலின் விலை வீழ்ச்சியும் வீட்டு வாடகை வீழ்ச்சியும் இதற்கு ஏற்ற எடுத்துக்காட்டுகள். இவற்றின் விலையும் கணிச மான அளவு குறைந்தால்தான் துய்ப்போனுக்கு உண்மை (real) வருமான உயர்வு கிட்டும். பொதுவாக இத்தகைய நிகழ்ச்சி அபூர்வமாகத்தான் நடக்கும். எனவே மார்ஷல் வருமான விளை வுக்குச் சிறப்பிடம் அளிக்கவில்லை. இதை ஹிக்ஸும் ஒப்புக் கொள்கின்றார். எனினும் இலாபம் சிறிதாயினும் பெரிதாயினும், அது இலாபமே; வருமானம் அந்த அளவுக்கு உயரும்; அதை

அறிவியல் ஆராய்ச்சியில் குறிப்பிட வேண்டியது அவசியம். இந்த வகையில் ஹிக்ஸின் விளக்கம் மேன்மையடைகிறது.

**வருவாய் - துய்ப்பு வளைகோடும், விலை துய்ப்பு வளைகோடும் (Income-Consumption Curve and Price-Consumption Curve)**

சம நோக்குக் கோட்டு அணுகு முறையின் விளக்கம் முற்றுப் பெறுமுன், ஹிக்ஸ் வரைந்து காட்டும் இரண்டு விதமான வளை கோடுகளை விவரமாக விளக்காவிட்டாலும் குறிப்பிடவாவது வேண்டும்: (1) வருவாய் - துய்ப்பு வளை கோடு என்பது துய்ப் போனின் விருப்ப வெறுப்புகளில் யாதொரு மாறுதலுமின்றி, வருவாய் மட்டும் வளர்ந்து செல்லுமானால், ஒரு துய்ப்போன் அவன் ஆதியில் வாங்கிவந்த பண்டத்தைப் பல வளர்ச்சிக் கட் டங்களில் எந்த அளவில் வாங்குவான் என்று காட்டும் கோடு. (2) விலை – துய்ப்பு வளைகோடு என்பது துய்ப்போனின் விருப்பு வெறுப்புகள் யாதொன்றும் மாருமலிருக்கும்பொழுது, ஒரு பண்டத்தின் விலை மட்டும் ஏறவும் இறங்கவும் செய்தால், துய்ப் போன் அப் பண்டத்தை என்னென்ன அளவுகளில் பல்வேறு விலைகளில் வாங்குவான் என்று காட்டும் வளைகோடு. இக் கோடுகள் பயனுள்ள ஆய்வுக் கருவிகள்.

**தேவைக் கோடு வலப்புறம் கீழ்நோக்கி மட்டும்தான் செல்லுமா ?**

தேவை வளைகோடு (Demand curve) கீழ்நோக்கிச் செல்லும் என்ற மார்ஷலின் கூற்றை ஹிக்ஸ் ஒப்புக் கொள்ளவில்லை. வருமானம் மிகும்பொழுது துய்ப்போன் மட்டரக அல்லது கிஃபன் பண்டங்களை (Inferior or Giffen goods - பீடி, கேழ்வரகு, முரட்டு நூல் வேட்டி), முந்தி வாங்கிய அளவை விடக் குறைவாகவே வாங்குவான் என்பதற்கு மிகுந்த விளக்கம் தேவையில்லை. வருமானம் மிகுந்த பின், அந்தஸ்தும் பெருமையளிக்கும் பண்டங்களாகிய விலையுயர்ந்த சிகரட், நெல்லூர் அரிசி, ஃபின்லே வேட்டி முதலியவற்றை வாங்குவான் என்பதை யாவரும் அறிவர். இம் மட்டரகப் பொருள்களின் விலை குறையினும், வாங்கப்படும் அளவு கூடாமலிருப்பதுமன்றிக் குறைந்தும் விடும். அப்படி யானல் வலப் பக்கமாகக் கீழ்நோக்கிச் செல்லும் தேவைகோடு இடப் புறம் திரும்பிச் செல்லும். இதற்கு கிஃபன் விளைவு (Giffen effect) என்று பெயர். இச் செயலை மார்ஷல் தேவை வளை கோட்டின் விதி விலக்காகக் கொண்டாரே யொழிய, ஒரு தனி விளக்கம் தேவையென்று நினைத்தாரில்லை. ஹிக்ஸ் இவ் விளக்கத்தைத் தந்திருப்பது அவருடைய தேவைக் கோட் பாட்டுக்குக் கிடைக்கும் மற்றொரு சிறப்பு.

**சமநோக்குக் கோடுகளின் பிரயோகங்கள்**

சமநோக்குக் கோடுகள் 1939-க்குப் பின் பொருளாதார நூலில் பல பிரிவுகளில் பல இடங்களில் பல்வேறு விளக்கங்களுக்கு ஆய்வு கருவிகளாகப் பயன்படுகின்றன. எடுத்துக்காட்டாகச் சிலவற்றைப் பார்ப்போம். ஒரே அளவுப் பணப் பளுவுள்ள (money burden) வருமான வரியையும், ஆயத் தீர்வையையும் ஒப்பிட்டு வரி செலுத்துவோன் நலம் எப்படி, எதனால் அதிகமாகப் பாதிக்கப்படும் என்ற கேள்விக்குச் சமநோக்கு கோட்டு அணுகு முறை, நேர்த்தியான வழியில், சரியான விடை காண உதவுகின்றது. தற்கால அரசுகள் வறியோர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடப் பல வழிகளில் உதவிக் கொடை (Subsidy) அளித்து வருகின்றன. வீட்டு வசதி, உணவு தானியம், மருத்துவம், மருந்துகள் முதலியனவற்றிற்கு வழங்கப்படும், உதவிக்கொடை, அவற்றால் கிடைக்கும் நன்மையின் பண மதிப்பை (Money Value) விட அதிகமாகவே யிருக்கும் என்பதையும் சமநோக்குக் கோடுகள் மூலம் நிருபிப்படுத்தலாம். மேலும் பன்னாட்டு வணிகம், நலப் பொருளாதாரம் முதலிய பகுதிகளிலும் சமநோக்குக் கோட்டு அணுகு முறை விரிவாகப் பிரயோகப படுவதைக் காண்கிறோம்.

**முடிவுரை**

எண்ணளவுப் பயன்பாட்டு முறை, இறுதிநிலைப் பயன்பாட்டை (marginal-utility). அடிப்படையாகக் கொண்டது என்பதைப் பார்த்தோம். கிரமப் பயன்பாட்டு (ordinal utility) முறை சமநோக்குக் கோடுகளை ஆய்வுக் கருவிகளாகக் கொண்டது; பயன்பாட்டைத் துல்லியமாக அளக்காமல், பணத்தின் இறுதிநிலைப் பயன்பாடு மாறாதிருக்கும் என்ற எடுகோள்களின்றித் தேவைக் கோட்பாட்டை வகுக்கின்றது என்பதையும் புரிந்துகொண்டோம். கிரமப் பயன்பாட்டு முறையில் கையாளப்படும் எடுகோள்கள் குறைவு ; ஆனால், அதன் முடிவுகளில், வருமான விளைவு பற்றிய கருத்தும் தேவைக்கோடு வலதுபுறமாகக் கீழ்நோக்கித்தான் செல்லும் என்பதற்கு மறுப்பும் புதிய கருத்துகள் ஆகும். இந்த அளவுக்குக் கிரமப் பயன்பாட்டு முறை எண்ணளவு பயன்பாட்டு முறையைவிட மேலானது என்பதை யாவரும் இக் காலத்தில் ஒப்புக்கொள்கின்றனர். ஆனால் முன்னது பின்னதைவிட கோட்பாட்டின் அடிப்படையில் நேரடியான மாறுதலை (a positive change in the foundation of the theory) உண்டு பண்ணுகிறது என்பது ஹிக்ஸின் வாதம். இதைப் பலர் ஒப்புக்கொள்ளவில்லை.

இவ்விரண்டு முறைகளுக்குமிடையே தோற்றமளவில் தவிர ஆழ்ந்த வேற்றுமையொன்றுமில்லை; கிரமப் பயன்பாட்டு

முறையை எண்ணளவுப் பயன்பாட்டு முறையுடன் ஒப்பு நோக்கின், 'பழைய மது, புதிய ஜாடி' என்ற வகையில்தான் அவை வேறுபடுகின்றன என்பது ஜே. ஏ. ஷும்பீடர் என்னும் தற்காலப் பொருளாதார மேதையின் கருத்து. இதை உறுதிப்படுத்தும் வகையில் அவர் கூறுவதாவது: இறுதிநிலைப் பயன்பாட்டுக்குப் (marginal utility) பதில் இறுதிநிலைப் பதிலீட்டு வீதமும் (marginal rate of substitution), குறைந்துசெல் இறுதிநிலைப் பயன்பாட்டுக்குப் (diminishing marginal utility) பதில் குறைந்து செல் இறுதிநிலைப் பதிலீட்டு வீதமும், செயல்படுவதைக் கிரமப் பயன்பாட்டுமுறையில் காண்கிறோம். கடைசியாக எண்ணளவுப் பயன்பாட்டு முறைப்படி இரண்டு பண்டங்களின் விலைகளின் வீதம் (ratio) அவற்றின் இறுதிநிலைப் பயன்பாடுகளின் வீதாச்சாரத்தில் அமையும்; கிரமப் பயன்பாட்டு முறைப்படி இரண்டின் விலைகளின் வீதம் அவற்றின் இறுதிநிலைப் பதிலீட்டின் வீதத்திற்குச் சமமாக அமையும் (The ratio of prices is equal to the marginal rate of substitution). இப்படிப் பார்த்தால் சிறப்பான வேற்றுமையைக் காண முடியாது.

கடைசியாகச் சொல்லவேண்டிய தொன்றுண்டு. இரண்டு முறைகளுக்கும் இடையே வேற்றுமைகள் இருப்பினும், இல்லாவிடினும், சமநோக்குக் கோட்டு அணுகு முறை பல பிரச்சினைகளைத் தெளிவாக ஆய்வதற்குச் சிறந்த கருவிகளாகவுள்ளபடியால் அதன் பிரயோகம் பொருளாதார இயலில் வளர்ந்து வருகிறது.

## 20. உற்பத்திச் சார்பும், சம உற்பத்தி வளைகோடு ஆய்வும்

### (Production Function and Iso-product curve analysis)

ஆல்பிரட் மார்ஷலும் அண்மைக் காலத்துப் பொருளாதார இயலிநரும் உற்பத்திக் கோட்பாட்டை நுண்ணிய முறையில் ஆராயலாயினர். இந்த ஆராய்ச்சியில் நாம் உற்பத்திச் சார்பு (Production function) விளைவு விதிகள் (Laws of returns), நிறுவன அளவு மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகள் (Returns to Scale), சம உற்பத்தி வளைகோடு ஆய்வு (Iso-product curve analysis) ஆகியவற்றைச் சுருக்கமாக விளக்குவோம்.

'உற்பத்திக் காரணிகள்' (factors of production) என்பது நிலம், உழைப்பு, முதல், நிர்வாகம் ஆகிய நான்கையும் பொதுவாகக் குறிக்கும். தொழிலதிபர் உற்பத்திக்கு வாங்கும் கச்சாப்

பொருள்கள், மின்சக்தி, மனை, கட்டடம், (தொழிலாளர்) உழைப்பு முதலியவை அனைத்தையும் 'உள்ளிடுகள்' (inputs) என்றும், ஆக்கப்பட்டு விற்கப்படும் பண்டங்கள் அனைத்தையும் 'வெளியிடுகள்' (outputs) என்றும் இக்கால நிபுணர்கள் கூறுவர்.

'உற்பத்திச் சார்பு' என்பது ஒரு நிறுவனத்தின் உள்ளிடுகளுக்கும் வெளியிடுகளுக்கும் உள்ள தொடர்பைக் காட்டும் வீதம். ஒரு நிறுவனம் 1000 தகரப் பெட்டிகள் 8 மணி நேரத்தில் செய்யும் என்றால், அதனுடைய உற்பத்திச் சார்பு அந்த உற்பத்திக்கு வேண்டிய குறைந்தபட்சத் தகரம், ஈயம், மின் சக்தி, இடவசதி, உழைப்பு, பெயின்ட், இயந்திரம் முதலியவற்றைக் குறிக்கும். உற்பத்திச் சார்பை ஒரு நாள் அல்லது மாதம் என்ற காலவரம்புடன் இணைத்துக் கூருவிடில், அதற்குப் பொருளில்லை. உற்பத்திச் சார்பு ஒரு நிறுவனத்தின் தொழில் நுட்ப இயந்திரங்களையும் ஆற்றலையும் (technology) பொறுத்திருக்கும். கைத்தறிகள் விசைத் தறிகளாக மாறினால், ஒரு புது உற்பத்திச் சார்பு உருவாகும். பொருளாதாரத்தில் இருவகை உற்பத்திச் சார்புகள் ஆராயப்படுகின்றன: (1) சில உள்ளிடுகள் மாறாமலும் மற்றும் சில மாறுவதால் ஏற்படும் விளைவுகள்; (2) உள்ளிடுகள் அனைத்தும் ஒரே வீதாச் சாரத்தில் மாறுவதனால் ஏற்படும் விளைவுகள். உற்பத்திச் சார்பு என்னும் கருத்தில் உள்ளிடுகள், வெளியிடுகள் அனைத்தும் சடப் பொருட்களைக் (physical units) குறிப்பன; அவற்றின் பண மதிப்பை (money value) அல்ல என்பதை மனத்தில் தெளிவாகக் கொள்ளவேண்டும்.

### விகிதாச்சார மாற்றமும் அதன் விளைவு விதிகளும்
### (Variable proportions and Laws of Returns)

ஒரு நிறுவனத்தில் ஓர் உள்ளிடைத் தவிர மற்றெல்லாம் நிலையானவை எனக் கொள்வோம். மாறும் உள்ளிடின் அலகுகள் (units) அதிகரித்துக் கொண்டே போவதாகவும் கொள்வோம். விவசாயத்தில் நிலம், நீர், எரு, வித்துகள், தழை உரம், பூச்சி மருந்து முதலியனவற்றை ஒரே நிலையான அளவில் வைத்துக் கொண்டு, உழவு ஏர்களை மாத்திரம் அதிகப்படுத்திக் கொண்டு போனால் எப்படி விளைவு பெருகும் என்னும் எடுத்துக்காட்டு யாவரும் அறிந்ததே. இதிலிருந்து எவ்வாறு தொடக்கத்தில் வளர்ந்து செல் விளைவு விதியும், இடையில் மாறாது செல் விளைவு விதியும், கடைசியில் குறைந்து செல் விதியும் செயலாற்றுகின்றன வென்பதை இந் நூலில் மேலும் விளக்கத் தேவையில்லை. ஒன்றை மட்டும் நினைவு கூரவேண்டும். விளைவு விதிகளில்

(Laws of Returns), விளைவு என்பது இறுதிநிலை விளைவு (Marginal Returns). மேலும் இறுதிநிலை விளைவு = $N$ அலகுகளின் மொத்தவிளைவு

$$N = \left\{ \begin{array}{c} \text{குறிப்பிட்ட} \\ \text{உள்ளிடின்} \\ \text{மொத்த அலகுகள்} \end{array} \right\} - \left\{ \begin{array}{c} (N-1) \text{ அலகுகளின்} \\ \text{மொத்த விளைவு} \end{array} \right\}$$

**(நிறுவன) அளவு மாறினால் ஏற்படும் விளைவுகள் (Returns to Scale)**

ஒரு நிறுவனத்தின் முதலாளி தான் வாங்கும் உள்ளிடுகள் அனைத்தையும் இரட்டிப்பு, மும்மடங்கு, நான்கு மடங்கு, நாற்பது மடங்கு அதிகமாக வாங்கி உற்பத்தியில் ஈடுபடுத்துகிறார் என்று வைத்துக்கொள்வோம். அப்படியானால் அவருடைய வெளியிடுக்ளும் 2, 3, 4, 40 மடங்கு முறையே அதிகமாகுமா என்பது கேள்வி. இந்த மாற்றத்தில் உள்ளிடுகளின் விகிதாச்சாரம் மாறவில்லை என்பதை நினைவில் கொள்ளவேண்டும். நிலம், முதல், உழைப்பு என்ற மூன்று உள்ளிடுகள் ஆதியில் 1 : 5 : 2 என்ற விகிதாச்சாரத்தில் இருந்தால், அதே விகிதாச்சாரம் அந்தம் வரை மாறாதிருக்கும். நிறுவனத் தலைவர் செய்யும் இம்மாதிரி உள்ளிடுகளின் மாற்றத்திலும் உற்பத்தி தொடக்கத்தில் வளர்ந்து செல் விளைவு விதியினாலும், பின்னர் மாறாது செல் விளைவு விதியினாலும், கடைசியில் குறைந்து செல் விளைவு விதியினாலும் பாதிக்கப்படும் என்பது ஆராய்ச்சியின் முடிவு. இதை எல்லா உற்பத்தியாளரும் நடைமுறையில் அறிவர்.

**இரண்டு மாறும் உள்ளிடுகள் (Two variables)**

இனி இரண்டு உள்ளிடுகள் நல்ல பதிலிகள் (good substitutes) என்று வைத்துக்கொள்வோம். அவை இரண்டும் மாறினால், மற்ற உள்ளிடுகள் மாறாது நின்றால், உற்பத்தி எவ்வாறு பாதிக்கப்படுகிறதென்பதை ஆராய்வோம்.

முதலில் உள்ளிடுகளின் மாற்றத்தையும் அதன் விளைவையும் கணித முறையில் கண்டுபிடிப்போம். ஒரு கைத்தறித் தொழிற்சாலையில் தறிகளும், நெசவாளர்களும் மாறும் உள்ளிடுகள் என்றும், ஒரு தறியும் ஒரு நெசவாளரும் நல்ல பதிலிகள் என்றும் வைத்துக்கொள்வோம். (இது உண்மை நிலைக்குப் புறம்பாயினும், இந்த எடுகோள், பிரச்சினையை எளிதாக்கி விடையைக் காண உதவும்.)

கீழே தரப்பட்ட பட்டியலில் உள்ள புள்ளிகளைக் காண்க :

| தறிகளின் எண்கள் ↓ | நெசவாளர்கள் | | | |
|---|---|---|---|---|
| | 2 | 4 | 6 | 8 |
| 2 | 10 | 15 | 20 | 25 |
| 4 | 15 | 20 | 25 | 30 |
| 6 | 20 | 25 | 30 | 35 |
| 8 | 25 | 30 | 35 | 40 |

இரண்டு தறிகளும் இரண்டு நெசவாளர்களும் சேர்ந்து 8 மணி நேரத்தில் 10 மீட்டர் துணி நெய்கிறார்கள் ; 4 தறிகளும் 4 நெசவாளர்களும் 20 மீட்டர்களும், 6 தறிகளும் 6 நெசவாளர்களும் 30 மீட்டர்களும், 8 தறிகளும் 8 நெசவாளர்களும் 40 மீட்டர்களும் நெய்கிறார்கள் என்று காட்டுகிறது. உள்ளிடுகள் இரட்டிப்பு, மும்மடங்கு, நான்கு மடங்கு அதிகரிக்கும்போது உற்பத்தியும் அதே விதாச்சாரத்தில் பெருகி வருகின்றது. நிறுவன அளவை விஸ்தரிக்கும்பொழுது உற்பத்தி அளவும் மாறாது செல் விளைவு விதியால் பாதிக்கப்படுகிறது.


இப் பட்டியல் மேலும் சில முக்கியமான விதிகள் செயல்படுவதையும் காட்டுகிறது. இரண்டு தறிகள் கூடியும் (குறைந்தும்), இரண்டு நெசவாளர் குறைந்தும் (கூடியும்) செயல்படின், உற்பத்தி மாறாதிருக்கிறது. எனவே 2 தறிகள் = 2 நெசவாளர்கள். எனவே இவ்விரண்டு உள்ளிடுகளும் பூரண பதிலிகள் (perfect substitutes) என்று புலனாகிறது. பட்டியலில் வடமேற்கு முனையிலிருந்து தென்கிழக்கு முனை நோக்கிப் பார்த்தால், இதே விதி செயல்படுகின்றன.

ஆனால், உற்பத்திப் புள்ளிகளை மேலேயிருந்து கீழே பார்த்தாலும் அல்லது வலப் புறத்திலிருந்து இடப் புற வரிசைகளை நோக்கினாலும், குறைந்து செல் விளைவு விதி செயல்படுவது தெரியும்.

(இந்தப் பட்டியலும் புள்ளிகளும் வாட்சனின் ‘ விலைக் கோட்பாடும் அதன் பயன்களும்’ என்ற நூலில் 144ஆம் பக்கம் காணப்படும்.)

சம உற்பத்தி வளைகோடு ஆய்வு (Iso-product curve analysis)

துய்ப்புக் கோட்பாட்டில் நாம் கண்ட சமநோக்கு வளை கோட்டு ஆய்வுபோல இரண்டு பதிலிகளாகவுள்ள உள்ளிடுகள் மாறும் பொழுது உற்பத்தி மாருமலிருக்கும் செயலை, சம உற்பத்தி வளை கோடுகளின் உதவியால் ஆயலாம். வரை படத்தில், படு கிடை அச்சு உழைப்பையும் செங்குத்தான அச்சு முதலையும்




வரைபடம் 19·5

குறிப்பிடுகின்றது. வளைகோடு '100' உச்சியிலிருந்து அடிவரை இரண்டு உள்ளிடுகளும் மாறும் பல்வேறு நிலைகளிலும் 100 அலகுகளே உற்பத்தியென்பதைக் காட்டுகிறது. அதேபோல், '200', '300' சம உற்பத்தி வளைகோடுகள் 200, 300 அலகுகள் உற்பத்தியை முறையே காட்டுகின்றன. மேலும் 500, 1000 என்றும் 5, 10 என்றும் சம உற்பத்தியைக் காட்டும் எண்ணிறந்த வளைகோடுகள் இரண்டு அச்சுகளுக்கும் நடுவில் நிரம்பியிருப்ப தாக நாம் ஊகிக்கவும் கற்பனை செய்யவும் கூடும். வரை படம் 19·5 சம உற்பத்தி வளை கோடுகளின் குடும்பத்தையே (family of iso-product curves) காட்டுகின்றது.

சமநோக்கு (பயன்பாட்டு வளை) கோடுகளை முதலாவது, இரண்டாவது, மூன்ருவது என்று மாத்திரமே கூறமுடியும். சம உற்பத்தி வளைகோடுகள் 100 அலகுகள் உற்பத்தி 350 அலகு கள் உற்பத்தி, 437 அலகுகள் உற்பத்தி என்று துல்லியமாக

எண்ணளவில் (cardinal numbers) காட்டுகின்றன. இரண்டு வகை வளைகோடுகளும் தோற்றத்தில் ஒத்திருந்தாலும், இந்த முக்கிய வேற்றுமையை மறந்து விடலாகாது.

வரை படம் 19·5-ல் $A$ என்னும் புள்ளி $OP$ அலகுகள் $x$ உள்ளிடும் $OP'$ அலகுகள் $y$ உள்ளிடும் சேர்ந்து 100 அலகுகள் உற்பத்தி செய்கின்றன என்பதைக் காட்டுகிறது. $B$ என்னும் புள்ளி $OQ$ அலகுகள் $x$ உள்ளிடும் $OQ'$ அலகுகள் $y$ உள்ளிடும் சேர்ந்த நிலையைக் காட்டுகின்றது; அவையும் 100 அலகுகள் உற்பத்தி செய்கின்றன. இதே மாதிரி சம உற்பத்திக் கோடு 100 என்பதிலுள்ள எல்லாப் புள்ளிகளும் இரண்டு உள்ளிடுகளும் வெவ்வேறு விகிதத்தில் சேர்ந்திடினும், ஒரே மாதிரி 100 அலகுகள் உற்பத்தி செய்வதைக் காட்டுகின்றன.

### இரண்டு உள்ளிடுகளின் தொடர்பு
### (Relation between the two inputs)


இனி $x$-க்கும் $y$-க்கும் உள்ள தொடர்பை ஆராய்வோம். சம உற்பத்தி வளைகோடு '300'-ன் உச்சியில் $C$ என்னும் இடத்தில் 'முதல்' அலகுகளில் '$மு_1$'ஐக் குறைத்துவிட்டு உழைப்பு அலகுகளில் '$உ_1$'ஐக் கூட்டி இரண்டு உள்ளிடுகளைக் கலந்தாலும் உற்பத்தி மாருது 300 அலகுகளாகவேயிருக்கிறது.

நிறுவனத் தலைவர் $C$ என்னும் இடத்தில் '$மு_1$' அளவு முதலை விட்டுக் கொடுத்து '$உ_1$' அளவு உழைப்பை வாங்கத் தயங்க மாட்டார். ஆனல், $D$ என்னுமிடத்தில் $மு_2$ 'அளவு முதலைத்தான் '$உ_2$' உழைப்புக்குப் பதிலாகக் கொடுக்க முன்வருவார். ($உ_1 = உ_2$ = ஓர் அலகு உழைப்பு என்று படம் வரையப்பட்டிருக்கிறது.) இதிலிருந்து உழைப்பு அலகுகள் தன் கைவசம் அதிகமாக அதிகமாக, அதற்கு மாற்ருகக் கொடுக்கப்படும் 'முதல்' அலகுகள் குறைந்து கொண்டே போவது தெரிகிறது. இதையே குறைந்து செல் இறுதிநிலை நுட்பத் தொழில் மாற்று விகித விதி (Law of Diminishing Marginal Technical substitution) என்று கூறுவர். இது குறைந்து செல் விளைவு விதியுடன் (Law of Diminishing Marginal Returns) ஒப்பு நோக்குக.

### அளவு மாறுவதனுல் உற்பத்தி மாறுதல் (Returns to Scale)

நிறுவன அளவு மாறினுல் உற்பத்தி மாறும் என்று முந்திய பிரிவு ஒன்றில் பார்த்தோமல்லவா ? அந் நிகழ்ச்சியைச் சம உற்பத்தி வளைவு கோடுகளின் வாயிலாகவும் காட்ட முடியும்.

வரைபடம் 19·6-ஐப் பார்க்கவும். *OM* என்பது 45° சாய்வு கோடு. இதில் உள்ள ஒவ்வொரு புள்ளியும் சம அளவு முதல், உழைப்பு அலகுகளைக் காட்டும் என்பதை நாம் அறிவோம். *OM*-ஐ எட்டுச் சம உற்பத்தி வளைகோடுகள் *A, B, C, D, E, F, G, H* என்ற இடங்களில் வெட்டிச் செல்கின்றன. இப் படத்தில்




வரைபடம் 19·6


*AB*ஐ விட *BC* நீளக் குறைவு. இது குறைந்த அளவில் *C*-ம் *L*-ம் சேர்க்கப் பட்டாலும் உற்பத்தியளவில் 100 அலகுகள் கூடும் என்பதைக் காட்டுகிறது. எனவே, இந்த விஸ்தரிப்புக் கட்டத்தில், இந்த நிறுவனத்தில் வளர்ந்து செல் விளைவுவிதி செயல்படுகிறது என்பது தெரிகிறது.

இனி *CD*=*DE*=*EF*. ஒரே அளவு உள்ளிடுகள் கூடுகின்றன. இந்த மூன்று கட்டங்களிலும் உற்பத்தியும் ஒரே அளவு 300-லிருந்து 400-ம், 400-லிருந்து 500-ம், 500-லிருங்கு 600 அலகுகளாக விரிவடைகிறது. இது மாறுது செல் விளைவு விதி செயல்படுவதைக் காட்டுகிறது.

*EF*-ஐ விட *FG* நீளமதிகம்; *FG*-ஐ விட *GH* நீளமதிகம். இக் கட்டங்களில் உள்ளிடுகள் அதிகமாகிக்கொண்டு போவதை இந்த நீளங்கள் குறிக்கின்றன. ஆயினும் உற்பத்தி 600-லிருந்து 700, மேலும் 700-லிருந்து 800 என நூறு நூறு அலகுகளாகவே

உற்பத்தி கூடுகிறது. இந்தக் கட்டங்களில் நிறுவனத்தில் குறைந்து செல் விளைவு விதி செயல்படுவது புலனாகிறது.

**ஓர் உள்ளிடு மாறுது, மற்றது மாறினால் ஏற்படும் விளைவுகள்**
(One Variable input and its effects)




வரைபடம் 19·7

மேலேயுள்ள வரைபடம் 19·7-ல் முதல் அலகுகள் *OP* எண்ணிக்கை மாறாமல் இருக்கிறதென்பதை *PQ* என்னும் படு கிடைக் கோடு காட்டுகிறது. உழைப்பு அலகுகள் மாத்திரம் அதிகரித்துக் கொண்டு போகிறது. *AB, BC, CD, DE* என்பன உழைப்பு அலகுகளின் எண்ணிக்கையைக் காட்டுகின்றன. *A, B, C, D, E* என்ற புள்ளிகள் ஒவ்வொன்றும் 100 அலகுகள் உற்பத்தி அதிகரிப்பதைக் காட்டுகின்றன. உற்பத்தி அதிகம் எல்லாக் கட்டங்களிலும் ஒரே அளவில் 100 தான். ஆனால் *AB*-ஐ விட *BC*-ன் நீளம் அதிகம்; அஃதாவது அதிக உழைப்பு அலகுகள். அப்படியிருந்தும் அதிக உற்பத்தி 100 அலகுகள்தான். இது நிறுவனத்தில் குறைந்து செல் விளைவு விதி செயல்படுவதைக் காட்டும். *BC*-ஐ விட *CD*-ன் நீளம் அதிகம்; *CD*-ஐ விட *DE*-ன் நீளம் அதிகம். இவை குறைந்து செல் விளைவு விதி செயல்படுவதை உறுதிப் படுத்துகிறது.

மேலே காட்டப்பட்ட இரண்டு வரை படங்களும் சம உற்பத்தி வளைகோடு ஆய்வின் வாயிலாக விளைவு விதிகளைக் கண்டு பிடிக்க முடியுமென்பதைக் காட்டுகின்றன.

## பாகம் VI

# சோஷியலிசம்

## 21. சோஷியலிச முன்னோடிகள்
(Socialism–Forerunners)

முன்னுரை

சுதந்திரவாதம் ஒரு சமயக் கொள்கை போல ஆட்சி செலுத்திய காலம் சுமார் 70 ஆண்டுகள். இதன் சமயக் குரவர் மூவர், தொன்மை நூலின் மும்மணிகள். பின் தோன்றிய சிறிய நாயன் மார்கள் பலர். அவர்களுடைய நூல்கள் சுதந்திரவாதத்தை ஒரு தீவிர வைதிகக் கொள்கையாக மாற்றின. இதற்கு விரைவில் எதிர்ப்பு எழாமலில்லை. அதற்குப் பல காரணங்கள் இருந்தன. அரசினர் தலையிடாக் கொள்கையின் பயனாகப் பெரும்பான்மை மக்கள் வறுமைத் துன்பத்திலும், அல்லும் பகலும் கடுமையான உழைப்பிலும் உழன்றனர். சிறுபான்மையோர் குபேர சம்பத்துப் பெற்றுச் செல்வச் செருக்கில் வாழ வாய்ப்பளித்தது. ஏழை மக்களின் துயரைத் துடைக்க அரசினர் கைகொடுத்து உதவுவது தகாத செயல் எனத் தலையிடாக் கொள்கை வற்புறுத்தியது. 'வறுமையிற் பலர், செல்வத்திற் சிலர்' எனச் சமூகம் பிளவு பட்டது. தன்னலம் மக்களைச் சுயநலப் பேய்களாக்கியது. எதிர் பார்த்தபடி தன்னலம் பொது நலத்தைப் பேணவில்லை. சந்தையில் போராடும் அளிப்பு, தேவைச் சக்திகள் மக்கள் தேவைக்கு அவசியமான பொருட்களை வேண்டுமளவிற்கு உற்பத்தியாக்கத் துணைபுரியவில்லை. போட்டிக்குப் பதில், தொழிலதிபர்கள் ஒன்றுகூடிக் கொள்ளை இலாபம் அடிக்க சதி செய்யலாயினர். பொருட் தேக்கமும் அடிக்கடி ஏற்பட்டது. அதனால் ஆலைகளின் உற்பத்தியைத் தொழிலதிபர்கள் குறைக்க நேர்ந்தது. அதன் விளைவாகத் தொழிலாளர் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர். ரிக்கார்டோவின் கூற்றுப்படி தொழிலதிபர் தொழிலாளர் உறவு

முறிந்து, அடிக்கடி பூசல்கள் உண்டாயின. தொழிலதிபருக்கும் நிலக்கிழார்களுக்கும் இடையே பகையுணர்ச்சி பெருகிற்று. மக்களின் பொருளாதார வாழ்க்கையில், சுருதி கெட்டு, அவசுரம் கீச்சிட்டு அலறத் தொடங்கியது. இவற்றைக் கண்ணுற்று உள்ளம் குழைந்த அறிஞர்கள் முதலாளித்துவத்தைத் தாங்கி வளர்க்கும் ஒருதலைப்பட்ட கோட்பாடே சுதந்திரவாதம் எனக் கருதினர். தொன்மை நூலார் ஒருவரும் முதலாளித்துவத்தை நேர்முகமாகப் போற்றவில்லையானாலும், முதல் திரட்டப்பட்டால் நாட்டுச் செல்வம் வளரும் என்று கூறினார்கள். ஆனால், முதலீட்டுபவர் செயல் காலப்போக்கில், வனவிலங்குகள் ஒன்றையொன்று அடித்துக் கொன்று விழுங்குவது போன்ற மாதிரி கொடுமையாக மாறிற்று. தொன்மை நூலார் சிறப்பித்துக் கூறிய போட்டிக்கு, இருதரத்தினருக்கும்—முதலாளிகள், தொழிலாளர் இரு வகுப்பினருக்கும்-சமமான வல்லமை இன்றியமையாதது; அது இல்லாமற் போகவே சுதந்திர வாதத்தின் நடைமுறைப் பழக்கத்தில் பல தீமைகள் சுடர் விட்டெழுந்தன.

### (i) சோஷியலிசத்தின் முன்னோடிகள்

போட்டியின்றி ஒற்றுமையாக வாழ மக்களுக்கு வாய்ப்பு அளிப்பது அரசினர் கடமை என்பதைத் தெளிந்தனர். பலர் சுதந்திரவாதக் கொள்கையை மறுத்து நூல்கள் எழுதலாயினர். இந்தப் போக்கின் இறுதி விளைவுதான் மார்க்ஸ் வகுத்த விஞ்ஞான சோஷியலிசம். ஆனால், மார்க்சுக்கு முன்னால் பல சோஷியலிச வாதிகள் தோன்றினர். அவர்களைப் பகற் கனவு காண்பவர்கள் என்று மார்க்ஸ் இழிவுபடுத்தி அவர்கள் நூல்களை ஒதுக்கித் தள்ளினார். எனினும், அந் நூல்களை மறுப்பு நூல் வாதத்தின் இளங்காற்றுப் பருவம் எனக் கூறுவது தகும். இந்த நூலாசிரியர்களில் முக்கியமானவர்கள் ஸிஸ்மண்டி, செயின்ட் சைமன், புருதன், ஃபூரியர், ராபர்ட் ஓவன், ராட்பர்ட்டஸ். இவர்கள் நூல்களைப் பற்றி விரிவாகக் கூற இடமில்லையாயினும் சுருக்கமாக முக்கியமான கருத்துகளை மட்டும் கவனித்துச் செல்வோம்.

### ஜீன் சார்லஸ் டி ஸிஸ்மண்டி
### (Jean Charles de Sismondi, 1773-1842)

ஜெனிவாவில் பிறந்து, இளம் வயதிலேயே இங்கிலாந்தில் ஸிஸ்மண்டி குடியேறியவர். தொன்மை நூலின் பல அடிப்படைக் கருத்துகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தார், ஸிஸ்மண்டி. அவர் எழுதிய பல நூல்களில் இங்கு இடம் பெற முக்கியத்துவம் வாய்ந்தது 'பொருளியலின் புதிய கொள்கைகள்' (New

Principles of Political Economy, 1819). அவருடைய கருத்துகள் அறவியல் சார்பு (ethical basis) உள்ளவை. சமூக நலனை விடச் (Social welfare) செல்வத்துக்கு முதன்மையளித்திருக்கின்றன ரெனத் தொன்மை நூலாரைக் கண்டிக்கிருர். இவர் வற்புறுத்திய குறிக்கோளாகிய சமூக நலன் பின்னர் மார்ஷல், பிகோ, கெயின்ஸ் ஆகிய பேரறிஞர்களால் விரிக்கப்பட்டு இன்று நவீனப் பொருளாதாரத்தில் முதலிடம் பெற்றிருக்கிறது.

பொருளாதார நெருக்கடி மித மிஞ்சிய பொருள் உற்பத்தியினுல் உண்டாகிறது என்று ஸிஸ்மண்டி விளக்குகிருர். பொருட் தேக்கமும் இயந்திரங்களைப் பெருவாரியாகப் பயன்படுத்துவதும் முதலாளித்துவத்தின் உடன் பிறந்த நோய்கள். பொருளாதார மந்தமும் பண வீக்கமும் மாறி மாறி வருவது அதன் இயல்பு. இயந்திரப் புரட்சிக்குப் பின் இயந்திரங்களும் புது கண்டு பிடிப்புகளும் உற்பத்தியை மிகவும் பெருக்கித் தேவைக்குமேல் அளிப்பு நிலையை அதிகமாக்கி விடுகிறது. எனவே, இயந்திரங்களையும் மாபெரும் ஆலைத் தொழிலையும் குறைத்துச் சிறு தொழில் நிறுவனங்களை ஆதரிக்க வேண்டுமென்று கூறுகிருர். இதில் ஸிஸ்மண்டிக்கும் காந்தியடிகளுக்கும் ஒற்றுமையைக் காணலாம்.

தொன்மை நூலார் பகுத்தறி முறையைப் (deduction) பெரும்பாலும், சிறப்பாக ரிக்கார்டோ முழுவதும், கையாண்டிருப்பது தவறு என்றும், தொகுத்தறி முறையையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் ஸிஸ்மண்டி கூறுகிருர்.

தனியார் சொத்துரிமை தூய்மையானது ; அது காப்பாற்றப் படவேண்டுமென்று வாதிக்கும் ஸிஸ்மண்டியைச் சிலர் சோஷியலிச வாதி என்று கூறுகின்றனர். அது சரியல்ல ; ஆயினும் அரசினர் பொருளாதாரத் துறையில் தலையிட வேண்டும் எனச் சுட்டிக் காட்டியவராதலால், அரசாங்க சோஷியலிசத்துக்கு வித்திட்டவராவர். மேலும் அவர் பெரிய சீர்திருத்தவாதி, சமூகச் சீர்திருத்தச் சட்டங்கள் இயற்ற வேண்டும் என்று வாதித்தவர். தொழிலாளர்களுக்கு நியாயமான கூலி கிடைக்கச் செய்ய வேண்டும், அவர்களை முதலாளிகள் கொடுமைப்படுத்துவதை ஒழிக்க வேண்டும் என்று அவர் கூறியதிலிருந்து மார்க்ஸ் தொழிலாளர்கள் சுரண்டப்படுகின்றவர் என்ற கருத்தை உருவாக்கினுர் என்று எண்ணுவதற்கு ஆதாரம் உள்ளது.

### செயின்ட் ஸைமன் (Saint Simon, 1760-1825)

பிரஞ்சு நாட்டின் பிரபுக்கள் குடும்பமொன்றில் பிறந்தவர் ஸைமன். வருங்காலச் சமூக நிர்மானம் பற்றியப் பல நூல்கள்

எழுதியுள்ளார். சமூக நிர்மாணம் தொழில் நுட்ப நிபுணர்களால் அமைக்கப்பட வேண்டும் என்பது அவர் கனவு. அதை வலி யுறுத்த அவர் தரும் ஓர் உதாரணம் இலக்கிய நயம் வாய்ந்தது : 'பிரஞ்சு நாடு திடீரென ஒரு நாட் காலையில் முதல்தர ஐம்பது பொறி இயல் நிபுணர்களையும், 50 விஞ்ஞானிகளையும், 50 பாங்கு நிர்வாகிகளையும், 500 தொழிலதிபர்களையும் இழந்து விட்டால் என்னவாகும்? அல்லது திடீரென அரசக் குடும்பத்தினர், அதிகார வர்க்கத்தில் 50 பேர், சட்டமன்ற உறுப்பினர்கள், பாதிரிகள், சேனாதிபதிகள் முதலியோரை இழந்துவிட்டால் என்ன வாகும்? என்ற இரண்டு கேள்விகளைக் கேட்கிறார். முன்னதானால் பொருளாக்கு முயற்சி முழுவதும் அழிந்துவிடும். பின்னதானால், மக்கள் கண்ணீர் சிறிது வடிப்பர். வேறு கேடு ஒன்றும் ஏற் படாது' என்று விடை பகர்கிறார். இவரையும் சோஷியலிசவாதி யெனக் கூறமுடியாது. ஆனால் சைமனின் சீடர்களான சைமோனியர்கள் சோஷியலிசவாதிகள். தனியார் சொத்துரிமை, வாரிசுரிமை இரண்டையும் ஒழிக்க வேண்டுமென வற்புறுத்திய வர்கள் அவர்கள்.

**ஜோசப் புரூதன் (Joseph Proudhon, 1809–65)**

புரூதன் என்பவர் பிரஞ்சு நாட்டு நடுத்தர வகுப்பில் பிறந் தவர். அரசாங்கமே வேண்டாம் என்று கூறும் தத்துவ ஞானி. 1840-ல் எழுதிய 'சொத்து என்றால் என்ன' (What is property?) என்னும் நூலின் முதல் பக்கத்திலேயே 'அது ஒரு களவு' என்று கூறியுள்ளார். கட்டாயப்படுத்த அதிகாரம் படைத்த அரசு கொடுமையிலும் கொடுமை என்பது அவர் துணிவு. தொழிலதி பர் ஒருவர் நூறு தொழிலாளர்களைக் கொண்டு உற்பத்தி செய் யும் பொருள்கள் 100 பேர் தனித்தனியாக உற்பத்தி செய்வதை விட கணிசமான அளவு அதிகமாயிருக்கும். ஏனெனில், வேலைப் பகுப்பு, நிர்வாகச் சிக்கனங்களின் பலன் கிடைக்கும். உற்பத்தி பெருகும். ஆனால், தொழிலதிபர் கொடுக்கும் கூலி 100 பேரும் தனித்தனியாக வேலை செய்தால் என்ன கிடைக்குமோ அந்த அளவுதானிருக்கும். எனவே, தொழிலதிபருக்கு 'உபரி மதிப்பு' கிடைக்கும் என்று கூறியிருக்கிறார். இதிலிருந்துதான் கார்ல் மார்க்ஸ் தமது புகழ்பெற்ற 'உபரி மதிப்புக் கொள்கை' (Theory of Surplus Value) வகுத்துள்ளார் என்று சிலர் கூறுகின்றனர்.

புரூதனின் இன்னொரு கருத்துச் சுவையானது. மனிதனை மனிதன் சுரண்டுதல், பொருள் உற்பத்தித் துறை, பங்கீட்டுத் துறை இரண்டிலும் இல்லை. பண்டமாற்றுத் துறையில்தான் நடக்கிறது என்பது புரூதனின் எண்ணம். எனவே இதை

ஒழித்துக்கட்ட அவர் ஒரு 5,000,000 பிராங்க் மூலதனமுள்ள வங்கியொன்று நிறுவி, அதில் பண்டங்களின் அடமானத்தின் மேல் கடன் எளிய வட்டியில் கொடுத்து வங்கிச் சீட்டு கொடுக்க வேண்டும். இந்த வங்கிச் சீட்டுச் செலாவணியாகப் பயன்பட வேண்டும். வட்டி முதலில் 2 சதத்தில் தொடங்கி பின்னுல் $\frac{1}{4}$ சதமாகி விடவேண்டும். இத்தகை வங்கி நடைபெற்ருல், நாட்டிலுள்ள வறுமைப் பிணி மறையும் என்பது அவர் கண்ட கனவு. கனவை நனவாக்க அவரே அந்த வங்கியைத் தொடங்கிஞர். மூன்று மாதங்கள் சென்றபின் செலுத்தப்பட்ட மூலதனம் 18000 பிராங்குகள், செலுத்தியவர் எண்ணிக்கை 12000. இதைக் கண்டு அவர் வங்கியை சில நாட்களில் மூடிவிட்டார்.

## சார்லஸ் ஃபூரியர் (Charles Fourier, 1772–1837)

ஃபூரியர் ஒரு சிறந்த பிரஞ்சு நாட்டுச் சமூகச் சீர்திருத்தவாதி. ஒவ்வொன்றிலும் 400 குடும்பங்களுக்கு மேற்படாமல் வசிக்கக் கூடிய சிறு கிராமங்கள் உண்டாக்கி அவற்றில், நகரத்தில் பெருங் கூட்டமாக வாழும் மக்களைக் குடியேற்றவேண்டும். எல்லோரும் ஒன்ருய்க் குடியிருக்க, உண்ண, உழைக்க வசதியுள்ள கூட்டுறவுச் சங்கங்களாகச் சமூகம் அமையவேண்டுமென்பது அவர் கருத்து. விவசாயத்துக்கு முதல் இடம் கொடுக்கிருர். கோழிப் பண்ணைகள் உண்டாக்கிஞல், ஆங்கில நாட்டின் அரசாங்கக் கடன் முழுவதையும் கூட ஆறு மாதங்களில் கோழி முட்டைகளை விற்றுத் தீர்த்துவிடலாம் என்ற நம்பிக்கை கொண்டவர். உலக மக்கள் யாவரும் கூட்டுறவுப் பட்டாளமாக அணி வகுக்கப்படவேண்டும் என்று கூறுவதுடன், மொத்தம் 2,985,984 பட்டாளங்கள் திருத்தியமைத்த புது உலகில் இருக்கும் என்று கணக்கிட்டுக் கூறியுள்ளார்! இந்தக் கூட்டுறவுப் பட்டாளங்களை அமைக்க ஒரு தலைவர் தேவை என்று எண்ணிஞா நாள்தோறும் அத்தகைய தலைவர் தம்மைத் தேடி வருவார் என்று நம்பி ஒரு மணி நேரம் வழிமேல் விழி வைத்துக் காத்திருப்பது அவர் வழக்கம். இது ஒரு தனி வகைப் பகற் கனவு.

## ராபர்ட் ஓவன் (Robert Owen, 1771–1858)

ஓவன் ஒரு பெரிய தொழிலதிபர். ஆங்கில நாட்டில் அவரைப்போல் தொழிலாளர்கள்பால் கருணையுள்ளம் படைத்தவர் கிடையாது. ஒரு சிறந்த இலட்சியவாதி. இவரைக் கூட்டுறவு இயக்கத்தின் தந்தை (Father of Co-operation) என்பர். தமது ஆலைத் தொழிலாளர்கள் நலனைக் கோரி 'ராக்டேல் பயனியர்ஸ்' (Rochadale Pioneers) என்னும் முதல் கூட்டுறவுப் பண்டக சாலையைத் தோற்றுவித்தார். 1825-ல் ஸ்காட்லந்து நாட்டில் ஆர்பிஸ்

டன் என்ற ஊரிலும், அமெரிக்காவில் இந்தியானு மாநிலத்தில் நியூ ஹார்மனி என்னும் ஊரிலும் மாதிரிக் கிராமங்கள் (Model villages) பெருஞ் செலவில் நிர்மாணம் செய்து தம் கொள்கைகளைச் சோதனை செய்தார். 'உலக இன்னல்களை நீக்க ஒரே பாதைதான் இருக்கிறது. அது கூட்டுறவுதான்' என்பது இவர் சித்தாந்தம்.

### லூயி பிலாங்க் (Louis Blanc, 1811-82)

பிலாங்க் பிரஞ்சு நாட்டுப் பத்திரிகை ஆசிரியர்களில் ஒருவர். 'மக்கள் சங்கங்கள் கூட்டி, பொருள் உற்பத்தியைக் கூட்டுறவு முறையில் பெருக்கவேண்டும். முதலில் இந்தப் புது அமைப்பை மேற்கொள்ளவும், புதிதாக நிறுவப்பட்ட சங்கங்களுக்கு மூலதனம் உதவவும் அரசாங்கம் வேண்டும். அதன்பின் அரசாங்கமே வேண்டியதில்லை,' என்ற கொள்கையைப் பிரச்சாரம் செய்து வந்தார்.

### ஜோஹன் கார்ல் ராட்பர்ட்டஸ் (Johan Karl Rodbertus, 1805-75)

ராட்பர்ட்டஸ் ஜர்மானிய நாட்டுப் பேரறிஞர்களில் ஒருவர். பிரபுக்கள் வமிசத்தில் பிறந்து, கண்ணியமாக வாழ்க்கை நடத்தியவர். பழைய பண்பாடுகளைப் போற்றியவர். புரட்சியில் விருப்பமில்லாதவர். தொன்மை நூலுக்கு ரிக்கார்டோ எப்படியோ, சோஷியலிசத்துக்கு ராட்பர்ட்டஸ் என்று கூறுவதுண்டு. பணம் கையிலுள்ளவர்கள் தேவைதான் என்ன பண்டங்கள், எந்த அளவில் உற்பத்தியாகும் என்பதை நிர்ணயிக்கும் என்பதை, ஆடம் ஸ்மித்தும், ஸிஸ்மண்டியும் இவருக்கு முன்னேயே குறிப்பிட்டிருப்பினும், ராட்பர்ட்டஸ்தான் இந்தக் கருத்தை அழுத்தமாகக் கூறியவர். தொழிலாளர்கள் கூலி குறைவாயிருப்பதாலும், இயந்திர சாதனங்கள் உற்பத்தியைப் பெருவாரியாக அதிகப்படுத்துவதாலும் அடிக்கடி மிதமிஞ்சிய பணத்தேவைக்கு அதிகமான உற்பத்தியும் பொருள் தேக்கமும் ஏற்படுகின்றன என்ற கருத்தை நன்கு விளக்கியுள்ளார். உழைப்புதான் பண்டங்களின் உற்பத்திக்கு மூலகாரணம். அதுவே நேரடியாகவும், கருவிகள், இயந்திரங்கள், கச்சாப் பொருள்கள் போன்றன மூலமாகவும் பொருளுற்பத்திக்கு ஆதாரமாயிருக்கிறது. பிழைப்புக் கூலிக் கொள்கையை ராட்பர்ட்டஸ் ஒப்புக்கொள்கிறார். இவருடைய பல கொள்கைகளைக் கார்ல் மார்க்ஸ் மேற்கொண்டார் என்றும், இல்லையென்றும் ஒரு பெரிய விவாதம் நெடுங்காலம் நடந்து வந்தது. இவர் மார்க்ஸுக்கு முன் தோன்றிய அறிஞர்களில் தனிச் சிறப்புடையவர். இருவரும் (1) தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த சோஷியலிசம் அவசியம் என்பதிலும் (2) சமூக வளர்ச்சி முதலாளித்துவம்

அதற்குபின் சோஷியலிசம் எனும் வளர்ச்சித் தத்துவததைக் கூறுவதிலும் ஒன்றுபட்ட மனத்தினர். ஆனால், ராட்பர்ட்டஸ் புரட்சியின்றி சோஷியலிசம் சட்டங்கள் வாயிலாகச் சீர்திருத்தங் கள் மூலம் வரும் என்று கருதினர். நீதி, நியாயம், அறம் என்ற அடிப்படையில் சோஷியலிசத்தை விரும்பியவர் ராட்பர்ட்டஸ். பொருளாதாரச் சக்திகளின் வாயிலாக சோஷியலிசம் வரும் என்று காட்டியவர் கார்ல் மார்க்ஸ்.

இதுவரை பல சோஷியலிச முன்னோடிகளின் கருத்துகளைப் பார்த்தோம். ராட்பர்ட்டஸ் தவிர, இந்த ஆசிரியர்கள் பகற் கனவுக்காரர்கள் என்பது தெளிவாகும். 'சோஷியலிசப் பாணி யில் சிறிய சங்கங்கள் நிறுவினால் போதும். அவை நாடு முழுவ தும் பரவிச் சோஷியலிச சமுதாயத்தை உண்டாக்கிவிடும்' என்று மனப்பால் குடித்தவர்கள் இவர்கள். உலகத்திலுள்ள இடர்களையும் இன்னல்களையும் வறுமையையும் போக்கிவிடக் கூடிய சஞ்சீவி கூட்டுறவுதான் என்று கருதியவர்கள் சிலர். சட்ட மன்றங்களில் ஒன்றிரண்டு சட்டங்களை இயற்றினால் முதலாளித் துவத்தின் தீமைகள் நீங்கும் என்று நம்பியவர்கள் இன்னும் சிலர். கத்தியின்றி, இரத்தமின்றிச் சமூகப் பொருளாதார அமைப்பு மகத்தான மாறுதல் அடையும் என்று மனப்பூர்வமாக இவர்கள் எல்லோரும் எண்ணினார்கள். ஆனால் 'சுதந்திரவாதம் உருவாக்கிய முதலாளித்துவத்தின் உடலிலேயே சோஷியலிசம் பிறக்க கிருமிகள் உண்டாகிக் கொண்டிருக்கின்றன. எனவே, முதலாளித்துவம் தானாகவே மடியும். முட்டையிலிருந்து குஞ்சு வருவது போல் சோஷியலிச சமுதாயம் முதலாளித்துவத் தின் வயிற்றிலிருந்து பிறக்கும். அகத்தியர் என்னும் அசுர னின் வயிற்றைக் கிழித்துக்கொண்டு வந்ததுபோல் வரும்' என்று ஒருவரும் இதுவரை கூறவில்லை. இவ்வாறுதான் நடக் கப் போகிறதென்று பொருளாதார சமூக ஆராய்ச்சி செய்து காட் டிய பெருமை கார்ல் மார்க்சுக்கு உரியது. அவர் காலம் வரை இளங்காற்றாக வீசிய மறுப்பு நூல் கொள்கைகள் அவரது தத் துவ விசாரணையில் சுழல் காற்றாக மாறியது என்றால் மிகை யாகாது.

# 22. கார்ல் மார்க்ஸ்

நனைசுவர்க் கூரை கனைகுரற் பல்லி
பாடு பார்த்திருக்குமெம் மனைவியைக் கண்டு
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடையின்றி வாடையின் மெலிந்து
கையதுகொண்டு மெய்யது பொத்திக்
காலதுகொண்டு மேலது தழீஇப்
பேழையுள்ளிருக்கும் பாம்பெனவுயிர்க்கும்
ஏழையாளனைக்கண் டெனமெனுமே

—சத்திமுற்றப் புலவர்.

**விஞ்ஞான சோஷியலிசம் - கார்ல்மார்க்ஸ்**
(Scientific Socialism–Karl Marx, 1818-83)

சோஷியலிச வாதத்தின் தந்தையாகிய கார்ல் ஹென்ரிக் மார்க்ஸ் (Karl Heinrich Marx) ஒரு ஜர்மானிய யூதர். பெற்றோர்கள் இருவரும் யூதசமயக் குருக்கள் பரம்பரையினர். அவருக்கு ஆறு வயதாயிருக்கும்போது அவர் குடும்பம் கிருத்துவ சமயத்தைத் தழுவிற்று. பான் (Bonn), பெர்லின் (Berlin), ஜீனு (Jena) என்னும் மூன்று பல்கலைக் கழகங்களில் கற்று, ஜீனுவில் டாக்டர் பட்டம் பெற்ற அறிஞர் இவர். பான் பல்கலைக் கழகத்தில் அவர் எதிர்பார்த்த பேராசிரியர் பதவி கிடைக்காமல் போகவே, பத்திரிகைத் தொழிலை மேற்கொண்டார். 'ரேனிஷ் டைம்ஸ்' (Rhenish Times) என்னும் பத்திரிகையின் ஆசிரியராக முதன் முதலில் பணியாற்றினுர். தொழிலாளர் உரிமைகளுக்குப் போராடியதனுல், அரசாங்கம் அப் பத்திரிகைக்குத் தடையுத்தரவு போட்டு நிறுத்தி விட்டது. 1843-ல் தொழில் தேடிப் பிரஞ்சு நாட்டுத் தலைநகரான பாரிசுக்குப் போனுர்; தீவிர இடதுசாரிப் பத்திரிகை ஒன்றின் துணை ஆசிரியர் வேலை கிடைத்தது. ஆனுல் ஜர்மானிய அரசின் தூண்டுதலினுல் பிரஞ்சு அரசாங்கம் மார்க்சை 1845-ல் நாடு கடத்தியது. பாரிசில் வசிக்கும்போதுதான் மார்க்சுக்குப் பின்னுல் தமது அருமை நண்பராகவும், கூட்டு ஆசிரியராகவும், புரவலராகவும் திகழவிருக்கும் இங்கிலாந்து தொழிலதிபர் பிரடரிக் என்சல்சின் (Frederick Engels) நட்பு உண்டாயிற்று. நாடு கடத்தப்பட்ட பின் பெல்ஜியத்தின் தலைநகரான பிரஸ்ஸல்ஸுக்குப் போனுர். அங்கே என்சல்சும் வந்து சேர்ந்தார். இருவருமாகக் கூடி ஆராய்ச்சியிலும் எழுதுவதிலும் மூழ்கினர். ஜர்மனியில் நடந்த புரட்சியில் பங்கெடுக்க இருவரும் 1848-ல் அங்கே போனுர்கள். புரட்சி தோல்வியுறவே ஆங்கில நாட்டில் அடைக்கலம் புகுந்தனர். அன்று முதல் 1883-ல் மார்கஸ் கால

மாகும் வரை லண்டனிலேயே வசித்து வந்தார். லண்டன் மியூசியத்திலுள்ள உலகப் புகழ்பெற்ற நூல் நிலையத்தில் இரவும் பகலும் நூல்களைக் கற்றும் ஆராய்ந்தும் வாழ்ந்தார். நூல் நிலையம் திறக்கும்போது உள்ளே போவார். மூடும் நேரம் வரை படித்து வந்தார். முதல் கம்யூனிசப் பன்னாட்டு அரங்கு (First Communist International) நிர்மாணிக்கும் காலத்தில் 1861-ல் லண்டனை விட்டு வெளியே ஒரு தடவை போனது தவிர வேறு ஒரு சமயமும் லண்டனைவிட்டுப் போனதில்லை.

வசதியான குடும்பத்தில் பிறந்தவர். வேலையும் கிடையாது; வருமானமுமில்லை. மனைவி தனவந்தர் குடும்பப் பெண். ஜென்னி என்னும் மகளின் மேல் மார்க்சுக்கு மிக்க அன்பு. மனைவியிடம் மிக்க மரியாதையும் அன்பும் கொண்டவர். இந் நிலையில் கம்பருக்குச் சடையப்ப வள்ளல் வாய்த்த மாதிரி, மார்க்சுக்கு என்சல்ஸ் வாய்த்தார். ஆண்டொன்றுக்கு 350 பவுன் கொடுத்து உதவி புரிந்தார். இந்த வாழ்க்கை வரலாறு மார்க்ஸ் நூலிலுள்ள கருத்துகளை நன்கு உணர உதவும்.

மார்க்ஸ் சாதாரண மேடைப் பிரசங்கியல்ல. ஆழ்ந்து பரந்த கல்விஞானம் படைத்தவர். ஆங்கில நாட்டில் முதலாளித்துவத்தின் தீய போக்கைக் கண்ணால் கண்டவர். இவர் ஒரு புரட்சித் தலைவர்; சிறந்த தத்துவ ஞானி. பல்கலைக் கழகத்தில் கற்று வந்த நாட்களில், தத்துவ ஞானி. ஹெகல் (Hegel) இவர் உள்ளத்தைக் கவர்ந்தார். 18ஆம் நூற்றாண்டு இறுதிவரை ஜர்மானியத் தத்துவ ஞானிகள், பிரபஞ்சமும் மக்கள் சமுதாயமும் ஊழிக் காலம் வரை அன்றிருந்தது போல் மாறாமல் ஒரே மாதிரியாக இருக்கும் என்று கூறினர். ஆனால் ஹெகல் ‘ எல்லாவற்றுக்கும் வளர்ச்சியுண்டு ; அந்த நியதிக்கு மக்கள் சமூகமும் விலக்கல்ல. வளர்ச்சி மூன்று வித இயக்கங்களினால் உண்டாகிறது. வாதம் (Thesis) என்பது ஒரு காலத்தில் இருப்பது. எந்த வாதத்திற்கும் எதிர் வாதம் (anti-thesis) உண்டாவது இயற்கையியல்பு. இரண்டும் மோதும். அதன் விளைவு அவை இரண்டறக் கலந்து ஒரு புது நிலையைத் தோற்றுவிப்பது. புது நிலைக்குள்ளது புது வாதம் (Synthesis). அதற்கு விரைவில் முளைக்கும் ஓர் எதிர் வாதம். அவை மோதிக் கலக்கும். இன்னொரு புது வாதம் ஏற்படும். இவ்வாறு ஒவ்வொரு தடவையும் வாதங்கள் சுற்றுப்படிகள் (Spiral) மாதிரி உயர்ந்து கொண்டே போகும். இதுவே வளர்ச்சியின் இயல்பு’ என்று கூறிப் போந்தார். இத் தத்துவ ஞானம் கல்லூரி மாணவர்களிடையே ஓர் இன்பவெறியைக் கிளப்பிற்று. தத்துவ ஞானி ஹெகல் இளைஞர் உள்ளத்தைக் கவர்ந்தவர். ‘ இளைஞர்

ஹெகல்லிய இயக்கம்' என்றென்று தொடங்கப்பட்டது அதில் கார்ல் மார்க்ஸ் ஓர் உறுப்பினர். இந்த ஹெகல் தத்துவமே பின்னால் மார்க்ஸ் கூறும் வகுப்புப் போர்க் கொள்கைக்கும் சமூக வளர்ச்சித் தத்துவத்துக்கும் ஆதாரமாயிருந்தது.

**மார்க்ஸ் எழுதிய நூல்கள்**

இனி மார்க்ஸ் எழுதிய நூல்களைக் கவனிப்போம். முதலாவது 'கம்யூனிசப் பிரகடனம்' என்பது 1848-ல் நண்பர் என்சல்சுடன் கூட்டு ஆசிரியராக இருந்து மார்க்ஸ் வெளியிட்டது. இரண்டாவது 1859-ல் பதிப்பானது 'பொருளாதார நூலின் விமர்சனம்' (Critique of Political Economy) கடைசியாக அவருடைய தலை சிறந்த நூல் 'முதல்', மூன்று பாகங்கள் கொண்டது, 2500 பக்கங்கள் உள்ளது. தொழிலாளர்களின் 'வேதநூல்' என்னும் (Bible of the Working Classes) சிறப்புக்குரியது. முதல் பாகம் 1867-ல் பதிப்பாயிற்று. மற்றிரண்டு பாகங்களும் மார்க்ஸ் இறந்த பின்னரே பிரடரிக் என்சல்ஸ் மிகுந்த பக்தி சிரத்தையுடன் சிரமப்பட்டுத் தொகுத்துப் பதிப்பித்தார். 1883-ல் இரண்டாவது பாகமும், அதன்பின் 1889-ல் மூன்றும் பாகமும் வெளிவந்தன. அதன் பின் என்சல்சும் காலமானார். எஞ்சியிருந்த மார்க்சின் குறிப்புகளை ஒரே பாகமாகப் பதிப்பிக்க திட்டமிட்டிருந்தார் என்சல்ஸ். அவற்றைக் கூட்டிச் சேர்த்துப் பார்த்த ஜர்மானிய சோஷியலிசக் கட்சி பத்திரிகையின் ஆசிரியர் கவுட்ஸ்கி (Kautsky), அவற்றை மூன்று பாகங்கள் கொண்ட ஒரு புது நூலாக 'உபரி மதிப்புக் கொள்கை' (Theory of Surplus Value) என்னும் தலைப்பில் வெளியிட்டார். கம்யூனிசப் பிரகடனம் வெளியாவதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன், 1843-லேயே மார்க்ஸ் தமது புதிய கருத்துகளை உருவாக்கத் தொடங்கியிருக்கக் கூடும். இவர் 1883-ல் காலமானார். எனவே அவர் சுமார் 40 ஆண்டுகளாகச் சிந்தித்து எழுதியுள்ளவை அவருடைய நூல்கள். அவைகளெல்லாவற்றையும் சேர்த்து 'மார்க்ஸீயம்' என்பர். அது ஓர் இலக்கியக் காடு. அதற்குள் செல்லுவோர் கரடு முரடான பாதைகளையும், கல்லும் முள்ளும் போன்ற கருத்துகளையும், சிங்கம் கர்ஜனை செய்வது போன்ற மொழிப் பிரயோகத்தையும், வானம் கறுத்து இடி இடித்து மழை பெய்வது போன்ற உரைநடைப் போக்கையும் கண்டு கதி கலங்குவர். அந்தக் காட்டுக்குள் வழிதப்பித் தவிப்பவர் பலர். இத்தனை நூல்களையும் கற்றவர் உண்டா என்பது ஐயப்பாட்டுக்குரியது. அவற்றைக் கற்பதும் அவசியமில்லை என்பது சிலர் அபிப்பிராயம். ஆனால் மார்க்சின் 'முதல்' என்னும் நூலின் இரண்டு பாகங்களையும், கம்யூனிசப் பிரகடனத்தையும்

கற்றுணர வேண்டியது அவசியம் என்பதை யாவரும் ஒப்புக் கொள்வர்.

**கம்யூனிசப் பிரகடனம் (Communuist Manifesto)**

கம்யூனிசப் பிரகடனம் இருபத்திரண்டே பக்கங்கள் கொண்டது. ஆனுல் அவை தீயை உமிழும் பக்கங்கள். சோஷியலிச வாதத்தின் அடிப்படைக் கருத்துகளைத் தன்னுள்ளடக்கும் வாமனுவதாரமே அதுவென்ருல், பிரதம நூலாகிய 'முதல்' திரிவிக்கிரமாவதாரம் எனலாம். முன்னதில் கூறிய கருத்துகளைப் பொருளாதார தருக்க வழியில் சான்றுகளையும் புள்ளி விவரங்களையும் கணித முறையில் உதாரணங்களுடன் விளக்கியதே பின்னைய நூல். ஒன்று சூத்திரமானுல், மற்றது விளக்கமாகும். முன்னதில் பருந்தின் வீழ்வன்ன சூத்திர நிலையைக் காணலாம். பின்னதில் கங்கை வெள்ளத்தின் ஆற்ருெழுக்கைப் போல் நூல் விரிவடைவதைப் பார்க்கலாம். மார்க்ஸின் சோஷியலிசத்தை விளக்கும்போது இரண்டு நூல்களிலிருந்தும் கருத்துகளும் சான்றுகளும் பின்னிக்கொண்டுதான் போகும்.

கம்யூனிசப் பிரகடனம் என்னும் சிறு நூல் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. முதல் பகுதியில் 'நடுத்தர வகுப்பினருக்கும் உழைப்பாளர்களுக்கும்' என்ற தலைப்பில் மார்க்ஸீயத்தின் சாரம் வடிகட்டித் தரப்படுகிறது. 'உழைப்பாளர்களும் கம்யூனிஸ்டுகளும்' என்ற இரண்டாவது பகுதியில் கம்யூனிசத் திட்டம் உருவாகிறது. மூன்ருவது பகுதி சோஷியலிசக் கம்யூனிசம் பற்றியது. மார்க்சுக்கு முன்னுல் இளங்காற்றுப் பருவம் என்று நாம் கூறிய காலத்தில் தோன்றிய சோஷியலிச வாதிகளைப் பகற் கனவுகள் என்று வசைபாடும் பகுதி இது. நான்காவது பகுதி முடிவுரை. 'உலகத்து உழைப்பாளர்களே! ஒன்று சேருங்கள். நீங்கள் கம்யூனிசக் கட்சியில் சேருவதானுல் உங்கள் கால் விலங்குகளைத் தவிர நீங்கள் வேறு ஒன்றையும் இழக்கப் போவதில்லை. உலகம் முழுவதையும் வெல்ல வாய்ப்பு உண்டு' என்ற புகழ் பெற்ற அறை கூவலுடன் முடிவடைகிறது.

கம்யூனிசப் பிரகடனத்தில் காணும் சில முக்கிய கருத்துகள் வருமாறு :

(i) அரசு ஒரு வகுப்பு வாத நிறுவனம். பொருள் வலிமை மிக்க வகுப்பினரின் விருப்பத்தைப் பிரதிபலிக்கும்.

(ii) உழைப்பாளி ஓர் உயிரற்ற பண்டம் என்ற நிலைக்குத் தாழ்த்தப் பட்டிருக்கிருன்.

(iii) வகுப்புப் போர் வரலாற்று ஏட்டில் பொறித்த தொரு உண்மை.

(iv) நடுத்தர வகுப்பினருக்கும் (bourgeoisie) உழைப்பாள ருக்கும் நடுவில் வாழும் சிறு வருமானக்காரரை இரு வகுப்பினரும் நசுக்கி விடுவார்கள்.

(v) மாறி மாறி வரும் பொருளாதார மந்தத்தினாலும், வேலையின்மையாலும் உழைப்பாளர் கூலி பிழைப் புக் கூலி மட்டத்துக்குத் தாழ்ந்து விடும்.

(vi) அரசியல் உணர்ச்சி உதயமானபின், உழைப்பாளர் கள் தொழிற் சங்கங்கள் அமைத்து, அவற்றின் உதவியால் நடுத்தர வகுப்பினரிடம் போரிடுவர்.

(vii) முதலாளித்துவம் உலகமெங்கும் வியாபித்திருந்தா லும், வகுப்புப் போர் ஒவ்வொரு நாட்டின் எல் லைக்குள் நடக்கும்.

(viii) அதி வேகமாகத் திரளும் முதலினை நம்பியிருக்கிறது முதலாளித்துவம்.

**'முதல்' எனும் நூல்**

கார்ல் மார்க்ஸின் 'முதல்' எனும் நூலில் முதலாவது இரண்டு பாகங்கள் எட்டுப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மொத்த அதிகாரங்கள் முப்பத்து மூன்று. பல அதிகாரங்களை யொட்டிச் சிறு சிறு தொகுப்புகள் பல. இந்த இரண்டு பாகங்களின் நீளம் 850 பக்கங்கள். பகுதிகளின் தலைப்புகள் வருமாறு : (1) பண்டங்களும் பணமும் (இதில்தான் பெயர் பெற்ற உழைப் புக் கொள்கை இடம் பெறுகிறது.), (2) பணம் மூலதனமாக மாறு தல், (3) 'தனி நிலை உபரி மதிப்பு' உண்டாகும் விதம், (4) ஒப்பு நிலை மிச்சமதிப்புக் கருத்தும் விளக்கமும். இதில் இயந்திரத்தின் உதவி, தொழிலாளரும் இயந்திரமும், ஆலைத் தொழில் வளர்ச்சி, ஆலைச் சட்டங்கள் பற்றிய வரலாறும் விமர்சனமும் என்ற தலைப் புகள் உள்ளன. (5) தனி நிலை, ஒப்பு நிலை, உபரி மதிப்பு என்பன வற்றைப்பற்றி மீண்டும் ஆராய்ச்சி (மார்க்ஸீயமே உபரி மதிப் பென்னும் அடிப்படையில் எழுப்பிய கட்டுக்கோப்பு என்பது குறிப்பிடத்தக்கது.) (6) கூலிகள் (7) முதலின் வளர்ச்சியும் அதன் காரணங்களும், அதற்கு வசதியான சூழ்நிலையும் (8) தொழில் புரட்சிக்கு முந்திய காலத்தில் முதல் திரண்ட வழிகள்.

மார்க்ஸைப் பற்றி முதலில் அறிய வேண்டியது அவருடைய ஆழ்ந்த அகன்ற கல்வி அறிவே ஆம். தத்துவ நூலில் டாக்டர் பட்டம் பெற்றவராயிற்றே! புரட்சிப் பொருளாதாரத்தின் குரு இவரே எனினும் வெறுப்புணர்ச்சியுடனும் வெறியுடனும் ஹிம்சா

மார்க்கத்தில் செல்வதை வெளிப்படையாகவே கண்டித்தவர். சாகுமுன் இம் மண்ணுலகமே பொன்னுலகமாகும் என்று கூறிய அவர் கருத்துகள், ஒரு சமயக் கோட்பாட்டின் வேகம் பெற்றதில் வியப்பில்லை. மார்க்ஸ் சமூக நூல் பேரறிஞரும் ஆவர். வரலாற்று நூல்களின் நுட்பமுணர்ந்த மேதையும் ஆவர் கடைசியாகப் பொருளியல் ஞானி. நமக்கு வேண்டியது மார்க்ஸின் பொருளியல் கொள்கைகளே. அவற்றின் சாரத்தைப் பத்துச் சூத்திரங்களாக விளக்கலாம். (1) வரலாற்றின் போக்கும் பொருளாதாரக் காரணியின் சக்தியும் (2) வகுப்புப் போர் (3) உழைப்புக் கொள்கை (4) உபரி மதிப்புக் கொள்கை (5) மாறும் முதலும் மாறா முதலும் (6) முதல் திரளும் கொள்கை (7) முதல் குவிதல் கொள்கை (8) வேலையற்றோர் படை வளர்ச்சி (9) வியாபாரச் சகடக் கொள்கை (10) முதலாளித்துவத்தின் வீழ்ச்சி.

**(1) வரலாற்றின் போக்கும் பொருளாதாரக் காரணியின் சக்தியும்**

நாகரீகம் உதயமானதிலிருந்து மனித வரலாறு பலவித மாறுதல்களை அடைந்திருக்கிறது. இதற்கு முக்கியக் காரணம் பொருளாதார அமைப்பில் ஏற்பட்ட மாறுதல்கள் என்பது மார்க்ஸின் கருத்து. இந்தச் சூத்திரத்துக்கு மேலெழுந்தவாறு கொடுக்கும் தவறான விளக்கத்தைப் பார்ப்போம். மனிதனுடைய செயல்களுக்கெல்லாம் பொருளாதார நோக்கமே அடிப்படை. இராவணன் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு வந்தது சாம்ராஜ்ய வெறியினாலல்ல; சீதாதேவியைச் சிறையெடுத்துச் செல்வதற்கல்ல; இலங்கையில் பொருள்வளம் நலியத் தொடங்கியதால், பரதகண்டத்தை அடிமைப் படுத்தி, இலங்கை வாழ் மக்களின் வாழ்கைத் தரத்தை உயர்த்த என்று கூட இச் சூத்திரத்திரத்திற்கு அர்த்தம் புகட்டலாம். இதுபோலவே, டிராஜன் போரின் காரணம் பேரிஸ் என்னும் அழகன் ஹெலன் என்னும் பேரழகியைக் கவர்ந்து சென்றதல்ல ; கிரேக்கரினது பொருளாதார நோக்கமே காரணம் என்றாகும். தங்கள் நாடு வளம் குன்றவே சிறிய ஆசியா மேல் படையெடுத்தனர். அதற்குப்பின் உலகத்தில் மூண்ட போர்கள் எல்லாம் அரசியல் நோக்கு, பேரரசு வெறி ஆகியவையல்லாமல் பொருளாதாரக் காரணத்துடன் தொடுத்தவை என்றாகும். நபிநாயகத்துக்குப்பின் அரபியர்கள் பல நாடுகளை வென்றது இஸ்லாமிய மதத்தைப் பரவ செய்வதற்கல்ல. பொருளாதார நோக்கம் தான் என்றாகும். தனி மனிதனுக்கு இலாபம் அடைவதைப் பற்றிய கவலை தவிர, வேறு கவலையோ ஆசையோ கிடையாது என்றாகும். நாட்டுப் பற்று, பெற்றோரிடம் பக்தி, தியாக உணர்ச்சி, சமயப் பற்று, தாய் உள்ளம், உடன் பிறந்தார் வாஞ்சை போன்ற பற்பல இலட்சியங்களும் மக்களைச் செயலாற்றத் தூண்டும் எனும்

உண்மைக்கு இடமில்லாது போய்விடும். இவ்விதமாகப் பொருள் வய மனிதன் (Economic man) என்ற பயங்கரப் பிராணியைப் படைத்ததாக மார்க்ஸின் சூத்திரத்துக்குப் பொருள் கொள்வது உண்டு. அது தவறு.

பொருளாதார அமைப்புக் காலத்துக்குக் காலம் மாறுகிறது. கற்கள் பொருளாக்குக் கருவிகளாக இருந்த பண்டைக் கற்காலம் ஒன்று. ஆடு மாடு மேய்த்து மக்கள் வாழ்ந்த காலம் ஒன்று. நிலத்தை உழுது பயிரிட்ட காலம் ஒன்று. குடிசைத் தொழில் வளர்ந்த காலம் ஒன்று. ஆலைத் தொழில் காலம் ஒன்று. ஒவ்வொரு காலத்திலும் பொருள் தேடும் வழியே மக்களின் சமய, ஒழுக்க, அரசியல், கலாச்சார அமைப்புகளுக்கு ஆதாரமாகிறது. பழங் கற்காலத்தை எடுத்துக் கொள்வோம். சமூக அமைப்பு ஒரு விதம், காட்டுமிராண்டிக் குடும்பங்கள் மலைக் குகைகளிலும் மரக்கிளைகளில் பரண்களிலும் வாழ்ந்த காலம் அது. ஒரு குடும்பத் தலைவன் மற்றொருவனைக் கண்டால் பகை யுணர்ச்சி கொண்டு கொல்வது தான் குறிக்கோள் என மக்கள் வாழ்ந்த காலம். ஆடு மாடு மேய்த்த காலத்தில் ஒருவகை அமைதி நிலவியது. அஹிம்சா தர்மம் பரவியது. விவசாயம் வியாபித்திருந்த காலத்தில், ஜமீன்தார்கள், குத்தகைக் குடிகள் என்ற இடைக்கால படைமானியத் திட்டமும் சமூக அமைப்பும் ஏற்பட்டன. குடிசைத் தொழில் வளர்ச்சி பெற்ற காலத்திற்குப் பின் சமூக அமைப்பு வேறு ஒரு வகையாயிற்று. ஆலைகள், நகரங்கள், முதலாளிகள், தொழிலாளர்கள் என்ற பலபிரிவுகளாகப் பொருளாதார அமைப்பு மாறியபோது, அதற்கேற்பச் சமூக அமைப்பும் மாறியது. (இந்த மாறுதல்களை வணிக வாத முன்னுரையில் குறிப்பிட்டிருக்கிறோம்). எனவே, மக்கள் பொருளீட்டும் வகையும் வழியுமே பொருளாதார சமூகத்தின் அமைப்பை நிர்ணயிக்கும் எனலாம். பொருளாதார அமைப்பே சமயம், ஒழுக்கம், அரசியல், சட்டதிட்டங்கள், பண்பாடு, இலக்கியம், கலை முதலிய எல்லாத் துறைகளின் இயல்பையும் அமைப்பையும் பாதிக்கும்; மாற்றும்; நிர்ணயிக்கும்; அவற்றின் ஆதாரமுமாகும் என்று இச் சூத்திரத்திற்கு மார்க்ஸே விளக்கம் தருகிறார். இதை ஜே. ஏ. ஷும்பீட்டர் (J. A. Schumpeter) என்னும் அமெரிக்கப் பொருளாதார அறிஞர் சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளார். பொருளாதார அமைப்பு எப்பொழுதும் மாறிக் கொண்டேயிருக்கிறது. கற்காலம், உலோக காலம், வேட்டையாடிய காலம், மாடு மேய்த்த காலம், உழவுத் தொழிற் காலம், கைத்தறிக் காலம், விசைத்தறிக் காலம் என்று ஒன்றிலிருந்து அடுத்தது தானாகவே முளைத்து வளர்ந்து வந்திருக்கிறது என்பதுதான் அவரது முதலாவது கருத்து.

இந்தப் பொருளாதார மாறுதல்கள் பிற துறைகளிலும் மாறுதல் களை உண்டாக்கி விடுகின்றன என்பது இரண்டாவது கருத்து. இவை முற்றும் உண்மையல்ல. பேரரசு வெறி பொருளாதார அமைப்பை மிகப் பெரிய அளவில் மாற்றியிருக்கிறது. புதிய சமயத் தலைவர்களின் உபதேசங்கள் அரபு மக்கள் வாழ்க்கை நெறியை மாற்றிப் பொருளாதார அமைப்பையும் மாற்றியிருக் கின்றன. மறு மலர்ச்சிக் காலத்திலும், தற்காலத்திலும், விஞ் ஞானிகள் இலாப நோக்குடன் விஞ்ஞான ஆராய்ச்சியிலும் சோதனையிலும் கண்டுபிடிப்புகளிலும் ஈடுபடவில்லை. எனினும் அவர்கள் முயற்சியின் வெற்றி புரட்சிகரமான அளவுக்குப் பொருளாதார அமைப்பை மாற்றிருப்பது கண்கூடு. பொருளா தார அமைப்புச் சமூக அமைப்பைப் பாதிக்கும். மாற்றும், ஆனால் பின்னது முன்னதைப் பாதிக்காது, மாற்றாது என்று எண்ண நியாயமில்லை ; அவ்வாறு எண்ணுவதை வரலாறு ஒப்புக் கொள் ளாது. இரண்டும் ஒன்றையொன்று பாதிக்கின்றன. அவற் றின் கலப்பினால் மலர்வதுதான் மக்கள் வரலாறும், அதன் திருப் பங்களும், முன்னேற்றமும் என்பதே முழு உண்மை. மார்கஸின் இச் சூத்திரம் பாதிதான் உண்மை. ஆனால் ஒரு முழு உண்மை யின் தோற்றம் பெற்று நம்மை ஏமாற்றுகிறது.

(2) வகுப்புப் போர் (Class War)

'சமூக வரலாறு வகுப்புப் போரின் வரலாற்றைத் தவிர வேறில்லை' என்பது கம்யூனிசப் பிரகடனத்தின் கூற்று. ஆதி யிலிருந்து இந் நாள்வரை உலக வரலாற்றில் சமூகம் பிளவுபட்டு இரண்டு கூறாக எப்பொழுதும் பகை உணர்ச்சியுடன் ஒன்றோ டொன்று மோதிப் போரிட்டு வாழ்ந்ததைக் காணலாம் என்கிறார் மார்க்ஸ். சமூகம் பல குழுவினால் பாழாகும் என்பதல்ல மார்க்ஸின் கருத்து. எப்பொழுதும் எக்காலத்திலும் சமூகத்தில் இரண்டே வகுப்புகள் தோன்றி வலுத்து ஒன்றை யொன்று பகைக்கின்றன என்பது தான் அவர் கட்சி. ஒரு வகுப்பினர் சொத்துக்கு அதி பதிகள்; மற்றொரு வகுப்பினர் சொத்து என்பது யாதொன்று மில் லாத ஏழைகள். முதல் வகுப்பினர் இரண்டாவது வகுப்பினரைத் துன்புறுத்திச் சுரண்டி, அவர்கள் உழைப்பின் பயனைத் துய்ப் பவர். இந்தக் கருத்தை விளக்கி அணி செய்யும் வகையில் கீழே கண்டவாறு மார்க்ஸ் எழுதுகிறார் : சுதந்திர மனிதனும் அடிமை யும், பட்ரீஷியனும் (Patrician), பிளிபியனும் (Plebian)-ரோமா புரிப் பிரபுக்களும் பாமரர்களும், ஜமீன்தாரும் குத்தகைக் குடி மக்களும், தேர்ந்த தொழில் வினைஞனும், பயிற்சி பெறுவோனும், சுருங்கக் கூறின், கொடுமைப் படுத்துவோனும் கொடுமைக் குள்ளானவனும் எப்பொழுதும் ஒருவர்க்கொருவர் எதிராக நின்று

கொண்டு, சில சமயங்களில் வெளிப்படையாகவும், சில சமயம் மறைமுகமாகவும், இடைவிடாது போரிட்டுக் கொண்டு வந்திருக்கின்றனர். இத்தகைய போரில் சமூகம் ஒரு புரட்சிகரமான மாறுதல் அடைந்திருக்கிறது அல்லது இரு வகுப்பினரும் நாசமாகியிருக்கின்றனர்.' இந்தக் கொள்கைக்கு முன் கூறியபடி ஹெகல்லின் தத்துவமே ஆதாரம் என்பதைப் புரிந்து கொள்வது எளிது.

தற்காலத்தில் நடுத்தர வகுப்பினரும் உழைப்பாளர்களும் ஒருவருக்கொருவர் எதிராக நிற்கின்றனர் என்பது மார்க்ஸின் வாதம். இடைக் காலத்தில் கொடுமை செய்து வாழ்ந்த ஜமீன்தார்களை ஒழிக்கும் ஒரு மாபெரும் சேவைச் செய்தவர்கள் நடுத்தர வகுப்பினர் என்பதை மார்க்ஸ் ஒப்புக் கொள்கிறார். ஆனால், தற்கால ஆலைத் தொழில் நாகரீகத்தில் இந்த நடுத்தர வகுப்பினர் முதலாளிகளாகி விட்டார்கள். உழைப்பாளர்களைச் சுரண்டி (exploit) வாழ்கின்றனர். கையால் பாடுபடாமல், மெய் வருத்தமின்றிச் செல்வம் ஈட்டி வாழ்பவர் நடுத்தர வகுப்பினர். இவர்கள் பெரிய அளவில் அல்லது சிறிய அளவில் சொத்துள்ளவர்கள். அவர்களில் சிலர் தங்கள் முயற்சியாலும் தந்திரத்தாலும் பெரிய தொழிலதிபர்களாகவும், வணிகப் பெரு மக்களாகவும் ஆகி விட்டார்கள். இவர்கள் நடுத்தர வகுப்பினரில் உயர்ந்தோர். ஆனால் பெரும்பான்மையினர் நடுத்தர வகுப்பின் கீழோரே. சிறு கடைக்காரர், சில்லரை வியாபாரிகள், சிறிய நிலச் சுவான்கள், கைத்தொழில்காரர்கள் ஆகியோர் எல்லோரும் விரைவில் சொத்தில்லாத உழைப்பாளர்களாகிக் கொண்டிருக்கின்றனர். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. (1) இவர்களிடமுள்ள குறைந்த அளவுச் சொத்துப் பெருந்தொழிலதிபருடனோ வணிகருடனோ போட்டியிடப் போதுமானதல்ல. எனவே, அவர்கள் போட்டியில் நசுக்கப்பட்டு நஷ்டமடைந்து பாட்டாளி மக்களாகி விடுகின்றனர். (2) நெசவாளர், தட்டார் போன்றவர்களின் தொழில் நுட்பம் எல்லாம் புதிய இயந்திர சாதனைகளுக்கு எதிரே மதிப்புக் குறைவதால், அத் தொழில்களில் ஈடுபட்டவர்கள் சீர் குலைந்து பாட்டாளி மக்களாக மாறி விடுகின்றனர். இப்படிப் பாட்டாளி மக்கள் கூட்டத்தில் பல துறைகளிலிருந்தும் பலர் வந்து சேர்கின்றனர்.

தொழில்-வணிகத் துறையில் முதலாளித்துவ முறையினால் நடக்கும் கடும் போட்டியினால் நடுத்தர வகுப்பில் கீழோர் மறைந்து கொண்டே போவர். 'சிறிய மீனைப் பெரிய மீன் விழுங்கும்' என்னும் இயற்கை விதி முதலாளித்துவ சமுதாயத்தில் நன்கு கட்டுப்பாடின்றி ஆட்சி புரியும். காலப் போக்கில் ஒரு சிறிய

கூட்டம் நாட்டிலுள்ள பொருளாக்குச் சாதனங்கள் - ஆலைகள், கப்பல்கள் - எல்லாவற்றுக்கும் சொந்தக்காரராகி விடும். ஏனைய மக்கள் யாவரும் அவர்கள் உத்தரவின்படி அவர்கள் கூறும் கூலி, நேரம், அளவு முதலிய நிபந்தனைகளுக்குட்பட்டுப் பாடுபட்டு வயிறு வளர்க்கும் பாட்டாளி மக்கள் ஆவர். சொத்துடையவர் ஒரு புறம், சொத்து என்பதே இல்லாதார் மறுபுறம். உண்டுகளித் திருப்பவர் ஒரு புறம், உழைத்து நலிபவர் மறுபுறம், சுரண்டுபவர் ஒரு புறம், சுரண்டப் படுபவர் மறுபுறம். பறித்துச் சாப்பிடுபவர் ஒரு புறம், பறிக்கப்படுபவர் மறுபுறம். ஒரு சில கொழுத்த பணக்காரர் ஒரு புறம், கோடிக்கணக்கான வறியவர் மறுபுறம். இத்தகைய நிலை முற்றிக் கொண்டே போகும். கடைசியில் முதலாளிகளின் கொடுமை வரையறையின்றித் தலைவிரித்தாடும். பாட்டாளி மக்களின் வறுமைத் துன்பம் பொறுக்க முடியாத நிலையை எட்டும். பாட்டாளி மக்கள் கடல்போல் கொந்தளித் தெழுந்து முதலாளிகளின் ஆலைகளையும் பிற சொத்துகளையும் கைப்பற்றிக் கொள்வர். பறித்து வாழ்ந்தவர் பறிக்கப் படுவர். எல்லாப் பொருளாக்குச் சாதனங்களும் சமூக மயமாகும்; சமூகத் தின் பொதுச் சொத்துக்களாக மாற்றப்படும். முதலாளிகள் ஒழிக்கப்படுவர். முதலாளித்துவம் மடியும். அந்த இடத்தில் சோஷியலிச அல்லது கம்யூனிச சமுதாயம் பிறக்கும். இதுவே மார்க்ஸ் கூறிய வகுப்புப் போர்க் கொள்கையும், அதன் விளைவும், முடிவும் ஆகும்.

எப்பொழுதும் சமூகம் மார்க்ஸ் கூறும் விதம் இரண்டாகப் பிளவுபட்டுப் போரில் ஈடுபட்டிருப்பதில்லை. பல்வேறு வகுப்பு கள் ஏணிப்படிகள் போல் சமூகத்திலிருக்கின்றன. ஒவ்வொரு படியிலிருப்பவர்களும் அடுத்த படியிலிருக்கும் மக்கள் எப்படி வாழ்கின்றனர் என்று கூர்ந்து நோக்கித் தங்கள் வாழ்க்கையை யும் அப்படி மாற்றியமைப்பதில் ஆர்வம் கொண்டவர். மேலே இருப்பவர்களை அழிப்பதைவிட, அவர்களைப்போல் வாழவேண்டு மென்ற ஆசையே அதிகமாக யிருக்கிறது. போட்டியைவிடப் பின்பற்றுதலே மிக்கப் பெருஞ் சிறப்புப் பெற்று விடுகிறது. இதனால் வகுப்புப் போராட்டம் மார்க்ஸ் கூறிய அளவுக்குக் கடுமை யாகாமலிருக்கும். மேலும், பொருளாதாரம், சொத்து முதலிய காரணங்கள் சமூகத்தை இரண்டு கூறாகப் பிரித்தாலும், சமயம், பண்பாடு, விளையாட்டு முதலியன அவ்விரு வகுப்பினரையும் பல அரங்குகளில் ஒன்று கூட்டுவிக்கின்றன. எனவே, மார்க்ஸ் கூறிய சோதிடம் ஆங்கில நாட்டில் (அங்கேயுள்ள பொருளாதார அமைப்பை ஆதாரமாகக் கொண்டு அலசி ஆராய்ந்தவர் மார்க்ஸ்) இன்றுவரை பலிக்கவில்லை. இதுவே வகுப்புப் போர்க் கொள்கை

குறைபாடுள்ளது என்பதற்குப் போதுமான சான்று. பின்னால் தோன்றிய அமெரிக்கப் பொருளாதார ஞானி தார்ஸ்டீன் பி. வெப்லன் (Thorstein B. Veblen) என்பவர் ' அண்டை வீட்டுக் காரர் வாழ்வது மாதிரி மக்கள் வாழ வேண்டும் என்ற ஆசை பிறவிக்குணம் ' என்று வலியுறுத்தியுள்ளார். செல்வத்தில் சிறந்தவர் மாதிரி ஏனையோரும் பண்டங்களைத் துய்ப்பதில் மோகம் கொள்வது மனித குலத்தின் இயற்கைப் பண்பு எனவும் கூறியுள்ளார். இந்தப் பண்புகளால் கார்ல் மார்க்ஸ் கூறிய வாறு சமுகங்கள் இரண்டு துண்டாகப் பிளவு பெறவில்லை.

(3) உழைப்பு வாதம் (Labour theory of Value)

உழைப்பு வாதம் என்பது பண்டங்களின் மதிப்பு எவ்வாறு நிர்ணயிக்கப் படுகிறது என்பதைப் பற்றி மார்க்ஸ் வகுத்த சூத்திரம். இவ் வாதம் முழுவதிலும் மார்க்ஸ் தொன்மை நூல் மும்மணிகளில் ஒருவராகிய ரிக்கார்டோவைப் பின்பற்றித் தருக்க முறையில் முடிவு காண்பது சுவையுள்ளதொரு திருப்பம். எனவே, மறுப்பு நூலின் தந்தையாகிய மார்க்ஸ் தொன்மை நூலாரின் சீடனாகத் திகழ்வது பொருளாதார சிந்தனை வரலாற் றில் விதி செய்த சதிபோல் அமைகிறது. எனவே கார்ல் மார்க்ஸ் தொன்மை நூலின் இறுதித் தோன்றல், கடைசி மேதை என எள்ளப் படுதலும் உண்டு. மார்க்ஸின் உழைப்புவாதம் தொன்மை நூலின் பரம்பரையில் வந்ததென்றும், ' தொன்மை நூலின் ஒரு கிளை ' என்றும் அறிஞர் கூறுவர்.

மார்க்ஸின் உழைப்பு வாதம் என்னவென்பதை இனி ஆராய் வோம். மனிதனின் உழைப்புதான் பண்டங்களின் மதிப்பை உண்டாக்கும் கருவி என்றும், அளவுகோல் என்றும் மட்டும் கூறி மார்க்ஸ் நிறுத்தி விடவில்லை. உழைப்புதான் பண்டத்தின் மதிப்பு என்றே வலியுறுத்துகிறார். நிலம் போன்ற இயற்கைச் சாதனங்கள் மதிப்பை உண்டாக்கவில்லை என்றும் பண்ட மதிப்பை உருவாக்குவதில் முதலுக்கு ஒரு பங்கும் கிடையாது என்றும் முடிவுகட்டுகிறார். மதிப்பை மரபுப்படியே இருவகையா கப் பிரிக்கிறார். ஒன்று உபயோக மதிப்பு (Value in use); மற்றது பரிவர்த்தனை மதிப்பு (Exchange Value). ஒரு கிலோ சர்க்கரை கால் கிலோ மிளகு வற்றலுக்குச் சமம் என்று வைத்துக் கொள் வோம். சர்க்கரைக்கும் மிளகு வற்றலுக்கும் இடையே மணம், வண்ணம், சுவை யாதொன்றிலும் பொதுவான பண்பு ஒன்றும் இல்லை. பொதுப் பண்பு இல்லாவிட்டால் எப்படி அவை இரண்டும் சமமானவையென்று சொல்லக் கூடும் என்று கேட் கிறார் மார்க்ஸ். அதற்கு விடையிறுக்கும் முறையில் தம் கொள்கைகளை விளக்குகிறார். சர்க்கரை, மிளகு வற்றல் போன்று

வேறுபாடுகள் மிகுந்த இரண்டு பண்டங்களிடையேயும் ஒற்றுமையிருப்பது உடலுக்குள் உயிர்போல மறைந்து கிடக்கும் உழைப்பே ஆகும். ஒரு கிலோ சர்க்கரை, கால் கிலோ மிளகு வற்றல், இரண்டின் உற்பத்திக்கும் வேண்டும் உழைப்பு ஒரே அளவாக இருப்பதனுல்தான் அவை சமமெனக் கருதுகிறோம் என்கிறுர் மார்க்ஸ். (அவருடைய நூலில் தரும் எடுத்துக்காட்டு ஒரு சிறு வீடும் ஐந்து படுக்கைகளும் சமமென்பது). ஒவ்வொரு பொருளின் மதிப்பும், அதில் உறைந்து, ஆனுல் கண்ணுக்குப் புலப்படாது கிடக்கும் உழைப்பின் அளவு என்பது மார்க்ஸின் கூற்று.

பரிவர்த்தனை மதிப்புள்ள பண்டங்களெல்லாம் உழைப்பின் விளைவே என்பது மார்க்ஸின் கருத்து. வளம் மிக்க நிலம், மேய்ச்சல் புல்காடுகள் முதலிய இயற்கை வளங்களுக்கு உபயோக மதிப்புத்தான் உண்டு. பரிவர்த்தனை மதிப்பு கிடையாது என்பதற்கு விளக்கமொன்றும் தராமல் பிடிவாதமாகக் கூறுகிறுர் மார்க்ஸ்.

**சமூக நலனுக்கு அவசியமான உழைப்பு (Socially necessary labour)**

நீரில் அமிழ்ந்து போகும் கப்பல், வானில் எழும்பிப் பறக்காத விமானம், வலுவும் கெட்டியுமில்லாத எஃகு இவைகளை உண்டாக்க ஆயிரக்கணக்கில் தொழிலாளரின் உழைப்பே பயனு கிறது என்று வைத்துக்கொள்வோம். ஆனுல், அவை உபயோக மற்றவை. அவைகளுக்கு உழைப்புக்குத் தக்கவாறு பரிவர்த்தனை மதிப்பு இருக்க முடியாதல்லவா? இக் கேள்விக்கு மார்க்ஸ் அளிக்கும் பதில் வருமாறு. எல்லா உழைப்பும் உழைப்பல்ல. சமூகத்துக்குப் பயன் நல்கும் உழைப்புதான் கணக்கிலெடுக்கப் படும். அதைத்தான் 'சமூக நலனுக்கு அவசியமான உழைப்பு' என்று மார்க்ஸ் கூறுகிறுர். பரிவர்த்தனை மதிப்புக் கிடைக்க உழைப்பு மாத்திரம் இருந்தால் போதாது. பண்டங்களுக்கு உபயோக மதிப்பு அல்லது பயன் நல்கும் பண்பும் வேண்டும் என்றுகிறது. ஆனுல், பயனும் மதிப்பை நிர்ணயிக்கும் என்ற கொள்கையை மார்க்ஸ் ஒப்புக்கொள்ளவில்லை.

**திறமை வேறுபட்ட உழைப்பு**

பொறியியல் நிபுணர், எண்ணெய் வணிகர், விஞ்ஞானி, விறகு வெட்டி போன்ற உழைப்பாளர்களின் உழைப்பில் எவ்வளவோ திறமை வேறுபாடுகளிருக்கின்றன. அவற்றை யெல்லாம் அளந்து மதிப்பிடுவது ஒரு கடுமையான பிரச்சினை. அதற்குச் சராசரி உழைப்பு என்று ஒன்றைக் கற்பனை செய்து கொள்ளச் சொல்கிறுர் மார்க்ஸ். பிறகு மற்ற உழைப்புகளை


யெல்லாம், அவற்றின் திறமை உயர்வுக்கும், நுட்பத்துக்கும் ஏற்பப் பெருக்கி மதிப்பைக் கணக்கிட வேண்டும் என்பது அவர் கருத்து. கற்பனை செய்யவேண்டிய சராசரி உழைப்பே திட்ட மாக வரையறுத்துக் கூறமுடியாததொரு புதிர். அதன்பின் இன்னின்ன உழைப்பை இன்னின்ன விதம் பெருக்கவேண்டு மென்பது எல்லோரும் ஒப்புக் கொள்ளமுடியாத வேறொரு புதிர்.

### (4) உபரி மதிப்புக் கொள்கை (Theory of Surplus Value)

இக் கொள்கையை வகுப்பதிலும் மார்க்ஸ் தொன்மை நூலா ருக்கு மிகக் கடமைப்பட்டுள்ளார். ரிக்கார்டோவின் பிழைப்புக் கூலிக் கொள்கையும் மால்தசின் மக்கட்தொகைக் கொள்கையும் உபரி மதிப்பைத் தாங்கும் இரு தூண்கள். மார்க்ஸியம் இதனு லும் தொன்மை நூலின் தொடர்ச்சியேயன்றி எதிர்ப்பு வாதம் அல்ல என்று சிலர் கூறுவதிலும் நியாயம் உண்டு.

ரிக்கார்டோவின் பிழைப்புக் கூலிக்கொள்கை உழைப்பாளர் களையும், உயிரற்ற பண்டங்களையும் ஒரே இனம் எனக் கருதியது. விலை கூடினால் பண்டங்கள் உற்பத்தி கூடுவது போல, உழைப்பாளர் எண்ணிக்கையும், கூலி கூடினால் கூடும். உழைப்பாளர் வேண்டுமளவுக்குக் கிடைத்துக் கொண்டே யிருக்குமானால் முதலாளிகள் பிழைப்புக் கூலியாவது கொடுத்தே தீரவேண்டும் என்பது நாம் முன் கற்றதே ஆம். இனி ஒரு தோல் பதனிடும் தொழிற்சாலை முதலாளியை எடுத்துக் கொள்வோம். மக்கட்தொகை மிகுதியினால் உழைப்பாளர்களுக்கிடையே வேலைக்குக் கடுமையான போட்டி எழுகிறது. ஒரு நாளைக்கு அவர்களின் பிழைப்புக் கூலி ரூ. 2-50 என்று கொள்வோம். ஓர் உழைப்பாளர் நாள் ஒன்றுக்கு 8 மணி நேரம் வேலை செய்வதால் ஆக்கப்படும் பொருளை முதலாளி ரூ. 4-00 க்கு விற்கிறார் என்றும் கொள்வோம். அப்படியானால் ஓர் உழைப்பாளியின் உழைப்பின் மதிப்பு (ரூ. 4-00) அதிகமாகவும், அவருக்குக் கிடைக்கும் கூலி (ரூ. 2-50) குறைவாகவுமிருக்கிறதென்று தெரிகிறது. இவ் விரண்டு தொகைக்கும் உள்ள வித்தியாசம்தான் உபரி மதிப்பு. இந்த உபரி மதிப்பை முதலாளி தன்னுடையதாக்கிக்கொள்கிறார். தோல் பதனிடும்சாலையில் 300 பேர் வேலை பார்த்தால் நாள் ஒன்றுக்கு $300 \times 1\text{-}50 =$ ரூ. 450 உபரி மதிப்பு ஆகும். இப்படி உண்டாகும் உபரி மதிப்பைக் கைப்பற்றித்தான் முதலாளிகள் முதல் உண்டாக்குகின்றனர் என்கிறார் மார்க்ஸ். மேலும் முதலாளி களின் இயல்பு முதலீட்டலும், அதற்கு எத்தனை குறுக்கு வழிகள் உண்டோ அவற்றை எல்லாம் முழுவதும் பயன்படுத்தலும் ஆம். அதிகமாக உபரி மதிப்புக் கிடைக்க இரு வழிகள் உண்டு:

(1) உழைப்பாளர்களை 8 மணி நேரம் உழைக்க வேண்டியவர்களை, 10 மணி நேரம் உழைக்க பண்ணினுல், மொத்தம் உற்பத்தியான பண்டங்களின் பரிவர்த்தனை மதிப்பு ரூ. 5-00 ஆகும். உழைப்பாளர் ஒருவரின் உழைப்பினுல் அதிக உபரி மதிப்பு ரூ. 5-00— ரூ. 2-50=ரூ. 2-50 கிடைக்கும். (2) பிழைப்புக் கூலியை ரூ. 2-50 லிருந்து ரூ. 2-00 ஆகக் குறைத்தாலும் ஒவ்வோர் உழைப்பாளர் உழைப்பின் பயனுக ரூ. 0-50 அதிகமான உபரி மதிப்புக் கிடைக்கும்.




மேலே காட்டியிருக்கும் படத்தில் 'அ இ' என்பது உழைப்பின் பரிவர்த்தனை மதிப்பு. 'அ, ஆ' பிழைப்புக் கூலி. 'ஆ இ' உபரி மதிப்பு அதிக நேரம் உழைக்கச் செய்தால், உழைப்பின் பரிவர்த்தனை மதிப்பு 'அ ஈ' ஆகிறதென்ருல், உபரி மதிப்பு 'ஆ ஈ' ஆகும். இது முதல் வழியினுல் கிடைக்கக்கூடிய அதிக உபரி மதிப்பு.

மொத்தப் பரிவர்த்தனை மதிப்பு 'அ இ' யாக இருக்கும் போது, பிழைப்புக்கூலி 'அ ஆ' விலிருந்து 'அ உ' ஆகக் குறையுமானுல், உபரிமதிப்பு 'உ இ' ஆகிவிடும். 'உ ஆ' மேலும் அதிகமாகக் கிடைக்கும் உபரி மதிப்பு. இது கூலியைக் குறைக்கும் இரண்டாவது வழியினுல் கிடைக்கும் அதிக உபரி மதிப்பைக் காட்டுகிறது.

இனி எப்படிப் பிழைப்புக் கூலியைக் குறைக்க முடியுமெனப் பார்ப்போம். பிழைப்புக்கு வேண்டிய உணவுப் பொருட்கள், துணிமணிகள் முதலியவற்றின் விலை குறைந்தால் கூலியையும் குறைக்கலாம். அதனுல் உழைப்பாளர்கள் சப்ளை குறையாது. இயந்திரங்கள் முதலிய சாதனங்களைப் பயன்படுத்துவதாலும், விஞ்ஞான அறிவினுல் கிடைக்கும் இரசாயன எருக்கள், பூச்சிக் கொல்லிகள் முதலியனவற்றை உபயோகித்தாலும் வாழ்க்கைக்கு இன்றியமையாத பண்டங்களின் உற்பத்தி பெருகும். விலை குறையும். பிழைப்புக் கூலியைக் குறைக்க இவை உதவும் என்று விளக்குகிருர் மார்க்ஸ். இவ் வழிகள் முதலாளித்துவ முறை முதிர்ச்சி யடையும்போது அதிக விகிதாச்சாரத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. ஆதலால் உபரி மதிப்பின் வளர்ச்சி விகிதம் வளர்ந்து கொண்டே போகிறது. அதனுல் முதலாளிகள் மேலும் மேலும் வளர்ந்து செல்வர்களாகிருர்கள்; முதலீட்டுதல் வேகமாக வளர்கிறது என்று மார்க்ஸ் கூறுகிருர். இவை மட்டுமன்றி முதலாளிகள் மதியச் சாப்பாட்டு நேரத்தைக் குறைத்தும், குறைந்த பிழைப்புக் கூலிக்கு உழைக்கக்கூடிய பெண்களையும்,

சிறுவர் சிறுமிகளையும் (இவர்கள் உண்ணும் உணவு ஆடவர் உண்பதை விடக் குறைவு). வேலைக்கு அமர்த்திக்கொண்டு தங்களுக்கு வேண்டிய உபரி மதிப்பைப் பெருக்குவர்.

இந்த உபரி மதிப்புக் கொள்கை மயங்கவைத்தல் என்னும் குற்றமுடையது. உழைப்பு ஒன்று தான் மதிப்பு உண்டாக்கும் கருவி என்பது உண்மையானால், இந்த உபரி மதிப்புக் கொள்கை சிறிது உண்மையாகக்கூடும். ஆனால், அதுவே சரியில்லையானால் இந்தக் கொள்கை அஸ்திவாரமில்லாத கட்டடம் போல் சரிந்து விடும்.

இந்த உபரி மதிப்புக் கொள்கையின் நயங்களைப் பலர் புரிந்து கொள்வதில்லை. இக் கொள்கையை விளக்கும்போது ' முதலாளிகள் உழைப்பாளர்களை ஏமாற்றிவிடுகின்றனர். அநியாயமாகக் கூலியைக் குறைத்து விடுகின்றனர். நெறியல்லா முறையில் உழைப்பாளர்களைச் சுரண்டி முதலீட்டுகின்றனர் ' என்று அரைகுறையாகப் படித்த தொழிலாளர் சங்கத் தலைவர்களில் சிலர் சுமத்துவது போல், முதலாளிகள் செய்வது அநீதி என்று ஒரு பழியும் சுமத்தவில்லை மார்க்ஸ். போட்டி மார்க்கட், தொழிலாளரின் மிகுதியான எண்ணிக்கை, பிழைப்புக் கூலி விதி முதலிய தொன்மை நூலார் வகுத்த முதலாளித்துவத்தின் அடிப்படைச் சக்திகள் செயலாற்றுவதால் உபரி மதிப்புத் தானாகவே முதலாளியின் பைக்குள்ளும் வங்கிக் கணக்கிலும் சேருகிறது. முதலாளி கல்மனத்தின் கொடும்பாவி, பேராசைப் பேய் என்ற கண்டனங்கள் இந்தக் கட்டத்தில் மார்க்ஸ் வாயில் வரவில்லை என்பது மறக்கற்பாலதல்ல. (ஷீம்பீட்டரின் ' பத்துப்பொருளியல் மேதைகள் என்னும் ' நூலைப் பார்க்கவும்).

### (5) மாறாத முதலும் மாறும் முதலும் (Constant and Variable Capital)

பண்ட உற்பத்திக்கு மாறாத முதலும் மாறும் முதலும் இன்றியமையாதவை என்பதை மார்க்ஸ் ஒப்புக்கொள்கிறார். மாறாத முதல் (Constant Capital=C) இயந்திரங்களையும் கச்சாப் பொருள்களையும் பிற ஆக்கச் சாதனங்களையும் குறிக்கும். இயந்திரம் முதலியன உழைப்பின் உறைவு (Congealed labour). 130 நாட்கள் சராசரி உழைப்பினால் உண்டாக்கிய இயந்திரம் 130 நாட்களின் உழைப்பைத்தான் தரும். அதற்குமேல் உற்பத்தியைத் தர அதற்கு முடியாது. இயந்திரம் முதலியன அவற்றினுள் அடைக்கப்பட்டிருக்கும் உழைப்பு முழுவதையும் ஈந்து விட்டால், அது ஒன்றுக்கும் உதவாது. குப்பைத் தொட்டியில் போடவேண்டியதுதான். எனவே, மாறாத முதல் பண்ட மதிப்பு

உண்டாக்குவதில் தன்னுள்ளிருக்கும் உழைப்பின் மதிப்பை விடச் சற்றேனும் அதிகமான மதிப்பைத் தராது. 'மாருத' என்னும் சொல்லுக்கு அதன் மதிப்பு நல்கும் சக்தி மாருது என்பதுவே பொருள். 130 நாட்கள் உழைப்பைத் தன்னுள்ளடக்கியிருக்கும் இயந்திரத்தின் மதிப்பு 130 நாட்களின் உழைப்பின் மதிப்புதான். அதன் விலேயும் 130 நாட்கள் உழைப்பு. அது பண்ட உற்பத்திக்கு உதவும் மதிப்பும் 130 நாட்கள் உழைப்பே. எனவே, மாருத முதலின் உபயோகத்திஞல் முதலாளிக்கு யாதொரு உபரி மதிப்பும் கிடைக்காது என்று மார்க்ஸ் வாதிக்கிருர்.

'மாறும் முதல்' (Variable Capital) தொழிலாளருக்குக் கூலி வழங்குவதற்கெனத் தனியே ஒதுக்கி வைக்கப்படும் நிதியாம். அஃதாவது கூலி நிதி. இதை 'V' என்னும் குறியினுல் சுருக்கிக் காட்டுவோம். பிழைப்புக் கூலியைக் கொடுத்துத் தொழிலாளர்களின் உழைப்பைப் பயன்படுத்தும்பொழுது, முதலாளிக்கு உபரி மதிப்புக் கிடைக்கிறது. பண்ட உற்பத்தியின் விலே மதிப்பு ரூ. 4 என்றும், கூலி ரூ. 2-50 என்றும் பழைய உதாரணத்தில் ரூ. 1-50 மிச்ச மதிப்பு ஆகும் என்று விளக்கினேம். மிச்ச மதிப்பை 'S' என்று குறித்தால், என்ன விகிதத்தில் முதலாளி சுரண்டுதல் செய்வான் என்பதை ஒரு சமன்பாடு (equation) வடிவத்தில் காட்டலாம்.

சுரண்டுதல் விகிதம் $= \frac{\text{மிச்ச மதிப்பு}}{\text{கூலி}} = \frac{S}{V}$ மிச்ச மதிப்பு, கூலி ஆகியவற்றின் எண்களே உபயோகித்தால் $\frac{S}{V} = \frac{1 \cdot 5}{2 \cdot 5} = \frac{3}{5}$ ஆகும்.

இதன் பொருள் என்னவென்ருல், தொழிலாளர் மொத்தம் 8 மணி நேரம் உழைத்தால், அதில் 5 மணி நேரம் தனது கூலிக்காகவும் 3 மணி நேரம் முதலாளிக்கு மிச்ச மதிப்புச் சம்பாதித்துக் கொடுக்கவும் உழைப்பான் என்பதுவே.

மொத்த முதலீடு மாரு முதலும் மாறும் முதலும் இரண்டும் சேர்ந்தது. அஃதாவது C+V. உபரி மதிப்புதான் நிகர இலாபம். இனி இலாப விகிதம் என்னவென்பதை இன்னெரு சமன்பாடு மூலமாகக் காட்டலாம்.

$$\text{இலாப விகிதம்} = \frac{\text{நிகர இலபாம் அல்லது உபரி மதிப்பு}}{\text{மாரு முதல்} + \text{மாறும் முதல்}}$$

$$= \frac{S}{C+V}$$ என்ருகும்.

இரண்டு விதமான முதல்களின் விகிதாச்சாரம்

$$\frac{\text{மாறா முதல்}}{\text{மாறும் முதல்}} = \frac{C}{V}$$ என்றாகும்.

இதுவரை விளக்கிய கருத்துகளிலிருந்து இரண்டு முடிவுகளை மார்க்ஸ் விளக்குகிறார். (1) முதலாளிகள் மாறாதமுதலை அதிகமாக்கினால் உபரி மதிப்புச் சுரப்பதில்லை (2) மாறும் முதலை எவ்வளவுக்கெவ்வளவு பயன்படுத்துகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு உபரி மதிப்பு அதிகமாகும். இதுவே அதிக இலாபம் ஈட்டலுக்குச் சிறந்த வழியாகும். ஆனால், ஆலைத்தொழில் துறையில் நாம் என்ன காண்கிறோம்? தொழிலதிபர்கள் இயந்திரங்கள் போன்ற மாறாத முதலைத்தான் (Constant Capital) அதிகமாக உபயோகிக்கிறார்கள். தொழிலாளர்களைக் குறைக்கும் இயந்திரங்களையும் நிறுவுகிறார்கள். அப்படியானால் அவர்கள் ஈட்டக்கூடிய உபரி மதிப்பு, இலாபம் எல்லாம் குறைந்து விடாதா? குறைவதைக் காணோம். தொழிலதிபர்கள் செயல்களுக்கும் இயந்திரங்களை மேலும் மேலும் நிறுவுதல், மார்க்ஸின் கொள்கையின் முடிவுகளுக்கும் உள்ள பளிச்செனத் தெரியும் முரண்பாட்டை மார்க்ஸ் கண்டுகொண்டார். தற்சமயம் இந்த முரண்பாட்டை விளக்குவதற்கு வேண்டிய சில புள்ளி விவரங்கள் கிடைக்கவில்லை; அவை கிடைத்ததும் முரண்பாடுபோலத் தோன்றும் தோற்றம் விளக்கப்பட்டு மறைந்து விடும் என்று கூறிச் சமாளிக்கிறார். இது ஒரு நொண்டிச்சாக்கு என்பதைக் கூறவேண்டியதில்லை.

### இலாப விகிதம் கீழ் நோக்கிச் செல்லுதல் (Declining rate of profit)

மாறும் முதல், மாறா முதல் என்று முதலின் உடலமைப்பை ஆராயும் பொழுது மார்க்ஸ் இன்னுமொரு முக்கியமான முடிவுக்கு வருகிறார். தொழில் முன்னேற்றமடையும் காலத்தில், மொத்த முதலில், மாறா முதலின் பங்கு அதிகமாகிக் கொண்டே போகிறது. நவீன பருத்தி ஆலை 20,000 கதிர்களுடன் நிறுவ ரூ. 40 லட்சம் ஆகும். 20,000 கைராட்டினங்கள் அல்லது தக்ளிகளுக்கு ஆகும் மாறா முதலின் மதிப்பு எவ்வளவு குறைவு. இந்த எடுத்துக்காட்டுத் தற்காலத்தில் எந்த அளவுக்கு மாறா முதல் வளர்ந்துவிட்டது என்பதைக் காட்டப் போதுமானது. மார்க்ஸின் வாதத்தின்படி மாறா முதல் உபரி மதிப்புத் தராது. எனவே, தொழில் முன்னேற்றமடையும்போது மாறா முதல் (C) பெரும் பகுதியாக வளர்வதால், முதலாளிகளின் இலாப விகிதம் கீழ்நோக்கிச் சென்றுகொண்டே போகும் என்பது மார்க்ஸின் முடிவு.

எடுத்துக்காட்டு :

இலாப விகிதம் $=\frac{S}{C+V}$. இவற்றில் $S=$ ரூ. 500 என்றும் $V=$ரூ. 1000 என்றும் வைத்துக்கொள்வோம். $C$-க்கு 1000, 2000, 7000 என்னும் மதிப்புகளைக் கொடுத்தால் மாறு முதல் வளர்ச்சியைப் பிரதிபலிக்கும். ஆனால், எவ்வளவு வளர்ந்தாலும் இலாபம் ($S$) அதிகப்படாது என்பது மார்க்ஸின் வாதம். இனி இலாப விகிதம் இந்த மூன்று நிலைகளிலும் எவ்வளவு என்று பார்ப்போம் :

(i) $\frac{500}{1000+1000}=\frac{500}{2000}=\frac{1}{4}=25\%.$

(ii) $\frac{500}{2000+1000}=\frac{500}{3000}=\frac{1}{6}=16\frac{2}{3}\%.$

(iii) $\frac{500}{7000+1000}=\frac{500}{8000}=\frac{1}{16}=6\frac{1}{4}\%.$

இம் முடிவு மார்க்ஸ் 'இலாப விகிதம் காலப்போக்கில் முதலாளித்துவம் வளர வளரக் குறைந்துகொண்டே போகும்' என்பது மார்க்ஸின் சோஷியலிசத்தின் அச்சாணி போன்ற கொள்கைகளிலொன்று ஆகும்.

(6) முதல் திரட்டும் கொள்கை (Theory of Capital accumulation)

இலாப விகிதம் குறைந்துகொண்டே கீழ்நோக்கிச் சென்றால் என்ன ? முதலாளிகளுக்கு இலாபம்தானே குறிக்கோள் ? இலாபம் 20 சதமாகயிருந்தால், ரூ. 1000 முதலீடு செய்தால் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 200 பெறுமான இலாபம் கிடைக்கும். இலாபம் 5 சதமாகக் குறைந்து விட்டால், அதே ரூ. 1000 முதலீடு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50 பெறுமான இலாபத்தைத்தான் கொடுக்கும். முதலாளி ஆசைப்படுவது அதிக இலாபம். அதற்கு இனி ஒரு வழிதான் இருக்கிறது. முதலீட்டை ரூ. 4000 ஆக்கவேண்டியது ஒன்றுதான். இந்த வழியில் முனைவார்கள் முதலாளிகள். அவர்களுடைய முதல் திரட்டும் ஆர்வம் சுடர்விட்டும் வளரும் என்பது மார்க்ஸின் முடிவு. அதிகமான அளவில் மாறாத முதல் உபயோகித்தால் அதிக உற்பத்தியாகும். பண்டங்கள் மலிவு விலையில் விற்கும் (போட்டியின் விளைவு) இலாப விகிதம் குறையும். இம் மாதிரி இலாப விகிதம் குறைந்தாலும் முதலாளிகளின் இலாபம் திரட்டும் ஆசை மீண்டும் தூண்டப்படும். இவ்வாறு இரண்டு காரணங்களால் (1. மாறு முதல் அதிகரிப்பு 2. அதிகப் பண்ட உற்பத்தி, விலை சரிவு), இலாப விகிதம் குறைவது, திரட்டும் ஆசையைத் தீவிரமாகக் கிளறிவிடும் முதலாளிகளின் இந்த

நோக்கத்தையும் செயலையும் குறிப்பதுதான் 'முதல் திரட்டும் கொள்கை' என்று மார்க்ஸ் வகுத்திருக்கும் சூத்திரம் ஆம்.

அடுத்தபடியாக, முதல் திரட்டும் பேராவல் முதலாளித்துவ சமுதாயத்தை எந்த நிலைக்குக் கொண்டு செல்கிறது என்று மார்க்ஸ் காட்டுகிறார். இலாபம் குறைந்துகொண்டே போவது ஒன்று. பண்டங்கள் மலிய மலிய, தொழிலாளர்கள் உண்டாக்கும் பரிவர்த்தனை மதிப்பும் விரைவில் குறையும். அதற்கும் அவர்கள் வாங்கும் பிழைப்புக் கூலிக்குமுள்ள வித்தியாசம் தேய்ந்து தேய்ந்து குறைந்துகொண்டே போகும். இவ்வாறு சுருங்கிக்கொண்டே போனால், கடைசியில் முதலாளிகளுக்கு உபரி மதிப்பு என்பதே கிட்டாது. அளவுகடந்த முதல் திரட்டு தலை முதலின் வருவாயைக் கெடுத்துவிடும். முதலாளித்துவத்தின் முன்னேற்றம் என்பதே புதுப் பண்டங்களை—உதாரணமாக ரெயான், ரேடியோ, டெலிவிஷன், உற்பத்தி செய்தல்; புது விஞ்ஞான முறைகளை—நீராவிக்குப் பதிலாக எண்ணெய், அதற்குப் பதில் மின் சக்தி—உபயோகித்தல், புது இயந்திரங்களைக் கண்டுபிடித்துப் பயன் பெறுதல் என்பனவற்றில் அடங்கும். இவ் வழிகளில் எதைக் கையாண்டாலும்—பழைய பண்டங்கள் உற்பத்தி செய்வோர்—கிராமபோன், பருத்தித் துணி ஆகியவை—பழைய சக்திகளை உபயோகிப்போர், பழைய இயந்திரங்களை ஓட்டிக்கொண்டிருப்பவர், யாவரும் மிக்க நஷ்டமடைவர் என்பதற்கு விளக்கம் தேவையில்லை. இம்மாதிரி முன்னேறிக்கொண்டு போகும் முதலாளித்துவ சமுதாயத்தில் எப்பொழுதும் போட்டி, சண்டை, பூசல்கள் வளர்ந்துகொண்டே போகும். தொழிலதிபர்களுக்கு இன்னல்கள் பெருகும். அவற்றைத் தவிர்க்க மேலும் மேலும் முதல் திரட்டலும், மேலும் புது வழிகளைக் கண்டுபிடித்தலும் எழும். எனவே, வாழ்க்கை எப்போதுமே போர் முனை வாழ்வு போல் மாறும். ஒரு தொழிலதிபர் மற்றத் தொழிலதிபரை எப்படித் தோற்கடிப்பது என்பதுமட்டுமல்ல. தோற்கடிக்கா விட்டால், மற்றவர்கள் இவரைத் தீர்த்துக்கட்டி விடுவர் என்ற பயங்கரச் சூழ்நிலை உருவாகும். இவ்வாறு முதலாளித்துவத்தின் பிற்காலத்தின் போக்கை உண்மையான முறையில் விளக்கிய தீர்க்கதரிசி மார்க்ஸ் எனலாம்.

அவரைப்போல் எவரும் அவர் காலம் வரை, முதலாளித்துவத்தின் வருங்காலத்தை ஆராய்ந்தவரில்லை எனக் கூறலாம். இத்தகைய தீர்க்கதரிசியின் நூலில், முயற்சியாளர், தொழிலதிபர் என்னும் நான்காவது பொருளாக்குச் சாதனத்துக்கு இடமே அளிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. ஏனெனில் முதலாளியும் முயற்சியாளரும் வேறு (Capitalist and

entrepreneur are different) என்பது மார்க்ஸியத்துக்கு முற்றும் புறம்பானது.

### (7) முதல் குவிதல் கொள்கை (Principle of Concentration of Capital)

முதலாளிகளின் முதலீட்டும் பேராவலைப் பார்த்தோம். அதற்கு ஏற்படும் தடங்கல்களை நீக்கப் பல விதங்களில் அவர்கள் சூழ்ச்சி செய்துகொண்டேயிருப்பார்கள் என்பதும் தெளிவாயிற்று. கடும் போட்டி ஒரு வழி. பெரிய முதலாளிகள் சிறியவர்களைப் போட்டியில் வென்று அவர்கள் தொழில் நிறுவனங்களை ஏலத்துக்குக் கொண்டு வந்து குறைந்த விலையில் வாங்கித் தங்கள் நிலையங்களை மேலும் பெரிதாக்கிக் கொள்வர். முதலாளித்துவத்தின் உயிர்நாடியே போட்டி. சமமான சக்தியுள்ளவர்களின் போட்டி என்று கூறிப் போந்தனர் ஆடம் ஸ்மித், ரிக்கார்டோ போன்றவர்கள். ஆனால் போட்டி குறைந்து மறைந்து, கூட்டுத் தொழில், கூட்டு வியாபாரம், விற்பனை முற்றுரிமை, தொழிலில் சர்வாதீனம் என்றெல்லாம் முதலாளித்துவத்தின் போக்கு மாறும் என்று ஆய்ந்து வருங்காலத்தை விளக்கிய மேதை மார்க்ஸ் என்பவரே ஆம். பெரிய மீன் சிறிய மீன்களை விழுங்கிவிடும் என்னும் இயற்கை விதி, முதலாளித்துவ சமுதாயத்தின் நடைமுறைக் கோட்பாடு ஆகிவிடும் என்ற அவர் வாக்கு 19-ஆம் நூற்றாண்டு முடியுமுன் அமெரிக்கா, ஜர்மனி, இங்கிலாந்து போன்ற முன்னேறிய நாடுகளில் உண்மையாகிவிட்டது. மாபெருந் தொழிலகங்கள், உலகச் சந்தை முழுவதிலும் மிகுந்த செல்வாக்கு, ஏன் சர்வாதீனம் செலுத்தும் கார்ப்பரேஷன்கள் நிறுவப் பெறும் என்று மார்க்ஸின் கூறிய வருங்கால நிகழ்ச்சி தீர்க்க தரிசனம் போல் பலித்துவிட்டது. இது இவருடைய மேதா விலாசத்தைக் காட்டுகிறது. 'இராட்சசத் தொழில் கார்ப்பரேஷன்கள் உலக முழுவதும் பரவி இருக்கும் அசுர வணிக அலுவலகங்கள் ஆகியவற்றின் மூலதனம் பல கோடிகளாகப் பெருகும். அதனால் அவர்கள் புதுப் பண்டங்கள், புது உற்பத்தி முறைகள், புது மார்க்கட்டுகள் கண்டுபிடிப்பதில் எப்பொழுதும் கண்ணுயிருப்பர். அவர்களுடைய பண வசதியினால் வெற்றியும் பெறுவர் எனவே முதிர்ந்த முதலாளித்துவச் சமுதாயத்தில் எப்பொழுதும் மாறுதல்கள் நடந்து கொண்டேயிருக்கும். அமைதி, நிலையான வாழ்க்கையெல்லாம் குதிரைக் கொம்பாகிவிடும்' என்று அவர் கூறியது உண்மையாயிற்று. மாபெருங் கார்ப்பரேஷன்கள் ஒரு சிலர் ஆட்சிக்குள் சேர்ந்துவிடுகின்றன. மூலதனமும் கோடிக் கணக்கில் அவர்கள் கைக்குள் சேர்ந்துவிடுகின்றது.

(8) வேலையில்லாதோர் படைவளர்ச்சி அல்லது துன்பக்கேணிக் கொள்கை (Industrial Reserve Army-Theory of Immiserization)

சாதாரணமாகவே மக்கட்தொகை வளர்ச்சியினால் தொழிலாளர் எண்ணிக்கை அதிகமாகியும் வேலை வாய்ப்புகள் குறைவாகியும் வரும். இந்தக் கட்டத்தில் முதலாளிகள் இயந்திரங்களைத் தீவிரமாக உபயோகிக்க ஆரம்பித்தால் வேலை வாய்ப்புகளும் வேகமாகக் குறையும். இதனால் நாட்டில் தொழில் வளர்ந்திருக்கும் நகரங்களில் வேலையில்லாதோர் படை ஒன்று திரண்டு நிற்பதுபோல் தொழிற்சாலைகளின் வாயில்களில் வேலைக்காக ஏங்கிக் காத்து நிற்பர். இம்மாதிரி ஒரு வேலையுமில்லாதோர் படை காத்திருப்பது வரை முதலாளிகளின் கூலியைக் குறைக்கும் ஆற்றல் குன்றாது வளரும். இந் நிலையே அவர்களுக்கு மிக்கச் சாதகமானது. வேலையில்லாத மக்கள் வறுமைப் பிணியில் துன்புறுவர். அவர்கள் எண்ணிக்கை வளரும்; அவர்கள் துன்பமும் வளர்ந்து கொண்டே போகும். இந்த ஆதரவற்ற அனாதைகளான வேலையில்லாதோர் படைக்கு உலகமே ஒரு துன்பக் கடலாகக் காட்சியளிக்கும். இந்தக் கொள்கையின் விளைவு என்ன? தொழிலாளர் வகுப்பில் மனக்கசப்புப் பெருகும். முதலாளிகள் மேலுள்ள வெறுப்பு வெறியாக மாறும் சூழ்நிலை உண்டாகும். வேலையில்லாதோரது துன்ப வாழ்க்கை பாட்டாளி மக்களின் உள்ளத்தில் என்றுமில்லாததொரு புரட்சி மனப்பான்மையைத் தோற்றுவிக்கும் என்பது மார்க்ஸின் முக்கியமான கொள்கை; அச்சாணி போன்றது.

(9) வியாபாரச் சகடம் (Business Cycle)

மார்க்ஸின் நூல்களில் முதலாளித்துவத்தின் பிறப்பு, வளர்ச்சி, முதிர்ச்சி, இறப்பு ஆகியவைதான் ஆராயப்பட்டிருக்கின்றன. வியாபாரச் சகடத்தைப் பற்றி ஒன்றும் கூறப்படவில்லை என்பது சிலர் அபிப்பிராயம்.

வியாபாரச் சகடம் என்பது நாடுகளின் பொருளாதாரத்தில் காணப்படும் நோய். ஒரு முறைக்காய்ச்சல். ஒரு சமயத்தில் பண்டங்களின் விலையேறும். இலாபம் மிகுதியாகும். பொருள் உற்பத்தி பெருகும். இம்மாதிரி விரைவாக வளருவதை வீக்கம் என்பர். ஓர் அளவு வளர்ச்சிக்குப் பின், பொருட் தேக்கம் உண்டாகும். விலை கீழ்நோக்கிப் போகும். உற்பத்தியாளர் நஷ்டப்படுவர். பொருளாதார மந்தம் ஏற்படும். திறமையில் குறைந்த தொழிற்சாலைகள் மூடப்படும். சிறிது காலத்துக்குப் பின் விலைவாசி மெள்ள மேல்நோக்கும். மீண்டும் பொருளாதார வீக்கம் தொடங்கும். இப்படி வீக்கமும் மந்தமும் மாறி மாறி வருவதை வியாபாரச் சகடம் என்று கூறுவர் பொருளாதார அறிஞர். நாடுகளின்

முன்னேற்றம் இவ்வாறு சகடம் போல் சுழன்று செல்வதை மார்க்ஸ் குறிப்பிடவில்லை யென்பது ஒரு கட்சி. முதலாளித்துவம் முதல் திரட்டல், முதல் குவிதல், பெரும்பகுதி தொழிலாளருக்கு வேலையின்மை, வறுமை என்னும் வழிகளில் சென்று கடைசியாக அதன் நோய்களைக் குணப்படுத்தப்படாமல் செத்து ஒழிகிறது என்பதுதான் மார்க்ஸீயம். வீக்கமும் மந்தமுமில்லா வளர்ச்சியும், வீழ்ச்சியும்தான் மார்க்ஸ் கூறும் கதை என்று இக் கட்சியினர் வாதிக்கின்றனர்.

மார்க்ஸின் நூல்களை ஆழ்ந்து கூர்ந்து படிப்பவர்களுக்கு இது தவறான அபிப்பிராயம் என்பது புலனாகும். வியாபாரச் சகடம் பற்றி அவர் விவரிக்கும் கருத்துகளில் முக்கியமானவை நான்கு :

(1) ஜே. பி. ஸேயின் சந்தைச் சட்டம் தேவைக்கு மீறிய பொருள் உற்பத்தி ஒருக்காலும் உண்டாகாது எனக் கூறுகிறது. இச் சட்டம் தவறானது என்று விமர்சனம் செய்கிறார் மார்க்ஸ். பண்டமாற்று யுகத்தில் ஒரு பொருளின் அளிப்பு (supply) இன்னொரு பொருளின் தேவையாக (demand) அமையலாம். ஆனால், பணம் என்னும் பண்டமாற்றுக் கருவி பழக்கத்துக்கு வந்த பின், ஒரு பண்டத்தை உற்பத்தி செய்தவன், அதை விற்றுவிட்டு விற்று முதல் பணத்தைச் சேமித்துவைக்க முடிகிறது. அவன் அந்தப் பணத்தைச் செலவழிக்காவிட்டால் மற்றொருவன் பொருள் வாங்குவாரில்லாது போய்விடும். அதனால் பணம் உபயோகத்துக்கு வந்த பின் ஜே. பி. ஸேயின் சட்டம் உண்மையாகச் செயல் பெறாது. கூடிக் கொண்டே விற்பனையாகாத பொருட்கள் தேக்கம் ஒரு புறம் ; அவற்றை வாங்கப் பயன்படக் கூடிய பணம் பெட்டியிலும் வங்கிகளிலும் சேமிப்பு நிதியாகத் திரளுவது மற்றொரு புறம் என ஆகக்கூடும். பணம் பண்டமாற்றில் தலையிடுவதால் இத்தகைய விபத்து ஏற்படக்கூடும் என்பதை மார்க்ஸ் நன்கு வலியுறுத்தியுள்ளார்.

(2) பணம் புழக்கத்துக்கு வந்தபின், வங்கிகள் நிறுவப்பட்டபின் தொழில் நிறுவனங்களில் 'மாறாத முதல்' பெரும் பகுதியாக வளர்வதற்கு வசதிகள் ஏற்பட்டுவிட்டன. குறைந்த வட்டியில் ஏராளமாகக் கடன் கிடைக்குமானால், எந்த முதலாளிதான் இயந்திரங்கள் வாங்கி நிறுவத் தயங்குவான்? அதிகமான முதல் திரளுவதற்குக் காரணம் பணப் புழக்கம் என்று கூறி, மார்க்ஸ் குறைந்த வட்டி முறை பொருளாதார வீக்கத்தை உண்டு பண்ணக் கூடும் என்று விளக்குகிறார்.

(3) முயற்சியாளரும் தொழிலதிபரும் பணவசதி, விஞ்ஞான வளர்ச்சி, தொழில் நுட்ப அறிவினால் கண்டுபிடிக்கப்படும் புது

இயந்திரங்கள், புது முறைகள் என்ற பல வாய்ப்புகளைப் பயன் படுத்திப் பொருள் உற்பத்தியைப் பெருக்குவதில் வெற்றி காண்பது உறுதி. ஆனால், அவற்றை விற்க மார்க்கட் அல்லது வாங்குவோரும் அவர்களின் சக்தியும் கூடிக்கொண்டு போகவேண்டும். உள் நாட்டில் இல்லாவிட்டால், புது நாடுகளுடன் வணிகத் தொடர்பு ஏற்படின், விற்பனை பெருகும் ; தொழிலும் வளரும். இப்படிப் பல நாடுகளில் தொழில் வீக்கம் திடீரென உண்டாகியிருக்கிறது என்று மார்க்ஸ் எடுத்துக் காட்டுகிறார். இப் புதிய நாட்டுச் சந்தைகளில் தேவைப்படும் பண்டங்கள் விற்றபின் மந்தம் ஏற்படுவது எதிர்பார்க்க வேண்டிய கட்டம். இதை வலியுறுத்திய மார்க்ஸ் வியாபாரச் சகடத்தைப் பற்றி அறியாதவர், எழுதாதவர் என்று கூறுவது சரியல்ல.

(4) இவற்றைத் தவிர எதிர்பாராத சில நிகழ்ச்சிகளால் பொருளாதார முன்னேற்றம் அதிவேகத்தில் ஏற்படுவதும் உண்டு. விஞ்ஞானிகள் நீராவியந்திரம், ரயில் என்ஜின், மின் சக்தி, மோட்டார் முதலியன கண்டு பிடித்த சமயங்கள் ஒவ்வொன்றிலும் தொழில் துறையில் திடீரெனப் பெரும் வளர்ச்சியும் வீக்கமும் உண்டாயின. சிறிது காலம் சென்றபின் இந்த வளர்ச்சியும் வீக்கமும் குறையவும் செய்யும். இவ்வாறு தொழில் நடவடிக்கைகள் சுறுசுறுப்பும் மந்தமும் காணும் என்பதை மார்க்ஸ் புரிந்தவர்.

மேற்கூறிய காரணங்களுடன், தொழிலதிபர் மேற்கொள்ளும் வெற்றி தரும் வழிகள், செய்யும் தவறுகள், அளவுக்கு மீறிக் காட்டும் உற்சாகம், வருங்காலத்தைப் பற்றி இன்ப, துன்ப நோக்குகளை மாறி மாறிக் கொள்ளல் என்பனவற்றால் நாட்டின் பொருளாதாரம் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை சகடம்போல் உருண்டு கொண்டும், பிறைபோல் வளர்ந்தும், தேய்ந்தும் முன்னேறுகிறது என்பதையும் மார்க்ஸ் தெளிவாகக் கூறியுள்ளார்.

## (10) முதலாளித்துவத்தின் வீழ்ச்சி (Doom of Capitalism)

வேலையில்லாதவர் படை பெருகிக்கொண்டே போவது, துன்பக் கடலில் மூழ்கித் தவிப்பது ஒரு புறம் ; வேலை கிடைத்த தொழிலாளரும் பிழைக்கக் கூலிமட்டுமே பெற்று வறுமையில் உழல்வது ஒரு புறம். இவ் விருவகையினரும் ஓர் இனம். இவர்களோ கடுகளவு சொத்துக்கூட இல்லாத பாட்டாளி மக்கள் (Proletariat, defined as persons whose only wealth is their hands). அவர்களுடைய சொத்து அவர்கள் கரங்களைத் தவிரப் பிறிதொன்றில்லை. இவர்கள் கடல்போல் பெருகுவதும் (பின்னால் பொங்குவதும்) உறுதி. அதே சமயம் முதலாளிகளின் குபேரசம்பத்து

வளர்ந்து கொண்டே போவது மறுபுறம். நாட்டின் சொத்து, பொருளாக்குச் சாதனங்கள், கருவிகள் எல்லாம் ஒரு சிலர் கையில் குவிவது ஒரு நிகழ்ச்சி. அதனுல் முதலாளிகளின் ஆதிக்கம் உச்ச நிலை அடைதலும் உறுதி. இவ்வாறு சமூகம் இரு கூறுகளாகப் பிளவுபட்டு நிற்கும்போது, சகிக்கவொண்ணு வறுமையினுல் துன்புறும் பாட்டாளி மக்கள் ஒன்றுகூடி எழுந்து முதலாளிகளை எதிர்த்துத் தாக்கி அவர்கள் சொத்துச் சுதந்திரங்களைக் கைப் பற்றி, யாவற்றையும் நாட்டின் பொதுவுடைமையாக ஆக்குவர். முதலாளித்துவம் சரிந்து விழும். இவ் வீழ்ச்சியிலிருந்து எழுச்சி பெறுவது சோஷியலிசச் சமுதாயம், பாட்டாளி மக்களின் ஏகாதி பத்தியம் (Dictatorship of the Proletariat). இந்த முறையில் முதலாளித்துவம் மடிந்து விழும் என்று வாதிக்கிருர் மார்க்ஸ். இதுவே முதலாளித்துவ வீழ்ச்சிப் படலம்.

முடிவுரை

மார்க்ஸீயத்திலுள்ள குறைபாடுகளைப் பலர் எடுத்துக்காட்டி யிருக்கிருர்கள். உழைப்பு வாதம் (Labour theory of value) ஒரு தலைக்கட்சி வாதம் என்பதை யாவரும் ஒப்புக் கொள்வர். பொரு ளாதார அமைப்புச் சமூக அமைப்பை நிர்ணயிக்கும் ஒரே காரணம் என்று கூறி வருங்கால நிகழ்ச்சிகளைப் பற்றிச் சோதிடம் சொல்வது என்றைக்குமே ஆபத்தான தொழில். வகுப்புப் போர் என்பது அவரது கொள்கையில் முதலிடம் பெறுகிறது. தலை யிடாக் கொள்கை ஒரு நாளும் கைவிடப்படாது என்று நம்பினுர் மார்க்ஸ். ஆனுல், சமூகச் சீர்திருத்தம், பெரும்பாலான தொழிலா ளர்களுக்குச் சமூகப் பாதுகாப்பு (Social Security) அளித்துப் பேணும்விருப்பம், கடும் போட்டிக்குக் கடிவாளம் போடும் முயற்சிகள், ஆகியவையெல்லாம் பொருளாதாரத் துறையில் அரசாங்கத்தைத் தலையிடச் செய்யும் என்ற எண்ணம் மார்க்ஸீ யத்தில் எழவேயில்லை. எனவே, மார்க்ஸ் தருக்க ரீதியாக வகுத்த வழியே முதலாளித்துவம் செல்லவில்லை. அதன் ஆதிக் கம் அளவு கடந்து செல்லுமுன் அரசாங்கம் கட்டுப்பாடுகளையும் மற்றச் சட்ட திட்டங்களையும் ஏற்படுத்திவிட்டது. தவிரவும் சிறப்பாக இங்கிலாந்தில் தொழிற் சங்கங்கள் நிறுவப்படும். அவை தொழிலாளர்கள் கூலியையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தும் என்பதையும் மார்க்ஸ் சிந்திக்கவில்லை. எனவே, மார்க்ஸ் கூறியபடி இங்கிலாந்தில் பாட்டாளி மக்களின் புரட்சி நடைபெருது போயிற்று. பாட்டாளி மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்தது. அவர்கள் முதலாளி வர்க்கத்தினர் வாழும் வாழ்க்கையை இலட்சியமாகக் கொண்டனர். அவர்களிடையே பகை உணர்ச்சி இருப்பினும், தொழிலாளர்கள் முதலாளிகள்

வாழும் வாழ்வில் விருப்பம் கொண்டனர். அறிஞர் வெப்லன் (Veblen) ஆராய்ந்து மொழிவதுபோல் இவ் விருப்பம் சமூகத்தைப் பிளவுபடுத்தும் சக்தியைக் கட்டுப்படுத்தி, ஒன்றுக இணைக்கும் சக்தியாக மாறியது.

இனி மார்க்ஸின் நூல்களில் புதைந்து கிடக்கும் பேருண்மைகளைச் சுருக்கமாகக் கவனிப்போம். (1) போட்டி மறைந்து முற்றுரிமைக் (monopoly) கார்ப்பரேஷன்கள் தோன்றும் என்பது மார்க்ஸின் கருத்து. இதைத் தொன்மை நூல் மறுமலர்ச்சிக் காலத்தில் தோன்றிய அறிஞர்கள் பெரிதும் விளக்கியுள்ளார்கள். (2) வியாபாரச் சகடம் எனும் நோய் முதலாளித்துவத்தின் உடன் பிறப்பு என்று முதலில் கண்டு பிடித்தவர் மார்க்ஸ். இந்தப் பிரச்சினையைப் பற்றியும் தொன்மை நூல் மறுமலர்ச்சிக் காலத்தில் எழுந்த நூல்கள் பல. எனவே இப் பிரச்சினையை உணர மார்க்ஸ் வழி காட்டினர் எனக் கூறலாம். (3) முதலாளித்துவம் தான் பொருளாதார வளர்ச்சியின் கடைசிக் கட்டம். இந்த முறை தான் ஊழிக்காலம் வரை நீடித்திருக்கும் என்று நினைத்த தொன்மை நூலார் கொள்கையிலுள்ள குறைபாட்டை எடுத்துக் காட்டியவர் மார்க்ஸ். பிற துறைகளில் நடப்பது போலவே பொருளாதாரத் துறையிலும் என்றும் எப்பொழுதும் வளர்ச்சி நடைபெற்றுக் கொண்டே இருக்கும் என்றும், மாறுதல்தான் உயிர்த் துடிப்பு என்றும், விளக்கியவர் மார்க்ஸ். இந்தக் கருத்து தற்கால வளர்ச்சிப் பொருளியலுக்கு (Economics of Growth) அடி கோலியது என்று கூறுவது தகும். (4) பொருள் உற்பத்தி விஞ்ஞானம் இயந்திரம் ஆகியவற்றின் பேருதவியால் பெருக்கல் வாய்பாட்டு விகிதத்தில் வளர்கிறது. சமூகத்தில் பெரும்பான்மையான தொழிலாளரின் வாங்கும் சக்தி கூட்டல் வாய்பாட்டு வேகத்தில் கூட அதிகரிப்பதில்லை. எனவே, வாங்கும் சக்தி ஊனப்படுவதால் பொருளாதார உலகத்தில் பொருட் தேக்கமும் மந்தமும் கொடிய பிணிகளாகப் பரவுமாதலால் ஒரு பயங்கர நிலை ஏற்படும் என்று காட்டியவர் மார்க்ஸ். இந்த உண்மையை அஸ்திவாரமாகக் கொண்டது தான் ஜே. எம். கெயின்ஸ் வகுத்த நவீனப் பொருளாதார நூல்.

அமெரிக்கப் பொருளியல் அறிஞர் செலிக்மன் (Seligman) கூறுவதுபோல், ரிக்கார்டோவுக்குப் பின் மார்க்ஸைப் போன்ற பொருளியல் ஞானி பிறந்ததில்லை. அவர் நூல்களைச் சரியான முறையில் கற்பது அவசியம். மார்க்ஸின் கல்வியறிவு கடல் போன்றது. அவர் ஒரு பெரிய பொருளாதார மேதை. எனினும் அவர் ஒரு மாபெரும் புரட்சியியக்கத்தின் தந்தை, குரு, தலைவர். ஆகவே அவரைப் பற்றிக் கட்சிப் பிரசார முறையில் வெளியாகி

யிருக்கும்-வெளியாகும்-நூல்கள் பலப் பல. அவற்றைப் படித்து அவர் கொள்கைகளை அறிவது சரியான வழியல்ல. கல்லூரியில் விஞ்ஞான முறையில் கற்பதுதான் சரி.

கார்ல் மார்க்ஸ் என்றால் வகுப்புப் போர், புரட்சி, வெடி மருந்து, கொலை என்ற கருத்தே விரிவாகப் பரவியிருக்கிறது. பாம்பு சட்டையைக் கழற்றுவதுபோல், சமுதாயம் ஒரு கட்டத்தில் பயனளித்து இனிப் பயனளிக்க உதவாத முதலாளித்துவ முறையை அகற்றிவிட்டுச் சோஷியலிச முறையைப் பின்பற்றும் என்று வாதித்தவர் கார்ல் மார்க்ஸ். அவருடைய பெயரால் எத்தனையோ பாவங்கள் செய்யப் படுகின்றன. மார்க்ஸீயம் வேறு, லெனினிசம் வேறு, ஸ்டாலினிசம் வேறு என்று உணர வேண்டியது அவசியம். மார்க்ஸின் குடும்ப வாழ்க்கையில் அன்பும் கனிவும் பூரணமாகப் பரிமளிக்கின்றன. மார்க்ஸ் ஒரு கல்விக் களஞ்சியம் என்பதையும், அன்புள்ளம் படைத்த கணவன், தந்தை என்பதனையும். தனது கொள்கைக்காகத் துன்பத்தைத் துரும்பாக மதித்து வாழ்ந்த தியாகி என்பதையும் மறந்துவிட்டு அவருடைய நூல்களைப் படிப்பதில் பயனிருக்காது.

## 23. ஃபேபியனிசம்
### (Fabianism)

சோஷியலிசம் பலவகை. ஃபேபியனிசம் அவற்றில் ஒருவகை; சிறப்பாக அது ஆங்கில நாட்டினது தனி வகையாகும். 1883 ஆம் ஆண்டு அக்டோபர் 24 ஆம் நாள், உயர்ந்த அறநெறியில் சமூகத்தைப் புனர் நிர்மானம் செய்வதற்கென்ற கோரிக்கையுடன் ஃபேபியன் கழகம் தொடங்கப்பட்டது. விரைவில் அதன் நோக்கம் மாறியது. 1888-ல் வெளியிடப்பட்ட ‘ஃபேபியன் கட்டுரைகள்’ என்ற நூலின் முகவுரையில் ‘ஃபேபியனிசம்’ தொழில் துறையில் முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தைத் தனி மனிதரிடமிருந்து சமூகத்துக்கு மாற்றித் திறமையுடன் நிர்வகிப்பதற்காகப் பணி புரியும். இம் முயற்சியின் பொழுது சொந்தக்காரர்களுக்கு முழு நஷ்ட ஈடு கொடுக்காமல், ஓரளவு உதவித் தொகை மட்டுமே வழங்கி இத் திட்டத்தைச் செயல் படுத்தும் என்ற புதிய ஃபேபியனிசக் கொள்கைகள் அறிவிக்கப் பட்டிருந்தன.

தொடக்கத்திலிருந்து (1883) முதலாவது உலகப் போர் வரை (1914) அக்காலத்து ஆங்கில நாட்டுப் பேரறிஞர் பலர் ஃபேபியனிசக் கழகத்தின் (Fabian Society) உறுப்பின ராயினர். அவர்

களில் வெப்ஸ், சிட்னி, பியட்ரிஸ் தம்பதிகள், பெர்னார்டு ஷா, எச். ஜி. வெல்ஸ், பெதிக் லாரன்ஸ் பிரபு, முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் ராம்ஸே மெக்டோனல்டு, தத்துவ ஞானி ஜி. டி. எச். கோல், கிரஹம் வாலஸ், பெஸன்டு அம்மையார் முதலியோர் ஃபேபியனிசத்துக்குப் பெரும் தொண்டு புரிந்தனர்.

## பொருளாதாரக் கருத்துகள்

ஃபேபியனிசத்தோர் மார்க்சின் மதிப்புக் கொள்கையை (The Theory of Value) ஒப்புக் கொள்ளவில்லை. அவர்களில் சிலருக்கு ஜெலன்சின் இறுதி நிலைப் பயன்பாட்டுக் கொள்கையின்பால் மிக்க மதிப்பும் விருப்பமும் இருந்தன. நிலச்சுவான்களுக்குக் கிடைக்கும் வாரம் (rent) அவர்கள் பாடுபட்டுச் சம்பாதிக்காத உபரி (Surplus) என்று ரிக்கார்டோ கூறினாரல்லவா ? இந்த வாரக்கோட்பாட்டை ஃபேபியனிசத்தோருடைய சோஷியலிசத்தின் அடிக்கல் எனக் கூறலாம். அவர்கள் வாரம் முழுவதையும் அரசு பறிமுதல் செய்யவேண்டும் என்று கூறினர். இந்த வாரக் கோட்பாட்டை வட்டிக்கும் கூலிக்கும் பிரயோகித்து, தூய வட்டிக்கும், பிழைப்புக் கூலிக்கும் அதிகமாக வாங்கப்படுகின்ற உபரியை அரசினர் கைப்பற்றிக் கொள்ளலாம் என்று வாதித்தனர். செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தவர்களுக்கு மிகுந்த செலவில் உயர்தரக் கல்வி கிடைப்பதனால், அவர்கள் மிகுந்த சம்பளம் சம்பாதிக்க முடிகிறது. ஆகையால் கூலியில் உள்ள திறமை நிலவாரம் (rent of ability) தனியார் சொத்துரிமையின் மறைமுக விளைவு என்று கூறினர். 'சொத்து' பெர்னார்டுஷா, ஃபுருதன் கூறியபடி 'ஒரு களவுதான்' என்று பகர்ந்தார். இவ்வாறு வாதித்து ஃபேபியனிசத்தோர் வாரம், வட்டி, கூலி ஆகியவற்றிலுள்ள வேறுபாட்டெச்சம் (differential surplus) முழுவதையும் அரசு பறிமுதல் செய்வதற்குக் கோட்பாடு அடிப்படையில் நியாயம் காட்டினர்.

பெர்னார்டுஷாவை ஒரு கோடீஸ்வரச் சோஷலிசவாதி என்று நகைச்சுவையுடன், சொல்வதுண்டு. அவருடைய கட்டுரைகளிலும் ஏடுகளிலும் பணக்காரரைக் கடுமையாகத் தாக்கியெழுதியுள்ளார். 'முதலாளித்துவம் ஒரு வகுப்பினருக்கு ஓயாத உழைப்பும், மற்றொரு வகுப்பினருக்கு உழைப்பேயில்லாத ஓய்வும் கொடுக்கிறது. எனவே, வறியோருக்கு விளைவிக்கும் கேட்டின் அளவிற்கு, அது செல்வந்தர்களையும் கெடுக்கிறது' என்பது ஷாவின் கூற்று. முதலாளிகள் பெயர்களையெல்லாம் சமூக நலன் கருதிப் பதிவு செய்து, அவர்கள் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி கடைசியில் அவர்களை அறவே அகற்றல் வேண்டும்; வருமான வரியின் வளர் வீதத்தை (progression) அதிகப்படுத்தி,

வருமான சமநிலை எய்துவதற்கு வழிச் செயல் வேண்டும். பொது வசதிகள் (public utilities) நிறுவனங்கள், சுரங்கங்கள், அஞ்சல் அலுவலகங்கள், இருப்புப்பாதை, படகுப் போக்குவரத்து, இன்ஷுரன்ஸ் முதலியவற்றை நாட்டுடைமையாக்க வேண்டும் என்று கூறினர். ஆனால், தொழில்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்க வேண்டும் என்று கூறவில்லை.

### ஃபேபியனிசமும் மார்க்சிசமும்

இனி மார்க்சிசத்துக்கும் ஃபேபியனிசத்துக்கும் உள்ள வேறுபாடுகளைப் பார்ப்போம். (1) முன்னது வகுப்புப் போர்த் (Class War) தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. பின்னது அதை நம்பவேயில்லை. (2) முன்னது பாட்டாளி மக்கள் (Proletariat) கட்சியின் ஏகாதிபத்தியத்தைக் கடைசியாக நிறுவுவதையும், பின்னது சமூகத்தின் வகுப்புகள் அனைத்தும் பிரதிநிதிகள் அனுப்பி நடைபெறும் குடியாட்சியையும் குறிக்கோள்களாகக் கொண்டவை. (3) வரலாற்றின் போக்குப் பொருளாதாரக் காரணங்களைக் கற்பிக்கிறது, மார்க்சிசம். அதைச் சற்றேனும் ஒப்புக்கொள்ளவில்லை ஃபேபியனிசம். (4) முன்னது புரட்சியை விரும்பியது; மூட்டுவது ஆகும். பின்னது கத்தியின்றி ரத்தமின்றி மாறுதலை விழைவது ஆம். (5) முன்னது முதலாளித்துவத்தின் வீழ்ச்சியை ஒருவராலும் தடுக்க முடியாது என்று சாதித்தது. பின்னது சட்ட பூர்வமான மாறுதல்களால் சோஷியலிச அமைப்பை நிலைநாட்டலாம் என்று கூறியது.

### ஃபேபியனிசத்தின் சாதனைகள்

ஆங்கில நாட்டு நடுத்தர வகுப்பினருக்குச் சோஷலிசத்தின் பாலுள்ள கசப்பையும் ஐயப்பாடுகளையும் களைந்து, சோஷலிசத்தையும் கன்சர்வேடிவ், லிபரல் கட்சிகளைப்போலக் கண்ணியமுள்ளதாகக் கருதிட பிரசாரம் செய்வது ஃபேபியனிசத்தின் முக்கிய பணி' என்று பெர்னுடுஷா கூறியுள்ளார். பிரசாரம் ஃபேபியனிசத்தின் மூச்சு என்றால் மிகையாகாது. 1895-லிருந்து 1914 வரை 108 பிரசார ஏடுகளும் (tracts), 1939-லிருந்து 1949-க்குள் 40 ஏடுகள், 25 நூல்கள், 8 சிறு நூல்கள், 42 ஆராய்ச்சிக் கட்டுரைகள், ஆக மொத்தம் 1949 வரை 200-க்கு மேலான ஃபேபியன் நூல்கள் வெளியாயிருக்கின்றன. 1940-ல் ஃபேபியன் குடியேற்ற நாடு (பின்னால் 1958-லிருந்து காமன்வெல்த்) பீரோ (Bureau) என்றும், 1942-ல் ஃபேபியன் அனைத்து நாட்டு பீரோ என்றும் பிரசாரத்துக்கென்றே நிறுவப்பட்டன. இந்தப் பீரோக்கள் குடியேற்ற, காமன் வெல்த், அனைத்து நாட்டுப் பிரச்சினைகள் ஆராய்வதிலும், அனைத்து நாட்டு சோஷலிசக் கைகோள் வகுப்ப

தற்கு நாடுகளை ஆயத்தம் செய்வதிலும் ஈடுபட்டிருக்கின்றன. பிற சோஷலிச வகைகள் மாதிரி வெறும் வார்த்தைகளில் பொழுதை வீணாக்காமல் செயலில் ஈடுபடுவதே அவர்களின் குறிக்கோள் என்று ஃபேபியனிசத்தோர் கூறிவந்தனர். அவர்கள் செயல் பிரசார ஏடுகள் வெளியிடுவதேயாயிற்று. இவர்களுடைய கோட்பாடுகள் எவ்வளவு தீவிரமாயிருப்பினும், ஃபேபியனிசத்தோர் தங்களுக்கென்றோர் அரசியல் கட்சி தோற்றுவிக்கவில்லை; எந்தக் கட்சியிலும் அவர்கள் சேர்ந்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர். இவர்களுடைய திறன்மிகு பிரசாரங்களினால் பல புதிய, அவசியமான சமூகச் சீர்திருத்தச் சட்டங்கள் பிரிட்டனில் நிறைவேற்றப்பட்டன. அவர்கள் இவ்வளவு இவ்வாறு சாதித்ததற்கு அவர்கள் சோஷலிசத்தை நிறுவவும் வழி முறைகளில் வகுத்துக் கொண்ட நிபந்தனைகள் நான்கையுமே காரணமெனக் கூறலாம்: (1) குடியாட்சி முறையில் பெரும்பான்மை மக்கள் ஆதரவின் வாயிலாக சோஷலிசத்தை நிறுவவேண்டும். (2) படிப்படியாக (gradual) நாட்டின் பொருளாதாரம் சீர்குலையாமல் சோஷலிசத்தை உருவாக்கவேண்டும். (3) அமைதியான முறையில், அரசியல் சட்டங்களை மீறாத வழியில் அதைக் கொண்டுவரவேண்டும். (4) கடைசியாகச் செயலாற்றப்படும் முறைகள் அறநெறிச் சார்பிலுள்ளவை யென்று பெரும்பான்மை மக்கள் கருதும் வகையில் இருக்கவேண்டும். சுருங்கக் கூறின் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசம் கத்தியின்றி, இரத்தமின்றி, ஆத்திரமின்றி, பதற்றமின்றி, வகுப்பு வெறியின்றி நடத்தப்படும் அறம்சார் பிரசாரப் போரினால் பிறத்தல் வேண்டும் என ஃபேபியனிசத்தோர் கருதினர். பிரசாரம் செய்தனர். அவர்களை முனிசிபல் சோஷியலிச வாதிகள் என்றும், காரமில்லாத (diluted) சோஷலிச வாதிகள் என்றும் ஏளனமாகச் சிலர் கூறுவதுண்டு.

## பாகம் VII

# புதுப் பொருளாதாரம்

## 24. ஜான் மேனுர்டு கெயின்ஸ்
(John Maynard Keynes, 1883-1946)

### வாழ்க்கைக் குறிப்பு

ஜான் மேனுர்டு கெயின்ஸின் தந்தை ஜான் நெவில் கெயின்ஸ் (John neville Keynes) என்பவர் பொருளாதாரத்திலும், தருக்கத் திலும், கல்லூரி நிர்வாகத்திலும் புகழ் பெற்ற அறிஞர் ஆவார். அவருடைய தாயார் கேம்பிரிட்ஜ் நகர மேயராகப் பணியாற்றி யவர். பெற்றேர்கள் இருவரும் ஆங்கில நாட்டில் நன்கு மதிக்கப் பெற்ற அறிஞர் பரம்பரையில் வந்த நடுத்தர வகுப்பினர். மேனுர்டு கெயின்ஸ் ஈட்டன் (Eton) பெரும் பள்ளியில் (public school) படித்த காலத்தில் கணித நூலில் சிறந்த மாணவராக விளங் கினுர். பின்னர்க் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அரசர் கல்லூரியில் (King's College) 1902-ல் சேர்ந்தார். கணிதத்தில் அது வரை இருந்த ஆர்வம் தத்துவ நூல்களிலும் அரசியல் நூல் களிலும் சென்றது. அரசாங்க நிர்வாக அதிகாரிகள் தேர்தல் (British Civil Service) போட்டியில் கலந்துகொள்ள விரும்பி, அதற்கு முக்கிய பாடமான பொருளாதாரத்தைப் படிக்கத் தொடங்கினுர்; அதனுல் ஆல்பிரட் மார்ஷலின் மாணவராகும் வாய்ப்புக் கிடைத்தது. பொருளாதாரத்தில் மற்றைப் பாடங் களைவிட மிகக் குறைந்த எண்களையே (marks) தேர்வில் பெற்ருர் என்பதைக் குறிப்பிடவேண்டும். மற்றைப் பாடங்களில் வகுப்பி லேயே முதலாவதாகத் தேறியவர், பொருளாதாரத்தில் இவ்வாறு குறைந்த எண்கள் பெற்ருர் என்ருலும், வகுப்பில் இரண்டாவ தாகத் தேறினுர் என்பதையும் குறிப்பிடவேண்டும். மாணவர் களில் இவரையே அறிவில் சிறந்தவராக இவருடைய ஆசிரியர் கள் நன்கு மதித்து வந்தனர். அறிவிற் சிறந்த மாணவர்கள்

சேர்ந்து நிறுவிய 'புளூம்ஸ்பரி குழு'வின் (Bloomsbury Group) சிறந்த உறுப்பினராக இவர் இருந்தார். இக் குழுவின் உறுப்பினர் என்றால் கவிதை, ஓவியம், இசை, நடனம் போன்ற நுண் கலைகளில் தேர்ச்சியும் ஆர்வமும் உள்ளவர் என்பதே பொருள். இக் குழுவினர் மதிப்புரை வாயிலாக வெளியிட்ட கருத்துகள் இக் கலைகளின் போக்கையே பண்படுத்தின என்பர்.

கல்வி முடிந்ததும் இந்திய அலுவலகத்தில் (India Office) இரண்டு ஆண்டுகள் பணியாற்றினார். பின்னர் 1908-ல் தாம் கற்ற பல்கலைக் கழகத்திலேயே விரிவுரையாளராகத் தொண்டாற்றி வந்தார். 1919-ல் உலகப் புகழ் பெற்ற லண்டன் 'பொருளாதார இதழுக்கு' (Economic Journal) ஆசிரியரும் ஆனார். முதல் உலகப் போர் மூண்டபின் அரசினர் நிதித் துறையில் பதவியேற்று அயல் நாட்டுச் செலாவணிச் சிக்கலை ஆராய்வதில் ஈடுபட்டார். 1913-ல் இவர் எழுதிய முதல் நூல் 'இந்தியச் செலாவணியும் நிதியும்' (Indian Currency and Finance) என்ற தலைப்பில் வெளியாயிற்று. இதில் பொன் பரிவர்த்தனைத் திட்டம் (gold exchange standard) பற்றித் தெளிவான விளக்கவுரை ஒன்றை மிக அழகாக எழுதியுள்ளார். இதை யாவரும் புகழ்ந்தது மட்டுமல்ல. இதில் பணவாக்கக் கைகோள் (monetary policy) முறையில், தானாகவே இயங்கும் பொன் நாணயத் திட்டத்தை விட 'நிருவகிக்கப்பட்ட செலாவணி' (managed currency) முறையே மேலானது என்ற அவரது கொள்கை அந்தக் காலத்திலேயே உருவாகிவிட்டது என்பதும் இந்த நூலிலிருந்து விளங்குகிறது.

1919-ல் வெர்சயில்ஸ் சமாதான மாநாட்டில் (Versailles Peace Conference) ஆங்கில அரசாங்கப் பிரதிநிதிகளில் ஒருவராக இவர் கலந்துகொண்டார். ஜர்மனி கொடுக்கவேண்டிய நட்டஈடு மிகுதியாகத் தமக்கு வரவேண்டும் என்று வெற்றி பெற்ற நாடுகள் கடுமையாக வற்புறுத்தின. இந்தக் கடுமையை எதிர்த்துக் கெயின்ஸ் மாற்ற முயன்றார்; ஆனால் தோல்வியுற்றார். உடனே தமது வேலையைத் துறந்துவிட்டு, லண்டனுக்குத் திரும்பி வந்து, இரண்டே தினங்களில் 'சமாதான உடன்படிக்கையின் பொருளாதார விளைவுகள்' (Economic Consequences of the Peace) என்றதொரு நூலை வெளியிட்டார். இந் நூலில் பிரமாண்டமான நட்டஈட்டை ஜர்மனி கொடுக்கவேண்டுமென வற்புறுத்துவதை எதிர்த்து இரண்டு காரணங்கள் கூறியுள்ளார். அந்த அளவு நட்டஈடு கொடுக்கவேண்டுமானால், ஜர்மனி அவ்வளவுக்கும் பொருள் உற்பத்தி செய்யவேண்டும்; அவ்வாறு செய்ய ஜர்மனியால் இயலாது என்பது முதல் காரணம். அப்படி உற்பத்தி

செய்துவிட்டாலும், அப் பொருள்களை அயல் நாடுகளில் ஜர்மனி விற்றல் வேண்டும் ; அதுவும் இயலாத ஒன்று என்பது மற்றொரு காரணம்.

பல்கலைப் பணியில் திரும்பவும் அமர்ந்தார். அவ்வாறு பணியாற்றி வரும்போழுது ஒரு பெரிய இன்ஷுரன்ஸ் நிறுவனத்தின் தலைவர் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார். 1920-லிருந்து 'நேஷன்' என்னும் பத்திரிகைக்குக் கட்டுரைகளும் எழுதி வந்தார். அவற்றிலெல்லாம் அரசாங்கம் பொருளாதாரத் துறையில் பல பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற தமது கருத்தை வற்புறுத்தி வந்தார். 1923-ல் அவருடைய 'பண வெளியீட்டு முறைச் சீர்திருத்தம்' (A Tract on monetary Reform) என்ற நூல் வெளியாயிற்று. இந் நூலில் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தின் சம்பிரதாயக் கோட்பாடுகளை விளக்கியிருந்தார் ; ஆனால், அதுவல்ல அதன் சிறப்பு. ஏறக்குறையப் பத்தாண்டுகளுக்குப் பின்னரே மற்றைய பொருளாதார வல்லுநர்கள் ஒப்புக் கொள்ளத் துணிந்த சில பொருளாதாரச் சீர்திருத்தங்களைத் தெளிவாக விளக்கி, மிக்க ஆர்வத்துடன் அந் நூலில் ஆதரித்திருந்தார். இதுவே அதன் சிறப்பாகும்: இச் சீர்திருத்தங்களில் மூன்று குறிப்பிடத்தக்கவை ; அவை அவருடைய சிந்தனையின் போக்கை அறிந்து கொள்ள துணை செய்யும். (1) நிருவகிக்கப் பட்ட செலாவணியின் இன்றியமையாமை. (2) பொன் நாணயத் திட்டத்தின் தெளிவாக்கப்பட்ட குறைகள் காரணமாக அதைக் கைவிட வேண்டிய கட்டாயம். (3) மைய பாங்கியின் பொறுப்புக்களை மிகுதியாக்க வேண்டிய அவசியம். இம் மூன்றும் பின்னர் அவருக்கு மங்காப் புகழை வாங்கித் தந்த நூலில் வெளியாயின. இவையே பொருளாதார இயல் வரலாற்றிலும், செயல் முறையிலும் மாபெரும் புரட்சியை உண்டாக்கியவை.

அவர் எழுதிய இரண்டு புகழ்பெற்ற நூல்களைப் பற்றிக் கூறுமுன், அவருடைய வாழ்க்கைக் குறிப்பைக் கூறி முடித்துக் கொள்ளலாம். இரண்டாம் உலகப் போர் தொடங்கியவுடனே ஆங்கில அரசாங்கம் மீண்டும் அவரை மிகப் பொறுப்பான பதவியில் அமர்த்தியது. போர்க்காலப் பண வீக்கம் (inflation), அயல் நாட்டுச் செலாவணியின் பற்றுக்குறை—இவை போன்ற சிக்கல்களுக்குத் தீர்வு காண வியக்கத்தக்க வகையில் அவர் தொண்டாற்றினர். போர் முடிந்தபின், அனைத்து நாட்டுச் செலாவணி முறையைச் சீர்திருத்தி உலக வணிகம் பெருகவும், உலக மக்களின் நலம் மேம்படவும் அரும்பாடு பட்டார். பிரட்டன் உட்ஸ் இரட்டைக் குழந்தைகள் (Bretten Woods Twins) என்று அன்புடன் அழைக்கப்படும் அனைத்து நாட்டுச் செலாவணி நிதியும்

(International Monetary Fund), உலக வங்கியும் (World Bank) அல்லது புனர் நிர்மாணத்துக்கும் அபிவிருத்திக்கும் அனைத்து நாட்டு வங்கி (International Bank for Reconstruction and Development) என்ற இரண்டையும் நிறுவுவதில் அமெரிக்க, கானடா இரண்டு நாடுகளின் பிரதிநிதிகளுடனும் கெயின்ஸ் ஆங்கில நாட்டுப் பிரதிநிதியாகச் சேர்ந்து உழைத்து வெற்றியும் கண்டார்.

**பணம்-ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை**

1925-ல் கெயின்ஸின் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தைக் காணலாம். அந்த ஆண்டில்தான் அவர் ருஷ்ய நடனத்தில் புகழ் பெற்ற லிடியா லொபக்கோவா (Lydia Lopokova) என்னும் அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார். இதுகாறும் பற் பல துறைகளில் ஈடுபட்டு ஒவ்வொரு துறையிலும் வெற்றியைக் கண்டிருந்தாலும், 1925-க்குப் பின்னர்தான் பொருளாதார இயல் வளர்ச்சியில் இவர் எடுத்துக்கொண்ட அக்கறை ஓங்கி வளர்ந் தது. 1925-லிருந்து அவர் பிற அலுவல்களைக் குறைத்துக் கொண்டதே இதற்குச் சான்று. இதற்குமுன் இவர் பல நூல்களை எழுதியிருந்த போதிலும் அவையெல்லாம் அவ்வக் காலத்துப் பொருளாதாரச் சிக்கல்களைப் பற்றியவையேயாம். அவை விளை வியல் பொருளாதார (applied economics) நூல்கள். ஆனால் 1930-ல் அவர் வெளியிட்ட 'பணம்–ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை' (A Treatise on Money) எனும் நூலோ ஒரு தனிப் பெருமைக்குரி யது. பொருளாதார அடிப்படை அறிவியலை விளக்கி ஒரு பெரிய நூல் எழுதவேண்டுமென்ற பேரார்வத்தில் எழுதிய நூலாகும் இது. இதில் சேமிப்பு, முதலீடு என்ற இரண்டுக்கும் உள்ள தொடர்பையும், பொருளாதார நிலை மாறும் காலங்களில் இவற்றிடையே ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளையும் மிகவும் நுட்ப மாக ஆராய்ந்துள்ளார். முன்னர் தாம் ஆதரித்த வங்கிச் சீர் திருத்தங்களை இதில் விரித்தும் விளக்கியும் எழுதி வற்புறுத்தி யுள்ளார். மேலும், பங்கு மார்க்கட், செலாவணி நிறுவனங்கள் முதலியவற்றைப் பற்றிய நுண்ணிய பல விளக்கங்கள் இதில் சிறப்பாக அமைந்துள்ளன. இந்த நூல் ஒன்றுமட்டுமே அவருக் குப் பொருளாதாரக் கோட்பாட்டு வரலாற்றில் சிறந்ததோர் இடத்தை வழங்கக் கூடிய பெருமை வாய்ந்தது. ஆனால், இந் நூலில் தொன்மைப் பொருளாதாரக் கோட்பாடுகளைப் பற்றித் தமக்குத் தோன்றிய கருத்துகளை விளக்கியுள்ளார். ஆனாலும் ஆறே ஆண்டுகளுக்குப் பின் அவர் வெளியிட்ட புரட்சி ததும்பும் மாபெரும் நூல் இந் நூலின் புகழை மங்கவைத்துவிட்டது என்று தான் கூற வேண்டும்.

பொதுக் கோட்பாடு

இப் புரட்சி நூல் 'வேலை வாய்ப்பு, வட்டி, பணம் என்பன வற்றைப் பற்றிய பொதுக் கோட்பாடு' (The General Theory of Employment, Interest and Money) என்பதே ஆம். இது 1936-ல் ஜனவரி மாதம் வெளியாயிற்று. வெளி வந்ததுமே அதன் உயர்வும், நயமும், புதுமையும் அறிஞர் உலகுக்கெல்லாம் தெற்றென விளங்கிவிட்டது. இந் நூலில் கெயின்ஸ் உருவாக்கிய கோட்பாடுகள் எல்லாம் பொருளாதார மந்தத்தை எவ்வாறு நீக்குவது என்னும் கேள்விக்கு விடை காணும் நோக்கத்துடன் பகுத்தறி முறையில் (Deductive method) உருவானவை. இந் நூலின் அடிப்படையையே 'கெயின்ஸியனிசம்' அல்லது 'புதிய பொருளாதாரம்' என்று இன்று கூறி வருகின்றனர்.

கெயின்ஸ் ஒரு சிறந்த எழுத்தாளர். அவர் எழுதும் சொற்றொடர்கள் ஆற்றல் வாய்ந்த சொற் செறிவாக விளங்குபவை. ஆனால் நடையோ இனியது; விளக்கும் முறையோ எளியது. இவ்வாறு தம் கருத்தைத் திட்ப நுட்பமாகவும் தெளிவாகவும் எழில் பெற எழுதுவது அவர் வழக்கம். இதற்கு விதி விலக்காக அமைந்தது 'பொதுக் கோட்பாடு' என்ற நூல். அதன் முகவுரையிலேயே, இந் நூல் தமது ஆசிரியத் தோழர்களுக்காக எழுதப்பட்டது என்று ஆசிரியரே எச்சரிக்கை செய்துள்ளார். ஒரு விமர்சகர் கூறுவதுபோல், வேண்டாத அளவுக்கு வேண்டுமென்றே நூலைக் கடினமாக்கியது போலக் கூடத் தோன்றுகிறது இந் நூல். இந் நூலைப் பொறுத்த மட்டிலும், கெயின்ஸின் நடை ரிக்கார்டோவின் கடினமான, சிக்கல் நிறைந்த, வறட்சியான நடையையே நினைப்பூட்டுகிறது.

### (i) கெயின்சும் தொன்மை நூலாரும்

இந் நூலின் முதற் பகுதி கெயின்சியப் பொருளாதாரத்தின் புரட்சித் தன்மையையே காட்டுகிறது. பிற்பகுதி கெயின்சின் புதுப் பொருளாதாரத்தின் அடிப்படைக் கோட்பாடுகளையும், அவற்றிலிருந்து எழும் முடிவுகளையும் பகுத்தறி முறையில் விளக்குகிறது எனலாம். முற்பகுதியில் தொன்மைப் பொருளாதாரக் கருத்துகளைக் கெயின்ஸ் கடுமையாகத் தாக்குகிறார். அவர் கருத்துப்படி 'சம்பிரதாயப் பொருளாதாரமென்பது (conventional economics) ரிக்கார்டோவிலிருந்து வந்த தொன்மைப் பொருளாதாரம் மட்டுமல்ல, இறுதிநிலை வாதிகள், மறுமலர்ச்சி அறிஞர்கள் ஆகியோர் எழுதிய நூல்களின் கொள்கைகளும் சேர்ந்ததுவே ஆம். எனவே, குறிப்பாக மார்ஷலும், அவரது பிரதம மாணுக்கராகிய பேராசிரியர் ஏ. சி. பிகோவும்

(A. C. Pigon) இந்தப் பழைய மரபுப் பொருளாதாரக் குழுவில் சேர்ந்தவர்கள் ஆயினர். சிறப்பாக ஆறு முனைகளில் நின்று அச் சம்பிரதாயப் பொருளாதாரத்தைத் தாக்கி அதில் உள்ள குறைகளைக் கெயின்ஸ் எடுத்துக் காட்டுகிறார்.

### (1) பொருளாதாரத்தின் குறிக்கோள்

பொருளாதாரத்தின் குறிக்கோளை ஆராயும்பொழுது ரிக்கார்டோ 'தேசீய வருமானம் எவ்வாறு நிலச்சுவான்களுக்கும், தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது' என்பதனை விளக்குவதே அக்குறிக்கோள் என்று மால்தசிடம் ஆணித்தரமாகக் கூறியது நினைவிருக்கும். இந்தக் குறிக்கோளை மறுக்கிறார் கெயின்ஸ், பொருளாதார ஆராய்ச்சியின் நோக்கம் பொருள் உற்பத்தியை மிகுதிப்படுத்துவதும், அதற்காக அனைவருக்கும் வேலைவாய்ப்புக் கிடைக்குமாறு செய்வதுமே என்று இவர் விளக்குகின்றார். சம்பிரதாயப் பொருளாதாரமோ ஆக்கிய பொருளைப் பங்கிடுவது பற்றிய ஆராய்ச்சியிலேயே மூழ்கியது. கெயின்ஸின் பொருளாதாரமோ 'பொருள் ஆக்குவதில் என்னென்ன சக்திகள் ஈடுபடுகின்றன? பொருளாக்குச் சாதனங்கள் முழுவதற்கும் முழுவேலை அளிப்பது எப்படி?' என்றெல்லாம் ஆராய்வதில் முனைகிறது. இம் மாறுபட்ட குறிக்கோளே கெயின்ஸின் புதுப் பொருளாதாரத்தில் நாம் காணும் முதலாவது பெரிய வேறுபாடு ஆகும்.

### (2) வேலை நிறைவுக் கொள்கை

தொன்மைப் பொருளாதாரம் 'மக்கள் அனைவருக்கும் முழு வேலை வாய்ப்புக் கிடைக்கும்; ஆலைகள் அனைத்தும் முழு நேரம் வேலை செய்யும்; நிலங்கள் அனைத்தும் குறைவின்றிப் பயிர் செய்யப்படும். சுருங்கக் கூறின், தானாகவே இயங்கும் சக்திகளால் (automatic force), வேலை நிறைவு (full employment) உடனடியாகக் ட்டாவிடினும், விரைவில் ஏற்பட்டுவிடும்' என்ற கொள்கையைத்தான் அடிப்படையாகக்கொண்டது. இதற்கு நேர் எதிராக அப்படித் தானாகவே வேலை நிறைவு ஏற்படாது. பொருளாதார வரலாற்றில் அப்படி என்றும் ஏற்பட்டதில்லை. வணிக சகடம் பொருளாதார மந்தத்தையும் வேலைக் குறைவையும் திரும்பத் திரும்பக் கொண்டு வந்து சேர்த்து நாட்டின் பொருளாதார நிலையைக் கெடுத்து வருகிறது' என்று வாதிக்கிறார். வேலை நிறைவு ஏற்படுவது அருமையிலும் அருமை சிறிது காலம் கைகூடலாம். மற்றைக் காலங்களிலெல்லாம், பொருளாதார அமைப்பு வேலைக் குறைவு எனும் பிணிக்கே ஆளாகிறது என்பது கெயின்ஸின் முடிவு.

(3) ஸேயின் அங்காடி விதி

தொன்மைப் பொருளாதாரம் ஸேயின் அங்காடி விதியை ஆதாரமாகக் கொண்டது என்பதை நாம் அறிவோம். 'ஒவ்வொரு பண்டத்தின் உற்பத்தியும் பிற பண்டங்களுக்குத் தேவையை உண்டாக்கும் சக்தியாக மலரும். எனவே விற்க முடியாத அளவுக்குப் பண்ட உற்பத்தி ஒருக்காலும் உண்டாகாது' என்பது ஸேயின் விதி அல்லவோ? இந்த விதி, பணம் எனும் பண்டமாற்றுக் கருவி கண்டுபிடித்துப் புழக்கத்துக்கு வராத, பண்ட மாற்று யுகத்துக்கே (barter age) பொருத்தமாகும். பணம் புழக்கத்துக்கு வந்தபின், ஒரு பண்டத்தை உற்பத்தி செய்தவன், அந்தப் பண்டத்தை விற்றுக் காசாக்கி விட்டு வேறு ஒரு பண்டமும் வாங்காமல் காசைத் திரட்டிக் கொண்டே போனால், பிற பண்டங்கள் விற்கப்படாமல் தேங்கித்தான் கிடக்கும் என்பது கெயின்ஸின் முடிவு. பணம் புழக்கத்தில் இருக்கும் இக்காலத்தில், அங்காடி விதி செல்லாது என்று அவர் தெளிவாக்குகிறார். பணம் புழக்கத்திற்கு வந்தபின் ஒரு நாட்டின் பொருளாதாரமே சிறப்பியல்பு ஒன்றைப் பெறுகிறது. இச் சிறப்பியல்பைத் தெளிவாகக் காட்டுவதற்காகவே அவரது 'பொதுக் கோட்பாடு'க்கு 'பணப் பொருளாதாரத்தின் கோட்பாடு' என்று துணைப் பெயரையும் சூட்டினார்.

(4) சம்பிரதாய நூலின் தவறான அடிப்படைக் கருத்துகள்

சம்பிரதாயப் பொருளாதாரம் என்பதே 'யாவருக்கும் வேலை வாய்ப்பு' (full employment). 'அளவுக்கு மிஞ்சிய உற்பத்தி இயலாத செயல்' (Over production is impossible) என்ற இரண்டு கொள்கைகளாலாகும் கடைக்காலின் மேல் எழுப்பிய மாளிகை ஆகும். பண்டங்களின் மதிப்பு, வாரம், கூலி, வட்டி முதலியவற்றை நிர்ணயிக்கும் ஆராய்ச்சி இந்த அடிப்படையிலேதான் நிகழ்ந்திருக்கிறது. இவ்விரு அடிப்படைகளிலும் தவறு இல்லையானால், மதிப்பு நிர்ணய ஆராய்ச்சியின் விளைவுகளும் தவறு இல்லாதவையாகும். ஆனால் கெயின்ஸ் காட்டியபடி இந்த அடிப்படைக் கருத்துகளே தவறாயிருக்கும்போது, சம்பிரதாய வழியில் நிர்ணயிக்கப் பெறும் மதிப்பு, கூலி முதலியனவும் 'முதற்கோணல் முற்றும் கோணல்' என்பது போலத் தவறாகவேதான் முடியும். சம்பிரதாயக் கொள்கைக்கு மாறாக வேலைக் குறைவும், பொருள் தேக்கமும் சமுதாயத்தை வாட்டிக் கொண்டு வருவதே அதன் தவறுகளுக்குச் சான்று ஆகும்.

(5) அணு நிலை ஆராய்ச்சி

1870-லிருந்து 1930 வரை அஃதாவது இறுதி நிலை வாதம் கிளம்பிய காலத்திலிருந்து உலகப் பொருளாதார மந்தம்

தொடங்கியது வரை-பொருளாதார வல்லுநரின் ஆராய்ச்சி தனி மனிதனின் தேவை, நுகர்வு, தனி நிறுவனத்தின் (firm) முதலீடு, உற்பத்தி, தனிப்பட்ட பண்டங்களின் அளிப்பு நிலை, அடக்கச் செலவு, மதிப்பு என்று தனித்தனி நிலைகளாகக் கொண்டு, நாட்டின் பொருளாதாரத்தை அணு அணுவாகப் பிரித்து ஆய்ந்து வந்தது. இந்த அணு நிலை ஆராய்ச்சிக்குக் (micro economic analysis) காரணம் இந்த 60 ஆண்டுக் காலத்தின் போக்கும் சூழ் நிலையுமே ஆகும். 19ஆம் நூற்றுண்டின் இரண்டாம் பகுதியி லிருந்து, தொழில் வளர்ச்சியின் வேகத்தினுல் ஆங்கில நாட்டிலும் பிற நாடுகளிலும் எங்கணும் பொருளாதார நிலை உயர்ந்து கொண்டே போயிற்று. மேலும் இவ்வாறு உயர்ந்து கொண்டே போகும் என்ற உறுதியான நம்பிக்கையும் ஓங்கியிருந்த காலம் அது. எதிர்பாராதபடி 1930-ல் உலக முழுவதும் பொருளாதார மந்தத்தில் சிக்கியவுடன், இந்த நம்பிக்கை அழிந் தொழிந்தது. 1930-க்குப் பின் ஒரு நாட்டின் பொருளாதார நிலை எந்த விநாடி யிலும் திடீரெனச் சரிந்துவிடலாம் என்ற அச்சம் எங்கும் பரவிற்று. இப்படி அச்சம் பொங்கிய நிலையில் ஒரு நாட்டின் பொருளாதாரத்தை அணு அணுவாய்ப் பிரித்து அலசி ஆய்வது வீண் பொழுதுபோக்கு எனத் தோன்றியது. பொருளாதார நிலையை எபபடி ஸ்திரப் படுத்துவது. எப்படி உயர்த்துவது, எப்படி அதன் வீழ்ச்சியைத் தடுப்பது என்ற கேள்விகளுக்கு விடை காணும் கட்டாயம் ஏற்பட்டது. இச் சூழ்நிலையில் பிறந் தது கெயின்ஸின் புதுப் பொருளாதாரம். ஆகவே அது ஒரு நாட்டின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும் தாழ்த்தவும் இயங்கிவரும் சக்திகளை ஆராய்வதனையே குறிக்கோளாகக் கொள்கிறது. இது அணு நிலை ஆராய்ச்சியின் குறிக்கோளைவிட இக் குறிக்கோள் வேறுபட்டது என்பது தெளிவு. ஆனுல் ஒரு வகையில் தொன்மை நூல் மும்மணிகள் கொண்ட குறிக்கோளின் மறுமலர்ச்சியே என்றும் இதைக் கருதலாம். இது 'அண்ட நிலைப் பொருளாதார ஆராய்ச்சி' (macro-economic analysis) என்று கூறப்படுகிறது.

### (6) இரு கூறுகளையும் இணைக்கும் கருவி

சம்பிரதாயப் பொருளாதாரத்தில் பண்டங்களின் மதிப்பு, பொருளாக்கச் சாதனங்களின் மதிப்பு ஆகியவற்றைப் பற்றிய ஆராய்ச்சி ஒரு தனிப் பகுதி ஆகும். வணிகச் சகடம் பொருளா தார நிலையின் ஏற்றத்தாழ்வு, வேலை வாய்ப்புக் குறைவு பொருள் தேக்கம், ஆகியவற்றைப் பற்றிய ஆராய்ச்சி மற்றொரு தனிப் பகுதி ஆகும். இவ்விரு கூறுகளுக்கும் இடையே ஒரு தொடர்பும் இல்லாதபடி பொருளாதார ஆராய்ச்சி இதுவரை நடந்து வந்திருக்

கிறது. இவ்விரு கூறுகளுக்கு மிடையே தொடர்பு கண்ட பெருமை கெயின்ஸுக்கே உரியதாகும். இக்காலப் பொருளா தாரம் முன் கூறியபடி 'பணப்' பொருளாதாரமே ஆகும். பணத் தைச் செலவழிக்காமல் சேமித்துப் பதுக்கிவைத்தால் உற்பத்தி யான பொருள்களுக்குத் தேவை குன்றிவிடும். அதனுல் பொருள் தேக்கமும் வேலைக் குறைவும் ஏற்படும். பணம் புழக்கத்தில் இருக்கும் நாகரிக நிலையில் பண்டங்களின் விலை, பொருளாக்குச் சாதனங்களின் மதிப்பு ஒரு புறமும், வணிகச் சகடநிலை மற்ருெரு புறமும் ஆக எழும் தனித் தனிப் பிரச்சினைகளாக இல்லாமல் ஒன்ருேடொன்று இணைந்த பிரச்சினைகளாக இவை மாறி விடு கின்றன. இவ்வாறு சம்பிரதாயப் பொருளாதாரத்தில் இரு கூறுகளாய்க் கிடந்த பகுதிகளை ஒன்ருக இணைத்து, ஒருமிக்க அலசி ஆய்வது கெயின்ஸ் வகுத்த புது வழி. இதனுல் ஒரு பகுதிக்கு ஒருவகை விதிகள், மற்ருெரு பகுதிக்த மற்ருெரு வகை விதிகள் என்றில்லாமல் பொருளாதாரம் முழுவதற்குமே ஒரே வகை விதிகள்தாம் என்று கூறும் நிலைவந்ததனுல் பொருளாதார இயல் முழு விஞ்ஞான வளர்ச்சியை அடைந்தது எனலாம். இது கெயின்ஸ் செய்த பெருந் தொண்டாகும்.

## (ii) கெயின்சின் அடிப்படைக் கருத்துகள்

### பொதுக் கோட்பாடு தோன்றிய காலத்துச் சூழ்நிலை

1930-ல் முதலாளித்துவ நாடுகள் எல்லாவற்றிலும் பொருளா தார மந்தம் பரவி மக்களுக்கு வேலையின்மையையும், பெருந் துய ரையும் உண்டாக்கியது. இந்தச் சூழ் நிலை கெயின்ஸ் ஒரு புது வழியில் இறங்கி ஆராயக் காரணமாக அமைந்தது. சம்பிர தாயப் பொருளாதாரத்தின் சில அடிப்படைக் கோட்பாடுகளைக் கெயின்ஸ் தம் நூலின் முதற் பகுதியில் தகர்த்தெறிகிருர். பின் அவர், பிற்பகுதியில் தமது கோட்பாடுகளை வகுப்பதற்கும், அவற்றிலிருந்து ஆராய்ந்து, தெளிந்த முடிவுகளை விளக்குவதற் கும் உகந்ததொரு முன்னுரையாக இம் முதற் பகுதி அமைகிறது. அடிக்கடி ஏற்படும் வேலையின்மையை எப்படித் தீர்ப்பது, தவிர்ப் பது என்னும் கேள்விகள் பொருளாதார அறிஞர்கள், அரசியலார், தொழில் அதிபர்கள் முதலிய அனைவர் உள்ளத்தையும் வாட்டிய காலம் அது. நடைமுறை அனுபவத்திலிருந்து வேலைக் குறைவைத் தீர்க்கத் 'தேவையைப் பெருக்கு', 'விலையைக் குறை', 'கூலியைக் குறை' என்று பல வழிகளைக் காட்டுவது எளிது. ஆனுல், அவற்றை ஆட்சியாளர் ஒப்புக் கொள்வது அரிது. அறிவியல் நெறியில் பொருளாதார நிபுணர்கள் குறை கூருத முறையில் ஆராய்ந்து பெற்ற முடிவுகளை ஒட்டியே தீர்வு

காணும் வழிகளுக்கே மதிப்புண்டு. இவ்வாறு மதிக்கக் கூடிய வழிகளைக் கெயின்ஸ் வகுத்துச் செயற்கரியதொரு சாதனையைச் செய்து முடித்தார். அதுவே அவருடைய புகழுக்கும், அவருடைய கோட்பாடுகளை அனைவரும் ஒப்புக்கொள்வதற்கும் காரணமாயிற்று.

### ஆராய்ச்சிக் கருவிப் பெட்டகம்

கெயின்ஸின் பொதுக் கோட்பாடு என்னும் நூலைப் பொருளாதாரத் துறையில் புது ஆராய்ச்சிக் கருவிகள் நிறைந்த பெட்டகம் என்று சொல்லலாம். இக் கருவிகளில் சிலவோ பழையவை, ஆனாலும் புது மெருகு பெற்றவை. சிலவோ புத்தம் புதியவை. இக் கருவிகளை எல்லாம் கோட்பாடுகள் என்ற வடிவத்தில் அமைத்துத் தருகின்றார். கெயின்ஸின் புதுப் பொருளாதாரத்தில் விளக்கப் பட்டிருக்கும் கருத்துகள் பலப்பல. ஆனாலும் முதன்மையான சில கோட்பாடுகளையும் அவற்றிற்கு இடையேயுள்ள தொடர்புகளையும் (relations), ராசிகளையும் (functions) தெரிந்து கொண்டால், அவருடைய புதுப் பொருளாதாரத்தின் இயல்பையும் குறிக்கோள்களையும் எளிதில் அறிந்து கொள்ளலாம்.

### சக்தி வாய்ந்த தேவை (Effective Demand)

தொடக்கத்தில் எழும் கேள்வி 'ஏன் வேலைக் குறைவு ஏற்படுகிறது?' என்பதே ஆம். அதற்கு விடை தரும் முறையில் 'பண்டங்களுக்கு உள்ள தேவையின் போதாக்குறை' (insufficiency of demand) என்ற கருத்தைக் கெயின்ஸ் விளக்குகிறார். போதுமளவுள்ள தேவையே சக்தியுள்ள தேவை (effective demand) என்று குறிப்பிடுகிறார். பண்டங்களை விரும்பலாம், ஆசைப்படலாம், வாங்கப் பணமின்றி எழும் ஆசை பயனையளிக்காது. பண்டங்களுக்கு உள்ள தேவையின் போதாக்குறையை நீக்கவல்லதல்ல. வாங்கும் சக்தியுள்ள தேவையே, போதிய பணத்தை வைத்துக்கொண்டு பண்டங்களை வாங்க விரும்பும் விருப்பமே 'சக்திவாய்ந்த தேவை' என்று கெயின்ஸ் குறிப்பிடுகிறார்.

### நுகர்வும் முதலீடும் (Consumption and Investment)

ஒவ்வொரு மனிதனின் சக்தி வாய்ந்த தேவையும் சாதாரண காலத்தில் அவனுடைய மொத்த வருமானத்தைவிட மிகுதியாக இருக்க முடியாது. நாடு முழுவதிலுமுள்ள சக்தி வாய்ந்த தேவை நாட்டு மக்களின் மொத்த வருமானத்தைவிட மிகுதியாகாது. சக்தி வாய்ந்த தேவை தேசீய வருமானத்தைவிட மிகுதியாகாது. மக்கள் யாவரும் தங்களுக்குக் கிடைக்கும் வருமானம் முழுவதை

யும் செலவழித்தால் நாட்டிலுள்ள வாங்கும் சக்தி நிறைவுபெறும். கெயின்ஸ், நாட்டு மக்களிலுள்ள மூன்று வகையினரும் எவ்வளவு வருமானத்தை நுகர்வுப் பண்டங்களுக்குச் செலவிடுவர் என்பதை ஆய்கின்றார். ஏழை எளியவர் தங்கள் வருமானம் முழுவதையும் நுகர்வுப் பண்டங்கள் வாங்குவதில் செலவழிப்பர். நடுத்தர வகுப்பினரும் செல்வந்தரும் தங்களுக்கு வழக்கமான நுகர்ச்சிப் பொருட்களை வாங்கச் செலவிடும் நுகர்ச்சிச் செலவு (Consumption expenditure) அவர்களுடைய மொத்த வருமானத்திற்குக் குறைவாகவே இருக்கும். அவர்கள் நுகர்வுச் செலவுக்குப்பின் எஞ்சியுள்ள வருமானத்தை மூலதனம் ஆக்குவர். நுகர்வுச் செலவு போக மிகுந்த வருமானம் முழுவதையும் முதலீட்டில் (investment) செலவிடுதலே சக்தி வாய்ந்த தேவையைப் படைக்கவும், வேலை நிறைவை விளைவிக்கவும் இன்றியமையாததாகும். ஆனால் முதலீட்டுச் செலவு (investment expenditure) வேண்டும்பொழுது வேண்டும் அளவுக்குப் பெருகக் கூடியதல்ல. தொழில் முன்னேற்றமடைந்த நாடுகளில் மக்களுக்கிடையே வருமான ஏற்றத் தாழ்வு மிகுதியாகவும் இருக்கும். நாட்டின் வருமானத்தில் வறியவர்களுக்குக் கிடைக்கும் பங்கு கணிசமாகவும் இருப்பதில்லை. குறைந்த எண்ணிக்கையினரான, மிகுந்த வருமானமுடையோரிடையே தோன்றுகின்ற செலவழிக்கும் இச்சையால் தான் (desire to spend) சக்தி வாய்ந்த தேவை நிறைவுபெற வேண்டியிருக்கிறது. இவர்கள் செலவு இருவகைப்படும்: (1) நுகர்வுப் பொருள் செலவு (2) முதலீட்டுச் செலவு, மக்களின் நுகர்வுச் செலவு அவரவர் வாழ்க்கைத் தரத்தைப் பொறுத்தது. வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதும் தாழ்த்துவதும் குறுகிய காலங்களில் நடக்கக்கூடிய செயல்கள் அல்ல. எனவே, குறுகிய காலத்தில் ',நுகர்வுச் செலவு பொதுவாக மாறாத நிலையிலேயே இருக்கும்' என்பது கெயின்ஸின் அடிப்படைக் கருத்துகளில் ஒன்று. வறியோர் தவிர மற்றவர் தம் வருமானம் முழுவதையும் நுகர்வில் செலவழிப்பதில்லையாதலால், நாட்டின் சக்தி வாய்ந்த தேவை நிறைவு பெற வேண்டுமானால், எஞ்சியுள்ள வருமானம் முதலீட்டில் செலவழிக்கப்பட வேண்டும். முதலீடு என்பது பங்கு மார்க்கட்டில் பங்குகள் வாங்குவது என்று நினைக்கிறான் தனி மனிதன். கண்ணனிடமிருந்து ரூ. 1000 டாடா எஃகுத் தொழிற்சாலைப் பங்குகளை முருகன் வாங்கினால் அச்செயல் அந் நாட்டின் மூலதனத்தை அதிகப்படுத்துவதில்லை. குறிப்பாகக் கண்ணன் பங்கு விற்று முதல் தொகையான ரூ. 1000-யும் திருமணம், தீபாவளி என்று நுகர்வுப் பண்டங்கள் வாங்குவதில் செலவிட்டால், அது எப்படி நாட்டின் மூலதனத்தைப் பெருக்கும்? சமூக நோக்கில் பார்த்தால், முதலீடு என்பது

புதிய ஆலைகள், புதிய ரயில் பாதைகள், புதிய சுரங்கங்கள், புதிய வீடுகள் முதலியவற்றை உண்டாக்க உதவவேண்டும். ஒருவனுடைய தொழில் நிறுவனப் பங்கை மற்றொருவன் வாங்குவதனால் இத்தகைய மூலதனப் பெருக்கு ஏற்படுவதில்லை. எனவே, நுகர்வுச் செலவு ஒரு மட்டத்தில், வளராமல், ஸ்திரமாக நின்று கொண்டிருக்கும்போது, சக்தி வாய்ந்த தேவை நிறைவு பெற வேண்டுமானால், எஞ்சியுள்ள வருமானத்தை முதலீட்டில் செலவழிக்க வேண்டும்.

## முதலீட்டின் இரு நிபந்தனைகள்

சேமித்தவன் வங்கியில் தனது சேமிப்பைப் போட்டு வைப்பதனால் முதலீட்டுப் பெருக்கம் ஏற்படாது. தொழிலதிபர் அல்லது முயலுநர் (entrepreneur) அதை வங்கியிலிருந்து கடனாக வாங்கி ஒரு புதுத் தொழிலை நிறுவினாலோ அல்லது பழைய தொழிலை விஸ்தரிப்பதனாலோதான் முதலீட்டுப் பெருக்கம் ஏற்படும். வங்கிச் செலாவணி கிடைப்பதற்கு மிக்க வசதியுள்ள காலத்திலும், வசதிக்கேற்றவாறு முதலீடு பெருகுவதில்லை. முதலீடு பெருகுவதற்கு இரண்டு நிபந்தனைகள் உண்டு. (1) முதலீடு செய்தால் வருங்காலத்தில் நல்ல இலாபம் கிடைக்கும் என்ற நம்பிக்கை தொழிலதிபர்களுக்கு உண்டாக வேண்டும். இதையே உளநூல் அடிப்படையில் தொழிலதிபரின் 'இலாபம் எதிர்பார்க்கும் கொள்கை' (principle of expectations) என்று கெயின்ஸ் குறிப்பிடுகிறார். இலாபத்தை எதிர்பார்க்கும் தன்மை தொழிலதிபர்களின் மனத்தில் எழும் ஓர் உள்ள நிலையாகும். இதை ஓர் அகப் பண்பு (subjective factor) என்று கெயின்ஸ் கூறுகிறார். இந்த அகப் பண்பைப் பிறர்—அரசாங்கம் உட்பட—யாரும் மாற்றவோ, அசைக்கவோ, கூட்டவோ, குறைக்கவோ முடியாது. இலாப எதிர் பார்ப்பு என்பதனை இங்கு விரித்துக் கூறமுடியாத சில அகநிலைக் காரணங்கள் குறிக்கின்றன. (2) முதலீட்டைச் சில புறநிலைக் காரணங்கள் பாதிக்கின்றன. ஒரே ஒரு புறநிலைக் காரணத்தை மட்டும் இங்கு விளக்குவோம். அதுவே வட்டி விகிதம். வாங்கும் கடனுக்குச் செலுத்தவேண்டிய வட்டி விகிதம் மிகவும் குறைவாக இருந்தால் சில தொழில்கள் இலாபம் பயக்கும்; வட்டி விகிதம் ஏறிவிட்டால் நஷ்டமே ஏற்படும். இவ்வாறு விளக்கியபின், முதலீட்டுச் செலவு இரண்டு காரணங்களைப் பொறுத்திருக்கிறது என்று கெயின்ஸ் முடிவு செய்கிறார். ஒன்று அகக் காரணம்; அஃதாவது தொழிலதிபரின் (இலாபம்) 'எதிர்பார்ப்பு' (expectations) என்பதாம். மற்றொன்று புறக் காரணம்; அஃதாவது அங்காடி வட்டி வீதம் (market rate of interest) என்பதாம்.

**வட்டி பற்றிய மூன்று சம்பிரதாயக் கோட்பாடுகள்**

இக் கால முதலாளித்துவ நாடுகளில் வட்டி வீதம் எவ்வாறு நிர்ணயிக்கப் படுகிறது என்பதையும் கெயின்ஸ் ஆராய்கிறார். சம்பிரதாயப் பொருளாதாரத்தில் வட்டி வீதம் பற்றி மூன்று கோட்பாடுகள் உண்டு.

(1) 'முதல் உண்டாவதற்குத் துய்ப்புத் தவிர்த்தலே (abstinence) காரணம். துய்ப்புத் தவிர்த்தலுக்குக் கொடுக்கும் வெகுமதியே வட்டி.' என்று நாஸா ஸீனியர் கூறியது நினைவிலிருக்கும். முதல் உண்டாவதற்குத் துய்ப்புத் தவிர்த்தல் அல்ல காரணம், காத்திருத்தலே (waiting) ஆம் என்று நாஸா ஸீனியர் கூற்றை மார்ஷல் திருத்தியமைத்ததும் நினைவிலிருக்கும். 'காத்திருந்து' திரட்டிய முதலுக்கு வட்டி வழங்குவது நியாயம் என்று தொன்மை நூல் வழி அறிஞர் கூறிய விதியைப் பலர் ஒப்புக் கொள்ளவில்லை என்பதும் நமக்குத் தெரிந்ததேயாம். நெற்றி வேர்வை நிலத்தில் விழ உண்டாக்கிய முதலானாலும் சரி, அது பொருள் உற்பத்திக்கு உதவாவிட்டால் அதை எவரும் நாடவும் மாட்டார், அதற்கு வட்டி கொடுக்கவும் மாட்டார். எனவே 'காத்திருத்தல்' கொள்கை வட்டி நிர்ணயக் கேள்விக்குச் சரியான விடையல்ல என்பது கெயின்சுக்கும் முன்னரே உருவான கருத்தாகும். இக் கருத்தை வற்புறுத்தியே கெயின்சும் இந்தக் 'காத்திருத்தல்' கொள்கையை மறுக்கிறார்.

(2) அடுத்தபடி வட்டியும் பிற பண்டங்களின் விலை போலவே, அளிப்பு-தேவை நிலை விதியால் நிர்ணயிக்கப்படுகிறது என்பதும் மறுமலர்ச்சிப் பொருளாதாரக் கூற்று. தொழிலதிபர் முதலை நாடுவதின் காரணம் அது உற்பத்திக்கு உதவும் ஒரு கருவியாய் இருப்பதேயாம். சடப் பொருள் உற்பத்தியை முதல் அதிகப்படுத்தும் என்ற எண்ணத்திலிருந்து எழுந்தது இவ்விதி. இக் காலப் பொருளாதாரத்தில் முதல் என்பது உற்பத்திச் சாதனமாக மட்டும் விளங்கவில்லை. உண்மையில் அது பணமாகவே திகழ்கிறது. பணமோ ஒரு நிலையான அளவில் இருப்பதல்ல. அரசியல், வங்கியியல் கொள்கைகள் மாறினால் நாட்டின் பண அளிப்பு நிலை ஏறவும் இறங்கவும் கூடும். இதற்கேற்ப வட்டி வீதம் இறங்கியும் ஏறியும் விடும். எனவே, சடப் பொருளின் உற்பத்தியைப் பெருக்கக்கூடிய இயல்பை மட்டும் அடிப்படையாகக் கொண்டு பண நிலைப் பொருளாதார அமைப்பில் (monetary economic system) வட்டி வீதத்தை வகுப்பது ஒருதலைப் பேச்சாகவே முடியும். இவ்வாறு அளிப்பு-தேவை நிலை விதியும் சரியான வட்டி நிர்ணயக் கொள்கையல்ல என்று காட்டுகிறார் கெயின்ஸ்.

(3) ஆஸ்திரியப் பொருளாதார அறிஞர்களை ஒட்டி இர்விங் ஃபிஷர் (Irving Fisher) வட்டி செலுத்துவதற்குக் காரணம் மக்கள் வருங்காலப் பொருள்களை விட இன்றையப் பொருள்களை அதிகமாக மதிப்பதும் விரும்புவதுமேயாம் என்று கூறியுள்ளார். சாதாரணமாக ஒரு மனிதனிடம் 'இன்றைக்கு ரூ. 100 வேண்டுமா அல்லது ஓராண்டுக்குப் பின் ரூ. 110 வேண்டுமா?' என்று கேட்டால் உடனடியாகக் கிடைப்பது குறைவாக இருந்தாலும் அதையே அவன் விரும்புவான். இஃது ஓர் உளநூல் உண்மை. நாளைக்கு வரும் பலாப்பழத்தை விட இன்றைக்கு வரும் களாப் பழமே மேல் என்பது பழமொழி. இந்தமாதிரிக் காலத் தேர்வால் (time preference) மட்டும் வட்டி நிர்ணயிக்கப் படுவதில்லை என்று கூறி இக் கோட்பாட்டையும் கெயின்ஸ் ஒப்புக்கொள்ளவில்லை.

**ரொக்க விருப்பம் (Liquidity preference)**

இவ்வாறு சம்பிரதாயக் கொள்கைகளை யெல்லாம் புறக்கணித்துவிட்டுக் கெயின்ஸ் அவரது புகழ்பெற்ற ரொக்க விருப்பக் கோட்பாடு (Liquidity Preference Theory) என்பதை விளக்குகிறார். இக் கோட்பாடும் உளநூல் சார்புடையது. மனித உள்ளத்தை ஆராய்ந்தால் எவருக்கும் ரொக்கமாகப் பணத்தை வைத்திருப்பதில் உள்ள மன நிறைவு வேறு எந்த வகையில் சேமிப்பை முடக்குவதிலும் எழுவதில்லை என்று வெளியாகிறது. வங்கியில் வைப்பு நிதியாக வைத்தால் கூட, வேண்டிய விநாடியில் அந்தப் பணம் கிடைப்பது அரிது. ஆகையால் அது ரொக்கப் பணத்தை விடக் கீழானதே என்று மக்கள் கருதுகின்றனர். ஓர் இயந்திரம் அல்லது கட்டடம் வாங்குதல், வங்கியில் போட்டு வைத்தல், பிறருக்குக் கடனாகக் கொடுத்தல் போன்ற பல்வேறு வழிகளில் சேமிப்பை முடக்கி வைக்கலாம்.

அங்கெல்லாம் பணம் 'உருகி வழிந்து' செல்லாமல் இறுகிக் கட்டியாகக் கட்டிக் கிடக்கிறது. கைப்பணமோ எந்த விநாடியிலும் எப்படியும் செலவழிக்கக் கூடிய 'உருகு நிலை' யில் உள்ளது. இந்த உடன் மாற்று நிலையே பணத்தின் உருகி ஓடும் நீரியல் நிலை (liquidity) என்பர். இந்த அர்த்தத்தை நினைவூட்டும் வகையில் ரொக்கப் பணம் என்பதனை 'உருகு நிலை'ப் பணம் எனத் தமிழ் வடிவாக்கலாம். கையில் வைத்திருக்கிற ரொக்கப் பணத்தின் நிலைக்கு மற்ற எந்தப் பண நிலையும் ஈடாகாது. அதற்கு ஒரு தனி மதிப்பு உண்டு என்று கூறுகிறார் கெயின்ஸ். தனி மனிதன் ரொக்கப் பணத்தில் வைத்திருக்கும் ஆசைக்கு மூன்று காரணங்கள் கற்பிக்கிறார். (1) தினசரிக் கைச் செலவுக்குப் பணம் வேண்டியிருக்குமே என்னும் அன்றாடச் செலவின் நோக்கம் (transaction motive); (2) நோய், நொடி, சாவு, விபத்துப் போன்ற

எதிர்பாராத செலவினங்களுக்கு எச்சரிக்கையாகப் பணம் வேண்டியிருக்கும் என்னும் எச்சரிக்கை நோக்கம் (precautionary motive); (3) ஊக வாணிகத்துக்குப் பணம் வேண்டும் என்ற ஊக வாணிக நோக்கம் (speculative motive), மூன்ருவது காரணத்தை நன்கு அறிந்துகொள்ள முன்னேறிய நாடுகளின் பங்கு மார்க்கட்டுகளில், மக்கள் பங்குகள் வாங்கி விற்கும் சூழ்நிலையை மனத்தில் கொள்ளவேண்டும். வருங் காலத்தில் அங்காடி வட்டி வீதம் குறையும் என்று தோன்றிஞல் மக்கள் பங்குகள் வாங்குவதில் முனைவர். ஏனென்ருல் வருங்காலத்தில் பங்குகளின் விலையேறும். ஏறிய விலையில் விற்ருல் கணிசமான இலாபம் கிடைக்கும் என்பதே ஆம். எடுத்துக்காட்டாக, ஒரு சமயத்தில் அங்காடி வட்டி 8 சதவீதமாக இருந்தால், ஆண்டு ஒன்றுக்கு ரூ. 80 வருமானம் தரும் பங்கு ரூ. 1,000-க்கு விற்கும். அங்காடி வட்டி 4 சதவீதமாஞல் அதே பங்கு ரூ. 2,000-க்கு விற்கும். அங்காடி வட்டி வருங்காலத்தில் குறையுமென்று தோன்றிஞல் பங்குகள் வாங்குவதே இலாபம் தரும் செயலாகும். இப்படிப் பங்குகளைப் பின்ஞல் விற்பதற்கு என வாங்குவதே ஊக வாணிகம் என்பது. இதனைச் சூதாட்ட வாணிகம் என்பதும் உண்டு. ரொக்கப் பணத்தை விரும்பும் மூன்று காரணங்களில், முன்னிரண்டிற்கும் கையிருப்பாய் வைத்துக் கொள்ள வேண்டிய பணத்தை எவ்வளவு என்று தோருயமாகக் கூற முடியும். மூன்ருவது காரணத்திற்கு வைத்துக் கொள்ளவேண்டிய ரொக்கப் பணம் ஏறவும் இறங்கவும் செய்யும். முன்னிரண்டு காரணங்களுக்காகக் கையில் கட்டாயம் ரொக்கமாக இருக்க வேண்டிய பணத்தை என்ன வட்டி கொடுத்தாலும் அவர்கள் கையிலிருந்து பெறமுடியாது. ஊக வாணிகத்திற்கு வைத்திருக்கும் பணத்தை அதிக வட்டியைக் காட்டி ஓரளவுக்குக் கடஞகப் பெறமுடியும். இவ்வாறு வாதித்து, ரொக்கப் பணத்தின் மேலுள்ள ஆசையைத் துறப்பதற்கு ஈடாகத் தரும் தொகையை (payment for parting with liquidity) வட்டி என்று கெயின்ஸ் கூறுகிருர்.

### வட்டி வீதத்தை நிர்ணயிக்கும் இரு சக்திகள்

வட்டி வீதத்தை வரையறுக்கும் சக்திகள் இரண்டு காரணங்களாக இயங்குகின்றன. (1) அகக் காரணம் அஃதாவது தனி மனிதன் தன் ரொக்கப் பணத்தில் வைத்திருக்கும் ஆசை. இது மக்களிடம் அசைக்க முடியாதபடி ஆழ்ந்திருக்கும் மனப்பான்மையாகும். (2) புறக்காரணம் அஃதாவது நாட்டில் மக்கள் கையில் இருக்கும் பணப் புழக்கம் (money supply) எனலாம். இரண்டு வழிகளில் பணப் புழக்கம் பெருகக் கூடும். ஒன்று இயற்கை

யானது. நாட்டின் பொருள் உற்பத்தி வளர்வதனுல் நாட்டின் வருமானம் உயரும். இதனுல் நாட்டின் செலாவணி பெருகும்; பணப் புழக்கம் அதிகமாகும். மற்றது செயற்கை வழி; இது இரண்டு வகைகளில் செயல்படும். நாட்டின் பொருள் உற்பத்தி என்ன நிலையில் இருந்தாலும் (i) பற்ருக் குறைதரும் நிதி ஆட்சி முறையை (dificit financing) அரசாங்கம் மேற் கொள்வதால் பணப் புழக்கம் அதிகரிப்பது ஒரு வகை; (ii) மைய வங்கி தனது கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதால் வங்கிச் செலாவணி (bank credit) பெருகுவது மற்ரெரு வகை.

### புதிய வட்டிக் கோட்பாட்டின் விளைவுகள்

கெயின்சின் வட்டிக் கோட்பாட்டின் சிறப்பியல்புகளை மேலும் சிறிது பார்ப்போம். முதலாவதாக, வட்டி மொத்தச் செலாவணியையும், ரொக்கப் பணத்தின் மீதுள்ள மக்களது ஆசையையும் பொறுத்தது. இது பகுத்தறி முறையில் ஆராய்ந்து வகுத்த அறிவியல் கோட்பாடு. பொருளாதார நிபுணர்கள் இந்தக் கோட்பாட்டைப் பெரும்பாலும் ஒப்புக் கொண்டனர். இது நடைமுறையிலும் பெரும் பயன் தரக் கூடியது. மக்களது மனப்பான்மையைக் குறுகிய காலத்தில் நாம் மாற்ற முடியாது என்பது உண்மை. ஆனுலும் பணப் புழக்கத்தைச் செயற்கை முறைகளைக் கையாண்டு பெருக்கலாம். அதனுல் அங்காடி வட்டி வீதத்தைக் குறைக்கலாம் என்பதே கெயின்ஸ் காட்டும் புது வழி. இந்த முறையைக் கையாண்டால் முதலீட்டின் அளவைப் பெருக்கலாம். சக்தி வாய்ந்த தேவை நிறைவு பெற வேண்டுமானுல் நுகர்வுச் செலவை அதிகப்படுத்தி வெற்றி காண முடியாது என்று தெரிந்தபின், அடுத்தபடியாக முதலீட்டுச் செலவைத்தானே அதிகப்படுத்த வேண்டும். தொழிலதிபரின் மாற்ற முடியாத இலாப எதிர்ப்பு இதற்கும் தடையாகிறதல்லவா? ஆனுல், தொழிலதிபர் மனத்தை மாற்றக் கூடிய புறநிலைத் தூண்டுகோல் (objective inducement) ஒன்று உண்டு. அது வட்டி வீதத்தைக் குறைப்பதுதான். இவ்வாறு கெயின்சின் ஆராய்ச்சியின் பயனுக வட்டி வீதக் குறைப்பு ஒரு வழியைக் காட்டுகின்றது. எனவே ஒரு நாட்டின் பொருளாதார நிலை சீர் கேடுற்றிருக்கும் காலத்தில், அதைச் சீரமைக்க வங்கிச் செலாவணிக் கட்டுப் பாடுகளைத் தளர்த்தியும், பற்ருக்குறை நிதியாட்சி முறையைக் கையாண்டும், பணப் புழக்கத்தைப் பெருக்கி, வட்டி வீதத்தை அதனுல் குறைத்து, முதலீட்டுச் செலவை உயர்த்தி, சக்தி வாய்ந்த தேவையை நிறைவுறச் செய்யலாம் என்பது கெயின்சின் கவர்ச்சியான கைகோள் (policy). அங்காடி வட்டி வீதம் மைய வங்கி தனது கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதாலும், அரசாங்கம்

பற்றுக்குறை நிதியாட்சி மேற் கொள்வதாலும், மிகவும் குறைந்த போதிலும், முயலுநர் முதலீடு செய்வதில் ஆர்வம் கொள்ளாமலும் ஈடுபடாமலும் இருக்கலாம். உலகப் பொருளாதார மந்த காலத்தில் அமெரிக்காவில் வட்டி வீதம் வீழ்ச்சி அடைந்தது. ஆயினும் முதலீடும், புதுத் தொழில் நிறுவலும், பழந்தொழில் நிறுவனங்களை விஸ்தரிப்பதும் எதிர்பார்த்தவாறு செயல் படவில்லை. தனியார் துறைத் தொழிலதிபர்களும் முயலுநர்களும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குகந்த முதலீட்டைச் செய்ய மறுத்தது (entrepreneur's strike) போலத் தோன்றியது. இத்தகைய இக்கட்டான நிலை ஏற்படலாம்; அப்பொழுது அரசினர் வேண்டுமளவுக்கு அரசினர் துறையில் முதலீடு செய்தல் வேண்டும் என்று கெயின்ஸ் யோசனை கூறியுள்ளார். இதைச் செயல் முறையில் கையாண்டால் மதிப்பிற்குரிய பொது நலனும் தொழிலும் வளரும். மந்தம் ஒழியும், பல நலன்கள் கைகூடும் என்பது அவர் துணிவு. முயலுநர் முதலீடு செய்யத் தயங்கிய சூழ்நிலையில், ரூஸ்வெல்டின் (Franklin D. Roosevelt) புகழ் பெற்ற புதுத் திட்டம் (New Deal) என்பது தொடங்கப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் அமெரிக்க அரசாங்கம் அரசினர் துறையில் சாலைகள் அமைத்தல், 'புதுக் கட்டடங்கள் கட்டுதல், நீர்ப்பாசனங்கள் கட்டல் போன்ற துறைகளில் பெருவாரியான முதலீடு செய்தது. இந்தக் கைகோளால் (policy) கெயின்ஸின் பகுத்தறி கொள்கைகளுக்கு அமெரிக்கா ஒரு சோதனைக் கூடமாகத் திகழ்ந்தது.

முதலீடு மந்தித்துப் பொருளாதாரத் துறை சீர் கேடுறுங் காலத்தில் அதைச் சீர்திருத்த கெயின்ஸ் வகுத்த மூன்று வழிகளைச் சுருக்கமாகப் பார்ப்போம். (1) வங்கிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தல். (2) பற்றுக்குறை நிதியாட்சி முறையை மேற்கொள்ளல். (3) பொதுத் துறையில் அரசினர் வேண்டுமளவுக்கு முதலீடு செய்தல். இம் மூன்று வழிகளும் தொன்மை நூலார் வகுத்த தலையிடாக் கொள்கைக்கு முரணானவை என்பதைக் குறிப்பிட வேண்டும். இவ்வாறு முரண்பாடுள்ள கோட்பாடுகளை வகுத்தமையாலேயே கெயின்சின் பொருளாதாரத்திற்குக் 'கெயின்சின் புரட்சி' (Keynesian Revolution) என்ற பெயர் வந்தது.

### கோட்பாடுகளின் சாரம்

மேலே விளக்கப் பெற்ற கெயின்சின் கோட்பாடுகளின் சாரத்தை இப்பொழுது சுருக்கமாகப் பார்ப்போம். முதலாளித்துவத்திற்கு அடிக்கடி காணும் கொடுநோய் வேலையின்மையென்பதே ஆம். இதற்குக் காரணம் சக்தி வாய்ந்த தேவையின் குறைவே. சக்தி வாய்ந்த தேவையின் உச்ச நிலை அளவு, நாட்டின் வருமானம், மக்கள் மட்டும் நாட்டு வருமானம் முழுவதை

யும் செலவழிப்பார்களேயானுல் சக்தி வாய்ந்த தேவை உச்ச நிலையை அடையும். நாட்டு வருமானம் முழுவதும் இருவகைகளில் செலவாகக் கூடும். ஒன்று நுகர்வுச் செலவு ; மற்றது முதலீட்டுச் செலவு. வாழ்க்கைத்தரமே மக்களின் நுகர்வுச் செலவை நிர்ணயிக்கும். குறுகிய காலத்தில் (Short term) வாழ்க்கைத் தரம் மாறக் கூடியதில்லை. ஆதலால் நுகர்வுச் செலவு ஒரே நிலையில் மாருது நிற்கும் என்ருகிறது. எஞ்சியுள்ள முதலீட்டுச் செலவு இலாப எதிர்பார்ப்பையும் வட்டி வீதத்தையும் பொறுத்திருக்கும். இலாப எதிர்பார்ப்போ தொழிலதிபர்களின் மனப் போக்கைப் பொறுத்தது. மனப்போக்கு எளிதில் மாறக் கூடியதல்ல. ஆனுல், வட்டி வீதம் குறைந்தால் முதலீட்டுச் செலவு வளர்ந்து பெருக வாய்ப்பு உண்டு; இதனை மாற்றி வெற்றி காணலாகாதா என்பதே கேள்வி. தொன்மைப் பொருளாதாரமோ வட்டி வீதத்திலும் தலையிடாக் கொள்கையை வற்புறுத்தியது. இதனை எதிர்க்கின்ருர் கெயின்ஸ். பற்ருக்குறை நிதியாட்சியிலும், வங்கிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதனுலும் பணப் புழக்கத்தைப் பெருக்கி வட்டி வீதத்தைக் குறைக்கலாம் என்ற முடிவுக்கு ஏற்பத் தலையிடும் கொள்கையையே வற்புறுத்துகிருர். நிர்வகிக்கப்பட்ட செலாவணி முறையில் (Managed Currency) 1913-லிருந்தே அவருக்கு இருந்த ஆர்வம் நாம் அறிந்ததே ஆம். செயல்முறையில் அதைக் கையாண்டே தீரவேண்டும் என்பதனைக் கெயின்சின் புதுப் பொருளாதாரம் பகுத்தறி முறையில் அறிவியல் கோட்பாடுகளாக வடித்துத் தருகின்றது. புதுப் பொருளாதாரத்தின் அடிப்படைத் தத்துவத்தை இனிச் சுருக்கமாகக் கூறிவிடலாம். வட்டி வீதத்தைக் குறைத்து விட்டால், அதன் பலனுக வளரும் முதலீட்டுச் செலவு, நாட்டின் வருமானத்திற்கும் சாதாரணமாக நடக்கும் நுகர்வுச் செலவுக்கும் இடையே விழும் துண்டை (gap) முழுவதும் சரிக்கட்டி நிறைவு படுத்திவிடும். இந்த ஏதுவால் நாட்டு வருமானம் முழுவதும் செலவழியும் ; சக்தி வாய்ந்த தேவை நிறைபெறும் ; வேலையின்மையும் நீங்கும். இக் கைகோளினுல் எதிர் பார்த்த அளவு முதலீட்டுச் செலவு அதிகரிக்கவில்லையானுல், அரசினர் துறையில் பொதுப்பணிச் செலவுகளை வேண்டுமளவுக்குச் செய்தால், பொருளாதார மந்தம் நீங்கும்.

### பொதுக் கோட்பாட்டின் ஆதாரக் கருதுகோள்கள் (Fundamental postulates of General Theory)

இதுவரை கெயின்சின் கோட்பாட்டின் புதிய கருத்துகளையும் கருவிகளையும் அவற்றை உபயோகிப்பதனுல் கிடைக்கக் கூடிய பலன்களையும் முதலாளித்துவத்தின் இன்னல்களை நீக்கும் கைகோள்களையும் கண்டோம். கெயின்சின் கைகோள் சீரிய முறை

யில் இயங்கி முதலாளித்துவத்தின் உடன் பிறந்த நோய்களான வேலையின்மை, வணிகச் சகடம் ஆகியவற்றைக் குணப்படுத்தும் அரிய சாதனமென அறிந்து கொண்டோம். இனிப் பொதுக் கோட்பாடு எவ்வாறு பல கருதுகோள்களை இணைத்து உண்டாக் கப்பட்டது என்பதைப் பார்ப்போம். இக் கருதுகோள்கள் எப்படி ஒன்றோடொன்று பின்னிக் கொண்டு ஒன்றையொன்று தாங்கிக் கொண்டு நிற்கின்றன என்பதைக் காணவேண்டும். இத்தகைய கருதுகோள்களில் முக்கியமானவற்றை மட்டுமே விளக்க இங்கு இடம் உண்டு. அவற்றில் (1) சேமிப்பு முதலீட்டுச் சம நிலை (Saving-Investment equilibrium) (2) நுகர்வு அட்டவணை (Consumption Schedule) (3) முதலீட்டுத் தேவை அட்டவணை (Investment Demand Schedule) (4) ரொக்கப் பணத் தேர்வு அட்டவணை (Liquidity preference schedule) (5) முதலீட்டுப் பெருக்கி (Investment Multiplier) என்பன உயிர் நாடியானவை.

### (1) சேமிப்பு முதலீட்டுச் சமநிலை

நாட்டின் வருமானம் என்பது நிலச்சுவான், தொழிலாளர், முதலாளி, முயலுநர் என்ற நான்கு வகையினரும் முறையே பெறக்கூடிய வாரம், கூலி, வட்டி, இலாபம் ஆகியவற்றின் கூட்டுத் தொகையே ஆம். இந் நால்வகையினரும் கூடிச் சேர்ந்து உழைப்பதனால் உற்பத்தியாகும் பொருள்கள், சேவைகள் ஆகிய வற்றின் கூட்டுத் தொகையே நாட்டின் மொத்தப் பொருள் உற்பத்தி (Gross National Product). நாட்டின் வருமானமும் மொத்த உற்பத்தியும் ஒன்றுக்கொன்று சமமானவை. நாட்டின் வருமானம் முழுவதும் செலவழிக்கப் பட்டால் அதை நாட்டின் மொத்தச் செலவு (Gross National expenditure) என்று சொல்ல லாம் : நாட்டின் மொத்தச் செலவு அங்காடி விலையில் (market price) நாட்டில் உற்பத்தியான பொருள்களையும் சேவைகளையும் வாங்கக்கூடிய சக்தி வாய்ந்தது. உற்பத்தியான பொருள்களில் ஒரு பகுதி நுகர்வுப் பண்டங்கள். எஞ்சியது முதலீட்டுப் பொருள் கள் (investment goods). இக் கருத்துகளைக் கொண்டு கெயின்ஸ் சில சமன்பாடு, சூத்திரங்கள் (equations) வகுத்துள்ளார்.

நாட்டின் வருமானம் (வ) = வாரம் + கூலி + வட்டி + இலாபம்

Y = Rent + Wages + Interest + Profit

நாட்டின் வருமானம் (வ) = மொத்த உற்பத்திப் பொருள்களும் சேவைகளும் (உ, GNP)

வ = உ. (Y = GNP) (1)

நாட்டின் வருமானம் (வ)=நாட்டின் செலவு (செ)
=நுகர்வுச் செலவு (நு)+முதலீட்டுச் செலவு (மு)
வ =நு+மு. (Y=C+I) (2)

நாட்டின் வருமானத்தைச் செலவழிக்கும் முறையை இன்னொரு வகையிலும் காண்பிக்கலாம். நுகர்வுப் பொருள்களில் செலவு ஆவது போக மிஞ்சுவதையெல்லாம் சேமிப்பு என்று கூறலாம். சேமிப்பை மக்கள் பலவழிகளில் உபயோகிக்கலாம்: (1) ரொக்கமாக வைத்துக் கொள்ளல். (2) நிலம், வீடு, பங்கு பத்திரம் முதலியன வாங்குதல். (3) வங்கியில் வைப்பு வைத்தல். (4) பிறருக்குக் கடனாகக் கொடுத்தல். (5) புதிய தொழில் நிறுவனங்களில் பங்கு முதலீடு செய்தல் முதலியன. எந்த வடிவத்தைச் சேமிப்பு அடைந்தாலும், கீழ்க் கண்ட சமன்பாடு சூத்திரம் பொருந்தும் :

நாட்டு வருமானம் (வ)=நுகர்வுச் செலவு (நு)+சேமிப்பு (மி)
வ=நு+மி. (Y=C+S) (3)

மேலே காட்டியுள்ள சூத்திரங்களில், இரண்டாவது மூன்றாவது சூத்திரங்களிலிருந்து தோன்றும் துணைச் சமன்பாடுகள் வருமாறு :

வ=நு+மு ∴ மு=வ—நு
வ=நு+மி ∴ மி=வ—நு
∴ மு=மி (I=S) (4)
முதலீடு=சேமிப்பு

சேமிப்பும் முதலீடும் சமமாக இருக்கும் என்பது தொன்மைப் பொருளாதாரம் கண்ட உண்மைதான். ஆனால், அது நிலையான நாட்டு வருமானம் (Static National Income) என்னும் நிபந்தனையினால் கட்டுப்பட்டுக் கிடக்கிறது. கெயின்சின் சமன்பாட்டுச் சூத்திரம் முதலீடு கூடினாலும் குறைந்தாலும் நாட்டின் வருமானமும் கூடியும் குறைந்தும் வரும் ; இம்மாதிரி நாட்டின் வருமானம் மாறுகின்ற நிகழ்ச்சியினால் நிலையான நாட்டு வருமானம் என்னும் எடுகோள் அடிபட்டுப் போகிறது. மேலும் முதலீடு குறையுமாயின் அதே அளவிற்குச் சேமிப்பும் குறைந்து விடும். முதலீடு கூடுதலானால் சேமிப்பும் கூடுதலாகும் என்று காட்டுவது கெயின்சின் ஆராய்ச்சி காணும் தனிச்சிறப்பு. இத்தகைய சமன்பாடு எவ்வாறு நிகழ்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளினால் நாம் விளக்க முடியும். ஒரு நாட்டின் வருமானம் தொடக்கத்தில் ரூ. 100 என்றும் அதில் 90 நுகர்வுச் செலவு, ரூ. 10 சேமிப்பு என்றும் கொள்வோம்.

அச்சமயம் முதலீடும் ரூ. 10 என்று கொள்வோம். இந் நிலையில் தொழிலதிபர்கள் முதலீட்டை ரூ. 20 ஆக உயர்த்துகிறார்கள் என்றால் சேமிப்பும் முதலீடும் சமன்பாட்டிலிருந்து வேறுபட்டு விடுகிறது. பின்னர் அவையிரண்டும் எப்படிச் சமன்பாடு எய்தும் என்பதைக் காணலாம். தொழிலதிபர்கள் அதிக முதலீட்டுச் செலவு செய்கிறார்கள் அல்லவா ? அதெல்லாம் அவர்கள் வேலையில் அமர்த்தும் தொழிலாளர்களுக்கு வருமானத்தை அளிக்கும். அவர்கள் முதற் கருவிகள் வாங்குவதில் செலவழித்தால் அம் முதற் கருவி உற்பத்தியாளருக்கு அந்த அளவுக்கு அதிக வருமானத்தை அளிக்கும். இந்தப் புதிய வருமானம் கிடைக்கும் ஒவ்வொருவரும்—தொழிலாளரும் முதற் கருவி உற்பத்தியாளரும்—ஒவ்வொரு ரூபாயிலும் 50 பைசா நுகர்வுச் செலவும், 50 பைசா சேமிப்பும் செய்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அப்படியானால் முதலீட்டுச் செலவில் ரூ. 5 நுகர்வுச் செலவு, ரூ. 5 சேமிப்புச் செலவு என்றாகும். இந்த ரூ. 5 நுகர்வுச் செலவு, வேறு சிலருக்கு வருமானம் ஆகும். அவர்களும் பாதியை நுகர்வுச் செலவாகவும், பாதியைச் சேமிப்பாகவும் வருமானத்தைப் பயன் படுத்துவார்கள். இஃது இரண்டாவது சுற்று (round). இம்மாதிரி பலமுறை தொடக்க முதலீட்டுச் செலவு சுற்றுவதனால், கடைசியில் ரூ. 10 நுகர்வுச் செலவு ரூ. 10 சேமிப்பு என வளர்ச்சியடையும். எனவே, முதலில் முதலீட்டுச் செலவான ரூ. 10, கடைசியில் ரூ. 20 ஆக வளர்ந்துவிடும். இதற்குக் காரணம் முதலீடு பெருக்கி என்னும் கோட்பாட்டின் செயலாற்றலேயாம். (இந்த முதலீடு பெருக்கிக் கோட்பாட்டின் விளக்கம் பின்னால் தரப்பட்டிருக்கிறது ; அதைப் பார்க்கவும்) இந்த நிகழ்ச்சியினால், நாட்டு வருமானம் ரூ. 100-லிருந்து 120 ஆக உயரும் ; அதே சமயம் நுகர்வுச் செலவு ஆதியில் உள்ள ரூ. 90 உடன் பின் வந்த ரூ. 10-ம் ஆகச் சேர்ந்து ரூ. 100 ஆகும். சேமிப்பு ஆதியிலிருந்து ரூ. 10 உடன் இன்னொரு ரூ. 10-ம் சேர்ந்து ரூ. 20 ஆகும். எனவே, சேமிப்பும் முதலீடும் ரூ. 20 ஆவதால் அவை இரண்டும் மீண்டும் சமன்பாடு பெறுகின்றன.

அடுத்தபடியாக நாட்டின் வருமானம் பழைய மாதிரி ரூ. 100-ம் முதலீடு ரூ. 10-ம் சேமிப்பு ரூ. 10-மாக இருந்ததாகக் கொள்வோம். இப்பொழுது மக்கள் சேமிப்பை ரூ. 20 ஆக உயர்த்துகின்றனர் என்று கொள்வோம். இதனால் சமன்பாடு கெடுகின்றது. எவ்வாறு சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் சமன்பாடு மீண்டும் உண்டாகிறது என்பதை ஆராய்வோம். மக்கள் அதிகப்படியாக ரூ. 10 சேமிப்பதனால், அந்த ரூ. 10 அளவிற்குப் பண்டங்கள் விற்பனையாகாமல் தொழிலதிபர்கள் கிடங்கில்

தேங்கிவிடும். எனவே, கைச்சரக்கு (inventory) வடிவத்தில் தொழிலதிபர்களின் முதலீடு ரூ. 10 ஆகக் கூடிவிடும். இந் நிலையில், தொழிலதிபர்கள் திட்டப்படி முதலீடு (planned investment) செய்தது ரூ. 10 ஆகவும் திட்டமின்றி முதலீடு (unplanned-investment) செய்தது ரூ. 10 ஆகவும் (எதிர்பாராது தேங்கி நிற்கும் விற்பனையாகாத சரக்குகள்), மொத்த முதலீடு ரூ. 20 ஆகிவிடும். இவ்வாறு சேமிப்பும் முதலீடும் மறுபடியும் சமநிலை எய்தும். இங்கே முதலீடு என்பதற்கு நிலையான முதல் (fixed capital), புரளும் முதல் (Circulating Capital) ஆகிய இரண்டையும் மொத்தமாகக் கொள்ள வேண்டும்; இது சம்பிரதாயப் பொருளாதாரமும் ஒப்புக்கொள்ளும் இலக்கணமே ஆகும்.

(2) நுகர்வுச் செலவு அட்டவணை

நுகர்வுச் செலவு பற்றிய கோட்பாடு தொகுத்தறி முறையில் (inductive method) கண்ட முடிவே எனலாம். வேறுபட்ட மக்களின் செலவுக் கணக்குகளை ஆராய்ந்தால் ஓர் உண்மை புலப்படும். வருமானம் அதிகமாகும் பொழுது நுகர்வுச் செலவும் அதிகமாகும்; ஆனால், அது குறைந்த விகிதத்தில்தான் அதிகரிக்கும் என்பதுவே அவ்வுண்மை. இதைக் காட்டும் அட்டவணையைக் கீழே காணலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) வருமானம் | 100 | 125 | 150 | 175 | 200 |
| (2) நுகர்வுச் செலவு | 100 | 120 | 137·5 | 150 | 160 |
| (3) $\frac{\text{நு}}{\text{வ}}$ அஃதாவது $\frac{(2)}{(1)}$ | $\frac{1}{1}$ | $\frac{24}{25}$ | $\frac{11}{12}$ | $\frac{6}{7}$ | $\frac{4}{5}$ |

இறுதி நிலை நுகர்வுச் செலவு

வருமானம் அதிகமாகும் பொழுது அதிகப்படி வருமானத்தில் செலவாகும் நுகர்வுச் செலவோ விகிதத்தில் குறைந்து கொண்டே போகும். மேற் கூறிய உண்மையின் துணை முடிவு ஆகும் இது. மேலே கொடுத்திருக்கும் புள்ளி விவரங்களிலிருந்து ஒரு புதிய அட்டவணையைக் கீழ்க்கண்டவாறு தொகுக்கலாம்.

| தொடக்கத்தில் வருமானம் | உயர்ந்தபின் வருமானம் | அதிக வருமானம் | வருமானம் உயர்ந்த பின் மொத்தச் செலவு | அதிக வருமானத்தில் நுகர்வுச் செலவு | நுகர்வுச் செலவு கூடும் விகிதம் |
|---|---|---|---|---|---|
| 100 | 125 | 25 | 120 | 20·0 | $\frac{8}{10}$ |
| 125 | 150 | 25 | 137·5 | 17·5 | $\frac{7}{10}$ |
| 150 | 175 | 25 | 150 | 12·5 | $\frac{5}{10}$ |
| 175 | 200 | 25 | 160 | 10·0 | $\frac{4}{10}$ |

வருமானம் ரூ. 100-லிருந்து ரூ. 125 ஆகும்பொழுது இந்த அதிகப்படியான ரூ. 25 வருமானத்திலிருந்து நுகர்வுச் செலவு ரூ. 20 செலவாகிறது. அதாவது பத்தில் எட்டு (8/10) பங்கு. அடுத்தபடி ரூ. 25 அதிக வருமானம் வரும்பொழுது நுகர்வுச் செலவு 7/10 ஆகவும், மூன்றுவது முறை ரூ. 25 அதிகமாகும் பொழுது நுகர்வுச் செலவு 5/10 ஆகவும், இருக்கிறது. இவ் விதமாக இறுதி நிலை நுகர்வுப் போக்கு (Marginal propensity to Consume) குறைந்து கொண்டே போவது ஒரு முக்கியமான நடை முறை வழக்கு. இதிலிருந்து நாம் அறிய வேண்டிய தொன் றுண்டு. அது பொருளாதார ஆராய்ச்சியில் மிக்க சிறப்பு வாய்ந்தது. மக்களின் வருமானம் பெருகப் பெருக நுகர்வுச் செலவு குறைந்த விகிதத்தில் அதிகரிக்கிறது. மக்களின் வரு வாய் அதிகரிக்கும்பொழுது சேமிப்பு விகிதமும் அதிகரித்துக் கொண்டே போகும் என்றும் இந்த உண்மையை விளக்கலாம். தொழில் செறிவில் முன்னேறிய நாடுகளில் இத்தகைய சூழ்நிலை ஏற்படுகிறது. சேமிப்புப் பெருகப் பெருக சக்தி வாய்ந்த தேவை (effective demand) நலிவடையும். இந்த நலிவை நீக்கத் தனியார் துறையில் அதிக முதலீட்டுச் செலவு ஏற்படவேண்டும். அல்லது அரசினர் துறையில் முதலீட்டுச் செலவு தகுந்த அளவில் பெருக வேண்டும். இவ்விரு துறைகளிலும் முதலீட்டுச் செலவு பெருகா விட்டால், வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டில் பரவும். இதுவே கெயின்சின் தருக்க முறை முடிவு.

(3) முதலீட்டுச் செலவு அட்டவணை

தொழிலதிபர்கள் இலாப நோக்குடன் தான் எந்தத் துறையிலும் முதலீட்டைச் செய்கிறார்கள். வருங்காலத்தில் அதிகமான இலாபம் கிடைக்கும் என்று நம்பிக்கையுண்டானால், அதிகப்படியான முதலீடு செய்கிறார்கள். முன்னேறிய நாடுகளில் இலாப மிக்க துறைகளிலெல்லாம் ஏராளமான முதலீடு தொடக்கத்திலேயே செய்து முடித்திருப்பார்கள். காலப்போக்கில் எஞ்சிய துறைகளில் எழும் இலாபமோ குறைந்த அளவிலேயே இருக்கும். ஆனால், எஞ்சிய துறைகள் எல்லாவற்றிலும் இலாபம் ஒரே மட்டத்தில்தான் இருக்கும் என்பதில்லை. அவற்றுள் எதில் அதிகமான இலாபம் எதிர் பார்க்கப்படுகிறதோ அந்தத் துறையை நோக்கியே முதலீடு செல்லும். அந்தத் தொழிலில் எதிர்பார்க்கப்படும் இலாப விகிதத்தையே முதலீட்டின் இறுதிநிலைத் திறன் (Marginal Efficiency of Capital) என்று குறிப்பிடுகிறார். உதாரணமாக இது 6 சதவீதமாக இருக்கும்போது அங்காடி வட்டி வீதம் 4 ஆக இருந்தால், முதலீடு நடைபெறும். மேலும் மேலும் முதலீடு அத் துறையில் அதிகமாக ஏற்பட்டால் 6 சதவீத வாய்ப்புகள் இல்லாமல் தீர்ந்துவிடும். பின்னால் 5 சதவீத வாய்ப்புகளில்தான் முதலீடு நடைபெற முடியும். இவ்வாறு முதலீட்டின் இறுதிநிலைத் திறன் குறைந்துகொண்டே போகும். முன்னேறிய நாடுகளில் ஏற்படும் பெரியதொரு சிக்கலை இந்தக் கருத்தின் அடிப்படையில் கெயின்ஸ் ஆராய்கிறார். அந் நாடுகளின் இறுதிநிலைத் திறன் குறைந்துபோயிருக்கும் அல்லவா? இக் குறைந்த நிலையில் முதலீடு செய்யவேண்டுமானால், வட்டி வீதம் அதைவிடக் குறைந்திருக்கவேண்டும். ஆனால், செலாவணியைப் பெருக்கி வட்டி வீதத்தைக் குறைப்பதற்கும் ஓர் எல்லை உண்டு. அந்த அளவுக்கப்பால் வட்டி வீதம் குறையாது. சாதாரணமாக வட்டி வீதம் 3 அல்லது $2\frac{1}{2}$ சதவீதத்துக்கும் கீழாக இறங்குவதில்லை. ஏனெனில் இந்த வட்டி வீதத்துக்கும் குறைந்தால், பணம் படைத்தவர் அந்தப் பணத்தைக் கையில் ரொக்கமாக வைத்திருப்பது இந்த அற்ப வட்டிக்கு விடுவதை விட மேலானது என்று நினைப்பர். வட்டி வீதம் இது மாதிரி ஓர் அளவில்—உதாரணமாக $2\frac{1}{2}$ சதவீதத்தில்—ஒட்டிக்கொண்டு அதிலிருந்து கீழே இறங்க மறுக்கும் தன்மைபோல் இருக்கும் தன்மையை வட்டி வீதத்தின் ஒட்டிக்கொள்ளும் தன்மை (stickiness of interest rate) என்றார் கெயின்ஸ். இச் சூழ்நிலையில் முதலீட்டின் இறுதி நிலைத் திறனும் $2\frac{1}{2}$ சதமாக இருந்தால் தனியார் துறையில் முதலீடு நடைபெறாது. இத்தகைய நிலையில்தான் அரசினர் நீர்ப்பாசனத் தேக்கங்கள் கட்டுதல், சாலைகள் அமைத்தல், வறியவர்களுக்கு வீடு கட்டுதல் போன்ற பொதுப் பணிகளில் முதலீடு

செய்து வேலையின்மை என்னும் பேய், நாட்டின் பொருளாதா ரத்தைப் பிடித்தாட்டாதபடி, வெருட்டி ஓட்டவேண்டுமென்று கெயின்ஸ் ஆலோசனை கூறுகிறுர்.

முதலீட்டுத் தேவைக் கோட்பாட்டை ஓர் அட்டவணையாக அமைத்துக் காட்டலாம்.

| முதலீட்டின் இறுதி நிலைத் திறன் சதவீதம் | முதலீட்டுத் தொகை (லட்சம் ரூபாய்) | |
|---|---|---|
| | தனித் தொகை | குவிவுத் தொகை |
| 8 | 10 | 10 |
| 6 | 15 | 25 |
| 5 | 20 | 45 |
| 4 | 25 | 70 |
| 3 | 30 | 100 |
| 2 | 40 | 140 |

இந்த அட்டவணைக்குச் சிறிது விளக்கம் தேவை. ஒரு கால அளவில் விஞ்ஞான, தொழில் நுட்ப அறிவும், முன்னேற்றமும் ஓர் அளவில் இருக்கும். இந்த நிலையில் 8 சதவீத வருமானம் நல்கக்கூடிய மூலதனச் சொத்துகள் (capital assets) ரூ. 10 லட்சம் பெறுமானமுள்ளதென்ருல், அதைவிடக் குறைவான 6 சதவீதச் சொத்துகள் வேறு அளவில் இருக்கும். அதை ரூ. 15 லட்சம் பெறுமானது என்று அட்டவணைக் காட்டுகிறது. இதே மாதிரி, 5, 4, 3, 2 சதவீத வருமானம் தரக்கூடிய சொத்துகளின் தொகை ரூ. 20, 25, 30, 40 லட்சம் எனக் காட்டியிருக்கிறேம். ஒரு சம யத்தில் அதிக வருமானம் கொடுக்கக்கூடிய வாய்ப்புக் குறைவா கத்தானே இருக்கும். இந்த முதலீட்டுத் தொகைப் புள்ளி விவ ரங்கள் எல்லாம் தொழிலதிபர்கள் அக் காலச் சூழ்நிலையின் பல அம்சங்களையும் ஆராய்ந்து கண்டுபிடிக்கும் முதலீடு வாய்ப்பு களும் அவற்ருல் கிடைக்கும் இறுதிநிலை வருமானங்களும் ஆகும். இது முதலீட்டு வாய்ப்புகளை ஒரு நேரத்தில் (at a point of time) எடுத்த படப்பிடிப்புப் போன்றது. அந்த நேரத்தில் எவ்வளவு முதலீடு நடப்பில் செய்யப்படும் என்பது அந்தக் கால அளவில்

(time period) அங்காடி வட்டி விதம் என்ன என்பதைப் பொறுத்திருக்கும். எடுத்துக்காட்டாக, அங்காடி வட்டி விதம் 4 சதமாக இருந்தால், மொத்த முதலீட்டுத் தேவை 70 அல்ல, 45 லட்சமாகத் தான் இருக்கும். அடுத்த 25 லட்சமும் முதலீடு செய்யப்பட்டால், தொழில் நிறுவனத்தை நடத்தும் கஷ்டங்களை யெல்லாம் அனுபவித்தபின் 4 சதவீத இலாபம் பெறக்கூடும். ஆனால், ஒரு முயலுநர் 'ஒரு நிருவாகச் சிரமமுமின்றி அந்த முதலை வங்கியில் வைப்பு நிதி (deposit) ஆக வைத்திருந்தால் கிடைக்கும் 4 சதவீத வட்டி வருமானம் அதிக வரவேற்புக்குரியது என்று நினைப்பார். எனவே, அந்த ரூ. 25 லட்சமும் அங்காடி வட்டி 4 சதவீதமாயிருக்கும் பொழுது முதலீடு செய்யப்படாது. அங்காடி வட்டி 3 சதவீதமாகக் குறைந்தால், இந்த ரூ. 25 லட்சமும் முதலீடு செய்யப்படும். அங்காடி வட்டி நிர்ணயிக்கப்படுவது சில காரணங்களால்; நிறுவனங்களின் இலாப விகிதம் நிர்ணயிக்கப்படுவது வேறு சில காரணங்களால் என்பதை நாம் நினைவிலிருத்திக்கொள்ள வேண்டும். எனவே, அங்காடி வட்டி விதம் ஒரு மட்டத்தில் இருக்கும்பொழுது, முதலீட்டின் அளவு விரிந்துகொண்டே போய் வட்டி விதத்துக்குச் சமமாகும் நிலையில் நின்றுவிடும். அதாவது முதலீட்டு வாய்ப்புகளில் 4 சதவீதம் உள்ள சொத்துகள் வரை முதலீடு செய்யப்படும். இந்தக் கோட்பாட்டிலிருந்து கெயின்ஸ் வகுக்கும் கைகோள் என்னவெனில் முதலீட்டைப் பெருக்க வேண்டுமென்றால் வட்டி விதத்தைக் குறைக்கவேண்டும்.

(4) ரொக்க நிலை அட்டவணை

ரொக்கப் பணத்தின் மேலுள்ள விருப்பத்துக்கு மூன்று காரணங்கள் உண்டு என்று முன்னே குறிப்பிட்டோம் அல்லவா? (i) அன்றாடச் செலவின் நோக்கம், (ii) எச்சரிக்கை நோக்கம், (iii) ஊக வாணிக நோக்கம் என்ற மூன்றில் அன்றாட வாழ்க்கைச் செலவுக்கு ஓர் அளவு ரொக்கம் இன்றியமையாதது. ஒரு மனிதனுக்கு மாதச் சம்பளம் ரூ. 100 என்றும் மாதச் செலவு ரூ. 60 என்றும் வைத்துக் கொண்டால், ரூ. 60-ஐக் கையில் தினசரிச் செலவுக்காக வைத்துக் கொள்ள வேண்டிருக்கும். இந்த ரூ. 60-ஐயும் வங்கியில் போட முடியாது. குடும்ப வரவு செலவுத் திட்டத்தைச் செவ்வனே கண்காணித்து வரும் குடும்பத் தலைவன் ரூ. 60-ஐயும் விட அதிகமாகவும் கையில் வைத்திருக்க மாட்டான். எனவே, அன்றாடச் செலவுக்கு வேண்டிய ரொக்கம் (அவன் சம்பளம் உயராது இருப்பது வரையும்) மாறாத நிலையில் நிற்கும். எதிர்பாராத நோய் நொடிச் செலவிற்காக எச்சரிக்கை நோக்கத்தின் பேரில் வைத்திருக்க வேண்டிய பணம் ரூ. 20 என்று கொள்வோம். இந்த ரூ. 20-யும் வங்கியிலும் போட்டுவைக்க முடியாது;

பிறருக்குக் கடனாகவும் கொடுக்க முடியாது. இந்த இரண்டு நோக்கங்களுக்காகக் கையிருப்பு ரொக்கமாக வைத்துக் கொள்ள வேண்டிய பணம் ரூ. 80 ஆகும். இதே மாதிரி மாதச் சம்பளம் ரூ. 500, ரூ. 1000 என்று வாங்குபவர்களும் ஒரு பகுதியை இவ்விரு காரணங்களுக்காகவும் ரொக்க நிலையில் வைத்துக் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். ஆண்டு தோறும் அல்லது திங்கள் தோறும் மக்கள் வாங்கும் சம்பளம் கணிசமான முறையில் உயர்வதில்லை. ஆண்டுதோறும் கிடைக்கும் சம்பள உயர்வு ஒரு குடும்பத்தின் வாழ்க்கைத் தரத்தை மிகுதியாக மாற்றுவதில்லை. எனவே, இவ்விரு காரணங்களுக்காக நாட்டு மக்கள் கையில் வைக்கும் ரொக்கப் பணமும் மாறுவதில்லை. அங்காடி வட்டி வீதம் எவ்வாறு உயரினும், இந்த ரொக்கப் பணம் கடனாகக் கொடுக்கப் படுவதில்லை. அடிக்கடி மாறாத ரொக்க நிலையிலிருந்து கடனாகப் புடை பெயராது. இவ் விரு காரணங்களுக்காக வைத்திருக்கப்படும் பணத்தை $M_1$ என்னும் ஊக வாணிகத்திற்காக வைக்கப்பட்டிருக்கும் பணத்தை $M_2$ என்றும் கெயின்ஸ் குறிப்பிடுகிறார். பின்னது $M_2$ இலாபம் தேடுவதற்காகக் கையில் வைத்திருக்கும் பணம். பங்கு மார்க்கட்டில் பங்குகள் வாங்குவது சிறந்த இலாபத்தைத் தருவதனால், அந்த வழியில் இது பயன்படுத்தப் பெறும். அங்காடி வட்டி வீதம் மனத்துக்குப் பிடித்தமான அளவு உயர்ந்துவிட்டால், அந்த வட்டி வருமானத்தைச் சம்பாதிக்க இந்த ரொக்கப் பணம் கடனாகவும் வழங்கப்படும். இவ் விரண்டாவது வகை ரொக்கப் பணம், $M_2$, மிக்க அளவில் ஒருவர் கையிலிருந்தால் வட்டி வீதம் மிக்க உயர்வு அடையாத காலத்திலும் மிதமான வட்டி வீதத்திற்குக் கூட அதில் ஒரு பகுதியைக் கடனாக வழங்குவர். தொழில் முன்னேற்றம் அடைந்த நாடுகளில் $M_2$ கணிசமான முறையில், ஊக வாணிக வாய்ப்புகளையே நோக்கி நிற்கும். ‘ ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி யிருக்குமாம் கொக்கு ’ என்பது போலக் காத்துக்கொண்டிருக்கும் எனலாம். ரொக்க நிலையில் ஆசை என்பது ஓர் உள்ளப் போக்கு. ஆனாலும் இந்த ஆசையைக் கைவிடத் தூண்டக் கூடியது உயர்ந்த வட்டி வீதம் ஒன்றே. எனவே ரொக்கத்தைக் கைவிடுவதற்குத் தருவதே வட்டி (payment for parting with liquidity) என்று கெயின்ஸ் கூறுகிறார்.

எவ்வாறு வட்டி வீதத்தின் ஏற்றத் தாழ்வு ரொக்க நிலை ஆசையைப் பாதிக்கிற தென்பதையும் ஓர் அட்டவணை வழியே காணலாம்.

| அங்காடி வட்டி வீதம் | ஊக வாணிகத்துக்கு வைத்திருக்கும் ரொக்கப் பணம் $M_2$ லட்ச ரூபாயில் |
|---|---|
| 8 | 10 |
| 7 | 12 |
| 6 | 20 |
| 5 | 36 |
| 4 | 50 |
| 3 | 80 |
| 2 | 120 |

வட்டி வீதம் 8 சதமாக இருக்கும்பொழுது, அந்த வட்டிக்காகப் பிறருக்குக் கடன் கொடுத்து ஊதியம் அடைய வேண்டுமென்ற ஆசை, ரொக்க நிலை ஆசையுடன் வன்மையாகப் போட்டி இடுவதால் $M_2$ மிகவும் குறைகிறது. ஊக வாணிகத்திற்கென ஒதுக்கிவைத்திருந்த பணத்தில் பெரும் பகுதி வட்டிக்காகக் கடனாகக் கொடுக்கப்படும். அங்காடி வட்டி வீதம் குறைந்து வரும் பொழுது, வட்டிக்குக் கொடுக்கும் ஆசை நலிந்து, ரொக்க நிலை ஆசை ஓங்கி விடுவதால், ஊக வாணிக ரொக்கம், $M_2$, அதிகமாகிவிடுகிறது. உதாரணமாக மேற்கண்ட அட்டவணை 7 சதவீதமாக அங்காடி வட்டி இருக்கும்போது ஊக வாணிக ரொக்கம் ரூ. 12 லட்சமாக இருப்பது, அங்காடி வட்டி வீதம் 3 சதம் ஆக வீழ்ச்சியடையும் நிலையில் ரூ. 80 லட்சம் ஆகப் பெருகி விடுவதைக் காணலாம்.

கடைசியாக ரொக்க நிலை ஆசையைப் பற்றி கெயின்ஸ் வகுத்துள்ள இரண்டு விதிகளைப் பார்ப்போம். அன்றாடச் செலவு நோக்கம், எச்சரிக்கை நோக்கம் என்ற இரண்டிற்குமாக ரொக்கம் வைத்திருக்கக் கூடிய பணம் $M_1$ அவரவர் வருமானத்தைப் பொறுத்து மாறும். இதையே ஒரு மாறும் சார்பு (Variable function) ஆக அமைத்திருக்கிறார் கெயின்ஸ். $M_1$ என்பதை $ப_1$ என்றும் $M_2$ என்பதை $ப_2$ என்றும் மொழிபெயர்த்துக் கொள்வோம். $ப_1 \propto வ$ அல்லது $ப_1 = f(வ)$—(1) $\propto$ என்னும் குறி 'மாறி வரும்' என்ற பொருளைக் குறிக்கும்.

$M_1$=ப$_1$ என்பது அன்றாடச் செலவு நோக்கம் + எச்சரிக்கைச் செலவு நோக்கம், இரண்டுக்காகவும் கைவசம் வைத்துக் கொள்ளப்படும் ரொக்கப் பணம்.

Y = வ என்பது ஒரு குடும்பத்தின் வருமானம், மேலே குறிப்பிட்டுள்ள சார்பு (function) விளக்குவது என்னவென்றால் ப$_1$ ஒவ்வொருவருடைய வ, வருமானத்தைக் கூடினால் கூடும், குறைந்தால் குறையும் என்று காட்டுகிறது. இது நேர் முறைச் சார்புக்கு (Varying directly) எடுத்துக் காட்டு.

மூன்றாவது காரணமாகிய ஊக வாணிகத்துக்குக் கைவசம் வைத்திருக்கப்படும் ரொக்கம் $M_2$, அல்லது ப$_2$ வட்டி வீதம் ஏறினால் குறையும் குறைந்தால் கூடும். இதுவே கெயின்ஸ் வகுத்துள்ள இரண்டாவது விதி. இதற்கு அமைந்திருக்கும் சார்பு வருமாறு :

ப$_2$ ∝ வ.வீ அல்லது ப$_2$=$f$ (வ.வீ.)— (2)

இதில் 'ப' என்பது ஊகவாணிகத்துக்குக் கைவசம் வைத்திருக்கப்படும் ரொக்கப் பணம். வ. வீ. என்பது அங்காடியில் நிலவும் வட்டி வீதம் வ. வீ. ஏறினால் 'ப$_2$' குறையும், இறங்கினால் 'ப$_2$' ஏறவும் செய்யும். இதில் எதிர் மறைச் சார்புக்கு (Varying inversely) ஓர் எடுத்துக்காட்டு.

### (5) முதலீடு பெருக்கி (Investment multiplier)

இக் கோட்பாடு முதலீட்டுத் தொகையையும் அதனால் உண்டாகும் அதிகப்படி வருமானத்தையும் இணைக்கும் ஒரு சார்பு (function) ஆக விளங்குகிறது. ஒரு நாட்டின் முதலீட்டுச் செலவு 10 என்று வைத்துக்கொள்வோம். இந்த 10-ம் முதலீடு செய்யும் தொழிலதிபர் அமர்த்தும் தொழிலாளர்களுக்கு வருமானமாகிறது. இந்த வருமானம் 10-ல் 5 சேமிக்கப்பட்டால், மிஞ்சியுள்ள 5 நுகர்வுச் செலவாகும். இந்த நுகர்வுச் செலவு 5-ம் நுகர்வுப் பண்டங்கள் ஆக்குவோருக்கு வருமானம் ஆகும். இந்த வருமானத்தில் பாதி சேமிப்பாகவும், பாதி நுகர்வுச் செலவாகவும் அமையும். அஃதாவது,5-ல் $2\frac{1}{2}$ நுகர்வுச் செலவாவதால், அது இன்னொரு சாராருக்கு வருமானம் ஆகும். இந்த $2\frac{1}{2}$ வருமானத்தில், $1\frac{1}{4}$ சேமிப்பாகவும் $1\frac{1}{4}$ நுகர்வுச் செலவாகவும் அமைகின்றன. இவ்வாறு பன்முறை பல சாரார் கையில் வருமானமாகவும் சேமிப்பாகவும் ஆதியில் செய்த முதலீட்டுப் பணம் சென்று பரவிக் கொண்டிருக்கும். ஆதியில் தொடங்கும் முதலீட்டுச் செலவில் ஒரு பகுதி முதற் கருவிகள் வாங்குவதில் செலவு செய்யப்பட்டாலும், அப்

பகுதி அவற்றை உற்பத்தி செய்யும் தொழிலதிபர்களுக்கு வருமானமாகும். அவ் வருமானமும், நுகர்விலும், சேமிப்பிலும் மேல் கூறியவாறே சுற்றிச் சுற்றிப் பரவி வரும். இந்த நிகழ்ச்சியினுற் இரண்டாவது, மூன்ருவது, நான்காவது சுற்று நிலைகளில் கீழ்க் காட்டியவாறு குறியியல் கணக்கு (algebra) முறைப்படி வருமானம் 10 ஆகப் பெருகும்.

$$5+2\tfrac{1}{2}+1\tfrac{1}{4}+\tfrac{5}{8}+\tfrac{5}{16}\ldots\ldots=10$$

இதைப்போலவே சேமிப்பும் 10 ஆகப் பெருகும். ஆகவே தொடக்கத்தில் ஏற்பட்ட முதலீட்டுச் செலவு 10-ம் நாட்டின் வருமானத்தை 20 ஆக அதிகப்படுத்தும். இந்த உதாரணத்தில் நுகர்வுச் செலவு வருமானத்தில் பாதியாகக் கருதப்பட்டது. அதாவது $\frac{\text{நுகர்வுச் செலவு}}{\text{வருமானம்}}=\frac{5}{10}=\frac{1}{2}$. இந்தப் பின்னத்தையே நுகர்வுச் சார்பு (Consumption function) என்று கெயின்ஸ் குறிப்பிடுகிருர். இதே உதாரணத்தில் சேமிப்புச் சார்பு (Saving function) $=\frac{\text{சேமிப்பு}}{\text{வருமானம்}}=\frac{5}{10}=\frac{1}{2}$.

நடைமுறையில் இந்த உதாரணத்தில் எடுத்துக் கொண்ட அளவுக்குச் சேமிப்புக் கைகூடுவதில்லை. சாதாரணமாக $\frac{1}{5}$ தான் சேமிப்பாகத் தேறும். சேமிப்புச் சார்பைத் தலை கீழாகப் போட்டால், முதலீடு பெருக்கிக் கிடைக்கும் என்பது கெயின்ஸின் ஆராய்ச்சி கண்ட முடிவு. மேற் கூறிய எடுத்துக் காட்டில் சேமிப்புச் சார்பு $\frac{1}{2}$ ஆயிருக்கும் பொழுது வருமானம் $\frac{2}{1}$ ஆகப் பெருகியதல்லவா? எனவே, முதலீட்டுப் பெருக்கி $\frac{2}{1}$ ஆகின்றது. சேமிப்புச் சார்பு $\frac{1}{5}$ ஆக இருப்பின் வருமானம் $\frac{5}{1}$ ஆகப் பெருகும். இது முதலீடு பெருக்கியின் விளைவே ஆம்.

இந்த முதலீடு பெருக்கி என்ற கோட்பாட்டிலிருந்து விளையும் நலன் செயலளவில் என்னவாகின்றது என்பதையும் காணலாம். சேமிப்புச் சார்பு $\frac{1}{5}$ ஆகவும், அதனுல் முதலீட்டுப்பெருக்கி 5 ஆகவும் அமைந்தால் 10 என்ற முதலீட்டுச் செலவு 50 என்ற வருமானமாகப் பெருகி விளங்கும் என்பதாம். இவ்வாறு முதலீட்டுச் செலவு பல்கி வருமானத்தைப் பெருக்குவதை ஒரு வரப்பிரசாதமாகவே கொள்ளவேண்டும். ஏனென்ருல் கெயின்சின் ஆராய்ச்சியின்படி சக்தி வாய்ந்த தேவையை அதிகப் படுத்துவதற்கு முதலீட்டுச் செலவை அதிகப்படுத்துவதுதான் ஒரே ஒரு சாத்தியமான வழி. முதலீட்டுச் செலவு பிரமாண்டமான அளவில் இருக்க வேண்டியதில்லை என்பதை இக் கோட்பாடு வலியுறுத்துகிறது. முதலீடு

பெருக்கி என்பது அதிக அளவில் அமைந்தால் முதலீட்டுச் செலவு எதிர் முறைச் சார்பில் (inversely) குறைவாக இருந்தால் போதும். எனவே முதலீடு பெருக்கி என்னும் ஆராய்ச்சிக் கருவி முதலாளித் துவத்தின் கொடு நோயான வேலையின்மையைத் தீர்க்கும் அரு மருந்தாக உள்ளது. ஆதலால் இக் கோட்பாடு கெயின்சின் புதுப் பொருளாதாரத்தில் ஒரு தனிச் சிறப்பினைப் பெறுகிறது.

இதுவரை கெயின்சின் புதுப் பொருளாதாரத்தை மிகச் சுருக்கமாகவே விளக்கியுள்ளோம். முதன்மையான கோட்பாடு கள் மட்டுமே இடம் பெற்றிருக்கின்றன. அவர் எழுப்பிய எண்ணற்ற கேள்விகள் அவற்றிற்கு அவர் தரும் விளக்கங்கள், அவற்றிலிருந்து முளைக்கும் கிளைத்தேற்றங்கள்–இவையெல்லாம் அவருடைய மாபெரும் நூலில் ஆல்போல் விரிந்து வளர்ந்து கிடக் கின்றன. அவற்றையெல்லாம் முழு விவரங்களுடன் இந் நூலில் விளக்க இடமில்லை. அயல் நாட்டு வணிகத்தினால் முதலீடு பெருக்கியின் கசிவுப் போக்கு (leakages in multiplier), பணக் கூலி (money wage), உண்மைக் கூலி (real wage), வேக வளர்ச்சி விதி (acceleration principle), பன்னெடுங் காலத் தேக்கம் (Secular Stagnation) முதலானவற்றை இங்கு விளக்க இடமில்லை.

### (iii) கெயின்சியப் புரட்சியின் விளைவுகள்

**ஆராய்ச்சிக் கருவிகள்**

கெயின்ஸ் புரட்சி மிக்க நூலை எழுதியிருக்கிறார் என்றாலும், அந் நூலில் காணப்படும் சில கோட்பாடுகள் பொருளாதாரச் சிந்தனை வரலாற்றிற்கு முழுவதும் புதியனவல்ல. சக்தி வாய்ந்த தேவை என்னும் கோட்பாடு மால்தசின் பொருள் தேக்கம், தேவைக் குறைவு என்னும் இரு கருத்துகளிலிருந்தும் தோன்றியதே யாகும். சேமிப்பு–முதலீட்டுச் சமநிலை என்னும் கோட்பாடும் அவருக்கு முன்னால் ஸ்வீடன் நாட்டுப் பொருளாதார அறிஞர் நட் விக்செலும் (Knut Wicksell), ஆங்கில நாட்டிலேயே ராபர்ட்சன் (Robertson) என்பவர்கள் இருவரும் ஆராய்ந்த கருத்து களேயாகும். முதலீட்டு இறுதி நிலைத்திறன் கோட்பாட்டிற் கும் (marginal efficiency of capital) தொன்மைப் பொருளாதார நூலார் வகுத்த இலாப வீதக் கோட்பாட்டிற்கும் (Rate of profit) ஓரளவு ஒற்றுமைக் காணலாம். அகக் காரணமான தொழிலதிபர் களின் இலாப நோக்கு கெயின்சின் புதிய கருத்து. ரொக்க நிலை யில் ஆசை என்ற தத்துவமும் (liquidity preference) அவர் கண்ட புதிய உண்மை. மேலும் நுகர்வுச் செலவுக்கும் ஒருவர் வருமானத்திற்கும் உள்ள சம்பந்தத்தை நுகர்வுச்செலவுச் சார்

பாகக் (consumption function) குறிப்பிட்டு 'அது எளிதில் மாறக் கூடியதல்ல, குறுகிய காலத்தில் நிலையானது' என்று விளக்கியதும் அவருடைய புதுக் கருத்து ஆகும். இவற்றைத் தவிர, அவருடைய தனிப் பெருந் தொண்டு யாதெனில், பல்வேறு பிண்டங்களாகத் தனித் தனிக் கோட்பாடுகளாய்ப் பிரிந்து கிடந்த இணைத்துச் சார்புகளாக (functions) அமையும் தொடர்களைக் கண்டு பிடித்து, ஒரு பகுத்தறிமுறைக் கோட்பாடாம் கட்டடத்தை எழுப்பியதேயாகும். அத்துடன் இக்காலப் பொருளாதார அமைப்பில் எத்துணை அளவு பணம் பண்ட மாற்றுக் கருவியாக மட்டுமல்லாமல், நிகழ்காலத்தையும் வருங் காலத்தையும் பிணைக்கும் ஒரு மாபெரும் சக்தியாகச் செயலாற்றுகிறது என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டிய தனிப் பெருமை அவருக்கே உரியதாகும். இக் காலப் பொருளாதாரமோ பணம் என்னும் சக்தியால் இயங்குகின்றது. எனவே, பணத்தையும் செலாவணியையும் ஒழுங்காக நிர்வகிக்காமல் பொருளாதாரத்தின் நலனைப் பேண முடியாது என்று வற்புறுத்தியதும் அவருடைய தனிச் சிறப்பாம். இச் சேவைகளைப் பிறப் பொருளாதார வல்லுநர்கள் செய்திருக்கக் கூடும். ஆனால் முதளாளித்துவத்தின் மூச்செனக் கருதப்படும் தலையிடாக் கொள்கையே ஒரு மாயத்திரைபோல் வந்து அவர்கள் அறிவு விளக்கத்தைச் செய்துவிட்டது. தலையிடாக் கொள்கையை உதறித்தள்ளித்தான் ஆகவேண்டும் என்று கூறுவதற்குக் கெயின்சிடமிருந்த உள்ளத் துணிவு அவர்களுக்கு இல்லாது போயிற்று. முதலாளித்துவத்தின் பிணிகளை அகற்றி, அது மக்களுக்கு உறுதியான நலன்களை அளிக்குமாறு செய்துவிடலாம் என்பதில் அளவற்ற நம்பிக்கை கொண்டவர் கெயின்ஸ். முதலாளித்துவத்திலும், தொன்மை நூலிலும் எத்தனையோ குறைபாடுகள் அவர் கண்டாலும், முதலாளித்துவம் அழிந்துவிடும் என்று பறை சாற்றிய மார்க்சின் நம்பிக்கை அவருக்கு எள்ளளவும் கிடையாது. அவர் ஆங்கில நாட்டின் பெருமைக்குரிய பண்புகள் ஒருங்கே அமைந்த நடுத்தர வகுப்பினரின் ஒப்பற்ற பிரதிநிதி ஆவார். நாச வேலைகள் இன்றியே காலப் போக்கில் சமூகக் குறைபாடுகளைப் பைய நீக்கி, மக்களுக்கு நல்வாழ்வு நல்கும் சமுதாயத்தை நிறுவ முடியும் என்ற கோட்பாட்டில் திளைத்த பரம்பரையில் உதித்தவராவர். அவருடைய பொதுக் கோட்பாடு என்னும் நூல் முதலாளித்துவப் பொருளாதார அறிஞர்களுக்கும், அரசியலாருக்கும், தொழிலதிபர்களுக்கும், பிறருக்கும் முதலாளித்துவம் முறிந்து நசிந்துவிடுமோ என்று கவலையுற்று அஞ்சியவர்கள் எல்லாருக்கும் ஓர் அச்சம் தவிர்க்கும் சஞ்சீவியாக மிளிர்கிறது.

மந்த கால நூல் ? (Depression Economics ?)

கெயின்சின் நூலை மந்தத்தை நீக்கும் வழி காட்டும் பொருளாதாரம் என்று கூறுவாரும் உளர். இந்த எண்ணம் தவறானது என்பதை நிலைநாட்ட வந்ததுபோல் அவருடைய 'போர்ச் செலவை எப்படிச் சரிக்கட்டுவது ?' (How to pay for the War ?) என்னும் நூல் அமைந்துள்ளது. இரண்டாவது உலகப் போர்க் காலத்தில் வெளியான நூல் இது. அக் காலத்தின் பொருளாதார நிலை மந்த காலத்திற்கு நேர்மாறானதாக அமைந்திருந்தது. முதலீட்டுச் செலவு-குறிப்பாக இராணுவத் தளவாடங்கள் உற்பத்தித் துறையில்-அளவற்ற முறையில் பெருகிய காலம் அது. அதன் விளைவாகச் சக்திவாய்ந்த தேவை வேண்டுமளவிற்கு மேல் வீங்கியது. இந்த வீக்கத்தைக் குறைக்காவிட்டால் விலைவாசி வானத்தை முட்டக்கூடிய பயங்கர நிலை ஏற்படும் என்பதற்கான அறிகுறிகள் தோன்றின. இச் சூழ் நிலையில் கட்டாயச் சேமிப்பு (forced saving) என்னும் திட்டத்தை உருவாக்கினார். கட்டுக்கு மீறிய சக்தி வாய்ந்த தேவையைக் கட்டுப்படுத்தக் கூடிய சிறந்த கருவி அதுவே என்று அறிவுறுத்திய பெருமை கெயின்சினுடைய தேயாம். ஆழ்ந்து நோக்கின் 'பொதுக் கோட்பாடு' என்னும் நூலில் அவர் உருவாக்கிய ஆராய்ச்சிக் கருவிகள் ஒரு வகையில் பயன் படுத்தினால் வேலையின்மையைப் போக்கும். அவற்றை எதிர் முறையில் (reverse gear) பயன் படுத்தினால், பண வீக்கத்தைக் குறைக்கும்; மிதமிஞ்சிய முதலீட்டையும் தடுக்கும். ஆதலால் கெயின்சை மந்தப் பொருளாதார நிபுணர் (depression economist) என்று அழைப்பது பொருத்தமற்றதாகும்.

மதிப்புரை

கெயின்ஸ் இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த பொருளாதார மேதை; பொருளாதாரச் சிந்தனையாளர்களிலேயே ஈடு இணையில்லா அறிஞர் என்று வருங்காலம் போற்றக்கூடிய பெருமை வாய்ந்தவரும் ஆவார். அவர் ஆல்பிரட் மார்ஷலைப் போல், பொருளாதார அறிஞர்களின் நன் மதிப்பையும், ரிக்கார்டோவைப்போல் அரசாங்கத்தாரிடையே மிக்க செல்வாக்கையும் பெற்றவர். ரிக்கார்டோவின் ஆலோசனைகளை ஏற்றுக் கொண்டு அக் காலத்து அரசினர் தலையிடாக் கொள்கையை மேற்கொண்டனர். கெயின்சின் ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டு இக் காலத்து அரசினர் தலையிடாக் கொள்கையைக் கைவிட்டுப் பொருளாதாரத் துறையில் தலையிட்டுப் பல செயல்களைப் புரிந்து வருகின்றனர். முதலாளித்துவப் பொருளாதார அமைப்பின் உடன் பிறந்த நோய்கள் வேலைக்குறைவும், மாறி மாறி உயர்ந்தும் தாழ்ந்தும் வரும் வியாபாரச் சகடம், முதல் திரட்சி, பெரும்

பான்மை மக்களிடம் பண்டங்கள் வாங்கும் சக்தி குறைதல் முதலியனவாம். இந் நோய்களால் முதலாளித்துவம் செத்து மடியும் என்பது மார்க்சின் வாதமும் சோதிடமும் ஆகும். ஆனால், அவை தீராத நோய்களல்ல; இவற்றைக் குணப்படுத்தி, முதலாளித்துவப் பொருளாதார அமைப்பைச் சீர்படுத்திச் சிரஞ்சீவியாக வாழவைக்கலாம் என்று கெயின்ஸ் காட்டினார். இது வெறும் ஆசையில் பிறந்த நம்பிக்கையல்ல. விஞ்ஞான வழியில் பகுத்தறி முறையில் அவர் வகுத்த கோட்பாடுகளிலிருந்து பிறந்த கொள்கையாகும். அக் கோட்பாடுகளை உருவாக்கி, அவற்றை மற்றப் பொருளாதார அறிஞர்களும் ஒப்புக்கொள்ளும்படி விளக்கி, அவற்றிலிருந்து கண்டு பிடித்த செயல் முறைத்திட்டங்களும் கைகோள்களுமே முதலாளித்துவத்தைப் பீடிக்கும் நோய்களைத் தீர்க்க கெயின்ஸ் வகுத்த மருந்துகளாகும்.

தொன்மைப் பொருளாதாரக் கொள்கைகளை இக் கோட்பாடுகள் எதிர்த்தொதுக்கித் தள்ளின. எனவே கெயின்சின் பொருளாதாரத்தைக் கெயின்சின் புரட்சி (Keynesian Revolution) என்று ஒரு சாரார் கூறலாயினர். இந்தப் புரட்சி வீரர் மார்ஷலின் மாணவர் மட்டுமல்ல இங்குள்ள வியப்பு; 1908-லிருந்து 1935 வரை 27 ஆண்டுகள் மறு மலர்ச்சிப் பொருளாதாரப் பேராசிரியராகவும் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலேயே பணியாற்றினார் என்பதும் வியப்புக்குரியதே ஆம். இத்தகையவர் எவ்வாறு பொருளாதாரச் சிந்தனையின் வரலாற்றிலேயே ஒரு மாபெரும் புரட்சியை உண்டாக்கிப் புதியதோர் யுகத்தைத் துவக்கினார் என்பதனைச் சுருக்கமாக அறிந்து கொண்டோம்.

கெயின்ஸ் அரசாங்கத்திலும் பல்கலைக் கழகத்திலும் பல சிறந்த பதவிகள் வகித்துள்ளார். ஒவ்வொரு பதவியிலும் இருந்த காலத்தில் தீர்க்க முடியாத சிக்கல்கள் என்று கருதப்பட்டவற்றை எல்லாம் தமக்கே உரிய நுண்ணறிவினால் அலசி ஆராய்ந்தார்; அவற்றைத் தீர்க்கும் வழிகளை அரிய நூல்களில் எழுதி வெளியிட்டார்.

கெயின்சைச் செயற்கரிய சாதனையைச் செய்த பெரியார் எனலாம். மார்ஷலைப் பற்றிக் கெயின்ஸ் எழுதிய வாழ்க்கைக் கட்டுரையில் ஒரு பொருளாதார மேதைக்கு அவசியமான பண்புகளை அவர் விவரித்துள்ளார். 'அவர் ஒரு கணித நிபுணராகவும், வரலாற்று வல்லுநராகவும், அரச தந்திரியாகவும், தத்துவ ஞானியாகவும் ஒருமிக்க ஓரளவாவது அமைந்தவராக இருக்க வேண்டும். மனித இயற்கையிலும் சமூகப் பழக்க வழக்கங்களிலும் ஒன்று கூட அவருடைய அறிவிற்கு அப்பாற் பட்ட

தாக இருக்கக் கூடாது. ஒரே சமயத்தில், அவர் காரிய வாதியா கவும், தன்னல மற்ற தியாகியாகவும் செயலாற்ற வேண்டும். ஒரு கலைஞனைப்போல் பற்றற்றவராகவும், வாழ்க்கைச் சூழலை விட்டுத் தொலைவில் இயங்கும் உள்ளம் படைத்தவராகவும், ஆனால் ஓர் அரசியல் வாதியைப்போல் பற்றுக்கோடுடனும், வாழ்க்கைப் போரின் மையத்திலும் வாழக் கூடியவராகவும் இருக்கவேண்டும்' இத்தனை பண்புகளும் நிறைந்தவர் கெயின்ஸ் எனலாம். அவர் பொருளாதார மேதை மட்டுமல்ல. அவர் ஒரு நுண் கலைஞர் ; நிதியியல் நிபுணர் ; சிறந்த தேசபக்தர் ; உலகக் குடும்ப அனைத்து நாட்டுக் கொள்கையில் (internationalism) நிலையான நம்பிக்கை கொண்டவர். உயர்ந்த சுவைஞர் ; ஊக வாணிக வல்லுநரும் ஆவார்.

ரிக்கார்டோவுக்கும் கெயின்சுக்கும் பலவகைகளில் ஒற்றுமை இருக்கக் கண்டோம். இருவரும் அவரவர்களுடைய மாபெரும் நூல்கள் வெளியானபின் ஒரு தலை முறைக்குமேல் பொருளாதார வானில் நிகரற்ற விண் மீன்களாக ஒளி வீசினர். இருவரது கோட்பாடுகளையும் அவ்வக் காலத்து அரசினர் உச்சி மேற் கொண்டு நடைமுறையில் செயலாற்றினர். இருவரும் ஊக வாணி கத் துறையின் வாயிலாக மாபெருஞ் செல்வம் திரட்டியவர்கள். கெயின்ஸ் இறந்தபின் அவருடைய சொத்து 60 லட்சம் ரூபாயாக மதிக்கப் பெற்றது. நாட்டிற்கும் உலகப் பொருளாதாரத்திற்கும் அவர் செய்த உயர்ந்த தொண்டைப் போற்றிப் பிரிட்டிஷ் அரசு அவருக்குப் 'பிரபு' பட்டம் வழங்கியது. சென்ற 25 ஆண்டு களாகப் பொருளாதாரமென்றால் கெயின்ஸ், கெயின்ஸ் என்றால் பொருளாதாரம் என்று கூறத்தக்க முறையில் இசையுடன் வாழ்ந்த சான்றோரே கெயின்ஸ் எனலாம்.

## 25. பணக் கோட்பாடுகள்
### (Theories of Money)

ஆடம் ஸ்மித் பணத்தைப் பண்டமாற்றுக் கருவி, சுழற்சி யின் பெரிய சக்கரம் (the great wheel of circulation), வணிகத்துக் குதவும் பெருய கருவி (the great instrument of commerce) என்று பணத்தின் ஒரே ஒரு பணியைப்பற்றி விளக்கினாரே யன்றி, அதன் மதிப்புப் பிரச்சினையைப் பற்றி ஆழ்ந்து நோக்கவில்லை. தொன்மை நூல் மும்மணிகளில் ரிக்கார்டோ காலத்தில் நெப்போலியனுக்கும் ஆங்கில நாட்டுக்கும் போர் நடந்த பொழுது காகித நாணய வெளியீடு மிகுதியாயிற்று. ரிக்கார்டோ அதன்

விளைவுகளை ஆராய்ந்து 'பணத்தின் அளிப்பு மாறினால் விலைவாசியும் நேர் விகிதாச்சாரத்தில் மாறும்' என்ற பணப் பரிமாணக் கோட்பாட்டை (Quantity theory of Money) விளக்கினார். இக் கோட்பாட்டைப் பின்னர் ஜே. எஸ். மில் விரித்துரைக்கும் பொழுது வங்கிக்கடன், பணத்தைக் குவித்து வைத்ததால் (hoarding) பணத்தின் சுற்று வேகம் ஆகியவற்றால் எவ்வாறு இக் கோட்பாடு பாதிக்கப்படும் என்பதை வலியுறுத்தினார். 19ஆம் நூற்றாண்டு முடியும் வரை பணத்தின் பரிமாணக் கோட்பாட்டை யாவரும் ஒப்புக்கொண்டு வந்தனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற் பகுதியில் (1850-1900) பல தங்கச் சுரங்கங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. அதிக அளவில் தங்கம் அங்காடிக்கு வரவே, தங்கத்தின் விலை வீழ்ச்சியடைந்தது. பின்னால் பல ஐரோப்பிய நாடுகள் இரட்டை உலோக நாணய முறையைத் துறந்தன. தங்க நாணயத் திட்டத்திற்காகத் தங்கத்தின் தேவை ஓங்கியது. தங்க விலையும் உயர்ந்தது. அரசுகளும் மக்களும் வணிகர்களும் யாவரும் இவ்வாறு தங்க விலையின் ஏற்றத் தாழ்வுகளால் பாதிக்கப் பட்டனர். எனவே இருபதாம் நூற்றாண்டில் பொருளாதார நிபுணர்கள் பணக் கோட்பாடுகளை நுண்ணிய முறையில் ஆராயத் தொடங்கினர். இந்த ஆராய்ச்சிகளில் பணம்–விலைவாசிச் சார்பு மட்டுமின்றி, பணத்துக்கும் நாட்டின் மொத்த வருமானம், நாட்டின் மொத்த ஆக்கம், வட்டி வீதம் முதலானவற்றுக்கும் உள்ள தொடர்புகளையும் ஆய்ந்தனர். இவற்றின் பயனாக உருவாக்கிய பணக்கோட்பாடுகளில் மூன்றை மட்டும் இங்கே கவனிப்போம்.

(i) பணப் பரிமாணக் கோட்பாடு

தொன்மை நூல் அறிஞரின் பணப் பரிமாணக் கோட்பாட்டை நுட்பமாக விரித்து விளக்கியவர் இர்விங் ஃபிஷர் (Irrving Fisher, 1867-1941). பண அளிப்பு அதிகமானால் விலைவாசி ஏறும்; குறையுமானால், விலைவாசியும் குறையும் என்னும் இக் கோட்பாட்டின் மையக்கருத்தைப் பொருளாதார நிபுணர்கள் பலரும் ஒப்புக்கொள்வர். பண அளிப்பு என்ன விகிதாச்சாரத்தில் மாறுகிறதோ அதே விகிதாச் சாரத்தில் விலைவாசியும் மாறும் என்று இக் கோட்பாட்டுக்கு விளக்கம் தருவதானால், பண அளிப்பு இரு மடங்கு உயர்ந்தால், விலைவாசியும் இரு மடங்கு உயரும் என்றாகும். இந்த விளக்கத்தை ஏற்றுக் கொள்ளப் பலர் தயங்கினர் என்றால் அதில் வியப்பில்லை. இரண்டு விதமான விளக்கங்களிலும், இக் கோட்பாடு இயங்குவதற்குப் பிற மாறா எடுகோளின் தயவு வேண்டுமென்று அனை

வரும் ஒப்புக்கொண்டனர். எவையெல்லாம் மாருதிருக்க வேண்டுமென்ற விஞவிற்கு அளித்த விடை பல நிபந்தனைகளாக மிளிர்கின்றன. அவையாவன : (i) பணத்தின் சுற்று வேகம் மாறக் கூடாது. தொடக்கத்தில் ஒரு ரூபாய் ஒரு மாதத்தில் 12 தடவை பண்ட மாற்று செய்ய உதவியிருப்பின், கடைசிவரை, அது 12 தடவைக்குக் குறையாமலும், கூடாமலும் பண்ட மாற்றுக்குதவும் என்பதுதான் இந் நிபந்தனை. (ii) வங்கிக் கடனும் செக்குகள் முதலியன ஒரே அளவில் புழக்கத்திலிருந்து வர வேண்டும். (iii) பண்டமாற்றின் எண்ணிக்கையும் அளவும் மாருதிருக்க வேண்டும். (iv) மொத்தச் சரக்குகளும் கூடவோ, குறையவோ கூடாது. ஒவ்வொரு சரக்கும் சராசரி நான்கு தடவை கைமாறி உற்பத்தியாளரிடமிருந்து துய்ப்போருக்குப் போய்ச் சேருமாயின், இந்த நான்கு தடவைகள் மாருதிருக்க வேண்டும்.

இத்தனை எடுகோள்களுடன் மிளிரும் பணப பரிமாணக் கோட்பாடு இரண்டு அணுகு முறைகளில் (approaches) வகுக்கப் பட்டிருக்கின்றன. கொள்தல்-விற்றல் (transaction) அணுகு முறையில் இதை யாத்தவர் இர்விங் ஃபிஷர். இவருடைய முறை அமெரிக்காவில் பிரபலமாக விளங்குகின்றது.

**ஃபிஷரின் பரிவர்த்தனைச் சமன்பாடு** (Fisher's Equation of Exchange)

ஃபிஷர் பணத்துக்கும் விலைக்குமுள்ள தொடர்பை விளக்குங் கண் தரும் பண்டமாற்றுச் சமன்பாடு வருமாறு :

$P = \frac{MV+M'V'}{T}$ இதை $PT=MV+M'V'$ என்றும் எழுதலா மல்லவா ?

இதில் $P$ = சராசரி விலை ஆகவே $\frac{1}{P}$ = பண மதிப்பு.

$T$ = பணத்திஞல் செயல்படும் பண்டமாற்றுகள்.

$M$ = உலோக நாணயம், $V$ அதன் சுற்று வேகம்.

$M'$ = வங்கிச் செலாவணி முதலியன ; $V'$ அவற்றின் சுற்று வேகம்.

பண்டமாற்றுகளையும் விலையையும் பெருக்கிஞல் ($P \times T$), பணத்தின் தேவை என்னவென்று தெரியும். உலோக நாணயங்களை அவற்றின் சுற்று வேகத்திஞல் பெருக்கி, இதரச் செலாவணியை அவற்றின் சுற்று வேகத்திஞல் பெருக்கி, இரண்டு தொகைகளையும் கூட்டிஞல் ($MV+M'V'$), பணத்தின் மொத்த

அளிப்பு என்னவென்று தெரியும். தேவை இடது பக்கமும், அளிப்பு வலது பக்கமும் மேலே காட்டியுள்ள சமன்பாட்டில் காணலாம் PT = MV + M'V'.

ஃபிஷர் சமன்பாட்டை வகுத்துவிட்டுக் கூறுகின்றதாவது : குறுகிய காலத்தில், பண்ட உற்பத்தியும் பரிவர்த்தனையின் எண்ணிக்கைகளும் (T), செலாவணி (M), அதன் சுற்று வேகம் (V), வங்கிச் செலாவணி முதலியன (M') இவற்றின் சுற்று வேகம் (V'), இவ்வைந்தும் மாறக் கூடியனவல்ல. எனவே, பணத்தின் மதிப்புப் பணத்தின் அளிப்பு மாறும் விகிதத்துக்குத் தலைகீழாக (inverse) மாறும். பணம் இரண்டு பங்கு ஆனால், விலை 2 பங்கு ஆகும் ; பணத்தின் மதிப்பு $\frac{1}{2}$ ஆகக் குறையும். இதுவே ஃபிஷரின் கோட்பாடும் அதன் விளக்கமும். இதில் பிறர் கண்ட குறை களில் முக்கியமானவற்றை இனிக் குறிப்பிடுவோம் :

(1) பண்டமாற்றுக்கு உபயோகப் படுத்தாமல், சிலர் பணத் தைக் குவித்து வைத்திருக்கலாம். பலர் எச்சரிக்கை நோக்கம், ஊக வாணிக நோக்கம் காரணமாகக் கையில் ரொக்கமாக வைத் திருக்கலாம். இவை சமன்பாட்டு விளக்கத்தில் இடம் பெற வில்லை.

(2) T, V, V' மூன்றும் மாறா என்று கூறுவது நடை முறைக்குப் பொருந்தாது. டைனமிக் சமூகத்தில் இவை மாறிக் கொண்டுதானிருக்கும்.

(3) M, V, P மூன்றும் சாரா மாறிகள் (independent variables) அல்ல. பணம் மிகின், சுற்று வேகம் குறையக் கூடும் ; பண்ட உற்பத்தி (T) மிகுதியாகவும் கூடும். விலை (P) கூடினால், செலா வணி (M) அதிகமாகவும் கூடும். இம் மூன்றும் ஒன்றை யொன்று பாதிக்கும் தன்மை வாய்ந்தன.

(4) வங்கிக் கடன்களின் அளவு செலாவணியைப் பொறுத் திருக்கும். மக்களுக்கு வங்கிகளின் மேல் நம்பிக்கையற்றுவிட் டால், கைவசமிருக்கும் ரொக்கப் பணமாக வங்கி வைப்புகளை மாற்றிக் கொள்வர். தொழில், வணிகம், அலுவல் வளருமாயின், வங்கிக் கடன் (M') அதிகமாகும். இதைப் பின்பற்றி, செலா வணியும் (M) அதிகமாகலாம்.

(5) பண்டமாற்றுகளின் எண்ணிக்கையும், அளவும் மாறா திருக்க வேண்டுமானால் பண்ட உற்பத்தி உச்சநிலையிலிருக்க (maximum) வேண்டும். இதற்குப் பொருளாதாரம் நிறை வுடை வேலை வாய்ப்பு (full employment) மட்டத்தில் செயல்பட வேண்டும். இது சாதாரணமாக எளிதில் அடையமுடியாத நிலை.

(6) செலாவணி, வங்கிக் கடன் வகையரு (M+M′) இவற்றின் அளவுகளை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அளவிடுகின்றோம். ஆனால், அவற்றின் சுற்று வேகத்தை (V, V′) ஒரு கால அளவுடன் (மாதம், வருடம்) இணைத்துக் கணக்கிட வேண்டும். இவ்விரண்டு முறைகளில் கணித்த எண்களைப் பெருக்குவது (அஃதாவது M × V, M′ × V′ என்று) கணித முறையில் தவறு.

(7) நாட்டின் வருமானம் என்பது ஒரு நாட்டில் உற்பத்தியாகும் மொத்த துய்ப்புப் பொருள்களையும் சேவைகளையும் (Services) முறையே அவற்றின் விலைகளால் பெருக்கி வந்த தொகையைக் குறிக்கும். மேற் கண்ட சமன்பாட்டில் T என்பது நாட்டின் வருமானத்துக்கும் மேலான தொகையைக் குறிக்கிறது ; ஏனெனில் துய்ப்புப் பண்டங்கள் செய்யப் பயன்படும் மூலப் பொருள்கள், கச்சாப் பொருள்கள், பாதி பதனிட்ட பண்டங்கள் அனைத்தின் பரிவர்த்தனைகளையும் சேர்த்து T குறிப்பிடுகின்றன தன்றோ ?

(8) இந்தச் சமன்பாடு சராசரி விலையை மதிப்பீடு செய்கிறதே தவிர, பல்வேறு பண்டங்களின் விலைகளை யல்ல.

(9) பணம் அளிப்புக்கும் வட்டி வீதத்துக்கு முள்ள தொடர்பை இதிலிருந்து அறிய முடியாது.

(10) இது எல்லாப் பண்டமாற்றுகளும் முடிந்தபின்னுள்ள (expost) நிலையைக் காட்டுகின்றது. பணத்தின் அளவும் சுற்று வேகமும் கூட நடந்தபின்னுள்ள கணக்கு. இது ஒரு முழுதும் ஒத்த கூற்று (identity). பணம் செலாவணியில் நுழைந்து எவ்வாறு விலைவாசியை உயர்த்துகிறது என்ற செயலை (process) விளக்கவில்லை.

(11) பண அளிப்பு மாருதிருப்பினும், விருப்பங்கள் மாறுவதாலும், வருங்கால விலையைப் பற்றிய ஊகங்களாலும், வருமானங்கள் மாறுவதாலும் பயனுள்ள தேவை (effective demand) மாறும். அதனால் செலவும் மாறும். இக் கோட்பாடு உண்மையாகச் செயல்பட வேண்டுமானால் இரண்டு நிபந்தனைகள் நிறைவேற வேண்டும். (i) செலாவணி அதிகரித்தால், அதிகமான பணம் மக்கள் செலவில் சென்று கலந்து மொத்தச் செலவும் அந்த அளவுக்கு அதிகரிக்க வேண்டும். அப்படியின்றி அது முழுதும் அல்லது ஒரு பகுதி மக்கள் கையில் ரொக்கமாக முடங்கிக் கிடக்கக் கூடாது. (ii) அதிகரித்த செலவுக்கு ஏற்றபடி பண்டங்களின் அளிப்பு அதிகமாகக் கூடாது. இத்தனை குறைபாடுகள் இருப்பினும், இந்தக் கோட்பாட்டின் கருப்பொருளில் (core) ஒரு

பயனுள்ள உண்மை அடங்கிக் கிடக்கிறது என்று அறிஞர் ஒப்புக் கொள்கின்றனர்.

**கேம்பிரிட்ஜ் சமன்பாடு (Cambridge Equation)**

பணப் பரிமாணக் கோட்பாட்டை ரொக்க இருப்பு அணுகு முறையிலிருந்து (cash balance approach) ஆராய்கிறது கேம்பிரிட்ஜ் சமன்பாடு. கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மார்ஷல், பிகோ, ராபர்ட்சன் ஆகியோரும் ஸ்வீடன் நாட்டு அறிஞர் விக்சலும் (Wicksell) இந்தக் கோட்பாடு உருவாகுவதில் பங்கு பெற்றவர்கள். இது ஐரோப்பாவிலும் பிரிட்டனிலும் பிரபலமாக உள்ளது.

ஃபிஷரின் சமன்பாடு பண அளிப்புக்குப் பிரதான இடம் கொடுத்தது. கேம்பிரிட்ஜ் சமன்பாடு பணத்தேவைக்குப் பிரதான இடம் அளிக்கிறது. மக்கள், தொழிலதிபர், வணிகர் முதலானோர், தங்கள் கைவசம் சிறிய அல்லது பெரிய அளவில் ரொக்கப் பணம் வைத்துக் கொள்கின்றனர். அந்த ரொக்கம் பல காரணங்களால் அவசியமாகிறது. ஃபிஷர் சமன்பாட்டில் பண அளிப்பு மாறும் காரணங்களும் கேம்பிரிட்ஜ் சமன்பாட்டில் பணத்தேவை மாறும் காரணங்களும் ஆராயப் படுகின்றன. ரொக்க இருப்புக்குள்ள தேவையும், அதற்குள்ள பண அளிப்பும் பணத்தின் மதிப்பை நிர்ணயிக்கிறதென்பது கேம்பிரிட்ஜ் சமன்பாட்டின் அர்த்தம். இந்தச் சமன்பாடு கீழே தரப்பட்டிருக்கிறது.

$M = pkR$. இதில் M மொத்த ரொக்க இருப்புகள். k ஒரு பின்னம். சமூகம் விரும்பும் ரொக்க இருப்புக்கும் நாட்டின் மொத்த ஆக்கத்திற்கும் (real national product) உள்ள விதாச்சாரம். இந்த விதாச்சாரம் எப்படி கூடவும் குறையவும் செய்யலாம். ஒரு நாட்டில் மக்கள் தங்களது வருட வருமானத்தை ஆறு மாதத்துக் கொருமுறை செலவழிக்கின்றார்கள் என வைத்துக்கொள்வோம். அப்படியானால் k என்பது $\frac{1}{2}$ ஆகும். ஆனால் வருட வருமானத்தை மாதம் ஒருமுறை, 12 தடவைகளாகச் செலவழிக்கின்றார்களென்றால், k என்பது $\frac{1}{12}$ ஆகும். முதலில் கூறியதை விடப் பின் கூறிய நிலையில், (சமமான வருமானம் இருப்பினும்) குறைந்த ரொக்கம் வைத்துக்கொண்டிருப்பார்கள். எ.-கா. கந்தனுக்கு வருட வருமானம் ரூ. 3600. ஆறு மாதத்துக் கொருமுறை செலவு செய்வதனால், ஒவ்வொரு முறையும் ரூ. 1800 செலவு ஆகும். அவனே மாதம் ஒருமுறை செலவிட்டால் அவன் கையில் ரூ. 300-க்கு மேல் ரொக்கமாக ஒரு பொழுதும் இருக்க வேண்டிய அவசியமில்லை. மாதம் செலவிடும் பொழுது 100 அலகு (units) சாமான்கள் வாங்குவான் எனின், ஒரு அலகின் விலை ரூ. $300 \div 100 =$ ரூ. 3 ஆகும்.

R = நாட்டின் மொத்த ஆக்கம் (Real National Dividend). மக்கள் துய்க்கும் பண்டங்களின் தொகுதி. இதில் ஆடை சேரும்; பருத்தி சேராது. ரொட்டி சேரும்; கோதுமை மா சேராது.

p = நாட்டின் மொத்த ஆக்கத்தில் அலகு ஒன்றின் சராசரி விலை.

இச் சமன்பாடு விளக்கும் கருத்துகளை இனி ஆராய்வோம். நாட்டின் வருமானத்தில் ஒரு விதாச்சாரம் மக்கள் கையில் ரொக்கமாக வைத்துக் கொள்வர். இதைக் குறிப்பது k. ரொக்க வைப்பிலுள்ள ஆசையை அளக்கும். நான்கு தடவை மட்டும் சுற்றி நாட்டின் மொத்த ஆக்கத்தையும் மக்கள் துய்க்க வேண்டுமானால், தேவைப்படும் பணம் $\frac{1}{4}$ pR ஆகவிருக்கும். ஏனெனில் p × R என்பது நாட்டின் துய்ப்புப் பண்டங்களின் விலை.

ஓர் ஆண்டில் பணத்தின் சுற்றுவேகம் $V_i$ என்று வைத்துக் கொள்வோம். $V_i$ ஐ வருமானத்தின் சுற்று வேகம் (income velocity of circulation) என்று கூறுவர். ஆகவே $k = \frac{1}{V_i}$.

இனி இவ்விரண்டு சமன்பாடுகளுக்குமுள்ள வேற்றுமைகளைக் காண்போம். சமுதாயத்தில் மூலப்பொருள், கச்சா, இடைப்பொருள், பதனிட்ட பொருள்கள், துய்ப்புப் பண்டங்கள் அனைத்தின் விற்பனைகளை முழுவதையும் T குறிக்கும். ஆனால், கடைநிலையிலுள்ள துய்ப்புப் பண்டங்களை மட்டும்தான் R குறிக்கின்றது. R-க்கும் நாட்டின் மொத்த வருமானத்துக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. R-ஐச் சராசரி விலையினால் (p) பெருக்கினால் நாட்டின் வருமானம் (Y) கிடைக்கும். அஃதாவது Y = kR.

T-க்கும் நாட்டின் வருமானத்துக்கும் ஒரு சார்பும் காட்ட முடியாது.

∴பிஷரின் சமன்பாட்டில் மூலப்பொருள், இடைப்பொருள் (intermediate products), துய்ப்புப் பண்டங்கள் அனைத்தின் சராசரி விலையை P காட்டும். கேம்பிரிட்ஜ் சமன்பாட்டில் சிறிய p துய்ப்புப் பண்டங்களின் சராசரி விலையைத்தான் காட்டுகிறது. P-ம் p-ம் ஒரே திசையில் ஏறவும் இறங்கவும் செய்யும். ஆனால் அவையிரண்டும் வேறு வேறு விஷயங்கள். அதை தெளிவாக்கவே ஒன்றுக்குப் பெரிய P-ம் மற்றதுக்குச் சிறிய p-ம் குறிகளாக நிற்கின்றன.

சுற்று வேகம் (velocity) இரண்டு வகைப்படும்: (1) கொள்தல்–விற்றல் சுற்று வேகம் (Transactions velocity $V_T$) என்பது மொத்தக் கொள்தல்–விற்றல் எண்ணிக்கையைப் பணத்தால்

வகுப்பதால் $\left(\frac{T}{M}\right)$ கிடைக்கும். இந்த வகைச் சுற்று வேகத்தை ஃபிஷர் பயன்படுத்துகின்றார். (2) வருமானச் சுற்று வேகம் (Income velocity $V_y$) என்பது நாட்டின் மொத்த ஆக்கம் × சராசரி விலை ÷ மொத்தப் பணம் $\frac{pR}{M}$ என்று குறிப்பிடலாம். இந்த வகைச் சுற்று வேகத்தைக் கேம்பிரிட்ஜ் சமன்பாடு பயன் படுத்து கிறது.

இவ்விரண்டு சமன்பாடுகளும், விலைக்கும் பணத்தின் மதிப்புக்குமுள்ள சார்பு தலைகீழானது (inverse relation) என்ற அடிப்படையில் உருவானவை. இரண்டும் பணத்தின் அளிப்பு, அதன் சுற்று வேகம் ஆகியவை விலையை நிர்ணயிக்கும் காரணிகள் என்ற தத்துவத்தைச் சார்ந்தவை.

**கெயின்சின் பணக் கோட்பாடு (Keynesian Theory of Money)**

நாட்டின் மொத்தச் செலவும் மொத்த வருமானமுமே விலையை நிர்ணயிக்கின்றன. மேலும் அதன் ஏற்றத் தாழ்வுக்குக் காரணமாயிருக்கின்றன என்பது கெயின்சின் புதிய கருத்து. நாட்டின் மொத்த உற்பத்திக்கு (aggregate output) அதிகமாக நாட்டின் மொத்தச் செலவு (aggregate expenditure) வளருமாயின் விலைவாசி ஏறும். செலவு மிகுதியானால் தேவை மிகும். அளிப்பும் வளராவிட்டால், தேவை அளிப்பு விதிப்படி விலையேறும். ஆனால், பண்டங்களின் அளிப்பு (supply of commodities) அதிகமாகவும் கூடும். நாட்டின் ஆலைகளும் தொழிலாளர்களும் நிறைவுடை வேலை வாய்ப்பில் செயல் படாமலிருப்பது வரை, தேவை கூடினால், சப்ளையும் கூட வாய்ப்புண்டு. தேவைக்கு ஏற்றபடி அளிப்புக் கூடிக்கொண்டு போனால் விலையில் மாற்றமிருக்காது. நாட்டின் பொருளாதாரம் நிறைவுடை வேலை வாய்ப்பு (full employment) எய்தி விட்டால், தேவையின் அழுத்தத்தில் செலவு மிகும் பொழுது விலையேறும்.

இனி நாட்டின் வருமானம் எப்பொழுது பெருகும் என்பதைப் பார்ப்போம். பண அளிப்பு (money supply) மிகின், அங்காடி வட்டி வீதம் குறையும். இந்த வட்டி வீதத்தைவிட முதலீட்டினால் அதிக ஊதியம் எதிர்பார்க்கப்பட்டால் (project expectations), தொழிலதிபர் முதலீடு செய்வர். 'முதலீட்டுச் செலவு பெருக்கி' (investment multiplier) வேலை செய்யத் தொடங்கும். மொத்த வருமானம் பெருகும். ஆனால், முதலீட்டு ஊதிய எதிர்பார்ப்பு வட்டி வீதத்துக்குக் குறைவாயிருப்பின் முதலீடும் நடக்காது, 'பெருக்கியும் முடுக்கிவிடப்படாது, வருமானமும் பெருகாது.

இன்னொரு நிலைமையையும் இங்குக் குறிப்பிடவேண்டும். பண அளிப்பைப் பெருக்கு முன்னரே, அங்காடி வட்டி (minimum market rate of interest) வீதம் மிகவும் குறைந்த பட்ச அளவிலிருப்பதாக வைத்துக்கொண்டால், புதுப் பண அளிப்பு வட்டியை அதைவிடக் கீழ்நோக்கிச் செலுத்தாது. புதிய பண அளிப்பு வருவதனால் புதிய முதலீடும் ஏற்படாது. புதிய பண அளிப்பு முழுவதும் ரொக்க வைப்பைப் பெருக்கும்.

மேற்கூறிய சில நிபந்தனைக் குட்பட்டு, மொத்தச் செலவு மொத்த உற்பத்தியை விட அதிகமானால் விலையேறும் என்பது புரிகிறது. இதை விளக்கும்பொழுது பண அளிப்பு எம்மாதிரி உற்பத்தியைப் பாதிக்கும் என்பதைச் சுட்டிக்காட்டப் படுகிறது. பண அளிப்பு விலையை நேரடியாகப் பாதிக்கவில்லை என்பது தெரிகிறது. பண அளிப்பு அங்காடி வட்டியைக் குறைப்பதன் மூலம் முதலீட்டை ஊக்கி, 'பெருக்கி'யை முடுக்கி, மொத்த வருமானத்தை வளர்த்து, மொத்தச் செலவையும் அதிகப்படுத்தி, தேவையை அளிப்புக்கு மேல் ஓங்கச் செய்து விலை மட்டத்தை உயர்த்தும் என்பதும் தெளிவாகிறது. இந்தவிதமான தர்க்கத் தொடர் பலித்திட, இறுதி நிலைத் துய்ப்பு நாட்டம் (marginal propensity to consume), முதலீட்டுத் தேவை அட்டவணை (investment demand schedule), ரொக்கப் பணத்தில் விருப்பம் (liquidity preference) ஆகிய மூன்றும் இணைந்து அனுகூலமாகச் செயல்படவேண்டும்.

## முடிவுரை

பணப் பரிமாணக் கோட்பாடு பண அளிப்புக்கும் விலைவாசிக்கும் துலாக்கோல் போன்ற (mechanistic) நேர்முகத் தலைகீழ்த் தொடர்பைக் காட்டியது. கெயின்சின் கோட்பாடு பண வருமானம் மாறும்பொழுது மொத்தத் தேவையும் மொத்த அளிப்பும் (aggregate demand and aggregate supply) எவ்வாறு இயங்கும் என்று ஆய்ந்து அவற்றின் பயனாக விலை வாசியின் போக்கை விளக்குகிறது. பண அளிப்பு, வட்டி வீதம், முதலீடு இம் மூன்றுக்குமுள்ள சங்கிலித் தொடர்பைக் காட்டுகிறது. சம்பிரதாயப் பொருளாதாரத்தில் விலைக் கோட்பாடும் (price theory), பணக் கோட்பாடும் (theory of money) தனித் தனியாகப் பிரிந்து நின்றன. பணத்துக்குப் பொருளாக்கத்தைக் கூட்டவோ குறைக்கவோ சக்தி கிடையாது என்பது அதன் கொள்கை. ஆனால், கெயின்ஸ் பண அளிப்பு வட்டியைக் குறைத்து முதலீட்டைப் பெருக்கிப் பொருள் உற்பத்தியைப் பெருக்கவல்லது என்று எடுத்துக்காட்டிப் பணம் அலித் தன்மை (neutral) வாய்ந்தது அல்ல;

ஆக்கத் தன்மை (catalytic) வாய்ந்தது என்பதை வற்புறுத்துகின்றது. மேலும் பணம் வெறும் பண்டமாற்றுக் கருவியல்ல. அதன் அளிப்பு உற்பத்தியையும், வருமானத்தையும் பெருக்க வல்லது. விலையையும் தீர்மானிக்க வல்லது என்பதையும் சுட்டிக் காட்டுகின்றது. நீண்ட காலமாகத் தனித் தனியே விளக்கப் பட்ட விலைக் கோட்பாடும் பணக் கோட்பாடும் இணைந்தன; இரண்டு பிரிவுகளையும் சேர்த்து ஒரு பாலம் அமைத்த பெருமை கெயின்சைச் சாரும். ஆனாலும் கெயின்சின் பணக் கோட்பாடு எல்லாவற்றையும் மொத்தக் கணக்கில் (aggregate) நோக்கி ஆய்வதால் குறிப்பிட்ட பண்டங்களின் விலையேற்றத் தாழ்வுகளுக்கு விளக்கம் அளிக்கவில்லை.

# 26. வட்டிக் கோட்பாடுகள்

## (Theories of Interest)

வட்டிக் கோட்பாடுகளை விளக்குமுன், மொத்த வட்டி (gross interest), தூய வட்டி (pure interest) என்ற இரண்டின் வேறுபாடுகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஏழைக்குடியானவனொருவன் 4 ஆண்டுக்கு ரூ. 1000 கடன் வாங்குவதற்கு என்ன வட்டி கொடுக்க வேண்டி வரும் என்பதைப் பார்ப்போம். அக் கடனை 6 மாதங்களுக்குப் பின், 10 தவணைகளில், மூன்று மாதத்துக்கு ஒரு முறை ரூ. 100-ம் அன்று வரை சேர்ந்த வட்டியுமாகக் கொடுக்க உடன் படுவதாகக் கொள்வோம். கடன் கொடுப்பவன் இம் மாதிரிக் கடன் தரும் ஒவ்வொரு தொல்லைக்கும் ஈடாகச் சில சதங்கள் வட்டியை உயர்த்துவான்: (1) கடனாளி ஏழை என்பதால் முதலுக்கே மோசம் வருமோ என்ற அச்சத்தை, ஆபத்தைத் தவிர்க்க ஈடு 4 சதமும். (2) 10 தவணைகளாகப் பணத்தையும் வட்டியையும் பெறுவதெனின் அதற்கென்று கணக்கு எழுதக் கொள்ளக் கூலியாக 4 சதமும் (3) நான்கு ஆண்டுகளை நீண்ட காலமாகப் பதித்து, அந்தக் கால அளவுக்குத் தனது முதல் முழுவதையும் திரும்பப் பெறாமல் செய்யும் தியாகத்துக்கு 4 சதமும் அதிக வட்டி விரும்புவான். எதைவிட அதிக வட்டி? ஒரு பெரும் புள்ளிக்கு மூன்று மாத காலத்துக்கு, நஷ்ட ஈடு முதலிய தொல்லைகளொன்று மில்லாது கொடுக்கும் கடனுக்கு 6 சத வீதம் கேட்பானெனில், இந்த வட்டி வீதத்தைத் தூய வட்டி எனலாம். இந்தத் தூய வட்டியை விட அதிகம் கேட்பான். இந்த 6 சதத்துடன் மூன்று வகையில் ஈடு என்று விரும்புவது 12 சதம். எனவே, ஏழைக் குடியானவன் கொடுக்கும் வட்டி 18 சதம்; இதையே மொத்த வட்டி என்று கூறுவர். மொத்த வட்டியில் தூய வட்டி

யுடன் பல்வேறு அம்சங்கள் கலந்திருக்கின்றன. இப் பகுதியில் தரப்படும் வட்டிக் கோட்பாடுகள் அனைத்தும் தூய வட்டியைப் பற்றிய ஆராய்ச்சிகளின் முடிவுகள் என்பதை மனத்தில் கொள்ள வேண்டும்.

பண்டைக் காலம் தொட்டு இன்றுவரை தோன்றிய வட்டிக் கோட்பாடு பலப் பல. அவற்றில் முக்கியமான சிலவற்றைச் சுருக்கமாக விளக்குவதே இந்த அதிகாரத்தின் நோக்கம். அரிஸ்டாடிலும் அவர் பரம்பரையினரும் 'இயற்கை சாதனங்களும், மனித உழைப்பும் உற்பத்தித் திறன் உள்ளன ; ஆனால் பணம் ஒரு பண்டமாற்றுக் கருவி மட்டுமே ; அதற்கு மேலும் அதிகப் பணத்தை ஆக்கும் திறன் கிடையாது. எனவே, பணத்துக்கு வட்டி வாங்குவது இயற்கைக்கு மாறானது ; விரும்பத்தக்க செயலுமல்ல' என்று வாதித்தனர். இடைக்காலச் சமய சம்பிரதாயக் கோட்பாடுகள் இக் கருத்தை முழுமையாக ஆதரித்தது மட்டுமின்றி வேறு கிருத்துவ சமய மேற்கோள்களையும் காட்டி வட்டி வாங்குவது பாவச் செயல் என்று கூறின ; வட்டி வாங்குவதையும் அறவே தடுத்தன. இக் கருத்து ஒரு தத்துவமேயன்றி (philosophy), ஒரு காரண-காரியத் தொடர்பை விளக்கும் கோட்பாடு (theory) அல்ல.

## (1) உற்பத்தித் திறன் கோட்பாடு (Productivity Theory)

இயற்கை சாதனமாகிய நிலத்தைப் போல, முதலும் உற்பத்தித் திறன் வாய்ந்தது. நிலத்துக்கு நிலக்கிழார் வாரம் வாங்குவது போல, முதலுக்கு முதலாளி வட்டி வாங்க உரிமையுண்டு என்று இயற்கை வாதிகள் (physiocrats) கூறினர். பணத்தைக் கடனாகப் பெற்றவன், அதை ஒரு தொழிலில் முதலீடு செய்து மிக்க ஊதியம் பெற்றிடின், அவனுக்கு வட்டி கொடுக்கச் சக்தி பிறக்கிறது ; எனவே அவனிடமிருந்து வட்டி வாங்குவது நியாயமென்று இவர்கள் வாதித்தனர்.

இவ் வாதத்தில் சில குறைகளைக் காணலாம்: (1) முதலின் உற்பத்தித் திறன் வட்டிக்கு ஆதாரமென்றால், உற்பத்தித் திறனுக்கு ஏற்றவாறு வட்டி வீதம் மாறவேண்டுமன்றோ? ஆனால் தூயவட்டி ஒரு சமுதாயத்தில் ஒரு நேரத்தில் ஒரே வீதத்தில் இருப்பதன் காரணம் என்ன என்பதை இக் கோட்பாடு விளக்கவில்லை. (2) தொழில் நுண்ணியல் அறிவு (technology) முன்னேற்றமடையும்பொழுது, முதலின் உற்பத்தித் திறனும் உயர்வது கண்கூடு. ஆனால், நாடு முன்னேறும்பொழுது வட்டி வீதம் குறைந்து வருவதன் காரணம் என்ன என்பதற்கு விளக்கம் தரவில்லை. (3) கடனாளிதான் வாங்கிய கடனைத் துய்ப்புச் செலவுக்

துப் பயன் படுத்தினுல், அந்த முதலுக்கு உற்பத்தித் திறன் கடுகளவும் இருப்பதில்லை. ஆனுல், இத்தகைய கடனுக்கும் அங்காடியில் நிலவும் வட்டி கடனுளி கொடுக்க வேண்டுவதாகிறது. ஏன் கொடுக்கவேண்டும் என்ற விஞவிற்கு விடையில்லை. (4) வட்டியை உற்பத்தித் திறனுடன் இணைப்பதால் இக் கோட்பாடு தேவை முனையிலிருந்து (demand side) காரணம் தருகிறது. ஆனுல், ஏன் முதலாளி வட்டி கேட்கிருன் என்பதற்கு அளிப்பு முனையிலிருந்து (Supply Side) காரணம் இக் கோட்பாடு தரவில்லை யென்பது மற்ருெரு குறை.

(2) துய்ப்புத் தவிர்ப்புக் கோட்பாடு (Abstinence Theory)

தொன்மைப் பொருளாதார வழி நூல் ஆசிரியர்களில் ஒருவராகிய நாஸா ஸீனியர் என்பவர் இக் கோட்பாட்டை வகுத்துள்ளார். 1837-ல் அவருடைய நூல் வெளியிடப்பட்ட காலத்தில், ஆங்கில நாடு தொழில் துறையில் முன்னணியிலிருந்தது. பெரிய அளவில் தொழிலில் மக்கள் முதலீடு செய்து கொண்டிருந்தனர். 'ஸ்மித் தங்கள் உழைப்பினுலும் துன்பத்தினுலும் (toil and trouble) உழைப்பாளர் பண்டங்களை உண்டாக்குகிருர்கள்; அவ்வுழைப்புக்கும் மெய் வருத்தத்துக்கும் வெகுமதி கூலி' என்று நியாயம் கூறிப் போந்தார். ஆனுல், முதலாளிகள் உண்டுகளித்திருப்பவர்கள்; வருமானம் மிகுதியுள்ள அவர்கள் சேமிப்பது எளிது. இத்தகைய அபிப்பிராயம் நிலவியிருந்த சூழ் நிலையில் முதலாளிகளுக்கு நாட்டு வருமானத்தில் ஒரு பங்கு அளிக்க வேண்டுமானுல், அவர்களும் ஏதாவது ஒரு வகையில் 'வருந்துகிருர்கள்' என்று காட்ட வேண்டியது அவசியமாயிற்று. எனவே, துய்ப்புத் தவிர்ப்பினுல் (abstinence) முதல் உண்டாகிறது என்று ஸீனியர் குறிப்பிடுகிருர். கையில் கிடைக்கும் பணத்தை அந்த விஞடியிலேயே செலவழித்துப் பயன் துய்ப்பது தான் மனிதனின் இயற்கை பண்பு. ஆனுல், முதலாளி வகுப்பினர் அப்படிச் செலவழியாது, துய்க்கா விரதம் பூண்டு, பணத்தைச் சேமித்து வருகின்றனர். தொழிலாளர் உழைப்பு மெய் வருந்தக் கூலி தரும் எனின், முதலாளிகளின் துய்க்கா விரதமாகிய உள்ளத்தை வருத்தும் செயல் வெகுமதியாகப் பெறுவது வட்டி என்று ஸீனியர் வாதித்துள்ளார். துய்ப்புத் தவிர்ப்புக்குக் கொடுக்கப்படும் 'கூலி' தான் வட்டி என்பது ஸீனியர் கோட்பாட்டின் சாரம் ஆகும்.

இதிலுள்ள குறைபாடுகளை இனிக் கவனிப்போம்: (1) உள்ளத்தைத் துன்புறுத்தும் என்பது மிகுந்த செல்வம் படைத்த கோடீஸ்வரர்களுக்குப் பொருந்தாது. அவர்கள் ஒருவிதத் துய்ப்பையும் தவிர்க்காமல் ஏன் சகல போகங்களையும் அனுபவித்த

பின்னும், ஒருவித முயற்சியுமின்றி, துன்பமுமின்றிச் சேமிப்பைப் பெருக்குகிறார்கள். (2) கடன் அளிப்பு எப்படிச் சாத்தியப்படுகிறது. அதற்கு கடன் தருபவர்களுக்கு ஏன் வட்டி கொடுக்க வேண்டும் என்பது இதனால் விளங்குகிறது. ஆனால், வட்டி ஏன் கொடுக்கப்படுகிறது என்பதைத் தேவை முனையிலிருந்து (demand side) விளக்கவில்லை. (3) வெறும் துய்ப்புத் தவிர்ப்பு மட்டும் வட்டி பெறுவதற்கு வழி செய்யாது. சேமிப்பைத் தொழிலதிபர் முதலியோருக்குக் கடனாகக் கொடுத்தால்தான்—அஃதாவது முதலீடு (investment) செய்தால்தான்—வட்டி கிடைக்கும். சேமிப்புப் பற்றிக் கூறும் இக் கோட்பாடு அத்துடன் இன்றியமையாத முதலீட்டைப் பற்றியொன்றும் கூறாதது ஒரு குறை. ஒரு கஞ்சப் பேர்வழி பணத்தைத் திரட்டி இரும்புப் பெட்டியில் குவித்துக் காலையிலும் மாலையிலும் அதைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தானானால், அது அவனுக்கு எப்படி வட்டி நல்கும்? வட்டி ஊற்றெடுக்க அவசியமானது சேமிப்பு முதலீட்டுடன் இணைய வேண்டும்.

மேற்கூறிய குறைகளில் முதலாவதை நீக்கும் பொருட்டு ஆல்பிரட் மார்ஷல் 'துய்ப்புத் தவிர்ப்பு' என்னும் துன்ப நிகழ்ச்சிச் சொல்லுக்கு மாறாகக் 'காத்திருத்தல்' (waiting) என்ற துன்ப இன்பக் கலப்பில்லாத நடுநிலைச் சொல்லைப் பயன்படுத்துகிறார். கையில் கிடைக்கும் பணத்தை உடனே விரயம் செய்யாமல், காத்திருப்பதற்குப் பரிசு வட்டி என்பது மார்ஷலின் திருத்தம். இத் திருத்தமும் மற்ற இரண்டு குற்றச் சாட்டுகளுக்கும் இலக்காகவே யிருப்பதால், இதையும் திருப்திகரமான வட்டிக் கோட்பாடு என்று சொல்ல இயலாது.

**(3) காலக் கழிவு வட்டிக் கோட்பாடு (Agio theory)**

இதற்கு உளவியல் (psychological) வட்டிக் கோட்பாடு என்ற பெயரும் உண்டு. ஆதியில் ஆங்கில நிபுணர் ஜான் ரே (John Rae) என்பவரால் வகுக்கப்பட்ட இந்தக் கோட்பாட்டை ஆஸ்திரியப் பொருளாதார வல்லுநர், பாம்-பாவர்க் விழுமிய முறையில் விளக்கியுள்ளார். பொதுவாக, மக்கள் இப்பொழுது, இந்த இடத்தில் கிடைக்கும் பண்டங்களை, அடுத்த ஆண்டில்—வருங்காலத்தில் கிடைக்கும் அதே அளவுப் பண்டங்களை விட உயர்ந்தனவாக ஆர்வமாக விரும்பும் உள்ளம் படைத்தவர்கள். வருங்காலத்தில் அனுபவிக்கக் கூடிய நலனுக்கு ஒரு தாழ் மதிப்பீடு (under valuation) செய்கின்றனர். மனித உள்ளம் தூர திருஷ்டிக் கண்ணாடிக்கு நேர் விரோதமாகச் செயல்படுகின்றது. வருங்காலத்தில் கிடைப்பது சிறியதாகத் தோற்றம் அளிக்கிறது. இரண்டு பண்டங்களும் ஒரே அளவாயிருந்தாலும் இத் தாழ் மதிப்

பீட்டைச் சரிக்கட்ட வருங்காலப் பண்டங்களுக்குச் சில சதவிதம் அதிகப்படி (premium) சேர்க்க வேண்டியிருக்கிறது. இந்த அதிகப்படி அல்லது கட்டணமே வட்டி என்பது பாம்-பாவர்க்கின் கூற்று.

இம் மாதிரி வருங்காலப் பொருளை-பண்டங்கள், பணம் முதலியவற்றை-தாழ் மதிப்பீடு செய்வதற்கு, பாம்-பாவர்க் கூறும் காரணங்கள் வருமாறு: (1) வருங்காலம் நிகழ்காலம் போல் உறுதியில்லை. அது நிகழ்காலத்தை விட மங்கித் தெரிகின்றது. (2) நிகழ்காலத் தேவைகள் வருங்காலத் தேவைகளை விட அவசரமானவை, அழுத்தமானவை. (3) நிகழ்காலப் பண்டங்களுக்குத் தொழில் நுட்ப முறையில் ஓர் உயர்வு (technical superiority) இருக்கிறது.

**(4) காலத் தேர்வு வட்டிக் கோட்பாடு (Time preference Theory of of Interest)**

புகழ் பெற்ற அமெரிக்கப் பொருளாதார அறிஞர் இர்விங் ஃபிஷர் (Irving Fisher) என்பவரால் இக் கோட்பாடு விளக்கப் பட்டுள்ளது. உளவியல் கோட்பாட்டில் நாம் கண்ட மக்களின் நிகழ்காலப் பண்டங்களின் மேலுள்ள தீவிர நாட்டத்தை ஃபிஷர் காலத் தேர்வு (time preference) என்று குறிப்பிடுகிறார். அத்துடன் அவர் நின்றுவிடவில்லை. காலத் தேர்வுக்குரிய கட்டணத்தை என்ன காரணங்கள் தீர்மானிக்கின்றன என்பதையும் அவர் ஆய்கிறார்: (1) ஒரு மனிதனின் கல்வி, பண்பாடு, பொறுமை முதலியன காலத் தேர்வைப் பாதிக்கும். குழந்தை மனப்பான்மையுள்ள முதியோரும் மகளிரும் உண்டு; இவர்கள் உடனடியாக எதையும் துய்ப்பதற்குத் துடித்துக்கொண்டிருப்பவர்கள். நாளை என்பது பற்றி அவர்களுக்குக் கவலை கிடையாது. (2) பெரிய வருமானமுள்ளவனுக்குக் காலத் தேர்வு விதம் (Rate of Time Preference) குறைவாக விருக்கும். குறைந்த வருமானமுள்ள ஏழைக்கு அது உயர்ந்திருக்கும். (3) வருங்காலம் பற்றி ஓர் உறுதி இருப்பின், ஒருவன் இன்ப நோக்குடையவனாயின் (optimist) காலத் தேர்வு விதம் குறையும். அதைப் பற்றி ஐயப்பாடும் துன்ப நோக்கும் (pessimism) ('நான் அடுத்த ஆண்டு வரை எங்கே வாழப்போகிறேன்' என்ற அச்சம்) இருப்பின், காலத் தேர்வு விதம் உயரும். (4) வருங்காலத்தில் கிடைக்கக் கூடிய வருமான உயர்வு-தாழ்வு பற்றிய எண்ணமும் காலத் தேர்வு விதத்தைப் பாதிக்கும். இந்தக் கோட்பாட்டில் காணும் குறைகளைப் பார்ப்போம்: (1) காலத் தேர்வு மாத்திரம் வட்டியை நிர்ணயிக்கவில்லை. அது முக்கியமான, ஆனால் போதுமான, காரணம் (significant but not sufficient) அல்ல. மற்றும் பல

காரணங்கள் இருப்பதை இக் கோட்பாடு காட்டவில்லை. (2) காலப் போக்கில், வருமானத்தில் ஏற்றத் தாழ்வு, சமூகச் சூழ்நிலையில் மாற்றம் முதலியன மக்களின் மனப்பான்மையை மாற்றக் கூடும் என்பதை இக் கோட்பாடு வலியுறுத்தவில்லை. (3) பணத்தின் மதிப்பு மாருமலிருப்பதாகக் கருதும் இக் கோட்பாடு நடைமுறைக்கு ஒத்ததாயில்லை.

(5) தொன்மை வட்டிக் கோட்பாடு (Classical Theory of Interest)

இதை முதலின் அளிப்பு–தேவைக் கோட்பாடு (Supply and Demand) என்றும் கூறுவர். நிலத்தைப் பயன்படுத்தக் கொடுக்கும் விலை வாரம்; உழைப்பைப் பயன்படுத்தக் கொடுக்கும் விலை கூலி; முதலைப் பயன்படுத்தக் கொடுக்கும் விலை வட்டி. இம் மாதிரி வாதித்து வட்டி கோட்பாட்டை, விலைக் கோட்பாட்டின் ஓர் அவதாரம் என்று தொன்மை நூலோர் கூறுவர். பிற பண்டங்களின் விலை போலவே, வட்டியும் முதலின் அளிப்பு, தேவை இரண்டையும் பொறுத்திருக்கும். தேவை, அளிப்புச் சக்திகளின் இயக்கத்திஞல் ஏற்படும் சமன்பாடு வட்டி வீதத்தைத் தீர்மானிக்கும் என்பது இக் கோட்பாட்டின் முடிவு.

இக் கோட்பாட்டிலும் சில குறைகளைப் பின் வந்த அறிஞர் காட்டுகின்றனர்: (1) இக் கோட்பாட்டின்படி, வட்டி வீதம் மாறுவதால் சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் சமன்பாடு ஏற்படுகிறது. இதை ஒத்துக் கொள்ளவில்லை கெயின்ஸ். அவர் சேமிப்பு–முதலீட்டுச் சமன்பாடு நாட்டின் வருமானம் மாறுவதால் ஏற்படுகிறது என்று காட்டுகிருர். (இது அதி. 23-(ii)-ல் விளக்கப்பட்டிருக்கிறது.) (2) வட்டி வீதத்தை நிர்ணயிப்பதில் தற்காலத்தில் வங்கிக் கடன் (Bank Credit) பெரும் பங்கு கொள்கிறது. இக் கோட்பாடு இதைச் சுட்டிக் காட்டவேயில்லை. (3) இக் கோட்பாட்டின்படி முதலீடு பெருகச் சேமிப்புப் பெருக வேண்டும்; சேமிப்புப் பெருக, துய்ப்புச் செலவு குறுகவேண்டும். துய்ப்புச் செலவு குறுகுங் காலங்களில், பண்டங்களின் விலைவாசி குறைந்து, இலாபமும் குறைந்து நஷ்டமாக மாறும் சூழ்நிலை உண்டாகுமே? இச் சூழ் நிலையில் தொழிலதிபர்களுக்கு எவ்வாறு முதலீடு செய்யத் துணிச்சல் ஏற்படும்? இக் கேள்வி இக் கோட்பாட்டின் அக முரண்பாட்டைக் (internal contradiction) காட்டுகின்றது.

(6) கடன் தரும் நிதிகள் கோட்பாடு (Loanable Funds Theory)

ஸ்வீடன் நாட்டுப் பொருளாதார நிபுணர், நட் விக்ஸலை (Knut Wicksell) இந்தக் கோட்பாட்டின் தந்தை எனலாம். ஸ்வீடன் குழு உறுப்பினர்களாகிய மிர்டால் (Myrdal), லிண்டால்

(Lindahl), ஓலின் (Ohlin) என்போரும், பிரிட்டிஷ் பொருளாதார அறிஞர் டென்னிஸ் ராபர்ட்சனும் (Dennis Robertson) இக் கோட்பாட்டை நுண்ணிய முறையில் பண்படுத்தியவர் ஆவர். இதைத் தொன்மை வட்டிக் கோட்பாட்டின் புதிய பதிப்பு என லாம். ஏனெனில் இதுவும் (i) வட்டி முதலின் உபயோகத்துக் குப் பெறும் விலை, (ii) வட்டி முதலின் அளிப்பு-தேவைச் சக்தி களால் நிர்ணயிக்கப்படும் எனும் இரண்டு கருப்பொருள்களின் மேல் எழுப்பிய கட்டுக் கோப்புதான். மேலும் சில ஒற்றுமைகள் வருமாறு: (iii) கடன் தரும் நிதிகளின் அளிப்பு அட்டவணை (Supply Schedule) வட்டி ஏறும்பொழுது அளிப்பு விரிவடைவ தாகக் காட்டுகிறது. அளிப்பும் வட்டியும் நேர் தொடர்பு (positive correlation) உள்ளவை. (iv) தேவை அட்டவணை வட்டி ஏறும்பொழுது தேவை குறைவதையும், வட்டி குறையும் பொழுது, தேவை கூடுவதையும் காட்டுகிறது. தேவையும் வட்டியும் எதிர்மறைத் தொடர்பு (inverse or negative correlation) உள்ளவை. (v) இவ்விரு அட்டவணைகளின் வளைகோடுகள் ஒன்றையொன்று வெட்டிச் செல்லுமிடமாகிய சமன்பாடு வட் டியை நிர்ணயிக்கிறது. இவை யெல்லாம் தொன்மை நூல் மறு மலர்ச்சி கண்ட உண்மைகளே.

இந்தக் கோட்பாட்டின் புதிய அம்சங்கள்தான் என்ன? தற் காலப் பொருளாதார இயலில், சமுதாயத்தைத் தொழில் துறை, குடும்பத்துறை (household sector), அரசினர் துறை என்று மூன்று பிரிவுகளாக்கி ஆயும் மரபு ஏற்பட்டுள்ளது. இம் மரபின் வழியே ஒவ்வொரு துறையிலும் முதலின் அளிப்பு, தேவை சக்தி கள் இயங்கும் முறையை ராபர்ட்சன் முதலானோர் ஆய்கின்றனர்.

ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டின் மேற்கூறிய மூன்று பிரிவுகளிலும் முதல் திரண்டுகொண்டும் முதலீடு ஆகிக் கொண்டும் வருவதைக் காண்கிறோம். (1) தொழில் துறையில் தற்காலத்தில் நிறுவனங்கள் தாங்கள் சம்பாதிக்கும் ஊதியத்தில் ஒரு பகுதியை மட்டுமே பங்குதாரர்களுக்குப் பகிர்ந்தளிக்கின்றன. அடுத்த பகுதியை ஒதுக்கு நிதியாகச் (reserve fund) சேர்த்து, நிறுவனங்களைப் புதுப்பிக்கவும், பெரிதாக்கவும், புதியன துவக்க வும் பயன்படுத்துகின்றன. இந்த ஒதுக்கு நிதி நாட்டின் பண அங்காடியில் வந்து நேரடியாகக் கலக்காவிடினும், மொத்த முதல் அளிப்பில், இது மறைமுகமாகப் பங்கு பெறுகின்றது. (2) குடும்பத் துறையில், வருமானம் பெருகிவருங் காலங்களில் சேமிக்கப்படும் பணத்தில், ஒரு பகுதி அன்றாடச் செலவு, எச்ச ரிக்கை ஊக வாணிக நோக்கங்களை நிறைவு செய்தல் ஆகிய வற்றிற்குக் குடும்பத் தலைவர்கள் ரொக்கமாக வைத்துக்கொள்வர்

(இம் மூன்று நோக்கங்களேயும் பற்றிய விளக்கவுரையை அதி. 23-(ii)-ல் காண்க). எஞ்சிய சேமிப்புப் பணம் அங்காடியில் அளிப்பு நிலேயை வலுப்படுத்துகின்றது. (3) அரசினர் துறை கணிசமான அளவு அளிப்பு நிலேயில் பங்கு பெறுகின்றது. தற் காலத்தில், வங்கித் துறை அரசினர் ஆட்சிக்கும் கட்டுப்பாட் டுக்கும் உட்பட்டதாகையினுல், பணக் கைகோள் முறைகளின் வாயிலாக வங்கிக் கடனே (bank credit) பெரிய அளவுக்குக் கூட்டவும் குறைக்கவும் அரசு சக்தி வாய்ந்ததாகத் திகழ்கிறது. பண அளிப்பைப் பெருக்க அரசுக்குச் சக்தியும் வாய்ப்பும் பெரிய அளவில் வாய்த்திருக்கிறது. அங்காடி வட்டி வீதம் குறைவாக இருந்தால், இம் மூன்று துறைகளிலும் நிதி அளிப்பு (supply of funds) குறைவாகும்; வட்டி வீதம் ஏறினுல் நிதி அளிப்பு அதிக மாகும். அளிப்பு வளேகோடு மூன்று துறைகளிலும் வலது பக்கம் மேல் நோக்கிச் செல்லும்.

அடுத்தபடியாகத் தேவை நிலேயைப் பார்ப்போம். நிறுவ னங்கள் வளர்ச்சிக்கு முதல் தேவைப்படுகிறது. வட்டி வீதம் உயர்ந்தால் தேவை குறையும்; வட்டி வீதம் தாழ்ந்தால் தேவை மிகுதியாகும். தேவை வளேகோடு வலது பக்கம் கீழ் நோக்கிச் செல்லும். குடும்பங்கள் சைக்கிள், ரேடியோ, பம்பு செட்டுகள் முதலிய உறுதியான நுகர்வு, உற்பத்திப் பொருள்கள் வாங்க வும், வீடு, மாட்டுத் தொழு, நெற் களஞ்சியம் முதலியன கட்டவும் கடன் வாங்க விரும்புகின்றன. இவற்றின் தேவையும் வட்டி ஏறினுல் குறைந்துவிடும்; குறைந்தால் அதிகமாகும். எனவே, குடும்பத் துறையின் தேவை வளேகோடும் வலது பக்கம் கீழ் நோக்கிச் செல்லும். கடைசியாக அரசினரும் வட்டி வீதம் குறைந்திருந்தால் புதிய நீர்ப்பாசன, மின் நிலேயத் திட்டங்கள், சாலேகள், மருத்துவ மனேகள் முதலியவற்றைப் பெரிய அளவில் தொடங்குவர். வட்டி வீதம் உயர்ந்துவிடின், திட்டங்களேக் குறைத்துவிடுவர் அல்லது ஒத்திப் போடுவர். எனவே, அரசி னர் தேவைக் கோடும் வலது பக்கம் கீழ் நோக்கியே செல்லும். மூன்று தேவைக் கோடுகளும் ஒரே மாதிரி வலது திசையில் கீழ் நோக்கிச் சரிவதால், மூன்று தேவைகளேயும் கூட்டினுல் முத லுக்கு ஏற்படும் மொத்தத் தேவையைக் கணக்கிடலாம். மொத்த அளிப்பு, தேவை வளேகோடுகள் வெட்டுமிடம் அங்காடி வட்டி வீதத்தைக் காட்டும். இம் மாதிரி இக் கோட்பாடு கட்டுப்பா டில்லாத முதலீட்டு அங்காடியில் (free investment market) வட்டி எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது? என்ன நோக்கங்கள், என்ன சக்திகள் செயல்படுகின்றன வென்பதை விளக்குகின்றது.

இனி இந்தக் கோட்பாட்டுக்கும் தற்கால நடைமுறைக்கும் உள்ள வேறுபாடுகளைப் பார்ப்போம். பெரும்பான்மை நாடுகளில் அரசினர் குறைந்த வட்டி வீதத்தைச் செயல் படுத்துவதில் ஆர்வமும் அக்கறையும் காட்டுகின்றனர். ஏனெனில் போர், வளர்ச்சித் திட்டங்கள் முதலியவற்றின் பொருட்டு அரசினர் பட்டிருக்கும் கடன் ஏராளம். இந்தக் கடனுக்குக் கொடுக்க வேண்டிய வட்டிப் பளு அரசின் செலவில் பெரிய பங்கை ஆக்கிரமித்து வருகிறது. வட்டி வீதம் குறையுமாயின், இந்தக் கடனுக்கு கொடுக்கவேண்டிய வட்டிச் செலவு கணிசமாகக் குறையுமன்றோ? இதுவே அரசினர்க்குத் தாழ்ந்த வட்டி வீதத்தில் உள்ள மோகத்தின் காரணம். இந்நோக்கத்துடன் அரசினர் மைய வங்கியின் வட்டி வீதத்தைக் கட்டுப் படுத்துவதுண்டு. மேலும் வட்டி வீதம் கூடினால், அரசாங்கக் கடன் பத்திரங்களின் அங்காடி விலையில் படுவீழ்ச்சி ஏற்படும். இதையும் குறைந்த வட்டி வீதம் தடுத்துப் பத்திரங்களின் மதிப்பைக் காப்பாற்றும்; இதனால் அரசின் மதிப்பும் காப்பாற்றப்படும்.

வட்டி குறைவாக இருப்பின் தொழில் நிறுவனங்கள் பெரிய அளவில் வளர்ச்சித் திட்டங்களை வகுத்துச் செயல் படுத்தப் பெரிய அளவில் கடன் வாங்க முன் வரும். அவற்றின் முதலீட்டுச் செலவு உயரும்; வருமானம் பெருக்கி (income multiplier) வேகமாகச் செயலாற்றும் (இதன் விளக்கவுரையை அதி. 23-(ii)-ல் காண்க). இதனால் நாட்டின் பொருளாதாரத்தைப் பண வீக்கம் பீடிக்கும். அரசினர் கடன் பளு குறையும் என்பது லாபக் கணக்கு; பண வீக்கம் என்பது நஷ்டக் கணக்கு. பின்னதைத் தடுக்க, அரசினர் வட்டி வீதத்தை உயர்த்தினால், தொழில் வளர்ச்சி பாதிக்கப்படும்; உற்பத்தி குறையும்; வேலையின்மை வளரும். இவ்விரண்டு விதமான தீய விளைவுகளும் வராமல் காத்திட, வட்டி வீதத்தை மிக்க நுட்ப அறிவுடனும் தீர்க்க தரிசனத்துடனும் அரசினர் கட்டுப்படுத்தல் இன்றியமையாதது.

(7) ரொக்க விருப்பக் கோட்பாடு (Liquidity Preference Theory of interest).

இக் கோட்பாட்டை அதி. 23-(ii)-ல் முழுமையாக விளக்கியுள்ளோம்.

இத்தனை கோட்பாடுகள் வகுக்கப்பட்டிருப்பினும், ஒரு வட்டிக் கோட்பாடும் முழு விளக்கம் தருகிறது என்று கூறமுடியாது. ஒன்று மாத்திரம் திடமாகக் கூறலாம். 'பணத்துக்கு உற்பத்தித் திறன் கிடையாது' என்ற அரிஸ்டாடிலின் பண்டைக்காலக் கூற்றிலிருந்து, இன்றைய வட்டிக் கோட்பாடு புரட்சி

கரமான மாற்றம் அடைந்து வெகு தூரம் பயணம் செய்து விட்டது. பணத்தின் அளிப்பு (money supply) பெருகினுல், வட்டி விதம் குறையும்; வட்டி விதம் குறைந்தால், புத்தம் புதிய தொழில்கள் பல துவக்கப்படும். நாட்டின் உற்பத்தி, வேலை வாய்ப்பு, வருமானம் எல்லாம் பெருகும். எனவே, பணம் மலடு அல்ல; ஒரு சக்தி வாய்ந்த இயக்கி (a powerful catalyst) என்பது தற்காலப் பொருளாதாரம் கண்ட பேருண்மை. வட்டி வாங்கு வது பாவச் செயல் என்பது பழங்கதையாக, பயனற்ற கூற்ருகி விட்டது.

எனினும் பணம் ஆபத்தான கருவி. 1920-க்குப்பின் ஜர்மனி யின் பொருளாதாரம் கொடிய பண வீக்கத்தினுல் சீரழிந்து ஹிட்லரின் கொடுங்கோலாட்சிக்கு விளைநிலமானது வரலாற்றில் ஒரு பெரும் படிப்பினை. இதை மனத்திற் கொண்டு பணத்தை ஆற்றலுடன் கையாளுவது ஓர் அருங்கலை.

## 27. இலாபக் கோட்பாடுகள்

(Theories of Profit)

வட்டியைப் போலவே, இலாபத்திலும் இருவகையுண்டு: (i) தூய இலாபம், (ii) மொத்த இலாபம். தூய இலாபத்தைத் தவிர, மொத்த இலாபத்தில் வேறு சில அம்சங்கள் உள்ளன; கொள் வதில் அல்லது விற்பதில் சர்வாதீனம், அனுகூலமான சூழ்நிலை (conjunctural), எதிர்பாராத விளைவுகள் (wind fall), முயலுநரின் (entrepreneurs) சொந்த நிலத்தின் வாரம், சொந்த முதலின் வட்டி, சொந்த உழைப்பின் கூலி ஆகியவற்ருல் கிடைக்கும் வருமானங்கள் குறிப்பிடத்தக்கவை. எவ்வாறு இலாபம் உண்டா கிறது. எத்தன்மையுள்ளோர் அதைப் பெறுவர் என்ற ஆராய்ச்சி, கோட்பாடுகள் எல்லாம் தூய அல்லது நிகர இலாபத்தைப் பற்றி யதே என்பதை நினைவில் கொள்க.

### (1) வாரம்சார் இலாபக் கோட்பாடு (Rent theory of profit)

இதை வேறுபாட்டுயர்வுக் கோட்பாடு (differential theory) என்றும் கூறுவர். முதலாவதாக நாஸா ஸீனியர் தமது 'பொருளாதார இயலின் சுருக்கம்' (Outline of Political Economy, 1836) எனும் நூலில் குறிப்பிட்ட கருத்தை, ஜே. எஸ். மில் பின்னர் தமது நூலில் (1848) விரித்தும் தொகுத்தும் உரைத்தார். கடைசியாக இக் கோட்பாட்டை விழுமிய முறை

யில் வகுத்தவர் அமெரிக்கப் பொருளாதார வல்லுநர் எப்ஃ. ஏ. வாக்கர் (F. A. Walker). நிலங்களின் தரத்துக்குத் தக்கவாறு வாரம் கிடைப்பதுபோல், தொழில் முனைவர்களின் (entrepreneurs) திறமைக்குத் தக்கவாறு இலாபம் கிடைக்கும் என்பது வாக்கரின் கூற்று. திறமை மிக்க முனைவர் ஏராளமாகவும், திறமை குறைந்தவர் குறைந்த அளவிலும் இலாபம் பெறுவர். ஆனால் இறுதிநிலை முனைவர் (marginal entrepreneur) சுன்ன இலாபமே (zero profit) பெறுவர் (இறுதிநிலை நிலத்தை ஒப்பு நோக்குக). இலாபம் திறமையின் வேறுபாட்டினால் உண்டாவதால், அதைத் திறமையுயர்வின் வாரம் (rent of superior ability) என்று வாக்கர் கூறியுள்ளார். இத்தகைய திறமையுயர்வின் வாரம் மொத்தக் கூலியிலும், மொத்த வட்டியிலும் காணக் கிடக்கிறது என்று வாக்கர் விளக்குகின்றார். ஆகவே இலாபம் வாரத்தின் பல தோற்றங்களில்–பல கிளைகளில்–ஒன்று (species of a larger genus), 'வாரம் பேரினம், இலாபம் அதில் ஓர் இனம்' என்பது அவருடைய முடிவு.

இக் கோட்பாட்டில் கண்டுள்ள குறைபாடுகளில் நான்கை மட்டும் கவனிப்போம்: (i) இலாபத்தை வாரத்தோடு ஒப்பிடுதல் பொருந்தாது என்றார் மார்ஷல். சில முயலுநர் இலாபத்துக்கு மாறாக நட்டத்தை அடைவதுண்டு. ஆனால் ஒரு நிலக்கிழாரும் குத்தகைக்கு அடைந்த நிலத்திலிருந்து நட்டத்தை ஏற்பதில்லையே! வாரம் என்றைக்கும் கூட்டல் குறியின் பின்தான் வரும்; ஆனால் இலாபத்தின் முன் கூட்டல் குறியும் வரும்; கழித்தல் குறியும் வரும். (ii) இலாபம் சர்வாதீனத்தினாலும், வாங்குபவர்களைச் சுரண்டுவதாலும் கிட்டலாம். முயலுநரின் திறமையுயர்வு மட்டும் காரணமன்று. (iii) தற்கால ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனிகளின் பங்குதாரர்கள் திறமை உயர்ந்திருப்பினும் தாழ்ந்திருப்பினும் பங்குகளுக்கு ஒரே அளவு இலாபம் பெறுகின்றனர். எனவே, திறமைதான் இலாபத்துக்குக் காரணம் என்று ஒரே காரணமாகக் கூறுவது சரியல்ல. (iv) இலாபத்தில் காணும் உயர்வு தாழ்வுக்கு விளக்கம் கூறுகிறதே தவிர, இக் கோட்பாடு எவ்வாறு இலாபம் சுரக்கிறது என்பதை விளக்கவில்லை.

### (2) இயங்கு நிலை இலாபக் கோட்பாடு (Dynamic Theory of profit)

சமுதாயம் எப்பொழுதும் இயங்கு நிலையில் (dynamic) இருப்பதால் தான் லாபம் சுரக்கிறது என்று அமெரிக்கப் பொருளாதார நிபுணர் ஜே. பி. கிளார்க் (J. B. Clark) விளக்கம் தருகிறார். மக்கள் தொகை, மக்களின் விருப்பு வெறுப்புகள் (tastes), உற்பத்தி, வருமானம், தொழில் நுட்ப அறிவு, முதலீடு, சேமிப்பு

முதலியன அனைத்தும் அளவில் இடைவிடாது மாறிக்கொண்டே யிருப்பதால், பண்டங்களுக்குள்ள தேவைக்கும் அளிப்புக்குமுள்ள சமன்பாடு கெடுவதற்கு ஏதுவாகிறது. பெரும்பான்மை உற்பத்தி யாளரின் தவறுதலான மதிப்பீட்டினுல் அளிப்புத் தேவையை விடக் குறையுமாயின், உற்பத்தி செய்த சிலர் மிகுதி இலாபம் அடைவர். சில முயலுநர் புதிய இயந்திரங்கள் மார்க்கட்டுக்கு வந்தவுடனேயே, அவற்றை வாங்கி உபயோகித்து, அடக்கச் செலவைக் குறைத்திடுவர்; இலாபத்தைப் பெருக்கிடுவர். பொரு ளாதாரச் சக்திகள் எப்பொழுதும் சமூகத்தில் ஒரு சலனம் உண் டாக்குவதனுல், இலாபம் உண்டாகிறது என்பதை இவ்வாறு கிளார்க் விளக்கியுள்ளார். இதை ஒப்புக்கொள்ளவில்லை பிரான்க் நைட். மாறுதல்கள் இருப்பினும், என்ன அளவில் மாறுதல்கள் நேரக்கூடும், என்ன திசையில்–கீழ் நோக்கி அல்லது மேல் நோக்கி–மாறுதல் ஏற்படும் என்று ஊகித்துவிட முடியுமானுல், முயலுநர்கள் அந்த மாறுதல்களுக்குத் தக்கபடி உற்பத்தியை மாற்றியமைக்க முடியும். தேவை–அளிப்புச் சமன்பாடு சக்திகள் விலையை நிர்ணயிக்கும்; கிளார்க் கூறிய வகையில் இலாபம் உண் டாவது தடைபடும் என்கிருர். நைட்டின் கோட்பாட்டைச் சற்று நேரத்தில் ஆராய்வோம். அப்பொழுது நைட்டின் கண்டனத்தை முழுமையாகப் புரிந்து கொள்ளலாம்.

### (3) ஆபத்து ஏற்புக் கோட்பாடு (Risk-Bearing theory of profit)

1907-ல் வெளியிடப்பட்ட தமது நூலில், எப்ஃ. பி. ஹாலி (F. B. Hauley), முனைவரின் சிறப்புப் பணி ஆபத்தை ஏற்பது (risk-bearing) என்று குறிப்பிட்டிருக்கிருர். முயற்சி மட்டுமே உற் பத்திக் காரணி; நிலம், முதல், உழைப்பு ஆகிய மூன்றும் உற்பத் திக் கருவிகள்தாம் என்ற வேறுபாட்டையும் சுட்டிக் காட்டியுள் ளார். நிலச்சுவானுக்கு வாரமும், முதலுக்கு வட்டியும், உழைப் புக்குக் கூலியும் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டுப் பண்ட உற் பத்தி நடக்கும் காலத்திலேயே இம் மூன்று கருவிகளைத் தருபவர் களுக்கும் குறிப்பிட்ட ஈட்டங்கள் கொடுத்து விடப்படுகின்றன. உற்பத்தியான பண்டங்கள் விற்று முதலான பின்னரே, அதுவும் அடக்கச் செலவுக்கு உயர்ந்து அங்காடி விலை நிலவினுல், இலாபம் கிட்டும்; இன்றேல், முனைவர் அடைவது நட்டமே. விற்று முத லில் கொள் முதல் போக எஞ்சியதே (residue) இலாபம். ஆபத்து மற்ற மூவரையும் அணுகாது. முயலுநர் தாமே உத்தரவாதமாக நிற்பதுதான் அவருடைய தனிப் பண்பு. இந்த ஆபத்தை ஏற் கும் பணிக்குக் கிடைக்கும் வெகுமதியே இலாபம். இதுவே ஹாலி யின் விளக்கம். இந்தக் கோட்பாட்டில் குறை காண்பவர் ‘ ஆபத்து ஏற்பதினுல் மட்டும் இலாபம் மிளிர்வதில்லை; சில வகை

ஆபத்துகளுக்கு இன்ஷுரன்ஸ் காப்பு இருக்கிறதே?' என்றும் வினவுகின்றனர்.

(4) உறுதியின்மை ஏற்புக் கோட்பாடு (Uncertainty-bearing theory of profit)

இந்தக் கோட்பாட்டை வகுத்தவர் பிரபல அமெரிக்கப் பொருளாதார நிபுணர் பிரான்க் எச். நைட். இலாபம் ஆபத்து ஏற்பிற்கு அல்ல; உறுதியின்மை ஏற்புக்குத்தான் வெகுமதி என்பது நைட்டின் கூற்று. வருங்காலத்தைப் பற்றிய உறுதியின்மையை நைட் இருவகைப் படுத்திக் காட்டுகிறார்: (i) எதிர்பார்க்கக் கூடிய, இன்ஷுரன்ஸ் பாதுகாப்புக் கிடைக்கக் கூடிய, ஆபத்துகள். உதாரணமாகத் தீவிபத்து, மூலப் பொருள்களில் விலையேற்றத் தாழ்வு. (ii) போர், பூகம்பம், அரசின் வரி விதிப்பு, கைக்கோள் மாற்றம், வணிகச் சகடம், வான் பொய்த்தல் போன்ற எதிர்பார்க்க முடியாத, முன்கூட்டியே காப்பு முறைகளை அனுசரிக்க முடியாத விபத்துகள். இரண்டாவது வகை விபத்துகளை உறுதியின்மையினால் விளைவது என்று ஆசிரியர் கூறுகிறார். இவற்றால் விளையக்கூடிய நட்டங்களுக்கு இன்ஷுரன்ஸ் காப்புக் கிடையாது. வேறு நிவர்த்தி முறையும் இல்லை. இவற்றை எதிர்த்து தன் மதிநுட்பத்தினாலும் தொழில் திறமையினாலும் எவன் வெற்றியுடன் சமாளிக்கின்றானோ, அவன் மிக்க இலாபம் அடைவான். இதுதான் உறுதியின்மைக் கோட்பாட்டின் மையக் கருத்து.

இந்தக் கோட்பாட்டிலும் குற்றம் காண்கின்றனர் விமர்சகர்கள். உறுதியின்மையைச் சமாளித்து, வருங்காலத்தை நிச்சயமாக மதிப்பிட்டு, அம் மதிப்புக்குத் தக்கபடி உற்பத்தியை மாற்றியமைக்கும் சக்தி–உறுதியின்மை ஏற்கும் ஆற்றல்–ஒரு சமூகத்தில் பலருக்கு இருக்கக் கூடும். ஆனால், அவர்கள் அனைவருக்கும் நிதி வசதி, முழுமையான தொழில் சுதந்திரம், தொழிலைத் துவக்க வாய்ப்பு (opportunity to enter a trade or industry) முதலியன கிடைக்காமலிருக்கின்றன. இவையெல்லாம் இலாபம் பெறுவதற்கு இன்றியமையாதன. மேலும் திறமை மிக்க பேரம், கவர்ச்சிகரமான விளம்பரம், வணிகர் ,தொடர்பு, போக்குவரத்து நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றல் முதலியனவற்றாலும் ஒரு முனைவருக்கு இலாபம் உதிக்கும். இக் கோட்பாடு இந்தக் காரணங்களுக்கு இடம் தரவில்லை.

## (5) புத்தாக்கச் செயல்பாட்டு கோட்பாடு (Innovation Theory of Profit)

ஆஸ்திரியாவில் பிறந்து, அமெரிக்காவில் குடியேறிய ஜே. ஏ. ஷும்பீடர் என்னும் பொருளாதார மேதை முனைவரின் (entrepreneur's) பணிகளை ஐந்து வகைகளாகப் பிரிக்கிறார்: (i) புதிய பண்டம் கண்டு பிடித்தல் (சுவைக்கும் பிசின் - chewing-gum, ரேடியோ). (ii) புதிய உபயோகம் கண்டு பிடித்தல் (பிளாஸ்டிக் பாத்திரம், ரப்பர் செருப்பு). (iii) புதிய தொழில் நுட்பமுறை கண்டு பிடித்தல் (விசைத்தறி, நீராவியந்திரம், மின் மோட்டார் பம்பு). (iv) புதிய சந்தைகள் கண்டு பிடித்தல் (உள் நாட்டைத் தவிர, வெளி நாடுகளில் விற்க வாய்ப்புக் கண்டுபிடித்தல்). பிரிட்டன் சென்ற நூற்றாண்டிலும் ஜப்பான் 1940-க்கு முன்னும் செய்த சாதனைகள் நல்ல சான்றுகள். (v) புதிய முறை நிர்வாகம் வணிகரின்றி (middlemen) நேரடி வினியோகம் (direct distribution without middlemen). தொழிலாளருடன் நல்லுறவு முறைகளைக் கடைப் பிடித்தல்).

மிக்க திறமையுள்ள முனைவர் இவ்வைந்து வகைகளில் ஏதாவது ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட வகைகளில் புதுமைகளைக் கண்டுபிடித்து, அவற்றை உற்பத்தியில் புகுத்தினால், அவருக்கு உடனடியாகக் கொள்ளை இலாபம் கிடைக்கும்; சிறிது காலத்தில், பிற முனைவர்களில் சிலராவது இப் புதிய முறைகளைப் பின்பற்றி (imitative entrepreneur) உற்பத்தியைப் பெருக்கி விடுவர். அளிப்புப் பெருக, இலாபம் குறைந்து தேய்ந்து, கடைசியில் கடும் போட்டியினால் மறைந்துவிடும். இந்த நிகழ்ச்சி முடியும் முன், மற்றொரு புதிய கண்டுபிடிப்புத் தோன்றும். அதற்கும் காலப் போக்கில் முன்னதின் கதிதான். பெருகிய இலாபம் குறுகித் தேய்வது என்ற கதைதான். இம்மாதிரி அலைவரிசை போல் புதிய புதிய கண்டுபிடிப்புகள் தோன்றிக்கொண்டே யிருப்பதுதான் டைனமிக் சமூகத்தின் உயிர் நாடி. எனவே, இலாபமும் தொடர்ந்து ஒரு சிலருக்குக் கிடைத்துக் கொண்டேயிருக்கும். இதுவே ஷும்பீடரின் கோட்பாடு.

இதைக் குறை கூறுபவர், முனைவரின் பிற்பணிகளை—ஆபத்து ஏற்பு, உறுதியின்மை ஏற்பு, பேரத்தில் திறமை முதலியனவற்றைக்—காட்டி இலாபத்துக்குப் பல காரணங்கள் உண்டு என்பதை வலியுறுத்துகின்றனர். புதிய கண்டுபிடிப்பு மாத்திரம் என்று சொல்வது மெய்யல்லவே என்கிறார்கள்.

ஒரே ஒரு காரணம் காட்டும் எந்தக் கோட்பாடும் லாபம் என்னும் விஷயத்தில் சரியானதல்லவென்று திடமாகக்

கூறலாம். அனைத்துக்கும் மேலாக, கட்டுப்பாடில்லாத முழுப் போட்டி செயல்படாத நிலை நீடிப்பதுவரை (inperfections of competition) தேவை-அளிப்புச் சமனறுநிலை (disequilibrium between demand and supply) தோன்றவே செய்யும். இந் நிகழ்ச்சி தோன்றுவது வரை இலாபம் உதித்தே தீரும்.

## 28. நலப் பொருளாதாரம்
## (Welfare Economics)

நலப் பொருளாதாரம் பொருளாதார இயலின் ஒரு கிளை. சமூக நலனை அதிகப்படுத்த என்னென்ன கைக்கோள்களை மேற்கொள்ள வேண்டும்? அவை எத்தகையனவாயிருக்கவேண்டும்? அவற்றின் தரத்தையும் சக்தியையும் தீர்மானிக்கும் அளவைகள் (criteria) யாவை? இக் கேள்விகளுக்கு விடையளிக்க நலப் பொருளாதாரம் முயலுகின்றது.

ஆடம் ஸ்மித் நாட்டின் வருமானம் மிகின், நலமும் மிகும் என்ற எண்ணத்தில் செல்வத்தையும் நலத்தையும் ஒன்றெனக் கருதினார். செல்வம் ஒரு சிறுபான்மையினரிடம் குவிந்து, பெரும்பான்மை வறுமைப் பிடிக்குள் அகப்பட்டுத் தவிப்பாரேயானால், அந் நாட்டு மக்களின் நலம், செல்வம் அனைவரிடமும் சமமாகப் பங்கிடப்பட்ட நிலையினை விட, மிகவும் மோசமாக யிருக்குமன்றோ. செல்வப் பகிர்வு, வருமான வினியோகம் இரண்டும் பரவலாயிருப்பின் நலத்தைப் பெருக்கும் தன்மையுள்ளவை. இதையும் ஸ்மித் தெரிந்தவரே. செல்வம் பெருக மட்டுமே அவர் வழியைக் கூறுகின்றார். நாட்டின் பகிர்வுத் தொகை (national dividend) முழுப் போட்டி நிலவினால் குறைந்த உழைப்பிலும் அடக்கச் செலவிலும், மிகுதியாக உச்ச நிலையையடையும் என்பது ஸ்மித்தின் சித்தாந்தம். முழுப் போட்டி நாட்டில் நிலவ, அவர் காட்டிய வழி தலையிடாக் கைக்கோள் (laisser faire) ஆகும்.

பென்தம் வகுத்த பயன்பாட்டுக் கொள்கையின்படி 'அதிகப்படியான நலம் அதிகப்படியான மக்களுக்கு'க் கிடைக்கும்படி செய்வது அரசின் கடமையும் குறிக்கோளுமாகும். இத் தத்துவத்தை விளக்கும்பொழுது ஜே. எஸ். மில் இன்பங்களில் உயர்ந்தவை, தாழ்ந்தவை என்ற வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டினார். மார்ஷல் பொருளாதார ஆய்விலேயே முழுக் கவனம் செலுத்தியிருந்தாலும், மக்கள் நலனைப் பற்றி அக்கறை கொண்டவர். அவருடைய நூல்களில் பற்பல இடங்களில் நலனைப் பற்றிய சிறந்த கருத்துகளைச் சொல்லிப் போந்தார். தற்காலத்தில்

பழைய, புதிய என்ற இருவகை நலப் பொருளாதாரம் பிரபலமா யுள்ளன. இவை யிரண்டின் நோக்கங்கள் ஒன்றேயாயினும், அணுகு முறையில் (approach) மிகுந்த வேற்றுமையைக் காண் கிறோம்.

## (1) பிகோவின் பழைய நலப் பொருளாதாரம்

பழைய நலப் பொருளாதாரத்தை மிக நுட்பமாக வகுத்தவர் ஏ. சி. பிகோ (A. C. Pigow). இவர் மார்ஷலின் பிரதம சீடர். மார்ஷலுக்குப் பின் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் அவர் வகித்த பேராசிரியர் பதவியில் முப்பத்துநான்கு ஆண்டுகள் (1909-1943) வரை பணியாற்றியவர். கெயின்சின் புரட்சிகரமான 'பொதுக் கோட்பாடு' (1936) வெளியாகும் வரை, பிரிட்டனில் பொருளாதாரத் துறையின் தலைவராக மதிக்கப்பட்டவர். அவர் எழுதிய நூல்கள் பல. அவற்றில் 'நலப் பொருளாதாரம்' (Economics of Welfare, 1920) எனும் நூலைப் பழைய நலப் பொருளா தாரத்தின் வேதப்புத்தகம் என்று கூறுவது மிகையாகாது. எனவே, பழைய நலப் பொருளாதாரத்தை பிகோவினது நலப் பொருளாதாரம் என்று குறிப்படுவது பழக்கமாகி விட்டது.

### அணுகு முறை

மேற் கூறிய நூல் நான்கு பாகங்களைக் கொண்டது. அவற்றில் பிகோ வழங்கியுள்ள கருத்துகளைப் புரிந்து கொண் டால், பழைய நலப் பொருளாதாரத்தின் சிறப்புப் பண்புகளை அறிந்து கொள்ளலாம். பிகோவின் அணுகுமுறை முக்கியமாகக் கவனிக்கத் தக்கது: பொது நலனில் (General welfare) ஒரு முக்கியப் பகுதி பொருளாதார நலன் '(economic welfare). இது அளவிடக் கூடியது. பணம் என்ற அளவையினால் அளக் கக் கூடிய நலன்களெல்லாம் பொருளாதார நலன். ஒருவன் அனுபவிக்கும் நலன் அவன் நுகரும் பயன்பாட்டினால் விளைவது. நடப்பில் முடியாவிட்டாலும், கொள்கையளவில் பயன்பாட்டை எண்ணளவில் அளக்கலாம் (cardinally measurable). ஆரக்கால் ஒப்பீடு (interpersonal comparison) சாத்தியமானது; அஃதாவது ஒருவனுடைய நலனுடன் பிறருடைய நலனை ஒப்பிட்டுப் பார்க்க முடியும். குறுகிய கால அளவில் இல்லாவிட்டாலும், காலப் போக்கில், மக்களனைவரும் சமமான இன்புறும் சக்தி (equal capacity for enjoyment) வாய்ந்தவர். இத்தனை எடுகோள்களின் அடிப்படையில் பிகோ தமது நலப் பொருளாதாரத்தை எழுப்பி யுள்ளார்.

## நாட்டுப் பகிர்வுத் தொகை (National Dividend)

தமது நூலின் முதல் பாகத்தில் நாட்டுப் பகிர்வுத் தொகையினாலும், அதில் ஏழைகளுக்குக் கிடைக்கும் பங்கினாலும் பொருளாதார நலம் தீர்மானிக்கப் படுகிறதென்னும் கோட்பாட்டைப் பிகோ விளக்குகின்றார். பொது நலமும் பொருளாதார நலமும் சாதாரணமாக ஒரே சமயத்தில் வளரவும் குறுகவும் செய்யும் இயல்புடையன ; ஒன்று குறையின் மற்றதும் குறையும் ; ஒன்று பெருகின் மற்றதும் பெருகும். இரண்டும் ஒரே வீதத்தில் வளர்வதென்பதில்லாமலிருக்கும். மக்கள் வருங்கால நலனைத் தாழ் மதிப்பீடு செய்யும் தன்மையுள்ளவர்கள். ஆகவே சேமிப்பும் முதலீடும் வேண்டுமளவுக்கு வாய்ப்பதில்லை. இதைச் சீர்படுத்த, வரிமுறைகளில் சேமிப்பு, முதலீடு இரண்டுக்கும் சலுகைகள் வழங்குவது நன்று என்று கூறுகின்றார்.

## இறுதிநிலைச் சமூக நிகரவிளைவும் (இசநிவி) இறுதிநிலைத் தனியார் நிகர விளைவும் (இதநிவி)

இரண்டாவது பாகத்தில் பிகோ விளக்கும் இரண்டு சீரிய கருத்துகள் நலனைப் பெருக்கவும் அளக்கவும் பயன்படும் ஆய்வுக் கருவிகளாகத் திகழ்கின்றன : (1) இறுதிநிலைத் தனியார் நிகர விளைவு (Marginal Private Net Product, M P N P). அஃதாவது ஒரு தொழிலில் மொத்த இறுதிநிலை விளைவில் உற்பத்தியாளனுக்கு அவனது உற்பத்தியினால் உரித்தாகும் பகுதி. (2) இறுதிநிலை சமூக நிகர விளைவு (Marginal Social Net Product, M S N P) இது ஓர் உற்பத்தி நிறுவனத்தில் இறுதிநிலை விளைவு முழுவதையும் குறிக்கும். அந்த விளைவு யாருக்கு உரித்தாயினும் சரி. பிறருக்கு லாபம் ஆனால் அதைக் கூட்டவேண்டும் ; பிறருக்கு நஷ்டம் விளைவித்தால், உற்பத்தி நிலையத்தின் இறுதி விளைவிலிருந்து அந்த நஷ்டத்தைக் கழிக்கவேண்டும். சில எடுத்துக்காட்டுகள் இக் கருத்துகளை எளிதில் விளங்கச் செய்யும். ஒரு சிமென்ட் தொழிற்சாலையின் புகையினால் சுற்றியுள்ள மா, பலா, தென்னை மரங்கள் பட்டுப் போனால், அந்த நட்டத்தை இத் தொழிற்சாலையின் இறுதிநிலை நிகர விளைவிலிருந்து கழிக்க வேண்டும். தொழிலதிபரின் இலாபம் குறையாது. ஆனால், சமூகத்துக்கு அத் தொழிற்சாலை செயல்படுவதனால் சில இழப்புகள் நேரிடுகின்றன. இந்த இழப்பைக் கழிக்கவேண்டுமென்பது இக் கருத்தின் சாரம். மது உற்பத்திச்சாலையின் ' இதநிவி ' மிகுதியாகவிருக்கும். ஆனால், மதுவினால் ஏற்படும் தீமைகளை ' இதநிவி'யிலிருந்து கழிக்கவேண்டும். நகரங்களில் பேருந்துகள் லாரிகள் போடும் இரைச்சலும், வெளியிடும் நச்சுப் புகையும் ' இசநிவி'யிலிருந்து கழிக்கவேண்டிய இனங்கள். தற்காலத்தில்

மேலை நாடுகளில் தொழிற்சாலைகள் இயங்குவதனால் காற்று, நீர் கெடுவதும் மீன்கள் சாவதும் பற்றி மிக்க கவலை யேற்பட்டிருக் கிறது. இவற்றைத் தடுக்கச் சட்டங்களும் இயற்றப் படுகின் றனவன்றோ? ஒரு தனவந்தன் தனது வீட்டைச் சுற்றி ஒரு அழகிய பூங்கா அமைத்தால், அது சுற்றுப் புறத்தில் வசிக்கும் மக்களுக்குத் தூய காற்றைத்தரும். இதை 'இசநிவி'யுடன் கூட்டவேண்டும். ஒரு விஞ்ஞானியின் பணிக்கு அவனுக்கு அளிக்கப்படும் சம்பள 'இதநிவி', அவனுடைய புதிய கண்டு பிடிப்பு நாட்டுக்கு நன்மை பயக்குமாயின், அந்த நன்மையை 'இசநிவி' யுடன் சேர்த்துக் கொள்ளவேண்டும். விளம்பரம் பெரும்பாலும் வீண் பொருள் விரயம்தான். இது 'இசநிவி' யைக் குறைக்கும். பல சிறு தொழில்நிறுவனங்கள் சேர்ந்து ஒன்றிரண்டு பெரிய அளவுத் தொழிற் சாலைகளின் அளவுக்கு உற்பத்தி தரங் குன்றாமல் செய்யுமாயின், சிறு நிறுவனங்களை அமைப்பது 'இசநிவி'யைப் பெருக்கும். ஏனெனில் உற்பத்தி சமமாயிருப்பதுடன் சிறு நிறுவனங்களின் வளர்ச்சி பலருடைய தொழில் தோற்றுவித்து நிர்வகிக்கும், முனைப்பை, திறனைப் (entrepreneurship) பெருக்கி நன்மை விளைவிக்கின்றது. குறைந்து செல் விளைவு விதி, மாறாது செல் விளைவு விதி இயங்கும் தொழில் களில் போட்டியை விறு விறுப்பாக்கினால் இசநிவி அதிகப்படும். ஆனால், வளர்ந்து செல் விளைவு விதி (increasing returns) செயல் படும் தொழில்களில் தொழிற்சாலையின் அளவு கூடக்கூட அடக்கச் செலவு குறைந்து செல்லுமல்லவா? அதனால் விற்கும் விலையும் குறையும். இத்தகைய தொழில்களைப் போட்டியின்றி உத்தம அளவுக்கு (optimum size) வளர்க்க அரசு கைக்கோள்கள் மேற் கொள்ள வேண்டும். இந்த நிலையைப் பற்றி ஆராயும் பொழுது மார்ஷல் தனியுரிமை நிறுவனங்களை ஆதரித்து எழுதி யிருப்பது குறிப்பிடத்தக்கது. மின் நிலையம், டெலிபோன் போன்ற பொது வசதி (Public Utilities) நிறுவனங்கள் தனி யுரிமை முறையில் (monopoly) செயல்படுவது இந்த நியதிக்குச் சான்றாகும்.

### தொழிலாளர் நலன்

மூன்றாவது பாகத்தில் தொழிலாளர் நலன் முக்கிய இடம் பெறுகின்றது. இதில் காணும் சிறப்புக் கருத்துகளாவன: தினசரி உழைப்பு நேரத்தை நீடித்தாலும், கூலி கொடுக்கும் முறையை மாற்றினாலும் எவ்வாறு நாட்டுப் பகிர்வுத் தொகை மாறும்? மிகுந்த நேர உழைப்பினால் உற்பத்தி அதே வீதாச் சாரத்தில் மிகும் என்று சொல்வதற்கில்லை. வாரச் சம்பளம் மாதச் சம்பளம் என்று கால வீதக் கூலி கொடுப்பது ஒரு முறை. செய்து

முடிக்கும் உற்பத்தியின் அளவைப் (நூறு மீட்டர் துணி நெசவு, 1000 கன அடி சுவர் வைத்தல் போன்றவை) பொறுத்துக் கூலி கொடுக்கும் முறை வேறு. பின்னதை உற்பத்தி வீதக் கூலியெனக் கூறுவர். உற்பத்தி வீதக் கூலி தொழிலாளரை முழு மூச்சுடன் உழைக்கத் தூண்டும். முதலாளிகளின் இலாபம் பெருகும்; ஆனால், தீவிர உழைப்பினால் தொழிலாளர் உடல் நலம் கெடக் கூடும். ஆகவே உற்பத்திக் கூலியைக் கூட்டுப் பேரம் (Collective bargaining) முறையில் தீர்மானிக்க வேண்டுமென்று பிகோ கோருகிறார். மிகவும் குறைந்திருக்கும் கூலியை உயர்த்துவதால் இரண்டு நன்மைகள் கிடைக்கும். (1) தொழிலாளரின் உடல் நலம் பெருகும், (2) தொழிலாளரின் ஊக்கமும் வளரும். இதனால் உற்பத்தியில் மேலும் அக்கறை காட்டுவர்.

**மறு பங்கீடு (Re-distribution)**

நான்காவது பாகத்தில் நாட்டின் வருமானத்தின் பங்கீட்டு முறையை மாற்றினால் என்ன விளைவுகளை எதிர்பார்க்கலாமென்பது ஆராயப்படுகிறது. (1) வறியோர் பங்கு பாதிக்கப்படாமல், மொத்த நாட்டுப் பகிர்வுத் தொகை கூடினாலும், (2) மொத்த நாட்டுப் பகிர்வுத் தொகை மாறாமல், வறியோர் பங்கு கூடினாலும், பொருளாதார நலன் உயரும். ஆனால், ஏழைகளின் பங்கு கூடி மொத்தப் பகிர்வுத் தொகை குறையுமாயின், பொருளாதார நலம் உயருமா அல்லது குறையுமா வென்று கூறமுடியாது. வரிகள், மானியங்கள், உதவிக் கொடை முறைகள் மூலம் ஏழைகளின் பங்கைக் கூட்டினால் விளையும் நன்மை தீமைகளை மிக நுட்பமாகப் பிகோ ஆராய்கின்றார். செட்டாகக் குடித்தனம் செய்யும் தொழிலாளருக்கு உதவிப் பணம் கொடுத்தால், அவர்கள் திறமை உயரும்; தொழில் செழிக்கும். ஊதாரிச் செலவு செய்பவர்களுக்குக் கொடுத்தால் உற்பத்தி குன்றும்; மொத்த நலனும் குறையும். தொழிலாளர்களின் கல்வி, உணவு, உறையுள், சுகாதாரம், பொழுதுபோக்கு முதலியவற்றிற்குத் தொழிலதிபர்கள் நன்கொடை அளித்தால் தொழில் வளம் பெறும். நாட்டுப் பகிர்வுத் தொகை பெருகும். வறியோர் சட்டங்கள் (Poor Laws) பொதுவாக ஏழை எளியவர்களின் சோம்பலை வளர்க்கும் என்பது பிகோவின் கருத்து. ஆழ்ந்து யோசனை செய்யாமல் குருட்டு வழியில் பகிர்வுத் தொகையை மறு பங்கீடு செய்வதனால் நன்மை யுண்டாகாது; தீமை கூட உண்டாகலாம். எனவே உயர்ந்த வருமானம் பெறும் வகுப்பினரிடமிருந்து தாழ்ந்த வருமானமுடையவருக்குத் தேர்ந்தெடுத்த (selected) முறைகளில் மறு பங்கீடு செய்யத் திட்டங்கள் தீட்டினாலன்றி, நலன் பெருகாது. இந்த வகையில் நீண்டதொரு விவாதத்துக்குப் பின்னும், ஏழைகளின் பங்கை

எந்த விதத்தில் உயர்த்தினுலும் மொத்தப் பொருளாதார நலன் கூடும் என்பதில் பிகோவுக்கு நம்பிக்கையிருப்பது வெளிப் படுகிறது.

(2) புதிய நலப் பொருளாதாரம் (New Welfare Economics)

வில்ஃபிரிடோ பாரிடோ (Vilfredo Pareto, 1848–1923) என்னும் இத்தாலியப் பொருளாதார நிபுணரைப் புதிய பொருளாதாரத்தின் தந்தையெனக் கூறலாம். பொறியியலில் டாக்டர் பட்டம் பெற்றுப் பல பதவிகளுடன் இத்தாலிய இருப்புப்பாதை வாரியத்தின் தலைவராகவும் பணியாற்றியவர் பாரிடோ. 1893-ல் லவ்சென் (Lausanne) பல்கலைக் கழகத்தில் வால்ரசுக்குப் பின் அவர் இடத்தில் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். சமநோக்கு வளைகோடுகள் முறையை உருவாக்கியவர்களில் ஒருவர். பாரிடோவின் 'உச்ச நிலை சமூக நலன்' (Maximum Social Welfare) என்னும் கருத்துச் சிறப்பு மிக்கது. பங்கீடு செய்வதை அரசின் சட்டங்கள் கவனித்துக்கொள்ளும் என்ற எண்ணத்தில், அவர் உற்பத்தி, பங்கீடு துறைகளில் ஆற்றவேண்டிய மாறுதல்களைப் பற்றி மட்டுமே அவர் ஆய்கின்றார். ஒரு பொருளாதார நிலையை எடுத்துக்கொள்வோம். அதில் வேறு ஓர் அம்சத்தையும் தொடாமல், ஒரு சின்னஞ் சிறிய மாற்றத்தைச் செய்வோமாயின், அது (1) மக்கள் அனைவரின் நலத்தைக் கூட்டினால், மாறிய நிலை அனுகூலமானது என்பது தெளிவு; (2) மக்களின் சிலரின் நலம் கூடி, மற்றவர்களின் நலம் குறையாமலிருப்பினும், புதிய நிலை அனுகூலமானதே; (3) சில மக்களின் நலம் கூடி, வேறு சிலர் மக்களின் நலன் குன்றுமாயின், இந்நிலை அனுகூலமானதா பிரதிகூலமானதா என்பதைத் திட்டமாகக் கூறுவது இயலாது. (பாரிடோ ஆரக்கால் ஒப்பீடு (interpersonal comparison) சாத்தியப்படாது என்னும் கட்சியினர் என்பது இங்குக குறிப்பிடத் தக்கது). மாற்றம் என்பது உற்பத்தியில் (production) அல்லது பரிவர்த்தனையினால் (exchange) செய்யக்கூடியது என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும். இந்த விளக்கத்துக்குப் பின் பாரிடோ கூறுவதாவது: 'எந்தப் பொருளாதார நிலையிலிருந்து எந்தச் சின்னஞ்சிறிய மாற்றமும் ஒருவர் நலனைக்கூடக் குறைக்காமல் செய்யமுடியாதெனின், அந் நிலையே உயர்ந்தபட்ச சமூக நலன் (optimum social welfare) அளிக்கும் நிலை' என்று பாரிடோ இலக்கணம் வகுத்துள்ளார். சுருங்கச் சொல்லின், எந்த மாற்றம் ஒருவருக்கும் நலக் குறைவுக்குக் காரணமாயிருக்கக் கூடாது; அனைவருக்கும் அல்லது சிலருக்கு அல்லது ஒருவனுக்காவது நலனளிக்க வல்லதாயும், அதே சமயத்தில், ஒருவனுக்குக்கூடத் தீங்கிழைக்காததாயும் இருக்கிறதோ அதை மட்டுமே வரவேற்க

வேண்டும். அது மட்டும் ஐயப்பாட்டுக்கின்றி சமூக நலனை உயர்த்தக்கூடியது. இதை பார்டோவின் 'ஏகோபித்த இசைவு விதி' (Unanimity Rule) என்று கூறுவர்.

அணுகு முறை

சென்ற முப்பது ஆண்டுகளில் புதிய நலப் பொருளாதாரம் மிக்க பிரபலமடைந்துவிட்டது. இதை நுட்பமாக வகுத்தவர்களில் முக்கியமானவர்கள் ஜே. ஆர். ஹிக்ஸ், நிக்கலஸ் கால்டர், ராபின்ஸ், ஹராட், சாமுவேல்சன், பெர்க்சன். இவர்கள் பிகோவின் எடுகோள்களை எதிர்த்தனர். பொருளாதார நலனுக்கும் பொது நலனுக்கும் பிகோ காட்டிய தொடர்பு, எண்ணியல் பயன்பாட்டுக் கொள்கை, ஆரக்கால் ஒப்பீடு முதலானவையெல்லாம் தவருன அடிப்படையென்று வாதித்தனர். சமநோக்கு வளைகோட்டு முறையின் அடிப்படையில் பயன்பாட்டை (நலனை) துல்லியமாக அளவிடாமலேயே, கிரமப் பயன்பாட்டின் வாயிலாக, நலப் பொருளாதார இயலை வகுக்க முயன்றிருக்கின்றனர். இவர்கள் வகுத்த புதிய முறையில் (1) மாற்று நிர்வாகம், (2) நட்ட ஈடு இரண்டும் நலத்தைப் பெருக்க உதவும் கருவிகளாகும்.

'மாற்று நிர்வாகம்' (Reorganization) என்ருல் உற்பத்தி, விற்பனை, பங்கீடு, வரி விதிப்பு, அயல் நாட்டு வணிகம், சுங்கம் முதலானவற்றில் செய்யக்கூடிய மாறுதல்களைக் குறிக்கும். ஏதாவது ஓர் உற்பத்தி முறை அல்லது வரி விதிப்பு முறையில் சிறிய மாற்றம் ஒருவருக்காவது அனுகூலமாகவும், பிற மக்களில் ஒருவருக்கும் தீங்கிழைக்காமலிருப்பின், அந்த மாற்றம் மொத்த நலனைக் கூட்டும், அது வரவேற்கவேண்டிய தொன்ருகும். இம் மாதிரிப் பயன் தரும் மாற்றத்தை நடைமுறையில் செயல் படுத்துவது மிகவும் அரிது. சிலருக்கு நட்டம் விளைவித்து, வேறு சிலருக்கு இலாபம் விளைவிக்கக்கூடிய மாறுதல்களைத்தான் நாம் நடைமுறையில் காண்கிருேம். அப்படியாஞல் இந் நிலையைச் சமாளிக்க என் செய்வது என்ற விஞவுக்கு விடையாக அமைந்துள்ளது நட்ட ஈடு முறை. ஒரு சுங்க வரியை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். இதை விதிப்பதஞல், சிலருக்கு நட்டமும், வரியிலிருந்து கிடைக்கும் வருமானத்தை அரசு செலவிடும் போது வேறு சிலருக்கு இலாபமும் கிடைக்கலாம். இந் நிலையில் இலாபமடைந்தவர்கள் நட்டப்பட்டவர்களுக்கு வேண்டிய நட்ட ஈடு கொடுக்கிருர்களென்று வைத்துக்கொள்வோம். அதன் பின்னும் இலாபம் அடைந்தவர்களிடம் சிறிதளவாவது இலாபம் மிஞ்சியிருப்பின், இந்த மாற்று நிர்வாகம் நலத்தைப் பெருக்கும் தன்மையுடையது என்பது பொருள். கோட்பாடு வரையில் இந்த வாதம்

அழகாகவும் துல்லியமாகவும் இருப்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆனால் யார் இலாபம் அடைந்தவர், யார் நட்டம் அடைந்தவர்? ஒவ்வொருவருக்கும் இலாபம் எவ்வளவு, நட்டம் எவ்வளவு? இலாபம் அடைந்தவர்கள் நட்டப்பட்டவர்களுக்கு நட்ட ஈடு வழங்கும் வழியாது? என்ற கேள்விகளுக்குச் சரியான விடைகள் கிடைத்தாலன்றி, இக் கோட்பாட்டை எப்படிச் செயலாற்ற முடியும்? இவற்றிற்கு விடை காணும் முயற்சியில் புதிய நலப் பொருளாதாரத்தை வகுத்த அறிஞர்கள் ஆரம்பத்தில் தூவென்று தள்ளிய பழைய நலப் பொருளாதார எடுகோள்களை அணைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. பயன்பாட்டை அளக்காமலும், ஆரக்கால் ஒப்பீடு செய்யாமலும் எப்படி நட்ட ஈடு வழங்க முடியும்? எனவே, புதிய நலப் பொருளாதாரக் கோட்பாட்டைச் செயல்பட முடியாதபடி உலர்ந்த சருகு என்று சிலர் கூறுவது வெறும் அசூயையினால் மட்டுமல்ல என்பது புலனாகும்.

பொருள் உற்பத்தியும் பண்டமாற்றும் அதிகப்பட்ச நலன் அளிக்கவேண்டுமானால் பாரிடோவின் கோட்பாட்டின்படி ஏழு நிபந்தனைகள் நிறைவேறவேண்டும். இந்த நிபந்தனைகளுடன் இலட்சிய முறையில் நாட்டுப் பகிர்வுத்தொகை பங்கீடு நடைபெற வேறு சில நிபந்தனைகளும் உண்டு. இந்த இருவகை நிபந்தனைகளும் நிறைவேறினால் அதிகபட்ச நலன் (maximum welfare) என்னும் இறுதி இலட்சியம் கைகூடும். இத்தனை நிபந்தனைகளையும் சமன்பாடுகளாக வடித்தும் துல்லியமாகக் கணக்கிட்டும் காட்டிய சிறப்புப் புதிய நலப் பொருளாதாரத்துக்கு உண்டு. இந்தப் பல்வேறு நிபந்தனைகளின் விளக்கம் இந் நூலில் இடம் பெற வாய்ப்பில்லை.

## பாகம் VIII

# இக்கால இந்தியப் பொருளாதாரச் சிந்தனை

## 29. அடிகோலியவர் நால்வர்
(Four Founders)

'பொழுதெல்லாம் எங்கள் செல்வம் கொள்ளை கொண்டு
போகவோ ?—நாங்கள்-சாகவோ'
—பாரதி

முன்னுரை

இக் காலத்து இந்தியப் பொருளாதாரச் சிந்தனையை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்: (1) அடிகோலியவர் சிந்தனை (2) காந்தீயச் சிந்தனை, (3) இன்றையச் சிந்தனை. முதலில் மூன்ருவது பகுதியை எடுத்துக் கொள்வோம். அண்மையில் இந்தியப் பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், ஆராய்ச்சி நிறுவனங்கள், திட்டக் குழுக்கள், வங்கிகள், தொழில்-வணிகச் சங்கங்கள், பொருளாதாரப் பத்திரிகை நிலையங்கள், அரசியல் கட்சிகள் முதலான பல்வேறு இடங்களில் பொருளாதார நிபுணர்களை ஏராளமாகக் காண்கிறோம். இவர்கள் நம்முடன் வாழும் நம் தலைமுறையினர்; இவர்களில் பலர் மக்களின் அன்புக்கும் வெறுப்புக்கும், விருப்புக்கும் வியப்புக்கும் பாத்திரமானவர்கள். இவர்களுடைய சிந்தனைகளை நாம் 'இங்கு, இப்பொழுது' எடை போடுவது எளிதல்ல; விரும்பத்தக்கதுமல்ல. இவர்கள் கருத்துகளையும் சாதனைகளையும் கி.பி. 2000 க்கு மேல் வரும் தலைமுறையினர் சீர் தூக்கித் தீர்ப்பு வழங்க விட்டுவிடுவோம். இந் நூலில் இவர்களுடைய கருத்துகள் இடம் பெரு.

இனி முதல் இரண்டாவது பகுதிகளுக்கு முறையே திரும்புவோம். 19ஆம் நூற்ருண்டின் பிற்பகுதியில் பிரிட்டிஷ் பேரரசின்

விவசாய, தொழில், நிதி, இராணுவம், அனைத்து நாட்டு வணிகம் முதலானவை பற்றிய கைக்கோள்களையும் அவற்றின் விளைவு களையும், குற்றங் குறைகளையும் எடுத்துக் காட்டிய அறிஞர் ஒரு புறம். அரசியலில் ஈடுபட்டுச் சட்டமன்றங்களிலும் மற்றப் பொது இடங்களிலும் அவற்றைப் பற்றி வாதித்து, அரிய உரை கள் ஆற்றிய பொருளாதாரச் சிந்தனையாளர் மற்றொரு புறம். இவர்களில் பலர் மேலை நாட்டுப் பொருளாதாரத் தத்துவங்களைக் கற்றறிந்தவர். அவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடுத்தோ அல்லது தேர்ந்தெடுக்காமலோ, இந்தியப் பொருளாதாரப் பிரச்சினைகளை ஆராய்ந்து சில கைக்கோள்களைப் பரிந்துரைத்தவர். புத்தம் புதிய கருத்துகள், கோட்பாடுகள் பகுத்தறி முறையில் படைத்தவர் எல்லர். பிரச்சினைகளைத் தீர்க்க வழிமுறைகளைக் கூறும் பொழுது சில கோட்பாடுகளை வகுத்தவர். அறிஞர்களும், செயல் வீரர்களும் பலருள்ள இக் குழாத்தில் நால்வரைப் பற்றி இந்த அதிகாரத்தில் தெரிந்துகொள்வோம்.

20ஆம் நூற்றாண்டில் முதன்மையான இடம் பெறுவது காந் தீயப் பொருளாதாரச் சிந்தனை. மேலைநாட்டுப் பொருளாதாரத் தத்துவங்களின் குணங்களையும் குற்றங்களையும் அறிந்தவர் காந்தி. அவற்றை விடுத்துத் தமக்கென ஒரு தத்துவத்தைச் சிருஷ்டித்துச் செயல் முறைகளையும் வகுத்துப் பொருளாதார சிந் தனையில் ஒரு புதிய பாதையைத் தேடிக்கொண்டவர் காந்தி. அவருடைய சிந்தனைகளை அடுத்த அதிகாரத்தில் பார்ப்போம்.

### (i) தாதா பாய் நவரோஜி (Dadhabhai Naoroji, 1825-1917)

பம்பாயில் ஒரு பிரபல பார்சி குடும்பத்தில் பிறந்த தாதா பாய் நவரோஜி பெரும்பாலும் லண்டனிலேயே வசித்தவர். தொடக்கத் தில் எல்பின்ஸ்டன் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றியதி லிருந்து அவர் வகித்த பதவிகளும் நாட்டுப் பற்றுடன் செய்து முடித்த சாதனைகளும் பலப்பல. லண்டனில் தமக்கென ஒரு வியாபார நிறுவனத்தை நிறுவியபின், பொது வாழ்க்கையில் பெரும்பங்கு கொண்டார். அவர் முதலில் நிறுவிய லண்டன் இந்தியர் கழகம் (London Indian Society), ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் ஆங்கிலேயரும் இந்தியரும் சந்தித்து அளவளாவிக் கருத்து களைப் பரிமாறிக்கொள்ள ஒரு களமாகத் திகழ்ந்தது. 1886-ல் சில ஆங்கிலேய நண்பர்களுடன் நவரோஜி நிறுவிய கிழக்கு இந் திய சங்கத்தின் (East India Association) ஆதரவில் பல பிரிட்டிஷ் இந்திய உயர்நிலை அதிகாரிகள் இந்தியாவின் பல பிரச்சினை களைப் பற்றிய கட்டுரைகளை எழுதி வாசித்து விவாதித்தனர். எடுத்துக்காட்டு: நவரோஜி எழுதியவை—இந்தியாவில் பிரிட்டி

ஷாரின் கடமைகள், அபிசீனியப் போரின் செலவுகள், இந்தியாவின் தேவைகளும் சாதனங்களும் முதலானவை. ஆங்கிலேய ஆட்சியாளர் எழுதியவை-இந்திய அரசின் நிதி, நீர்ப்பாசனங்கள், பொதுப் பணித்துறை போன்றவை. இவ்விரண்டு சங்கங்களில் நடந்த விவாதங்களும், சொற்பொழிவுகளும் இந்திய அரசியல், பொருளாதார விவகாரங்களைப் பற்றி இரு நாட்டினரும் நன்கு புரிந்துகொள்ள அரிய வாய்ப்பு அளித்தது.

பின்னர் நவரோஜி சுய ஆட்சி (Home Rule) இயக்கத்தில் சேர்ந்து சிறப்பாகப் பணியாற்றினர்; பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர், வெல்பி ராயல் கமிஷன் உறுப்பினர், மும்முறை இந்திய தேசீயக் காங்கிரசின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் ஆகிய பதவிகள் இவரைத் தேடி வந்தன. ஒவ்வொரு பதவியிலிருந்த காலத்திலும் நாட்டுக்கு அவர் புரிந்த செயற்கரிய சேவைகள் பல. எனவே, அவரை 'இந்திய தேசீயத்தின் தந்தை' யென்றும், 'வணக்கத்துக்குரிய பெரும் தலைவர்' (Grand Old Man) என்றும் மக்கள் அன்புடன் அழைத்தனர்.

### பொருளாதாரக் கருத்துகள்

கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியில் கட்டுப்பாடில்லாத அனைத்து நாட்டு வணிகம் அனுமதிக்கப்பட்டதனுல், நாட்டிலுள்ள குடிசைத் தொழில்கள் நசிக்கலாயின. எனவே லட்சக் கணக்கில் குடிசைத் தொழிலில் ஈடுபட்டிருந்த மக்கள் உழவுத் தொழிலே கதியெனக் கருதி, கிராமப்புறங்களுக்கு ஏகினர். அந்நியராட்சியின் கைக்கோள்கள் (Policies) அனைத்தும் இந்தியாவுக்குப் பாதகமாகவும், பிரிட்டிஷ் தொழில் வளத்துக்கும் பிரிட்டிஷ் பேரரசின் விஸ்தரிப்புக்கும் சாதகமாகவும் வகுக்கப் பட்டன. இவற்றை வன்மையாகக் கண்டித்துப் பிரிட்டிஷ் மக்களின் அனுதாபத்தையும் நல்லெண்ணத்தையும் தூண்டிவிட்டு, இந்திய ஆட்சியின் போக்கை மாற்றுவதற்கு நவரோஜி ஆற்றியுள்ள தொண்டு எளிதில் மதிப்பிடக் கூடியதல்ல. நவரோஜி எழுதிய 'வறுமையும், இந்தியாவில் பிரிட்டிஷ் பண்புக்கொவ்வாத ஆட்சியும்' (Poverty and Un-British Rule in India) எனும் புகழ் பெற்ற நூல் 1901-ல் வெளியாயிற்று. 1962-ல் இதன் புதிய அச்சுப் பிரதியொன்று வந்துள்ளது.

நவரோஜியின் கருத்துகளை, (1) நாட்டின் வருமானமும் வறுமையும், (2) நிதி இயல் கைக்கோள்கள், (3) இழப்புக் கோட்பாடு என்ற மூன்று தலைப்புகளின் கீழ் பிரிக்கலாம்.

(i) நாட்டின் வருமானமும் வறுமையும்

தனி மனிதர்களில் நவரோஜிதான் இந்திய நாட்டின் வருமானத்தை முதலாவதாக மதிப்பிட்டவர். இந்தியாவில் தலைக்குச் சராசரி வருமானம் என்னவென்று கணக்கிட்டுக் காட்டினால், இந்தியாவின் வறுமைக் கொடுமையை அளக்கும் அளவுகோல் கிடைக்கும் என்று நவரோஜி நம்பினார். 1867-70 ஆண்டுகளில் பம்பாய் மாகாணத்தில் அவருடைய மதிப்பீட்டின்படி தலைக்குச் சராசரி வருமானம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 24 தான். இத்துடன் நவரோஜி ஓர் உழவன், ஒரு கடைநிலை அரசு ஊழியன், ஒரு சிறைச்சாலைக் கைதி ஆகியோரின் செலவுகளையும் ஆய்ந்து ஒப்பு நோக்கினார். உடல் நலனையும் திறனையும் காத்துக்கொள்ள ஒருவனுக்கு அவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய, ஓர் ஆண்டில் ரூ. 34 ஆகும் என்று கணக்கிட்டார். பருவமழை சரியாகப் பெய்யும் ஆண்டிலும், ஒரு கைதிக்கு வழங்கப்படும் உணவு, உடை பிற வசதிகளை மக்களுக்குத் தருவதற்கு, நாட்டின் வருமானம் போதாது என்று காட்டினார். நவரோஜி மதிப்பீடு செய்த முறையில் அதிகார வர்க்கத்தினர் சில குறைகளைச் சுட்டிக் காட்டினர்: நாட்டின் வருமானத்தில் நவரோஜி ரயில் பாதை, வீடுகள், அரசாங்கக் கடன் பத்திரங்கள் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம், வணிக இலாபம், சம்பளங்கள், கைத்தொழிலாளர் கூலி வகையறு ஆகியவற்றையும் நாட்டு வருமானத்தில் சேர்க்கவில்லை என்பது அவர்கள் குற்றச் சாட்டு. இது உண்மையே. ‘போக்கு வரத்துச் சாதனங்கள் பண்ட உற்பத்தி செய்யா, அரசாங்கக் கடன் பத்திரங்களின் வட்டி வருமானம் நாட்டின் பிற உற்பத்தியிலிருந்து வருவதே’ என்பது போன்ற சமாதானம் நவரோஜி கூறினார். அவர் கூறிய விடைகளிலிருந்து நவரோஜி வருமான மதிப்பீட்டில் இயற்கைவாதிகளின் (Physiocrats) தத்துவத்தைப் பின்பற்றியவர் என்பது தெரியும். உழவு ஒன்றே பயன் தரும் உழைப்பு என்ற இயற்கை வாதிகளின் கூற்று நினைவிருக்கும். பருப்பொருள்களை (material goods) மட்டுமே நவரோஜியின் வருமானக் கணக்கில் சேர்க்கப்பட்டன. அவர் மதிப்பீடு குற்றம், பிழையில்லாததல்ல. ஆனால் இந்தத் துறையில் அவர் இந்தியாவில் முன்னோடியாகத் திகழ்ந்தார். இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பின்னரே, நாட்டு வருமானக் கணக்குகளை மதிப்பிடும் முறைகள் மேலை நாடுகளில் கூட நுட்பமாக வகுக்கப்பட்டுள்ளன. எனவே, புள்ளி விவரங்களுக்கு மிகுந்த பஞ்சமுள்ள அவருடைய காலத்தில், நவரோஜி நாட்டு வருமானத்தை மதிப்பீடு செய்ததும், அதன் மூலம் நாட்டின் வறுமையை அளந்து காட்டியதும், அரசாங்கம் வருடா வருடம்

நாட்டு வருமானக் கணக்கு வெளியிட வேண்டுமென வற்புறுத்தியதும் அவருடைய அரிய சேவைகள்.

## (ii) பொது நிதி இயல் கைக்கோள்கள் (Public Finance Policies)

பிரிட்டிஷ் இந்திய ஆட்சியின் வரிவிதிப்பு முறை, இராணுவச் செலவுப் பங்கீடு முறை முதலியன சிறிதும் நியாயமற்றவை என நவரோஜி எடுத்துக் காட்டினார். பிரிட்டனின் வரி வருவாய் நாட்டின் வருமானத்தில் 8 சதமாயிருக்கும்போது, இந்தியாவில் அது 15 சதமாக இருந்ததென்பதைச் சுட்டிக் காட்டினார். இந்த வரிச் சுமையை எவ்வாறு ஓர் ஏழை நாடு தாங்கக்கூடும் என்று வினவினார். மான்சஸ்டரிலிருந்து இறக்குமதியான பருத்தித் துணிகளின் மேல் விதிக்கப்பட்ட இறக்குமதி வரியை ரத்து செய்ததைக் கண்டித்தார். இந்த ரத்து ஆங்கில நாட்டின் பருத்தி ஆலைத் தொழிலுக்கு நன்மையும், இந்தியப் பருத்தி ஆலைத் தொழிலுக்குத் தீமையும் பயப்பதைக் காட்டினார். சூயஸ் கால்வாய்க்குக் கிழக்கே பிரிட்டன் தொடுத்த போர்களின் செலவுகளை யெல்லாம் இந்திய அரசின் மேல் சுமத்துவது அக்காலப் பழக்கம். இந்தப் போர்களுக்கும் இந்திய உபகண்டத்தின் அமைதிக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது. எனவே அச் செலவைப் பிரிட்டிஷ் அரசு தான் ஏற்றுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறது என்று வாதித்தார். அடுத்தபடியாக, ரயில் பாதை நிறுவனங்களின் தலைமை அலுவலகங்கள், பிரிட்டனில் செயல் படுவதையும், உயர்நிலை அதிகாரிகள் ஆங்கிலேயராயிருப்பதையும்,இவற்றால் உண்டாகும் வீண் அதிகச் செலவுகளையும் விலக்க வேண்டுமென்று வலியுறுத்தினார்.

## (iii) இழப்புக் கோட்பாடு (Drain Theory)

கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சிக்கு முன், இந்தியாவின் மேல் பல மத்திய ஆசிய வல்லரசுகள் படையெடுத்து நாட்டின் செல்வங்களைச் சூறையாடிச் சென்றிருக்கின்றனர். அவற்றாலேற்பட்ட துன்பமும் துயரமும் சிறிது காலத்தில் மறைந்தன. நாட்டு மக்கள் மீண்டும் உழைத்துச் செல்வம் திரட்டி நல்ல நிலைக்குத் திரும்பினர். ஆனால், பிரிட்டிஷ் ஆட்சி நிறுவப்பட்ட பின், இதயத்திலிருந்தே ஊசி போட்டு உதிரத்தை உறிஞ்சுவதுபோல், இந்தியாவின் செல்வத்தில் பெரும் பகுதி பிரிட்டனுக்குப் பாய்ந்து கொண்டே யிருக்கின்றது. இதனால் இந்தியா வறுமையிலிருந்து மீளவே வாய்ப்பில்லாமற் போகிறது. நாட்டின் செல்வத்தை இவ்வாறு இழப்பதற்கு முக்கியமாக நான்கு காரணங்கள் உள்ளன என்றார் நவரோஜி.

(i) (சீமைத்) தாயகச் செலவுகள் (Home Charges)

அக் காலத்தில் லண்டனில் 'இந்திய அரசு அலுவலகம்' (India Office) ஒன்று இயங்கிக் கொண்டிருந்தது. அதுவே இந்திய அரசையும் பிரிட்டிஷ் அரசையும் இணைக்கும் கருவி. இது பிரிட்டிஷ் அரசின் மேற்பார்வைக்கு உதவும் ஸ்தாபனம். இதனுடைய நிர்வாகச் செலவு முழுவதும் இந்திய அரசின் மேல் சுமத்தப்பட்டிருந்தது. இந்திய அரசாங்கத்தில் கொழுத்த சம்பளம் வாங்கும் அதிகாரிகள் பெரும்பாலும் ஆங்கிலேயராகவேயிருந்தனர். அவர்களது சம்பளம், பென்சன், பிற சலுகைகள் முதலான செலவுகளுக்கு இந்திய அரசு பெரிய அளவில் நிதி பிரிட்டனுக்கு அனுப்பவேண்டியிருந்தது. இந்திய அலுவலகத்தின் செலவைப் பிரிட்டிஷ் அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்திய அரசாங்கத்தின் உயர்நிலைப் பதவிகளையும் இந்தியர்களுக்கு அளிக்க வேண்டும். அப்படியானால் சீமைக்கு அனுப்பும் பணம் கணிசமான அளவில் மிச்சப்படும் என்று கூறினார் நவரோஜி.

(ii) இராணுவச் செலவு

இந்திய இராணுவத்தின் செலவு முழுவதையும் இந்திய அரசு ஏற்பதற்கு ஒரு நியாயமும் கிடையாது. உள் நாட்டின் அமைதியைக் காக்க இத்தனை பட்டாளங்கள் வேண்டா. இந்திய இராணுவம், பேரரசுடன் தொடுக்கும் போர்களில் பங்கெடுத்துக் கொள்கிற காலங்களில் கூட அதன் சம்பளத்தை இந்திய அரசு ஏற்க வேண்டியதிருக்கிறது. இது மிகவும் நியாயமற்ற செயல் என்று நவரோஜி கண்டித்தார்.

(iii) இந்திய அரசின் கடன் சுமை

பிரிட்டிஷ் அரசு தனது சாம்ராஜ்யப் போர்களுக்கும், இந்தியாவின் வடமேற்கு, வடகிழக்கு எல்லைகளின் தனது ஆட்சியை விஸ்தரிக்கச் செய்த போர்களுக்கும் ஆன செலவுகளை இந்திய அரசின் மேல் கட்டுவது தொடர்ந்ததனால், இந்திய அரசின் கடன் சுமை மிகப் பெரிய அளவில் வளர்ந்துவிட்டது. இந்தக் கடனைத் தீர்க்கவும் வட்டியைக் கொடுக்கவும் இந்திய அரசு வரிகள் விதித்து அவற்றிலிருந்து கிடைக்கும் வருவாயைப் பிரிட்டனுக்கு அனுப்பிக் கொண்டிருந்தது. இதன் அநீதியையும் நவரோஜி சுட்டிக் காட்டினார்.

(iv) இந்திய வெளிநாட்டு வணிகம், பெரும் தொழில்கள்

இந்தியாவின் அயல் நாட்டு வணிகம் முழுவதும் பிரிட்டிஷ்காரர் ஆதிக்கத்தில் இருந்தது. ஏற்றுமதி, இறக்குமதி லாபம், கப்பல் போக்குவரத்து ஊதியம், இன்ஷூரன்ஸ் கமிஷன் முதலாய வருமானங்கள் பிரிட்டனுக்குச் சென்றன. மேலும் பிரிட்டிஷ்

காரர்கள் தொழில் நிறுவனங்கள், தேயிலைத் தோட்டங்கள் முதலியன, இம்பீரியல் வங்கி, மற்றும் பிரிட்டிஷ் வங்கிகளிருந்து பெற்ற கடன்களைக் கொண்டு தொடங்கி மிகுந்த லாபம் அடைந்தனர். இந்த லாபமும் பிரிட்டனுக்குச் சென்றது.

மேற்கூறிய பல்வேறு வகைகளில், இந்தியா இழந்து வந்த தொகை விரைவாக ஏறிக்கொண்டே போயிற்று. 1835-39-ல் சுமார் 53 லட்சம் பவுனுகவிருந்த இழப்புத்தொகை 1900-க்கு முன்னரே 300 லட்சம் பவுனுயிற்று. இந்த மாபெரும் இழப்பை நுட்பமாக ஆராய்ந்து, அதனுல் விளையும் கேடுகளை நன்கு விளக்கி, பிரிட்டனில் அந் நாள் பிரதமர் கிளாட்ஸ்டன் முதலியோரையும் உணரச்செய்த பெருமை நவரோஜியைச் சாரும். இந்தியாவில் இந்த விஷயத்தில் விழிப்பூட்டியதும் அவருடைய சலியா உழைப்பின் பயனே. இதையே நவரோஜியின் 'இழப்புக் கோட்பாடு' (Drain Theory) என்று கூறுவர்.

நவரோஜி ஒரு பொருளாதார இயல் பண்டிதர் அல்லர்; ஆயினும் அவர் புதிய கோட்பாடு ஒன்றை வகுத்துள்ளார். ஆனுல், அவர் காலத்தில் இந்தியாவில் நிலவிய அவல நிலைமையைக் கண்டு துன்புற்று, அதன் காரணங்களை ஆய்ந்து அந்நியராட்சியினுல் விளையும் இன்னல்களையும், சுரண்டல்களையும் நட்டங்களையும் எடுத்துக்காட்டி, நாட்டு மக்களிடையே ஒரு விழிப்பையுண்டாக்கி, நாட்டுப் பற்றை வளர்த்தவர்களில் முதன்மையானவர் நவரோஜி. வெறும் குற்றச் சாட்டுகளுடன் நிற்காமல், வறுமைப் பிணியை நீக்க அவசியமான சீர்திருத்தங்களையும் அவர் வலியுறுத்திஞர். பொருளாதார முனையில் முதலாவதாகப் போர் தொடுத்த இந்தியப் பெருமகனுர் நவரோஜியாவர்.

மகாதேவ கோவிந்த ரானடே (Mahadev Govind Ranade, 1842-1901)

மகாராட்டிரத்தைச் சேர்ந்த ரானடே பேராசிரியர், வழக்கறிஞர், மாநில நிர்வாகக் குழுவின் சட்ட உறுப்பினர் (Law Member, Executive Council), நீதிபதி (High Court Judge) ஆகிய உயர்ந்த பதவிகளில் பணியாற்றியவர். இந்தியர்களில் முதலாவதாகப் பொருளாதார இயலில் கட்டுரைகள் எழுதியவர். 'இந்தியப் பொருளாதாரக் கட்டுரைகள்' (Essays in Indian Political Economy) என்ற 1898-ல் வெளியான கட்டுரைத் தொகுப்பு ரானடே ஒரு சிறந்த பொருளாதார அறிஞர் என்பதற்கு ஒரு சான்ருகும்.

தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் (classical economists) கோட்பாடுகள் மாருத பொருளாதார சமூகத்துக்கும்

(Static society) ஆங்கில நாட்டுக்குமே பொருந்தும். சாதிப் பிரிவுகளாலும் கூட்டுக் குடும்ப முறையாலும் மிகவும் பாதிக்கப்படும் இந்திய சமூகத்துக்குப் பொருந்தா. மேலும், மேலை நாடுகளைப் போல், இந்திய மக்களிடையே செல்வத்தைத் திரட்டும் நோக்கம் முதலிடம் பெறவில்லையாதலாலும் ஸ்மித், ரிக்கார்டோ, மால்தஸ் ஆகியோரின் தன்னலம், பொருளீட்டல் என்ற எடுகோள்கள் செறிந்த தத்துவம் இந்திய சமூகத்திற்கு உகந்ததல்ல என்று ரானடே கருதினர். ஜர்மானிய தேசீய வாதப் பொருளாதார இயல் அறிஞர் பிரடரிக் லிஸ்டின் கோட்பாடுகள் ரானடேயின் உள்ளத்தைக் கவர்ந்தன. பொருளாதார முன்னேற்றம் காண இன்று ஈட்டக்கூடிய செல்வத்தைவிட, தொழிற் கல்வியறிவு, பயிற்சி முதலானவையே சிறப்பு வாய்ந்தவையென்று லிஸ்ட் கூறியதைப் போலவே அவரும் கூறினர். வறட்டுக் கோட்பாடு மட்டுமே பயனளிப்பதரிது ; சூழ்நிலைக்கும் நடைமுறைக்கும் ஏற்ப வகுக்கப்படும் கொள்கைகளும் கைக்கோள்களுமே பலனளிக்கும் என்று வரலாற்று முறைக் கருத்தோர் பாணியில் ரானடே தமது கட்டுரைகளில் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தியர் படும் வறுமைக் கொடுமைக்கு (1) அந்நிய நாட்டுச் சரக்குகளின் கடும் போட்டியினுல் கைத்தொழில்கள் நலிவுற்றமை. (2) விவசாயத்தைப் பெரும்பான்மையினர் நம்பி வாழ்வது. (3) கடன் வசதிகள் கிடையாமை ஆகிய மூன்று காரணங்களைக் காட்டினர். பிரிட்டிஷ் ஆட்சியாளர் இந்தியாவிலிருந்து மூலப் பொருட்கள் தமது நாட்டுக்கு ஏற்றுமதி செய்திட, விவசாயத்துக்கு ஊக்கம் அளித்தது, நாட்டின் பொருளாதாரத்தை மேலும் பலவீனப்படுத்தியது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய நாட்டின் வறுமையைப் போக்கவும் பொருள் வளத்தைப் பெருக்கவும் அவர் கூறிய யோசனைகள் வருமாறு : (1) ரயத்துவாரி நிலச்சட்டமுறையை நாடு முழுவதிலும் செயல்படுத்தவேண்டும். (2) நிலவரி நிகர வருமானத்தில் செம்பாதிக்குமேலிருக்கக் கூடாது. வரியைப் பணமாகச் செலுத்தாமல், விளைபொருள்களாகப் பெற்றுக்கொள்ளவும் வழி செய்ய வேண்டும். (3) விவசாயிகளுக்குக் கடனுதவி மிக மிக அவசியம் ; அதற்குச் செல்வந்தர்கள் குழு வொன்று அமைத்து ஒவ்வொரு மாவட்டத்திலும் சீரிய முறையில் விவசாயிகளுக்குக் கடனளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றார். கூட்டுறவு சங்கங்கள் இயக்கம் தொடங்குமுன் ரானடே கூறிய யோசனை இது. அரசினரின் ஆட்சியினுலும் கைக்கோள்களாலும் கைத்தொழில்கள் அழிவுற்று, விவசாயமும் இழிந்த நிலை அடைந்திட்டபடியால் அரசினரே நேரடியாகவும் தீவிரமாகவும் இவ்விரண்டு துறை

களையும் வளமுறச் செய்யவேண்டும். உபரியாகவுள்ள விவசாயக் குடிமக்களுக்குத் தொழில் துறையை விரிவடையச் செய்து அதில் வேலை வாய்ப்பு அளிக்கவேண்டும் என்றும் பரிந்துரைத்தார்.

பொருளாதார வளர்ச்சிக்குத் திட்டம் திட்டுவது அவசியம். சமூக நல அரசு நிர்மாணிப்பதே அரசியல் கைக்கோளின் இலட்சியமாக இருக்கவேண்டும். இதை நிறைவேற்ற, சமூக, அரசியல், பொருளாதார நிறுவனங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து முயல வேண்டும். கட்டுப்பாடில்லாத அனைத்து நாட்டு வணிகம் இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு ஊறு விளைவிக்கும். இயந்திரத் தொழில் ஆலைகள் நிறுவவேண்டும். விவசாயம் தவிரப் பிற தொழில்களின் வளர்ச்சிக்குப் பல்வேறு வழிகளிலும் பல் வேறு முனைகளிலும் செயலாற்றுவது அவசியம். இந்த யோசனைகளையெல்லாம் ஒன்று சேர்த்துப் பார்த்தால், ரானடேயை இந்தியாவின் பிரடரிக்லிஸ்ட் என்று கூறலாம். மேலும், ரானடே இந்தியாவின் திட்டக் கொள்கையின் தந்தையெனப் பாராட்டத் தகுதி வாய்ந்தவர்.

### ரமேஷ் சந்திர தத்தர் (Ramesh Chandra Dutt 1848-1909)

தத்தர் தமது 21-வது வயதில் இந்தியன் ஸிவில் சர்வீஸ் தேர்தலில் வெற்றி பெற்றார். மாவட்ட நீதிபதி, கமிஷனர் என்ற பதவியுயர்வுகள் கிடைத்தன. 1899-ல் இந்திய தேசீயக் காங்கிரசின் தலைவர் ஆனார். கடைசியில் அவர் லண்டன் பல்கலைக் கழகத்தில் இந்திய வரலாற்று ஆசிரியர் பதவியேற்றார். தெளிந்த பொருளாதார நுட்ப அறிவுள்ள மேதை தத்தர். அத்துடன் தமது நிர்வாகத்துறை அனுபவத்தையும் பயன்படுத்தி அவர் எழுதிய நூல்கள் மூன்றும் இந்திய நாட்டின் பொருளாதார இலக்கியத்தின் தொன்மை நூல்கள் (classics) ஆகும். இந்தியப் பொருளாதார வரலாற்றை இரண்டு நூல்களாக வெளியிட்டார்: (1) பிரிட்டிஷ் ஆட்சியின் முற்பகுதியில் இந்தியா (India under Early British Rule, 1902), (2) விக்டோரியா யுகத்தில் இந்தியா (India in the Victorian Age, 1904); இவ்விரண்டும் முதல், இரண்டாம் பாகம் என்று வெளியாயிற்று. இரண்டும் சேர்ந்து ஒரு சிறந்த இந்தியப் பொருளாதார வரலாற்று நூல். (3) இந்தியாவில் பஞ்சங்கள் (Famines in India, 1900); இது பஞ்சங்களின் காரணங்களையும் அவற்றின் கொடுமைகளையும் பற்றி ஆதார பூர்வமாக எழுதப்பட்ட நூல்

ரமேஷ் சந்திரர் இந்தியாவை வாட்டும் வறுமைக்குக் காட்டிய காரணங்கள் வருமாறு: பஞ்சங்கள், நிலத்தில் குறைவான விளைச்சல், விளைச்சல் பொருட்களின் தாழ்ந்த விலை, நில உரிமை

முறை (tenures), நிலவரி முறை, ஜன நெருக்கம், கைத்தொழில் களின் சீர் குலைவு முதலானவை. வரலாற்று நூலாசிரியராகிய தத்தர் மேற்கூறிய காரணங்கள், எப்படித் தோன்றின? எப்படிப் பரவின? என்பன பற்றித் தெளிவாக அவருடைய நூல்களில் விளக்கியுள்ளார். பிரிட்டிஷ் ஆட்சியினர் கடைப்பிடித்த தடையில்லா வணிகக் கைக்கோள் இந்தியக் கைத்தொழில்களை நாசமாக்கின. இயந்திர ஆலைகளில் செய்த சரக்குகளின் போட்டியைச் சமாளிக்க முடியாமல் அவை அழிந்தன. கைத்தொழில்கள் அழியவே, மக்கள் திக்கின்றிக் கிராமங்களை நோக்கி விரைந்தனர். அங்குள்ள விவசாயத் துறையில் உள்ள பிரச்சினைகள் கடுமையாயின. இவ்வாறு விளக்கம் தந்தார் தத்தர்.

வறுமையை அகற்றவும் தொழில் துறையில் முன்னேற்றம் காணவும் அவர் கூறிய யோசனைகளில் பல இன்றும் நிறைவேற்றத் தகுந்தவை: (1) இந்திய அரசின் நிருவாகச் செலவைக் குறைக்கவேண்டும். (2) நீர்ப்பாசனத் திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றவேண்டும். (3) இந்தியப் பருத்தித் தொழிலின் மேல் விதிக்கப்பட்ட ஆயத் தீர்வையை (excise duty) நீக்க வேண்டும். (4) அரசாங்கக் கடன் பத்திரங்களுக்குள்ள வட்டி வீதத்தைக் குறைக்கவேண்டும். (5) இராணுவச் செலவைக் குறைப்பதற்கு, இந்திய அரசும் பிரிட்டிஷ் அரசும் ஒரு நேர்மையான முறையில் உடன்பாடு செய்தல் வேண்டும். (6) நிருவாகத்தில் இந்தியர்களை உயர்நிலைப் பதவிகளிலும் நியமிக்கவேண்டும். (7) இந்திய அரசு ரயில் பாதைகள் நிறுவும் கம்பெனிகளுக்குக் கடனளிப்பதை நிறுத்தவேண்டும். (8) நில வரிகளை 30 ஆண்டுகளுக் கொருமுறை பரிசீலனை செய்து தீர்மானிக்கவேண்டும்; நிலவரியின்மேல் போடுகின்ற செஸ்களை (cess) 6¼ சத வீதத்துக்கு மீறாமலிருக்கவேண்டும். (9) இந்திய அரசு தனக்கு வேண்டும் ஆயுதங்கள், பண்டங்கள் முதலியவற்றை இந்தியாவிலேயே வாங்கவேண்டும். சீமையிலிருந்து இறக்குமதி செய்யக்கூடாது. இந்த யோசனைகளில் பெரும்பான்மையானவை இந்தியாவின் 'இழப்பை'க் குறைக்கக் கூடியவை. இதனாலேயே தத்தரையும் நவரோஜியுடன் சேர்த்து இழப்புக் கோட்பாட்டை வகுத்தவர் என்று அறிஞர் கூறுகின்றனர்.

நிலத்தின் விளைச்சலை உயர்த்தவேண்டும்; விவசாயிகளின் வருமானமும் உயரவேண்டும். பஞ்சங்களை ஒழிக்கவேண்டிய திட்டங்களை உடனடியாக நிறைவேற்றவேண்டும். கிராமப் புறங்களில் வேலை வாய்ப்புகளைப் பெருக்கவேண்டும். குடிசைத் தொழில்களை ஊக்குவிக்கவேண்டும். பொதுவாக எல்லா வழிகளிலும் பாமர மக்களின் வருமானத்தையும் வாழ்க்கைத்

தரத்தையும் உயர்த்தவேண்டும். இவற்றை ஆர். சி. தத்தர் அவருடைய நூல்களில் நன்கு வலியுறுத்துகிறார்.

### கோபாலகிருஷ்ண கோகலே (1866–1915)

மகாராட்டிரத்தின் தவப் புதல்வர்களில் ஒருவர் கோகலே. 1896-லிருந்து ஆறு ஆண்டுகள் பெர்குசன் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றினார். 1899-ல் பம்பாய்ச் சட்டமன்ற உறுப்பினர், 1901-ல் வைசராயின் நிர்வாகச் சபையில் உறுப்பினர்; 1905-ல் இந்திய தேசீயக் காங்கிரஸ் தலைவர்; 1912-ல் பொதுத் துறை ஊழியர்கள் நிலையை ஆராயும் ராயல் கமிஷனின் உறுப்பினர் என்று ஒன்றன்பின் ஒன்றாகப் பல உயர் பதவிகள் கோகலேயைத் தேடி வந்தன. மேலும், 24-வது வயதில் புனு சர்வஜன சபாவையும், 39-வது வயதில் புகழ் பெற்ற இந்தியாவின் ஊழியர்கள் சங்கத்தையும் (Servants of India Society) நிறுவக்கூடிய பேராற்றல் படைத்தவர் கோகலே. இந்திய அரசின் நிதி அதிகாரத்தைப் பரவலாக்க யோசனை கூறும் பொருட்டு நியமிக்கப்பட்ட வெல்பி ராயல் கமிஷன் (Royal Commission on Decentralisation of Financial Powers) கோகலேயை அவரது யோசனைகளைக் கேட்க லண்டனுக்கு அழைத்தது. மீண்டும் இராணுவச் செலவைப் பிரிட்டிஷ் அரசும் இந்திய அரசும் பகிர்ந்து கொள்ளும் முறையைப் பரிந்துரைக்க நியமிக்கப்பட்ட ராயல் கமிஷனும் கோகலேயை லண்டனுக்கு அழைத்து அவரது யோசனைகளைப் பதிவு செய்துகொண்டது. இந்தக் கமிஷனை நியமிக்கப் பெரும் பாடுபட்ட நவரோஜி அதில் அங்கம் வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியச் சட்டமன்றங்களில் அவர் ஆற்றியுள்ள பேருரைகளிலிருந்தும், ராயல் கமிஷன்களுக்கு அவர் சமர்ப்பித்த அபிப்பிராயங்களிலிருந்தும் கோகலேயின் பொருளாதாரச் சிந்தனையின் ஆழ்ந்தகன்ற நோக்கையும் போக்கையும் புரிந்துகொள்ளலாம். அவர் தனிப் பொருளாதார நூல் எழுதவில்லை. சம்பவங்கள் செறிந்திருந்த அவர் வாழ்க்கையில் அவருக்கு நூல் எழுத அவகாசம் ஏது?

#### (1) வரி விதிப்புக் கொள்கைகள்

பர்மா யுத்தத்தினால் ஏற்பட்ட செலவு 15 லட்சம் பவுன். இதனால் ஏற்பட்ட துண்டை நீக்க, 1896-ல் இந்திய பட்ஜட்டில் இந்திய அரசு உப்பு வரியை உயர்த்தத் தீர்மானித்தது. இதைத் தீவிரமாக எதிர்த்துப் பேசும்பொழுது, ' இராணுவத்தின் சம்பளத்தைக் குறைத்துச் சரிக்கட்ட அஞ்சுகின்ற அரசு, வாயில்லாப் பூச்சிகளாக வாழும் இந்திய மக்களின்மேல் இந்த உப்பு வரிச்

சுமையைச் சுமத்துவது ஒரு பெரிய அநீதி' என்று கூறித் தாக்கினார். இந்திய அரசு இந்தியப் பருத்தி ஆலைகளில் உற்பத்தியான பருத்தித் துணிகள் மேல் $3\frac{1}{2}$ சத வீதம் ஆயத்தீர்வை விதித்தது. அப்பொழுது இந்திய அரசு மேன்சஸ்டர் மில் முதலாளிகளின் கைப்பாவையென ஆடுவதை வன்மையாகக் கண்டித்தார். நிலவரியைப் பற்றி விவாதம் எழுந்தபொழுது, நிலவரியை ஒருக்காலும் மொத்த வருமானத்தில் 20 சதவீதத்திற்குமேல் உயர்த்தக்கூடாது என்று வற்புறுத்தினார்.

(2) இராணுவச் செலவு

வெல்பிக் கமிஷனுக்கு அளித்த வாக்குமூலத்தில், கோகலே தமது அபிப்பிராயங்களை மூன்று பாகங்களாகப் பிரித்து விளக்கியுள்ளார். முதலாவதாக இந்திய ஆட்சியில் நிதித்துறையில் அதிகாரம் செலுத்துபவர் யார் என்ற கேள்வியைக் கிளப்பி விடை பகர்கிறார். இந்திய அரசின் வரிவிதிப்பு முறை பிரிட்டிஷ் பேரரசின் நன்மைகளைக் கோரியதாக இருக்கின்றது. அல்லது பிரிட்டிஷ் வணிகர், தொழிலதிபர் ஊதியங்களைப் பெருக்கச் செயல்படுகின்றது. அவர்களே வரிவிதிப்பு முறையை வகுப்பவர்களாகத் திகழ்கின்றார்கள். 'பிரதிநிதித்துவம் இன்றி, வரி விதிப்புக் கூடாது' (no taxation without representation) என்ற குடியாட்சித் தத்துவத்தின் அடிப்படை புறக்கணிக்கப்பட்டு, இந்திய மக்களுக்கு இந்திய வரிவிதிப்பு முறையில் எள்ளளவு அதிகாரம் கூட வழங்கவில்லை. இந்நிலை மாறினாலொழிய இந்தியாவில் வறுமைப் பிணியை நீக்க முடியாது என்று வலியுறுத்தினார்.

இரண்டாவதாக, ஆப்கானிய, பர்மிய யுத்தங்களின் செலவுகளை இந்தியா மேல் திணிப்பது நேர்மையற்ற செயல். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை விரிவடையப் புரியும் போர்களில் இந்தியாவுக்கு யாதொரு தொடர்பும் கிடையாது. மேலும், பிரிட்டிஷ் இராணுவம் இந்திய நாட்டின் அமைதியைக் காப்பதற்குத் தேவையேயில்லை. இந்திய இராணுவத்தில் உயர்நிலைப் பதவிகளில் ஏராளமான சம்பளங்கள் வாங்கும் பிரிட்டிஷ் அதிகாரிகளை நியமிக்க வேண்டியதில்லை. வடமேற்கு, வடகிழக்கு எல்லைப் போர்களின் செலவுகளையும் இந்தியாவை ஏற்றுக்கொள்ளக் கட்டாயப் படுத்துவதும் அநீதிச் செயல். இவ்வாறு எடுத்துக்காட்டி இராணுவச் செலவுகளை நேர்மையான முறையில் இரு அரசுகளும் பகிர்ந்து கொள்ளக் கோகலே மன்றாடினார். இராணுவத்துக்கான செலவு, மொத்த இந்திய அரசின் பட்ஜட் செலவில் 35 சதவீதமாக விருந்தது. இதைக் கணிசமாகக் குறைக்க வேண்டியது மிகவும் அவசியம். பிரிட்டன் ஒரு பகுதியை ஏற்றுக் கொள்ள வேண்டும். லண்டனிலுள்ள இந்திய அலுவலகச் செலவில்

இந்தியா ஒரு பாதியை ஏற்றுக்கொள்ளலாம். இந்திய அரசுக் கடனையும் அதற்கான வட்டிச் செலவையும், பிரிட்டிஷ் அரசு ஏற்றுக்கொள்வதுதான் நியாயம். ஏனெனில், இந்தக் கடனெல்லாம் பிரிட்டிஷ் பேரரசின் சார்பாகச் செய்த செலவுகளின் விளைவு.

மூன்றாவதாக இந்திய அரசின் செலவினங்களையும் அவை விரைவாக வளரும் போக்கையும் எடுத்துக் காட்டினார். 1857-க்கு முன் முப்பது கோடி ரூபாயாக விருந்த செலவு, 1897-ல் 73 கோடி ரூபாயாக உயர்ந்து விட்டது. கம்பெனியார் சிக்கனமாகச் செலவிட்டனர். வரி விதிப்பைக் கூடியவரை தவிர்த்தனர். 1857-க்குப் பின் பிரிட்டிஷ் அரசியின் ஆட்சி தொடங்கியபின் செலவுகளைக் கவலையின்றிப் பெருக்குவதைக் காண்கிறோம். வரிச் சுமைகளைத் தாறுமாறாக ஏற்றுவதையும் பார்க்கிறோம். செலவினங்களைச் சுருக்குவதில் மிகுந்த அக்கறை காட்டவேண்டுமென்று கூறினார்.

கோகலே 1915-ல் ஐம்பது வயது கூட ஆகுமுன்பே மறைந்தார். இந்த அற்பாயுளிலும், சட்டமன்றங்களில் ஆற்றிய உரைகளாலும், ராயல் கமிஷன்களுக்கு ஈந்த வாக்குமூலங்களாலும், எல்லாவற்றிற்கும் மேலாக, இந்திய ஊழியர் சங்கத்தை நிறுவினதாலும், கோகலே நாட்டின் நலனுக்குப் புரிந்த பணிகள் மதிப்பிடற்கப்பால் பட்டவை. நாட்டு மக்களின் வறுமையைப் போக்கவும், அரசு சீராகவும் நேர்மையாகவும் நடக்கவும் என்ன செய்யவேண்டும் என்று திட்டவட்டமாகக் கூறி வாழ்நாள் முழுதும் வாதாடியவர். அவர் ஒரு செயல் வீரர். தமது குருவாகிய ரானடேயைப் பின்பற்றி பிரடரிக் லிஸ்டின் தேசீயவாதப் பொருளாதாரக் கொள்கைகளை மேற்கொண்டவர்.

## முடிவுரை

இந்த, அடிகோலியவர் நால்வரையும் 1850-லிருந்து 1930-வரை வாழ்ந்த இந்தியப் பொருளாதாரச் சிந்தனையாளரின் சிறந்த பிரதிநிதிகளெனக் கூறலாம். இவர்களில் ரானடேயும் கோகலேயும் ஜர்மானிய பிரடரிக்லிஸ்டின் தேசீயப் பொருளாதாரத் தத்துவத்தைப் பெரும்பாலும் விரும்பி மேற்கொண்டவர்கள். நவரோஜியும் தத்தரும் அவர்களைவிட ஒரு அடி முன் சென்றனர். காலனி ஆட்சியின் சிறப்பு இயல்பு தாய்நாட்டின் சுரண்டல், அதற்கான நிருவாகம் அமைத்தல், கைக்கோள்கள் வகுத்தல் முதலியன எனக் கூறலாம். இத்தகைய ஆட்சியில் சிக்குண்ட இந்தியாவின் அவல நிலையின் காரணங்களை ஆய்ந்து நவரோஜியும் அவருக்குத் துணைவருமான தத்தரும் வகுத்த இழப்புக் கோட்பாடு (Drain Theory) உலகச் சிந்தனையிலேயே இடம்பெறத் தகுதி வாய்ந்தது. பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவுக்குக் கிடைத்த அரியதொரு பாக்

கியம்—வரப்பிரசாதம். வெள்ளையர் சுமையைச் (White man's burden) சுமப்பதிலும், பின்தங்கிய நாட்டினர்க்கு நல்வாழ்வு அளிப்பதிலும் பிரிட்டிஷார் செய்துவரும் பணி மகத்தானது என்ற பேராரவாரம் ஒலித்த காலம் அது. ஒரு ரப்பர் பலூனை ஊசியால் குத்துவதுபோல், நவரோஜி தமது 'பிரிட்டிஷ் பண்புக் கொவ்வாத ஆட்சி' எனும் நூலால் இந்த ஆரவாரத்தை அர்த்தமற்ற தாக்கி விட்டார். காலனி ஆட்சிமுறை இந்தியருக்கு எத்துணை கேடுகள் விளைவித்திருக்கின்றன என்பதை இந்திய மக்களும் இந்திய அரசும் மட்டுமல்ல, பிரிட்டனின் அறிஞர்கள் பலர் உணருமாறு செய்தார் நவரோஜி. ஒரு நாட்டின் வருமானத்தில் கணிசமான பகுதி வட்டியென்றும், தாயகச் செலவுகளென்றும், பிரதி பலனில்லாது (unilateral) வெளி நாடுகளுக்குச் செல்வது, அந்த நாட்டின் சேமிப்பு, முதலீடு எல்லாவற்றையும் வரண்டு விடச் செய்கின்றது; எனவே, நாடு பொருளாதாரத் துறையில் வளருவதற்கு மாருகக் குறுகிக் கொண்டே போய் வறுமை, வேலையின்மை என்ற பிணிகளால் பீடிக்கப்பட்டு மீளாத் துயரில் ஆழ்கின்றது. இதுவே இழப்புக் கோட்பாட்டின் சாரம். இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பின், முன்னேறிய நாடுகள் பின்தங்கிய நாடுகளுக்குக் கடன், தொழில் நுட்ப நிபுணர்களின் பணி, இயந்திரங்கள், தளவாடங்கள் முதலான உதவிகள் செய்வது அவற்றின் கடமையும் அறமுமாகும் என்ற தத்துவம் பரவியுள்ளது. இம்மாதிரி வெளிநாட்டு உதவிகளிலும் இழப்புக் கோட்பாட்டின் சில அம்சங்கள் மறைந்து நின்று செயல்படுகின்றன; அவற்றில் முக்கியமானது ஒரு திசைப் பிரதி பலனில்லாப் பொருளோட்டம் (unilateral unrequited transfer) என்பது தற்கால அறிஞர்கள் பலரின் எண்ணம். எனவே இழப்புக் கோட்பாடு ஒரு பயனற்ற பழைய சித்தாந்த மன்று. இன்றைக்கும் உயிர்த் துடிப்புள்ள சூத்திரம். இதனால் நவரோஜியின் சிந்தனைச் சிறப்புப் புலனாகும்.

## 30. காந்தீயப் பொருளாதாரம்—சர்வோதயம்

### முன்னுரை

மகாத்மா என்றும், நாட்டின் தந்தையென்றும் வழிபடக் படும் மோகனதாஸ் கரம்சந்த் காந்தியின் (1869-1948) வாழ்க்கைக் குறிப்பை எழுதுவது கொல்லர் தெருவில் ஊசி விற்பதை ஒக்கும். ஆனாலும் காந்தியின் சிந்தனையைப் புதிய பாதையில் செலுத்தி, அதற்கு வளமும், உறுதியும், புதுமையும் நல்கிய நூல்களைக் குறிப்பிடுவது அவசியம். உண்மையே கடவுள் என்ற

அளவுக்கு ஆழ்ந்த அசைக்க முடியாத பற்றை உண்டாக்கியது ஆதியில் அரிச்சந்திர புராணமாகும். அறவழியையும் அகிம்சையையும் போதித்தன கீதை, உபநிடதங்கள், பிறசமய நூல்கள். சமத்தன்மை, எளிமை, புலனடக்கம் (equality, simplicity and asceticism) மூன்றையும் அவருடைய சிந்தனைக்கும் செயலுக்கும் அடிக்கல்களாக அமைத்தவை டால்ஸ்டாயின் நூல்கள். ஆங்கில ஞானி ரஸ்கினின் 'இந்தக் கடைசி (மனிதன்) வரை' (Unto This Last) எனும் நூல் அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட நூல் என்றால் மிகையாகாது. அதை 1904-ல் படித்தார்; படித்து முடித்தவுடனே அதைக் குஜராத்தி மொழியில் மொழிபெயர்த்தார். ரஸ்கினின் கருத்துகள் பசுமரத்தாணி போல் அவர் மனத்தில் பதிந்தன. பொருளீட்டல் என்னும் பணப்பேய் வழிபாட்டை விடுத்து, சமூக நலமே குறிக்கோளாக வேண்டுமென்ற ரஸ்கினின் பொன்மொழி காந்திக்கு அன்றிலிருந்து அவரது வாழ்க்கையில் தாரக மந்திரமாயிற்று. ரஸ்கின் குறித்த வழியில் அவரது புகழ் பெற்ற ஃபீனிக்ஸ் சமுதாயத்தை (Phoenix Settlement) நிறுவிச் சோதனைகள் பல புரியத் தலைப்பட்டார். இவற்றால், சமுதாயத்தின் கடைசிக் குடிமகன் வரைக்கும் நல்வாழ்வு அளிப்பது குறிக்கோள், உண்மையும் அகிம்சையும் அடிப்படைத் தத்துவங்கள், ஒத்துழையாமையும் அறவழி அன்பும் செயல் கருவிகள் என்று அவருக்கு ஆயின.

### இந்தியாவின் பொருளாதார நிலை

அவர் கற்ற நூல்களுக்கடுத்தாற்போல் அவருடைய சிந்தனையை உருவாக்கியது இந்தியாவின் நிலை ஆகும். தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பிய காந்தி 'வையத்து நாட்டிலெல்லாம் தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, பாழ்பட்டு நின்றதாமோர் பாரததேசந்தன்னை'ப் பார்த்து உள்ளம் வெதும்பினார். மக்களின் சொல்லொணா வறுமை, நலிந்து சீர்குலைந்த கைத்தொழில்கள், அந்நியராட்சியின் தன்னலக் கொடுமைகள், தீண்டாமை, சாதிப் பிரிவுகள், சமயச் சண்டைகள், மக்களிடையே செல்வத்தில் மலை மடுவெனும் ஏற்றத்தாழ்வு, பெரும்பான்மை மக்களின் உயிரற்ற வாழ்க்கை, பாழடைந்த கிராம சமுதாயங்கள் முதலாய கடும் பிரச்சினைகள் அவற்றிற்குத் தீர்வுகாணக் கூவியழைத்தது போன்ற பிரேமை அவரைக் கவ்விற்று.

### சிந்தனை வளர்ச்சி

காந்தி மேலை நாட்டு நாகரீகத்தை நன்கு புரிந்தவர். பொன் கொழிக்கும் அமெரிக்காவின் முதலாளித்துவம், வேலையின்மையையும் பசிப் பிணியையும் ஒழித்த ருசியக் கம்யூனிசம் சமூகப்

பாதுகாப்பு (Social Security) அளிக்கவல்ல பிரிட்டிஷ் சோஷியலிசம் ஆகிய மூன்று முறைகளிலுமே அவருக்கு நம்பிக்கையற்றுவிட்டது. அவற்றில் எந்த முறையையும் இந்தியா மேற்கொள்வது அவருக்கு விருப்பம் கிடையாது. தமது சித்தாந்தப்படி, நாட்டின் பண்பாட்டுக்குகந்த வழியில் புதியதொரு பாதையை வகுக்கத் தலைப்பட்டார். காந்தியின் இயற்கைப் பண்பே ஆத்திரப் படாமல் எதையும் செய்யும் ஆற்றல். எனவே மெள்ள மெள்ளச் சூழ்நிலையைப் புரிந்துகொண்டு அதற்கேற்பத் திட்டங்களைத் தீட்ட முனைந்தார். முதல் பருவத்தில், 1919 வரை, அவருடைய ஹிந்து ஸ்வராஜ் (1909) என்ற நூலில் கூறியபடி எல்லாத் தீமைகளையும் எதிர்த்துப் போராடுவதில் ஈடுபட்டார். எதிர்ப்பு (negative approach) முதலிடமும் ஆக்க வேலைகள் இரண்டாமிடமும் பெற்றன. இரண்டாவது பருவத்தில் (1919-1934) சுதேசி இயக்கமும் மேலை நாட்டு நாகரீகத்துக்கு மாறாக ஆக்க வேலைத் திட்டமும் (constructive programme) வகுத்தார். மூன்றாவது பருவத்தில் (1934-1948), அவருடைய சோதனைகளும் விடா முயற்சியும் பலனளித்தன. நிறைந்த அனுபவம், ஆழ்ந்த ஆத்ம சர்ச்சை, அசைக்க முடியாத நம்பிக்கை ஆகியவற்றிலிருந்து கனிந்த திட்டமே சர்வோதயம். இதை மேலை நாட்டுக் கம்யூனிசத்துக்கு மாறான ரத்த புரட்சியின்றி, உள்நாட்டுக் குழப்பமின்றி, வகுப்புப் போருமின்றிப் பெறக் கூடிய சோஷியலிசம் என்று காந்தியே கூறியுள்ளார்.

### காந்தியின் சிறப்புப் பண்பு

காந்திக்கு எந்த விஷயத்திலும் வறட்டுப் பிடிவாதம் என்பதே கிடையாது. சூழ்நிலை மாறுங் காலங்களிலும், புதிய சான்றுகள் கிடைக்கும் சமயங்களிலும் அவர் தமது எண்ணங்களையும் செயல் முறைகளையும் மாற்றிக் கொள்ளும் இயல்புடையவர். எடுத்துக் காட்டாக, இயந்திரத்தைப் பற்றி அவருடைய அபிப்பிராயம் மாறிய விதத்தைக் கூறலாம். மேலும், அவசரப்படேல் என்ற முதுரைக்கு அவர் நல்கிய மதிப்பு; எதையும் பதறாமல் மெள்ளச் செய்து முடிப்பது அவருடைய வழக்கம். இவற்றைக் கூறியபின் இனி காந்தியின் அடிப்படைப் பொருளாதாரக் கருத்துகளையும் சர்வோதயத்தின் சிறப்பையும் அதைச் செயலாற்றும் வழிகளையும் ஆராயத் தொடங்குவோம்.

### பொருளாதாரத்தின் இலக்கணம்

காந்தி அறநெறிக்கும் (ethics) பொருளாதாரத்திற்கும் எள்ளளவும் வேற்றுமை காணாதவர். 'உண்மையான பொருளாதாரம் உயர்ந்த அறவொழுக்கத்தை ஒருக்காலும் எதிர்த்து முரண்

படாது; அதேபோல் உண்மை அறநெறி என்பது நல்ல பொருளாதாரமாயிருக்கவேண்டும். பணப்பேயை வழிபடும் எந்தப் பொருளாதாரமும், எளியோரை வருத்தி வலியோர் செல்வம் திரட்டுவதைச் சாத்தியமாக்கும் எந்தப் பொருளாதாரமும் பொய்மைமிக்க இருண்ட அறிவியல். அது சாவைத்தான் குறிக்கும். உண்மைப் பொருளாதாரம் சமூக நீதியைக்காக்கும். பலவீன மக்கள் உட்பட அனைவருக்கும் சமமாக நலனளிக்கும். நல்வாழ்வுக்கு இன்றியமையாதது.' (ஹரிஜன், 9-10-1937). இக் கருத்து 'அருளொடும் அன்பொடும் வாராப் பொருளை'ப் பகைமையென ஒதுக்கித் தள்ளி விடவேண்டும் என்ற வள்ளுவர் கருத்தும் ஒப்பு நோக்கத் தகும்.

## நல்வாழ்வு (Good life)

காந்தியின் நல்வாழ்வு பற்றிய கருத்துப் பண்டைக்கால கிரேக்க, உரோமாபுரி, இந்திய ஞானிகளின் தத்துவத்தை நினைவூட்டக் கூடியது. நல்வாழ்வு பெறுவதற்குப் புலன்களை அடக்கி, ஆசைகளைக் குறைத்துக் கொள்வதைத் தவிர வேறு வழியே கிடையாது என்று காந்தி காட்டும் நெறி, மேலை நாட்டுத் தற்காலப் பொருளாதாரத்தின் கூற்றுக்கு நேர்மாறானது. பின்னது விருப்பங்களையும் தேவைகளையும் பல்கிப் பெருக்கினாலன்றிப் பொருளாதார முயற்சியும் முன்னேற்றமும் காண முடியாதது என்ற அடிப்படையில் எழுப்பியதோர் அறிவியல். தேவைகளைப் பெருகவிட்டால், அவற்றை நிறைவு செய்யப் பல்கோடிப் பண்டங்கள் உற்பத்தி (mass production) அவசியம். நலனுக்கும் திறனுக்கும் வேண்டாத அனுவசிய ஆடம்பரப் பொருள்களும், விலங்குணர்ச்சிகளைப் பூர்த்தி செய்யும் பண்டங்களையும் உற்பத்தி செய்ய வேண்டிவரும். தொழில் அசுர வளர்ச்சி பெறும்; பூதாகாரமான நகரங்கள் வளரும். கிராமங்கள் பாழ்படும். ஒரு சிலரிடம் பணம் குவியும். பெரும்பான்மை மக்கள் வறியராவர். ஏழை, பணக்காரரென்ற வேற்றுமையும், முன்னவரைப் பின்னவர் கொடுமைப்படுத்தித் துன்புறுத்தும் பரிதாபநிலை ஏற்படும். பொறாமை, அதிருப்தி, பேராசை முதலான தீயவுணர்ச்சிகளுக்கு மக்கள் பலியாவர். மன நிறைவும் இன்புற்றிருக்கும் நிலையும் கானல் நீராகிவிடும். எனவே, ஆசைகளைக் குறைத்து, எளிய வாழ்வும், உயர்ந்த சிந்தனையும் பெற்று வாழ்வதே சிறந்தவழி என்பது காந்தியின் உறுதியான நம்பிக்கை.

## உணவுக்கு உழைப்பு (Bread labour)

ஆடம் ஸ்மித், ரிக்கார்டோ, மார்க்ஸ் முதலியோர்போல, உழைப்புதான் செல்வத்தின் பிறப்பிடம் என்று காந்தியும் வலி

யுறுத்துகிறார். உடல் உழைப்பின்றி அறிவினால் உழைப்பவரும் உணவுக்கென்று உழைத்தல் அவசியம் என்பது காந்தியின் அடுத்த கருத்து. கீதையிலிருந்து மட்டுமின்றி, ரஸ்கின், டால்ஸ் டாய், ருசிய விவசாய எழுத்தாளர், பான்டரெப் (Bondaref) ஆகியோரின் நூல்களிலிருந்தும், மக்கள் அனைவரும் உணவுக்குக் கையால் உழைக்க வேண்டும் என்ற தத்துவத்தை (doctrine of bread labour) அறிந்து அதைக் காந்தி வற்புறுத்துகிறார். உடல் உழைப்பின் மேன்மையைப் பரவசத்துடன் போதித்ததுமன்றி, காந்தி தமது வாழ்க்கையிலும் அந்தக் கோட்பாட்டைக் கடைப் பிடித்தார். உடல் உழைப்பில் அனைவரும் ஓரளவு ஈடுபட்டால், தொழில்களினால் பெருமை, சிறுமையென்ற வேற்றுமை நீங்கிச் சமத்தன்மை உண்டாகும். தொழில்களில் தாழ்ந்தன, உயர்ந்தன என்ற பாகுபாடு இருக்கவே கூடாது. தோட்டிக்கும் தொண்ட மானுக்கும் ஒரே சம்பளம், ஒரே ஊதியம் என்று ஏற்படவேண்டு மென்று காந்தி தீவிரமாக விரும்பினார்.

**அனைவருக்கும் நலன் (Welfare for all)**

தன்னலங் கருதிச் செயல்படுவது மனிதனின் இயற்கைப் பண்பு; அதனால் பொது நலமும் பேணப்படும் என்ற ஸ்மித் தின் கோட்பாட்டுக்கு முற்றிலும் மாறானது காந்தியின் கொள்கை. தன்னலத்தை விடுத்துப் பிறருக்குப் பணி செய்து கிடப்பதே எம் கடன் என்று மக்கள் வாழவேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக் காட்டினார். தன்னலப் பேய்க்கு இடம் கொடுத்தால், பொருளீட் டல், பிறரைத் துன்புறுத்தியும், அறநெறி பிழைத்தும் செல்வம் திரட்டுதல் என்ற பேராசை மக்களை உந்தித் தள்ளும். எத்துணை செல்வம் திரண்டிடினும், மன நிறைவு கிட்டாது. இதுவல்ல இன் புற்றிருக்கும் வழியென்று காந்தி கூறுகின்றார். தன்னலத்தைத் தவிர்த்துப் பொது மக்களுக்குப் பணி செய்வதே சமூக நலனைப் பெருக்கும் சிறந்த வழி யென்றும் போதித்தார். தொன்மைப் பொருளாதாரம் செல்வத்தை மையமாக வைத்து எழுதப்பட்ட தென்று கூறினர் கார்லைல், ரஸ்கின் முதலானோர். இவ்விழுக் கைத் துடைக்கும் வகையில் மார்ஷலின் பொருளாதாரம் செல் வத்தை ஒரு புறமும், மனிதனை நாயகனாகவும் விளங்கச் செய்தது என்பது நினைவிலிருக்கும். காந்தி மனிதனுக்கும் சமூக நலனுக் கும் முதலிடம் அளித்தார். பயன்பாட்டுக் கொள்கையின் தந்தை யான பென்தம் உயர்ந்தபட்ச எண்ணிக்கையுள்ள மக்களுக்கு உயர்ந்தபட்ச நலனளிப்பது அரசின் குறிக்கோளாகவிருக்க வேண்டுமென்று கூறினாரல்லவா? காந்தி இந்தப் பயன்பாட்டுக் கொள்கைப்படி (utilitarian theory) 100 பேரில் 51 பேரின் நலன் சிறக்குமாயின் அரசின் கடமை இனிது நிறைவேறியதாகும்;

அது ஒருக்காலும் போதாது. சீரிய நலன் 100 பேருக்கும் கிடைத்தாகவேண்டும். அதுவே ரஸ்கினின் 'இக் கடைசி (மனிதன்) வரை' என்ற சித்தாந்தத்தின் குறிக்கோள் என்று எடுத்துக் காட்டுகிருர். ஒரு மனிதன் கூட நல்வாழ்வின்றித் துன்புறுவாருயினும், அரசு தனது கடமையை முழுமையாகச் செய்து விட்டதாக எண்ணுவது தவறு என்று வாதித்தார் காந்தி. அனைவருக்கும் நலன் (Welfare for all) என்பதே அவர் வரையறுத்த எல்லை.

**இயந்திரம் பற்றிய கருத்து**

ஹிந்து சுவராஜ் (1909) எனும் நூலில் இயந்திரத்தை ஒரு பாவச் சின்னம் அதனால் ஒரு நன்மையும் கிடையாது; அதனால் விளைவதெல்லாம் தீமையே என்று காந்தி வெறுப்புடன் கூறினர். 'உணவுக்கு உழைப்பு' மனிதருக்கு முழுமையான குண வளர்ச்சியை (full personality) நல்கும். அதற்கு இயந்திரம் வாய்ப்பில்லாது கெடுத்துவிடும் என்ற எண்ணம் காந்தியின் உள்ளத்தில் நிறைந்திருந்தது. ஆனல் 1924-ல் சிங்கர் தையல் இயந்திரம் பெண்களைக் களைப்புதரும் உழைப்பிலிருந்து விடுதலையளிக்கின்றதைக் கண்டு வியந்து பாராட்டினர். அத்துடன் இயந்திரத்தைப் பற்றிய அவருடைய அபிப்பிராயம் மாறியிருப்பதையும் குறிப்பிட்டார். 'குடிசையில் வாழும் கோடிக் கணக்கான மக்களினது உழைப்பின் கடுமையையும் சுமையையும் குறைக்கவல்ல எந்த இயந்திரத்தையும், சிறிய எளிய கருவிகளையும் நான் வரவேற்கிறேன்' என்ருர் காந்தி. ஆனல், லட்சக் கணக்கில் தொழிலாளர்கள் தங்கள் கிராமங்களிலுள்ள இல்லங்களிலிருந்து கொண்டே செய்யக்கூடிய வேலைகளை இயந்திரங்கள் செய்ய அதனல் அவர்கள் எல்லோரும் வேலையின்றி முடங்கிக் கிடக்க நேரின், அத்தகைய இயந்திரங்களுக்கு நமது சமுதாயத்தில் இடமளிக்கக் கூடாது' என்று கூறினர். ஆட்களுக்குப் பஞ்சமுள்ள நாட்டில் எல்லா வேலைகளுக்கும் இயந்திரங்கள் தேவை. ஆனல், இந்திய நாட்டிலோ வேலைக்குப் பஞ்சம். இந் நிலையில் இயந்திரங்களை நிறுவிக் கிடைக்கக்கூடிய வேலையையும் குறைப்பது மாபாதகம். இயந்திரங்கள் முன்யோசனையின்றிப் பெருக்கினல் விளையக்கூடிய தீமைகளை அவர் விளக்கிய விதம் இங்கு குறிப்பிடத்தக்கது: 'முதலில் இயந்திரம், பின் பெரிய ஆலைகள், அதன் பின் பெருவாரி உற்பத்தி, நாட்டின் தேவைக்கு மீறிய உற்பத்தி, செல்வமும் அதிகாரமும் (wealth and power) ஒரு சிலரிடம் குவிதல், அயல் நாடுகளுக்கு உபரிப் பொருள்கள் ஏற்றுமதி, திணறிக் கொட்டல் (dumping), அயல் நாட்டின் தொழில் அழிவு, ஒரு நாடு மற்ற நாடுகளைச் சுரண்டல் என்று தீமைகள்

அடுக்கடுக்காகப் பெருகிக்கொண்டே போகும்' என்று தர்க்க முறையில் வாதிக்கின்றார். 'இந்தியாவில் இயந்திரப் புரட்சி முழுமையாக நடந்தேறிப் பிரிட்டன், அமெரிக்கா, ஜப்பான் போலத் தொழில் முன்னேற்றம் ஏற்படுமாயின் நமக்கு வெளி நாடுகளில் மார்க்கட்டுகளைக் கைப்பற்ற ஒரு நாதிர் ஷா தேவைப் படும். அந்த நிலையை நினைத்தாலே என் உள்ளம் பதறுகின்றது' என்று கூறுகின்றார். எனவே, இயந்திரத்தால் விளையும் தீமை களில் (1) தனியுரிமை நிறுவனங்களைத் தோற்றுவிப்பது (monopolies), (2) பணமும் அதிகாரமும் குவிதல் (concentration of wealth and economic power), (3) நாட்டு மக்களை அல்லது அயல் நாட்டினரைச் சுரண்டுதல் (exploitation) முக்கியமானவை என்று சுட்டிக் காட்டுகின்றார்.

மேற்கூறிய அபிப்பிராயத்திலிருந்து மீண்டும் சிறிய மாறுதல் களை 1940-ல் காந்தி வெளியிட்டார். குடிசைத் தொழில்களில் இயந்திரங்களை உபயோகிக்கலாமா என்ற கேள்விக்கு 'நவீன இயந்திரங்களையும் கருவிகளையும் கிராமங்களில் பயன்படுத்து வதை நான் எதிர்க்கவில்லை. ஆனால், அதற்கு இரண்டு நிபந்தனை கள் விதிப்பேன். (1) கிராம மக்கள் அவற்றைச் செய்யவும் பழுது பார்க்கவும் அவற்றின் விலை அவர்கள் வாங்கக்கூடிய அளவில் மலிவாக விருக்க வேண்டும்; (2) பிறரைச் சுரண்டும் கருவிகளாக அவற்றைப் பயன் படுத்தக்கூடாது என்று விடை பகர்ந்தார். மேலும் 'வருங்காலத்தில் மின் நிலையங்கள், கப்பல் கட்டும் தளங் கள், இரும்பு எஃகுத் தொழிற்சாலைகள், இயந்திரங்கள் செய்யும் ஆலைகள் முதலிய பெரிய அளவுத் தொழில்களும், சிறிய கிராமக் கைத்தொழில்களும் ஒன்றின் பக்கத்தில் ஒன்றாக வளரும் என்று எதிர்பார்க்கிறேன். இதுகாறும் இயந்திர ஆலைத் தொழில்கள் குடிசைத் தொழில்களை நசுக்கின. இனி அவை பின்னவைக்குச் சேவை புரியும்,' என்று கூறினார். பொது வசதி (public utilities) நிலையங்களிலும், கையால் செய்ய முடியாத தொழில்களிலும் கனரக இயந்திரங்களைப் பயன்படுத்துவதையும் அவர் எதிர்க்க வில்லை. பெரிய இயந்திரங்களை உபயோகிக்கும் தொழிற் கூடங் களை நாட்டுடைமையாக்க வேண்டுமென்பது அவர் கொள்கை. தொடக்கத்திலிருந்த கடும் வெறுப்பு மாறி, இயந்திரங்களை இத் துணையளவுக்குப் பயன்படுத்த அனுமதித்தாலும், அவை மக்க ளின் வேலை வாய்ப்பைக் கெடுக்கக்கூடாது என்பதை வற்புறுத்தி வந்தார். 'இந்தியாவின் வறுமைக் கொடுமையையும் வேலையின் மையையும் தவிர்க்குமானால் நான் மிக நுட்பமான இயந்திரத் தைக் (sophisticated machine) கூட ஏற்றுக் கொள்வேன் (Socialism of my Conception, 1966, பக்கம் 90) என்று கூறியுள்ளார்.

### சொத்துரிமைக் கோட்பாடு

காந்தியின் சர்வோதயத் தத்துவத்தைப் புரிந்துகொள்ளுமுன் அவருடைய சொத்துரிமைக் கோட்பாட்டையும், பொருளாதாரச் சமத்துவக் கோட்பாட்டையும் அறிந்து கொள்ள வேண்டும். 1931-ல் லண்டன் கில்டு ஹாலில் நிகழ்த்திய உரையில் 'சொத்துரிமை கொண்டாடுவது பெருங்குற்றம். சமுதாயத்தில் அனைவரும், கடைசி மனிதன் வரை, ஒரு பண்டத்தைக் கொள்ள, நுகரச் சாத்தியக்கூறு கிடைத்தாலொழிய, அப் பண்டத்தை நான் எனதெனச் சொந்தமாக்கிக் கொள்ளமாட்டேன்' என்று கூறினார். உடல், பொருள், ஆவியனைத்துமே கடவுளுடையது என்ற கீதோபதேசம், உபநிடதம் முதலியவற்றிலிருந்து உதித்தது காந்தியின் சொத்துரிமைக் கோட்பாடு. 'எனக்குள்ளவெல்லாம் உனதென்று அளித்து விட்டேன் என்ற மனப்பக்குவம் யாவரும் அடைய வேண்டும் மென்பது அவருடைய கொள்கை. ஆயினும் வாழ்க்கைக்கு இன்றியமையாத அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய பண்டங்களுக்கு மட்டும் சொத்துரிமை வழங்குவதை அவர் ஒப்புக்கொண்டார். அவற்றிற்கு அப்பால் ஆண்டனுபவிக்கும் பொருள்களெல்லாம் 'பறிமுதல்' (exploitation) என்ற பழிக்கு இலக்காகும் என்பது அவருடைய திண்ணமான முடிவு.

### சமத்துவக் கோட்பாடு

இந்தச் சொத்துரிமைக் கோட்பாட்டுக்குத் துணை நிற்கிறது காந்தியின் பொருளாதாரச் சமத்துவக் கோட்பாடு. தோட்டி முதல் மிக உயர்ந்த பதவியிலிருப்பவர்க்கும் ஒரே சம்பளம் வழங்க வேண்டும் என்ற அவர் யோசனை நினைவிலிருக்கும். ஆனால் ஒவ்வொரு குடும்பத்தின் தேவைகளுக்கு ஏற்ப (to each according to his needs) வருமானமிருக்க வேண்டும் என்று கூறினார். இத்தகைய சமத்தன்மையைச் செயலாற்றுவது இக் காலத்தில் எவ்வளவு கடினமென்பதைக் காந்தி உணராமலில்லை. இதனால்தான் சொத்துரிமைகளைக் கட்டுப்படுத்தித் தாங்களாகவே வறுமையை வரவேற்க (Voluntary poverty) வேண்டுமென்று கோரினார். அவர்கள் இந்த அறிவுரையை ஏற்காவிட்டால், இரத்த வெறி கொண்ட புரட்சிக்குப் பலியாவர் என்று எச்சரித்தார். அதே சமயத்தில், வன்மையைக் கருவியாக்கி நடத்தப்படும் எத்தகைய புரட்சியும் நிலையான பலன் அளிக்காது என்று நம்பினார். கத்தியின்றி இரத்தமின்றிச் சமூக அமைப்பில் மாறுதல் (Social transformation) காணும் முறையை ஆர்வத்துடன் வகுக்க முனைந்தார்.

### கிராமிய நாகரிகம் (Rural civilization)

பண்டைக் காலந்தொட்டுப் பிரிட்டிஷ் ஆட்சிக் காலம் வரை, இந்தியாவில் கிராம சமுதாயங்கள் சிறு சிறு குடியரசுகளாகவும், தன்னிறைவு பெற்றனவாகவும், அகிம்சை முறையின் சிகரத்தில், சீரும் சிறப்பும் மல்கச் செயலாற்றின என்பதைக் காந்தி நினைவு கூர்ந்தார். பிரிட்டிஷ் ஆட்சியில், தனிமனிதன் சொத்துரிமைச் சட்டம், முதலாளித்துவ முறை, நீதிமன்றங்கள், பிரிட்டிஷ் இயந்திரத் தொழிற்சாலைகளில் உற்பத்தியான பண்டங்களின் கட்டுக்கடங்காத போட்டி ஆகியவை புதிதாகத் தோன்றின. இவற்றுல் கைத்தொழில் அழிந்தன ; கிராம நாகரிகம் நைந்து உருக்குலைந்தனவென்று கண்டார். பெரிய அளவில் ஆலைத் தொழில் வளர்ச்சியடைவது கிராமப்புற மக்களின் பிழைப்பைக் கெடுத்து, அவர்களை வறுமைத் துயரத்தில் ஆழ்த்தும்; எனவே கிராமங்களில் செய்யக் கூடிய பண்டங்களில் எதையும் இயந்திரத் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யக்கூடாது. கிராமங்களில் ஆக்கப்படும் பண்டங்களை விற்கவும், மாறு கொள்ளவும் நகரங்கள் அங்காடிகளாக, தீர்வகங்களாகச் (clearing houses) செயல்பட வேண்டும் என்பது காந்தியின் திட்டம். தற்கால இயந்திர நாகரிகத்தைக் காந்தி வெறுத்தமைக்கு முதன்மையான காரணமே, அதனுல் கிராமிய வளமும் நாகரிகமும் சிதைந்து பாழடைந்ததுதான். 'கிராம ஸ்வராஜ்யம்' என்பதை நிலைநாட்டுவதை அவர் குறிக்கோளாகக் கொண்டார். ஒவ்வொரு சிற்றூரும் இன்றியமையாத தேவைகளைப் பூர்த்தி செய்வதில் சுதந்திரம் அடையவேண்டும்; முதலாவதாக உணவு, உடை இரண்டிலும் தன்னிறைவு பெறவேண்டும். அவற்றின் உற்பத்திக்கு வேண்டிய நிலம் போக, மேலும் நிலம் இருப்பின் கஞ்சா, அபின், புகையிலை போன்றவற்றைத் தவிர்த்து, பணம் தரும் விளை பொருள்களை (cash crops) சாகுபடி செய்யலாம். ஒவ்வொரு சிற்றூரிலும் ஒரு பள்ளி, ஒரு பொது மன்றம், ஒரு நாடக மேடை, குடி தண்ணீர் வசதி முதலியன அமைக்கவேண்டும். இப்பேர்ப்பட்ட கிராமிய நாகரிகத்தை எப்படித் திரும்பவும் தழைக்கவைப்பது என்ற கேள்விக்கு விடையே காதி–கிராமியத் தொழில்கள் இயக்கம் ஆகும்.

### கதர்த் தத்துவமும் கிராமியத் தொழில்களும்

வறுமை, வேலையின்மை, பசிப்பிணி ஆகியவற்றிலிருந்து கிராம மக்களைக் காப்பாற்ற வகுத்த திட்டம் கதர்–குடிசைத் தொழில்களின் அபிவிருத்தி. இத் திட்டத்தில் கதர் சூரியன் என்றும், குடிசைத் தொழில்கள் அதைச் சுற்றி இயங்கும் கோளங்களென்றும் விவரித்தார். கைராட்டினத்தின் சக்தியில்

காந்திக்கு அளவற்ற நம்பிக்கை யிருந்தது. கைராட்டினத்தைச் செய்வது எளிது. அதைப் பழுது பார்க்கவும் கிராம மக்கள் எளிதில் கற்றுக்கொள்ள முடியும்; அதில் நூற்பதும் எளிது. காதி நூல் நூற்பதனால், வேறொருவருக்கும் வேலையின்மை உண்டாக்காமல், ஒருவன் தனது வருமானத்தைச் சிறிதளவேனும் பெருக்கிக் கொள்ளலாம். நூற்பு வேலையைத் தொடங்க வெகு நேரம் பிடிக்காது; எப்பொழுது வேண்டுமானாலும் நிறுத்திவிட்டு வேறு வேலையைச் செய்யலாம். வேலையற்றோர் நாள் முழுவதும் நூற்கலாம்; உழவர்களும் மகளிரும் உழவு, சமையல் வேலைகளில்லாது சோம்பியிருக்கும் நேரங்களில் நூற்கலாம். வசதியுள்ளவரும் தினசரி அரைமணி நேரமாவது நூற்கவேண்டும். இத்தனை சிறப்புகளையுடையது கைராட்டினம். ஏழை மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும். யாவரும் கொஞ்சமாவது நூற்பின், மக்களிடையே நிலவும் வேற்றுமை மறையும். சுதந்திரத்தையும், நிர்வாகத் திறனையும், ஒரு புத்துணர்ச்சியையும் வளர்க்கும். கைராட்டினம் சுதேசி மனப்பான்மையின் சின்னம், ஆடை மட்டுமின்றி, தேவைப் பொருட்களனைத்தையும் கிராமங்களிலேயே, நமது நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்குப் போடும் பிள்ளையார் சுழி போன்றது காதி நூல் நூற்கும் இயக்கம். ஐந்நூறு நகரங்கள் ஐந்து லட்சத்துக்கு மேற்பட்ட கிராமங்களின் இரத்தத்தை உறிஞ்சுவதை நிறுத்தி, நாட்டுப் புறத்தின் வளத்துக்கு வகை செய்யும். கைராட்டினத் தத்துவத்தின் சிறந்த விளக்கத்தை 1925-ல் ரவீந்திரநாத தாகூர் ராட்டினத்தைக் குறை கூறியதற்குக் காந்தி யளித்த விடைகளில் காணலாம்.

நூற்பதையொட்டி, கைக்குத்தல், எண்ணெய்ச் செக்கு ஆட்டுதல், காகிதம், சோப், தீப்பெட்டி செய்தல், தேனீ வளர்த்தல், தோல் பதனிடுதல் முதலிய குடிசைத் தொழில்களை ஊக்குவித்து வளர்த்திடத் திட்டம் வகுத்தார். பின்னர் ஒரு சமயம் மின் சக்தி சிற்றூர்களையும் எட்டிவிட்டதனால், மின்சக்தியைப் பயன்படுத்தியும் குடிசைத் தொழில்களை வளர்க்கலாம் என்று காந்தி கூறியுள்ளார். இது காந்தியின் திறந்த மனத்தையும் (open mind), சூழ்நிலைக்குகந்த மாற்றங்களைச் செய்ய முன்வரும் சாதுரியத்தையும் காட்டுகின்றது.

### சர்வோதயம் (Welfare for all)

காந்தியின் பொருளாதாரத் திட்டங்களின் குறிக்கோள் சர்வோதயம்; அஃதாவது மக்கள் அனைவருக்கும், வறுமையிலுழலும் கடைசி ஏழை வரைக்கும், நல்வாழ்வு அளிக்க உத்தரவாதமுள்ள புதிய சமுதாயத்தை அமைப்பது. சர்வோதயத்துக்கும் கம்யூனிசத்துக்கும் குறிக்கோள் ஒன்றுதான். ஆனால், காந்தி வகுக்கும்

நெறி முறைகள் மேலை நாட்டுக் கம்யூனிச வாதிகளின் வழிக்கு முற்றிலும் மாறானவை. வன்மை, வகுப்புப் போர், இரத்தப் புரட்சி, முதலாளிகளை ஒழித்தல் அவர்களது சொத்தை நாட்டுடைமை யாக்கல் ஆகியவை மார்க்சீயத்தின் கருவிகள். பாட்டாளி மக்க ளின் தனியாட்சி (dictatorship) அதன் இறுதி இலட்சியம். அகிம்சை, அன்பு, ஒத்துழையாமை, நட்புடைமை ஆகிய நான்கும் சர்வோதயத்தின் ஆயுதங்கள். அனைத்து வகுப்பின ரின் ஒப்புரவு நிறைந்த குடியாட்சி அதன் குறிக்கோள். அரசியல் துறையில் காந்தி பிரிட்டிஷ் ஆட்சியை வெறுத்தாரேயன்றி பிரிட்டிஷ் மக்களை யல்ல. அதைப்போலவே, பொருளாதாரத் துறையில் முதலாளித்துவத்தை வெறுத்தாரேயன்றி, முதலை அல்ல. சொத்துரிமையை வெறுத்தாரேயன்றிச் சொத்தையல்ல. முதலும் சொத்தும் முதலாளிகளின் திறனும் பொருளாக்கு தலுக்கு முக்கிய கருவிகள் என்றுணர்ந்த காந்தி அவற்றை யழிக்க நினைப்பாரா? மாட்டார். அறவழியன்றி மறவழியையும் சமயோசிதம்போல் கையாளத் துணிந்தவர் கம்யூனிச வாதிகள். ஆனால், முடிவைப் போலவே, கருவிகளும் அறவழியில் அமைய வேண்டும் என்பது காந்தியின் அசைக்கமுடியாத சித்தாந்தம்.

### அறங்காவலர் கோட்பாடு (Doctrine of Trusteeship)

அனைவருக்கும் நல்வாழ்வு எனின் தொழிலாளருக்கும் விவ சாய உழைப்பாளர்களுக்குமட்டுமல்ல ; முதலாளிகளுக்கும் நிலக் கிழார்களுக்கும் கூட என்ற சர்வோதயத்துக்குக் கற்பித்தார் காந்தி. அதே சமயம் முதலாளிகளும் நிலச்சுவான்களும் கடைப் பிடிக்கவேண்டிய தத்துவத்தையும் காந்தி வரையறுத்துள்ளார். அதுவே அவருடைய அறங்காவலர் கோட்பாடு. சொத்துகளுக் குரிமை கொண்டாடக் கூடாது என்று அவர் கூறும்பொழுது, அதன் பொருள் தனியார் துறையில் சொத்து என்பதை ஒழித்துக் கட்டவேண்டுமென்பது அல்ல. ஒவ்வொரு முதலாளியும் (capitalist), எந்த மக்களின் உதவியால் முதலைப் பயன்படுத்தவும் பெருக்கவும் சாத்தியமாகிறதோ, அந்தத் தொழிலாளரின் அறங் காவலராக ஒழுகவேண்டும். அம்மாதிரியே நிலக்கிழாரும் உழைப் பாளர்களுக்கும், பணக்காரர்கள் ஏழைகளுக்கும் அறங்காவலரா கப் பணிபுரிய வேண்டும். இவ்வாறு அறங்காவலரின் கடமையை யேற்றுக்கொண்டால், முதலாளிகளும், நிலக்கிழாரும் பணக்கார ரும் தங்களுடைய தொழில் நுட்ப அறிவைப் பயன்படுத்தி உற் பத்தியைப் பெருக்கி பொது நலனுக்கு நாட்டின் செல்வம் சிறந் திடச் செய்வர். அவர்கள் பணிக்குத் தக்க ஊதியம் பெறுவர். ஆனால் பிறரைப் பறித்து வாழும் முறை அழிந்துவிடும். இந்த அறங்காவலர் கோட்பாட்டுக்குக் காந்தியின் அறநெறியும் சமய

வுணர்ச்சியும் மட்டுமே காரணமல்ல. இம் முறையினால் பல்வேறு நலன்கள் கிடைக்கும் என்ற காரணங்களும் உண்டு. முதலாளிகள் நிலக்கிழார்கள் சொத்துக்களை வன்முறையில் கைப்பற்ற முயன்றால், வகுப்புப் போர், பகையுணர்ச்சி, அடக்குமுறை ஆட்சி என்ற பல தீமைகளைத் தவிர்க்க முடியாத நிலையுண்டாகும். போரிலும், புரட்சியிலும் நாட்டின் ஒரு பகுதி செல்வம் நாசமாகும். அரிய தொழில்-நிர்வாகத் திறமையுள்ளவர் பலர் கொல்லப்படலாம்; பலர் தாழ்த்தித் தள்ளப்படுவர். இவற்றால் நாட்டின் உற்பத்தி நலியுமே தவிர, கூடாது. பொன் முட்டையிடும் வாத்தைக் கொல்வதை ஒக்கும் வன்முறைச் செயல். எனவே, அகிம்சை முறையில் அவர்களை யழிக்காமல், பழிக்காமல், அன்பினாலும் அறிவுரைகளாலும் அவர்கள் மனத்தை மாற்றி வெற்றி காண வேண்டுமென்பது காந்தி காட்டும் வழி. அதே சமயம் 'மயிலே, இறகுபோடு' என்று அணுகும் முறை வெற்றிபெறுவது உறுதியெனும் செருக்குக் காந்திக்குக் கிடையாது. இந்த முறை தோல்வியுறாமலிருக்க மேலும் இரண்டு துணை முறைகளைக் காட்டுகிறார்: (1) முதலாளிகள் முரண்டு பிடித்து அறங்காவலர் திட்டத்துக்கு இணங்காவிட்டால், வன்முறை ஓங்கி அவர்களை அழித்துவிடும் என்பது உறுதி. பறிப்பவர், பறிக்கப்படுவர் என்ற மார்க்சின் சொல் பலித்துவிடும், என்று எச்சரிக்கை செய்வது ஒரு வழி. (2) தொழிலாளர், உழைப்பாளர், ஆகியோரின் ஒத்துழையாமை இயக்கத்தால் அவர்களை இணங்கச் செய்வது மற்றொரு வழி.

காந்தி வகுத்துள்ள பொருளாதாரச் சீர்திருத்தங்களையும், அறங் காவலர் திட்டத்தையும் சட்டமன்றங்களின் வாயிலாக உறுதிப்படுத்துவது சாலச் சிறந்ததெனக் கருதினார்.

அறங்காவலர் கோட்பாட்டுக்கும் மேலை நாட்டுக் கம்யூனிசக் கோட்பாட்டுக்குமுள்ள வேறுபாடுகள் மேல் கூறியவற்றால் நன்கு புலனாகும். அதன் வெற்றி முதலாளிகள் வகையறாவின் மனமாற்றத்தைப் பொறுத்து நிற்கிறது. தற்கால மேலை நாட்டுப் பொருளாதார நிபுணர்கள் வெகு அண்மையில் பின் தங்கிய நாடுகள் முன்னேறுவதற்கு மக்களின் மனப்பான்மை (attitudes) மாறாதிருத்தல் தடையாயிருக்கிறது; அதை மாற்றுவதே முதல் பணியாக அமையவேண்டுமென்று வற்புறுத்துகின்றனர். காந்தியும் மக்களைத் தன்னலப் போக்கிலிருந்து பொது நலச் சேவைக்கு எளிதாக மாற்றிவிடலாம் என்று கூறவில்லை. ஒருவர் ஒருவராக மாறினாலும் போதும்; பின்னால் அது தொத்து வியாதிபோல் அனைவரிடமும் பரவும். மனச் சோர்வின்றி இம் மாற்றத்தைக் கொண்டுவருவதில் இடையறாது உழைக்கவேண்டும். இது ஓர்

அறவழி, அன்புவழி, நட்புவழி. இது வெற்றிபெருவிடின், சமூகம் வன்முறைச் செயல்களுக்கும் நாச வேலைகளுக்கும் பலியா வதை எவரும் தடுக்க முடியாது. இதுவே காந்தியின் சித்தாந்தம்.

முடிவுரை

காந்தீயப் பொருளாதாரம் அல்லது சர்வோதயத்தின் சிறப்பு களைச் சிறிது அறிந்து கொண்டோம். தொன்மைநூல் மேதை களைப் போலவே காந்தியும் உழைப்பே செல்வத்தின் பிறப்பிடம் என்கிறார். 'நெற்றி வேர்வை நிலத்தில் விழ, நீ உழைத்து உண் பாயாக' என்பது யேசுவின் கட்டளை. இவ்வுலகில் பிறந்த மாந்தர் அனைவரும் உணவுக்கு உழைத்தாக வேண்டும் என்பது காந்தியின் அறிவுரை. ஆதியில் செய்த பாவத்தின் (original sin) கழுவாயாகவல்ல; மக்களனைவரும் சமமென்பதை உறுதிப் படுத்தவே, இதை உணாவுக்கு உழைப்பு (bread labour) கோட் பாடு என்று கூறுவர்.

புலனடக்கம்தான் இன்பம் நல்கும்; எனவே ஆசைகளைக் கட்டுப்படுத்து என்கிறார் காந்தி. அரிஸ்டாடிலும் மற்றப் பண்டைக்கால அறிஞரும் இதையே உரைத்தனர். அண்மையில் எம். ஐ. டி என்னும் அமெரிக்கக் கல்வி ஆராய்ச்சிக் கூடத்தி லுள்ள நிபுணர்களின் அறிக்கையில் வாழ்க்கையை எளிமை யாக்காவிட்டால் இன்னும் நூறு ஆண்டுகளுக்குள் மனித சமூகமே நாசமாகிவிடும் என்று கூறியுள்ளனர். சராசரிச் செலவு ஒரு மனிதனுக்கு 1200 டாலர்தானிருக்க வேண்டும் என்றும் மதிப் பீடு செய்துள்ளார் (ஹிந்து 3-72). ஆயிரமாயிரம் ஆசைகளை வளர்த்தால் அவற்றைத் திருப்தி செய்ய பல்கோடிப் பண்டங் கள் வேண்டும். அவற்றை உற்பத்தி செய்யப் பெரிய இயந்திரத் தொழிற்கூடங்கள் நிறுவ வேண்டும். நாடு முழுவதும் தொழில் மயம், நகர மயம் என்றாகிவிடும். நகரங்கள் நாட்டுப் புறத்தைச் சுரண்டி வறுமைக் கொடுமையில் ஆழ்த்தும். இயந்திர உற்பத்தி மக்களின் வேலை வாய்ப்பைக் கெடுத்து அவர்களைப் பலி கொள் ளும். நகரங்களும் தீய செயல்களின் ஆர்ப்பாட்டக் களன்களாக மாறும். இப் பேராபத்திலிருந்து மக்களைக் காத்திடக் காதியும் குடிசைத் தொழில்களும் மாமருந்தாகும். தொழில்கள் நாடெல்லாம் எங்கணும் பரவியிருக்க வழி செய்யும். ஜான் பி. லிவிஸ் (John P. Levis) என்னும் அமெரிக்கப் பொருளாதார நிபுணர், அண்மை யில் பிரசுரித்த நூலில் மாநகரங்களை விடுத்து வளர்ச்சிக் குருத்துக் (growing points) காணும் சிறு நகரங்களில் (small towns) தொழில்களைப் பரவலாகத் துவக்கவேண்டும் என்று கூறி யுள்ளார். இது நகரங்களின் அசுர வளர்ச்சியையும் அதனால்

விளையும் தீமைகளைத் தடுக்கலாம். ஆனால் தொழிலாளர்-முதலாளிச் சச்சரவுகளைப் போக்குமென்று உறுதியாகச் சொல்வதற்கில்லை. காந்தியின் குடிசைத் தொழில் தத்துவம் ஒவ்வொரு தொழிலாளியையும் 'முதலாளி'யாக்கும்; அவன் கருவிகளின் சொந்தக்காரனாகவும், கச்சாப் பொருட்களை வாங்கவும் பதனிட்ட பண்டங்களை விற்று லாபம் பெறக்கூடியவனாகவும் திகழ்வான். இப்படியொரு அமைப்பு ஏற்படும்பொழுது தொழிலாளர்-முதலாளி சண்டைகளை அது விலக்கவல்லது என்பது ஒரு சிறப்புக் குரிய அம்சம். இத்துடன் இயன்ற அளவுக்குக் கிராமத் தன்னிறைவு ஏற்படின், கிராமக் குடியரசு சமுதாயங்கள் நமது பண்புக்கேற்ற நாகரிகச் சின்னங்களாகத் தழைப்பதற்கும் வாய்ப்பு அளிக்கும்.

விஞ்ஞான யுகம் என்று கூறப்படும் தற்காலத்தில், மின், இரும்பு, எஃகு, பெட்ரோலிய ரசாயனப் பொருள்கள் முதலியவற்றைச் செய்யும் பெரிய அளவு கனரகத் தொழில்கள் அவசியமாகின்றன. அவற்றையெல்லாம் நாட்டுடைமையாக்க வேண்டுமென்று கூறும் காந்தியின் யோசனை தனியார் ஊதியம் பெருகாமல் பொது நலனைப் பெருக்கும்.

சொத்துரிமைகளை நீக்காவிடினும், அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பது காந்தீயப் பொருளாதாரத்தின் அடிப்படைக் கொள்கை. முதலாளிகள் நிலக்கிழார், பணக்காரர் ஆகியோரின் மனத்தை மாற்றி, அவர்கள் திறன் குன்றாது நாட்டின் உற்பத்தி, முதல், வருமானம் முதலானவற்றைப் பெருக்கும் பொது நலப் பணியாளர்களாக ஆக்குவதே காந்தியின் இலட்சியம். இதற்காகவே காந்தி அறங் காவலர் கோட்பாட்டை வகுத்துள்ளார். அனைவரின் நல்வாழ்வுக்கும் எல்லா வகுப்பினரும் ஒப்புரவுடன் பணி செய்ய வகுத்த புதிய பாதை காந்தியின் சர்வோதயம். வகுப்புப் போர், வன்முறைச் செயல்கள், புரட்சி என்ற கொடுமைகளை விலக்கி, அன்பு, அறம், நட்புறவு, ஒத்துழையாமை என்ற சாத்வீகக் கருவிகளால் அடையக் கூடியது சர்வோதயம்.

## 31. முடிவுரை

மேலை நாட்டுப் பொருளாதாரச் சிந்தனை வரலாற்றில் கெயின்சின் புரட்சிகரமான கருத்துகளுடனும், புதிய நலப் பொருளாதாரத்தில், பேரிடோ, ஹிக்ஸ் ஆகியோரின் கருத்துகளுடனும், இந்தியப் பொருளாதாரச் சிந்தனை வரலாற்றில் காந்தியின் சர்வோதயத்துடனும் இந்நூல் முடிவடைகிறது. ஆனால் பொருளா

தாரச் சிந்தனைகள் இத்துடன் நின்றுவிடவில்லை. சென்ற 35 ஆண்டுகளில் பொருளாதாரக் கருத்துகள் பல்வேறு வகைகளில் சீரிய முறையில் மாபெரும் மாறுதல்களுடன் தீவிரமான வளர்ச்சி யடைந்து வருகின்றன. உலகப் பொருளாதார மந்தம் (1928-32), இரண்டாவது உலகப்போர், பின் தங்கிய நாடுகளின் எழுச்சியும், சுதந்திரமும் போன்ற காரணங்களால், பொருளாதாரச் சிந்தனை சுடர்விட்டு வளர்ந்து வருகின்றது.

ஆராய்ச்சித் துறையிலும், நடைமுறைத் துறையிலும், பொருளாதார இலக்கியமும் அறிவியலும் பற்பல கிளைகள் விட்டுப் பல்கிப் பெருகிவருகிறது. சிறப்பாகக் கூறின், நிறைகுறைப் போட்டிக் கோட்பாடு (Theory of Imperfect Competition), நாட்டு வருமான ஆராய்ச்சி (National Income Analysis), கணிதப் பொருளாதாரம் (Mathematical Economics), அளவியல் பொருளாதாரம் (Econometries), அசலனப் பொருளாதாரம் (Static Economics), சலனப் பொருளாதாரம் (Dynamic Economics), வளர்ச்சிப் பொருளாதாரக் (Economic Development) கோட்பாடுகள் போன்றவை குறிப்பிடத்தக்கவை. இக் கிளை நூல்களெல்லாம் அண்மையில் தோன்றித் தழைத்துக் கொண்டிருப்பவை. ஐக்கிய நாட்டு நிறுவனமும் அதைச் சார்ந்த உலக வங்கி, பன்னாட்டுப் பணநிதி, பல்வேறு நாடுகளின் திட்டக் குழுக்கள், பல்கலைக் கழகங்கள், நாட்டுப் பொருளாதார ஆராய்ச்சி மன்றங்கள் (National Economic Research Institutes) முதலானவை புதிய சிந்தனைகள் வளரும் நாற்றங்கால்களாக அமைந்துள்ளன.

இவ்வாறு வளர்ந்துவரும் சிந்தனைகளும் கருத்துகளும் கோட்பாடுகளும் இந் நூலைவிடப் பெரிய, நுண்ணிய நூலில் இடம் பெறத் தகுதி வாய்ந்தவை. இந்தியப் பொருளாதாரச் சிந்தனையில், நம் நாடு சுதந்திரம் அடைந்தபின், திட்டக்குழு அமைக்கப்பட்டு, பொருளாதார வளர்ச்சி தூண்டப்படும் இக் காலத்தில் பல புதிய சிந்தனை ஊற்றுகளைக் காண்கிறோம். மத்திய மாநில அரசினர் துறை, ரிசர்வ் வங்கி, தொழில்-வணிக சங்கங்கள், பல்கலைக் கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் முதலான இடங்களில் பொருளாதார வல்லுநர்கள் பலர் சிறந்த முறையில் பெரிய அளவில் பொருளாதார இயல் வளர்ச்சிக்கு அரிய தொண்டு புரிந்து வருகின்றனர். அவர்களது கருத்துகளும் இதைவிட நுண்ணிய நூலில் இடம் பெறத்தகும்.

# மேற்கோள் நூல் பட்டியல்

(Bibliography)

**English Text-Books**


*Haney, L. H.* ... History of Economic Thought

*Gide and Rist* ... History of Economic Doctrines

*Naff Frank* ... Economic Doctrines

*Newman, P. C.* ... Development of Economic Thought

*Gray, Alexander* ... Development of Economic Doctrines

*Kapp and Kapp* ... History of Economic Thought

*Roll, Eric* ... History of Economic Thought

*Huchison, T. W.* ... Review of Economic Ideas

*Heiman, E.* ... History of Economic Doctrines

*Lakalhman, R.* ... A History of Economic Ideas

*Taylor, O. H.* ... A History of Economic Thought

*Ingram, R. H.* ... A History of Political Economy

*Schumpeter, J. A.* ... History of Economic Analysis

*Schumpeter, J. A.* ... Ten Great Economists

*Heilbroner, R. L.* ... The Great Economists

*Patterson, S. H.* ... Readings in the History of Economic Thought

*Cannon, E.* ... A Review of Economic Theory

*Monroe, A. E.* ... Early Economic Thought

*Spiegel, H. W. Ed.* ... The Development Economic Thought

*Bell, J. F.* ... A History of Economic Thought

*Whittaker, E.* ... Schools and Streams of Economic Thought

*Cob, G. D. H.* ... A History of Socialist Thought

*Keynes, J. M.* ... Essays in Biography

*Cob, Margaret* ... The Story of Fabian Socialism

*Gruchy, A. G.* ... Modern Economic Thought

*Hasan, S. F.* ... Introduction to Welfare Economics

*Dillard, D.* ... The Economics of John Maynard Keynes

*Robinson, Joan* ... Introduction to the Theory of Employment

*Hanson Alvin, H.* ... A Guide to Keynes

*Shyama Shastri* ... Kautilya's Arthasastra

*Jayaswal, K. P.* ... The Ancient Indian Polity

*Rangaswamy Aiyangar, K. V.* ... Aspects of Ancient Indian Economic Thought

*Gandhi, M. K.* ... Socialism of my Conception. Bhavan's (Ed. Anand T. Hingorani)

*Ganguli, B. N.* ... Dadhabhai Naoroji and the Drain Theory

*Heckscher, E. F.* ... Mercantilism (Two Volumes)

## Classics

*Smith, A.* ... Wealth of Nations (Two Vols.)

*Malthus, J. R.* ... Essays on Population

*Malthus, J. R.* ... Principles of Political Economy

*Ricardo, David* ... The Principles of Political Economy and Taxation

*Mill, J. S.* ... Principles of Political Economy

*Jevons, W. S.* ... The Theory of Political Economy

*Marshall, A* ... Principles of Economics

*Pigon, A. C.* ... Economics of Welfare

*Hobson, J. A.* ... Work and Wealth

*Keynes, J. M.* ... The General Theory of Employment, Interest and Money

*Knight, F. H.* ... Risk, Uncertainty and Profit

*Lut, F.* ... The National System of Political Economy

*Veblen, T. B.* ... Theory of Leisure Class and Theory of Business Enterprise

## Further Readings

*Ambirajan, S.* ... Malthus and Classical Economics

*Staffa P. and Dobb, M. Ed.* ... The Works and Correspondence of David Ricardo (Two Vols.)

*Weber Max* ... Protestant Ethic and the Spirit of Capitalism

*Tawney, R. H.* ... Religion and the Spirit of Capitalism

*Sornbart* ... The Jews and Modern Capitalism

*Pigon, A. C.* ... Socialism versus Capitalism

*Dobb, M.* ... Marx as an Economist

*Robinson, J.* ... Essays on Marxian Economics

*Schumpeter, J. A.* ... Capitalism, Socialism and Democracy

*Kautsky, Karl* ... The Economic Doctrines of Karl Marx

*Russel, B.* ... Roads to Freedom

*Peare, E. R.* ... History of Fabian Society

*Seligman, B. B.* ... Main Currents in Modern Economics

*Little, I. M. D.* ... A Critique of Welfare Economics

*Myint, Hla* ... Theories of Welfare Economics

*Robbins, L.* ... The Theory of Economic Policy

*Harris, S. Ed.* ... The New Economics

*Harrod, Roy* ... The Life of John Maynord Keynes

*Klein* ... The Keynesian Revolution

*Hicks, J. R.* ... Value and Capital

*Robbin, L.* ... Economists of the 20th Century

*Galbraith* ... The American Capitalism

*Galbraith* ... The New Industrial State

*George, Henry* ... Progress and Poverty

*Robinson, J.* ... Economics of Imperfect Competition

*Chamberlin, E.* ... The Theory of Monopolistic Competition

*Naoroji, D.* ... Poverty and Un-British Rule of India

*Ranade, M. G.* ... Essays in Indian Political Economy

*Dutt, R. C.* ... Economic History of India (Two Volumes)

*Naoroji* ... Speeches and Writings

*Gokhale, G. K.* ... Speeches and Writings

*Gandhi, M. K.* ... Cent percent Swadeshi

,, ... Hind Swaraj

,, ... Economics of Khadi

,, ... Bread Labour

# கலைச்சொற்கள்

(Glossory)

## A

Absentee owner — தலத்திலில்லா சொந்தக்காரர்
Abstinence — துய்ப்புத் தவிர்ப்பு
Abstinence Theory — துய்ப்புக் கோட்பாடு
Acceleration — வேக வளர்ச்சி
Acceleration principle — வேக வளர்ச்சி விதி
Accumulate — திரட்டு
Accumulation of Capital — முதல் திரட்சி
Agents of production — உற்பத்திச் செயலிகள்
Agio Theory of interest — காலக்கழிவு வட்டிக்கோட்பாடு
Agricultural labourers — விவசாயத் தொழிலாளிகள்
Analysis — பகுத்தாய்வு, ஆய்வு
Analysis economic — பொருளாதாரப் பகுத்தாய்வு
Assess — மதிப்பீடு
Assets — சொத்துகள்
Assumption — எடுகோள்
Average revenue — சராசரி வரவு

## B

Balance of payment — அயல் நாட்டுச் செலுத்து இருப்பு நிலை
Balance of Trade — வாணிக இருப்பு நிலை
Balance of trade, favourable — சாதக வாணிக இருப்பு நிலை
Balance of trade, unfavourable — பாதக வாணிக இருப்பு நிலை
Bank — வங்கி
Bank Credit — வங்கிச் செலாவணி
Bank money — வங்கிச் செலாவணி
Banker — வங்கியர், பாங்கர்

Barter — பண்டமாற்று
Bimetallism — இரட்டை உலோக நாணய முறை
Birth rate — பிறப்பு வீதம்
Board of directors — இயக்குநர் வாரியம்
Bonds — பத்திரங்கள்
Boom — பொருளாதார வீக்கம், வீக்கம்
Bounty — அரசாங்கக் கொடை
Budget — வரவு செலவுத் திட்டம், பட்ஜட்
Budget, deficit — பற்றுக்குறை பட்ஜட் (வரவு செலவுத் திட்டம்)
Bullion controversy — உலோகப் பற்றினர் வாதம்
Bullionists — உலோகப் பற்றினர்
Business — வியாபாரம், தொழில், அலுவல்
Business cycle — வியாபார, (தொழில்) சகடம்
Business firm — தொழில் நிறுவனம்
By-products — பக்க விளைவுகள்

## C

Canon — புனித விதி
Canon of certainty — உறுதிப்பாட்டுப் புனித விதி
Canon of convenience — வசதிப் புனித விதி
Canon of economy — சிக்கனப் புனித விதி
Canon of elasticity — நெகிழ்ச்சிப் புனித விதி
Canon of equity — நியாயப் புனித விதி
Canon of productivity — ஆக்கப் புனித விதி
Capital — முதல், மூலதனம்
Capital assets — முதலினச் சொத்துகள்
Capital, circulating — புரளும் முதல்
Capital formation — முதல் ஆக்கம்
Capital, floating — சுழல் முதல்
Capital, fixed — நிலை முதல் பொருள்கள்
Capital goods — முதற்கருவிப் பொருள்கள்
Capital market — மூலதன மார்க்கட்
Capitalism — முதலாளித்துவம்
Capitalistic — முதலாளித்துவ
Capitalist — முதலாளி
Capital, private — தனியார் முதல்
Cardinal utility — எண்ணளவுப் பயன்பாடு

Cartal — கார்ட்டல்
Cash — ரொக்கம்
Central Bank — மைய பாங்கு
Cess — செஸ்
Ceteris paribus assumption — பிறமாறு எடுகோள்
Cheque — செக்
Circulation of money — பணச் சுழற்சி
Classical economists — தொன்மைப் பொருளாதாரிகள்
Clearing house — தீர்வகம்
Collective action — கூட்டுச் செயல்
Collective bargaining — கூட்டு பேரம்
Colonies — குடியேற்ற நாடுகள்
Commerce — வாணிகம்
Communism — கம்யூனிசம்
Comparative cost — ஒப்பீட்டுச் செலவு
Competitor — போட்டிக்காரன்
Competition, perfect — நிறைவுப் போட்டி
Competition, pure — தூய போட்டி
Constant cost — மாறுச் செலவு
Consumer — துய்ப்போர், நுகர்வோர்
Consumption — துய்ப்பு, நுகர்வு
Consumption goods — துய்ப்புப் பொருள்கள்
Consumer spending — துய்ப்போர் செலவீடு
Consumer's surplus — துய்ப்போர் உபரி
Consumption function — நுகர்வுச் சார்பு
Constant returns, law of — மாறுவிளைவு விதி
Corollary — துணை முடிவு
Corporation — கார்ப்பரேஷன்
Cost — அடக்க விலை
Costs fixed/variable — மாறுச் (மாறுஞ்) செலவுகள்
Cost of living index number — வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்
Costs, marginal — இறுதி நிலைச் செலவு
Cost price — அடக்க விலை
Costs, prime — முதன்மைச் செலவுகள்
Costs, supplementary — துணைச் செலவுகள்
Curves, marginal — இறுதிநிலைப்பாட்டு வளை கோடுகள்

## D

Debasement (coins) — தரக்குறைப்பு (காசுகள்)
Decreasing cost — குறைந்துச் செல் செலவு
Deductive method — பகுத்தறி முறை
Definition — இலக்கணம்
Deflation — பண வாட்டம்
Demand — தேவை
Demand, derived — வழி வந்த தேவை
Deposit — வைப்பு
Depression — மந்தம்
Derived value — வழி வந்த மதிப்பு
Devaluation — மதிப்புக் குறைப்பு
Diagram — கோட்டுப் படம்
Differential advantage — வேறுபாட்டுயர்வுச் சிறப்பு
Differential surplus — வேறுபாட்டெச்சம்
Diminishing Returns — குறைந்து செல் விளைவு
Differentiation — வேறுபாடு படல்
Discovery — கண்டுபிடிப்பு
Dumping — திணறிக் கொட்டல்
Durable — உறுதியான, நீடித்த
Dynamic — டைனமிக்

## E

Economics — பொருளாதாரம், பொருளாத, இயல்
Economics, mixed — கலப்புப் பொருளாதாரம்
Economic forces — பொருளாதாரச் சக்திகள்
Economic man — பொருள்வய மனிதன்
Economies — சிக்கனங்கள்
Economists — பொருளாதார இயலினர்
Effective demand — பயனுள்ள தேவை
Elasticity — நெகிழ்ச்சி
Empirical analysis — அனுபவ ஆய்வு
Employment full — நிறைவுடை வேலை வாய்ப்பு
Enterprise — தொழிற்றுணிவு
Equation — சமன்பாடு
Equation of Exchange — பரிவர்த்தனைச் சமன்பாடு
Equilibrium — சமநிலை
Equimarginal returns — சமநிலை இறுதி விளைவுகள்

| | |
|---|---|
| Ethics | — அறவியல் |
| Evolution | — பரிணாமம் |
| Excess demand | — எச்சத் தேவை |
| Excise duty | — ஆயத் தீர்வை |
| Exploitation | — சுரண்டல் |
| External economics | — புறச்சிக்கனங்கள் |

**F**

| | |
|---|---|
| Factors of production | — உற்பத்திக் காரணங்கள் |
| Feudalism | — படை மானியம் |
| Formula | — சூத்திரம் |
| Function | — சார்பு, தொடர்பு |

**G**

| | |
|---|---|
| General Equilibrium | — பொதுச் சமநிலை |
| Genus | — பேரினம் |
| Gent | — தெவிட்டு நிலை |
| Geometric progression | — மடிப்பெண் விருத்தி |
| Graph | — வரைபடம் |

**H**

| | |
|---|---|
| Handicraft | — கைவினைத் தொழில் |
| Hedonism | — தன்னல முனைவு |
| Historical School | — வரலாற்றுமுறைக் கருத்தோர் |
| Hoarding | — குவிப்பு |
| Horizontal axis | — படுகிடை அச்சு |
| Hypothesis | — கருதுகோள் |

**I**

| | |
|---|---|
| Imperfect competition | — நிறைகுறைப் போட்டி |
| Imputed value | — சாட்டு மதிப்பு |
| Income-consumption curve | — வருமானத் துய்ப்புக் கோடு |
| Increasing returns | — வளர்ந்து செல் விளைவு |
| Indifference curves | — சமநோக்குக் கோடுகள் |
| Indirect tax | — மறைமுக வரி |
| Induced/ automonaous investment | — தூண்டிய/தூண்டா முதலீடு |
| Induction | — தொகுத்தறிதல் |
| Inferior goods | — கீழ்த்தரப் பொருள்கள் |
| Inflation | — பண வீக்கம் (gap – இடைவெளி) |

Innovation — புதுமை
Institution — நிறுவனங்கள், நிலையங்கள்
Internal economics — அகச் சிக்கனங்கள்
International trade — பன்னாட்டு வாணிகம், அனைத்து நாட்டு வாணிகம்
Input-output — உள்ளிடு-வெளியிடு
Invention — புத்தாக்கம்
Inverse ratio — தலைகீழ் விகிதம்
Interpersonal Comparison — ஆரக்கால் ஒப்பிடு
Investment — முதலீடு

## J

Joint — கூட்டு
Just price — நியாய விலை

## L

Labourer — தொழிலாளி
Lag — பின் தங்கல்
Land-lord — நிலக்கிழார்
Liquidity preference — ரொக்க விருப்பம்
Loanable funds — கடன் தரும் நிதிகள்

## M

Macro economics — அண்ட நிலைப் பொருளாதாரம்
Marginal propensity to consume — இறுதிநிலைத் துய்ப்பு நாட்டம்
Materialistic conception — பொருள் சார்பான கருத்து
Mercantilism — வாணிக வாதம்
Micro economics — அணுநிலைப் பொருளாதாரம்
Monopoly — முற்றுரிமை, தனியுரிமை, சர்வாதீனம்
Multiplier — பெருக்கி

## N

Nationalization — நாட்டுடைமையாக்கல்
Neo Classical — தொன்மைநூல் மறு மலர்ச்சி

## O

Ordinal utility — கிரமப் பயன்பாடு

## P

Parasite — ஒட்டுண்ணி
Per capita — தலா
Physiocrats — இயற்கை வாதிகள்
Piece earnings — வேலை வீத ஊதியம்
Policy — கைக்கோள்
Poor law — வறியோர் சட்டம்
Precautionary motive — எச்சரிக்கை நோக்கம்
Price-consumption curve — விலை துய்ப்பு வளைகோடு
Private Sector — தனியார் துறை
Problem — பிரச்சினை
Progressive taxation — வளர் வீத வரி
Proof — சான்று
Propensity — நாட்டம்
Proportion — வீதாச்சாரம்
Proposition — கூற்று
Psychological School — உளவியல் கொள்கையர்
Public finance — பொது நிதியியல்
Public utility — பொது வசதி

## R

Redistribution — மறுபகிர்வு
Rent, differential — பேதவாரம்
Revealed preference — வெளியிட்ட விருப்பெச்சம்
Risk bearing — ஆபத்து ஏற்பு

## S

Schedule — அட்டவணை
Securities — பத்திரங்கள், ஆவணங்கள்
Skilled worker — திறம் பெற்ற தொழிலாளி
Sleeping partner — உழையாப் பங்காளி
Slump — மந்தம்
Socialism — சோஷலிசம்
Speculation — ஊக வாணிகம்
Stagnation — தேக்கம்
Statistics — புள்ளி இயல்
Subjective — அக
Substitute — பதிலி
Subsidy — உதவிக் கொடை
Substitution — பதிலீடு

**T**

Tariffs — சுங்க வரிகள்
Tax, direct — நேர்முக வரி
Technology — தொழில் நுண்ணியல், டெக்னலஜி
Theory — கோட்பாடு
Time wage — காலவீதக் கூலி
Trade — வாணிகம், வர்த்தகம்
Trade Unions — தொழிலாளர் சங்கங்கள்

**U**

Uncertainty — நிலையின்மை
Under valuation — தாழ் மதிப்பீடு
Unit — அலகு, துண்டு
Usury — கடுவட்டி
Utilitarianism — பயன்பாட்டுக் கொள்கை
Utility — பயன்பாடு

**V**

Value — மதிப்பு
Velocity — வேகம்

**W**

Wage — கூலி
Welfare economics — நலப் பொருளாதாரம்
Working classes — பாட்டாளி வகுப்பினர்கள்